

தமிழ்நாடு அரசு

மேல்நிலை இரண்டாம் ஆண்டு

கணக்குப்பதிவியல்

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

12th-Accountancy-Front.indd 1 12/11/2021 11:53:36 PM

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு - 2019
திருத்தியபதிப்பு - 2020, 2022
மறுபதிப்பு - 2021, 2023, 2024

(புதிய பாடத்திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்ட நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும்
தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்
© SCERT 2019

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்
www.textbooksonline.tn.nic.in

12th-Accountancy-Front.indd 2 14/12/2023 15:13:59

உள்ளடக்கம்

கணக்குப்பதிவியல்

வ.எண்	பாடத் தலைப்பு	பக்க எண்	மாதம்
அலகு 1	முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து கணக்குகள்	01	ஜூன்
அலகு 2	இலாப நோக்கற்ற அமைப்புகளின் கணக்குகள்	39	ஜூலை
அலகு 3	கூட்டாண்மை நிறுவனக் கணக்குகள் – அடிப்படைகள்	81	
அலகு 4	கூட்டாண்மை கணக்குகள் – நற்பெயர்	119	ஆகஸ்டு
அலகு 5	கூட்டாளி சேர்ப்பு	137	
அலகு 6	கூட்டாளி விலகல் மற்றும் கூட்டாளி இறப்பு	183	செப்டம்பர்
அலகு 7	நிறுமக் கணக்குகள்	225	அக்டோபர்
அலகு 8	நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு	263	நவம்பர்
அலகு 9	விகிதப் பகுப்பாய்வு	293	
அலகு 10	கணினி கணக்கியல் முறை	327	டிசம்பர்

OP3GR

மின்னூல்

SKUIQ

மதிப்பீடு

12th-Accountancy-Front.indd 3 12/11/2021 11:53:36 PM

அன்பார்ந்த மாணவர்களே!

இந்த கணக்குப்பதிவியல் பாடநூல் உங்களுக்கு கணக்குப்பதிவியலை அடிப்படையிலிருந்து புரிந்து கொள்ளவும், மேலும் இந்தப் பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ள பலவகையான பயிற்சிகள் மூலம், உங்களின் பகுப்பாய்வுத் திறனை உபயோகித்து, கணக்கியலின் கோட்பாடுகளை நடைமுறை வணிகச் சூழ்நிலைகளில் பயன்படுத்துவதில் உங்களை ஒரு மிகச்சிறந்த நபராக உருவாக்கவும் ஒரு அறிவுக் களஞ்சியமாக இருக்கிறது.

இந்த நூலில் 10 அலகுகள் அடங்கியுள்ளன. இவற்றிலுள்ள உட்பிரிவுகள் மற்றும் பல வகையான கற்றல் பயிற்சிகள், கற்றலை எளிதாகவும், முறையாகவும், மகிழ்வுணர்வாகவும் ஆக்கும் ஒரு முறைப்படுத்தப்பட்ட வடிவில் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த நூலில் கொடுக்கப்பட்டுள்ள கருத்துகளையும், முறைகளையும் கற்க, இந்த நூலை எவ்வாறு சிறந்த முறையில் பயன்படுத்தவேண்டும் என்ற வழிமுறை கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், ஒரு சிறந்த கற்றல் அனுபவம் பெற, பாடநூலில் இடம்பெற்றுள்ள முக்கியமான பகுதிகளுக்கு, கீழே விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

பாடநூலைப் பயன்படுத்துவது எப்படி?

அலகுகள்

அலகுகள், நூலின் பெரும் பிரிவுகளாகும். இவை ஒவ்வொன்றிலும் மாணவர்கள் கணக்குப்பதிவியல் கல்வியிலுள்ள பல பிரிவுகளில் குறிப்பிட்ட சாராம்சத்தை புரிந்துகொள்ளத்தக்க வகையில், பல உட்பிரிவுகள் அடங்கியுள்ளன. ஒவ்வொரு அலகும் அதன் பொருளடக்கத்தில் விவாதிக்கப்பட்டுள்ள, சிறப்பு அறிவினை வழங்குகிறது. தொடர் கற்றலுக்கும், பாடக்கருத்துகளை சரியாகப் புரிந்துகொள்வதற்கும், அலகுகள் நூலில் கொடுக்கப்பட்டுள்ள வரிசைப்படி கற்கப்பட வேண்டும்.

உட்பிரிவுகள்

இந்தப் பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ள 10 அலகுகளும் இன்றைய கணக்குப்பதிவியலின் அடிப்படை கோட்பாடு மற்றும் நடைமுறையை ஒழுங்கான வரிசைப்படி கொடுக்கும் வண்ணம் உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.



கற்றல் நோக்கங்கள்

கற்றல் நோக்கங்கள், மாணவர்கள் ஒரு அலகில் கொடுக்கப்பட்டுள்ள பொருளடக்கத்தைக் கற்கும் பொழுது அடையவேண்டிய அறிவு நிலைகளைக் கூறுகிறது.



நினைவு கூற வேண்டிய கருத்துகள்

ஏற்கனவே, கற்றவற்றை நினைவுக்கு கொண்டுவருவதன் மூலம், கற்றலுக்கு ஒரு அடிப்படையை உருவாக்கி குறிப்பிட்ட அலகிலுள்ள பொருளடக்கத்தை சரியாகப் புரிந்துகொள்வதற்கு உதவுகிறது.

முக்கியமான சொற்கள்

இவை ஒவ்வொரு அலகிலும் மாணவர்களால் முழுமையாகத் தெரிந்துகொள்ள வேண்டிய முக்கியமான கருத்துகளாகும். தெளிவான சிந்தனைக்கும், பாடக்கருத்துகளைப் பற்றிய முழுமையான கற்றலுக்கும் மாணவர்கள் இக்கருத்துக்களைக் குறித்து தெளிவாக இருத்தல் வேண்டும்.



அலகிலுள்ள இந்த பிரிவு அந்த குறிப்பிட்ட அலகில் விவாதிக்கப்பட்டுள்ள பாடக்கருத்துகளுக்கு சம்பந்தப்பட்ட கணக்குப்பதிவியல் துறையில், தற்போதைய அல்லது நடந்த நிகழ்வுகள் அல்லது பயனுள்ள நடைமுறைகள் பற்றிய பல்வேறு தகவல்களைத் தருகிறது.

12th-Accountancy-Front.indd 4 12/11/2021 11:53:37 PM

மாணவர் செயல்பாடு

இது மாணவர்களுக்கு வகுப்புப்பணியாகவோ, வீட்டுப்பணியாகவோ அல்லது களப்பணியாகவோ ஒவ்வொரு அலகிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்பில் கொடுக்கப்படும் ஒரு பயிற்சியாகும். உலகெங்கிலும் உள்ள பலவிதமான வணிகச் சூழல் குறித்த செயல்முறை வெளிப்பாடு கணக்குப்பதிவியல் கல்விக்குத் தேவைப்படுகிறது. மாணவர் செயல்பாடு, கற்ற கோட்பாடுகளை நடைமுறை வணிக சூழ்நிலைகளில் செயல்படுத்துவதை உறுதிசெய்யும். மேலும், இது மாணவர்களின் பகுப்பாய்வு மற்றும் தொழில் முனையும் திறனை மேம்படுத்த உதவுகிறது.

இது கற்றலை வளப்படுத்துவதற்கான ஒரு இனையதள உதவி. விரைவாக தகவல்களைப் பெறக்கூடிய குறியீடு செயலி ஏற்றிய ஒரு கணிப்பேசி (ஸ்மார்ட் ஃபோன்) பயன்படுத்தி மாணவர்கள் வல்லுநர்கள் அல்லது அனுபவமுள்ள ஆசிரியர்களுடைய குறுகிய உரைகள் அல்லது செயல் விளக்கங்களை அறிய முடியும். இது ஒரு ஓய்வு நேரப் பயிற்சியாக இருக்க வேண்டும். இல்லையேல், ஆசிரியர்கள் இவற்றை வகுப்பறையில் காட்சிப்படுத்தலாம்.

நினைவில் கொள்ள வேண்டியவை

இது ஒரு அலகில் விவாதிக்கப்பட்டுள்ள முக்கியமான பாடக்கருத்துகளின் தொகுப்பை அளிக்கிறது.

சுய ஆய்வு வினாக்கள்

இந்த பகுதி மாணவர்கள் விடையளிக்க வேண்டிய கோட்பாடு சார்ந்த கேள்விகள் மற்றும் செயல்முறைக் கணக்குகளையும் கொண்டுள்ளது. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுத சொல்லும் வினாக்கள், கருத்துகளையும், நடைமுறைகளையும் ஆழ்ந்து புரிந்துகொள்ள உதவுகின்றன.

நிகழ்வாய்வு

நிகழ்வாய்வானது கற்ற கணக்கியல் கோட்பாடுகளையும், நடைமுறைகளையும் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையைப் பகுப்பாய்வதன் மூலம் நடைமுறை வணிகச் சூழலில் பயன்படுத்த உதவுகிறது. மாணவர்கள், உயர்ந்த அறிவு நிலைகளான பயன்படுத்துதல், பகுப்பாய்தல், மதிப்பிடல் மற்றும் புதிய மாதிரிகளை உருவாக்குதல் போன்றவற்றை அடைய உதவுகிறது.

தொடர் ஆய்விற்கு

இந்த பிரிவு இணைய உலாவல் அல்லது பார்வைக்குக் கொடுக்கப்பட்டுள்ள புத்தகங்களிலிருந்து கற்றல் மூலம் மாணவர்கள் தாங்கள் கற்றக் கருத்துகள் மற்றும் முறைகளை மேற்கொண்டு பகுப்பாய்வு செய்ய வழிவகுக்கிறது. மேலும் மாணவர்களின் மேம்பட்ட கற்றலுக்கும், உயர்கல்வி அல்லது தொழில்முறைக் கல்வி பயிலவும் உதவுகிறது.

கலைச்சொற்கள்

இந்தப் பிரிவு பாடநூலில் பயன்படுத்தப்பட்டுள்ள முக்கியமான சொல் வழக்குகளை அவற்றிற்கு இணையான ஆங்கில சொற்களோடு ஒப்பிடுதல் மூலம் புரிந்துகொள்ள உதவுகிறது.

பயனுள்ள மற்றும் வெற்றிகரமான உங்கள் கற்றலுக்கு எங்களது வாழ்த்துகள்.

ஆசிரியர் குழு

12th-Accountancy-Front.indd 5 12/11/2021 11:53:38 PM

கணக்குப்பதிவியல் கல்வியின் வாய்ப்புகள்

'கணக்குப்பதிவியல்' அறிவு சார்ந்த துறையாக பரவலான தன்மையை உடையது. இது இந்தியாவிலும் மற்றும் வெளிநாடுகளிலும் உயர்கல்விக்கும் மற்றும் வேலைவாய்ப்புக்குமான அதிக வாய்ப்புகளை அளிக்கிறது. மேல்நிலை கணக்குப்பதிவியல் கல்வி முடித்தவுடன் உள்ள வாய்ப்புகள் பின்வருமாறு:

கல்வி வாய்ப்புகள்

கீழ்க்கண்ட ஏதேனும் பட்டப்படிப்புகள்,நேரடியாகவோ அல்லது தொலைதூரக் கல்வி முறையிலோ மாணவர்கள் பயில முடியும்	கீழ்க்கண்ட ஏதேனும் ஒரு தொழிற்முறைக் கல்வி	வழக்கமான பட்டப்படிப்பிற்கு பின் இந்திய அல்லது வெளிநாடுகளின் கல்லூரி மற்றும் பல்கலைக் கழங்களில் கற்க வாய்ப்புள்ள பின்வரும் பட்டமேற்படிப்புகள்	வழக்கமான பட்டப்படிப்பிற்கு பின் அரசு உயர் பணிகள் மற்றும் கற்க வேண்டிய தொழிற்முறை கல்வி	முதுகலைப் பட்டத்திற்கு பின் கற்க வேண்டிய ஆராய்ச்சிச் சார்ந்த படிப்புகள்
• இளங்கலை வணிகவியல் (பொது) • இளங்கலை வணிகவியல் (தனிச்சிறப்பு) • இளங்கலை வணிகவியல் (கணக்கியல் மற்றும் நிதியியல்) • இளங்கலை வணிகவியல் (நிறுமச் செயலாண்மை) • இளங்கலை வணிகவியல் (கணினி பயன்பாடு) • இளங்கலை வணிகவியல் (வங்கி மேலாண்மை) • இளங்கலை நிர்வாகவியல் • இளங்கலை வங்கி நிர்வாகவியல் • இளங்கலை வணிகவியல் (கூட்டுறவு மேலாண்மை) • முதுகலை வணிகவியல் (5 ஆண்டு ஒருங்கிணைந்த படிப்பு)	• பட்டயக் கணக்காளர் • அடக்கவிலை மற்றும் மேலாண்மை கணக்காளர் • நிறுமச் செயலர் பட்டயப் படிப்பு • இளங்கலை சட்ட படிப்பு (5 ஆண்டுகால ஒருங்கிணைந்த படிப்பு) • மேலாண்மை கணக்கர் பட்டய படிப்பு (இங்கிலாந்து) • சான்றளிக்கப்பட்ட பட்டய கணக்கர் படிப்பு (இங்கிலாந்து) • சான்றிதழ் பெற்ற பொது கணக்கர் (அமெரிக்கா) • சான்றிதழ் பெற்ற நிதியியல் திட்டமிடுபவர் (அமெரிக்கா)	• முதுகலை வணிகவியல் • முதுகலை வணிகவியல் (கணக்கியல் மற்றும் நிதியியல்) • முதுகலை வணிகவியல் (நிறுமச் செயலாண்மை) • முதுகலை வணிகவியல் (பன்னாட்டு வணிகம் மற்றும் வங்கியியல்) • முதுகலை வணிகவியல் (கணினி பயன்பாடு) • முதுகலை வணிகவியல் (கூட்டுறவு மேலாண்மை) • முதுகலை வணிக நிர்வாகம் • முதுகலை வணிக நிர்வாகம் (நிதியியல்) • முதுகலை வணிக நிர்வாகம் (சந்தையியல்) • முதுகலை வணிக நிர்வாகம் (மனிதவள மேலாண்மை) • முதுகலை வணிக நிர்வாகம் (விளம்பரம் மற்றும் விற்பான்மை) • முதுகலை வணிக நிர்வாகம் (மருத்துவமனை மேலாண்மை) • முதுகலை மனிதவள மேலாண்மை • முதுகலை தொழிலாளர் மேலாண்மை	• இந்திய ஆட்சிப் பணி • இந்திய காவல் பணி • இந்திய அயல்நாட்டுப் பணி • இந்திய வருவாய் பணி • இந்திய கணக்கியல் மற்றும் தணிக்கையியல் பணி • இளங்கலைக் கல்வியியல் • முதுகலைக் கல்வியியல் • முதுகலைப் பட்டயப் படிப்புகள்	• முதுகலை ஆய்வியல் நிறைஞர் • முனைவர் பட்டம்

வேலைவாய்ப்புகள்

உதவிக் கணக்காளர்	கணக்காளர்
தணிக்கை உதவியாளர்	அடக்கவிலை பகுப்பாளர்
முதலீட்டு ஆலோசகர்	நிதிநிலை ஆலோசகர்
வரி ஆலோசகர்	பட்டயக் கணக்காளர்
நிறுமச் செயலாளர்	அடக்கவிலை மற்றும் மேலாண்மைக் கணக்காளர்
கற்பித்தல்	மாநில மற்றும் மத்திய அரசு பணிகள்

12th-Accountancy-Front.indd 6 12/11/2021 11:53:38 PM

இந்தியாவில் உள்ள சில தொழில் முறை படிப்புகளின் விவரங்கள்

தொழில் முறை படிப்பு	நிறுவனத்தின் பெயர்	தென்னிந்திய மண்டல அலுவலக முகவரி	தமிழ்நாட்டில் உள்ள கிளைகள்
பட்டயக் கணக்காளர்	இந்திய பட்டயக் கணக்காளர் நிறுவனம் www.icai.org	ஐசிஏஐ பவன், 122, மகாத்மா காந்தி சாலை, தபால் பெட்டி எண் : 3314, நுங்கம்பாக்கம், சென்னை-600 034.	கோயம்புத்தூர் ஈரோடு மதுரை சேலம் திருச்சிராப்பள்ளி திருநெல்வேலி திருப்பூர் தூத்துக்குடி காஞ்சிபுரம் கும்பகோணம் சிவகாசி
நிறுமச் செயலாண்மை	இந்திய நிறுமச் செயலாளர் நிறுவனம் www.icsi.edu	9, வீட் க்ராப்ட்ஸ் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை-600 034.	கோயம்புத்தூர் மதுரை சேலம்
அடக்கவிலை மற்றும் மேலாண்மைக் கணக்கியல்	இந்திய அடக்கவிலை கணக்கியல் நிறுவனம் www.icma.in	தென்னிந்திய மண்டல மன்றம், சி.எம்.ஏ. பவன், 4, மான்டியத் லேன், எக்மோர், சென்னை-600 008.	கோயம்புத்தூர் ஈரோடு மதுரை மேட்டூர்-சேலம் நெல்லை-பியர்ல் நெய்வேலி ராணிப்பேடை-வேலூர் திருச்சிராப்பள்ளி

வெளிநாட்டு வாய்ப்புகள்

கணக்குப்பதிவியல் மாணவர்களுக்கு வெளிநாடுகளில் பின்வரும் ஏராளமான வாய்ப்புகள் உள்ளன.

1. உயர் கல்வி
2. வேலைவாய்ப்புகள்
    - ஆசிரியர்கள்
    - கணக்காளர்கள்
    - தணிக்கையாளர்கள்
    - நிதி ஆலோசகர்கள்
    - ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆலோசகர்கள்
    - வரி ஆலோசகர்கள்
    - செயல்திட்ட ஆலோசகர்கள்

12th-Accountancy-Front.indd 7 12/11/2021 11:53:38 PM

12th-Accountancy-Front.indd 8 12/11/2021 11:53:38 PM

அலகு 1

முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து கணக்குகள்

பொருளடக்கம்

1.1 அறிமுகம்

1.2 முழுமை பெறா பதிவேடுகளின் பொருள்

1.3 முழுமை பெறா பதிவேடுகளின் இயல்புகள்

1.4 முழுமை பெறா பதிவேடுகளின் குறைபாடுகள்

1.5 இரட்டைப்பதிவு முறை மற்றும் முழுமைபெறா பதிவேடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகள்

1.6 முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து கணக்குகள்

1.7 முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து நிலை அறிக்கை வாயிலாக இலாபம் அல்லது நட்டம் கண்டறிதல்

1.8 முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல்

நினைவு கூற வேண்டிய கருத்துகள்

முழுமை பெறா பதிவேடுகளின் கணக்குகள் பற்றி கற்பதற்கு முன் பின்வரும் கருத்துகளை நினைவில் கொள்ள வேண்டும்:

- இரட்டைப்பதிவு முறை மற்றும் அதன் கொள்கைகள்
- கணக்குகளின் வகைகள் மற்றும் கணக்கியலின் விதிகள்
- இறுதிக் கணக்குகள்
- இரட்டைப்பதிவு முறையில் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும்போது வாராக்கடன், வாரா மற்றும் ஐயக்கடன் ஒதுக்கு, தேய்மானம் போன்ற சரிக்கட்டுதல்களுக்கான செயல்முறைகள்.

கற்றல் நோக்கங்கள்

மாணவர்கள்

- முழுமை பெறா பதிவேடுகளின் இயல்புகள் மற்றும் குறைபாடுகளை புரிந்து கொள்ளுதல்
- நிலை அறிக்கை தயாரித்தல் மற்றும் முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து இலாபம் அல்லது நட்டம் கணக்கிடுதல்
- முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல்

தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய சொற்கள்

- முழுமை பெறா பதிவேடுகள்
- நிலை அறிக்கை
- மொத்தக் கடனாளிகள் கணக்கு
- மொத்தக் கடனீந்தோர் கணக்கு

TFIY6

12th-Accountancy-Unit-01.indd 1 12/9/2021 11:08:52 PM

1.1 அறிமுகம்



மாணவர் செயல்பாடு 1.1

அருகிலுள்ள சில்லறை வணிகத்தை (பெட்டிக் கடையை) ஒரு மணிநேரம் பார்வையிடுங்கள். அவர்கள் விற்பனை நடைபெற்ற உடனேயே அதனைப் பதிவு செய்கிறார்களா? விற்பனை, செலவுகள் மற்றும் இலாபத்தை விற்பனையாளர் எவ்வாறு கண்காணிக்கிறார் என்பதைக் கேட்டறியுங்கள்.

இரட்டைப்பதிவு முறையில் கணக்குகளைப் பராமரிப்பது சில நிறுவனங்களுக்கு கட்டாயமானதாகும். உதாரணமாக, இந்தியாவில், இந்திய நிறுமச் சட்டம் 2013, பிரிவு 128 (1) –ன் படி நிறுமங்கள் தங்கள் கணக்குகளை இரட்டைப்பதிவு முறையில் பராமரித்திட வேண்டும். அவை போன்ற நிறுவனங்கள், கணக்குகளை இரட்டைப்பதிவு முறையில் மட்டுமே பராமரிக்க வேண்டும். பிற அமைப்புகள் இரட்டைப்பதிவு முறையை பின்பற்றலாம் அல்லது பின்பற்றாமல் இருக்கலாம். இரட்டைப்பதிவு முறையை கட்டாயமாகப் பின்பற்றாத நிறுவனங்களின் கணக்கேடுகள் அந்நிறுவனத்தின் உரிமையாளர்கள் மற்றும் கணக்காளர்களின் தேவை மற்றும் விருப்பத்திற்கேற்ப பராமரிக்கப்படுகின்றன. கணக்கேடுகள் முழுமையாக இரட்டைப்பதிவு முறையில் தயாரிக்கப்படாத போது அவ்வேடுகள் முழுமை பெறா பதிவேடுகள் என்றழைக்கப்படுகின்றன.

1.2 முழுமை பெறா பதிவேடுகளின் பொருள்

கணக்கேடுகள், இரட்டைப் பதிவு முறையின் படி பராமரிக்கப்படாத போது அந்த பதிவேடுகள் முழுமைபெறா கணக்கியல் பதிவேடுகள் என்று அழைக்கப்படுகின்றன. பொதுவாக, ரொக்கக் கணக்கு மற்றும் ஆள்சார் கணக்குகளான வாடிக்கையாளர் மற்றும் கடனீந்தோர் கணக்கு மட்டுமே முழுமையாகவும், பிற கணக்குகள் தேவைக்கேற்பவும் பராமரிக்கப்படுகின்றன.

இதில், சில நடவடிக்கைகள் முழுமையாகப் பதிவு செய்யப்படுகின்றன. அதாவது, சில நடவடிக்கைகளின் பற்று மற்றும் வரவு ஆகிய இரு தன்மைகளும் பதியப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, வாடிக்கையாளரிடமிருந்து பெற்ற மற்றும் கடனீந்தோருக்கு செலுத்திய ரொக்கத்திற்கு, இரண்டு தன்மைகளும் பதியப்படுகின்றன. சில நடவடிக்கைகளுக்கு ஒரு பகுதி மட்டும் பதியப்படுகிறது. அதாவது, ஒரே ஒரு தன்மை மட்டும் பதியப்படுகிறது. எடுத்துக்காட்டாக, செலவுகளுக்குச் செலுத்தியது ரொக்கக் கணக்கில் மட்டும் பதியப்படுகிறது. சில நடவடிக்கைகள் பதிவு செய்யப்படுவதே இல்லை. அதாவது, பற்று மற்றும் வரவு ஆகிய இரு தன்மைகளும் பதிவு செய்யப்படுவதில்லை. எடுத்துக்காட்டு, நிலைச்சொத்துகள் மீதான தேய்மானம். எனவே, வழக்கமாக இவ்வேடுகள் முழுமை பெறா பதிவேடுகள் என்றழைக்கப்படுகின்றன.

இது ஒரு முழுமைபெறா, அறிவியல் தன்மையற்ற கணக்கேட்டுப் பராமரிப்பு முறையாகும். இது ஒற்றைப்பதிவு முறையில் கணக்கேடுகள் பராமரிப்பு என்று அழைக்கப்பட்டது.

1.3 முழுமை பெறா பதிவேடுகளின் இயல்புகள்

முழுமை பெறா பதிவேடுகளின் இயல்புகள் பின்வருமாறு:

(i) **தன்மை**: இது நடவடிக்கைகளை அறிவியல் தன்மையற்ற மற்றும் ஒழுங்கற்ற முறையில் பதிவு செய்யும் ஒரு முறையாகும். இதில் கணக்கியல் கொள்கைகள் மற்றும் கணக்கியல் தரநிலைகள் முறையாகப் பின்பற்றப்படுவதில்லை.

(ii) **பராமரிக்கப்படும் கணக்கின் வகைகள்**: பொதுவாக, ரொக்கம் மற்றும் ஆள்சார் கணக்குகள் மட்டும் முழுமையாகப் பராமரிக்கப்படுகின்றன. சொத்து மற்றும் பெயரளவுக் கணக்குகள் முறையாகப் பராமரிக்கப்படுவதில்லை. சில நடவடிக்கைகள் பதிவு செய்யப்படுவதே இல்லை.

12th-Accountancy-Unit-01.indd 2 12/9/2021 11:08:52 PM

(iii) **சீரற்றத் தன்மை:** பல்வேறு நிறுவனங்களுக்கிடையில் நடவடிக்கைகளை பதிவு செய்வதில் சீரற்றத் தன்மை காணப்படுகிறது. வெவ்வேறு நிறுவனங்கள் தங்கள் தேவைகள் மற்றும் வசதிகளுக்கேற்ப நடவடிக்கைகளைப் பதிவு செய்கின்றன.

(iv) **நிதிநிலை அறிக்கைகள் உண்மையான மற்றும் நேர்மையான நிதிநிலையை வெளிப்படுத்தாது:** முழுமையற்ற தகவல்கள் மற்றும் துல்லியமற்ற கணக்கேடுகள் என்பதால், இவ்வேடுகளிலிருந்து கண்டறியப்படும் இலாபம் அல்லது நட்டம் நம்பகத் தன்மை உடையதல்ல. இது உண்மையான இலாபத்தன்மையை வெளிப்படுத்துவதில்லை. சொத்துகள் மற்றும் பொறுப்புகள் உண்மையான மற்றும் நேர்மையான நிதிநிலையை வெளிப்படுத்துவதில்லை.

(v) **பொருந்தும் தன்மை:** கணக்கேடுகளை இரட்டைப்பதிவு முறையில் பின்பற்ற சட்டப்படியான கடமையுள்ள நிறுவனங்கள் அல்லாத பிற நிறுவனங்கள் முழுமை பெறா பதிவேடுகளைப் பராமரிக்கலாம். எனவே, சிறு அளவிலான தனியாள் வணிகம் மற்றும் கூட்டாண்மை கணக்குகள் இம்முறையில் பராமரிக்கலாம்.

(vi) **வியாபார நடவடிக்கைகளுடன் உரிமையாளரின் நடவடிக்கைகளும் பதியப்படுதல்:** பொதுவாக, உரிமையாளரின் தனிப்பட்ட நடவடிக்கைகள் வியாபார நடவடிக்கைகளுடன் கலந்து பதியப்படுகிறது. உதாரணமாக, சொந்தப் பயனுக்காக சரக்குகள் வாங்கியது வியாபாரக் கொள்முதலுடன் சேர்த்து பதிவு செய்யப்படுகிறது.

1.4 முழுமை பெறா பதிவேடுகளின் குறைபாடுகள்

முழுமை பெறா பதிவேடுகளின் குறைபாடுகள் பின்வருமாறு:

(i) **பதிவேடுகள் முறையாகப் பராமரிக்கப்படாமை:** இது ஒரு அறிவியல் தன்மையற்ற மற்றும் ஒழுங்கற்ற கணக்கேடுகள் பராமரிப்பு முறையாகும். சொத்துக் கணக்குகள் மற்றும் பெயரளவுக் கணக்குகள் முறையாகப் பராமரிக்கப்படுவதில்லை.

(ii) **இருப்பாய்வு தயாரிப்பது கடினம்:** கணக்குகள், எல்லா விவரங்களுக்கும் பராமரிக்கப்படாததால் கணக்கேடுகள் முழுமையற்றதாக உள்ளன. எனவே, கணக்குகளின் கணக்கீட்டுச் சரித்தன்மையை அறிந்து கொள்ள இருப்பாய்வினைத் தயாரிப்பது கடினம்.

(iii) **வியாபாரத்தின் உண்மையான இலாபம் ஈட்டும் திறனை கண்டறிவது கடினம்:** இலாபம், பெறப்படும் தகவல்கள் மற்றும் மதிப்பீடுகளிலிருந்து கணக்கிடப் படுகிறது. எனவே, வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு துல்லியமாக தயாரிக்க முடியாததால் உண்மையான இலாபத்தை கண்டறிவது கடினம்.

(iv) **வியாபாரத்தின் நிதிநிலையைக் கண்டறிதல் கடினம்:** பொதுவாக, முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மதிப்பீடுகள் மட்டுமே பெறப்படுகிறது. எனவே, ஒரு குறிப்பிட்ட நாளின் உண்மையான மற்றும் நேர்மையான நிதிநிலைத் தன்மை அல்லது நிதி நிலையை கண்டறிவது கடினமாக உள்ளது.

(v) **தவறுகள் மற்றும் மோசடிகள் எளிதாக கண்டறிய முடியாது:** பதிவேடுகளின் ஒரு பகுதி மட்டுமே பெறப்படுவதால், கணக்கேடுகள் பராமரித்தலின் போது அகச்சோதனை செய்து தவறுகள் மற்றும் மோசடிகளைக் கண்டறிய முடியாமல் இருக்கலாம்.

(vi) **அரசு மற்றும் பிற அதிகாரிகளுக்கு ஏற்புடையதல்ல:** பராமரிக்கப்படும் கணக்குகள் முழுமையற்றதாக இருப்பதால், இம்முறையில் சட்டத்தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் இருக்கலாம். எனவே, அரசு, வரி அதிகாரிகள் மற்றும் பிற சட்ட அதிகாரிகள் முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து தயாரிக்கப்படும் கணக்குகளை ஏற்றுக் கொள்வதில்லை.

12th-Accountancy-Unit-01.indd 3 12/9/2021 11:08:52 PM

1.5 இரட்டைப் பதிவு முறை மற்றும் முழுமை பெறா பதிவேடுகளுக்கும் உள்ள வேறுபாடுகள்

வேறுபாட்டின் அடிப்படை	இரட்டைப் பதிவு முறை	முழுமை பெறா பதிவேடுகள்
1. நடவடிக்கைகளைப் பதிவு செய்தல்	அனைத்து நடவடிக்கைகளின் பற்று மற்றும் வரவு ஆகிய இரு தன்மைகளும் பதிவு செய்யப்படுகின்றன.	அனைத்து நடவடிக்கைகளின் பற்று மற்றும் வரவுத் தன்மைகள் முழுமையாகப் பதிவு செய்யப்படுவதில்லை. சில நடவடிக்கைகளுக்கு இரு தன்மைகளும் பதியப் படுகின்றன. சில நடவடிக்கைகள் பகுதியாகப் பதியப்படுகின்றன மற்றும் சில நடவடிக்கைகள் பதியாமல் விடப்படுகின்றன.
2. பராமரிக்கப்படும் கணக்கின் வகைகள்	ஆள்சார், சொத்து மற்றும் பெயரளவுக் கணக்குகள் முழுமையாகப் பராமரிக்கப்படுகின்றன.	பொதுவாக, ஆள்சார் மற்றும் ரொக்கக் கணக்குகள் மட்டும் முழுமையாகப் பராமரிக்கப்படுகின்றன. சொத்து மற்றும் பெயரளவுக் கணக்குகள் முழுமையாகப் பராமரிக்கப்படுவதில்லை.
3. இருப்பாய்வு தயாரித்தல்	கணக்கேடுகளில் பதிவு செய்த பதிவுகளின் கணக்கீட்டுச் சரித்தன்மையை சோதித்துப் பார்க்க இருப்பாய்வு தயாரிக்க முடியும்.	கணக்குகள் முழுமையற்றதாக இருப்பதால் கணக்கேடுகளில் பதிவு செய்த பதிவுகளின் கணக்கீட்டுச் சரித்தன்மையை சோதித்து பார்க்க இருப்பாய்வு தயாரிப்பது கடினம்.
4. சரியான இலாபம் அல்லது நட்டம் கணக்கிடுதல்	சரியான இலாபம் அல்லது நட்டம் கண்டறிய வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு தயாரிக்கப்படுகிறது.	முழுமையானத் தகவல்கள் பெற முடியாததால் வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு துல்லியமாக தயாரிக்க முடியாது. எனவே, கண்டறிந்த இலாபம் அல்லது நட்டம் துல்லியமாக இருக்காது .
5. நிதிநிலையினைக் கண்டறிதல்	உண்மையான நிதிநிலையை தெரிந்து கொள்ள இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்க முடியும்.	சொத்துகள் மற்றும் பொறுப்புகள் வெறும் மதிப்பீடுகள் மற்றும் முழுமையற்றதாக இருப்பதால் இருப்புநிலைக் குறிப்பு துல்லியமாக தயாரிக்க முடியாது மற்றும் உண்மையான நிதிநிலையினைக் கண்டறிய முடியாது.
6. பொருந்தும் தன்மை	இது அனைத்து அமைப்புகளுக்கும் பொருந்தக் கூடிய ஒன்றாகும்.	இது சிறிய அளவிலான தனிஆள் வணிகம் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்களுக்கு பொருந்தலாம்.
7. நம்பகத் தன்மை	இது, அறிவியல் பூர்வமான கணக்கியல் முறை மற்றும் சில கணக்கியல் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதால் நம்பகத் தன்மையுடையதாகும்.	இது அறிவியல் தன்மையற்றதால் நம்பகத்தன்மை உடையதல்ல.
8. ஏற்புத் தன்மை	கணக்கியல் பதிவேடுகள் வரி அதிகாரிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் உட்பட அனைத்து பயனாளர்களுக்கும் ஏற்புடையதாகும்.	கணக்கியல் பதிவேடுகள் அனைத்துப் பயனாளர்களுக்கும் ஏற்புடையதல்ல.

12th-Accountancy-Unit-01.indd 4 12/9/2021 11:08:52 PM

1.6 முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து கணக்குகள்

முழுமை பெறா பதிவேடுகளைப் பராமரித்து வரும் நிறுவனங்களுக்கும் இலாபம் அல்லது நட்டம் மற்றும் நிதி நிலையைக் கண்டறிவது அவசியமானதாகும். முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து பெறப்படும் தகவல்கள், மற்றும் நினைவுகள் அடிப்படையில் இலாபம் அல்லது நட்டம் கண்டறியப்படலாம். இதில், இறுதி முதலுக்கும் மற்றும் தொடக்க முதலுக்கும் இடையேயான வேறுபாடு இலாபமாகக் கருதப்படலாம். ஏனெனில், அந்நிறுவனங்களில் அந்த இலாபம் முதலுடன் சரிக்கட்டப் படுகிறது. மேலும், பெறப்படும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவல்களைக் கண்டறிந்து இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கலாம்.

1.7 முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து நிலை அறிக்கை வாயிலாக இலாபம் அல்லது நட்டம் கண்டறிதல்

இம்முறையில், ஒரு குறிப்பிட்ட காலத்தின் தொடக்க முதலை (நிகர மதிப்பு) இறுதி முதலுடன் ஒப்பீடு செய்வதன் மூலம் இலாபம் அல்லது நட்டம் கண்டறியப்படுகிறது. முதலின் மதிப்பு (நிகர மதிப்பு) அதிகரிக்கும் போது அது இலாபம் என்றும் முதலின் மதிப்பு குறையும் போது அது நட்டம் என்றும் கருதப்படுகிறது.

தொடக்க நிலை அறிக்கை மற்றும் இறுதி நிலை அறிக்கை முறையே தயாரிப்பதன் மூலம் தொடக்க முதல் மற்றும் இறுதி முதல் கண்டறியலாம். ஒரு குறிப்பிட்ட நாளைய சொத்துகள் மற்றும் பொறுப்புகள் இருப்பைக் காட்டுகின்ற ஒரு அறிக்கை நிலை அறிக்கை ஆகும். இலாபம் கண்டறியும் இம்முறையானது நிலையறிக்கை முறை அல்லது நிகர மதிப்பு முறை அல்லது முதல் ஒப்பீட்டு முறை என்று அழைக்கப்படுகிறது.

1.7.1 நிலை அறிக்கை வாயிலாக இலாபம் அல்லது நட்டம் கணக்கிடுதல்

இறுதி முதலுக்கும் மற்றும் தொடக்க முதலுக்கும் இடையே உள்ள வேறுபாடு வியாபாரத்தின் இலாபம் அல்லது நட்டமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. வியாபாரத்தின் முதலிலிருந்து ஏதேனும் பணம் எடுத்திருந்தாலோ மற்றும் வியாபாரத்திற்கு கூடுதல் முதல் கொண்டு வந்திருந்தாலோ தேவையானச் சரிக்கட்டுதல்கள் செய்யப்பட வேண்டும்.

இறுதி முதலை அடிப்படையாகக் கொள்ளவும். அவ்வாண்டின் எடுப்புகள் இறுதிமுதலுடன் கூட்டப்பட வேண்டும். ஏனெனில், எடுப்புகள் இறுதி முதலைக் குறைத்திருக்கலாம். அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் கழிக்கப்பட வேண்டும். ஏனெனில், கொண்டு வந்த கூடுதல் முதலானது இறுதி முதலை அதிகரித்திருக்கலாம். இது சரிக்கட்டப்பட்ட இறுதிமுதலை தரும்.

சரிக்கட்டப்பட்ட இறுதி முதல் = இறுதி முதல் + எடுப்புகள் – கூடுதல் முதல்

சரிக்கட்டப்பட்ட இறுதிமுதலை தொடக்க முதலோடு ஒப்பீடு செய்வதன் மூலம் இலாபம் அல்லது நட்டம் கண்டறியப்படலாம். இந்த வேறுபாடானது சாதகமான இருப்பாக இருந்தால் இலாபமாகவும், பாதகமான இருப்பாக இருந்தால் நட்டமாகவும் இருக்கும்.

இறுதி முதல் + எடுப்புகள் – கூடுதல் முதல் – தொடக்க முதல் = இலாபம் / நட்டம்

மாணவர் குறிப்பு

தொடக்க முதல் + கூடுதல் முதல் + இலாபம் / – நட்டம் – எடுப்புகள் = இறுதி முதல்

இலாபம் / நட்டம் = இறுதி முதல் + எடுப்புகள் – கூடுதல் முதல் – தொடக்க முதல்

12th-Accountancy-Unit-01.indd 5 12/9/2021 11:08:53 PM

1.7.2 நிலையறிக்கை தயாரித்து இலாபம் அல்லது நட்டம் கண்டறிவதற்கான படிநிலைகள்

நிலையறிக்கை தயாரித்து இலாபம் அல்லது நட்டம் கண்டறிவதற்கான படிநிலைகள் பின்வருமாறு:

(i) ஆண்டு தொடக்கத்தில் உள்ள சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் இருப்புகளைக் கொண்டு தொடக்க நிலையறிக்கை தயாரித்து தொடக்க முதலைக் கண்டறியவும்.

(ii) கணக்காண்டின் இறுதியில் தேய்மானம், வாராக்கடன், கொடுபடவேண்டிய மற்றும் முன்கூட்டி செலுத்திய செலவுகள், பெறவேண்டிய வருமானம், முதல் மீது வட்டி, எடுப்பு மீது வட்டி போன்றவற்றிற்குத் தேவையான சரிக்கட்டுதல்களைச் செய்தபின் இறுதி நிலையறிக்கை தயாரித்து இறுதிமுதல் கண்டறியவும்.

(iii) இறுதி முதலுடன் எடுப்புத் தொகையினை (பணம் மற்றும் / பொருட்கள் இரண்டும்) கூட்டவும்.

(iv) சரிக்கட்டப்பட்ட இறுதி முதலைக் கண்டறிய கூடுதல் முதலைக் கழிக்கவும்.

(v) சரிக்கட்டப்பட்ட இறுதி முதலிலிருந்து தொடக்க முதலைக் கழித்து இலாபம் அல்லது நட்டத்தினைக் கண்டறியவும்.

(அ) சரிக்கட்டப்பட்ட இறுதிமுதலானது தொடக்க முதலைவிட அதிகமானதாக இருந்தால், அது இலாபத்தைக் குறிக்கும்.

(ஆ) சரிக்கட்டப்பட்ட இறுதி முதலானது தொடக்க முதலைவிட குறைவானதாக இருந்தால், அது நட்டத்தைக் குறிக்கும்.

இலாபம் அல்லது நட்டத்தைக் கண்டறிய கீழ்க்கண்ட படிவம் பயன்படுத்தப்படுகிறது:

....ல் முடிவடையும் ஆண்டிற்கான இலாப நட்ட அறிக்கை

விவரம்	₹
அவ்வாண்டின் இறுதி முதல்	xxx
கூட்டுக: அவ்வாண்டின் எடுப்புகள்	xxx
	xxx
கழிக்க: அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல்	xxx
சரிக்கட்டப்பட்ட இறுதிமுதல்	xxx
கழிக்க: தொடக்க முதல்	xxx
அவ்வாண்டின் இலாபம் அல்லது நட்டம்	xxx

எடுத்துக்காட்டு 1

பின்வரும் விவரங்களிலிருந்து இலாபம் அல்லது நட்டம் கணக்கிடவும்:

விவரம்	₹
ஆண்டு தொடக்கத்தில் முதல் (1 ஏப்ரல், 2016)	2,00,000
ஆண்டு இறுதியில் முதல் (31 மார்ச், 2017)	3,50,000
அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல்	70,000
அவ்வாண்டின் எடுப்புகள்	40,000

12th-Accountancy-Unit-01.indd 6 12/9/2021 11:08:53 PM

தீர்வு

2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான இலாப நட்ட அறிக்கை

விவரம்	₹
இறுதி முதல் (31.3.2017)	3,50,000
கூட்டுக: அவ்வாண்டின் எடுப்புகள்	40,000
	3,90,000
கழிக்க: அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல்	70,000
சரிக்கட்டப்பட்ட இறுதி முதல்	3,20,000
கழிக்க: தொடக்க முதல் (1.4.2016)	2,00,000
அவ்வாண்டின் இலாபம்	**1,20,000**

எடுத்துக்காட்டு 2

பின்வரும் விவரங்களிலிருந்து இலாபம் அல்லது நட்டம் கணக்கிடவும்:

விவரம்	₹
2018, ஏப்ரல் 1 இல் முதல்	1,60,000
2019, மார்ச் 31 இல் முதல்	1,50,000
அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல்	25,000
அவ்வாண்டின் எடுப்புகள்	30,000

தீர்வு

2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாப நட்ட அறிக்கை

விவரம்	₹
இறுதி முதல் (31.3.2019)	1,50,000
கூட்டுக: அவ்வாண்டின் எடுப்புகள்	30,000
	1,80,000
கழிக்க: அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல்	25,000
சரிக்கட்டப்பட்ட இறுதி முதல்	1,55,000
கழிக்க: தொடக்க முதல் (1.4.2018)	1,60,000
அவ்வாண்டில் ஏற்பட்ட நட்டம்	**(–)5,000**

எடுத்துக்காட்டு 3

பின்வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவலைக் கண்டறியவும்:

விவரம்	₹
31.3.2019 அன்று இறுதி முதல்	1,90,000
அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல்	50,000
அவ்வாண்டின் எடுப்புகள்	30,000
1.4.2018 அன்று தொடக்க முதல்	?
31.3.2019 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் நட்டம்	40,000

12th-Accountancy-Unit-01.indd 7 12/9/2021 11:08:53 PM

தீர்வு

2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான இலாப நட்ட அறிக்கை

விவரம்	₹
இறுதி முதல் (31.3.2019)	1,90,000
கூட்டுக: அவ்வாண்டின் எடுப்புகள்	30,000
	2,20,000
கழிக்க: அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல்	50,000
சரிக்கட்டப்பட்ட இறுதி முதல்	1,70,000
கழிக்க: தொடக்க முதல் (1.4.2018) (இருப்புக் கட்டும் தொகை)	**2,10,000**
31.3.2019 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் நட்டம்	(–)40,000

எடுத்துக்காட்டு 4

பின்வரும் விவரங்களிலிருந்து 2018, டிசம்பர் 31ஆம் நாளைய முதல் கண்டறியவும்:

	₹
2018, ஜனவரி 1 அன்று முதல்	27,500
உரிமையாளர் தன் சொந்த பயனுக்கு சரக்கு எடுத்தது	5,000
அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல்	2,500
அவ்வாண்டின் இலாபம்	10,000

தீர்வு

2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான இலாப நட்ட அறிக்கை

விவரம்	₹
31.12.2018 அன்று இறுதி முதல் (இருப்புக் கட்டும் தொகை)	**35,000**
கூட்டுக: அவ்வாண்டின் எடுப்புகள் (சொந்த பயனுக்கு சரக்கு எடுத்தது)	5,000
	40,000
கழிக்க: அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல்	2,500
சரிக்கட்டப்பட்ட இறுதி முதல்	37,500
கழிக்க : 1.1.2018 அன்று தொடக்க முதல்	27,500
அவ்வாண்டின் இலாபம்	10,000

எடுத்துக்காட்டு 5

பின்வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவலைக் கண்டறியவும்:

	₹
2017, ஏப்ரல் 1 அன்று முதல்	2,50,000
2018, மார்ச் 31 அன்று முதல்	2,75,000
அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல்	30,000
அவ்வாண்டின் இலாபம்	15,000
அவ்வாண்டின் எடுப்புகள்	?

12th-Accountancy-Unit-01.indd 8 12/9/2021 11:08:53 PM

தீர்வு

2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான இலாப நட்ட அறிக்கை

விவரம்	₹
31.3.2018 அன்று இறுதி முதல்	2,75,000
கூட்டுக: அவ்வாண்டின் எடுப்புகள் (இருப்புக் கட்டும் தொகை)	**20,000**
	2,95,000
கழிக்க: அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல்	30,000
சரிக்கட்டப்பட்ட இறுதி முதல்	2,65,000
கழிக்க: 1.4.2017 அன்று தொடக்க முதல்	2,50,000
அவ்வாண்டின் இலாபம்	15,000



அவ்வாண்டின் எடுப்புகள் ₹ 20,000, முதல் கணக்கு தயாரிப்பதன் மூலமும் கண்டறியலாம்.

முதல் கணக்கு

ப							வ
நாள்	**விவரம்**	**பே. ப.எ**	**₹**	**நாள்**	**விவரம்**	**பே. ப.எ**	**₹**
2018				2017			
மார்ச்31	எடுப்புகள் க/கு (இருப்புக் கட்டும் தொகை)		20,000	ஏப். 1	இருப்பு கீ/கொ		2,50,000
					ரொக்கக் க/கு		30,000
31	இருப்பு கீ/இ		**2,75,000**	2018 மார்ச் 31	இலாபம்		15,000
			2,95,000				2,95,000

1.7.3 நிலை அறிக்கை

நிலை அறிக்கை என்பது ஒரு குறிப்பிட்ட நாளுக்கான சொத்துகள் மற்றும் பொறுப்புகள் இருப்பைக் காட்டும் ஒரு அறிக்கை ஆகும். சொத்துகளின் இருப்புகள் வலதுபக்கமும் மற்றும் பொறுப்புகளின் இருப்புகள் இடது பக்கத்திலும் காண்பிக்கப்பெறும். இது முழுமைபெறா பதிவேடுகளிலிருந்து ஒரு வியாபார நிறுவனத்தின் ஒரு குறிப்பிட்ட நாளுக்கான முதலைக் கண்டறிய தயாரிக்கப்படுகிறது. இது இருப்புநிலைக் குறிப்பு போன்று தோற்றமளிக்கும். மொத்தச் சொத்துகள் மற்றும் மொத்தப் பொறுப்புகளின் வேறுபாட்டுத் தொகை முதலாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

முதல் = சொத்துகள் – பொறுப்புகள்

நிலை அறிக்கை, சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் பட்டியலாக இருந்தாலும் இது இருப்புநிலைக் குறிப்பு என்று அழைக்கப்படுவதில்லை. ஏனெனில், எல்லா சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் மதிப்பு முழுமையாக பேரேட்டுக் கணக்குகளின் இருப்புகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதில்லை. சில விவரங்கள் பராமரிக்கப்பட்ட கணக்குகளிலிருந்தும், சில விவரங்கள் அவை தொடர்பான ஆவணங்களிலிருந்தும் மற்றும் சில இருப்புகள் நினைவு அடிப்படையிலான மதிப்பீடுகளிலிருந்தும் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

12th-Accountancy-Unit-01.indd 9 12/9/2021 11:08:53 PM

1.7.4 நிலை அறிக்கையின் படிவம்

..... ஏடுகளில்

..... நாளைய நிலைஅறிக்கை

பொறுப்புகள்	₹	சொத்துகள்	₹
பற்பல கடனீந்தோர்	xxx	கைரொக்கம்	xxx
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	xxx	வங்கி ரொக்கம்	xxx
கொடுபடவேண்டிய செலவுகள்	xxx	பற்பல கடனாளிகள்	xxx
வங்கி மேல்வரைப்பற்று	xxx	பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	xxx
முதல் (இருப்புக் கட்டும் தொகை)	xxx	சரக்கிருப்பு	xxx
		முன்கூட்டிச் செலுத்திய செலவுகள்	xxx
		நிலைச் சொத்துகள்	xxx
	xxx		xxx

எடுத்துக்காட்டு 6

சாந்தி என்பவரின் 2018, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புகள் பின்வருமாறு:

விவரம்	₹	விவரம்	₹
பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	6,000	பற்பல கடனீந்தோர்	25,000
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	4,000	சரக்கிருப்பு	45,000
இயந்திரம்	60,000	கடனாளிகள்	70,000
அறைகலன்	10,000	ரொக்கம்	4,000

2018, டிசம்பர் 31ஆம் நாளைய நிலை அறிக்கை தயாரித்து அந்நாளைய முதலை கணக்கிடவும்.

தீர்வு

சாந்தி என்பவரின் ஏடுகளில்

2018, டிசம்பர் 31 ஆம் நாளைய நிலை அறிக்கை

பொறுப்புகள்	₹	சொத்துகள்	₹
பற்பல கடனீந்தோர்	25,000	ரொக்கம்	4,000
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	4,000	சரக்கிருப்பு	45,000
முதல் (இருப்புக் கட்டும் தொகை)	1,66,000	கடனாளிகள்	70,000
		பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	6,000
		இயந்திரம்	60,000
		அறைகலன்	10,000
	1,95,000		1,95,000

12th-Accountancy-Unit-01.indd 10 12/9/2021 11:08:54 PM

1.7.5 நிலை அறிக்கைக்கும் இருப்புநிலைக் குறிப்புக்கும் உள்ள வேறுபாடுகள்

வேறுபாட்டிற்கான அடிப்படை	நிலை அறிக்கை	இருப்புநிலைக் குறிப்பு
1. நோக்கம்	நிலை அறிக்கை பொதுவாக வியாபாரத்தின் முதலை கண்டறிய தயாரிக்கப்படுகிறது.	இருப்புநிலைக் குறிப்பு வியாபாரத்தின் நிதிநிலையைக் கண்டறிய தயாரிக்கப்படுகிறது.
2. கணக்கியல் முறை	இரட்டைப்பதிவு முறையை பின்பற்றுவது கட்டாயமானதாக இல்லாத போது நிலைஅறிக்கை தயாரிக்கப்படுகிறது.	கணக்குகள் இரட்டைப்பதிவு முறையில் பராமரிக்கப்படும் போது இருப்புநிலைக்குறிப்பு தயாரிக்கப்படுகிறது.
3. தயாரிப்பின் அடிப்படை	இது முழுமையாக பேரேட்டுக் கணக்குகளை அடிப்படையாகக் கொண்டதல்ல. பேரேட்டுக் கணக்குகளின் இருப்புகள் முடிந்த இடங்களில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.சில விவரங்கள் அது தொடர்பான ஆவணங்களிலிருந்தும் மற்றும் சில இருப்புகள் மதிப்பீடுகளிலிருந்தும் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.	இது முழுமையாக பேரேட்டுக் கணக்குகளின் அடிப்படையிலேயே தயாரிக்கப்படுகிறது.
4. நம்பகத்தன்மை	இது முழுமை பெறா பதிவேடுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதால் நம்பகத்தன்மை உடையது அல்ல.	இது இரட்டைப் பதிவு முறையில் தயாரிக்கப்படுவதால் நம்பகத்தன்மை உடையது.
5. விடுபட்ட விவரங்கள்	ஏடுகள் முழுமையாக பராமரிக்கப்படாததால் விடுபட்ட விவரங்களைக் கண்டறிவது கடினம்.	அனைத்து நடவடிக்கைகளின் இரண்டு தன்மைகளும் பதியப்படுவதால் விடுபட்ட விவரங்களை எளிதில் கண்டறிய முடியும்.

எடுத்துக்காட்டு 7

2017, ஏப்ரல் 1 அன்று கணேஷ் ₹ 75,000 முதலுடன் தன்னுடைய தொழிலைத் தொடங்கினார். அவர் முறையான கணக்கேடுகளை பராமரிக்கவில்லை. 31.03.2018 ஆம் நாளைய அவருடைய ஏடுகளின் விவரங்கள் பின்வருமாறு.

விவரம்	₹	விவரம்	₹
ரொக்கம்	5,000	கடனாளிகள்	16,000
சரக்கிருப்பு	18,000	கடனீந்தோர்	9,000
பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	7,000	வங்கி ரொக்கம்	24,000
அறைகலன்	3,000	செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	6,000
நிலம் மற்றும் கட்டடங்கள்	30,000		

அவ்வாண்டில் தன்னுடைய சொந்தப் பயனுக்காக அவர் ₹ 15,000 எடுத்துக் கொண்டார். அவ்வாண்டில் அவர் கொண்டுவந்த கூடுதல் முதல் ₹ 20,000. அவருடைய இலாபம் அல்லது நட்டத்தைக் கண்டறியவும்.

தீர்வு

கணேஷ் என்பவரின் 2018, மார்ச் 31 ஆம் நாளைய நிலை அறிக்கை

பொறுப்புகள்	₹	சொத்துகள்	₹
கடனீந்தோர்	9,000	ரொக்கம்	5,000
செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு	6,000	வங்கி ரொக்கம்	24,000
முதல் (இருப்புக் கட்டும் தொகை)	**88,000**	சரக்கிருப்பு	18,000
		கடனாளிகள்	16,000
		பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	7,000
		நிலம் மற்றும் கட்டடங்கள்	30,000
		அறைகலன்	3,000
	1,03,000		1,03,000

12th-Accountancy-Unit-01.indd 11 12/9/2021 11:08:54 PM

மாணவர் குறிப்பு

இறுதி முதல் கண்டறிய 2018, மார்ச் 31 ஆம் நாளைய நிலையறிக்கை தயாரிக்கப்பட வேண்டும்.

2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான இலாபநட்ட அறிக்கை

விவரம்	₹
31.03.2018 அன்று இறுதி முதல்	88,000
கூட்டுக: அவ்வாண்டின் எடுப்புகள்	15,000
	1,03,000
கழிக்க: அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல்முதல்	20,000
சரிக்கட்டப்பட்ட இறுதி முதல்	83,000
கழிக்க: 1.4.2017 அன்று தொடக்க முதல்	75,000
31.03.2018 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் இலாபம்	**8,000**

எடுத்துக்காட்டு 8

டேவிட் முறையான கணக்கேடுகளைப் பராமரிக்கவில்லை. அவருடைய ஏடுகளிலிருந்து தரப்பட்டுள்ள விவரங்கள் பின்வருமாறு:

விவரம்	1.4.2018 ₹	31.3.2019 ₹
ரொக்கம்	43,000	29,000
சரக்கிருப்பு	1,20,000	1,30,000
பற்பல கடனாளிகள்	84,000	1,10,000
பற்பல கடனீந்தோர்	1,05,000	1,02,000
கடன்	25,000	20,000
வணிக வளாகம்	2,50,000	2,50,000
அறைகலன்	33,000	45,000

அவ்வாண்டில் அவர் கூடுதல் முதலாக ₹ 45,000 கொண்டு வந்தார். தன்னுடைய வியாபாரத்திலிருந்து சொந்த பயனுக்காக ₹ 2,500 ஒவ்வொரு மாதமும் எடுத்துக் கொண்டார். மேற்கண்ட விவரங்களைக் கொண்டு இலாப நட்ட அறிக்கையை தயார் செய்யவும்.

தீர்வு

டேவிட் என்பவரின் ஏடுகளில்

தொடக்க முதல் கணக்கிடுதல்

2018, ஏப்ரல் 1 ஆம் நாளைய நிலையறிக்கை

பொறுப்புகள்	₹	சொத்துகள்	₹
பற்பல கடனீந்தோர்	1,05,000	ரொக்கம்	43,000
கடன்	25,000	சரக்கிருப்பு	1,20,000
முதல் (இருப்புக் கட்டும் தொகை)	**4,00,000**	பற்பல கடனாளிகள்	84,000
		வணிக வளாகம்	2,50,000
		அறைகலன்	33,000
	5,30,000		5,30,000

12th-Accountancy-Unit-01.indd 12 12/9/2021 11:08:54 PM

இறுதிமுதல் கணக்கிடுதல்

2019, மார்ச் 31 ஆம் நாளைய நிலையறிக்கை

பொறுப்புகள்	₹	சொத்துகள்	₹
பற்பல கடனீந்தோர்	1,02,000	ரொக்கம்	29,000
கடன்	20,000	சரக்கிருப்பு	1,30,000
முதல் (இருப்புக் கட்டும் தொகை)	**4,42,000**	பற்பல கடனாளிகள்	1,10,000
		வணிக வளாகம்	2,50,000
		அறைகலன்	45,000
	5,64,000		5,64,000

2019 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான இலாப நட்ட அறிக்கை

விவரம்	₹
31.3.2018 அன்று இறுதிமுதல்	4,42,000
கூட்டுக: அவ்வாண்டின் எடுப்புகள் (2,500 x 12)	30,000
	4,72,000
கழிக்க: அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல்	45,000
சரிக்கட்டப்பட்ட இறுதிமுதல்	4,27,000
கழிக்க: 1.4.2018 அன்று தொடக்க முதல்	4,00,000
31.3.2019 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் இலாபம்	**27,000**

மாணவர் செயல்பாடு 1.2

சிந்தனைக்கு: கூடுதல் முதலாக ₹ 45,000 அவ்வாண்டில் கொண்டுவரப்பட்டது. கூடுதல் முதல் கொண்டுவர வேண்டியதன் தேவைக்கான ஏதேனும் இரண்டு காரணங்களை நினைவு கூறவும்.

எடுத்துக்காட்டு 9

அகமது முறையான கணக்கேடுகளைப் பராமரிப்பதில்லை. 2018 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

விவரம்	1.4.2017	31.3.2018
	₹	₹
வங்கி இருப்பு	14,000 (வ)	18,000 (ப)
கைரொக்கம்	800	1,500
சரக்கிருப்பு	12,000	16,000
கடனாளிகள்	34,000	30,000
பொறித்தொகுதி	80,000	80,000
அறைகலன்	40,000	40,000
கடனீந்தோர்	60,000	72,000

அகமது தனது சொந்தப் பயனுக்காக ₹ 40,000 எடுத்துக்கொண்டார். தன்னுடைய வியாபாரத்தை விரிவுபடுத்துவதற்காக அவர் ₹ 16,000 கூடுதல் முதல் கொண்டு வந்தார். கடனாளிகள் மீது 5% ஒதுக்கு உருவாக்க வேண்டும். பொறித்தொகுதி மீது 10% தேய்மானம் நீக்கப்பட வேண்டும்.

12th-Accountancy-Unit-01.indd 13 12/9/2021 11:08:54 PM

தீர்வு

அகமது என்பவரின் ஏடுகளில்

தொடக்க முதல் கணக்கிடுதல்

2017, மார்ச் 31 ஆம் நாளைய நிலையறிக்கை

பொறுப்புகள்	₹	சொத்துகள்	₹
வங்கி மேல்வரைப்பற்று	14,000	கைரொக்கம்	800
கடனீந்தோர்	60,000	சரக்கிருப்பு	12,000
முதல் (இருப்புக் கட்டும் தொகை)	**92,800**	கடனாளிகள்	34,000
		பொறித்தொகுதி	80,000
		அறைகலன்	40,000
	1,66,800		1,66,800

இறுதிமுதல் கணக்கிடுதல்

2018, மார்ச் 31 ஆம் நாளைய நிலையறிக்கை

பொறுப்புகள்	₹	சொத்துகள்	₹	₹
கடனீந்தோர்	72,000	வங்கி இருப்பு		18,000
முதல் (இருப்புக் கட்டும் தொகை)	**1,04,000**	கைரொக்கம்		1,500
		சரக்கிருப்பு		16,000
		கடனாளிகள்	30,000	
		கழிக்க: கடனாளிகள் மீதான ஒதுக்கு 5%	1,500	28,500
		பொறித் தொகுதி	80,000	
		கழிக்க: தேய்மானம்	8,000	72,000
		அறைகலன்		40,000
	1,76,000			1,76,000

2018 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான இலாப நட்ட அறிக்கை

விவரம்	₹
31.3.2018 அன்று இறுதிமுதல்	1,04,000
கூட்டுக: அவ்வாண்டின் எடுப்புகள்	40,000
	1,44,000
கழிக்க: அவ்வாண்டில் கொண்டுவரப்பட்ட கூடுதல் முதல்	16,000
சரிக்கட்டப்பட்ட இறுதிமுதல்	1,28,000
கழிக்க: 31.3.2017 அன்று தொடக்க முதல்	92,800
31.3.2018 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் இலாபம்	**35,200**

12th-Accountancy-Unit-01.indd 14 12/9/2021 11:08:54 PM

1.8 முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல்

கணக்கேடுகள் முழுமை பெறாதவையாக இருக்கும்போது, வருமானம், செலவுகள், சொத்துகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான விவரங்கள் முழுமையாக இருக்காது. எனவே, வியாபார, இலாபநட்டக் கணக்கு மற்றும் இருப்புநிலைக்குறிப்பு ஆகியவற்றைத் தயாரிப்பது சிரமமாக இருக்கும். ஆனால் தரப்பட்டிருக்கின்ற தகவல்களைக் கொண்டு, விடுபட்ட தகவல்களைக் கண்டுபிடித்த பிறகு இறுதிக் கணக்குகளைத் தயாரிக்க முடியும்.

1.8.1 முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது பின்பற்ற வேண்டிய படிநிலைகள்

முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது பின்வரும் படிநிலைகளைப் பின்பற்ற வேண்டும்:

1. தொடக்க முதல் அறிவதற்கு, தொடக்க நிலையறிக்கையைத் தயாரிக்க வேண்டும்.

2. தரப்பட்ட தகவல்களிலிருந்து விடுபட்ட தொகைகளைக் கண்டறிய வேண்டும். இதனை கண்டறிய நினைவுக்குறிப்பு கணக்குகள் தயாரிக்கலாம் அல்லது ஏற்கனவே தரப்பட்டிருக்கின்ற தகவல்களில் தேவையான சரிக்கட்டுதல்கள் செய்த பின்னர் கண்டறியலாம். எடுத்துக்காட்டாக,

   (அ) ரொக்கக் கொள்முதல் மற்றும் ரொக்க விற்பனை போன்ற விடுபட்ட தகவல்களைக் கண்டறிய ரொக்க ஏட்டினைத் தயாரிப்பது அவசியமாகலாம்.

   (ஆ) மொத்தக் கடனாளிகள் மற்றும் மொத்தக் கடனீந்தோர் கணக்குகளை முறையே தயாரிப்பதன் மூலம் கடன் விற்பனை மற்றும் கடன் கொள்முதல் ஆகியவற்றைக் கண்டறியலாம்.

   (இ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மற்றும் செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்குகளை முறையே தயாரிப்பதன் மூலம் பெறப்பட்ட பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுகள் மற்றும் ஏற்கப்பட்ட செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுகள் இருப்புகளைக் கண்டறியலாம்.

3. இறுதியாக, வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு ஆகியவற்றைத் தயாரிக்க வேண்டும்.

முக்கியமான கணக்குகளின் படிவங்கள் அதாவது, மொத்தக் கடனாளிகள் கணக்கு, பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு, மொத்தக் கடனீந்தோர் கணக்கு மற்றும் செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு கீழே தரப்பட்டுள்ளது.

(i) மொத்த கடனாளிகள் கணக்கின் படிவம்

ப **மொத்த கடனாளிகள் கணக்கு** **வ**

விவரம்	₹	விவரம்	₹
இருப்பு கீ/கொ	xxx	ரொக்கக் க/கு (பெற்றது)	xxx
(தொடக்க இருப்பு)		வங்கி க/கு (காசோலைகள் பெற்றது)	xxx
விற்பனை க/கு (கடன் விற்பனை)	xxx	அளித்த தள்ளுபடி க/கு	xxx
வங்கி க/கு (காசோலை மறுக்கப்பட்டது)	xxx	விற்பனைத் திருப்பக் க/கு	xxx
பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு க/கு	xxx	வாராக்கடன் க/கு	xxx
(மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது)		பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு க/கு	xxx
		(மாற்றுச்சீட்டு பெற்றது)	
		இருப்பு கீ/இ	xxx
		(இறுதி இருப்பு)	
	xxx		xxx

12th-Accountancy-Unit-01.indd 15 12/9/2021 11:08:55 PM

எடுத்துக்காட்டு 10

பின்வரும் விவரங்களிலிருந்து கடன் விற்பனையைக் கண்டறியவும்:

விவரம்	₹
2018, ஜனவரி 1 அன்று கடனாளிகள்	40,000
கடனாளிகளிடம் பெற்ற ரொக்கம்	1,00,000
அளித்த தள்ளுபடி	5,000
விற்பனைத் திருப்பம்	2,000
2018, டிசம்பர் 31 அன்று கடனாளிகள்	60,000

தீர்வு

ப **மொத்தக் கடனாளிகள் கணக்கு** வ

விவரம்	₹	விவரம்	₹
இருப்பு கீ/கொ	40,000	ரொக்கக் க/கு (பெற்றது)	1,00,000
விற்பனை க/கு (கடன்)	**1,27,000**	அளித்த தள்ளுபடி க/கு	5,000
(இருப்புக் கட்டும் தொகை)		விற்பனைத் திருப்பக் க/கு	2,000
		இருப்பு கீ/இ	60,000
	1,67,000		1,67,000

எடுத்துக்காட்டு 11

பின்வரும் விவரங்களைக் கொண்டு அவ்வாண்டின் மொத்த விற்பனையைக் கண்டறியவும்:

விவரம்	₹
2018, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள்	50,000
அவ்வாண்டில் கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம்	1,50,000
உள்திருப்பம்	15,000
வாராக்கடன்	5,000
2019, மார்ச் 31 அன்று கடனாளிகள்	70,000
ரொக்க விற்பனை	1,40,000

தீர்வு

ப **மொத்தக் கடனாளிகள் கணக்கு** வ

விவரம்	₹	விவரம்	₹
இருப்பு கீ/கொ	50,000	ரொக்கக் க/கு	1,50,000
விற்பனை க/கு (கடன்)	1,90,000	உள் திருப்பம் க/கு	15,000
(இருப்புக் கட்டும் தொகை)		வாராக்கடன் க/கு	5,000
		இருப்பு கீ/இ	70,000
	2,40,000		2,40,000

12th-Accountancy-Unit-01.indd 16 12/9/2021 11:08:55 PM

மொத்த விற்பனை = ரொக்க விற்பனை + கடன் விற்பனை

= ₹ 1,40,000 + ₹ 1,90,000

= ₹ 3,30,000

(ii) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கின் படிவம்

ப **பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கு** **வ**

விவரம்	₹	விவரம்	₹
இருப்பு கீ/கொ	xxx	ரொக்கம் / வங்கி க/கு	xxx
(தொடக்க இருப்பு)		(பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு தொகை பெறப்பட்டது)	
பற்பல கடனாளிகள் க/கு	xxx	பற்பல கடனாளிகள் க/கு	xxx
(அவ்வாண்டில் பெறுதற்குரிய		(பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது)	
மாற்றுச்சீட்டு பெற்றது)		இருப்பு கீ/இ	xxx
		(இறுதி இருப்பு)	
	xxx		xxx

எடுத்துக்காட்டு 12

பின்வரும் விவரங்களிலிருந்து, பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கினைத் தயாரித்து கடனாளிகளிடமிருந்து பெற்ற மாற்றுச்சீட்டினைக் கணக்கிடவும்.

விவரம்	₹
தொடக்க பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	20,000
இறுதி பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	30,000
மாற்றுச்சீட்டிற்கான ரொக்கம் பெற்றது	60,000
பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது	5,000

தீர்வு

ப **பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கு** **வ**

விவரம்	₹	விவரம்	₹
இருப்பு கீ/கொ	20,000	ரொக்கக் க/கு	60,000
கடனாளிகள் க/கு	**75,000**	கடனாளிகள் க/கு	5,000
(அவ்வாண்டில் மாற்றுச் சீட்டு பெற்றது		(பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்படடது)	
– இருப்புக் கட்டும் தொகை)		இருப்பு கீ/இ	30,000
	95,000		95,000

12th-Accountancy-Unit-01.indd 17 12/9/2021 11:08:55 PM

எடுத்துக்காட்டு 13

பின்வரும் விவரங்களிலிருந்து மொத்த விற்பனையை கணக்கிடவும்:

விவரம்	₹
2017, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள்	1,50,000
2017, ஏப்ரல் 1 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	40,000
கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம்	3,90,000
பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக்குரிய ரொக்கம் பெற்றது	90,000
பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது	10,000
விற்பனைத் திருப்பம்	40,000
2018, மார்ச் 31 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	30,000
2018, மார்ச் 31 அன்று பற்பல கடனாளிகள்	1,30,000
ரொக்க விற்பனை	2,00,000

தீர்வு

ப **பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு** **வ**

விவரம்	₹	விவரம்	₹
இருப்பு கீ/கொ	40,000	ரொக்கக் க/கு	90,000
கடனாளிகள் க/கு*	**90,000**	கடனாளிகள் க/கு	10,000
(அவ்வாண்டில் மாற்றுச் சீட்டு பெற்றது – இருப்புக் கட்டும் தொகை)		(பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது) இருப்பு கீ/இ	30,000
	1,30,000		1,30,000

ப **மொத்தக் கடனாளிகள் கணக்கு** **வ**

விவரம்	₹	விவரம்	₹
இருப்பு கீ/கொ	1,50,000	ரொக்கக் க /கு	3,90,000
பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு க/கு (மறுக்கப்பட்டது)	10,000	விற்பனைத் திருப்பம் க /கு	40,000
விற்பனை க/கு (கடன்)	**4,90,000**	பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு க/கு*	90,000
(இருப்புக் கட்டும் தொகை)		(மாற்றுச்சீட்டு பெற்றது)	
		இருப்பு கீ/இ	1,30,000
	6,50,000		6,50,000

மொத்த விற்பனை = ரொக்க விற்பனை + கடன் விற்பனை = ₹ 2,00,000 + ₹ 4,90,000 = ₹ 6,90,000

12th-Accountancy-Unit-01.indd 18 12/9/2021 11:08:55 PM

(iii) மொத்தக் கடனீந்தோர் கணக்கின் படிவம்

ப **மொத்தக் கடனீந்தோர் கணக்கு** **வ**

விவரம்	₹	விவரம்	₹
ரொக்கக் க/கு (செலுத்தியது)	xxx	இருப்பு கீ/கொ	xxx
வங்கி க/கு (காசோலை செலுத்தியது)	xxx	(தொடக்க இருப்பு)	
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு க/கு	xxx	கொள்முதல் க/கு	xxx
(மாற்றுச்சீட்டு ஏற்கப்பட்டது)		(கடன் கொள்முதல்)	
பெற்ற தள்ளுபடி க/கு	xxx	வங்கி க/கு	xxx
கொள்முதல் திருப்பக் க/கு	xxx	(காசோலைகள் மறுக்கப்பட்டது)	
இருப்பு கீ/இ	xxx	செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு க/கு	xxx
(இறுதி இருப்பு)		(மறுக்கப்பட்டது)	
	xxx		xxx

எடுத்துக்காட்டு 14

பின்வரும் விவரங்களிலிருந்து கடன் கொள்முதலைக் கணக்கிடவும்:

விவரம்	₹
2018, ஏப்ரல் 1 அன்று கடனீந்தோர்	50,000
வெளித் திருப்பம்	6,000
கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம்	1,60,000
2019, மார்ச் 31 அன்று கடனீந்தோர்	70,000

தீர்வு

ப **மொத்தக் கடனீந்தோர் கணக்கு** **வ**

விவரம்	₹	விவரம்	₹
ரொக்கக் க/கு (அளித்தது)	1,60,000	இருப்பு கீ/கொ	50,000
வெளித்திருப்பம் க/கு	6,000	கொள்முதல் க/கு (கடன்)	**1,86,000**
இருப்பு கீ/இ	70,000	(இருப்புக் கட்டும் தொகை)	
	2,36,000		2,36,000

12th-Accountancy-Unit-01.indd 19 12/9/2021 11:08:55 PM

(iv) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கின் படிவம்

ப **செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கு** **வ**

விவரம்	₹	விவரம்	₹
ரொக்கம் / வங்கி க/கு	xxx	இருப்பு கீ/கொ	xxx
(செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு செலுத்தியது)		(தொடக்க இருப்பு)	
பற்பல கடனீந்தோர் க/கு	xxx	பற்பல கடனீந்தோர் க/கு	xxx
(செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது)		(மாற்றுச்சீட்டு ஏற்கப்பட்டது)	
இருப்பு கீ/இ	xxx		
(இறுதி இருப்பு)			
	xxx		xxx

எடுத்துக்காட்டு 15

பின்வரும் விவரங்களிலிருந்து மொத்தக் கொள்முதலைக் கணக்கிடவும்:

விவரம்	₹
2017, ஏப்ரல் 1 அன்று பற்பல கடனீந்தோர்	75,000
2017, ஏப்ரல் 1 அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	60,000
கடனீந்தோருக்குச் செலுத்திய ரொக்கம்	3,70,000
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக்கு செலுத்தியது	1,00,000
கொள்முதல் திருப்பம்	15,000
ரொக்கக் கொள்முதல்	3,20,000
2018, மார்ச் 31 அன்று கடனீந்தோர்	50,000
2018, மார்ச் 31 அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	80,000

தீர்வு

ப **செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கு** **வ**

விவரம்	₹	விவரம்	₹
ரொக்கக் க/கு (மாற்றுச்சீட்டுக்கு செலுத்தியது)	1,00,000	இருப்பு கீ/கொ	60,000
இருப்பு கீ/இ	80,000	பற்பல கடனீந்தோர் க/கு (மாற்றுச்சீட்டு ஏற்கப்பட்டது)	
		(இருப்புக் கட்டும் தொகை)	**1,20,000**
	1,80,000		1,80,000

12th-Accountancy-Unit-01.indd 20 12/9/2021 11:08:55 PM

ப **மொத்தக் கடனீந்தோர் கணக்கு** வ

விவரம்	₹	விவரம்	₹
ரொக்கக் க/கு (செலுத்தியது)	3,70,000	இருப்பு கீ/கொ	75,000
கொள்முதல் திருப்பம் க/கு	15,000	கொள்முதல் க/கு (கடன்)	**4,80,000**
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு க/கு (மாற்றுச்சீட்டு ஏற்கப்பட்டது)	1,20,000	(இருப்புக் கட்டும் தொகை)	
இருப்பு கீ/இ	50,000		
	5,55,000		5,55,000

மொத்தக் கொள்முதல் = ரொக்கக் கொள்முதல் + கடன் கொள்முதல்

= ₹ 3,20,000 + ₹ 4,80,000 = ₹ 8,00,000

எடுத்துக்காட்டு 16

பின்வரும் விவரங்களிலிருந்து மொத்தக் கடனாளிகள் கணக்கு, மொத்தக் கடனீந்தோர் கணக்கு, பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு மற்றம் செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு தயாரித்து கடன் விற்பனை மற்றும் கடன் கொள்முதல் கண்டறியவும்.

விவரம்	தொடக்க இருப்பு ₹	இறுதி இருப்பு ₹
கடனாளிகள்	60,000	55,000
பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	5,000	1,000
கடனீந்தோர்	25,000	28,000
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	2,000	3,000
பிற தகவல்கள்		₹
கடளாளிகளிடமிருந்து ரொக்கம் பெற்றது		1,30,000
வாடிக்கையாளருக்கு அளித்த தள்ளுபடி		5,500
கடனீந்தோருக்குச் செலுத்திய ரொக்கம்		70,000
சரக்களித்தோர் வழங்கிய தள்ளுபடி		3,500
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக்குரிய ரொக்கம் செலுத்தியது		7,000
பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக்கான ரொக்கம் பெற்றது		14,000
பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது		1,200
வாராக்கடன்		3,500

12th-Accountancy-Unit-01.indd 21 12/9/2021 11:08:56 PM

தீர்வு

ப **பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கு** **வ**

விவரம்	₹	விவரம்	₹
இருப்பு கீ/கொ	5,000	ரொக்கக் க/கு	14,000
கடனாளிகள் க/கு	**11,200**	கடனாளிகள் க/கு	1,200
(மாற்றுச்சீட்டு பெற்றது –		(பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது)	
இருப்புக் கட்டும் தொகை)		இருப்பு கீ/இ	1,000
	16,200		16,200

ப **மொத்தக் கடனாளிகள் க/கு** **வ**

விவரம்	₹	விவரம்	₹
இருப்பு கீ/கொ	60,000	ரொக்கக் க/கு (பெற்றது)	1,30,000
பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு க/கு (மறுக்கப்பட்டது)	1,200	அளித்த தள்ளுபடி க/கு	5,500
விற்பனை க/கு (கடன்)	**1,44,000**	வாராக்கடன் க/கு	3,500
(இருப்புக் கட்டும் தொகை)		பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு க/கு (மாற்றுச்சீட்டு பெற்றது)	11,200
		இருப்பு கீ/இ	55,000
	2,05,200		2,05,200

ப **செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கு** **வ**

விவரம்	₹	விவரம்	₹
ரொக்கக் க/கு (மாற்றுச்சீட்டுக்குச் செலுத்தியது)	7,000	இருப்பு கீ/கொ	2,000
இருப்பு கீ/இ	3,000	பற்பல கடனீந்தோர் க/கு (மாற்றுச்சீட்டு ஏற்கப்பட்டது)	
		(இருப்புக் கட்டும் தொகை)	**8,000**
	10,000		10,000

12th-Accountancy-Unit-01.indd 22 12/9/2021 11:08:56 PM

ப **மொத்தக் கடனீந்தோர் கணக்கு** வ

விவரம்	₹	விவரம்	₹
ரொக்கக் க/கு (செலுத்தியது)	70,000	இருப்பு கீ/கொ	25,000
பெற்ற தள்ளுபடி க/கு	3,500	கொள்முதல் க/கு (கடன்)	**84,500**
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு க/கு (மாற்றுச்சீட்டு ஏற்கப்பட்டது)	8,000	(இருப்புக் கட்டும் தொகை)	
இருப்பு கீ/இ	28,000		
	1,09,500		1,09,500

எடுத்துக்காட்டு 17

முழுமை பெறா பதிவேடுகளைப் பராமரித்துவரும் அப்துல் என்பவரின் பின்வரும் விவரங்களிலிருந்து 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயார் செய்யவும்.

விவரம்	1.4.2017 ₹	31.3.2018 ₹
சரக்கிருப்பு	1,00,000	50,000
பற்பல கடனாளிகள்	2,50,000	3,50,000
ரொக்கம்	25,000	40,000
அறைகலன்	10,000	10,000
பற்பல கடனீந்தோர்	1,50,000	1,75,000

பிற விவரங்கள்:

	₹		₹
எடுப்புகள்	40,000	கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம்	5,35,000
பெற்ற தள்ளுபடி	20,000	பல்வகைச் செலவுகள்	30,000
அளித்த தள்ளுபடி	25,000	1.4.2017 அன்று முதல்	2,35,000
கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம்	4,50,000		

தீர்வு

ப **மொத்தக் கடனாளிகள் கணக்கு** வ

விவரம்	₹	விவரம்	₹
இருப்பு கீ/கொ	2,50,000	ரொக்கக் க/கு (பெற்றது)	5,35,000
விற்பனை க/கு (கடன்) (இருப்புக் கட்டும் தொகை)	**6,60,000**	அளித்த தள்ளுபடி க/கு	25,000
		இருப்பு கீ/இ	3,50,000
	9,10,000		9,10,000

12th-Accountancy-Unit-01.indd 23 12/9/2021 11:08:56 PM

ப **மொத்தக் கடனீந்தோர் கணக்கு** வ

விவரம்	₹	விவரம்	₹
ரொக்கக் க/கு (செலுத்தியது)	4,50,000	இருப்பு கீ/கொ	1,50,000
பெற்ற தள்ளுபடி க/கு	20,000	கொள்முதல் க/கு (கடன்)	**4,95,000**
இருப்பு கீ/இ	1,75,000	(இருப்புக் கட்டும் தொகை)	
	6,45,000		6,45,000

அப்துல் என்பவரின் ஏடுகளில்

ப **2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார, இலாபநட்டக் கணக்கு** வ

விவரம்	₹	விவரம்	₹
தொடக்கச் சரக்கிருப்பு	1,00,000	விற்பனை	6,60,000
கொள்முதல்	4,95,000	இறுதிச் சரக்கிருப்பு	50,000
மொத்த இலாபம் கீ/இ	**1,15,000**		
	7,10,000		7,10,000
அளித்த தள்ளுபடி	25,000	மொத்த இலாபம் கீ/கொ	1,15,000
பல்வகைச் செலவுகள்	30,000	பெற்ற தள்ளுபடி	20,000
நிகர இலாபம் (முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது)	**80,000**		
	1,35,000		1,35,000

2018, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
பற்பல கடனீந்தோர்		1,75,000	ரொக்கம்	40,000
முதல்	2,35,000		அறைகலன்	10,000
கூட்டுக: நிகர இலாபம்	80,000		சரக்கிருப்பு	50,000
	3,15,000		கடனாளிகள்	3,50,000
கழிக்க: எடுப்புகள்	40,000	2,75,000		
		4,50,000		4,50,000

12th-Accountancy-Unit-01.indd 24 12/9/2021 11:08:56 PM

எடுத்துக்காட்டு 18

பாரதி தன்னுடைய கணக்கேடுகளை இரட்டைப்பதிவு முறையில் பராமரிக்கவில்லை. பின்வரும் விவரங்களிலிருந்து 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

ப **ரொக்க ஏடு** **வ**

பெறுதல்கள்	₹	செலுத்தல்கள்	₹
இருப்பு கீ/கொ	32,000	கொள்முதல் க/கு	56,000
விற்பனை க/கு	1,60,000	கடனீந்தோர் க/கு	80,000
கடனாளிகள் க/கு	1,20,000	பொதுச் செலவுகள் க/கு	24,000
		கூலி க/கு	10,000
		இருப்பு கீ/இ	1,42,000
	3,12,000		3,12,000

பிற தகவல்கள்:

விவரம்	1.4.2018 ₹	31.3.2019 ₹
சரக்கிருப்பு	40,000	60,000
கடனாளிகள்	38,000	?
கடனீந்தோர்	58,000	52,000
இயந்திரம்	1,70,000	1,70,000

கூடுதல் தகவல்கள்: ₹

(i) கடன் கொள்முதல் 74,000

(ii) கடன் விற்பனை 1,40,000

(iii) தொடக்க முதல் 2,22,000

(iv) இயந்திரம் மீது ஆண்டுக்கு 10% தேய்மானம் நீக்கவும்.

தீர்வு

பாரதி என்பவரின் ஏடுகளில்

ப **மொத்தக் கடனாளிகள் கணக்கு** **வ**

விவரம்	₹	விவரம்	₹
இருப்பு கீ/கொ	38,000	ரொக்கக் க/கு (பெற்றது)	1,20,000
விற்பனை க/கு (கடன்)	1,40,000	இருப்பு கீ/இ (இருப்புக் கட்டும் தொகை)	**58,000**
	1,78,000		1,78,000
இருப்பு கீ/கொ	58,000		

12th-Accountancy-Unit-01.indd 25 12/9/2021 11:08:56 PM

ப 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார இலாபநட்டக் கணக்கு வ

விவரம்	₹	₹	விவரம்	₹	₹
தொடக்கச் சரக்கிருப்பு		40,000	விற்பனை		
கொள்முதல்			ரொக்கம்	1,60,000	
ரொக்கம்	56,000		கடன்	1,40,000	3,00,000
கடன்	74,000	1,30,000	இறுதிச் சரக்கிருப்பு		60,000
கூலி		10,000			
மொத்த இலாபம் கீ/இ		**1,80,000**			
		3,60,000			3,60,000
பொதுச் செலவுகள்		24,000	மொத்தஇலாபம்கீ/கொ		1,80,000
இயந்திரம் மீதான தேய்மானம்		17,000			
நிகர இலாபம் (முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது)		**1,39,000**			
		1,80,000			1,80,000

2019, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹	₹
முதல்	2,22,000		ரொக்கம்		1,42,000
கூட்டுக: நிகர இலாபம்	1,39,000	3,61,000	சரக்கிருப்பு		60,000
கடனீந்தோர்		52,000	கடனாளிகள்		58,000
			இயந்திரம்	1,70,000	
			கழிக்க: தேய்மானம்	17,000	1,53,000
		4,13,000			4,13,000

எடுத்துக்காட்டு 19

மளிகை வியாபாரம் நடத்திவரும் அர்ஜுன் தன்னுடைய கணக்கேடுகளை இரட்டைப்பதிவு முறையில் பராமரிப்பதில்லை. அவருடைய ஏடுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் பின்வருமாறு:

விவரம்	1–4–2018 ₹	31–3–2019 ₹
பொறி மற்றும் இயந்திரம்	20,000	20,000
சரக்கிருப்பு	9,000	16,000
பற்பல கடனாளிகள்	2,000	5,300
பற்பல கடனீந்தோர்	5,000	4,000
வங்கி ரொக்கம்	4,000	6,000

31.3.2019 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் பிற தகவல்கள் பின்வருமாறு:

	₹
விளம்பரம்	4,700
உள்தூக்குக் கூலி	8,000
கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம்	64,000
எடுப்புகள்	2,000

12th-Accountancy-Unit-01.indd 26 12/9/2021 11:08:56 PM

அவ்வாண்டின் மொத்த விற்பனை ₹ 85,000. கொள்முதல் திருப்பம் ₹ 2,000 மற்றும் விற்பனைத் திருப்பம் ₹ 1,000. பொறி மற்றும் இயந்திரம் மீது 5% தேய்மானம் நீக்கவும். ₹ 300 ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்க வேண்டும். 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

தீர்வு

அர்ஜுன் என்பவரின் ஏடுகளில்
2018, ஏப்ரல் 1 ஆம் நாளைய நிலை அறிக்கை

பொறுப்புகள்	₹	சொத்துகள்	₹
கடனீந்தோர்	5,000	வங்கி ரொக்கம்	4,000
தொடக்க முதல்	**30,000**	சரக்கிருப்பு	9,000
(இருப்புக் கட்டும் தொகை)		பற்பல கடனாளிகள்	2,000
		பொறி மற்றும் இயந்திரம்	20,000
	35,000		35,000

ப **மொத்தக் கடனீந்தோர் கணக்கு** **வ**

விவரம்	₹	விவரம்	₹
ரொக்கக் க/கு (செலுத்தியது)	64,000	இருப்பு கீ/கொ	5,000
கொள்முதல் திருப்பம் க/கு	2,000	கொள்முதல் க/கு (கடன்)	**65,000**
இருப்பு கீ/இ	4,000	(இருப்புக் கட்டும் தொகை)	
	70,000		70,000

ப **2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார இலாபநட்டக் கணக்கு** **வ**

விவரம்	₹	₹	விவரம்	₹	₹
தொடக்கச் சரக்கிருப்பு		9,000	விற்பனை	85,000	
கொள்முதல்			கழிக்க: திருப்பம்	1,000	84,000
கடன்	65,000		இறுதிச் சரக்கிருப்பு		16,000
கழிக்க: திருப்பம்	2,000	63,000			
உள் தூக்குக்கூலி		8,000			
மொத்த இலாபம் கீ/இ		**20,000**			
		1,00,000			1,00,000
விளம்பரம்		4,700	மொத்த இலாபம் கீ/கொ		20,000
இயந்திரம் மீதான தேய்மானம்		1,000			
ஐயக்கடன் ஒதுக்கு		300			
நிகர இலாபம் (முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது)		**14,000**			
		20,000			20,000

12th-Accountancy-Unit-01.indd 27 12/9/2021 11:08:57 PM

2019, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹	₹
முதல்	30,000		வங்கி ரொக்கம்		6,000
கூட்டு: நிகர இலாபம்	14,000		சரக்கிருப்பு		16,000
	44,000		பற்பல கடனாளிகள்	5,300	
கழிக்க: எடுப்புகள்	2,000	42,000	கழிக்க: ஒதுக்கு	300	5,000
பற்பல கடனீந்தோர்		4,000	பொறி மற்றும் இயந்திரம்	20,000	
			கழிக்க: தேய்மானம்	1,000	19,000
		46,000			46,000

எடுத்துக்காட்டு 20

பாண்டியன் தன்னுடைய கணக்கேடுகளை இரட்டைப்பதிவு முறையில் பராமரிப்பதில்லை. பின்வரும் விவரங்களிலிருந்து 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

விவரம்	1–1–2018 ₹	31–12–2018 ₹
அறைகலன்	30,000	30,000
கைரொக்கம்	10,000	17,000
கடனாளிகள்	40,000	60,000
சரக்கிருப்பு	28,000	11,000
பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	12,000	35,100
வங்கிக் கடன்	25,000	25,000
கடனீந்தோர்	15,000	16,000

கூடுதல் தகவல்கள்:

	₹		₹
ரொக்க விற்பனை	11,200	கடன் விற்பனை	88,800
ரொக்கக் கொள்முதல்	4,250	கடன் கொள்முதல்	35,750
கொள்முதல் மீதான தூக்குக்கூலி	3,000	விற்பனை மீதான தூக்குக்கூலி	700
கழிவு பெற்றது	600	வங்கிக் கடன் மீது வட்டி	2,500
எடுப்புகள்	8,000	கூடுதல் முதல்	14,000
சம்பளம்	8,900	அலுவலக வாடகை	2,400

சரிக்கட்டுதல்கள்:

அறைகலன் மீது 5% தேய்மானம் போக்கெழுதவும். கடனாளிகள் மீது 1% ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கவும்.

12th-Accountancy-Unit-01.indd 28 12/9/2021 11:08:57 PM

தீர்வு

பாண்டியன் என்பவரின் ஏடுகளில்
2018, ஜனவரி 1 ஆம் நாளைய நிலை அறிக்கை

பொறுப்புகள்	₹	சொத்துகள்	₹
கடனீந்தோர்	15,000	கைரொக்கம்	10,000
வங்கிக்கடன்	25,000	சரக்கிருப்பு	28,000
தொடக்கமுதல்	**80,000**	கடனாளிகள்	40,000
(இருப்புக் கட்டும் தொகை)		பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	12,000
		அறைகலன்	30,000
	1,20,000		1,20,000

ப 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார இலாபநட்டக் கணக்கு வ

விவரம்	₹	₹	விவரம்	₹	₹
தொடக்கச் சரக்கிருப்பு		28,000	விற்பனை		
கொள்முதல்			ரொக்கம்	11,200	
ரொக்கம்	4,250		கடன்	88,800	1,00,000
கடன்	35,750	40,000	இறுதிச் சரக்கிருப்பு		11,000
கொள்முதல் மீதான தூக்குக்கூலி		3,000			
மொத்த இலாபம் கீ/இ		**40,000**			
		1,11,000			1,11,000
சம்பளம்		8,900	மொத்த இலாபம் கீ/கொ		40,000
விற்பனை மீதான தூக்குக்கூலி		700	கழிவு பெற்றது		600
அலுவலக வாடகை		2,400			
வங்கிக்கடன் மீது வட்டி		2,500			
அறைகலன் மீதான தேய்மானம்		1,500			
ஐயக்கடன் ஒதுக்கு		600			
நிகர இலாபம் (முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது)		**24,000**			
		40,600			40,600

2018, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹	₹
முதல்	80,000		கைரொக்கம்		17,000
கூட்டுக: நிகர இலாபம்	24,000		சரக்கிருப்பு		11,000
	1,04,000		கடனாளிகள்	60,000	
கூட்டுக: கூடுதல் முதல்	14,000		கழிக்க: ஐயக்கடன் ஒதுக்கு	600	59,400
	1,18,000		பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு		35,100
கழிக்க: எடுப்புகள்	8,000	1,10,000	அறைகலன்	30,000	
வங்கிக்கடன்		25,000	கழிக்க: தேய்மானம்	1,500	28,500
கடனீந்தோர்		16,000			
		1,51,000			1,51,000

12th-Accountancy-Unit-01.indd 29 12/9/2021 11:08:57 PM

நினைவில் கொள்ள வேண்டியவை

- கணக்கேடுகள் இரட்டைப் பதிவு முறையில் பராமரிக்காத போது அவை முழுமை பெறா கணக்கியல் பதிவேடுகள் என்று அழைக்கப்படுகின்றன.
- பொதுவாக, ரொக்கம் மற்றும் ஆள்சார் கணக்குகள் மட்டும் முழுமையாகப் பராமரிக்கப் படுகின்றன.
- முதல் அதிகரிக்கும் போது இலாபம் என்றும், முதல் குறையும்போது நட்டம் என்றும் எடுத்துக்கொள்ளப்படுகிறது.
- இறுதி முதல் + எடுப்புகள் – கூடுதல் முதல் – தொடக்க முதல் = இலாபம் / நட்டம்.
- சொத்துகளின் இருப்புகள் வலதுபக்கம் மற்றும் பொறுப்புகளின் இருப்புகள் இடது பக்கத்திலும் காட்டப்பட்டு, ஒரு குறிப்பிட்ட நாளன்றைய முதல் கண்டறிய நிலை அறிக்கை தயாரிக்கப்படுகிறது.
- முழுமைப் பெறா பதிவேடுகளிலிருந்து பெறப்படும் தகவல்களிலிருந்தும் மற்றும் பிற ஆவணங்களிலிருந்தும், விடுபட்ட தகவல்கள் கண்டறியப்பட்டு, அதன் பிறகு இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படுகின்றன.

சுய ஆய்வு வினாக்கள்

I சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. முழுமைபெறா பதிவேடுகளை பொதுவாக பராமரித்து வருவது
   (அ) நிறுமம் (ஆ) அரசு (இ) சிறிய அளவிலான தனிஆள் வணிகம் (ஈ) பன்னாட்டு நிறுவனங்கள்
2. நிலை அறிக்கை ஒரு
   (அ) வருமானம் மற்றும் செலவுகள் அறிக்கை (ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை
   (இ) ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு (ஈ) கடன் நடவடிக்கைகளின் தொகுப்பு
3. தொடக்க நிலை அறிக்கை வழக்கமாக தயாரிக்கப்படுவது
   (அ) தொடக்க முதல் கண்டறிய (ஆ) இறுதி முதல் கண்டறிய
   (இ) அவ்வாண்டின் இலாபம் கண்டறிய (ஈ) அவ்வாண்டின் நட்டம் கண்டறிய
4. பொறுப்புகளைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துகள்
   (அ) நட்டம் (ஆ) ரொக்கம் (இ) முதல் (ஈ) இலாபம்
5. கீழ்க்கண்ட செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு தொடர்பான எந்த விவரம் மொத்தக் கடனீந்தோர் கணக்கிற்கு மாற்றப்படுகிறது?
   (அ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டின் தொடக்க இருப்பு
   (ஆ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டின் இறுதி இருப்பு
   (இ) அவ்வாண்டில் ஏற்கப்பட்ட செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு
   (ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக்கு ரொக்கம் செலுத்தியது

   RJQXS
6. கடன் விற்பனைத் தொகை கணக்கிட தயாரிக்கப்படுவது
   (அ) மொத்தக் கடனாளிகள் கணக்கு (ஆ) மொத்தக் கடனீந்தோர் கணக்கு
   (இ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு (ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கு
7. முழுமை பெறா பதிவேடுகள் தொடர்பான கீழ்க்கண்ட எந்த வாக்கியம் சரியானது அல்ல?
   (அ) இது நடவடிக்கைகளை பதிவு செய்யும் அறிவியல் தன்மையற்ற முறை
   (ஆ) ரொக்கம் மற்றும் ஆள்சார் கணக்குகளுக்கு மட்டும் ஏடுகள் பராமரிக்கப்படுகிறது.
   (இ) இது அனைத்து வகையான அமைப்புகளுக்கும் பொருந்தும்
   (ஈ) வரி அதிகாரிகள் ஏற்றுக் கொள்வதில்லை.
8. உரிமையாளரின் சொத்துகள் ₹ 85,000 மற்றும் பொறுப்புகள் ₹ 21,000 எனில் அவருடைய முதல்தொகை
   (அ) ₹ 85,000 (ஆ) ₹ 1,06,000 (இ) ₹ 21,000 (ஈ) ₹ 64,000
9. தொடக்க முதல் ₹ 10,000, அவ்வாண்டின் எடுப்புகள் ₹ 6,000, அவ்வாண்டின் இலாபம் ₹ 2,000 மற்றும் கொண்டுவந்த கூடுதல் முதல் ₹ 3,000 எனில் இறுதி முதல் காணவும்.
   (அ) ₹ 9,000 (ஆ) ₹ 11,000 (இ) ₹ 21,000 (ஈ) ₹ 3,000

12th-Accountancy-Unit-01.indd 30 12/9/2021 11:08:57 PM

10. கடனாளிகள் தொடக்க இருப்பு: ₹ 30,000, பெற்ற ரொக்கம்: ₹ 1,00,000, கடன் விற்பனை: ₹ 90,000; கடனாளிகள் இறுதி இருப்பு: ?

(அ) ₹ 30,000 (ஆ) ₹ 1,30,000 (இ) ₹ 40,000 (ஈ) ₹ 20,000

விடைகள்

1. (இ)	2. (ஆ)	3. (அ)	4. (இ)	5. (இ)	6. (அ)	7.(இ)	8. (ஈ)	9. (அ)	10.(ஈ)

II மிகக் குறுகிய வினாக்கள்

1. முழுமை பெறா பதிவேடுகள் என்றால் என்ன?
2. இரட்டைப்பதிவு முறை பின்பற்றாத போது சிறிய அளவிலான தனிவணிகர் பொதுவாக பராமரித்து வரும் கணக்குகளைத் தருக.
3. நிலை அறிக்கை என்றால் என்ன?

III குறுகிய வினாக்கள்

1. முழுமை பெறா பதிவேடுகளின் இயல்புகள் யாவை?
2. முழுமை பெறா பதிவேடுகளின் குறைபாடுகள் யாவை?
3. இரட்டைப்பதிவு முறை மற்றும் முழுமை பெறா பதிவேடுகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?
4. நிலை அறிக்கை வாயிலாக இலாபம் அல்லது நட்டம் கண்டறியும் படிநிலைகளைத் தரவும்.
5. நிலை அறிக்கை மற்றும் இருப்புநிலைக் குறிப்புக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைத் தரவும்.
6. முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து கடன் விற்பனைத் தொகை எவ்வாறு கண்டறியப்படுகிறது?

IV பயிற்சி வினாக்கள்

1. கீழ்க்காணும் விவரங்களிலிருந்து இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

விவரம்	₹
ஆண்டின் தொடக்க முதல் (ஏப்ரல் 1, 2018)	5,00,000
ஆண்டின் இறுதி முதல் (மார்ச் 31, 2019)	8,50,000
அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல்	1,20,000
அவ்வாண்டில் எடுப்புகள்	70,000

(விடை: இலாபம் ₹ 3,00,000)

2. பின்வரும் தகவல்களிலிருந்து இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

விவரம்	₹
2018, ஜனவரி 1 அன்று முதல்	2,20,000
2018, டிசம்பர் 31 அன்று முதல்	1,80,000
அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல்	40,000
அவ்வாண்டில் எடுப்புகள்	50,000

(விடை: நட்டம் ₹ 30,000)

3. பின்வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவலைக் காணவும்.

விவரம்	₹
31.3.2018 அன்று இறுதி முதல்	80,000
அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல்	30,000
அவ்வாண்டில் எடுப்புகள்	15,000
01.4.2017 அன்று தொடக்க முதல்	?
31.3.2018 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டில் நட்டம்	25,000

(விடை: தொடக்க முதல் ₹ 90,000)

12th-Accountancy-Unit-01.indd 31 12/9/2021 11:08:57 PM

4. பின்வரும் தகவல்களிலிருந்து, 2018, டிசம்பர் 31 ஆம் நாளைய முதல் கண்டறியவும்.

விவரம்	₹
2018, ஜனவரி 1 அன்று முதல்	1,00,000
உரிமையாளர் தனது சொந்த பயனுக்காக சரக்கு எடுத்தது	30,000
அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல்	15,000
அவ்வாண்டின் இலாபம்	60,000

(விடை: இறுதி முதல் ₹ 1,45,000)

5. பின்வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவலைக் காணவும்:

விவரம்	₹
2018, ஏப்ரல் 1 அன்று முதல்	40,000
2019, மார்ச் 31 அன்று முதல்	50,000
அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல்	7,000
அவ்வாண்டில் இலாபம்	8,000
அவ்வாண்டில் எடுப்புகள்	?

(விடை: எடுப்புகள் ₹ 5,000)

6. 2019, மார்ச் 31 அன்று தாமஸ் என்பவரின் ஏடுகளிலிருந்து பெறப்பட்ட இருப்புகள் பின்வருமாறு:

விவரம்	₹	விவரம்	₹
பற்பல கடனீந்தோர்	6,00,000	செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	1,20,000
அறைகலன்	80,000	கைரொக்கம்	20,000
நிலம் மற்றும் கட்டடம்	3,00,000	பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	60,000
பற்பல கடனாளிகள்	3,20,000	சரக்கிருப்பு	2,20,000

2019, மார்ச் 31 ஆம் நாளைய நிலை அறிக்கை தயாரிக்கவும் மற்றும் அந்நாளைய முதல் கண்டறியவும்.

(விடை: முதல் ₹ 2,80,000)

7. 2018, ஏப்ரல் 1 அன்று சுபா தன்னுடைய தொழிலை ₹ 1,20,000 முதலுடன் தொடங்கினார். அவர் முறையான கணக்கேடுகளைப் பராமரிக்கவில்லை. 2019, மார்ச் 31 அன்று அவருடைய ஏடுகளிலிருந்து பெறப்பட்ட விவரங்கள் பின்வருமாறு:

விவரம்	₹	விவரம்	₹
வங்கி மேல்வரைப்பற்று	50,000	சரக்கிருப்பு	1,60,000
கடனாளிகள்	1,80,000	கடனீந்தோர்	90,000
பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	70,000	செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	2,40,000
கணினி	30,000	கைரொக்கம்	60,000
இயந்திரம்	3,00,000		

அவ்வாண்டில் அவர் தன்னுடைய சொந்த பயனுக்காக ₹ 30,000 எடுத்துக் கொண்டார். அவ்வாண்டில் அவர் கொண்டுவந்த கூடுதல் முதல் ₹ 40,000. அவருடைய இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

(விடை: இறுதி முதல் ₹ 4,20,000; இலாபம் ₹ 2,90,000)

12th-Accountancy-Unit-01.indd 32 12/9/2021 11:08:58 PM

8. ராஜு முறையான கணக்கேடுகளைப் பின்பற்றுவதில்லை. அவருடைய பதிவேடுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் பின்வருமாறு:

விவரம்	1.1.2018 ₹	31.12.2018 ₹
கைரொக்கம்	80,000	90,000
சரக்கிருப்பு	1,80,000	1,40,000
கடனாளிகள்	90,000	2,00,000
பற்பல கடனீந்தோர்	1,30,000	1,95,000
வங்கிக் கடன்	60,000	60,000
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	80,000	45,000
பொறி மற்றும் இயந்திரம்	1,70,000	1,70,000

அவ்வாண்டில் அவர் கொண்டுவந்த கூடுதல் முதல் ₹ 50,000 மற்றும் அவர் வியாபாரத்திலிருந்து தன்னுடைய சொந்த பயனுக்காக மாதந்தோறும் ₹ 2,500 எடுத்துக்கொண்டார். மேற்கண்ட தகவல்களிலிருந்து இலாப நட்ட அறிக்கை தயாரிக்கவும்.

(விடை: தொடக்க முதல் ₹ 2,50,000; இறுதி முதல் ₹ 3,00,000; இலாபம் ₹ 30,000)

9. ஆனந்த் தன் கணக்கேடுகளை இரட்டைப்பதிவு முறையில் பராமரித்து வருவதில்லை. 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

விவரம்	31.3.2018 ₹	31.3.2019 ₹
வங்கி ரொக்கம்	5,000 (ப.)	60,000 (வ.)
கைரொக்கம்	3,000	4,500
சரக்கிருப்பு	35,000	45,000
பற்பல கடனாளிகள்	1,00,000	90,000
பொறி மற்றும் இயந்திரம்	80,000	80,000
நிலம் மற்றும் கட்டடங்கள்	1,40,000	1,40,000
பற்பல கடனீந்தோர்	1,70,000	1,30,000

ஆனந்த் தனது சொந்த பயனுக்காக ₹ 60,000 எடுத்துக் கொண்டார். அவர் தன்னுடைய வியாபாரத்தை விரிவுபடுத்துவதற்காக ₹ 17,000 கூடுதல் முதல் கொண்டு வந்தார். கடனாளிகள் மீது 5% ஒதுக்கு உருவாக்கவும். பொறி மற்றும் இயந்திரம் மீது 10% தேய்மானம் நீக்கவும்.

(விடை: தொடக்க முதல் ₹ 1,93,000; இறுதி முதல் ₹ 1,57,000; இலாபம் ₹ 7,000)

10. பின்வரும் தகவல்களிலிருந்து கடன் விற்பனையை காணவும்:

விவரம்	₹
2018, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள்	1,00,000
கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம்	2,30,000
அளித்த தள்ளுபடி	5,000
உள் திருப்பம்	25,000
2019, மார்ச் 31 அன்று கடனாளிகள்	1,20,000

(விடை: கடன் விற்பனை ₹ 2,80,000)

12th-Accountancy-Unit-01.indd 33 12/9/2021 11:08:58 PM

11. பின்வரும் விவரங்களிலிருந்து அவ்வாண்டில் மேற்கொண்ட மொத்த விற்பனையை கண்டறியவும்.

விவரம்	₹
2018, ஜனவரி 1 அன்று கடனாளிகள்	1,30,000
அவ்வாண்டில் கடனாளிகளிடமிருந்து ரொக்கம் பெற்றது	4,20,000
விற்பனைத் திருப்பம்	35,000
வாராக்கடன்	15,000
2018, டிசம்பர் 31 அன்று கடனாளிகள்	2,00,000
ரொக்க விற்பனை	4,60,000

(விடை: கடன் விற்பனை ₹ 5,40,000; மொத்த விற்பனை ₹ 10,00,000)

12. பின்வரும் விவரங்களிலிருந்து பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு தயாரிக்கவும் மற்றும் கடனாளிகளிடமிருந்து பெற்ற மாற்றுச்சீட்டுத் தொகையினைக் கணக்கிடவும்.

விவரம்	₹
ஆண்டு தொடக்கத்தில் பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	1,40,000
ஆண்டு முடிவில் பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	2,00,000
பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக்காக ரொக்கம் பெற்றது	3,90,000
பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது	30,000

(விடை: பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு பெற்றது ₹ 4,80,000)

13. பின்வரும் விவரங்களிலிருந்து மொத்த விற்பனையைக் கணக்கிடவும்.

விவரம்	₹	விவரம்	₹
2018, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள்	2,50,000	பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது	15,000
2018, ஏப்ரல் 1 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	60,000	உள் திருப்பம்	50,000
கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம்	7,25,000	2019, மார்ச் 31 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	90,000
பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக்காக ரொக்கம் பெற்றது	1,60,000	2019, மார்ச் 31 அன்று பற்பல கடனாளிகள்	2,40,000
வாராக்கடன்	30,000	ரொக்க விற்பனை	3,15,000

(விடை: பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு பெற்றது ₹ 2,05,000; கடன் விற்பனை ₹ 9,85,000; மொத்த விற்பனை ₹ 13,00,000)

14. பின்வரும் விவரங்களிலிருந்து கடன் கொள்முதலை கணக்கிடவும்.

விவரம்	₹
தொடக்க கடனீந்தோர்	1,70,000
கொள்முதல் திருப்பம்	20,000
கடனீந்தோருக்குச் செலுத்தியது	4,50,000
இறுதிக் கடனீந்தோர்	1,90,000

(விடை: கடன் கொள்முதல் ₹ 4,90,000)

12th-Accountancy-Unit-01.indd 34 12/9/2021 11:08:58 PM

15. பின்வரும் விவரங்களிலிருந்து மொத்தக் கொள்முதலைக் கணக்கிடவும்.

விவரம்	₹	விவரம்	₹
2018, ஜனவரி 1 அன்று பற்பல கடனீந்தோர்	30,000	கொள்முதல் திருப்பம்	15,000
2018, ஜனவரி 1 அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	25,000	ரொக்கக் கொள்முதல்	2,25,000
கடனீந்தோருக்கு ரொக்கம் செலுத்தியது	1,20,000	31.12.2018 அன்று கடனீந்தோர்	25,000
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக்குச் செலுத்தியது	30,000	31.12.2018 அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	20,000

(விடை: செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு ஏற்கப்பட்டது ₹ 25,000; கடன் கொள்முதல் ₹ 1,55,000; மொத்தக் கொள்முதல் ₹ 3,80,000)

16. பின்வரும் விவரங்களிலிருந்து மொத்தக் கடனாளிகள் கணக்கு, மொத்தக் கடனீந்தோர் கணக்கு, பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு மற்றும் செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு தயாரித்து கடன் விற்பனை மற்றும் கடன் கொள்முதல் கணக்கிடவும்.

விவரம்	₹	விவரம்	₹
2018, ஏப்ரல் 1 அன்று இருப்புகள்		**2019, மார்ச் 31 அன்று இருப்புகள்**	
பற்பல கடனாளிகள்	2,40,000	பற்பல கடனாளிகள்	2,20,000
பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	30,000	பற்பல கடனீந்தோர்	1,50,000
பற்பல கடனீந்தோர்	1,20,000	பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	8,000
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	10,000	செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	20,000
பிற தகவல்கள்:	₹		₹
கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம்	6,00,000	செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக்குச் செலுத்தியது	30,000
வாடிக்கையாளருக்கு அளித்த தள்ளுபடி	25,000	பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக்காக ரொக்கம் பெற்றது	60,000
கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம்	3,20,000	பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது	4,000
சரக்களித்தோரால் அளிக்கப்பட்ட தள்ளுபடி	10,000	வாராக்கடன்	16,000

(விடை: பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு பெற்றது ₹ 42,000; கடன் விற்பனை ₹ 6,59,000; செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு ஏற்கப்பட்டது ₹ 40,000; கடன் கொள்முதல் ₹ 4,00,000)

17. இராகேஷ் என்பவரின் பின்வரும் விவரங்களிலிருந்து 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

விவரம்	31.3.2018 ₹	31.3.2019 ₹
சரக்கிருப்பு	2,20,000	1,60,000
கடனாளிகள்	5,30,000	6,40,000
வங்கி ரொக்கம்	60,000	10,000
இயந்திரம்	80,000	80,000
பற்பல கடனீந்தோர்	3,70,000	4,20,000

12th-Accountancy-Unit-01.indd 35 12/9/2021 11:08:58 PM

பிற தகவல்கள்:

விவரம்	₹	விவரம்	₹
வாடகை செலுத்தியது	1,20,000	கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம்	12,50,000
பெற்ற தள்ளபடி	35,000	எடுப்புகள்	1,00,000
அளித்த தள்ளுபடி	25,000	ரொக்க விற்பனை	20,000
கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம்	11,00,000	1.4.2018 அன்று முதல்	5,20,000

(விடை: கடன் விற்பனை: ₹ 13,85,000; கடன் கொள்முதல்: ₹ 11,85,000; மொத்த இலாபம் ₹ 1,60,000; நிகர இலாபம் ₹ 50,000; இருப்புநிலைக் குறிப்பு மொத்தம் ₹ 8,90,000)

18. மேரி தன்னுடைய ஏடுகளை இரட்டைப்பதிவு முறையில் பராமரிப்பதில்லை. பின்வரும் விவரங்களிலிருந்து 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

ரொக்க ஏடு

விவரம்	₹	விவரம்	₹
இருப்பு கீ/கொ	1,20,000	கொள்முதல்	1,50,000
விற்பனை	3,60,000	கடனீந்தோர்	2,50,000
கடனாளிகள்	3,40,000	கூலி	70,000
		பற்பலச் செலவுகள்	1,27,000
		இருப்பு கீ/இ	2,23,000
	8,20,000		8,20,000

பிற தகவல்கள்:

விவரம்	1.4.2018	31.3.2019
சரக்கிருப்பு	1,10,000	1,80,000
பற்பல கடனாளிகள்	1,30,000	?
பற்பல கடனீந்தோர்	1,60,000	90,000
அறைகலனும் பொருத்துகைகளும்	80,000	80,000

கூடுதல் தகவல்கள்:

	₹
கடன் கொள்முதல்	1,80,000
கடன் விற்பனை	2,90,000
தொடக்க முதல்	2,80,000

அறைகலன் மற்றும் பொருத்துகைகள் மீது ஆண்டுக்கு 10% தேய்மானம் நீக்கவும்.

(விடை: இறுதி கடனாளிகள் ₹ 80,000; மொத்த இலாபம் ₹ 3,20,000; நிகர இலாபம் ₹ 1,85,000; இருப்புநிலைக் குறிப்பு மொத்தம் ₹ 5,55,000)

19. வன்பொருள் வியாபாரம் செய்துவரும் அருண் என்பவர் தன்னுடைய ஏடுகளை இரட்டைப்பதிவு முறையில் பராமரிப்பதில்லை. அவருடைய ஏடுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் பின்வருமாறு:

12th-Accountancy-Unit-01.indd 36 12/9/2021 11:08:59 PM

விவரம்	31.12.2017 ₹	31.12.2018 ₹
நிலம் மற்றும் கட்டடம்	2,40,000	2,40,000
சரக்கிருப்பு	1,20,000	1,70,000
கடனாளிகள்	40,000	51,500
கடனீந்தோர்	50,000	45,000
வங்கி ரொக்கம்	30,000	53,000

31.12.2018 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் பிற தகவல்கள் பின்வருமாறு:

கூலி	65,000
வெளித் தூக்குக்கூலி	7,500
பற்பல செலவுகள்	28,000
கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம்	6,00,000
எடுப்புகள்	10,000

அவ்வாண்டுக்குரிய மொத்த விற்பனை ₹ 7,70,000. அவ்வாண்டின் கொள்முதல் திருப்பம் ₹ 30,000 மற்றும் விற்பனைத் திருப்பம் ₹ 25,000. நிலம் மற்றும் கட்டடங்கள் மீது 5% தேய்மானம் நீக்கவும். ₹ 1,500 –க்கு ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கவும். 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

(விடை: தொடக்க முதல் ₹ 3,80,000; கடன் கொள்முதல் 6,25,000; மொத்த இலாபம் ₹ 1,35,000; நிகர இலாபம் ₹ 86,000; இருப்புநிலைக் குறிப்பு மொத்தம் ₹ 5,01,000)

20. செல்வம் என்பவர் தன்னுடைய ஏடுகளை இரட்டைப்பதிவு முறையில் பராமரிப்பதில்லை. 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

விவரம்	1–1–2018 ₹	31–12–2018 ₹
இயந்திரம்	60,000	60,000
வங்கி ரொக்கம்	25,000	33,000
பற்பல கடனாளிகள்	70,000	1,00,000
சரக்கிருப்பு	45,000	22,000
பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	20,000	38,000
வங்கிக் கடன்	45,000	45,000
பற்பல கடனீந்தோர்	25,000	21,000

கூடுதல் தகவல்கள்:

	₹		₹
ரொக்க விற்பனை	20,000	கடன் விற்பனை	1,80,000
ரொக்கக் கொள்முதல்	8,000	கடன் கொள்முதல்	52,000
கூலி	6,000	சம்பளம்	23,500
விளம்பரம்	7,000	வங்கிக் கடன்மீது வட்டி	4,500
எடுப்புகள்	60,000	கூடுதல் முதல்	21,000

சரிக்கட்டுதல்கள்:

இயந்திரம் மீது 10% தேய்மானம் நீக்கவும். கடனாளிகள் மீது 1% ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கவும்.

(விடை: தொடக்க முதல் ₹ 1,50,000; மொத்த இலாபம் ₹ 1,11,000; நிகர இலாபம் ₹ 69,000; இருப்புநிலைக் குறிப்பு மொத்தம் ₹ 2,46,000)

12th-Accountancy-Unit-01.indd 37 12/9/2021 11:08:59 PM

மாணவர் செயல்பாடு 1.3

விடுபட்ட தகவல்களைக் காணவும்.

இறுதி முதல் ₹	எடுப்புகள் ₹	கூடுதல் முதல் ₹	தொடக்க முதல் ₹	இலாபம் / நட்டம் ₹
1,00,000	40,000	20,000	90,000	?
?	30,000	40,000	80,000	20,000
70,000	?	30,000	40,000	10,000
60,000	20,000	?	50,000	– 10,000
2,00,000	30,000	10,000	?	1,20,000

நிகழ்வாய்வு

தீபா ஒரு தனிஆள் வணிகர். அவர் முழுமையான கணக்கேடுகளைப் பராமரிப்பதில்லை. அவர் ரொக்க ஏடு மற்றும் ஆள்சார் கணக்குகளைப் பராமரித்து வருகிறார். அவருடைய உதவியாளர் கணக்கேடுகளைப் பராமரித்து வருகிறார். கணக்காண்டின் இறுதி நாளன்று அவருடைய உதவியாளர் வேலையை விட்டுச் சென்று விட்டார். தீபா கையிலுள்ள ரொக்க இருப்பை ரொக்க ஏட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது சிறிது ரொக்கம் விடுபட்டதை உணர்கிறார். அவர் பின்வரும் தகவல்களை உங்களுக்குத் தருகிறார். விடுபட்ட ரொக்கத்தைக் கணக்கிடவும்.

1) அனைத்து விற்பனையும் ரொக்க அடிப்படையில் நடைபெற்றது. விற்பனையைத் தவிர பிற வருமானம் எதுவும் பெறப்படவில்லை.
2) ஆண்டு தொடக்கத்தில் அவருடைய கைரொக்கம் ₹ 25,000; ஆண்டு இறுதியில் கைரொக்கம் ₹ 12,000.
3) அவ்வாண்டில் மேற்கொண்ட விற்பனை ₹ 80,000.
4) அவர் தன்னுடைய சொந்த பயனுக்காக சிறிது பணம் எடுத்துள்ளார். ஆனால் அது குறித்து எந்த பதிவும் செய்யப்படவில்லை.
5) அவ்வாண்டின் தொடக்கத்தில் முதல் ₹ 25,000 மற்றும் அவ்வாண்டின் இறுதியில் முதல் ₹ 32,000.
6) அவ்வாண்டின் இலாபம் ₹ 35,000
7) கொள்முதல் மற்றும் பிற செலவுகள் ₹ 55,000

தொடர் ஆய்விற்கு

விற்பனை குறித்து தகவல்கள் பெறப்பட்டுள்ளன. ஆனால், சரக்கிருப்பு பதிவேடுகள் விவரமாக இல்லாத நிலையில் மொத்த இலாபம் கணக்கிட முடியுமா?

பார்வை

1. M C Shukla, T S Grewal and S C Gupta, Advanced Accounts, 19th ed., 2017, S.Chand Publishing, New Delhi.
2. R L Gupta and V K Gupta, Financial Accounting, 11th ed., 2014, Sultan Chand and Sons, New Delhi.
3. S P Jain and K L Narang, Advanced Accountancy Vol – I, 2016, Kalyani Publishers, New Delhi.
4. Dalston L Cecil and Jenitra L Merwin, Financial Accounting, 3rd ed., 2017, Learntech Press, Trichy.
5. Accounting, Intermediate course, 2017, The Institute of Chartered Accountants of India, New Delhi.

12th-Accountancy-Unit-01.indd 38 12/9/2021 11:08:59 PM

அலகு 2

இலாப நோக்கற்ற அமைப்புகளின் கணக்குகள்

பொருளடக்கம்

2.1 அறிமுகம்

2.2 இலாப நோக்கற்ற அமைப்புகளின் இயல்புகள்

2.3 பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு

2.4 இலாப நோக்கற்ற அமைப்புகளுக்குரிய தனித்துவம் வாய்ந்த இனங்கள்

2.5 வருவாய் மற்றும் செலவினக் கணக்கு

2.6 இருப்புநிலைக் குறிப்பு

நினைவு கூற வேண்டிய கருத்துகள்

இலாப நோக்கற்ற அமைப்புகளின் கணக்குகள் பற்றி கற்பதற்கு முன் பின்வரும் கருத்துகளை நினைவில் கொள்ள வேண்டும்:

- முதலினைச் செலவுகள்
- வருவாயினைச் செலவுகள்
- நீள்பயன் வருவாயினைச் செலவுகள்
- முதலின வரவுகள்
- வருவாயின வரவுகள்
- தனி வணிகரின் இறுதிக் கணக்குகள்

கற்றல் நோக்கங்கள்

மாணவர்கள்

- இலாப நோக்கற்ற அமைப்புகளின் இயல்புகளைப் புரிந்து கொள்ளுதல்
- இலாப நோக்கற்ற அமைப்புகளுக்குரிய தனித்துவம் வாய்ந்த இனங்களின் கணக்கியல் செயல்முறைகள் பற்றி புரிந்து கொள்ளுதல்
- இலாப நோக்கற்ற அமைப்புகளுக்குரிய இறுதிக் கணக்குகள் தயாரித்தல்

தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய சொற்கள்

- இலாப நோக்கற்ற அமைப்பு
- பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு
- வருவாய் மற்றும் செலவினக் கணக்கு

HB3AP

12th-Accountancy-Unit-02.indd 39 12/9/2021 11:10:17 PM

2.1 அறிமுகம்

சில அமைப்புகள் இலாபம் ஈட்டும் நோக்கத்திற்காக அல்லாமல் பொதுமக்களுக்கு சேவை செய்யும் நோக்கத்திற்காகவும் தொடங்கப்படுகின்றன. அவை கலை, பண்பாடு, கல்வி மற்றும் விளையாட்டு போன்றவற்றை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்படுகின்றன. இந்த அமைப்புகள் இலாப நோக்கற்ற அமைப்புகள் என்று அழைக்கப்படுகின்றன. அறக்கொடை நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், பண்பாட்டு மன்றங்கள், விளையாட்டு மற்றும் மனமகிழ் மன்றங்கள், மருத்துவமனைகள், நூலகங்கள் மற்றும் இலக்கிய அமைப்புகள் போன்றவை இலாப நோக்கற்ற அமைப்புகளுக்கு உதாரணங்கள் ஆகும். இவைகளை, இலாப நோக்கற்ற அல்லது வியாபார நோக்கற்ற நிறுவனங்கள் என்றும் அழைக்கலாம். அவை நன்கொடைகள், அரசிடமிருந்து பெறும் மானியம் மற்றும் உறுப்பினர்களிடமிருந்து பெறும் சந்தா ஆகியவற்றின் மூலம் நிதியைப் பெறுகின்றன. இந்த நிறுவனங்கள் சரியான கணக்கேடுகளைப் பராமரிக்க வேண்டும். அவை அனைத்து ரொக்கப் பெறுதல்களையும் மற்றும் அனைத்து ரொக்கச் செலுத்தல்களையும் கணக்கில் கொண்டு வர வேண்டும். ஒவ்வொரு கணக்காண்டின் இறுதியிலும், அதன் உபரி அல்லது பற்றாக்குறை மற்றும் நிதிநிலையை அறிய இறுதிக் கணக்குகளைத் தயாரிக்க வேண்டும்.

2.2 இலாப நோக்கற்ற அமைப்புகளின் இயல்புகள்

இலாப நோக்கற்ற அமைப்புகளின் இயல்புகள் பின்வருமாறு:

(1) இலாப நோக்கம் இல்லாமல் செயல்படும் அமைப்புகளே இலாப நோக்கற்ற அமைப்புகள் எனப்படும்.

(2) அவற்றின் முக்கிய நோக்கம் ஒரு குறிப்பிட்ட குழுவிற்கோ அல்லது பெரும்பாலான பொதுமக்களுக்கோ சேவை செய்வதாகும்.

(3) பொதுவாக அவை வணிகம் மற்றும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை.

(4) இவைகளின் முக்கிய வருமான ஆதாரம் உறுப்பினர் சந்தா, நன்கொடைகள், மானியம் மற்றும் உயில்கொடை போன்றவைகளை உள்ளடக்கியதாகும்.



மாணவர் செயல்பாடு 2.1

நீங்கள் ஒரு நாடக மன்றத்தை தொடங்க விரும்புகிறீர்கள் என வைத்துக் கொள்வோம். அதனைத் தொடங்க என்ன நடைமுறையைப் பின்பற்ற வேண்டும்? உங்கள் நாடக மன்றத்திற்கு பெயரிட்டு, அடையாளச் சின்னத்தை வடிவமைக்கவும்.

கணக்காண்டின் இறுதியில், இலாப நோக்கற்ற அமைப்புகள் பின்வரும் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கின்றன:

(i) பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு

(ii) வருவாய் மற்றும் செலவினக் கணக்கு மற்றும்

(iii) இருப்புநிலைக் குறிப்பு

இந்திய நிறுமச் சட்டம், 2013, பிரிவு 8–ன் கீழ் பதிவு செய்யப்பட்ட இலாப நோக்கற்ற அமைப்புகள், அவற்றின் வருவாய் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு ஆகியவற்றை இந்திய நிறுமச் சட்டம், 2013, பட்டியல் III–ன் படி தயாரிக்க வேண்டும்.

குறிப்பு: இந்த அலகில், இந்திய நிறுமச்சட்டம் 2013–ன் படி பதிவு செய்யப்படாத இலாப நோக்கற்ற அமைப்புகள் மட்டுமே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே, வருவாய் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் இருப்புநிலைக்குறிப்பு இந்திய நிறுமச் சட்டம் 2013, பட்டியல் III–ன் படி தயாரிக்கப்படவில்லை.

12th-Accountancy-Unit-02.indd 40 12/9/2021 11:10:17 PM



மாணவர் செயல்பாடு 2.2

அருகில் உள்ள ஒரு இலாப நோக்கற்ற அமைப்புக்கு சென்று, அதன் கணக்காளரிடம் கலந்துரையாடி, அவர் பராமரிக்கும் பல்வேறு கணக்கேடுகளைப் பற்றி அறிந்து கொள்ளவும்.

2.3 பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு

பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு என்பது ஒரு இலாப நோக்கற்ற அமைப்பில் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியில் தயாரிக்கப்படும் ரொக்கம் மற்றும் வங்கி நடவடிக்கைகளின் தொகுப்பு ஆகும்.

இது ஒரு சொத்துக் கணக்கின் தன்மையைக் கொண்டதாகும். பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு, தொடக்க ரொக்கம் மற்றும் வங்கி இருப்புகளைக் கொண்டு தொடங்கப்பட்டு இறுதி ரொக்கம் மற்றும் வங்கி இருப்புகளைக் கொண்டு முடிவடைகிறது. அனைத்து ரொக்கப் பெறுதல்கள், இக்கணக்கின் பற்றுப் பக்கத்திலும், அனைத்து ரொக்கச் செலுத்தல்கள் வரவுப் பக்கத்திலும் காட்டப்படுகின்றன. அனைத்து ரொக்கப் பெறுதல்கள் மற்றும் ரொக்கச் செலுத்தல்கள் முதலினத் தன்மையுடையதாயினும் அல்லது வருவாயினத் தன்மையுடையதாயினும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கில் பதியப்படுகின்றன. அவை நடப்பு ஆண்டுக்கு உரியதாகவோ அல்லது கடந்த ஆண்டுகளுக்கு உரியதாகவோ அல்லது எதிர்வரும் ஆண்டுகளுக்கு உரியதாகவோ இருக்கலாம். இது செலுத்தப்பட்ட தொகை அல்லது பெறப்பட்ட தொகை எந்த ஆண்டிற்குரியது என்பதை எடுத்துக் கொள்ளாமல், ரொக்கமாக பெறப்பட்ட அல்லது செலுத்தப்பட்ட ஆண்டில் பதியப்பட வேண்டும் என்று பொருள்படும்.

ரொக்கம் சாராத நடவடிக்கைகளான தேய்மானம், கொடுபட வேண்டிய செலவுகள் மற்றும் பெறவேண்டிய வருமானங்கள் ஆகியவை பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கில் இடம் பெறுவதில்லை.

2.3.1 பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கை தயாரிப்பதற்கான படிநிலைகள்

பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கினைத் தயாரிக்கப் பின்வரும் படிநிலைகளைப் பின்பற்ற வேண்டும்:

(i) பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கின் பற்றுப் பக்கத்தில் தொடக்க ரொக்க இருப்பையும், சாதகமான வங்கி இருப்பையும் பதிவு செய்ய வேண்டும். வங்கி மேல்வரைப்பற்றாக இருந்தால் அதனை வரவுப் பக்கம் தொடக்க இருப்பாக பதிவு செய்ய வேண்டும்.

(ii) அந்த ஆண்டில் மேற்கொண்ட ரொக்கப் பெறுதல்கள் பற்றுப்பக்கத்திலும் மற்றும் ரொக்கச் செலுத்தல்கள் வரவுப் பக்கத்திலும் பதியப்பட வேண்டும்.

(iii) ரொக்கப் பெறுதல்கள் மற்றும் ரொக்கச் செலுத்தல்கள் பதியும் போது அவை வருவாயினத்தைச் சார்ந்ததா அல்லது முதலினத்தைச் சார்ந்ததா என்று வேறுபடுத்தத் தேவையில்லை. அதுபோன்று, அவை முந்தைய ஆண்டுக்குரியதா அல்லது நடப்பாண்டிற்குரியதா அல்லது எதிர் வரும் ஆண்டிற்குரியதா எனவும் வேறுபடுத்த வேண்டியதில்லை.

(iv) பற்றுப் பக்கத்தின் மொத்தம் வரவுப்பக்கத்தின் மொத்தத்தை விட அதிகமாக இருந்தால் இருப்புக் கட்டப்படும் தொகை வரவுப் பக்கத்தில் தோன்றும். இது இறுதி ரொக்கம் அல்லது வங்கி இருப்பினைக் குறிக்கும்.

(v) வரவுப் பக்கத்தின் மொத்தம் பற்றுப்பக்கத்தின் மொத்தத்தை விட அதிகமாக இருந்தால் இருப்புக் கட்டும் தொகை பற்றுப் பக்கத்தில் தோன்றும். இது வங்கி மேல்வரைப்பற்று ஆகும்.

12th-Accountancy-Unit-02.indd 41 12/9/2021 11:10:17 PM

பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கின் படிவம்

ப ...ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு வ

பெறுதல்கள்	₹	₹	செலுத்தல்கள்	₹	₹
இருப்பு கீ/கொ			இருப்பு கீ/கொ		
கைரொக்கம்	xxx		வங்கி மேல்வரைப்பற்று		xxx
வங்கி ரொக்கம்	xxx	xxx			
வருவாயின வரவுகள்:			**வருவாயினச் செலுத்தல்கள்:**		
சந்தா		xxx	சம்பளம்		xxx
நுழைவுக் கட்டணம்		xxx	வாடகைச் செலுத்தியது		xxx
பொது நன்கொடைகள்		xxx	மின் கட்டணம்		xxx
மானிய உதவி		xxx	அஞ்சல் செலவுகள்		xxx
பழைய செய்தித்தாள்கள் விற்றது		xxx	வாடகையும் வரியும்		xxx
முதலீடு மீதான வட்டி		xxx	காப்பீடு		xxx
பங்காதாயம்		xxx	விளம்பரம்		xxx
பாதுகாப்பு பெட்டக வாடகைப் பெற்றது		xxx	தொலைபேசிக் கட்டணம்		xxx
வாடகைப் பெற்றது		xxx	பொழுதுபோக்குச் செலவுகள்		xxx
பல்வகை வரவுகள்		xxx	தணிக்கைக் கட்டணம்		xxx
முதலின வரவுகள்:			பழுதுபார்ப்புச் செலவுகள்		xxx
ஆயுள் உறுப்பினர் கட்டணம்		xxx	மைதான பராமரிப்புச் செலவுகள்		xxx
குறிப்பிட்ட நோக்கத்திற்காக			போக்குவரத்துச் செலவுகள்		xxx
பெற்ற நன்கொடை		xxx	செய்தித்தாள்கள் மற்றும்		
உயில்கொடை		xxx	பருவ இதழ்கள்		xxx
அறக்கட்டளை நிதி		xxx	அலுவலகச் செலவுகள்		xxx
நிலைச்சொத்துகள் விற்ற தொகை		xxx	தோட்டப் பராமரிப்புச் செலவுகள்		xxx
முதலீடுகள் விற்ற தொகை		xxx	பல்வகைச் செலவுகள்		xxx
குறிப்பிட்ட நோக்கம் அல்லது நிதி			**முதலினச் செலவுகள்:**		
மூலம் பெற்ற வரவுகள்		xxx	நிலைச் சொத்துகள்		xxx
குறிப்பிட்ட நிதி முதலீடுகள்			முதலீடுகள்		xxx
மீதான வட்டி		xxx	கடன் திரும்பச் செலுத்தியது		xxx
இருப்பு கீ/இ			இருப்பு கீ/இ		
வங்கி மேல்வரைப்பற்று		xxx	கைரொக்கம்	xxx	
			வங்கி ரொக்கம்	xxx	xxx
		xxx			xxx

12th-Accountancy-Unit-02.indd 42 12/9/2021 11:10:18 PM

மாணவர் செயல்பாடு 2.3

முதலின மற்றும் வருவாயின நடவடிக்கைகளின் வேறுபாடுகளை நினைவு கூறவும்.

எடுத்துக்காட்டு 1

தமிழ் கல்வியியல் மன்றத்தின் கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கினைத் தயார் செய்யவும்

விவரம்	₹	விவரம்	₹
தொடக்க ரொக்க இருப்பு (1.4.2018)	18,000	கட்டடம் வாங்கியது	2,10,000
வாடகைச் செலுத்தியது	6,000	பணியாளர் சம்பளம்	55,000
உதவித்தொகை அளித்தது	15,200	சந்தா பெற்றது	2,65,000
நுழைவுக் கட்டணம் பெற்றது	18,500		

தீர்வு

தமிழ் கல்வியியல் மன்றத்தின் ஏடுகளில்
2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய
ப பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு வ

பெறுதல்கள்	₹	செலுத்தல்கள்	₹
இருப்பு கீ/கொ		வாடகை செலுத்தியது	6,000
கைரொக்கம்	18,000	உதவித்தொகை அளித்தது	15,200
நுழைவுக்கட்டணம்	18,500	கட்டடம் வாங்கியது	2,10,000
சந்தா பெற்றது	2,65,000	பணியாளர் சம்பளம்	55,000
		இருப்பு கீ/இ	
		கைரொக்கம்	**15,300**
	3,01,500		3,01,500

எடுத்துக்காட்டு 2

திருச்சி கல்வியியல் மன்றத்தின் கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கினைத் தயார் செய்யவும்.

விவரம்	₹	விவரம்	₹
தொடக்க ரொக்க இருப்பு (1.1.2018)	20,000	பாதுகாப்பு பெட்டக வாடகை பெற்றது	12,000
முதலீடுகள் செய்தது	80,000	அறைகலன் விற்றது	5,000
மதிப்பூதியம் செலுத்தியது	3,000	பொதுச்செலவுகள்	7,000
நன்கொடை பெற்றது	80,000	அஞ்சல் செலவுகள்	1,000
தணிக்கைக் கட்டணம் செலுத்தியது	2,000	சந்தா பெற்றது	10,000

12th-Accountancy-Unit-02.indd 43 12/9/2021 11:10:18 PM

தீர்வு

திருச்சி கல்வியியல் மன்றத்தின் ஏடுகளில்
2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய
ப பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு வ

பெறுதல்கள்	₹	செலுத்தல்கள்	₹
இருப்பு கீ/கொ		முதலீடுகள் செய்தது	80,000
கைரொக்கம்	20,000	மதிப்பூதியம் செலுத்தியது	3,000
நன்கொடைப் பெற்றது	80,000	தணிக்கைக் கட்டணம்	2,000
பாதுகாப்பு பெட்டக வாடகைப் பெற்றது	12,000	பொதுச் செலவுகள்	7,000
அறைகலன் விற்றது	5,000	அஞ்சல் செலவுகள்	1,000
சந்தா	10,000	இருப்பு கீ/இ	
		கைரொக்கம்	**34,000**
	1,27,000		1,27,000

எடுத்துக்காட்டு 3

சென்னை விளையாட்டு மன்றத்தின் கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கினைத் தயார் செய்யவும்.

விவரம்	₹	விவரம்	₹	₹
தொடக்க ரொக்க இருப்பு (1.4.2017)	10,000	சந்தா பெற்றது		
தொடக்க வங்கி இருப்பு (1.4.2017)	15,000	2016 – 2017	4,500	
வட்டி செலுத்தியது	5,000	2017 – 2018	65,000	
தொலைபேசி செலவுகள்	7,000	2018 – 2019	5,000	74,500
மைதானம் பராமரித்தது	22,500	தொடர் விளையாட்டுப் போட்டிச் செலவுகள்		12,500
ஆயுள் உறுப்பினர் கட்டணம் பெற்றது	5,500	தொடர் விளையாட்டுப் போட்டி நிதி வரவுகள்		15,000
மட்டைகள் மற்றும் பந்துகள் வாங்கியது	13,000	இறுதி ரொக்க இருப்பு (31.3.2018)		5,000

தீர்வு

சென்னை விளையாட்டு மன்றத்தின் ஏடுகளில்
ப 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு வ

பெறுதல்கள்	₹	₹	செலுத்தல்கள்	₹	₹
இருப்பு கீ/கொ			வட்டி செலுத்தியது		5,000
ரொக்கம்	10,000		தொலைபேசிக் கட்டணம்		7,000
வங்கி	15,000	25,000	மைதானம் பராமரிப்புச் செலவுகள்		22,500
ஆயுள் உறுப்பினர் கட்டணம்		5,500	மட்டைகள் மற்றும் பந்துகள் வாங்கியது		13,000
தொடர் விளையாட்டுப் போட்டிநிதி வரவுகள்		15,000	தொடர் விளையாட்டுப் போட்டிச் செலவுகள்		12,500
சந்தா பெற்றது			இருப்பு கீ/இ		
2016 – 2017	4,500		ரொக்கம்	5,000	
2017 – 2018	65,000		வங்கி (இருப்புக் கட்டும் தொகை)	**55,000**	60,000
2018 – 2019	5,000	74,500			
		1,20,000			1,20,000

12th-Accountancy-Unit-02.indd 44 12/9/2021 11:10:18 PM

எடுத்துக்காட்டு 4

பூம்புகார் இலக்கிய மன்றத்தின் கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கினைத் தயார் செய்யவும்.

விவரம்	₹	விவரம்	₹
தொடக்க ரொக்க இருப்பு (1.4.2018)	5,000	சந்தா பெற்றது	20,000
வங்கி மேல்வரைப்பற்று (1.4.2018)	4,000	பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல்	2,500
அச்சு மற்றும் எழுதுபொருள்	1,500	போக்குவரத்துச் செலவுகள்	2,750
வட்டி செலுத்தியது	3,250	புத்தகங்கள் வாங்கியது	10,000
முதலீடுகள் விற்றது	1,000	காப்பீட்டு முனைமம் செலுத்தியது	4,000
சிற்றுண்டி வாங்கியது	1,500	பல்வகை வரவுகள்	750
கொடுபட வேண்டிய சம்பளம்	2,000	அரசிடமிருந்து பெற்ற மானியம்	6,000
அறக்கொடை நிதி பெற்றது	2,000	சிற்றுண்டி விற்றது	1,500
ஒளியூட்டுக் கட்டணம்	1,300	கட்டடம் மீதான தேய்மானம்	2,000
		வங்கி ரொக்கம் (31.3.2019)	2,000

தீர்வு

பூம்புகார் இலக்கிய மன்றத்தின் ஏடுகளில்
2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய
ப பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு வ

பெறுதல்கள்	₹	செலுத்தல்கள்	₹
இருப்பு கீ/கொ		இருப்பு கீ/கொ	
ரொக்க இருப்பு	5,000	வங்கி மேல்வரைப்பற்று	4,000
முதலீடுகள் விற்றது	1,000	அச்சு மற்றும் எழுதுபொருள்	1,500
அறக்கட்டளை நிதி வரவுகள்	2,000	வட்டி செலுத்தியது	3,250
சந்தா பெற்றது	20,000	சிற்றுண்டி வாங்கியது	1,500
இதர வரவுகள்	750	ஒளியூட்டுக் கட்டணம்	1,300
அரசு மானியம் பெற்றது	6,000	பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல்	2,500
சிற்றுண்டி விற்றது	1,500	போக்குவரத்துச் செலவுகள்	2,750
		புத்தகங்கள் வாங்கியது	10,000
		காப்பீட்டு முனைமம் செலுத்தியது	4,000
		இருப்பு கீ/இ	
		வங்கி ரொக்கம்	2,000
		கைரொக்கம்	**3,450**
	36,250		36,250

குறிப்பு: கொடுபட வேண்டிய சம்பளம் மற்றும் தேய்மானம் ரொக்கம் சாரா நடவடிக்கைகளாக இருப்பதால் இவை இரண்டும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கில் இடம் பெறாது.

12th-Accountancy-Unit-02.indd 45 12/9/2021 11:10:18 PM

எடுத்துக்காட்டு 5

வேலூர் பொழுதுபோக்கு மன்றத்தின் கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கினைத் தயார் செய்யவும்.

விவரம்	₹	விவரம்	₹
தொடக்க ரொக்க இருப்பு (1.4.2016)	3,000	கேளிக்கை வரவுகள்	20,000
தொடக்க வங்கி இருப்பு (1.4.2016)	12,000	சேர்க்கைக் கட்டணம் பெற்றது	1,000
அறைகலன் வாங்கியது	11,000	நகராட்சி வரி	22,000
விளையாட்டு உபகரணங்கள் வாங்கியது	11,000	அறக்கொடை நாடகக்காட்சி செலவுகள்	2,000
விளையாட்டு அரங்கத்திற்காக பெற்ற நன்கொடை	8,000	பில்லியார்ட்ஸ் மேசை வாங்கியது	15,000
பழைய டென்னிஸ் பந்துகள் விற்றது	1,500	புதிய டென்னிஸ் மைதானம் கட்டியது	18,000
செய்தித்தாள்கள் வாங்கியது	500	அறக்கொடை நாடகக்காட்சி வரவுகள்	2,500
பயணச் செலவுகள்	4,500	இறுதி கைரொக்க இருப்பு	8,000

தீர்வு

வேலூர் பொழுதுபோக்கு மன்றத்தின் ஏடுகளில்
2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய
ப பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு வ

பெறுதல்கள்	₹	₹	செலுத்தல்கள்	₹
இருப்பு கீ/கொ			அறைகலன் வாங்கியது	11,000
கைரொக்கம்	3,000		விளையாட்டு உபகரணங்கள்	
வங்கி ரொக்கம்	12,000	15,000	வாங்கியது	11,000
விளையாட்டு அரங்கத்திற்காக பெற்ற		8,000	செய்தித்தாள்கள் வாங்கியது	500
நன்கொடை			பயணச் செலவுகள்	4,500
பழைய டென்னிஸ் பந்துகள் விற்றது		1,500	நகராட்சி வரி	22,000
			அறக்கொடை நாடகக்காட்சி	
கேளிக்கை வரவுகள்		20,000	செலவுகள்	2,000
சேர்க்கைக் கட்டணம்		1,000	பில்லியார்ட்ஸ் மேசை வாங்கியது	15,000
அறக்கொடை நாடகக்காட்சி வரவுகள்		2,500	புதிய டென்னிஸ் மைதானம் கட்டியது	18,000
இருப்பு கீ/இ			இருப்பு கீ/இ	
வங்கி மேல்வரைப்பற்று		**44,000**	கைரொக்கம்	8,000
		92,000		92,000

2.4 இலாப நோக்கற்ற அமைப்புகளுக்குரிய தனித்துவம் வாய்ந்த இனங்கள்

இலாப நோக்கற்ற அமைப்புகளின் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும்போது முதலின மற்றும் வருவாயின நடவடிக்கைகளை வேறுபடுத்திக் காட்டுவது மிகவும் உதவியாக இருக்கும். வருவாயின நடவடிக்கைகள், வருவாய் மற்றும் செலவினக் கணக்கிலும், முதலின நடவடிக்கைகள், இருப்புநிலைக் குறிப்பிலும் பதியப்பட வேண்டும். இலாப நோக்கற்ற அமைப்புகளுக்குரிய தனித்துவம் வாய்ந்த இனங்களும் அவற்றின் கணக்கியல் செயல்முறைகளும் பின்வருமாறு:

12th-Accountancy-Unit-02.indd 46 12/9/2021 11:10:18 PM

(i) சந்தா

இலாப நோக்கற்ற அமைப்புகள் பொதுவாக சந்தா தொகையை உறுப்பினர்களிடமிருந்து பருவந்தோறும் வசூலிக்கின்றன. இவை மாதம் தோறும், காலாண்டு தோறும், அரையாண்டு தோறும் அல்லது ஆண்டுக்கு ஒருமுறை வசூலிக்கப்படலாம். மேலும், சில சிறப்பு சந்தாக்கள், உதாரணமாக, டென்னிஸ் சந்தா, பில்லியார்ட்ஸ் சந்தா போன்றவை டென்னிஸ் மற்றும் பில்லயார்ட்ஸ் விளையாடும் குறிப்பிட்ட உறுப்பினர்களிடமிருந்து மட்டுமே வசூலிக்கப் படுகின்றன. இவை அனைத்தும் வருவாயின வரவுகளாகும்.

(ii) முதலீடு மீதான வட்டி

இலாப நோக்கற்ற அமைப்புகள் செய்யும் முதலீடுகளிலிருந்து பெறப்படும் வட்டி ஒரு வருவாயின வரவு ஆகும்.

(iii) பழைய விளையாட்டுப் பொருள்கள் விற்றது

பந்துகள், மட்டைகள் போன்ற பழைய விளையாட்டுப் பொருள்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் தொகை ஒரு வருவாயின வரவு ஆகும்.

(iv) பழைய செய்தித்தாள் விற்றது

பழைய செய்தித்தாள்களை விற்பதன் மூலம் கிடைக்கும் தொகை, ஒரு வருவாயின வரவு ஆகும்.

(v) ஆயுள் உறுப்பினர் கட்டணம்

உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் ஆயுள் உறுப்பினர் கட்டணம் ஒரு முதலின வரவாகும். ஏனெனில், இது திரும்பத் திரும்ப நிகழாத் தன்மை கொண்டது.

(vi) உயில்கொடை நிதி

ஒரு இலாப நோக்கற்ற அமைப்புக்கு உயில் மூலமாக அளிக்கப்படும் பரிசு உயில்கொடை ஆகும். இது ஒரு முதலின வரவாகும்.

(vii) சேர்க்கைக் கட்டணம் அல்லது நுழைவுக் கட்டணம்

இது ஒவ்வொரு உறுப்பினரிடமிருந்தும் உறுப்பினராக சேரும்போது ஒரே ஒருமுறை வசூலிக்கப்படும் ஒரு கட்டணமாகும். இது ஒவ்வொரு ஆண்டும் புதிய உறுப்பினர்களை சேர்க்கும் போது பெறப்படும் திரும்பத் திரும்ப நிகழும் தன்மையுடைய வருமானம் மேலும் உறுப்பினர்கள் சேர்க்கையின் போது செய்யப்படும் செலவுகளுக்காக பயன்படுத்தப் படலாம். ஆகையால் இது வருவாயின வரவாக எடுத்துக் கொள்ளப்படலாம். இது முதலின வரவாகவும் கருதப்படலாம்.

(viii) அரசு மற்றும் இதர அமைப்புகளிடமிருந்து பெறப்படும் மானியம்

இலாப நோக்கற்ற அமைப்புகள் அரசு மற்றும் இதர அமைப்புகளிடமிருந்து பல்வேறு வகையான மானியங்களைப் பெறுகின்றன. அவையாவன:

கட்டடங்கள் கட்டுவதற்காகவும், சொத்துகளை வாங்குவதற்காகவும் பெறப்படும் மானியமானது திரும்பத் திரும்ப நிகழாத் தன்மையுடையதால் முதலின வரவாகக் கருதப்படுகிறது.

சொத்துகளைப் பராமரிக்கவும் மற்றும் சம்பளம் கொடுக்கவும் பெறப்படும் மானியமானது திரும்பத் திரும்ப நிகழும் தன்மையுடையதால் வருவாயின வரவாகக் கருதப்படுகிறது.

(ix) நன்கொடைகள்

இலாப நோக்கற்ற அமைப்புகளால் பெறப்படும் பரிசுத்தொகை நன்கொடை எனப்படும். இது பொது நன்கொடையாக அல்லது குறிப்பிட்ட நன்கொடையாக இருக்கலாம்.

பொது நன்கொடை: எந்தவொரு குறிப்பிட்ட நிபந்தனையும் இல்லாமல் பெறப்படும் நன்கொடை, பொது நன்கொடையாகும். இது ஒரு வருவாயின வரவாகும்.

12th-Accountancy-Unit-02.indd 47 12/9/2021 11:10:18 PM

குறிப்பிட்ட நன்கொடை: ஒரு குறிப்பிட்ட நிபந்தனையின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக பெறப்படும் நன்கொடை குறிப்பிட்ட நன்கொடை எனப்படும். உதாரணம், விளையாட்டு நிதி, பரிசு நிதிக்காக பெறப்படும் நன்கொடை முதலியன. இது ஒரு முதலின வரவு ஆகும்.

(x) மதிப்பூதியம்

ஒரு நிறுவனத்தில் வழக்கமான ஊழியராக இல்லாத ஒருவருக்கு வழங்கப்படும் ஊதியமே மதிப்பூதியம் எனப்படும். இது ஒரு வருவாயினச் செலவாகும்.

(xi) விளையாட்டுப் பொருள்கள் வாங்குதல்

விளையாட்டுப் பொருள்களான பந்து, மட்டை, வலை போன்றவை விளையாடுவதற்கு பயன்படும் பொருள்களாகும். பயன்படுத்தப்பட்ட விளையாட்டுப் பொருள்கள் வருவாயினச் செலவாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. பயன்படுத்தாமல் இருப்பில் உள்ள விளையாட்டுப் பொருள்கள், இருப்புநிலைக் குறிப்பில் சொத்துகள் பக்கம் இருப்பாகக் காட்டப்படுகிறது.

(xii) விளையாட்டு உபகரணம் வாங்குவது

இது ஒரு முதலினச் செலவாகும். உதாரணம்: டேபிள் டென்னிஸ் மேசை, பில்லியார்ட்ஸ் மேசை போன்றவை.

(xiii) நூலகத்திற்கு புத்தகங்கள் வாங்குவது

நூலகத்திற்கு புத்தகங்கள் வாங்குவது ஒரு முதலினச் செலவாகும்.

இலாப நோக்கற்ற அமைப்புகளுக்குரிய தனித்துவம் வாய்ந்த சில முதலின மற்றும் வருவாயினங்களின் உதாரணங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன:

வருவாயின வரவுகள்	முதலின வரவுகள்	வருவாயின அல்லது முதலின வரவுகள் (அமைப்பின் நடைமுறை படி)
சந்தா	ஆயுள் உறுப்பினர் கட்டணம்	சேர்க்கைக் கட்டணம் அல்லது நுழைவுக் கட்டணம்
முதலீடு மீதான வட்டி	உயில்கொடை	நன்கொடை
நிலை வைப்பு மீதான வட்டி	குறிப்பிட்ட நன்கொடை	சிறப்புக் கட்டணம்
பழைய விளையாட்டுப் பொருள்கள் விற்றது	நிலைச் சொத்துகள் விற்றது	அரசு மற்றும் இதர அமைப்புகளிடமிருந்து பெற்ற மானியம்
பழைய செய்தித்தாள்கள் விற்றது	சிறப்பு நிதி	
கீழ்க்கண்டவற்றிற்கான வசூல் அல்லது வரவுகள்:	தொடர் விளையாட்டுப் போட்டி நிதி	
(அ) தொடர் விளையாட்டுப் போட்டி	பரிசு நிதி	
(ஆ) விளையாட்டுகள்		
(இ) விளையாட்டுப் போட்டிகள்		
(ஈ) பொழுதுபோக்கு		
(உ) சிற்றுண்டி		

குறிப்பு: சேர்க்கைக் கட்டணம் அல்லது நுழைவுக் கட்டணம், நன்கொடை, சிறப்புக் கட்டணம், அரசு மற்றும் பிற நிறுவனங்களிடமிருந்து பெறும் மானியம் ஆகியவை இந்த அலகில் வருவாயின வரவாக கருதப்பட்டுள்ளது.

12th-Accountancy-Unit-02.indd 48 12/9/2021 11:10:18 PM

முதலினச் செலவுகள்	வருவாயினச் செலவுகள்
விளையாட்டு உபகரணங்கள் வாங்கியது நூலகத்திற்காக புத்தகங்கள் வாங்கியது	மதிப்பூதியம் அறக்கொடை தணிக்கைக் கட்டணம் விளையாட்டு பொருள்கள் வாங்கியது அச்சு மற்றும் எழுதுபொருள் அஞ்சல் மற்றும் தூது அஞ்சல் கட்டணம் தொடர் விளையாட்டுப் போட்டி, விளையாட்டு, விளையாட்டுப் போட்டி, கேளிக்கை மற்றும் சிற்றுண்டிச் செலவுகள்

2.5 வருவாய் மற்றும் செலவினக் கணக்கு

வருவாய் மற்றும் செலவினக் கணக்கு என்பது இலாப நோக்கற்ற அமைப்புகளில் கணக்காண்டின் இறுதியில் தயாரிக்கப்படும் வருவாய் மற்றும் செலவுகளின் தொகுப்பாகும். ஒரு குறிப்பிட்ட ஆண்டிற்குரிய உபரி அல்லது பற்றாக்குறையை கண்டறிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு தயாரிக்கப்படுகிறது.

இது ஒரு பெயரளவு கணக்கு ஆகும். இதில் நடப்பு ஆண்டுக்குரிய வருவாயின வரவுகள் மற்றும் வருவாயினச் செலவுகள் மட்டும் பதிவு செய்யப்படுகின்றன. இது நிகழ்வு அடிப்படையிலான கணக்கியலை பின்பற்றி தயாரிக்கப்படுகிறது.

இது இலாப நட்டக் கணக்கு தயாரிப்பது போன்றதாகும். இந்த கணக்கில் வருமானங்கள் வரவுப் பக்கத்திலும், செலவுகள் பற்றுப் பக்கத்திலும் காண்பிக்கப்படும். ரொக்க நடவடிக்கைகள் மட்டுமன்றி ரொக்கம் சாரா நடவடிக்கைகளான ஈட்டிய வருமானம் பெறப்படாதது, நிலைச்சொத்து விற்பனை மீதான நட்டம் அல்லது இலாபம், தேய்மானம் போன்றவைகளும் இதில் பதிவு செய்யப்படுகின்றன.

இது உறுப்பினர்கள் தங்கள் அமைப்பின் செயல்பாடுகளையும், அதன் வருமானம் செலவினங்களை எதிர்கொள்ளப் போதுமானதாக உள்ளதா என்பதையும் அறிய உதவுகிறது. இதனை கொடுக்கப்பட்டுள்ள பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து தயாரிக்க முடியும்.

2.5.1 பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து வருவாய் மற்றும் செலவினக் கணக்கினைத் தயாரிப்பதற்கான படிநிலைகள்

பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து வருவாய் மற்றும் செலவினக் கணக்கினைத் தயாரிப்பதற்கு பின்பற்ற வேண்டிய படிநிலைகள் பின்வருமாறு:

(i) பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கில் உள்ள ரொக்கம் மற்றும் வங்கிக் கணக்கில் உள்ள தொடக்க மற்றும் இறுதி இருப்புகள் தவிர்க்கப்பட வேண்டும்.

(ii) முதலின வரவுகள் மற்றும் முதலினச் செலவுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

(iii) நடப்பாண்டோடு தொடர்புடைய வருவாயின வரவுகள் மட்டும் வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் வரவுப் பக்கத்தில் எழுதப்பட வேண்டும். முன்கூட்டிப் பெற்ற வருமானங்கள், நடப்பாண்டில் பெற வேண்டிய வருமானம், முந்தைய ஆண்டு அல்லது ஆண்டுகளுக்கான தொகை போன்றவைகளுக்குத் தேவையான சரிக்கட்டுதல்கள் செய்யப்பட வேண்டும்.

(iv) அதுபோலவே, நடப்பாண்டோடு தொடர்புடைய வருவாயினச் செலவுகள் மட்டும் வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் பற்றுப் பக்கத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். முந்தைய ஆண்டு மற்றும் நடப்பாண்டிற்குரிய கொடுபட வேண்டிய செலவுக்கும், முந்தைய ஆண்டு மற்றும் நடப்பாண்டிற்குரிய முன்கூட்டிச் செலுத்திய செலவுகளுக்கும் சரிக்கட்டுதல்கள் செய்யப்பட வேண்டும்.

12th-Accountancy-Unit-02.indd 49 12/9/2021 11:10:18 PM

(v) குறிப்பிட்ட நிதிக்கான வரவுகள் மற்றும் செலவுகள் வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் பதிவு செய்யப்படக்கூடாது.

(vi) பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கில் பதியப்பெறாத ரொக்க சார்பற்ற நடவடிக்கைகளான வாராக்கடன், தேய்மானம், நிலைச்சொத்துகள் விற்பனை மீதான நட்டம் அல்லது இலாபம் போன்றவை வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் பதியப்பட வேண்டும்.

(vii) வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் இருப்புக் கட்டும் தொகையான உபரி அல்லது பற்றாக்குறை இருப்புநிலைக் குறிப்பின் முதல் நிதிக்கு மாற்றப்பட வேண்டும். வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் வரவுப்பக்கத்தின் மொத்தம் பற்றுப்பக்கத்தின் மொத்தத்தைவிட அதிகமாக இருந்தால் (செலவுகளை விட மிகுதியான வருமானம்) அந்த வேறுபாடு உபரி என்பதைக் குறிக்கிறது. வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் பற்றுப்பக்கத்தின் மொத்தம் வரவுப்பக்கத்தின் மொத்தத்தைவிட அதிகமாக இருந்தால் (வருமானத்தைவிட மிகுதியான செலவுகள்) அந்த வேறுபாடு பற்றாக்குறை என்பதைக் குறிக்கிறது.

2.5.2 வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் படிவம்

சங்கம் / நிறுவனத்தின் பெயர்

ப ..... நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு வ

செலவுகள்	₹	வருமானம்	₹
சம்பளம்	xxx	சந்தா	xxx
அறக்கொடை	xxx	நன்கொடைப் பெற்றது	xxx
வாடகை	xxx	சேர்க்கைக் கட்டணம் பெற்றது	xxx
நன்கொடை செலுத்தியது	xxx	மானியம் பெற்றது	xxx
எழுதுபொருள்	xxx	வாடகைப் பெற்றது	xxx
நிலைச்சொத்து விற்பனை மீதான நட்டம்	xxx	வட்டிப் பெற்றது	xxx
தேய்மானம்	xxx	நிலைச்சொத்து விற்பனை மீதான இலாபம்	xxx
உபரி *	xxx	பற்றாக்குறை *	xxx
(செலவுகளைக் காட்டிலும் மிகுதியான வருமானங்கள்)		(வருமானத்தைக் காட்டிலும் மிகுதியான செலவுகள்)	
	xxx		xxx

*குறிப்பு: இருப்புக் கட்டும் தொகையானது பற்றாக்குறை அல்லது உபரியாக இருக்கும்.

மாணவர் செயல்பாடு2.4

ஒரு இசைச் சங்கத்திற்கு தொடர்புடைய ஏதேனும் ஐந்து செலவுகளைப் பட்டியலிடவும்.

எடுத்துக்காட்டு 6

ஊட்டி மனமகிழ் மன்றத்தின் பின்வரும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கினைத் தயாரிக்கவும்.

12th-Accountancy-Unit-02.indd 50 12/9/2021 11:10:18 PM

பெறுதல்கள்	₹	செலுத்தல்கள்	₹
தொடக்க இருப்பு		விளையாட்டுப் பொருள்கள் வாங்கியது	10,000
கைரொக்கம்	5,000	எழுதுபொருளுக்காக செலுத்தியது	7,000
வாடகைப் பெற்றது	10,000	கணிப்பொறி வாங்கியது	25,000
முதலீடுகள் விற்றது	8,000	சம்பளம்	20,000
சந்தா பெற்றது	54,000	இறுதி இருப்பு	
		கைரொக்கம்	15,000
	77,000		77,000

தீர்வு

ஊட்டி மனமகிழ் மன்றத்தின் ஏடுகளில்

ப 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு வ

செலவுகள்	₹	வருமானம்	₹
விளையாட்டுப் பொருள்கள் வாங்கியது	10,000	வாடகைப் பெற்றது	10,000
எழுதுபொருளுக்காக செலுத்தியது	7,000	சந்தா பெற்றது	54,000
சம்பளம்	20,000		
உபரி	**27,000**		
(செலவுகளைக் காட்டிலும் மிகுதியான வருமானம்)			
	64,000		64,000

எடுத்துக்காட்டு 7

கீழ்க்காணும் திருச்சி மனமகிழ் மன்றத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கினைத் தயாரிக்கவும்.

பெறுதல்கள்	₹	செலுத்தல்கள்	₹
தொடக்க இருப்பு		அறைகலன் வாங்கியது	10,000
கைரொக்கம்	11,000	வாடகை	2,800
பங்காதாயம் பெற்றது	27,600	செயலர் மதிப்பூதியம்	15,000
பழைய செய்தித்தாள் விற்றது	3,000	தபால் செலவுகள்	1,700
உறுப்பினர் சந்தா	31,000	பொதுச் செலவுகள்	4,350
பாதுகாப்பு பெட்டக வாடகை	8,000	அச்சு மற்றும் எழுதுபொருள்கள்	45,000
முதலீடுகள் மீதான வட்டி	1,250	தணிக்கைக் கட்டணம்	5,000
அறைகலன் விற்றது	5,000	இறுதி இருப்பு	
(ஏட்டு மதிப்பு ₹ 4,400)		கைரொக்கம்	3,000
	86,850		86,850

12th-Accountancy-Unit-02.indd 51 12/9/2021 11:10:19 PM

தீர்வு

திருச்சி மனமகிழ் மன்றத்தின் ஏடுகளில்

ப 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு வ

செலவுகள்	₹	வருமானம்	₹
வாடகை	2,800	பங்காதாயம் பெற்றது	27,600
செயலர் மதிப்பூதியம்	15,000	பழைய செய்தித்தாள் விற்றது	3,000
தபால் செலவுகள்	1,700	உறுப்பினர் சந்தா	31,000
பொதுச் செலவுகள்	4,350	பாதுகாப்பு பெட்டக வாடகை	8,000
அச்சு மற்றும் எழுதுபொருள்கள்	45,000	முதலீடுகள் மீதான வட்டி	1,250
தணிக்கைக் கட்டணம்	5,000	அறைகலன் விற்பனை மீதானஇலாபம் (5,000 - 4,400)	600
		பற்றாக்குறை	**2,400**
		(வருமானத்தைக் காட்டிலும் மிகுதியான செலவுகள்)	
	73,850		73,850

2.5.3 பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கும் வருவாய் மற்றும் செலவினக் கணக்கிற்கும் இடையேயான வேறுபாடுகள்

அடிப்படை	பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு	வருவாய் மற்றும் செலவினக் கணக்கு
1. நோக்கம்	இது ரொக்கப் பெறுதல்கள் மற்றும் ரொக்கச் செலுத்தல்களை அறிவதற்கு தயாரிக்கப்படுகிறது.	இது நடப்பு ஆண்டின் செலவுகளைக் காட்டிலும் மிகுதியான வருமானம் (உபரி) அல்லது வருமானத்தைக் காட்டிலும் மிகுதியான செலவுகள் (பற்றாக்குறை) குறித்து அறிந்து கொள்ள தயாரிக்கப்படுகிறது.
2. கணக்கின் தன்மை	இது ஒரு சொத்துக் கணக்காகும். இது ரொக்கக் கணக்கின் தொகுப்பாகும். அனைத்து ரொக்கப் பெறுதல்கள் பற்றுப் பக்கத்திலும், ரொக்கச் செலுத்தல்கள் வரவுப் பக்கத்திலும் பதியப்படுகின்றன.	இது ஒரு பெயரளவுக் கணக்காகும். இது இலாபநட்டக் கணக்கைப் போன்றது. செலவுகள் பற்றுப் பக்கத்திலும் மற்றும் வருமானங்கள் வரவுப் பக்கத்திலும் பதியப்படுகின்றன.
3. கணக்கியலின் அடிப்படை	இது ரொக்க அடிப்படையிலான கணக்கியலை அடிப்படையாகக் கொண்டது. ரொக்கம் சாராற்ற விவரங்கள் பதியப்படுவதில்லை.	இது நிகழ்வு அடிப்படையிலான கணக்கியலை அடிப்படையாகக் கொண்டது. ரொக்கம் சாரா விவரங்களான கொடுபட வேண்டிய செலவுகள், தேய்மானம் போன்றவைகளும் இங்கு பதியப்படும்.
4. தொடக்க மற்றும் இறுதி இருப்பு	இது ரொக்கம் மற்றும் வங்கிக் கணக்கின் தொடக்க இருப்புடன் தொடங்கி, ரொக்கம் மற்றும் வங்கிக் கணக்கின் இறுதி இருப்புடன் முடிவடைகிறது.	இங்கு தொடக்க இருப்பு என்பது கிடையாது. இது உபரி அல்லது பற்றாக்குறையுடன் முடிவடைகிறது.
5. நடவடிக்கையின் தன்மைகள்	இது வருவாயினம் அல்லது முதலினம் என்ற வேறுபாடில்லாமல் அனைத்துப் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்களைக் கொண்டிருக்கும்.	இது வருவாயின நடவடிக்கைகளை மட்டுமே, அதாவது வருவாயினச் செலவுகள் மற்றும் வருவாயின வரவுகளை மட்டுமே கொண்டிருக்கும்.

12th-Accountancy-Unit-02.indd 52 12/9/2021 11:10:19 PM

6. காலம்	நடப்பு ஆண்டில் மேற்கொண்ட அனைத்து ரொக்கப் பெறுதல்கள் மற்றும் ரொக்கச் செலுத்தல்கள் அவை கடந்த ஆண்டு, நடப்பு ஆண்டு மற்றும் எதிர்வரும் ஆண்டிற்குரியதாக இருந்தாலும் இங்கு பதியப் படுகின்றன.	நடப்பு ஆண்டுக்குரிய நடவடிக்கைகள் மட்டும் இது கொண்டிருக்கும்.

2.5.4 வருவாயின வரவுகளுக்கான செயல்முறைகள்

(1) இலாப நோக்கற்ற அமைப்புகளின் இறுதி கணக்குகளில் சந்தாவிற்கான செயல்முறைகள்

(அ) வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் செயல்முறைகள்

நடப்பு ஆண்டு, முந்தைய ஆண்டு, அடுத்த ஆண்டிற்கான சந்தா பெற்றது தனித்தனியாக கொடுக்கப்பட்டிருந்தால், நடப்பு ஆண்டிற்குரிய சந்தா கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்களை செய்த பின்பு வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் வரவுப் பக்கத்தில் காண்பிக்கப்பெறும்.

(i) நடப்பாண்டில் பெறவேண்டிய சந்தா கூட்டப்பட வேண்டும்.

(ii) முந்தைய ஆண்டில் முன்கூட்டிப்பெற்ற நடப்பாண்டிற்குரிய சந்தா கூட்டப்பட வேண்டும்.

நடப்பாண்டில் பெற்ற மொத்த சந்தா கொடுக்கப்பட்டிருந்தால், நடப்பாண்டில் பெற்ற மொத்த சந்தா பின்வரும் சரிக்கட்டுதல்களை செய்த பின்னர் வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் வரவுப் பக்கத்தில் காட்டப்பெறும்.

(i) முந்தைய ஆண்டுக்குரிய பெறவேண்டிய சந்தா நடப்பு ஆண்டில் பெறப்பட்டிருந்தால் கழிக்கப்பட வேண்டும். நடப்பாண்டிற்குரிய பெறவேண்டிய சந்தா கூட்டப்பட வேண்டும்.

(ii) முந்தைய ஆண்டில் முன்கூட்டிப்பெற்ற சந்தாவில் நடப்பாண்டிற்கு உரியது கூட்டப்பட வேண்டும். நடப்பாண்டில் முன்கூட்டிப் பெற்ற சந்தாவில் எதிர்வரும் ஆண்டிற்குரியது கழிக்கப்பட வேண்டும்.

(ஆ) இருப்புநிலைக் குறிப்பில் செயல்முறைகள்

(i) நடப்பாண்டில் பெறவேண்டிய சந்தா மற்றும் இன்னும் பெறவேண்டிய முந்தைய ஆண்டிற்குரிய சந்தா போன்றவை அவ்வாண்டின் இறுதியில் இருப்புநிலைக் குறிப்பில் சொத்துகள் பக்கத்தில் காண்பிக்கப்படும்.

(ii) நடப்பு ஆண்டில் முன்கூட்டிப் பெற்ற சந்தா அவ்வாண்டின் இருப்புநிலைக் குறிப்பில் பொறுப்புகள் பக்கத்தில் காண்பிக்கப்படும்.

ப ... நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு வ

செலவுகள்	₹	வருமானம்	₹	₹
		சந்தா	xxx	
		கழிக்க: முந்தைய ஆண்டிற்கான சந்தா	xxx	
			xxx	
		கழிக்க: எதிர்வரும் ஆண்டிற்கான சந்தா	xxx	
			xxx	
		கூட்டுக: நடப்பாண்டிற்குரிய பெறவேண்டிய சந்தா	xxx	
			xxx	
		கூட்டுக: முந்தைய ஆண்டில் முன்கூட்டிப் பெற்ற நடப்பாண்டிற்குரிய சந்தா	xxx	xxx

12th-Accountancy-Unit-02.indd 53 12/9/2021 11:10:19 PM

.....ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	சொத்துகள்	₹
எதிர்வரும் ஆண்டிற்குரிய சந்தா முன்கூட்டிப் பெற்றது	xxx	சந்தா பெற வேண்டியது: நடப்பு ஆண்டு முந்தைய ஆண்டு	 xxx xxx

எடுத்துக்காட்டு 8

பின்வரும் விவரங்களிலிருந்து 2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் காட்டப்பட வேண்டிய சந்தா தொகையினை கணக்கிடவும்.

சந்தா பெற்றது	₹
2015 – 16 – க்காக	7,500
2016 –17 – க்காக	60,000
2017 – 18 – க்காக	1,500
	69,000

2016–17 ஆம் ஆண்டில் பெற வேண்டிய சந்தா ₹ 2,400. 2016–2017 ஆம் ஆண்டிற்கான சந்தா 2015–2016 ஆம் ஆண்டில் பெற்றது ₹ 1,000.

தீர்வு

ப 2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு வ

செலவுகள்	₹	வருமானம்	₹	₹
		சந்தா பெற்றது	60,000	
		கூட்டுக: பெறவேண்டிய சந்தா (2016–17)	2,400	
		கூட்டுக: 2016–2017 ஆம் ஆண்டிற்குரிய சந்தா 2015–16 –ல் முன்கூட்டிப் பெற்றது	1,000	63,400

மாணவர் குறிப்பு

(i) 2015–16 ஆம் ஆண்டிற்ககான சந்தா ₹ 7,500 மற்றும் 2017–18 ஆம் ஆண்டிற்கான சந்தா ₹ 1,500 நடப்பாண்டிற்கு தொடர்புடையது அல்ல. எனவே, அவை வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் பதியப்படுவதில்லை.

(ii) நடப்பு ஆண்டு 2016–17–ல் பெறவேண்டிய சந்தா ₹ 2,400. இது 2016–17 ல் பெறப்பட்ட சந்தாவுடன் கூட்டப்பட வேண்டும்.

எடுத்துக்காட்டு 9

பின்வரும் விவரங்கள் ஒரு சங்கத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும்?

12th-Accountancy-Unit-02.indd 54 12/9/2021 11:10:19 PM

ப 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு வ

பெறுதல்கள்	₹	₹	செலுத்தல்கள்	₹
சந்தா				
2017-2018	5,000			
2018-2019	48,000			
2019-2020	3,000	56,000		

இச்சங்கத்தில் 300 உறுப்பினர்கள் உள்ளனர். ஒவ்வொருவரும் ஆண்டுச் சந்தாவாக ₹ 200 செலுத்துகின்றனர். இன்னும் பெறவேண்டிய 2017–18 ஆம் ஆண்டுக்கான சந்தா ₹ 1,000.

தீர்வு

ப 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு வ

செலவுகள்	₹	வருமானம்	₹	₹
		சந்தா	48,000	
		கூட்டுக: பெறவேண்டிய சந்தா (2018–2019)	12,000	60,000

2019, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	சொத்துகள்	₹	₹
முன்கூட்டிப் பெற்ற 2019–20 ஆம் ஆண்டிற்கான சந்தா	3,000	பெறவேண்டிய சந்தா		
		2017 – 2018	1,000	
		2018 – 2019	12,000	13,000

மாணவர் குறிப்பு

நடப்பாண்டிற்கான மொத்த சந்தா (2018–19) 300 x ₹ 200 = ₹ 60,000

கழிக்க: நடப்பாண்டில் பெற்றத் தொகை (2018–19) = ₹ 48,000

நடப்பாண்டில் பெறவேண்டிய தொகை (2018–19) = ₹ 12,000

எடுத்துக்காட்டு 10

ஒரு சங்கத்தின் 2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் பின்வரும் விவரங்கள் எவ்வாறு தோன்றும்? 2016–17 ல் அச்சங்கம் பெற்ற சந்தா ₹ 25,000. இதில் 2015–16 ஆம் ஆண்டுக்கான சந்தா ₹ 2,000 மற்றும் 2017–18 ஆம் ஆண்டுக்கான சந்தா ₹ 1,500 சேர்ந்துள்ளது. 2016–17 ஆம் ஆண்டிற்கான சந்தா ₹ 500 இன்னும் பெற வேண்டியுள்ளது.

12th-Accountancy-Unit-02.indd 55 12/9/2021 11:10:19 PM

தீர்வு

ப 2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு வ

செலவுகள்	₹	வருமானம்	₹	₹
		சந்தா	25,000	
		கழிக்க: 2015–16 ஆம் ஆண்டுக்கான சந்தா	2,000	
			23,000	
		கழிக்க: 2017–18 ஆம் ஆண்டுக்கான சந்தா	1,500	
			21,500	
		கூட்டுக: 2016–17 ஆம் ஆண்டிற்கான சந்தா பெற வேண்டியது	500	22,000

2017, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	சொத்துகள்	₹
2017–2018 ஆம் ஆண்டிற்கான சந்தா முன்கூட்டிப் பெற்றது	1,500	2016–2017 ஆம் ஆண்டிற்கான சந்தா பெறவேண்டியது	500

எடுத்துக்காட்டு 11

ஒரு சங்கத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து 2018 ஆம் ஆண்டு சந்தா மூலம் பெற்ற வருமானத்தைக் கணக்கிடவும்.

விவரம்	1.1.2018 ₹	31.12.2018 ₹
பெறவேண்டிய சந்தா	10,000	7,000
முன்கூட்டிப் பெற்ற சந்தா	3,000	5,000

2018 ஆம் ஆண்டில் பெற்ற சந்தா ₹ 1,50,000.

தீர்வு

2018 ஆம் ஆண்டுக்குரிய சந்தா மூலம் பெற்ற வருமானம் கணக்கிடுதல்

விவரம்	₹	₹
2018 ஆம் ஆண்டில் பெற்ற சந்தா		1,50,000
கூட்டுக: 2018 ஆம் ஆண்டிற்கான சந்தா 2017–ல் பெற்றது	3,000	
2018 ஆம் ஆண்டிற்கான சந்தா பெற வேண்டியது	7,000	10,000
		1,60,000
கழிக்க: 2017–ல் பெற வேண்டிய சந்தா	10,000	
2018–ல் முன்கூட்டிப் பெற்ற சந்தா	5,000	15,000
2018 ஆம் ஆண்டில் சந்தா மூலம் பெற்ற வருமானம்		1,45,000

12th-Accountancy-Unit-02.indd 56 12/9/2021 11:10:19 PM

எடுத்துக்காட்டு 12

பின்வரும் விவரங்களிலிருந்து 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் சந்தா எவ்வாறு தோன்றும் என்பதைக் காட்டவும்.

2018–ல் பெற்ற சந்தா ₹ 16,000–ல் 2017 ஆம் ஆண்டுக்கான ₹ 3,000 மற்றும் 2019 ஆம் ஆண்டிற்கான ₹ 5,000 அடங்கியுள்ளது. 2018 ஆம் ஆண்டில் பெறவேண்டிய சந்தா ₹ 4,000. 2017 ஆம் ஆண்டில் 2018 ஆம் ஆண்டிற்கான சந்தா முன்கூட்டிப் பெற்றது ₹ 2,000.

தீர்வு

ப 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு வ

செலவுகள்	₹	வருமானம்	₹	₹
		நடப்பாண்டில் பெற்ற சந்தா	16,000	
		கழிக்க: 2017 ஆம் ஆண்டுக்கான சந்தா பெற்றது	3,000	
			13,000	
		கழிக்க: 2019 ஆம் ஆண்டுக்கான சந்தா பெற்றது	5,000	
			8,000	
		கூட்டுக: 2018 ஆம் ஆண்டு பெற வேண்டிய சந்தா	4,000	
			12,000	
		கூட்டுக: 2018 ஆம் ஆண்டிற்கான சந்தா 2017–ஆம் ஆண்டில் முன்கூட்டிப் பெற்றது	2,000	**14,000**

(2) பயன்படுத்தக்கூடிய பொருள்களான விளையாட்டுப் பொருள்கள், எழுதுபொருள்கள், மருந்து பொருள்கள் போன்றவைகளுக்கான செயல்முறைகள்

(i) நடப்பாண்டில் பயன்படுத்தப்பட்ட விளையாட்டுப் பொருள்கள், எழுதுபொருள்கள், மருந்து பொருள்கள் போன்றவை வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் பற்றுப்பக்கத்தில் காட்டப்பட வேண்டும்.

(ii) பயன்படுத்தப் பட்டவை = தொடக்க இருப்பு + நடப்பு ஆண்டில் வாங்கியது – இறுதி இருப்பு

(iii) இறுதி சரக்கிருப்பு அவ்வாண்டின் இறுதியில் இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கத்தில் தோன்றும்.

(iv) பழைய விளையாட்டுப் பொருள்கள் ஏதேனும் விற்பனைச் செய்யப்பட்டிருந்தால் அவை வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் வரவுப்பக்கத்தில் காட்டப்படவேண்டும் அல்லது வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் பற்றுப்பக்கத்தில் குறிப்பிட்ட பயன்படுத்தப்பட்ட பொருள்களில் கழித்துக் காட்டப்பட வேண்டும்.

எடுத்துக்காட்டு 13

பின்வரும் விவரங்கள் ஒரு விளையாட்டு மன்றத்தின் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும்?

விவரம்	₹
விளையாட்டுப் பொருள்கள் இருப்பு (01.04.2018)	3,000
நடப்பாண்டில் வாங்கிய விளையாட்டுப் பொருள்கள்	9,000
நடப்பாண்டில் விற்பனை செய்த பழைய விளையாட்டுப் பொருள்கள்	500
விளையாட்டுப் பொருள்கள் இருப்பு (31.03.2019)	4,000

12th-Accountancy-Unit-02.indd 57 12/9/2021 11:10:19 PM

தீர்வு

ப 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு வ

செலவுகள்	₹	₹	வருமானம்	₹
பயன்படுத்தப்பட்ட விளையாட்டுப் பொருள்கள்:			பழைய விளையாட்டுப்	
தொடக்க இருப்பு	3,000		பொருள்கள் விற்றது	500
கூட்டுக: நடப்பாண்டில் வாங்கியது	9,000			
	12,000			
கழிக்க: இறுதி இருப்பு	4,000	8,000		

2019, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹	₹
			விளையாட்டுப் பொருள்கள் இருப்பு		4,000

எடுத்துக்காட்டு 14

பின்வரும் விவரங்களிலிருந்து 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டிய அச்சு மற்றும் எழுதுபொருள் செலவைக் கணக்கிட்டு அவை 2018, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பில் எவ்வாறு தோன்றும் என்பதையும் குறிப்பிடவும்.

எழுதுபொருள்களுக்காக கொடுத்த தொகை (2017–2018)	₹ 1,500
எழுதுபொருள்கள் இருப்பு (ஏப்ரல் 1, 2017)	₹ 300
எழுதுபொருள்கள் இருப்பு (மார்ச் 31, 2018)	₹ 200

தீர்வு:

ப 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு வ

செலவுகள்	₹	₹	வருமானம்	₹	₹
எழுதுபொருள்கள் பயன்படுத்தியது:					
தொடக்க இருப்பு	300				
கூட்டுக: கொள்முதல்	1,500				
	1,800				
கழிக்க: இறுதி இருப்பு	200	1,600			

2018, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	சொத்துகள்	₹
		எழுதுபொருள்கள் இருப்பு	200

12th-Accountancy-Unit-02.indd 58 12/9/2021 11:10:19 PM

(3) குறிப்பிட்ட நிதி சார்ந்த வருமானம் மற்றும் செலவுகள் குறித்த செயல்முறைகள்

(i) குறிப்பிட்ட நிதியானது பொறுப்புகள் பக்கத்திலும் மற்றும் குறிப்பிட்ட நிதிக்கான முதலீட்டுக் கணக்கு இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கத்திலும் காட்டப்படும்.

(ii) குறிப்பிட்ட நிதி கணக்கு தொடர்பான வருவாய் மற்றும் செலவுகள் வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் பதிவு செய்யக்கூடாது.

(iii) குறிப்பிட்ட நிதி தொடர்பான வருவாய் அவ்வாண்டு இறுதியில் தயாரிக்கப்படும் இருப்புநிலைக் குறிப்பில், குறிப்பிட்ட நிதிக் கணக்கில் கூட்டப்பட வேண்டும் மற்றும் குறிப்பிட்ட நிதி தொடர்பான செலவுகள் அந்நிதிக் கணக்கிலிருந்து கழிக்கப்பட வேண்டும்.

(iv) குறிப்பிட்ட நிதிக்கான முதலீடு மீதான வட்டி நடப்பாண்டில் பெற வேண்டியிருந்தால், அது குறிப்பிட்ட நிதிக் கணக்குடன் கூட்டப்பட்டு இருப்புநிலைக் குறிப்பில் பொறுப்புகள் பக்கத்திலும் மற்றும் சொத்துகள் பக்கத்தில் பெற வேண்டிய முதலீடு மீது வட்டி என்றும் காட்டப்பட வேண்டும்.

எடுத்துக்காட்டு 15

பின்வரும் விவரங்கள் ஒரு சங்கத்தின் 2017–2018 ஆம் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும்?

விவரம்	₹
1.4.2017 அன்று பரிசு நிதி	60,000
1.4.2017 அன்று பரிசு நிதிக்கான முதலீடு	60,000
பரிசு நிதி முதலீடு மீதான வட்டிப் பெற்றது	6,000
பரிசுகள் வழங்கியது	8,000
பரிசு நிதிக்காக நன்கொடைப் பெற்றது	12,000

தீர்வு

2018, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
பரிசு நிதி	60,000		பரிசு நிதி முதலீடுகள்	60,000
கூட்டுக : பரிசு நிதிக்கான முதலீடு மீதான வட்டிப் பெற்றது	6,000			
கூட்டுக: பரிசு நிதிக்கான நன்கொடை	12,000			
	78,000			
கழிக்க: பரிசுகள் வழங்கியது	8,000	70,000		

2.6 இருப்புநிலைக் குறிப்பு

இருப்புநிலைக் குறிப்பு ஒரு அமைப்பின் நிதிநிலையை வெளிப்படுத்தும் அறிக்கை ஆகும். இலாப நோக்கற்ற அமைப்புகளுக்கான இருப்புநிலைக் குறிப்பு தயாரிப்பது பெரும்பாலும் வியாபார அமைப்புகளுக்கு தயாரிப்பது போன்றதாகும். கணக்காண்டின் இறுதிநாளில் உள்ள சொத்துகள் மற்றும் பொறுப்புகள் இருப்புநிலைக் குறிப்பில் பதியப்படுகின்றன. (பொறுப்புகள் இருப்புநிலைக் குறிப்பின் இடதுபக்கம் மற்றும் சொத்துகள் இருப்புநிலைக் குறிப்பின் வலது பக்கம்)

12th-Accountancy-Unit-02.indd 59 12/9/2021 11:10:19 PM

இலாப நோக்கற்ற அமைப்புகளின் இருப்புநிலைக் குறிப்பு தயாரிப்பதில் உள்ள முக்கிய குறிப்புகள்

(அ) பொது நிதி அல்லது குவிந்த நிதி என்றழைக்கப்படும் முதல் நிதி பொறுப்புகள் பக்கம் பதிவு செய்யப்படுகின்றது. வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் உபரி இருப்புநிலைக் குறிப்பில் முதல் நிதியுடன் கூட்டப்படுகிறது மற்றும் பற்றாக்குறை முதல் நிதியிலிருந்து கழிக்கப்படுகிறது.

மாணவர் குறிப்பு

அமைப்பின் முதல் நிதி வினாவில் கொடுக்கப்படவில்லை எனில் தொடக்க முதல் நிதியினைக் கண்டறிய தொடக்க இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கப்பட வேண்டும். ஆண்டு தொடக்கத்தில் உள்ள மொத்த சொத்துகளுக்கும் மொத்த பொறுப்புகளுக்கும் இடையே உள்ள வேறுபாடு அவ்வாண்டின் தொடக்க நிதி ஆகும்.

தொடக்க முதல் நிதி = தொடக்கத்தில் உள்ள சொத்துகள் – தொடக்கத்தில் உள்ள பொறுப்புகள்

எடுத்துக்காட்டு 16

கரூர் சமூக மன்றத்தின் 2018 மார்ச் 31 ஆம் நாளைய முதல் நிதியினைக் கணக்கிடவும்.

விவரம் (31.03.2018)	₹
அறைகலன்	50,000
கட்டடம்	40,000
2017–18 ஆம் ஆண்டிற்கான சந்தா பெறவேண்டியது	10,000
2018–19 ஆம் ஆண்டிற்கான சந்தா முன்கூட்டிப் பெற்றது	5,000
கடன் வாங்கியது	10,000
முதலீடுகள்	20,000
கைரொக்கம்	4,000
வங்கி ரொக்கம்	6,000

தீர்வு

2018, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	சொத்துகள்	₹
முதல் நிதி	**1,15,000**	கட்டடம்	40,000
(இருப்புக் கட்டும் தொகை)		அறைகலன்	50,000
கடன் வாங்கியது	10,000	முதலீடுகள்	20,000
சந்தா முன்கூட்டிப் பெற்றது	5,000	சந்தா பெறவேண்டியது	10,000
		வங்கி ரொக்கம்	6,000
		கைரொக்கம்	4,000
	1,30,000		1,30,000

(ஆ) கணக்காண்டின் இறுதியில் இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கும்போது, இறுதி ரொக்க மற்றும் வங்கி இருப்பு, இருப்புநிலைக் குறிப்பில் சொத்துகள் பக்கம் பதியப்பட வேண்டும். வங்கி மேல்வரைப்பற்று இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புகள் பக்கம் பதியப்பட வேண்டும்.

12th-Accountancy-Unit-02.indd 60 12/9/2021 11:10:20 PM

(இ) முந்தைய ஆண்டின் இருப்புநிலைக் குறிப்பில் உள்ள சொத்துகள், அதாவது தொடக்க இருப்புநிலைக் குறிப்பில் உள்ள சொத்துகள் நடப்பு ஆண்டின் இருப்புநிலைக் குறிப்பில் சொத்துகள் பக்கம் கொண்டுவர வேண்டும். மேலும், அவ்வாண்டில் ஏதாவது மாற்றம் மேற்கொள்ளப் பட்டிருந்தால் அவற்றிற்கான சரிக்கட்டுதல்கள் அச்சொத்துகளில் செய்யப்பட வேண்டும். அவ்வாறு சொத்துகளை பதிவு செய்யும்போது, வாங்கப்பட்ட கூடுதல் சொத்துகள் கூட்டப்பட வேண்டும் மற்றும் விற்கப்பட்ட சொத்துகள் கழிக்கப்பட வேண்டும். அச்சொத்துகள் மீதான தேய்மானமும் சரிக்கட்டப்பட வேண்டும்.

மாணவர் குறிப்பு: புதிய சொத்துகள் வாங்கியது அல்லது சொத்துகள் விற்றது குறித்து பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கினைப் பார்த்து கண்டறிய வேண்டும்.

(ஈ) நடப்பாண்டின் இறுதியில் உள்ள முன்கூட்டிச் செலுத்திய செலவுகள், பெற வேண்டிய வருமானங்கள் போன்றவை இருப்புநிலைக் குறிப்பில் சொத்துகள் பக்கம் பதியப்பட வேண்டும்.

(உ) நடப்பாண்டின் இறுதியில் உள்ள கொடுபட வேண்டிய செலவுகள் மற்றும் நடப்பாண்டில் முன்கூட்டிப் பெற்ற வருமானம் இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புகள் பக்கம் பதியப்பட வேண்டும்.

(ஊ) ஏதேனும் குறிப்பிட்ட நிதி அதாவது தொடர் விளையாட்டுப் போட்டி நிதி, பரிசுநிதி போன்றவை இருந்தால் அவை இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புகள் பக்கம் தனியாக காண்பிக்கப்பட வேண்டும். நிதிக்கான வருமானம் ஏதாவது இருந்தால் அவை நிதிக் கணக்குடன் கூட்டப்பட வேண்டும் மற்றும் நிதித் தொடர்பான செலவுகள் இருப்புநிலைக் குறிப்பில் நிதிக் கணக்கிலிருந்து கழிக்கப்பட வேண்டும்.

(எ) ஏதேனும் ஒரு குறிப்பிட்ட நிதிக்கான முதலீடு இருந்தால், இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கம் பதியப்பட வேண்டும்.



பெறப்பட்ட பல்வேறு பேரேட்டுக் கணக்குகளின் இருப்புகளிலிருந்து இலாப நோக்கற்ற அமைப்புகளின் இருப்பாய்வினை தயாரிக்க முடியும். பற்று இருப்புகளின் மொத்தம் வரவு இருப்புகளின் மொத்தத்திற்கு சமமாக இருக்க வேண்டும். செலவுகள், நட்டங்கள் மற்றும் சொத்துகள் பற்றிருப்பைக் கொண்டிருக்கும். ஆதாயம், வருமானம் மற்றும் பொறுப்புகள் வரவிருப்பினைக் கொண்டிருக்கும்.

விரிவான கணக்குகள்

எடுத்துக்காட்டு 17

நண்பர்கள் கால்பந்து மன்றத்தின் 31.03.2017 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பின்வரும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து, 31.03.2017 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

நண்பர்கள் கால்பந்து மன்றத்தின் ஏடுகளில்

ப 2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு வ

பெறுதல்கள்	₹	₹	செலுத்தல்கள்	₹	₹
இருப்பு கீ/கொ			அறைகலன்		7,000
ரொக்கம்	1,000		விளையாட்டுப் பொருள்கள் வாங்கியது		800
வங்கி	10,000	11,000	சிறப்பு விருந்துக்கான செலவுகள்		1,500
சந்தா		5,000	மின்கட்டணம்		900
உயில்கொடை		6,000	இருப்பு கீ/இ		
சிறப்பு விருந்து			கைரொக்கம்	1,800	
கட்டண வசூல்		2,000	வங்கி ரொக்கம்	12,000	13,800
		24,000			24,000

12th-Accountancy-Unit-02.indd 61 12/9/2021 11:10:20 PM

கூடுதல் தகவல்கள்:

(i) 2016, ஏப்ரல் 1 அன்று மன்றத்தில் இருந்த அறைகலன் ₹ 12,000. அறைகலன் மீதான தேய்மானம் கணக்கில் கொள்ள வேண்டியதில்லை.

(ii) 2016–2017–ல் பெற வேண்டிய சந்தா ₹ 600.

(iii) 31.3.2017 அன்று விளையாட்டுப் பொருள்கள் இருப்பு ₹ 100

(iv) 2016, ஏப்ரல் 1 அன்றைய முதல் நிதி ₹ 23,000.

தீர்வு

நண்பர்கள் கால்பந்து மன்றத்தின் ஏடுகளில்

ப 2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு வ

செலவுகள்	₹	₹	வருமானம்	₹	₹
பயன்படுத்திய விளையாட்டுப் பொருள்கள்			சந்தா	5,000	
கொள்முதல்	800		கூட்டுக: பெற வேண்டியது (2016–17)	600	5,600
கழிக்க: இறுதிச் சரக்கிருப்பு	100	700	சிறப்பு விருந்து கட்டண வசூல்		2,000
சிறப்பு விருந்துக்கான செலவுகள்		1,500			
மின் கட்டணம்		900			
உபரி (செலவுகளைக் காட்டிலும் மிகுதியான வருமானம்)		**4,500**			
		7,600			7,600

2017, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹	₹
முதல்நிதி	23,000		அறைகலன்	12,000	
கூட்டுக: செலவுகளைக் காட்டிலும் மிகுதியான வருமானம் (உபரி)	4,500	27,500	கூட்டுக: கூடுதல் அறைகலன்	7,000	19,000
உயில்கொடை		6,000	விளையாட்டுப் பொருள்கள் இருப்பு		100
			பெறவேண்டிய சந்தா (2016–2017)		600
			வங்கி ரொக்கம்		12,000
			கைரொக்கம்		1,800
		33,500			33,500

எடுத்துக்காட்டு 18

சேலம் பொழுதுபோக்கு மன்றத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு பின்வருமாறு.

12th-Accountancy-Unit-02.indd 62 12/9/2021 11:10:20 PM

சேலம் பொழுதுபோக்கு மன்றம்

ப 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு வ

பெறுதல்கள்	₹	₹	செலுத்தல்கள்	₹
இருப்பு கீ/கொ			அறைகலன்	15,000
கைரொக்கம்		9,000	எழுதுபொருள்கள்	2,400
சந்தா			முதலீடு	12,500
2018 – 2019	12,500		அஞ்சல் செலவுகள்	1,000
2019 – 2020	400	12,900	இருப்பு கீ/இ	
பொழுதுபோக்கு மூலமாக பெற்ற வருமானம்		12,000	கைரொக்கம்	3,500
பல்வகை வரவுகள்		500		
		34,400		34,400

கூடுதல் தகவல்கள்:

(i) மன்றத்தில் 450 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரும் ஆண்டு சந்தா ₹ 30 செலுத்துகின்றனர்.

(ii) எழுதுபொருள்கள் இருப்பு 2018, மார்ச் 31–ல் ₹ 300 மற்றும் 2019, மார்ச் 31–ல் ₹ 500.

(iii) 2018, ஏப்ரல் 1 அன்று முதல்நிதி ₹ 9,300

2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான வருவாய் மற்றும் செலவினக் கணக்கையும், அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயாரிக்கவும்.

தீர்வு

2018–2019 ஆம் ஆண்டிற்கான சந்தா தொகை கணக்கிடுதல்:

	₹
நடப்பு ஆண்டிற்கான சந்தா (450 x ₹ 30)	13,500
நடப்பாண்டில் பெற்ற சந்தா	12,500
நடப்பாண்டில் பெறவேண்டிய சந்தா (₹13,500 – ₹12,500)	1,000

சேலம் பொழுதுபோக்கு மன்றத்தின் ஏடுகளில்

ப 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு வ

செலவுகள்	₹	₹	வருமானம்	₹	₹
எழுதுபொருள்கள்	2,400		சந்தா	12,500	
கூட்டுக: தொடக்க இருப்பு	300		கூட்டுக: சந்தா பெற		
	2,700		வேண்டியது (2018–19)	1,000	
கழிக்க: இறுதி இருப்பு	500	2,200	(450 x ₹ 30)		13,500
அஞ்சல் செலவுகள்		1,000	பொழுதுபோக்கு மூலம்		
உபரி (செலவுகளைக் காட்டிலும்			பெற்ற வருமானம்		12,000
மிகுதியான வருமானம்)		**22,800**	பல்வகை வரவுகள்		500
		26,000			26,000

12th-Accountancy-Unit-02.indd 63 12/9/2021 11:10:20 PM

2019, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல் நிதி	9,300		அறைகலன்	15,000
கூட்டுக : செலவுகளைக் காட்டிலும்			முதலீடு	12,500
மிகுதியான வருமானம் (உபரி)	22,800	32,100	பெறவேண்டிய சந்தா	
முன்கூட்டிப் பெற்ற சந்தா		400	(2018–2019)	1,000
			எழுதுபொருள்கள் இருப்பு	500
			கைரொக்கம்	3,500
		32,500		32,500

எடுத்துக்காட்டு 19

கோயம்புத்தூர் கிரிக்கெட் மன்றத்தின் 2016, மார்ச் 31–ல் முடிவடையும் ஆண்டிற்கான பின்வரும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து, 2016, மார்ச் 31–ல் முடிவடையும் ஆண்டிற்கான வருவாய் மற்றும் செலவினக் கணக்கையும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்யவும்.

கோயம்புத்தூர் கிரிக்கெட் மன்றம்

ப 2016, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரியபெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு வ

பெறுதல்கள்	₹	செலுத்தல்கள்	₹
இருப்பு கீ/கொ		பராமரிப்புச் செலவுகள்	5,000
வங்கி ரொக்கம்	8,000	அறைகலன்	15,000
சந்தா	11,000	தொடர் விளையாட்டுப் போட்டிச் செலவுகள்	1,400
பழைய மட்டைகள் மற்றும் பந்துகள்		செயலாளர் மதிப்பூதியம்	4,500
விற்றது	100	மட்டைகள் மற்றும் பந்துகள்	7,400
தொடர் விளையாட்டுப் போட்டிக்கான சந்தா	2,000	இருப்பு கீ/இ	
உயில்கொடை	20,000	வங்கி ரொக்கம்	7,800
	41,100		41,100

கூடுதல் தகவல்கள்:

2015, ஏப்ரல் 1 அன்று மன்றத்தில் பந்துகள் மற்றும் மட்டைகள் இருப்பு ₹ 3,000; முன்கூட்டிப் பெற்ற சந்தா ₹ 500. தொடர் விளையாட்டுப் போட்டியின் உபரித்தொகை நிரந்தர அரங்கத்திற்கான ஒதுக்காக உருவாக்கப்பட வேண்டும். 31.3.2016 அன்று பெறவேண்டிய சந்தா ₹ 2,000. 31.3.2016–ல் மட்டைகள் மற்றும் பந்துகள் இருப்பு ₹ 1,000.

12th-Accountancy-Unit-02.indd 64 12/9/2021 11:10:20 PM

தீர்வு

மாணவர் குறிப்பு

தொடக்க முதல் நிதியினைக் கண்டறிய தொடக்க இருப்புநிலைக் குறிப்பினைத் தயார் செய்ய வேண்டும்.

கோயம்புத்தூர் கிரிக்கெட் மன்றத்தின் ஏடுகளில்
2015, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	சொத்துகள்	₹
முதல்நிதி	**10,500**	பந்து மற்றும் மட்டைகள் இருப்பு	3,000
(இருப்புக் கட்டும் தொகை)		வங்கி ரொக்கம்	8,000
முன்கூட்டிப் பெற்ற சந்தா	500		
	11,000		11,000

ப 2016, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு வ

செலவுகள்	₹	₹	வருமானம்	₹	₹
பராமரிப்புச் செலவுகள்		5,000	சந்தா	11,000	
செயலாளர் மதிப்பூதியம்		4,500	கூட்டுக: 2015 –16 ஆம் ஆண்டிற்குரிய		
மட்டைகள் மற்றும் பந்துகள்	7,400		சந்தா 2014–15 ல் முன்கூட்டிப் பெற்றது	500	
கூட்டுக: தொடக்க இருப்பு	3,000			11,500	
	10,400		கூட்டுக: நிலுவையில் உள்ள சந்தா (2015–16)	2,000	13,500
கழிக்க: இறுதி இருப்பு	1,000	9,400	பழைய மட்டைகள், பந்துகள் விற்றது		100
			வருமானத்தைக் காட்டிலும் மிகுதியானச்		
			செலவுகள் (பற்றாக்குறை)		**5,300**
		18,900			18,900

2016, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல்நிதி	10,500		அறைகலன்	15,000
கழிக்க: வருமானத்தைக் காட்டிலும்			பந்துகள் மற்றும் மட்டைகள் இருப்பு	1,000
மிகுதியானச் செலவுகள் (பற்றாக்குறை)	5,300	5,200	பெறவேண்டிய சந்தா	2,000
விளையாட்டு அரங்க நிதிக்கான ஒதுக்கு:			வங்கி ரொக்கம்	7,800
தொடர் விளையாட்டுப் போட்டிக்கான சந்தா	2,000			
கழிக்க: தொடர் விளையாட்டுப் போட்டிச் செலவுகள்	1,400	600		
உயில்கொடை		20,000		
		25,800		25,800

12th-Accountancy-Unit-02.indd 65 12/9/2021 11:10:20 PM

எடுத்துக்காட்டு 20

டில்லி இலக்கிய மன்றத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு பின்வருமாறு.

டில்லி இலக்கிய மன்றம்

ப 2016, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு வ

பெறுதல்கள்	₹	செலுத்தல்கள்	₹
இருப்பு கீ/கொ		வாடகையும் வீதமும்	21,000
கைரொக்கம்	3,200	விரிவுரை கட்டணம்	4,500
நுழைவுக் கட்டணம்	2,300	பல்வகைச் செலவுகள்	7,200
சந்தா	46,000	நிலை வைப்பு	40,000
ஆயுள் உறுப்பினர் கட்டணம்	2,500	இருப்பு கீ/இ	
நிலை வைப்பின் மீதான வட்டி பெற்றது	500	கைரொக்கம்	4,300
அறைகலன் விற்றது (1.4.2018)	22,500		
(ஏட்டு மதிப்பு ₹ 25,000)			
	77,000		77,000

கூடுதல் தகவல்கள்:

(அ) ஆண்டு தொடக்கத்தில் மன்றத்தில் இருந்த நூல்கள் மதிப்பு ₹ 20,000 மற்றும் அறைகலன் மதிப்பு ₹ 40,000.

(ஆ) நடப்பாண்டில் முன்கூட்டிப் பெற்ற சந்தா ₹ 1,000.

சங்கத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கையும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்யவும்.

தீர்வு

மாணவர் குறிப்பு

தொடக்க முதல் நிதியினைக் கண்டறிய தொடக்க இருப்புநிலைக் குறிப்பினைத் தயாரிக்க வேண்டும்.

டில்லி இலக்கிய மன்றத்தின் ஏடுகளில்
2018, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	சொத்துகள்	₹
முதல்நிதி	**63,200**	அறைகலன்	40,000
(இருப்புக் கட்டும் தொகை)		நூல்கள்	20,000
		கைரொக்கம்	3,200
	63,200		63,200

12th-Accountancy-Unit-02.indd 66 12/9/2021 11:10:20 PM

ப 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு வ

செலவுகள்	₹	வருமானம்	₹	₹
வாடகையும் வீதமும்	21,000	நுழைவுக் கட்டணம்		2,300
விரிவுரை கட்டணம்	4,500	சந்தா	46,000	
பல்வகைச் செலவுகள்	7,200	கழிக்க: நடப்பு ஆண்டில்		
அறைகலன் விற்றதில் ஏற்பட்ட நட்டம்	2,500	முன்கூட்டிப் பெற்றது	1,000	45,000
(25,000–22,500)		நிலைவைப்பு மீதான		
செலவுகளைக் காட்டிலும்		வட்டிப் பெற்றது		500
மிகுதியான வருமானம் (உபரி)	**12,600**			
	47,800			47,800

2019, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹	₹
முதல்நிதி	63,200		அறைகலன்	40,000	
கூட்டுக: செலவுகளைக் காட்டிலும்			கழிக்க: விற்ற		
மிகுதியான வருமானம் (உபரி)	12,600	75,800	அறைகலனின் ஏட்டு மதிப்பு	25,000	15,000
ஆயுள் உறுப்பினர் கட்டணம்		2,500	நூல்கள்		20,000
முன்கூட்டிப் பெற்ற சந்தா		1,000	நிலை வைப்பு		40,000
			கைரொக்கம்		4,300
		79,300			79,300

எடுத்துக்காட்டு 21

மதுரை மாநகர மன்றத்தின் 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு பின்வருமாறு.

மதுரை இலக்கிய மன்றம்

ப 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு வ

பெறுதல்கள்	₹	₹	செலுத்தல்கள்	₹	₹
இருப்பு கீ/கொ			மைதான பராமரிப்பு		16,500
ரொக்கம்	500		விளையாட்டுப் போட்டிச் செலவுகள்		19,000
வங்கி	7,000	7,500	பல்வகைச் செலவுகள்		11,000
சந்தா (2016–17 ஆம் ஆண்டிற்கான			அறைகலன்		20,000
₹ 4,000 உட்பட)		30,000	இருப்பு கீ/இ		
உயில்கொடை		9,000	கைரொக்கம்	1,500	
அரங்க வாடகை		10,000	வங்கி ரொக்கம்	11,000	12,500
விளையாட்டுப் போட்டி நிதி வரவுகள்		22,500			
		79,000			79,000

12th-Accountancy-Unit-02.indd 67 12/9/2021 11:10:20 PM

கூடுதல் தகவல்கள்:

2017, ஏப்ரல் 1 அன்று மன்றத்தின் முதலீடு ₹ 40,000 ஆக இருந்தது. மன்றத்தின் விளையாட்டுப் போட்டி நிதிக் கணக்கின் வரவிருப்பில் ₹ 30,000 இருந்தது. 2017, மார்ச் 31–ல் பெறவேண்டிய சந்தா ₹ 4,000 மற்றும் 2018, மார்ச் 31 அன்று பெறவேண்டிய சந்தா ₹ 4,500. இறுதிக் கணக்குகளைத் தயார் செய்யவும்.

தீர்வு

மாணவர் குறிப்பு

தொடக்க முதல் நிதியினைக் கண்டறிய தொடக்க இருப்புநிலைக் குறிப்பினைத் தயாரிக்க வேண்டும்.

மதுரை மாநகர மன்றத்தின் ஏடுகளில்
2017, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	சொத்துகள்	₹
முதல் நிதி		முதலீடு	40,000
(இருப்புக் கட்டும் தொகை)	**21,500**	பெறவேண்டிய சந்தா	4,000
விளையாட்டுப் போட்டி நிதி	30,000	வங்கி ரொக்கம்	7,000
		கைரொக்கம்	500
	51,500		51,500

ப 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு வ

செலவுகள்	₹	வருமானம்	₹	₹
மைதான பராமரிப்பு	16,500	சந்தா	30,000	
பல்வகைச் செலவுகள்	11,000	கழிக்க: 2016–2017 ஆம் ஆண்டிற்காகப் பெற்றது	4,000	
செலவுகளைக் காட்டிலும்			26,000	
மிகுதியான வருமானம் (உபரி)	**13,000**	கூட்டுக: நடப்பு ஆண்டில் பெற வேண்டியது	4,500	30,500
		அரங்க வாடகை		10,000
	40,500			40,500

2018, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல்நிதி	21,500		அறைகலன்	20,000
கூட்டுக: செலவுகளைக் காட்டிலும்			முதலீடு	40,000
மிகுதியான வருமானம் (உபரி)	13,000	34,500	சந்தா பெற வேண்டியது	4,500
உயில்கொடை		9,000	வங்கி ரொக்கம்	11,000
விளையாட்டுப் போட்டி நிதி	30,000		கைரொக்கம்	1,500
கூட்டுக: விளையாட்டுப் போட்டி நிதி வரவுகள்	22,500			
	52,500			
கழிக்க: விளையாட்டுப் போட்டி நிதிச் செலவுகள்	19,000	33,500		
		77,000		77,000

12th-Accountancy-Unit-02.indd 68 12/9/2021 11:10:21 PM

நினைவில் கொள்ள வேண்டியவை

- இலாப நோக்கற்ற அமைப்புகள் அவற்றின் உறுப்பினர்களுக்கு அல்லது சமுதாயத்திற்கு சேவைகள் வழங்குவதற்காக பெரும்பாலும் இயங்குகின்றன.
- இலாப நோக்கற்ற அமைப்புகளின் மூன்று முதன்மைக் கணக்கியல் அறிக்கைகள் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு, வருவாய் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு ஆகும்.
- பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு என்பது ரொக்க ஏட்டின் தொகுப்பாகும். இதில் அந்த கணக்காண்டில் மேற்கொண்ட அனைத்து ரொக்கப் பெறுதல்கள் மற்றும் ரொக்கச் செலுத்தல்கள், முதலின மற்றும் வருவாயின வேறுபாடுகள் இன்றி முந்தைய ஆண்டு அல்லது நடப்பு ஆண்டு அல்லது எதிர்வரும் ஆண்டு என எக்காலத்தைச் சார்ந்திருந்தாலும் பதியப்படும்.
- வருவாய் மற்றும் செலவினக் கணக்கு, ஒரு குறிப்பிட்ட கணக்காண்டில் நிறுவனத்தின் அனைத்துச் செயல்பாடுகளின் விளைவை வெளிப்படுத்தும் உபரி (வருவாயினச் செலவுகளைக் காட்டிலும் மிகுதியான வருவாயின வரவுகள்) மற்றும் பற்றாக்குறை (வருவாயின வரவுகளைக் காட்டிலும் மிகுதியான வருவாயினச் செலவுகள்) கண்டறிய தயாரிக்கப்படுகிறது.
- சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் தொடக்க இருப்புகளை ஒப்பிடுவதன் மூலம் தொடக்க முதல் கண்டறியப்படுகிறது.
- இருப்புநிலைக் குறிப்பு கணக்காண்டின் இறுதியில் அந்நாளின் நிதி நிலையை அறிந்து கொள்ளத் தயாரிக்கப்படுகிறது. இது பொறுப்புகள் பக்கத்தில் முதல் நிதி அல்லது குவிந்த நிதி, சிறப்பு நோக்க நிதி, நீண்டகால பொறுப்புகள் மற்றும் நடப்புப் பொறுப்புகளையும், சொத்துகள் பக்கத்தில் நிலைச் சொத்துகள் மற்றும் நடப்புச் சொத்துகளையும் உள்ளடக்கியது.

சுய ஆய்வு வினாக்கள்

3LB7O

I சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு ஒரு

(அ) பெயரளவு கணக்கு (ஆ) சொத்து கணக்கு

(இ) ஆள்சார் கணக்கு (ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

2. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கில் பதிவு செய்யப்படும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள்

(அ) வருவாயினத் தன்மை மட்டும் உடையது (ஆ) முதலினத் தன்மை மட்டும் உடையது

(இ) வருவாயினம் மற்றும் முதலினத் தன்மை உடையது (ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

3. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கின் இருப்பு காட்டுவது

(அ) அந்த ஆண்டில் ஏற்பட்ட நட்டம்

(ஆ) அந்த ஆண்டின் செலவுகளைக் காட்டிலும் மிகுதியான வருமானம்

(இ) அந்த ஆண்டின் மொத்த ரொக்கச் செலுத்தல்கள்

(ஈ) அந்நாளைய ரொக்க மற்றும் வங்கி இருப்பு

4. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு ஒரு

(அ) பெயரளவுக் கணக்கு (ஆ) சொத்து கணக்கு

(இ) ஆள்சார் கணக்கு (ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

5. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு தயாரிக்கப்படுவதன் மூலம் கண்டறியப்படுவது

(அ) இலாபம் அல்லது நட்டம் (ஆ) ரொக்கம் மற்றும் வங்கி இருப்பு

(இ) உபரி அல்லது பற்றாக்குறை (ஈ) நிதிநிலை

12th-Accountancy-Unit-02.indd 69 12/9/2021 11:10:21 PM

6. பின்வருவனவற்றில் எது வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் பதியப்படுவதில்லை?

(அ) பழைய செய்தித்தாள்கள் விற்றது (ஆ) சொத்து விற்பனை மீதான நட்டம்

(இ) செயலாளருக்கு வழங்கிய மதிப்பூதியம் (ஈ) அறைகலன் விற்ற தொகை

7. நடப்பாண்டில் பெறவேண்டிய சந்தா இன்னும் பெறாதது

(அ) ஒரு சொத்து (ஆ) ஒரு பொறுப்பு

(இ) ஒரு செலவு (ஈ) தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று

8. உயில்கொடை ஒரு

(அ) வருவாயினச் செலவு (ஆ) முதலினச் செலவு

(இ) வருவாயின வரவு (ஈ) முதலின வரவு

9. ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக பெற்ற நன்கொடை

(அ) வருவாயின வரவு (ஆ) முதலின வரவு

(இ) வருவாயினச் செலவு (ஈ) முதலினச் செலவு

10. ஒரு மன்றத்தில் உள்ள 500 உறுப்பினர்கள், ஆண்டு சந்தாவாக ₹ 100 செலுத்துகின்றனர். நடப்பாண்டில் கூடியுள்ள சந்தா இன்னமும் பெறப்படாதது ₹ 200; முன்கூட்டிப் பெற்ற சந்தா ₹ 300. வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் காட்டப்பட வேண்டிய சந்தா தொகையினைக் கண்டறியவும்.

(அ) ₹ 50,000 (ஆ) ₹ 50,200 (இ) ₹ 49,900 (ஈ) ₹ 49,800

விடை

1. (ஆ)	2. (இ)	3. (ஈ)	4. (அ)	5. (இ)	6. (ஈ)	7. (அ)	8. (ஈ)	9. (ஆ)	10. (அ)

II மிகக் குறுகிய வினாக்கள்

1. இலாப நோக்கற்ற அமைப்பின் பொருள் தரவும்.
2. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு என்றால் என்ன?
3. உயில்கொடை என்றால் என்ன?
4. ஆயுள் உறுப்பினர் கட்டணம் – சிறு குறிப்பு தரவும்.
5. இலாப நோக்கற்ற அமைப்பின் முதலின வரவுகளில் ஏதேனும் நான்கினைத் தரவும்.
6. இலாப நோக்கற்ற அமைப்பின் வருவாயின வரவுகளில் ஏதேனும் நான்கினைத் தரவும்.

III குறுகிய வினாக்கள்

1. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு என்றால் என்ன?
2. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கும், வருவாய் மற்றும் செலவினக் கணக்கிற்கும் உள்ள வேறுபாடுகளைத் தரவும்.
3. இலாப நோக்கற்ற அமைப்பின் இறுதிக் கணக்குகளில் ஆண்டுச் சந்தா எவ்வாறு கையாளப்படுகிறது?
4. இலாப நோக்கற்ற அமைப்பின் இறுதி கணக்குகளில் பின்வரும் விவரங்கள் எவ்வாறு கையாளப்படுகின்றன?

(அ) விளையாட்டுப் பொருள்கள் விற்பனை (ஆ) ஆயுள் உறுப்பினர் கட்டணம்

(இ) தொடர் விளையாட்டுப் போட்டி நிதி

12th-Accountancy-Unit-02.indd 70 12/9/2021 11:10:21 PM

IV பயிற்சி வினாக்கள்

1. கீழே கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து குறிஞ்சி விளையாட்டு மன்றத்தின் 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.

விவரம்	₹	விவரம்	₹
கைரொக்கம் (1.1.2018)	4,000	அச்சுக்கட்டணம் செலுத்தியது	2,500
சம்பளம் கொடுத்தது	3,000	பாதுகாப்பு பெட்டக வாடகை பெற்றது	1,000
ஆயுள் உறுப்பினர் கட்டணம் பெற்றது	10,000	தொடர் விளையாட்டுப் போட்டி வரவுகள்	14,000
சந்தா பெற்றது	15,000	தொடர் விளையாட்டுப் போட்டிச் செலவுகள்	10,500
வாடகை பெற்றது	2,000	முதலீடுகள் வாங்கியது	25,000

(விடை: ரொக்க இருப்பு : ₹ 5,000)

2. கீழே கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து கோயம்புத்தூர் கிரிக்கெட் மன்றத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.

விவரம்	₹	₹	விவரம்	₹
வங்கி மேல்வரைப்பற்று (1.4.2018)		6,000	மதிப்பூதியம் செலுத்தியது	2,800
கைரொக்கம் (1.4.2018)		1,000	நீர் மற்றும் மின்சாரக் கட்டணம்	700
மைதான பராமரிப்பிற்காக			விளையாட்டுப் போட்டிச் செலவுகள்	2,600
கூலி செலுத்தியது		2,000	விளையாட்டுப் பொருள்கள் வாங்கியது	1,900
சந்தா பெற்றது: முந்தைய ஆண்டு	500		விளையாட்டுப் போட்டி நிதி நிதி வரவுகள்	5,200
நடப்பு ஆண்டு	9,600		உயில்கொடைப் பெற்றது	2,000
எதிர்வரும் ஆண்டு	400	10,500	ரொக்க இருப்பு (31.3.2019)	300
கூலி கொடுபட வேண்டியது		2,200	அரங்கம் அமைப்பதற்காக பெற்ற நன்கொடை	2,000
கடன்மீதான வட்டி செலுத்தியது		2,000		

(விடை: வங்கி இருப்பு: ₹ 2,400)

(குறிப்பு: செலுத்த வேண்டிய கூலி என்பது ரொக்கம் சாரா நடவடிக்கை. ஆகையால் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கில் வருவதில்லை)

3. கீழே கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து மதுரை அன்னை தெரசா மகளிர் மன்றத்தின் 2018, டிசம்பர், 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்

விவரம்	₹	விவரம்	₹
ரொக்க இருப்பு (1.1.2018)	2,000	தீக்காப்பீட்டு முனைமம் செலுத்தியது	1,500
வங்கி இருப்பு (1.1.2018)	3,000	சந்தா பெற்றது	8,500
பழைய செய்தித்தாள்கள் விற்றது	500	அறைகலன் வாங்கியது	6,000
எழுதுபொருள்கள் வாங்கியது	6,000	செய்தித்தாள்கள் வாங்கியது	700
தணிக்கைக் கட்டணம் செலுத்தியது	2,000	அறைகலன் மீதான தேய்மானம்	900
நுழைவுக்கட்டணம் பெற்றது	3,000	ரொக்க இருப்பு (31.12.2018)	2,500
பல்வகைச் செலவுகள்	6,000	போக்குவரத்துச் செலவுகள்	1,000
உதவித்தொகை அளித்தது	2,000	அறைகலன் விற்றது	4,000
முதலீடுகள் மீதான வட்டி	2,000		

(விடை: வங்கி மேல்வரைப்பற்று ₹ 4,700)

(குறிப்பு: அறைகலன் மீதான தேய்மானம் ரொக்கம் சாரா நடவடிக்கையாக இருப்பதால் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கில் வருவதில்லை)

12th-Accountancy-Unit-02.indd 71 12/9/2021 11:10:21 PM

4. மயிலாடுதுறை மனமகிழ் மன்றத்தின் கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.

விவரம்	₹	விவரம்	₹
தொடக்க ரொக்க இருப்பு	15,000	காவலாளிக்குச் சம்பளம் கொடுத்தது	12,000
தொடக்க வங்கி இருப்பு	25,000	மன்ற ஆண்டு விழாச் செலவுகள்	15,000
நன்கொடைகள் பெற்றது	48,000	ஒளியூட்டுச் செலவுகள்	16,500
பழைய உபகரணங்கள் விற்றது	26,000	பொழுதுபோக்குச் செலவுகள்	13,500
சிற்றுண்டிச் செலவுகள்	13,000	பில்லியார்ட்ஸ் மேசை வாங்கியது	5,000
மன்ற ஆண்டு விழா வசூல்	18,000	அறக்கொடை நாடகக்காட்சி செலவுகள்	3,000
டென்னிஸ் மைதான கட்டுமானச் செலவுகள்	7,000	முதலீடுகள் விற்றது	12,000
அறக்கொடை நாடகக்காட்சி வசூல்	4,000	இறுதி ரொக்க இருப்பு	12,000
வாடகைச் செலுத்தியது	1,000		

(விடை: வங்கி இருப்பு: ₹ 50,000))

5. கீழ்க்காணும் தகவல்களிலிருந்து கடலூர் கபடி மன்றத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்

விவரம்	₹	விவரம்	₹
ரொக்க இருப்பு (1.4.2018)	11,000	வட்டி மற்றும் வங்கிக் கட்டணம்	250
வங்கி மேல்வரைப்பற்று இருப்பு (1.4.2018)	20,000	இதர வருமானம்	350
எழுதுபொருள் வாங்கியது	5,200	மைதானம் பராமரிப்பு	550
பயணச் செலவுகள்	1,800	அரசிடமிருந்து பெற்ற மானியம்	12,000
பங்காதாயம் பெற்றது	3,000	தொலைபேசிக் கட்டணம் செலுத்தியது	2,800
பொதுச் செலவுகள்	500	அறக்கட்டளை நிதி பெற்றது	10,000
சேர்க்கைக் கட்டணம்	4,000	காப்பீட்டு முனைமம் செலுத்தியது	2,000
தூது அஞ்சல் செலவுகள்	2,000	மின்கட்டணம் செலுத்தியது	5,000
நகராட்சி வரி செலுத்தியது	3,000	ரொக்க இருப்பு (31.3.2019)	1,750

(விடை: வங்கி மேல்வரைப்பற்று : ₹ 4,500)

6. கீழ்க்காணும் தென்காசி திருவள்ளுவர் மன்றத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கைத் தயார் செய்யவும்.

12th-Accountancy-Unit-02.indd 72 12/9/2021 11:10:21 PM

பெறுதல்கள்	₹	செலுத்தல்கள்	₹
தொடக்க இருப்பு		சம்பளம்	20,000
கைரொக்கம்	14,000	வாடகை	24,000
வட்டிப் பெற்றது	5,000	பயணச் செலவுகள்	2,000
சந்தா	55,000	அச்சு மற்றும் எழுதுபொருள்	6,000
உயில்கொடை	48,000	முதலீடுகள் செய்தது	50,000
நுழைவுக் கட்டணம்	7,000	விளையாட்டு உபகரணங்கள் வாங்கியது	33,000
அறைகலன் விற்றது	16,000	இருப்பு கீ/இ	
(ஏட்டு மதிப்பு ₹17,000)		கைரொக்கம்	10,000
	1,45,000		1,45,000

(விடை: உபரி : ₹ 14,000)

7. கீழ்க்காணும் கும்பகோணம் கூடைப்பந்து சங்கத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கைத் தயார் செய்யவும்

பெறுதல்கள்	₹	₹	செலுத்தல்கள்	₹	₹
இருப்பு கீ/கொ			மைதான வாடகை செலுத்தியது		12,000
கைரொக்கம்	23,000		அச்சுக் கட்டணம்		5,000
வங்கி ரொக்கம்	12,000	35,000	வங்கிக் கட்டணம்		1,000
அரங்க வாடகை பெற்றது		6,000	கட்டடம் மீதான காப்பீடு		2,000
			தொடர் விளையாட்டுப் போட்டிச்		
சந்தா பெற்றது		9,000	செலவுகள்		16,000
ஆயுள் உறுப்பினர் கட்டணம்		7,000	தணிக்கைக் கட்டணம்		3,000
பாதுகாப்பு பெட்டக			விளையாட்டுப் பொருள்கள்		
வாடகைப் பெற்றது		2,000	வாங்கியது		4,000
			இருப்பு கீ/இ		
			கைரொக்கம்	2,000	
			வங்கி ரொக்கம்	14,000	16,000
		59,000			59,000

(விடை : பற்றாக்குறை: ₹ 26,000)

8. கீழ்க்காணும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு மற்றும் கூடுதல் தகவல்களிலிருந்து 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் காட்டப்பட வேண்டிய சந்தாத் தொகையினைக் கணக்கிடவும்.

பெறுதல்கள்	₹	₹	செலுத்தல்கள்	₹
சந்தா				
2017	28,000			
2018	1,72,000			
2019	12,000	2,12,000		

கூடுதல் தகவல்கள்: 2018 ஆம் ஆண்டில் பெறவேண்டிய சந்தா ₹ 8,000.

(விடை : 2018 ஆம் ஆண்டிற்கான சந்தா : ₹ 1,80,000)

12th-Accountancy-Unit-02.indd 73 12/9/2021 11:10:21 PM

9. பின்வரும் விவரங்கள் ஒரு மன்றத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

ப 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய பெறுதல்கள் செலுத்தல்கள் கணக்கு வ

பெறுதல்கள்	₹	₹	செலுத்தல்கள்	₹
சந்தா				
2017-2018	10,000			
2018-2019	50,000			
2019-2020	5,000	65,000		

மன்றத்தில் உள்ள 200 உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஆண்டு சந்தாவாக ₹ 400 செலுத்துகின்றனர். 2017–2018 ஆம் ஆண்டில் இன்னும் பெற வேண்டிய சந்தா ₹ 2000.

(விடை : வருவாய் மற்றும் செலவினக் கணக்கு : சந்தா :₹ 80,000;
இருப்புநிலைக் குறிப்பு : சொத்துகள் : பெறவேண்டிய சந்தா : ₹ 32,000;
பொறுப்புகள் : முன்கூட்டிப் பெற்ற சந்தா: ₹ 5,000)

10. பின்வரும் விவரங்கள் ஒரு மன்றத்தின் 2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும். அந்த மன்றம் 2016–2017 ஆம் ஆண்டில் பெற்ற சந்தா : ₹ 40,000. இதில் 2015–2016 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ₹ 5,000 மற்றும் 2017–2018 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ₹ 3,000 உள்ளடங்கியுள்ளது. 2016–2017 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ₹ 1,000 இன்னும் பெற வேண்டியுள்ளது.

(விடை : வருவாய் மற்றும் செலவினக் கணக்கு : சந்தா: ₹ 33,000;
இருப்புநிலைக் குறிப்பு : சொத்துகள் : பெறவேண்டிய சந்தா : ₹ 1,000;
பொறுப்புகள் : முன்கூட்டிப் பெற்ற சந்தா: ₹ 3,000)

11. ஒரு மன்றத்திற்கு தொடர்புடைய பின்வரும் விவரங்களிலிருந்து 2018 ஆம் ஆண்டில் சந்தா மூலம் பெறும் வருவாயைக் கணக்கிடவும். .

விவரம்	1.1.2018 ₹	31.12.2018 ₹
சந்தா பெறவேண்டியது	3,000	5,000
முன்கூட்டிப்பெற்ற சந்தா	4,000	7,000

2018 ஆம் ஆண்டில் சந்தா பெற்றது: ₹ 45,000.

(விடை: வருவாய் மற்றும் செலவினக் கணக்கு : சந்தா: ₹ 44,000)

12. பின்வரும் விவரங்கள் 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

2018 ஆம் ஆண்டில் சந்தா பெற்றது ₹ 50,000. இதில் 2017 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ₹ 5,000 மற்றும் 2019 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ₹ 7,000 உள்ளடங்கியுள்ளது. 2018 ஆம் ஆண்டில் பெறவேண்டிய சந்தா ₹ 6,000. 2017 ஆம் ஆண்டில் முன்கூட்டிப்பெற்ற 2018 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ₹ 4,000.

(விடை : வருவாய் மற்றும் செலவினக் கணக்கு : சந்தா ₹ 48,000)

13. பின்வரும் விவரங்கள் தூத்துக்குடி இளம் முன்னோடிகள் சங்கத்தின் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

12th-Accountancy-Unit-02.indd 74 12/9/2021 11:10:21 PM

சங்கத்தில் 100 உறுப்பினர்கள் உள்ளனர். ஒவ்வொருவரும் ₹ 25 ஆண்டுச் சந்தாவாக செலுத்துகின்றனர். ஆண்டிறுதியில் 10 உறுப்பினர்கள் சந்தா செலுத்தாமல் இருந்தனர். ஆனால் நான்கு உறுப்பினர்கள் அடுத்த ஆண்டிற்கான சந்தா தொகையை முன்கூட்டிச் செலுத்தி இருந்தனர்.

(விடை : வருவாய் மற்றும் செலவினக் கணக்கு : சந்தா ₹ 2,500;
இருப்புநிலைக் குறிப்பு : பொறுப்புகள் : முன்கூட்டிப் பெற்ற சந்தா ₹ 100;
சொத்துகள் : பெறவேண்டிய சந்தா ₹ 250)

14. பின்வரும் விவரங்கள் மார்த்தாண்டம் பெண்கள் பண்பாட்டு மன்றத்தின் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

	₹
1.4.2018 அன்று விளையாட்டுப் பொருள்கள் இருப்பு	16,000
அவ்வாண்டில் வாங்கிய விளையாட்டுப் பொருள்கள்	84,000
31.3.2019 அன்று விளையாட்டுப் பொருள்கள் இருப்பு	10,000

(விடை : வருவாய் மற்றும் செலவினக் கணக்கு (பற்று) : ₹ 90,000;
இருப்புநிலைக் குறிப்பு : சொத்துகள் : விளையாட்டு சாதனங்கள் இருப்பு ₹ 10,000)

15. பின்வரும் விவரங்கள் வேதாரண்யம் விளையாட்டு மன்றத்தின் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

	₹
மட்டைகள் மற்றும் பந்துகள் தொடக்க இருப்பு	3,000
அவ்வாண்டில் வாங்கிய மட்டைகள் மற்றும் பந்துகள்	17,000
பழைய மட்டைகள் மற்றும் பந்துகள் விற்பனை	2,000
மட்டைகள் மற்றும் பந்துகள் இறுதி இருப்பு	4,000

(விடை : வருவாய் மற்றும் செலவினக் கணக்கு: மட்டைகள் மற்றும் பந்துகள்
பயன்படுத்தியது ₹ 16,000 (ப); பழைய விளையாட்டுச் சாதனங்கள் விற்றது ₹ 2,000 (வ);
இருப்புநிலைக் குறிப்பு : சொத்துகள் : மட்டைகள் மற்றும் பந்துகள் இருப்பு ₹ 4,000)

16. பின்வரும் விவரங்கள் சீர்காழி பாடகர்கள் சங்கத்தின் வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

	₹
1.4.2018 அன்று எழுதுபொருள்கள் இருப்பு	2,600
அவ்வாண்டில் வாங்கிய எழுதுபொருள்கள்	6,500
31.3.2019 அன்று எழுதுபொருள்கள் இருப்பு	2,200

(விடை : எழுதுபொருள்கள் பயன்படுத்தியது : ₹ 6,900 (ப))

17. சென்னை டென்னிஸ் மன்றத்தின் விளையாட்டுப் போட்டிநிதி ஏப்ரல் 1, 2018 அன்று ₹ 24,000 வரவிருப்பு காட்டியது. அந்த ஆண்டில் அந்நிதியிலிருந்து பெற்ற வரவுகள் ₹ 26,000. அந்த ஆண்டில் மேற்கொண்ட விளையாட்டுப் போட்டிச் செலவுகள் 33,000. இவ்விவரங்கள் மன்றத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

(விடை : இருப்புநிலைக் குறிப்பு : பொறுப்புகள் : விளையாட்டுப் போட்டி நிதி ₹ 17,000)

12th-Accountancy-Unit-02.indd 75 12/9/2021 11:10:22 PM

18. காரைக்குடி விளையாட்டு மன்றத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் பின்வருவன எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

விவரம்	₹
2018, ஏப்ரல் 1 அன்று தொடர் விளையாட்டுப் போட்டி நிதி	90,000
2018, ஏப்ரல் 1 அன்று தொடர் விளையாட்டுப்போட்டி நிதி முதலீடு	90,000
தொடர் விளையாட்டுப் போட்டி நிதி முதலீடு மீதான வட்டி பெற்றது	9,000
தொடர் விளையாட்டுப் போட்டி நிதிக்கான நன்கொடை	10,000
தொடர் விளையாட்டுப் போட்டிச் செலவுகள்	60,000

(விடை : இருப்புநிலைக் குறிப்பு : பொறுப்புகள் : தொடர் விளையாட்டுப் போட்டி நிதி ₹ 49,000; சொத்துகள் : தொடர் விளையாட்டுப்போட்டி நிதி முதலீடு ₹ 90,000)

19. சேலம் விளையாட்டு மன்றத்தின் 2019, ஏப்ரல் 1 அன்றைய முதல் நிதியைக் கணக்கிடவும்.

விவரம்	₹	விவரம்	₹
விளையாட்டு உபகரணங்கள்	30,000	பரிசு நிதி	10,000
கணிப்பொறி	25,000	பரிசுநிதி முதலீடுகள்	10,000
2018–2019 ஆம் ஆண்டில் சந்தா பெறவேண்டியது	5,000	கைரொக்கம்	7,000
2019–20 ஆம் ஆண்டிற்காக முன்கூட்டிப் பெற்ற சந்தா	8,000	வங்கி ரொக்கம்	21,000

(விடை : முதல் நிதி ₹ 80,000)

20. இராமநாதபுரம் கிரிக்கெட் மன்றத்தின் பின்வரும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு மற்றும் கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவல்களிலிருந்து 2018, டிசம்பர் 31–ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான வருவாய் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயார் செய்யவும்.

ப 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு வ

பெறுதல்கள்	₹	₹	செலுத்தல்கள்	₹	₹
இருப்பு கீ/கொ			வாடகை		11,000
கைரொக்கம்	5,000		பொழுதுபோக்குச் செலவுகள்		11,200
வங்கி ரொக்கம்	10,000	15,000	அறைகலன்		10,000
சந்தா			விளையாட்டுப் பொருள்கள்		
2017	12,000		வாங்கியது		13,000
2018	33,000		விளையாட்டு போட்டிச் செலவுகள்		12,000
2019	16,000	61,000	முதலீடுகள் செய்தது		28,000
நுழைவுக் கட்டணம்		6,000	இருப்பு கீ/இ		
பொது நன்கொடைகள்		7,000	கைரொக்கம்	1,300	
பழைய விளையாட்டுப்			வங்கி ரொக்கம்	4,000	5,300
பொருள்கள் விற்றது		1,000			
இதர வரவுகள்		500			
		90,500			90,500

12th-Accountancy-Unit-02.indd 76 12/9/2021 11:10:22 PM

கூடுதல் தகவல்கள்:

(அ) 2018 ஜனவரி 1 அன்று முதல்நிதி ₹ 30,000.

(ஆ) விளையாட்டுப் பொருள்களின் தொடக்க இருப்பு ₹ 3,000 மற்றும் விளையாட்டுப் பொருள்களின் இறுதி இருப்பு ₹ 5,000.

(விடை : உபரி ₹ 2,300 ; இருப்புநிலைக் குறிப்பு மொத்தம் ₹ 48,300)

21. ஏற்காடு இளைஞர் சங்கத்தின் பின்வரும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2019, மார்ச் 31–ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயார் செய்யவும்.

ப 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு வ

பெறுதல்கள்	₹	செலுத்தல்கள்	₹
இருப்பு கீ/கொ		சம்பளம்	14,000
கைரொக்கம்	9,600	அலுவலகச் செலவுகள்	7,200
புத்தகம் வாங்குவதற்காக பெற்ற		புத்தகங்கள் வாங்கியது	15,000
அரசு மானியம்	10,000	எழுதுபொருள்கள் வாங்கியது	1,800
சந்தா	24,800	செய்தித்தாள் வாங்கியது	2,100
சேர்க்கைக் கட்டணம்	2,000	பரிசுகள் வழங்கியது	5,000
பரிசுநிதி வரவுகள்	6,000	இருப்பு கீ/இ	
வங்கி வட்டி	1,500	கைரொக்கம்	9,900
பழைய செய்தித்தாள்கள் விற்றது	1,100		
	55,000		55,000

கூடுதல் தகவல்கள்:

(i) தொடக்க முதல் நிதி ₹ 20,000

(ii) புத்தகங்கள் இருப்பு (1.4.2018) ₹ 9,200

(iii) கூடியுள்ள சந்தா பெறப்படாதது ₹ 1,700

(iv) 1.4. 2018 அன்று எழுதுபொருள்கள் இருப்பு ₹ 1,200 மற்றும் 31.3.2019 அன்று எழுதுபொருள்கள் இருப்பு ₹ 2,000

(விடை: உபரி: ₹ 6,800; இருப்புநிலைக் குறிப்பு மொத்தம் : ₹ 37,800)

22. நெய்வேலி அறிவியல் சங்கத்தின் 2018, டிசம்பர் 31–ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு பின்வருமாறு.

ப 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு வ.

பெறுதல்கள்	₹	செலுத்தல்கள்	₹	₹
இருப்பு கீ/கொ		இருப்பு கீ/கொ		
கைரொக்கம்	2,400	வங்கி மேல்வரைப்பற்று		1,000
சந்தா	8,700	தபால் செலவுகள்		200
ஆயுள் உறுப்பினர் கட்டணம்	5,000	அறிவியல் உபகரணங்கள் வாங்கியது		10,000
கண்காட்சி நிதி வரவுகள்	7,000	ஆய்வகச் செலவுகள்		2,400
அறிவியல் உபகரணங்கள் விற்றது	6,000	செயலாளருக்கான மதிப்பூதியம்		5,000
(ஏட்டு மதிப்பு ₹ 5,000)		தணிக்கைக் கட்டணம்		3,600

12th-Accountancy-Unit-02.indd 77 12/9/2021 11:10:22 PM

இதர வரவுகள்	500	பொதுச் செலவுகள்		1,800
		கண்காட்சி செலவுகள்		5,000
		இருப்பு கீ/இ		
		கையிருப்பு ரொக்கம்	200	
		வங்கி ரொக்கம்	400	600
	29,600			29,600

கூடுதல் தகவல்கள்:

(i) தொடக்க முதல் நிதி ₹ 6,400

(ii) சந்தா தொகையில் 2019 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ₹ 600 உள்ளடங்கியுள்ளது.

(iii) 1.1.2018 அன்று அறிவியல் உபகரணங்கள் இருப்பு ₹ 5,000.

(iv) கண்காட்சியின் உபரித்தொகை புதிய கலையரங்கத்திற்கான ஒதுக்காக உருவாக்கப்பட வேண்டும்.

2018, டிசம்பர், 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கையும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்யவும்.

(விடை: பற்றாக்குறை ₹ 3,400; இருப்புநிலைக் குறிப்பு மொத்தம்: ₹ 10,600)

23. சிவகாசி ஓய்வூதியர் மனமகிழ் மன்றத்தின் பின்வரும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயார் செய்யவும்.

ப 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு வ

பெறுதல்கள்	₹	₹	செலுத்தல்கள்	₹
இருப்பு கீ/கொ			வாடகையும், வரியும்	18,000
கைரொக்கம்	10,000		மின் கட்டணம்	17,000
வங்கி ரொக்கம்	20,000	30,000	அறைகலன் வாங்கியது	12,000
சந்தா			பில்லியார்ட்ஸ் மேசை வாங்கியது	70,000
2016 – 2017	5,000		பழுதுபார்ப்பு மற்றும் புதுப்பித்தல்	16,000
2017 – 2018	25,000		சிறப்பு விருந்து செலவுகள்	4,000
2018 – 2019	6,000	36,000	பற்பலச் செலவுகள்	2,000
உயில்கொடை		40,000	இருப்பு கீ/இ	
அரங்க வாடகை		14,000	கைரொக்கம்	1,000
பாதுகாப்பு பெட்டக வாடகை		5,000		
சிறப்பு விருந்திற்கான வசூல்		12,000		
இருப்பு கீ/இ				
வங்கி மேல்வரைப்பற்று		3,000		
		1,40,000		1,40,000

12th-Accountancy-Unit-02.indd 78 12/9/2021 11:10:22 PM

கூடுதல் தகவல்கள்:

(i) சங்கத்தின் 300 உறுப்பினர்கள் தலா ₹ 100 வீதம் ஆண்டுச்சந்தா செலுத்துகின்றனர்.

(ii) 1.4.2017 அன்று சங்கத்தின் அறைகலன் இருப்பு ₹ 10,000

(iii) 2016–2017 ஆம் ஆண்டிற்கான கூடியுள்ள சந்தா இன்னமும் பெறப்படாதது ₹ 1,000

(விடை: உபரி ₹ 4,000 ; தொடக்க முதல் நிதி ₹ 46,000
இருப்புநிலைக் குறிப்பு மொத்தம் ₹ 99,000)

24. விருதுநகர் கைப்பந்து சங்கத்தின் 2018, டிசம்பர் 31–ம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு பின்வருமாறு.

ப 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு வ.

பெறுதல்கள்	₹	₹	செலுத்தல்கள்	₹	₹
இருப்பு கீ/கொ			விளையாட்டுப் போட்டிச்		
கைரொக்கம்		5,000	செலவுகள்		25,000
சந்தா			விளையாட்டு அரங்க பராமரிப்பு		17,000
2017	10,000		செயலாளருக்கான மதிப்பூதியம்		18,000
2018	55,000		பந்து மற்றும் மட்டைகள்		
2019	5,000	70,000	வாங்கியது		22,000
நன்கொடைகள்		40,000	புல் விதைகள் வாங்கியது		2,000
விளையாட்டுப் போட்டி			நிலைவைப்பு		58,000
நிதி வரவுகள்		30,000	பல்வகைச் செலவுகள்		3,000
நிலைவைப்பு மீதான வட்டி		8,000	இருப்பு கீ/இ		
இதர வரவுகள்		5,000	கைரொக்கம்	7,000	
			வங்கி ரொக்கம்	6,000	13,000
		1,58,000			1,58,000

கூடுதல் தகவல்கள்:

(i) 1.1.2018 அன்று சங்கத்தில் இருந்த முதலீடுகள் ₹ 10,000; வளாகம் மற்றும் மைதானங்கள் ₹ 40,000 ; பந்துகள் மற்றும் மட்டைகள் இருப்பு ₹ 5,000.

(ii) 2017 ஆம் ஆண்டிற்கான சந்தா இன்னும் பெறவேண்டியது ₹ 5,000

(iii) 2018 ஆம் ஆண்டில் பெறவேண்டிய சந்தா ₹ 6,000.

2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்ககையும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்யவும்.

(விடை: உபரி ₹ 47,000; தொடக்க முதல் நிதி : ₹ 75,000;
இறுதி இருப்புநிலைக் குறிப்பு மொத்தம் : ₹ 1,32,000)

12th-Accountancy-Unit-02.indd 79 12/9/2021 11:10:22 PM

நிகழ்வாய்வு

சங்கர் சதுரங்க விளையாட்டில் ஆர்வமுடையவர். அவர் ஒரு சதுரங்க சங்கத்தில் சேர்ந்தார். ஆனால் அவரால் உறுப்பினர் கட்டணத்தைச் செலுத்த முடியவில்லை. அவர் கணக்கியல் குறித்து சிறிதளவே அறிந்திருந்தார். ஆனால் அவர் சங்கங்கள் மற்றும் மன்றங்களின் பதிவேடுகள் குறித்து நன்கு அறிந்திருக்கவில்லை. அச்சங்கத்தின் கணக்காளர் அவரை சங்கத்தின் கணக்கேடுகளைப் பராமரிப்பதற்கு உதவுமாறு கூறுகிறார். அவ்வாறு உதவினால் அவர் உறுப்பினர் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. மேலும் அச்சங்கம் தனது உறுப்பினர்கள் தேநீர், காஃபி மற்றும் தின்பண்டங்கள் வாங்குவதற்காக ஒரு சிற்றுண்டிச்சாலை வைத்துள்ளது. சங்கர் அந்த சிற்றுண்டிச் சாலைக்கும் உதவி வருகிறார். அவர் சங்கத்தின் சில விதிமுறைகள், கணக்கியல் நடைமுறைகளைப் பற்றி அறிந்திருக்கவில்லை. ஆனால் அவர் அதை கற்றுக் கொள்வதில் மிக ஆர்வமாக இருக்கிறார். அவர் கீழ்க்கண்டவற்றிற்கான விளக்கங்களைக் கோருகிறார்.

(1) சங்கத்தின் முக்கிய வருவாய் ஆதாரம் என்ன?

(2) பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு என்பது ரொக்க ஏட்டைப் போன்றதுதானா?

(3) சங்கம் உபரி வருமானம் பெற்றிருக்கும்போது உறுப்பினர்கள் பணம் எடுக்க அனுமதிக்கப்படுகிறார்களா?

(4) நன்கொடைக்கான கணக்கியல் செயல்முறை என்ன?

(5) கணக்காண்டு இறுதியில் உறுப்பினர்கள் உறுப்பினர் கட்டணம் செலுத்தவில்லை எனில், கணக்கேடுகளில் எவ்வாறு கருதப்பட வேண்டும் மற்றும் என்ன செயல்முறை மேற்கொள்ளப்பட வேண்டும்?

தொடர் ஆய்விற்கு

ஒரு இசை மன்றமானது நிறைய உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அது அனைத்து உறுப்பினர்களின் பதிவேடுகளை பராமரிப்பதை கடினமாகக் கருதுகிறது. சிலநேரங்களில் உறுப்பினர்கள் கட்டண விவரங்கள் கண்டறிய முடிவதில்லை. அம்மன்றத்தின் விவரங்களைச் சிறப்பான முறையில் பதிவு செய்ய வழிகள் ஏதேனும் உண்டா?

பார்வை

1. M C Shukla, T S Grewal and S C Gupta, Advanced Accounts, 19th ed., 2017, S.Chand Publishing, New Delhi.

2. R L Gupta and V K Gupta, Financial Accounting, 11th ed., 2014, Sultan Chand and Sons, New Delhi.

3. S P Jain and K L Narang, Advanced Accountancy Vol – I, 2016, Kalyani Publishers, New Delhi.

4. Dalston L Cecil and Jenitra L Merwin, Financial Accounting, 3rd ed., 2017, Learntech Press, Trichy.

5. Fundamentals of Accounting, 2017, The Institute of Chartered Accountants of India, New Delhi.

12th-Accountancy-Unit-02.indd 80 12/9/2021 11:10:22 PM

அலகு 3

கூட்டாண்மை நிறுவனக் கணக்குகள் – அடிப்படைகள்

பொருளடக்கம்

3.1 அறிமுகம்

3.2 கூட்டாண்மையின் பொருள், வரைவிலக்கணம் மற்றும் இயல்புகள்

3.3 கூட்டாண்மை ஒப்பாவணம்

3.4 கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாதபோது 1932, இந்திய கூட்டாண்மைச் சட்ட விதிமுறைகளின் பயன்பாடு

3.5 கூட்டாண்மை நிறுவனத்தின் இறுதிக் கணக்குகள்

3.6 கூட்டாளிகளின் முதல் கணக்குகளைத் தயாரிக்கும் முறைகள்

3.7 கூட்டாளிகளின் முதல் மீது வட்டி மற்றும் எடுப்புகள் மீது வட்டி கணக்கிடுதல்

3.8 கூட்டாளிகளின் ஊதியம் மற்றும் கழிவு

3.9 கூட்டாளிகளிடமிருந்து பெற்ற கடன் மீதான வட்டி

3.10 கூட்டாளிகளுக்கிடையேயான இலாபப் பகிர்வு

3.11 இலாப நட்டப் பகிர்வு கணக்கு

கற்றல் நோக்கங்கள்

மாணவர்கள்

- கூட்டாண்மையின் பொருள் மற்றும் சிறப்பியல்புகள் பற்றி அறிந்து கொள்ளுதல்
- கூட்டாளிகளின் முதல் கணக்குகளைத் தயாரிக்கும் முறைகளான நிலைமுதல் மற்றும் மாறுபடும் முதல் முறைகளைப் பற்றி புரிந்து கொள்ளுதல்
- முதல் மீது வட்டி, எடுப்புகள் மீது வட்டி, கூட்டாளிகளின் ஊதியம் மற்றும் கூட்டாளிகளிடமிருந்து பெற்ற கடன் மீதான வட்டி போன்றவை கணக்கிடுதல் பற்றி புரிந்து கொள்ளுதல்
- கூட்டாளிகளுக்கிடையே உள்ள இலாபப் பகிர்வு பற்றி புரிந்து கொள்ளுதல்

நினைவுகூற வேண்டிய கருத்துகள்

கூட்டாண்மை நிறுவனக் கணக்குகள் – அடிப்படைகள் பற்றி கற்பதற்கு முன் பின்வரும் கருத்துகளை நினைவில் கொள்ள வேண்டும்:

- வணிக அமைப்புகளின் வடிவமைப்புகள்
- கணக்கியல் சுழற்சி

தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய சொற்கள்

- கூட்டாளி
- கூட்டாண்மை நிறுவனம்
- கூட்டாண்மை ஒப்பாவணம்
- நிலை முதல்
- மாறுபடும் முதல்
- முதல் மீது வட்டி
- எடுப்புகள் மீது வட்டி
- இலாப நட்டப் பகிர்வு கணக்கு

CL8G3

12th-Accountancy-Unit-03.indd 81 12/10/2021 12:50:48 AM

3.1 அறிமுகம்



மாணவர் செயல்பாடு 3.1

சிந்தனைக்கு: இராமு என்பவர் வெற்றிகரமாக தொழில் நடத்தி வரும் ஒரு தனி வணிகர். கடந்த 10 வருடங்களாக அவருடைய தொழில் படிப்படியாக முன்னேறி வருகிறது. தற்போது, தான் மட்டும் அந்தத் தொழிலை நிர்வகித்து வருவது சிரமம் என்று உணர்கிறார். அவரது நண்பர் அத்தொழிலில் சேர விரும்புகிறார் மற்றும் ராமுவிற்கு சமமான நிலையைப் பெற விரும்புகிறார். ஆனால், இராமு தனது சொந்த உடைமையையும் மற்றும் கட்டுப்பாட்டையும் விட்டுக்கொடுக்க விரும்பவில்லை. இந்நிலையில் இராமு தன்னுடைய நண்பரின் விருப்பத்தை ஏற்றுக் கொண்டு, தனது வியாபாரத்தின் உடைமையையும், கட்டுப்பாட்டையும் விட்டுக் கொடுக்காமல் அவரை தன்னுடைய தொழிலில் சேர்த்துக் கொள்ள முடியுமா?

கூட்டாண்மை நிறுவனம் என்பது இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட நபர்களோ, அவர்களுக்கிடையே ஏற்படும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒரு தொழிலை ஏற்று நடத்தும் தொழில் வடிவமைப்பு ஆகும். கூட்டாண்மைத் தொழிலை ஏற்று நடத்த ஒப்புக் கொள்ளும் நபர்களை தனித்தனியாக கூட்டாளிகள் எனவும், ஒட்டுமொத்தமாக நிறுவனம் என்றும் அழைக்கிறோம். எந்தப் பெயரில் கூட்டாண்மைத் தொழில் நடத்தப்படுகிறதோ அந்தப் பெயர் நிறுவனப் பெயர் என்று அழைக்கப்படுகிறது. கூட்டாண்மையில் பல நபர்களை ஒன்று சேர்ப்பதன் நோக்கம் அதிக முதல் திரட்டுதல், கூடுதல் மேலாண்மை திறன், இடர்பாடுகளிலும், பொறுப்புகளிலும் பங்கேற்பது போன்றவையாகும். எனவே, தனியாள் வணிகரின் குறைபாடுகளான வரையறு முதல், சிறிய அளவு வியாபாரம் போன்றவற்றை நீக்குவதற்காக கூட்டாண்மை உருவாக்கப்படுகிறது. கூட்டாண்மைத் தொழிலிலிருந்து கிடைக்கும் இலாபம் அல்லது நட்டம் கூட்டாளிகளால் ஒப்புக் கொண்ட விகிதத்தில் பகிரப்படுகிறது.

இந்தியாவில், கூட்டாண்மை நிறுவனங்களை இந்திய கூட்டாண்மைச் சட்டம், 1932 நெறிப்படுத்துகிறது. கூட்டாண்மை நிறுவனத்தை பதிவு செய்வது கட்டாயமில்லை. இது கூட்டாளிகளின் விருப்பத்திற்குட்பட்டது. இருப்பினும், கூட்டாண்மையை பதிவு செய்து கொள்வது கூட்டாண்மை நிறுவனங்களுக்கு பாதுகாப்பானது மட்டுமன்றி கூட்டாளிகளும் கூட்டாண்மைப் பதிவினால் சில நன்மைகளைப் பெற முடிகிறது.

3.2 கூட்டாண்மையின் பொருள், வரைவிலக்கணம் மற்றும் சிறப்பியல்புகள்

3.2.1 கூட்டாண்மையின் பொருள் மற்றும் வரைவிலக்கணம்

இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் ஒன்று சேர்ந்து தொழில் தொடங்கி அதன் மூலம் கிடைக்கும் இலாபம் அல்லது நட்டத்தை ஒப்புக்கொண்ட விகிதத்தில் பகிர்ந்துக் கொள்ள உடன்பட்டவர்களிடையே உள்ள உறவு முறையே கூட்டாண்மை என்று அழைக்கப்படுகிறது. அத்தொழில் நிறுவனத்தை அனைவருமோ அல்லது அனைவரின் சார்பாக எவரேனும் ஒருவரோ ஏற்று நடத்தலாம்.

இந்திய கூட்டாண்மைச் சட்டம், 1932 பிரிவு 4–ன்படி கூட்டாண்மை என்பது "எல்லோரும் சேர்ந்தோ, அல்லது எல்லோருக்குமாக ஒருவரோ, நடத்தும் தொழிலின் இலாபத்தைப் பகிர்ந்து கொள்ள ஒப்புக் கொண்டவர்களிடையே நிலவும் உறவு" ஆகும்.

3.2.2 கூட்டாண்மையின் சிறப்பியல்புகள்

கூட்டாண்மையின் அடிப்படைச் சிறப்பியல்புகள் பின்வருமாறு:

1. கூட்டாண்மை என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களால் உருவாக்கப்படும் ஒரு அமைப்பு ஆகும். அதிக பட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை 50 என வரையறை செய்யப்பட்டுள்ளது.
2. தொழில் நிறுவனத்தின் இலாபம் அல்லது நட்டத்தைப் பகிர்ந்து கொள்ள கூட்டாளிகளுக்கிடையே

12th-Accountancy-Unit-03.indd 82 12/10/2021 12:50:48 AM

உடன்பாடு இருக்க வேண்டும். உடன்பாடு எழுத்து வடிவிலோ அல்லது பேச்சு வடிவிலோ அல்லது உட்கிடையாகவோ இருக்கலாம்.

3. கூட்டாண்மை உடன்பாடு ஒரு தொழில் நிறுவனத்தை நடத்தி அதிலிருந்து கிடைக்கும் இலாபத்தைப் பகிர்வதாக இருக்க வேண்டும்.
4. கூட்டாண்மை நிறுவனத்தை கூட்டாளிகள் அனைவருமோ அல்லது அனைவரின் சார்பில் அவர்களில் ஒருவரோ நடத்தலாம்.



கூட்டாளிகளின் அதிக பட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை இந்திய கூட்டாண்மைச் சட்டம், 1932 – ல் குறிப்பிடப்படவில்லை. ஆனால், இந்திய நிறுமச் சட்டம், 2013, கூட்டாளிகளின் அதிகபட்ச எண்ணிக்கையை குறிப்பிட்டுள்ளது. இந்திய நிறுமச் சட்டம், 2013, பிரிவு 464(1) –ல் எந்த ஒரு குழுமம் அல்லது கூட்டாண்மை நிறுவனம், பரிந்துரைக்கப்படக் கூடிய நபர்களின் எண்ணிக்கையை விட அதிகமான நபர்களைக்கொண்டு தொழில் நடத்தும் நோக்கத்திற்காக உருவாக்கப்படக் கூடாது என்றும், இந்த உட்பிரிவின் கீழ் பரிந்துரைக்கப்படக் கூடிய நபர்களின் எண்ணிக்கை 100 க்கும் அதிகமாக இருக்கக் கூடாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. நிறுமங்களின் (இதர) விதிகள் 2014, விதி 10–ன் படி இந்த வரம்பை 50 என நிர்ணயித்துள்ளது. எனவே, கூட்டாண்மை நிறுவனத்தின் அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை 50 ஆகும்.

3.3 கூட்டாண்மை ஒப்பாவணம்

கூட்டாண்மை ஒப்பாவணம் என்பது கூட்டாளிகளுக்கிடையேயான உடன்படிக்கையின் விதிகளை உள்ளடக்கிய எழுத்து வடிவிலான ஒரு ஆவணம் ஆகும். இந்திய கூட்டாண்மைச் சட்டம், 1932 – ன் படி ஒரு கூட்டாண்மை நிறுவனம், கூட்டாண்மை ஒப்பாவணத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆனால், கூட்டாளிகளுக்கிடையேயான ஒப்பந்தத்தின் விதிமுறைகளுக்கு ஆதாரமாக இது செயல்படுவதால் கூட்டாண்மை ஒப்பாவணத்தை கொண்டிருப்பது விரும்பத்தக்கதாகும்.

3.3.1 கூட்டாண்மை ஒப்பந்தத்தின் உள்ளடக்கங்கள்

பொதுவாக கூட்டாண்மை ஒப்பாவணம் பின்வருவனவற்றை உள்ளடக்கியது:

1. நிறுவனத்தின் பெயர், தன்மை மற்றும் தொழில் செய்யும் இடம்
2. தொழில் தொடங்கிய நாள் மற்றும் தொழிலின் காலம் அளவு
3. அனைத்துக் கூட்டாளிகளின் பெயர் மற்றும் முகவரி
4. ஒவ்வொரு கூட்டாளியும் அளித்த முதல்
5. இலாபப் பகிர்வு விகிதம்
6. ஒவ்வொரு கூட்டாளிக்கும் அனுமதிக்கப்பட்ட எடுப்புத் தொகை
7. முதல் மீது அனுமதிக்கப்படும் வட்டி வீதம்
8. கூட்டாளிகளின் எடுப்புகள் மீதான வட்டி வீதம்
9. கூட்டாளிகளிடமிருந்து பெற்ற கடன் மீதான வட்டி வீதம்
10. கூட்டாளிக்கு அனுமதிக்கப்படும் ஊதியம்
11. கணக்குகள் பராமரிப்பு மற்றும் தணிக்கை நடைமுறைகள்
12. புதிய கூட்டாளி சேர்க்கைக்கான நடைமுறைகள்
13. ஒரு கூட்டாளி விலகலுக்கான நடைமுறைகள் மற்றும் விலகும் கூட்டாளிக்குச் செலுத்த வேண்டிய தொகையைத் தீர்வு செய்தல்
14. கூட்டாளி சேர்ப்பு அல்லது விலகல் அல்லது இறப்பின் போது நிறுவனத்தின் நற்பெயரை மதிப்பிடும் முறைகள் மற்றும் சொத்துகள் மற்றும் பொறுப்புகளை மதிப்பிடுதல்
15. கூட்டாளி இறப்பின்போது நிறைவேற்றாளரை நியமித்தல் மற்றும் அவருடைய சட்டப்படியான வாரிசுதாரருக்கு செலுத்த வேண்டிய தொகையைத் தீர்வு செய்தல்
16. கூட்டாண்மைக் கலைப்பின்போது கணக்குகளைத் தீர்த்தல்.

12th-Accountancy-Unit-03.indd 83 12/10/2021 12:50:48 AM

மாணவர் செயல்பாடு 3.2

இராஜா மற்றும் இரவி இருவரும் கூட்டாண்மை ஒன்றை தொடங்கினர். அவர்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ள வாய் மொழியாக ஒப்புக்கொண்டனர். அவ்வாண்டின் இறுதியில், இராஜா, தான் இரவியை விட அதிகமாக உழைப்பதால் இலாபத்தில் ¾ பங்கு வேண்டும் என்று கோருகிறார். இரவி அதை ஒப்புக் கொள்ளவில்லை. இந்தச் சூழ்நிலையை நீங்கள் எவ்வாறு கையாளுவீர்கள்?

3.4 கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாதபோது, இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932 ன் படி கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகளின் பயன்பாடு

கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாதபோது அல்லது கூட்டாண்மை ஒப்பாவணத்தில் வெளிப்படையான அறிக்கை எதுவும் இல்லாத நிலையில், சட்டத்தின் பின்வரும் நிபந்தனைகள் பின்பற்றப்படுகின்றன:

(i) **கூட்டாளிகளின் ஊதியம்** [பிரிவு 13(அ)]
எந்த கூட்டாளிக்கும் ஊதியம் அல்லது உழைப்பு ஊதியம் அனுமதிக்கப்பட வேண்டியதில்லை.

(ii) **இலாபப் பகிர்வு விகிதம்** [பிரிவு 13(ஆ)]
இலாபங்கள் அல்லது நட்டங்களை கூட்டாளிகள் சமமாகப் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.

(iii) **முதல் மீது வட்டி** [பிரிவு 13(இ)]
கூட்டாளிகளின் முதல் மீது வட்டி அனுமதிக்கப்படுவதில்லை. கூட்டாளி ஒருவர் கூட்டாண்மை ஒப்பாவணத்தின் படி, தான் அளித்த முதல் தொகைக்கு முதல் மீது வட்டி பெற உரிமை உடையவராயின், அந்த முதல் மீது வட்டி இலாபத்திலிருந்து மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

(iv) **கூட்டாளிகளிடமிருந்து நிறுவனத்திற்காக பெறப்பட்ட கடன் மீதான வட்டி** [பிரிவு 13(ஈ)]
கடன் மீதான வட்டி ஆண்டுக்கு 6% வழங்கப்பட வேண்டும்.

(v) **எடுப்புகள் மீது வட்டி**
கூட்டாளிகளின் எடுப்புகள் மீது வட்டி விதிக்கக்கூடாது.

எடுத்துக்காட்டு 1

A, B, C மற்றும் D ஆகியோர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். நிறுவனத்தில் கூட்டாண்மை ஒப்பாவணம் ஏதுமில்லை. பின்வருவனவற்றை எவ்வாறு மேற்கொள்வீர்கள்?

(i) A அதிக முதல் வழங்கியுள்ளார். அவர் முதல் மீது வட்டி ஆண்டுக்கு 12% கோருகிறார்.

(ii) B ஒவ்வொரு மாதமும் ₹ 1,000 எடுத்துக் கொள்கிறார். ஏனைய கூட்டாளிகள் B–யிடம் நிறுவனத்திற்கு ஆண்டுக்கு 10% எடுப்புகள் மீது வட்டி அளிக்குமாறு கேட்கிறார்கள். ஆனால், B அதனை ஒப்புக்கொள்ளவில்லை.

(iii) C யிடமிருந்து நிறுவனத்திற்கு பெறப்பட்ட கடன் ₹ 10,000. அவர் கடன் மீது வட்டி ஆண்டுக்கு 9% வேண்டுமென்று கோருகிறார். A மற்றும் B அதனை ஒப்புக்கொள்ளவில்லை.

(iv) D தனது முழு நேரத்தையும் தொழிலில் செலவிடுவதால் அவர் ஒவ்வொரு மாதமும் ₹ 5,000 ஊதியம் வேண்டுமென்று கோருகிறார். B மற்றும் C அதனை ஒப்புக்கொள்ளவில்லை.

(v) A, இலாபத்தினை முதல் விகிதத்தில் பகிர்ந்தளிக்க வேண்டும் என்கிறார். ஆனால் B, C மற்றும் D அதனை ஒப்புக்கொள்ளவில்லை.

தீர்வு

நிறுவனத்தில் கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாததால், இந்திய கூட்டாண்மைச் சட்டம், 1932–ன் நிபந்தனைகள் பொருந்தும்.

(i) எந்த ஒரு கூட்டாளிக்கும் முதல் மீது வட்டி செலுத்த வேண்டியதில்லை. எனவே, A முதல் மீது வட்டி பெற உரிமை உடையவரல்ல.

(ii) கூட்டாளியின் எடுப்புகளுக்கு வட்டி விதிக்கக் கூடாது. ஆகையால், B எடுப்புகள் மீது வட்டி செலுத்த வேண்டியதில்லை.

12th-Accountancy-Unit-03.indd 84 12/10/2021 12:50:49 AM

(iii) கடன் மீது வட்டி ஆண்டுக்கு 6% செலுத்தப்பட வேண்டும். ஆகையால், C, தான் வழங்கிய ₹ 10,000 கடனுக்கு ஆண்டுக்கு 6% வட்டி பெறலாம்.

(iv) எந்தக் கூட்டாளிக்கும் ஊதியம் வழங்க வேண்டியதில்லை. ஆகையால், D ஊதியம் பெற தகுதி உடையவரல்ல.

(v) இலாபங்கள் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

3.5 கூட்டாண்மை நிறுவனத்தின் இறுதிக் கணக்குகள்

கூட்டாண்மை நிறுவனங்கள் தயாரிக்கும் இறுதிக் கணக்குகள் பின்வருமாறு:

(அ) உற்பத்திக் கணக்கு – உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால்

(ஆ) வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு – இலாபத்தைக் கண்டறிய

(இ) இலாபநட்டப் பகிர்வு கணக்கு – இலாபம் மற்றும் இலாப மிகுதி பகிர்வதைக் காட்ட

(ஈ) இருப்புநிலைக் குறிப்பு – நிதி நிலையைக் கண்டறிய.

பின்வருவன தவிர, கூட்டாண்மை நிறுவனத்தின் இறுதிக்கணக்குகளை தயாரிப்பதற்கான செயல்முறைகள் தனியாள் வணிகத்தின் இறுதிக் கணக்குகளைத் தயாரிப்பது போன்றது:

(i) தனியாள் வணிகத்தில் இலாபநட்டக் கணக்கில் உள்ள இலாபம் அல்லது நட்டம், தனியாள் வணிகரின் முதல் கணக்கிற்கு நேரடியாக மாற்றப்படுகிறது. கூட்டாண்மையில், நிகர இலாபம் அல்லது நட்டம், இலாபநட்டக் கணக்கிலிருந்து இலாபநட்டப் பகிர்வு கணக்கிற்கு மாற்றப்படுகிறது. இலாபநட்டப் பகிர்வு கணக்கில் முதல் மீது வட்டி, எடுப்புகள் மீது வட்டி, ஊதியம் மற்றும் கூட்டாளிகளுக்கு தரப்பட வேண்டிய பிற உழைப்பூதியம் போன்றவற்றிற்கான சரிக்கட்டுதல்கள் காட்டப்படுகின்றன. இறுதியாக, இலாபநட்டப் பகிர்வு கணக்கின் இருப்பு, கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு அவர்களின் இலாபப் பகிர்வு விகிதத்தில் மாற்றப்படுகிறது.

(ii) தனியாள் வணிகத்தில், தனியாள் வணிகரின் முதல் கணக்கு இருப்பு மட்டும் இருப்புநிலைக் குறிப்பில் காட்டப்படுகிறது. கூட்டாண்மை நிறுவனத்தின் இருப்புநிலைக் குறிப்பில், கூட்டாளிகளின் முதல் கணக்குகள் (மற்றும் நடப்புக் கணக்குகள்) தனித் தனியே காட்டப்படுகின்றன.

3.6 கூட்டாளிகளின் முதல் கணக்குகளைத் தயாரிக்கும் முறைகள்

கூட்டாளிகள், கூட்டாண்மை நிறுவனத்தில் முதலீடு செய்யும் தொகை கூட்டாளிகளின் முதல் எனப்படுகிறது. ஒரு கூட்டாளி தன் முதலினை ரொக்கமாகவோ அல்லது வேறு சொத்துகள் போன்ற எந்த வடிவிலோ அளிக்கலாம். ஒவ்வொரு கூட்டாளிக்கும், தனியாக ஒரு முதல் கணக்கு பராமரிக்கப் படுகிறது. ஒரு நிறுவனத்திலுள்ள கூட்டாளிகளின் முதல் கணக்குகளைப் பின்வரும் ஏதேனும் இரு முறைகளில் பராமரிக்கலாம். (i) நிலைமுதல் முறை மற்றும் (ii) மாறுபடும் முதல் முறை.

3.6.1 நிலைமுதல் முறை

நிலைமுதல் முறையில், கூட்டாளிகளின் முதல் மாறாமல் இருக்கும் மற்றும் பொதுவாக அதே தொகையாக, நிலையானதாக இருக்கும். ஒவ்வொரு கூட்டாளிக்கும் இரண்டு கணக்குகள் பராமரிக்கப்பட வேண்டும். அதாவது, (அ) முதல் கணக்கு மற்றும் (ஆ) நடப்புக் கணக்கு. தொடக்க முதல் கொண்டு வந்தது, கூடுதல் முதல் கொண்டு வந்தது மற்றும் முதல் நிரந்தரமாக திரும்ப எடுத்தது போன்றவை தொடர்பான நடவடிக்கைகள் முதல் கணக்கில் பதிவு செய்யப்படுகின்றன. மற்ற அனைத்து நடவடிக்கைகளும் நடப்புக் கணக்கில் பதிவு செய்யப்படுகின்றன.

12th-Accountancy-Unit-03.indd 85 12/10/2021 12:50:49 AM

(அ) கூட்டாளிகளின் முதல் கணக்கு

நிறுவனத்திற்கு கூட்டாளியால் கொண்டு வரப்பட்ட தொடக்க முதல் மற்றும் அவரால் எதிர் வரும் ஆண்டுகளில் கொண்டு வரப்பட்ட ஏதேனும் கூடுதல் முதல் போன்றவை முதல் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன. ஒரு கூட்டாளியால் நிரந்தரமாக நிறுவனத்திலிருந்து முதல் தொகை திரும்ப எடுக்கப்பட்டிருந்தால் அது முதல் கணக்கில் பற்று வைக்கப்படுகிறது. வேறு எந்த விவரங்களும் இந்தக் கணக்கில் பற்று அல்லது வரவு வைக்கப்படுவதில்லை. இம்முறையில் முதல் கணக்கு எப்போதும் வரவிருப்பையே காட்டும். கூடுதல் முதல் ஏதேனும் கொண்டு வராமல் இருந்தாலோ அல்லது முதல் நிரந்தரமாக திரும்ப எடுக்காமல் இருந்தாலோ முதல் கணக்கின் இருப்பு அதே தொகையாகவே இருக்கும்.

நிலைமுதல் முறையில் கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கான படிவம்

ப **கூட்டாளிகளின் முதல் கணக்கு** **வ**

நாள்	விவரம்	A ₹	B ₹	நாள்	விவரம்	A ₹	B ₹
	ரொக்கம்/வங்கி க/கு	xxx	xxx		இருப்பு கீ/கொ	xxx	xxx
	(முதல் நிரந்தரமாக திரும்ப எடுத்தது)				ரொக்கம்/வங்கி க/கு	xxx	xxx
	இருப்பு கீ/இ	xxx	xxx		(கூடுதல் முதல் கொண்டு வந்தது)		
		xxx	xxx			xxx	xxx

(ஆ) கூட்டாளிகளின் நடப்புக் கணக்கு

கூட்டாளிகளால் கொண்டுவரப்பட்ட தொடக்க முதல், கூடுதல் முதல் மற்றும் அவர்களால் நிரந்தரமாக திரும்ப எடுக்கப்பட்ட முதல் தவிர, கூட்டாளிகளுக்கும் நிறுவனத்திற்கும் இடையே உள்ள அனைத்து பிற நடவடிக்கைகளைப் பதிவு செய்வதற்காக கூட்டாளிகளின் நடப்புக் கணக்கு தயாரிக்கப்படுகிறது. முதல் மீது வட்டி, கூட்டாளிகளின் ஊதியம் அல்லது கழிவு மற்றும் கூட்டாளிக்குரிய இலாபப் பங்கு போன்றவை இக்கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன. எடுப்புகள், எடுப்புகள் மீது வட்டி மற்றும் கூட்டாளியின் நட்டப் பங்கு போன்றவை இக்கணக்கில் பற்று வைக்கப்படுகின்றன. அதன் விளைவாக, இக்கணக்கின் இருப்பு காலந்தோறும் மாறிக்கொண்டே இருக்கும். நடப்புக் கணக்கு வரவு இருப்பையோ அல்லது பற்று இருப்பையோ காட்டும்.

நிலைமுதல் முறையில் கூட்டாளிகளின் நடப்புக் கணக்கிற்கான படிவம்

ப **கூட்டாளிகளின் நடப்புக் கணக்கு** **வ**

நாள்	விவரம்	A ₹	B ₹	நாள்	விவரம்	A ₹	B ₹
	இருப்பு கீ/கொ*	xxx	xxx		இருப்பு கீ/கொ*	xxx	xxx
	எடுப்புகள் க/கு	xxx	xxx		முதல் மீது வட்டி க/கு	xxx	xxx
	எடுப்புகள் மீது வட்டி க/கு	xxx	xxx		ஊதியம் க/கு	xxx	xxx
	இலாபநட்டப் பகிர்வு க/கு	xxx	xxx		கழிவு க/கு	xxx	xxx
	(நட்டப் பங்கு)				இலாபநட்டப் பகிர்வு க/கு	xxx	xxx
	இருப்பு கீ/இ**	xxx	xxx		(இலாபப் பங்கு)		
					இருப்பு கீ/இ**	xxx	xxx
		xxx	xxx			xxx	xxx

குறிப்பு: *நடப்புக் கணக்கின் தொடக்க இருப்பு, ஒரு கூட்டாளிக்கு வரவு இருப்பாகவோ அல்லது பற்று இருப்பாகவோ இருக்கலாம்.

**நடப்புக் கணக்கின் இறுதி இருப்பு, ஒரு கூட்டாளிக்கு வரவு இருப்பாகவோ அல்லது பற்று இருப்பாகவோ இருக்கலாம்.

12th-Accountancy-Unit-03.indd 86 12/10/2021 12:50:49 AM

வரவிருப்பு என்பது நிறுவனம் கூட்டாளிக்கு செலுத்தவேண்டிய தொகை ஆகும். இது இருப்புநிலைக் குறிப்பில் பொறுப்புகள் பக்கம் காட்டப்படும். பற்றிருப்பு என்பது கூட்டாளியிடமிருந்து நிறுவனத்திற்கு வரவேண்டிய தொகை ஆகும். இது இருப்புநிலைக் குறிப்பில் சொத்துகள் பக்கம் காட்டப்படும்.

எடுத்துக்காட்டு 2

பின்வரும் தகவல்களிலிருந்து சாந்தி மற்றும் சுமதி என்ற கூட்டாளிகளின் முதல் கணக்குகளை அவர்களின் முதல், நிலை முதலாக இருக்கும் போது தயாரிக்கவும்.

விவரம்	சாந்தி ₹	சுமதி ₹
2018, ஜனவரி 1 அன்று முதல்	1,00,000	80,000
2018, ஜனவரி 1 அன்று நடப்புக் கணக்கு (வ)	5,000	3,000
2018, ஜூன் 1 கூடுதல் முதல் கொண்டு வந்தது	10,000	20,000
2018 ஆம் ஆண்டில் எடுப்புகள்	20,000	13,000
எடுப்புகள் மீது வட்டி	500	300
2018 – ல் இலாபப் பங்கு	10,000	8,000
முதல் மீது வட்டி	6,300	5,400
ஊதியம்	9,000	-
கழிவு	-	1,200

தீர்வு

ப **கூட்டாளிகளின் முதல் கணக்கு** **வ**

நாள்	விவரம்	சாந்தி ₹	சுமதி ₹	நாள்	விவரம்	சாந்தி ₹	சுமதி ₹
2018				2018			
				ஜன 1	இருப்பு கீ/கொ	1,00,000	80,000
டிச 31	இருப்பு கீ/இ	**1,10,000**	**1,00,000**	ஜூன் 1	வங்கி (கூடுதல் முதல்)	10,000	20,000
		1,10,000	1,00,000			1,10,000	1,00,000
				2019 ஜன 1	இருப்பு கீ/கொ	1,10,000	1,00,000

ப **கூட்டாளிகளின் நடப்புக் கணக்கு** **வ**

நாள்	விவரம்	சாந்தி ₹	சுமதி ₹	நாள்	விவரம்	சாந்தி ₹	சுமதி ₹
	எடுப்புகள்	20,000	13,000		இருப்பு கீ/கொ	5,000	3,000
	எடுப்புகள் மீது வட்டி	500	300		இலாபநட்டப் பகிர்வு கணக்கு (இலாபப் பங்கு)	10,000	8,000
	இருப்பு கீ/இ	**9,800**	**4,300**		முதல் மீது வட்டி	6,300	5,400
					சம்பளம்	9,000	-
					கழிவு	-	1,200
		30,300	17,600			30,300	17,600
					இருப்பு கீ/கொ	9,800	4,300

12th-Accountancy-Unit-03.indd 87 12/10/2021 12:50:49 AM

எடுத்துக்காட்டு 3

பிரகதீஷ் மற்றும் நரேஷ் ஆகிய கூட்டாளிகள் தங்கள் முதல் கணக்குகளை நிலைமுதல் முறையில் பராமரித்து வருகின்றனர். கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு கூட்டாளிகளின் முதல் கணக்குகளைத் தயாரிக்கவும்.

விவரம்	பிரகதீஷ் ₹	நரேஷ் ₹
2018, ஏப்ரல் 1 அன்று முதல்	4,00,000	6,00,000
2018, ஏப்ரல் 1 அன்று நடப்புக் கணக்கு	20,000(வ)	15,000(ப)
அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல்	50,000	_
அவ்வாண்டின் எடுப்புகள்	45,000	60,000
எடுப்புகள் மீது வட்டி	2,000	3,000
அவ்வாண்டின் இலாபப் பங்கு	80,000	1,20,000
முதல் மீது வட்டி	20,000	30,000
கழிவு	17,000	_
ஊதியம்	_	38,000

தீர்வு

ப **கூட்டாளிகள் முதல் கணக்கு** **வ**

நாள்	விவரம்	பிரகதீஷ் ₹	நரேஷ் ₹	நாள்	விவரம்	பிரகதீஷ் ₹	நரேஷ் ₹
	இருப்பு கீ/இ	**4,50,000**	**6,00,000**		இருப்பு கீ/கொ	4,00,000	6,00,000
					வங்கி க/கு (கூடுதல் முதல்)	50,000	-
		4,50,000	6,00,000			4,50,000	6,00,000
					இருப்பு கீ/கொ	4,50,000	6,00,000

ப **கூட்டாளிகளின் நடப்புக் கணக்கு** **வ**

நாள்	விவரம்	பிரகதீஷ் ₹	நரேஷ் ₹	நாள்	விவரம்	பிரகதீஷ் ₹	நரேஷ் ₹
	இருப்பு கீ/கொ	-	15,000		இருப்பு கீ/கொ	20,000	-
	எடுப்புகள் க/கு	45,000	60,000		இலாபநட்டப் பகிர்வு க/கு (இலாபப் பங்கு)	80,000	1,20,000
	எடுப்புகள் மீது வட்டி க/கு	2,000	3,000				

12th-Accountancy-Unit-03.indd 88 12/10/2021 12:50:49 AM

	இருப்பு கீ/இ	**90,000**	**1,10,000**		முதல் மீது வட்டி க/கு	20,000	30,000
					கழிவு க/கு	17,000	-
					ஊதியம் க/கு	-	38,000
		1,37,000	1,88,000			1,37,000	1,88,000
					இருப்பு கீ/கொ	90,000	1,10,000

3.6.2 மாறுபடும் முதல் முறை

இம்முறையில், ஒவ்வொரு கூட்டாளிக்கும் முதல் கணக்கு மட்டும் பராமரிக்கப்படுகிறது. கூட்டாளி மற்றும் நிறுவனத்திற்கு இடையேயுள்ள அனைத்து நடவடிக்கைகளும் முதல் கணக்கில் பதியப்படுகின்றன. கூட்டாளியால் கொண்டு வரப்பட்ட தொடக்க முதல் மற்றும் கூடுதல் முதல், முதல் மீது வட்டி, கூட்டாளியின் ஊதியம், கழிவு மற்றும் கூட்டாளியின் இலாபப் பங்கு போன்றவை இக்கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன. முதல் திரும்ப எடுத்தது, எடுப்புகள், எடுப்புகள் மீது வட்டி மற்றும் கூட்டாளிக்குரிய நட்டப் பங்கு போன்றவை இக்கணக்கில் பற்று வைக்கப்படுகின்றன. இதன் விளைவாக, இக்கணக்கின் இருப்பு காலந்தோறும் மாறிக் கொண்டே இருக்கும். இம்முறையில், கூட்டாளிகள் முதல் கணக்கு வரவிருப்பையோ அல்லது பற்றிருப்பையோ காட்டும்.

மாறுபடும் முதல் முறையில் கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கான படிவம்

ப **கூட்டாளிகளின் முதல் கணக்கு** **வ**

நாள்	விவரம்	A ₹	B ₹	நாள்	விவரம்	A ₹	B ₹
	ரொக்கம் / வங்கி க/கு	xxx	xxx		இருப்பு கீ/கொ	xxx	xxx
	(முதல் திரும்ப எடுத்தது)				ரொக்கம் / வங்கி க/கு	xxx	xxx
	எடுப்புகள்	xxx	xxx		(கூடுதல் முதல் கொண்டு வந்தது)		
	எடுப்புகள் மீது வட்டி க/கு	xxx	xxx		முதல் மீது வட்டி க/கு	xxx	xxx
	இலாபநட்டப் பகிர்வு க/கு	xxx	xxx		ஊதியம் க/கு	xxx	xxx
	(நட்டப் பங்கு)				கழிவு க/கு	xxx	xxx
	இருப்பு கீ/இ	xxx	xxx		இலாபநட்டப் பகிர்வு க/கு	xxx	xxx
					(இலாபப் பங்கு)		
		xxx	xxx			xxx	xxx

12th-Accountancy-Unit-03.indd 89 12/10/2021 12:50:50 AM

எடுத்துக்காட்டு 4

பின்வரும் தகவல்களிலிருந்து, மன்னன் மற்றும் சேவகன் எனும் கூட்டாளிகளின் முதல் கணக்குகளை அவர்களின் முதல் மாறுபடும் முதலாக இருக்கும்போது தயாரிக்கவும்.

விவரம்	மன்னன் ₹	சேவகன் ₹
2018, ஜனவரி 1 அன்று முதல் (வரவிருப்பு)	2,00,000	1,75,000
2018 ஆம் ஆண்டின் எடுப்புகள்	40,000	35,000
எடுப்புகள் மீதான வட்டி	1,000	500
2018 ஆம் ஆண்டின் இலாபப் பங்கு	21,000	16,500
முதல் மீது வட்டி	12,000	10,500
ஊதியம்	18,000	_
கழிவு	_	2,500

தீர்வு

ப **கூட்டாளிகளின் முதல் கணக்கு** வ

விவரம்	மன்னன் ₹	சேவகன் ₹	விவரம்	மன்னன் ₹	சேவகன் ₹
எடுப்புகள் க/கு	40,000	35,000	இருப்பு கீ/கொ	2,00,000	1,75,000
எடுப்புகள் மீது			இலாப நட்டப் பகிர்வு க/கு	21,000	16,500
வட்டி க/கு	1,000	500	முதல் மீது வட்டி க/கு	12,000	10,500
இருப்பு கீ/இ	**2,10,000**	**1,69,000**	ஊதியம் க/கு	18,000	-
			கழிவு க/கு	-	2,500
	2,51,000	2,04,500		2,51,000	2,04,500
			இருப்பு கீ/கொ	2,10,000	1,69,000

3.6.3 நிலைமுதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் உள்ள வேறுபாடுகள்

கூட்டாளிகளின் முதல் கணக்குகளைப் பராமரிக்கும் முறைகளான நிலைமுதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் பின்வருமாறு:

வேறுபாட்டின் அடிப்படை	நிலைமுதல் முறை	மாறுபடும் முதல் முறை
1. கணக்குகளின் எண்ணிக்கை	ஒவ்வொரு கூட்டாளிக்கும் இரண்டு கணக்குகள் அதாவது, முதல் கணக்கு மற்றும் நடப்புக் கணக்கு பராமரிக்கப்படுகின்றன.	ஒவ்வொரு கூட்டாளிக்கும் ஒரே ஒரு கணக்கு அதாவது, முதல் கணக்கு பராமரிக்கப்படுகிறது.

12th-Accountancy-Unit-03.indd 90 12/10/2021 12:50:50 AM

2. முதல் தொகையில் மாற்றம்	கூடுதல் முதல் கொண்டு வரும்போது அல்லது முதல் தொகையை நிரந்தரமாக திரும்ப எடுக்கும்போது தவிர மற்ற நேரங்களில் முதல் தொகை வழக்கமாக மாறாமல் நிலையாக இருக்கும்.	முதல் தொகை பருவந்தோறும் மாறிக் கொண்டே இருக்கும்.
3. இறுதி இருப்பு	முதல் கணக்கு எப்போதும் வரவிருப்பையே காட்டும். ஆனால், நடப்புக் கணக்கு பற்றிருப்பையோ அல்லது வரவிருப்பையோ காட்டும்.	முதல் கணக்கு பொதுவாக வரவிருப்பையே காட்டும். இது பற்றிருப்பையும் கூட காட்டலாம்.
4. சரிக்கட்டுதல்கள்	முதல் மீது வட்டி, எடுப்புகள் மீது வட்டி, ஊதியம் மற்றும் கழிவு, இலாபம் அல்லது நட்டப் பங்கு தொடர்பான அனைத்துச் சரிக்கட்டுதல்களும் நடப்புக் கணக்கில் செய்யப்படும்.	முதல் மீது வட்டி, எடுப்புகள் மீது வட்டி, ஊதியம் மற்றும் கழிவு, இலாபம் அல்லது நட்டப் பங்கு தொடர்பான அனைத்துச் சரிக்கட்டுதல்களும் முதல் கணக்கில் செய்யப்படும்.

3.7 கூட்டாளிகளின் முதல் மீது வட்டி மற்றும் எடுப்புகள் மீது வட்டி கணக்கிடுதல்

3.7.1 முதல் மீது வட்டி

முதல் மீது வட்டி என்பது கூட்டாளிகளின் முதல் மீது அனுமதிக்கப்படும் வட்டி ஆகும். பொதுவாக, கூட்டாளிகளின் முதல் அவர்களின் இலாபப் பகிர்வு விகிதத்திற்கு சமனற்றவையாக இருந்தால் முதல் மீது வட்டி அனுமதிக்க கூட்டாளிகள் ஒப்புக் கொள்ளலாம். இது, முதல் தொகை அதிகமாக பங்களித்த கூட்டாளிகளுக்கு ஈடு செய்வதாக அமையும். முதல் மீதான வட்டி வீதம் பொதுவாக கூட்டாளிகள் ஒப்புக் கொண்ட விகிதம் ஆகும். இது கூட்டாண்மை ஒப்பாவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். இலாபம் இருக்கும்போது மட்டுமே முதல்மீது வட்டி அனுமதிக்கப்படுகிறது, மற்றும் இது கூட்டாளிகளின் இலாபப் பகிர்வுக்கு முன் வழங்கப்பட வேண்டும். கூட்டாண்மை ஒப்பாவணத்தில் முதல் மீது வட்டி பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் கூட்டாளிகளின் முதலுக்கு வட்டி அனுமதிக்கப்படுவதில்லை.

நிறுவனம் நட்டத்தில் இருக்கும்போது முதல் மீது வட்டி வழங்கப்படுவதில்லை. இலாபம் போதுமானதாக இல்லாத போது அதாவது, நிகர இலாபம் முதல் மீதான வட்டித் தொகையை விட குறைவாக இருக்கும் போது, முதல் மீதான வட்டி வழங்கப்பட மாட்டாது. ஆனால் இலாபம் இருக்கும்போது கூட்டாளிகளுக்கிடையே அவர்களுடைய முதல் விகிதத்தில் பகிர்ந்து அளிக்கப்படும்.

கீழ்க்கண்ட குறிப்பேட்டுப் பதிவுகள் கூட்டாண்மை நிறுவனத்தின் ஏடுகளில் பதியப்பட வேண்டும்.

(அ) முதல் மீது வட்டி வழங்கும் போது

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	முதல் மீது வட்டி க/கு ப கூட்டாளிகள் முதல் / நடப்பு க/கு		xxx	xxx

குறிப்பு: முதல் மீது வட்டி, நிறுவனத்திலிருந்து கூட்டாளிகளுக்கு செலுத்த வேண்டியதாகும். எனவே, கூட்டாளிகளின் முதல் / நடப்பு கணக்கில் வரவு வைக்க வேண்டும் மற்றும் முதல் மீது வட்டி கணக்கில் பற்று வைக்க வேண்டும்.

(ஆ) முதல் மீது வட்டி கணக்கினை முடிக்கும்போது

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	இலாபநட்டப் பகிர்வு க/கு ப முதல் மீது வட்டி க/கு		xxx	xxx

12th-Accountancy-Unit-03.indd 91 12/10/2021 12:50:50 AM

3.7.2 முதல் மீதான வட்டி கணக்கிடுதல்

முதல் மீது வட்டி நடப்பாண்டுக்குரிய தொடக்க முதலில் கணக்கிடப்படுகிறது. அவ்வாண்டில் கூட்டாளிகள் கூடுதல் முதல் ஏதாவது கொண்டு வந்திருந்தாலோ, அல்லது முதல் தொகையை நிரந்தரமாக திரும்ப எடுத்திருந்தாலோ, அது முதல் தொகையில் மாற்றத்தை உண்டாக்கும். எனவே, நடப்பாண்டுக்குரிய வட்டியானது முதல் தொகையில் ஏற்பட்ட மாற்றங்களின் விகிதாச்சாரத்திற்கேற்ப கணக்கிடப்படுதல் வேண்டும்.

முதல் மீது வட்டி = முதல் தொகை x ஆண்டுக்கான வட்டி விகிதம் x வட்டிக்குரிய காலம்

மாணவர் குறிப்பு: தொடக்க முதல் தரப்படவில்லை எனில், அது பின்வருமாறு கணக்கிடப்படுகிறது:

விவரம்	₹	₹
இறுதி முதல்		xxx
கூட்டுக: அவ்வாண்டின் எடுப்புகள் (மாறுபடும் முதலாக இருக்கும்போது)	xxx	
அவ்வாண்டில் திரும்ப எடுத்த முதல்	xxx	xxx
		xxx
கழிக்க: அவ்வாண்டின் இலாபம் வரவு வைத்தது (மாறுபடும் முதலாக இருக்கும்போது)	xxx	
அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல்	xxx	xxx
தொடக்க முதல்		xxx

எடுத்துக்காட்டு 5

மன்னன் மற்றும் இரமேஷ் எனும் கூட்டாளிகள் 3:1 எனும் விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 2017, ஏப்ரல் 1 அன்று அவர்களுடைய முதல்: மன்னன் ₹ 80,000, இரமேஷ் ₹ 60,000 மற்றும் அவர்கள் நடப்புக் கணக்குகள் முறையே ₹ 10,000 மற்றும் ₹ 5,000 என வரவிருப்பைக் காட்டியது. 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 5% கணக்கிடவும் மற்றும் அதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளையும் தரவும்.

தீர்வு

முதல் மீதான வட்டி கணக்கிடுதல்:

முதல் மீது வட்டி = முதல் தொகை x வட்டி வீதம் x வட்டிக்குரிய காலம்

மன்னன் முதல் மீது வட்டி = 80,000 x 5/100 = ₹ 4,000

இரமேஷ் முதல் மீது வட்டி = 60,000 x 5/100 = ₹ 3,000

குறிப்பு: முதல் மீது வட்டி கணக்கிடும்போது நடப்புக் கணக்கின் இருப்புகளை எடுத்துக் கொள்ளக் கூடாது.

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
2018	முதல் மீது வட்டி க/கு ப		7,000	
மார்ச் 31	மன்னன் நடப்பு க/கு			4,000
	இரமேஷ் நடப்பு க/கு			3,000
	(முதல் மீது வட்டி வழங்கியது)			

12th-Accountancy-Unit-03.indd 92 12/10/2021 12:50:50 AM

,,	இலாப நட்டப் பகிர்வு க/கு ப முதல் மீதான வட்டி க/கு (முதல் மீது வட்டி கணக்கை முடித்தது)		7,000	7,000

எடுத்துக்காட்டு 6

அந்தோணி மற்றும் அக்பர் என்ற இரு கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2018, ஜனவரி 1 அன்று அவர்களின் முதல் கணக்குகளின் இருப்புகள் அந்தோணி ₹ 60,000 மற்றும் அக்பர் ₹ 40,000 ஆகும். 2018, ஏப்ரல் 1 அன்று அந்தோணி கூடுதல் முதலாக ₹ 10,000 கொண்டு வந்தார். அவ்வாண்டில் அக்பர் ₹ 5,000 கூடுதல் முதல் கொண்டு வந்தார். 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6 % எனக் கணக்கிடவும்.

தீர்வு

முதல் மீதான வட்டி கணக்கிடுதல்:

அந்தோணி முதல் மீது வட்டி:

முதல் மீது வட்டி = முதல் தொகை x வட்டி வீதம் x வட்டிக்குரிய காலம்

தொடக்க முதல் (ஓராண்டு) $= 60,000 \times \frac{6}{100}$ = ₹ 3,600

கூடுதல் முதல் (9 மாதங்கள்) $= 10,000 \times \frac{6}{100} \times \frac{9}{12}$ = ₹ 450

முதல் மீது வட்டி ₹ 4,050

அக்பர் முதல் மீது வட்டி:

தொடக்க முதல் (ஓராண்டு) $= 40,000 \times \frac{6}{100}$ = ₹ 2,400

கூடுதல் முதல் (6 மாதங்கள்) $= 5,000 \times \frac{6}{100} \times \frac{6}{12}$ = ₹ 150

முதல்மீதுவட்டி ₹ 2,550

குறிப்பு: அக்பர் கொண்டு வந்த கூடுதல் முதல் எந்த நாள் என்று கொடுக்காததால் முதல் மீது வட்டி சராசரி காலமாக 6 மாதங்களுக்கு கணக்கிட வேண்டும்.

எடுத்துக்காட்டு 7

2017, ஜனவரி 1 அன்று அறிவழகன் மற்றும் சீனிவாசன் என்ற கூட்டாளிகளின் முதல் கணக்குகள் முறையே ₹ 15,000 மற்றும் ₹ 10,000 இருப்பினைக் காட்டியது. 2017, ஜூலை 1 அன்று அறிவழகன் கூடுதல் முதலாக ₹ 5,000 கொண்டு வந்தார் மற்றும் 2017, செப்டம்பர் 1 அன்று சீனிவாசன் கொண்டு வந்த கூடுதல் முதல் ₹ 10,000.

2017, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6 % கணக்கிடவும்.

12th-Accountancy-Unit-03.indd 93 12/10/2021 12:50:50 AM

தீர்வு

முதல் மீதான வட்டி கணக்கிடுதல்

அறிவழகன்:

தொடக்க முதல் (ஓராண்டு)	$= 15,000 \times \frac{6}{100}$	= ₹ 900
கூடுதல் முதல் (6 மாதங்கள்)	$= 5,000 \times \frac{6}{100} \times \frac{6}{12}$	= ₹ 150
முதல் மீது வட்டி		₹ 1,050

சீனிவாசன்:

தொடக்க முதல் (ஓராண்டு)	$= 10,000 \times \frac{6}{100}$	= ₹ 600
கூடுதல் முதல் (4 மாதங்கள்)	$= 10,000 \times \frac{6}{100} \times \frac{4}{12}$	= ₹ 200
முதல் மீது வட்டி		₹ 800

எடுத்துக்காட்டு 8

தங்கள் இலாப நட்டங்களை சமமாகப் பகிர்ந்து வரும் சுபா மற்றும் சுதா என்ற கூட்டாளிகளின் பின்வரும் இருப்புநிலைக் குறிப்பிலிருந்து 2017, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6 % கணக்கிடவும்.

2017, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	சொத்துகள்	₹
முதல் கணக்குகள்:		நிலைச் சொத்துகள்	30,000
சுபா	15,000	நடப்புச் சொத்துகள்	20,000
சுதா	20,000		
நடப்புப் பொறுப்புகள்	15,000		
	50,000		50,000

அவ்வாண்டில் சுபா மற்றும் சுதாவின் எடுப்புகள் முறையே ₹ 2,500 மற்றும் ₹ 3,500. அவ்வாண்டில் ஈட்டிய இலாபம் ₹ 15,000.

தீர்வு

விவரம்	சுபா ₹	சுதா ₹
2017, டிசம்பர் 31 அன்று முதல்	15,000	20,000
கூட்டுக: எடுப்புகள்	2,500	3,500
	17,500	23,500
கழிக்க: இலாபம் ஏற்கனவே வரவு வைத்தது	7,500	7,500
2017, ஜனவரி 1 அன்று முதல்	10,000	16,000

முதல் மீது வட்டி கணக்கிடுதல்:

சுபா:

தொடக்க முதல் $= 10,000 \times \frac{6}{100}$ = ₹ 600

சுதா:

தொடக்க முதல் $= 16,000 \times \frac{6}{100}$ = ₹ 960

12th-Accountancy-Unit-03.indd 94 12/10/2021 12:50:50 AM

எடுத்துக்காட்டு 9

தங்கள் இலாப நட்டங்களை 3:4 என்ற இலாபவிகிதத்தில் பகிர்ந்து வரும் பிருந்தா மற்றும் பிரவீனா என்ற கூட்டாளிகளின் பின்வரும் இருப்புநிலைக் குறிப்பிலிருந்து 2017, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6 % கணக்கிடவும்.

2017, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	சொத்துகள்	₹
முதல்கணக்குகள்:		பல்வகைச் சொத்துகள்	80,000
பிருந்தா	30,000		
பிரவீனா	40,000		
இலாப நட்டப் பகிர்வு க/கு	10,000		
	80,000		80,000

2017, ஜூலை 1 அன்று பிருந்தா கொண்டு வந்த கூடுதல் முதல் ₹ 6,000 மற்றும் 2017, அக்டோபர் 1 அன்று பிரவீனா கொண்டு வந்த கூடுதல் முதல் ₹ 10,000. அவ்வாண்டில் பிருந்தா மற்றும் பிரவீனா எடுப்புகள் முறையே ₹ 5,000 மற்றும் ₹ 7,000. அவ்வாண்டில் ஈட்டிய இலாபம் ₹ 31,000.

தீர்வு

விவரம்	பிருந்தா		பிரவீனா	
	₹	₹	₹	₹
2017, டிசம்பர் 31 அன்று முதல்		30,000		40,000
கூட்டுக: எடுப்புகள்		5,000		7,000
		35,000		47,000
கழிக்க:				
கூடுதல் முதல்	6,000		10,000	
இலாபம் ஏற்கனவே வரவு வைத்தது*	9,000	15,000	12,000	22,000
2017, ஜனவரி 1 அன்று முதல்		20,000		25,000

* இலாபம் வரவு வைத்தது = ஈட்டிய இலாபம் ₹ 31,000 – இருப்புநிலைக் குறிப்பின் படியான இலாப இருப்பு ₹ 10,000 = ₹ 21,000. இந்தத்தொகை 3:4 என்ற இலாபப் பகிர்வு விகிதத்தில் கூட்டாளிகளுக் கிடையே பகிர்ந்தளிக்கப்படுகிறது.

முதல்மீதுவட்டிகணக்கிடுதல்:

பிருந்தா:

தொடக்கமுதல் (ஓராண்டு) $= 20,000 \times \frac{6}{100}$ = ₹ 1,200

கூடுதல்முதல் (6 மாதங்கள்) $= 6,000 \times \frac{6}{100} \times \frac{6}{12}$ = ₹ 180

முதல் மீது வட்டி ₹ 1,380

12th-Accountancy-Unit-03.indd 95 12/10/2021 12:50:51 AM

பிரவீனா:

தொடக்க முதல் (ஓராண்டு)	$= 25,000 \times \frac{6}{100}$	=	₹ 1,500
கூடுதல் முதல் (3 மாதங்கள்)	$= 10,000 \times \frac{6}{100} \times \frac{3}{12}$	=	₹ 150
முதல் மீது வட்டி			₹ 1,650

எடுத்துக்காட்டு 10

A மற்றும் B வழங்கிய முதல் முறையே ₹ 4,00,000 மற்றும் ₹ 2,00,000. அவர்களின் இலாபப் பகிர்வு விகிதம் 3:2. அவ்வாண்டின் முதல் மீது வட்டி கணக்கிடுவதற்கு முன்னர் இலாபம் ₹ 27,000. பின்வரும் நிலைகளில் முதல் மீதான வட்டித் தொகையைக் கணக்கிடவும்.

(i) முதல் மீது வட்டி குறித்து கூட்டாண்மை ஒப்பாவணத்தில் ஏதும் குறிப்பிடாத போது

(ii) கூட்டாண்மை ஒப்பாவணத்தின் படி முதல் மீது வட்டி ஆண்டுக்கு 3% அனுமதிக்கப்படும் போது

(iii) கூட்டாண்மை ஒப்பாவணத்தின் படி முதல் மீது வட்டி ஆண்டுக்கு 5% அனுமதிக்கும் போது

தீர்வு

(i) கூட்டாண்மை ஒப்பாவணத்தில் முதல் மீது வட்டி குறித்து ஏதும் குறிப்பிடப்படவில்லை. எனவே, முதல் மீது வட்டி அனுமதிக்கப்படுவதில்லை.

(ii) முதல் மீது வட்டி வழங்குவதற்கு முன் இலாபம் ₹ 27,000.

முதல் மீது வட்டிகணக்கிடுதல்:

A: $4,00,000 \times \frac{3}{100}$ = ₹ 12,000

B: $2,00,000 \times \frac{3}{100}$ = ₹ 6,000

போதிய இலாபம் இருப்பதால் முதல் மீது வட்டி வழங்கப்படும்.

(iii) முதல் மீது வட்டி வழங்குவதற்கு முன் இலாபம் ₹ 27,000.

முதல் மீது வட்டி கணக்கிடுதல்:

A: $4,00,000 \times \frac{5}{100}$ = ₹ 20,000

B: $2,00,000 \times \frac{5}{100}$ = ₹ 10,000

போதிய இலாபம் இல்லாததால், முதல் மீது வட்டி வழங்கப்பட இயலாது. இலாபம் ₹ 27,000 கூட்டாளிகளின் முதல் விகிதமாகிய 2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

3.7.3 எடுப்புகள் மீது வட்டி

கூட்டாளிகளுக்கிடையே எடுப்புகள் மீது வட்டி குறித்து உடன்பாடு இருக்கும் போது மட்டும் தான் எடுப்புகள் மீதான வட்டி விதிக்கப்படுகிறது. எடுப்புகள் மீதான வட்டி வீதம் கூட்டாளிகளால் ஒப்புக்கொண்ட விகிதம் ஆகும். கீழ்க்கண்ட குறிப்பேட்டுப் பதிவுகள் கூட்டாண்மை நிறுவனத்தின் ஏடுகளில் பதியப்பட வேண்டும்.

12th-Accountancy-Unit-03.indd 96 12/10/2021 12:50:51 AM

(அ) எடுப்புகள் மீதான வட்டி விதிக்கும் போது

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	கூட்டாளிகள் முதல் / நடப்பு க/கு ப		xxx	
	எடுப்புகள் மீதான வட்டி க/கு			xxx

குறிப்பு: எடுப்புகள் மீதான வட்டி கூட்டாளிகளிடமிருந்து நிறுவனம் பெற வேண்டிய தொகையாகும். எனவே, கூட்டாளிகளின் முதல் / நடப்பு கணக்கில் பற்று வைக்க வேண்டும் மற்றும் எடுப்புகள் மீது வட்டி கணக்கில் வரவு வைக்க வேண்டும்.

(ஆ) எடுப்புகள் மீது வட்டி கணக்கினை முடிக்கும் போது

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	எடுப்புகள் மீது வட்டி க/கு ப		xxx	
	இலாபநட்டப் பகிர்வு க/கு			xxx

3.7.4 எடுப்புகள் மீதான வட்டி கணக்கிடுதல்

எடுப்புகள் மீதான வட்டி நேரடி முறை அல்லது பெருக்குத்தொகை முறை இவைகளில் ஏதேனும் ஒன்றின் மூலம் கணக்கிடப்படுகிறது. மேலும், கூட்டாளிகள் ஒரு குறிப்பிட்ட தொகையை, ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் எடுக்கும் போது எடுப்புகள் மீதான வட்டி சராசரி கால முறை அடிப்படையில் கணக்கிடப் படலாம். எடுப்பு நாள்கள் மற்றும் எடுப்புகள் மீதான வட்டி வீதம் ஆகியவற்றின் அடிப்படையில் வெவ்வேறு முறைகள் எடுப்புகள் மீதான வட்டியைக் கணக்கிடப் பயன்படுத்தப்படுகிறது.

(i) நேரடி முறை

இம்முறையில் எடுப்பு மீதான வட்டி, எடுப்புகள் எடுத்த நாளிலிருந்து கணக்காண்டின் இறுதி நாள் வரையிலான காலத்திற்குரிய எடுப்புகள் மீது கணக்கிடப்படுகிறது. எடுப்புகள் மீதான வட்டி கணக்கிட பின்வரும் சூத்திரம் பயன்படுத்தப் படுகிறது.

எடுப்புகள் மீதான வட்டி = எடுப்புத் தொகை × வட்டி வீதம் × வட்டிக்குரிய காலம்

வட்டிக்குரிய காலம் என்பது எடுப்புகள் எடுத்த நாள்முதல் கணக்காண்டின் இறுதி நாள் வரையிலான காலமாகும். வெவ்வேறு தொகைகள் வெவ்வேறு கால இடைவெளிகளில் எடுக்கும் போது இம்முறை பொருந்துகிறது.

எடுத்துக்காட்டு 11

வேலன் என்ற கூட்டாளி 2018, ஏப்ரல் 1 அன்று ₹ 20,000 எடுத்துக்கொண்டார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 10 % என கணக்கிடப்பட வேண்டும். மாறுபடும் முதல் முறை எனக் கொண்டு 2018, டிசம்பர் 31 அன்று எடுப்புகள் மீது வட்டி கணக்கிட்டு அதற்குரிய குறிப்பேட்டுப் பதிவுகளையும் தரவும்.

தீர்வு

எடுப்புகள் மீதான வட்டி = எடுப்புத் தொகை × வட்டி வீதம் × வட்டிக்குரிய காலம்

$$= ₹\ 20,000 \times \frac{10}{100} \times \frac{9}{12} = ₹\ 1,500$$

12th-Accountancy-Unit-03.indd 97 12/10/2021 12:50:51 AM

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
2018 டிசம்பர் 31	வேலன் முதல் க/கு ப எடுப்புகள் மீது வட்டி க/கு (எடுப்புகள் மீது வட்டி விதித்தது)		1,500	 1,500
,,	எடுப்புகள் மீது வட்டி க/கு ப இலாப நட்டப் பகிர்வு க/கு (எடுப்புகள் மீது வட்டி கணக்கை முடித்தது)		1,500	 1,500

எடுத்துக்காட்டு 12

அருண் என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 12% விதிக்க வேண்டும். டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் 2018 ஆம் ஆண்டில் அவருடைய எடுப்புகள் பின்வருமாறு:

நாள்	₹
மார்ச் 1	6,000
ஜூன் 1	4,000
செப்டம்பர் 1	5,000
டிசம்பர் 1	2,000

எடுப்புகள் மீதான வட்டித் தொகையைக் கணக்கிடவும்.

தீர்வு

எடுப்புகள் மீதான வட்டி = எடுப்புத் தொகை × வட்டி வீதம் × வட்டிக்குரிய காலம்

மார்ச் 1 இல் எடுப்பு $= ₹\ 6,000 \times \frac{12}{100} \times \frac{10}{12} = ₹\ 600$

ஜூன் 1 இல் எடுப்பு $= ₹\ 4,000 \times \frac{12}{100} \times \frac{7}{12} = ₹\ 280$

செப்டம்பர் 1 இல் எடுப்பு $= ₹\ 5,000 \times \frac{12}{100} \times \frac{4}{12} = ₹\ 200$

டிசம்பர் 1 இல் எடுப்பு $= ₹\ 2,000 \times \frac{12}{100} \times \frac{1}{12} = ₹\ 20$

எடுப்புகள் மீது வட்டி = ₹ 1,100

எடுத்துக்காட்டு 13

அருள் என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 12% கணக்கிடப்பட வேண்டும். டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் 2018 ஆம் ஆண்டில் அவருடைய எடுப்புகள் பின்வருமாறு:

12th-Accountancy-Unit-03.indd 98 12/10/2021 12:50:51 AM

நாள்	₹
மார்ச் 1	3,000
ஜூன் 1	3,000
செப்டம்பர் 1	3,000
டிசம்பர் 1	3,000

எடுப்புகள் மீது வட்டி கணக்கிடவும்.

தீர்வு

எடுப்புகள் மீதான வட்டி = எடுப்புத் தொகை × வட்டி வீதம் × வட்டிக்குரிய காலம்

மார்ச் 1 இல் எடுப்பு $= ₹\ 3,000 \times \frac{12}{100} \times \frac{10}{12} = ₹\ 300$

ஜூன் 1 இல் எடுப்பு $= ₹\ 3,000 \times \frac{12}{100} \times \frac{7}{12} = ₹\ 210$

செப்டம்பர் 1 இல் எடுப்பு $= ₹\ 3,000 \times \frac{12}{100} \times \frac{4}{12} = ₹\ 120$

டிசம்பர் 1 இல் எடுப்பு $= ₹\ 3,000 \times \frac{12}{100} \times \frac{1}{12} = ₹\ 30$

எடுப்புகள் மீது வட்டி = ₹ 660

எடுத்துக்காட்டு 14

2018 ஆம் ஆண்டில் இராஜன் என்ற கூட்டாளி எடுத்த எடுப்புகள் ₹ 30,000. எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 10% என விதிக்கப்பட்டது. 2018, டிசம்பர் 31 அன்றைய எடுப்புகள் மீது வட்டி கணக்கிடவும்.

தீர்வு

எடுப்புகள் மீதான வட்டி = எடுப்புத் தொகை × வட்டி வீதம் × வட்டிக்குரிய காலம்

$= 30,000 \times \frac{10}{100} \times \frac{6}{12} = ₹\ 1,500$

குறிப்பு: எடுப்புகளுக்குரிய நாள் கொடுக்கப்படாத போது எடுப்புகள் மீதான வட்டி, சராசரி காலமாகிய 6 மாதங்களுக்கு கணக்கிடல் வேண்டும்.

(ii) பெருக்குத் தொகை முறை

பெருக்குத் தொகை முறையில், மொத்தப் பெருக்குத் தொகையின் மீது வட்டி கணக்கிடப்படுகிறது. அதாவது, எடுப்புத் தொகை மற்றும் எடுப்புத் தொகை பயன்படுத்தப்பட்ட காலம் இவற்றைப் பெருக்குவதால் கிடைக்கும்தொகை ஆகும். பெருக்குத்தொகை மாத அடிப்படையில் கணக்கிடப்படுவதாக இருந்தால், மொத்தப் பெருக்குத் தொகைக்கு, குறிப்பிட்ட வட்டி விகிதத்தில் ஒரு மாதத்திற்குரிய வட்டி கணக்கிடப்படுகிறது. பெருக்குத்தொகை நாள் அடிப்படையில் கணக்கிடப்படுவதாக இருந்தால், மொத்தப் பெருக்குத் தொகைக்கு, குறிப்பிட்ட வட்டி விகிதத்தில் ஒரு நாளுக்குரிய வட்டி கணக்கிடப்படுகிறது. இந்த முறை நேரடி முறைக்கு மாற்று முறையாக அனைத்துத் தருணங்களிலும் பயன்படுத்தப்படுகிறது.



எடுப்புத் தொகையில் கணக்கிட்ட குறிப்பிட்ட நாள்கள் / மாதங்களுக்குரிய வட்டி, மொத்தப் பெருக்குத் தொகையில், குறிப்பிட்ட வட்டி விகிதத்தில் கணக்கிட்ட ஒரு நாளுக்குரிய / ஒரு மாதத்திற்குரிய வட்டிக்குச் சமம் என்ற கோட்பாட்டை பெருக்குத் தொகை முறை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

12th-Accountancy-Unit-03.indd 99 12/10/2021 12:50:51 AM

பெருக்குத் தொகை முறையில் எடுப்புகள் மீதான வட்டி கணக்கிடுவதற்கான நடைமுறைகள் பின்வருமாறு:

(i) ஒவ்வொரு எடுப்புத் தொகையினையும், வட்டிக்குரிய மாதங்களுடன் பெருக்கி, தனித்தனி பெருக்குத் தொகையை கண்டறிய வேண்டும்.

(ii) அனைத்து தனித்தனி பெருக்குத் தொகையினையும் கூட்ட வேண்டும்.

(iii) கொடுக்கப்பட்ட வட்டி வீதத்தில் ஒரு மாதத்திற்குரிய வட்டி பின்வரும் சூத்திரத்தைப் பயன்படுத்தி கணக்கிடப்பட வேண்டும்.

எடுப்புகள் மீதான வட்டி = மொத்த பெருக்குத்தொகை × ஆண்டு வட்டி வீதம் $\times \frac{1}{12}$

மாணவர் குறிப்பு

வட்டிக்குரிய காலம் நாட்கள் அடிப்படையிலிருந்தால், ஒவ்வொரு எடுப்புத் தொகையையும் அது தொடர்பான காலத்துடன் (நாட்களில்) பெருக்கி தனித்தனி பெருக்குத்தொகை கண்டறியப்படுகிறது மற்றும் எடுப்புகள் மீது வட்டி கணக்கிட பின்வரும் சூத்திரம் பயன்படுத்தப்படுகிறது.

எடுப்புகள் மீதான வட்டி = மொத்த பெருக்குத்தொகை × ஆண்டு வட்டி வீதம் $\times \frac{1}{365}$

எடுத்துக்காட்டு 15

அன்பு என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 12 % கணக்கிடப்படுகிறது. 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டில் அவருடைய எடுப்புகள் பின்வருமாறு:

நாள்	₹
மார்ச் 1	6,000
ஜூன் 1	4,000
செப்டம்பர் 1	5,000
டிசம்பர் 1	2,000

பெருக்குத் தொகை முறையைப் பயன்படுத்தி எடுப்புகள் மீது வட்டி கணக்கிடவும்.

தீர்வு

பெருக்குத் தொகை முறையில் எடுப்புகள் மீது வட்டி கணக்கிடுதல்

எடுப்பு நாள்	எடுப்புத் தொகை ₹	வட்டிக்குரிய காலம் டிசம்பர் 31 வரை (மாதங்களில்)	பெருக்குத் தொகை ₹
மார்ச் 1	6,000	10	60,000
ஜூன் 1	4,000	7	28,000
செப்டம்பர் 1	5,000	4	20,000
டிசம்பர் 1	2,000	1	2,000
மொத்த பெருக்குத் தொகை			1,10,000

எடுப்புகள் மீதான வட்டி = மொத்த பெருக்குத் தொகை × ஆண்டு வட்டி வீதம் $\times \frac{1}{12}$

$$= 1,10,000 \times \frac{12}{100} \times \frac{1}{12} = ₹\ 1,100$$

12th-Accountancy-Unit-03.indd 100 12/10/2021 12:50:51 AM

(iii) சராசரி கால முறை

கூட்டாளிகள் ஒரு குறிப்பிட்ட தொகையை குறிப்பிட்ட கால இடைவெளியில் எடுத்தால், எடுப்புகள் மீது வட்டி, சராசரி கால அடிப்படையில் கணக்கிடப்படும். குறிப்பிட்ட கால இடைவெளி என்பது மாதந்தோறும், காலாண்டுதோறும், அரையாண்டு தோறும், 2 மாதங்களுக்கு ஒரு முறை மற்றும் 4 மாதங்களுக்கு ஒருமுறை தொகை எடுப்பதைக் குறிக்கிறது. எடுப்புகள் மீது வட்டி கணக்கிட பின்வரும் சூத்திரத்தைப் பயன்படுத்தலாம்.

$$\text{எடுப்புகள் மீது வட்டி} = \left[\begin{array}{c}\text{அவ்வாண்டில் எடுத்த}\\ \text{மொத்தத் தொகை}\end{array}\right] \times \left[\begin{array}{c}\text{ஆண்டுக்குரிய}\\ \text{வட்டி வீதம்}\end{array}\right] \times \left[\frac{\text{சராசரி காலம்}}{12}\right]$$

சராசரி காலம் பின்வருமாறு கணக்கிடப்படுகிறது:

$$\text{சராசரி காலம்} = \frac{\left[\begin{array}{c}\text{முதலாவது எடுப்புக்கும் ஆண்டு}\\ \text{இறுதிக்கும் இடையேயுள்ள}\\ \text{மாதங்களின் எண்ணிக்கை}\end{array}\right] + \left[\begin{array}{c}\text{இறுதி எடுப்புக்கும் ஆண்டு}\\ \text{இறுதிக்கும் இடையேயுள்ள}\\ \text{மாதங்களின் எண்ணிக்கை}\end{array}\right]}{2}$$

எடுப்புத் தொகை ஒவ்வொரு மாதம், காலாண்டு மற்றும் அரையாண்டு தொடக்கத்திலும், இடையிலும் மற்றும் இறுதியிலும், எடுக்கும் போது சராசரி காலம் (மாதத்தின் அடிப்படையில்) கணக்கிடுவதை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

எடுப்புகளின் நிகழ்வு	சராசரி காலம் (மாதங்களின் அடிப்படையில்)		
	எடுப்புகள் மேற்கொள்ளும் நேரம்		
	தொடக்கத்தில்	நடுவில்	முடிவில்
மாதந்தோறும்	$\frac{(12+1)}{2} = 6.5$	$\frac{(11.5+0.5)}{2} = 6$	$\frac{(11+0)}{2} = 5.5$
காலாண்டு தோறும்	$\frac{(12+3)}{2} = 7.5$	$\frac{(10.5+1.5)}{2} = 6$	$\frac{(9+0)}{2} = 4.5$
அரையாண்டு தோறும்	$\frac{(12+6)}{2} = 9$	$\frac{(9+3)}{2} = 6$	$\frac{(6+0)}{2} = 3$

எடுத்துக்காட்டு 16

ஜான் என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. அவர் வழக்கமாக ஒவ்வொரு மாதமும் ₹ 1,000 எடுத்துக் கொள்கிறார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 5 % விதிக்கப்பட வேண்டும். எடுப்புகள் மீது வட்டி சராசரி கால முறையைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் கணக்கிடவும். அவர்

(i) ஒவ்வொரு மாதத் தொடக்கத்தில் எடுத்திருந்தால்

(ii) ஒவ்வொரு மாத நடுவில் எடுத்திருந்தால்

(iii) ஒவ்வொரு மாத இறுதியில் எடுத்திருந்தால்

தீர்வு

மொத்த எடுப்புத் தொகை = 1,000 × 12 = ₹ 12,000

(i) எடுப்புகள் ஒவ்வொரு மாதத் தொடக்கத்திலும் எடுத்திருந்தால்:

சராசரி காலம் = 6.5

$$\text{எடுப்புகள் மீது வட்டி} = \text{மொத்த எடுப்புத் தொகை} \times \text{வட்டி வீதம்} \times \frac{\text{சராசரி காலம்}}{12}$$

12th-Accountancy-Unit-03.indd 101 12/10/2021 12:50:51 AM

$$= ₹\ 12,000 \times \frac{5}{100} \times \frac{6.5}{12} = ₹\ 325$$

(ii) எடுப்புகள் ஒவ்வொரு மாத நடுவிலும் எடுத்திருந்தால்:

சராசரி காலம் = 6

எடுப்புகள் மீது வட்டி = மொத்த எடுப்புத் தொகை × வட்டி வீதம் × $\frac{\text{சராசரி காலம்}}{12}$

$$= ₹\ 12,000 \times \frac{5}{100} \times \frac{6}{12} = ₹\ 300$$

(iii) எடுப்புகள் ஒவ்வொரு மாத இறுதியிலும் எடுத்திருந்தால்:

சராசரி காலம் = 5.5

எடுப்புகள் மீது வட்டி = மொத்த எடுப்புத் தொகை × வட்டி வீதம் × $\frac{\text{சராசரி காலம்}}{12}$

$$= ₹\ 12,000 \times \frac{5}{100} \times \frac{5.5}{12} = ₹\ 275$$

எடுத்துக்காட்டு 17

பிரியா மற்றும் கவிதா இருவரும் கூட்டாளிகள். பிரியா ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் ₹ 4,000 எடுத்துக் கொண்டார். கணக்கிடப்பட வேண்டிய எடுப்புகள் மீதான வட்டி ஆண்டுக்கு 6% 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய எடுப்புகள் மீது வட்டி, சராசரி கால முறையைப் பயன்படுத்தி கணக்கிடவும்.

தீர்வு

பிரியாவின் எடுப்புகள் மீதான வட்டி கணக்கிடுதல் (சராசரி கால முறையை பயன்படுத்தி)

மொத்த எடுப்புத் தொகை = 4,000 × 4 = ₹ 16,000

எடுப்புகள் ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் எடுத்திருந்தால், சராசரி காலம் = 4.5

எடுப்புகள் மீது வட்டி = மொத்த எடுப்புத் தொகை × வட்டி வீதம் × $\frac{\text{சராசரி காலம்}}{12}$

$$= ₹\ 16,000 \times \frac{6}{100} \times \frac{4.5}{12} = ₹\ 360$$

எடுத்துக்காட்டு 18

வெண்ணிலா மற்றும் ஈஸ்வரி இருவரும் கூட்டாளிகள். வெண்ணிலா ஒவ்வொரு அரையாண்டின் தொடக்கத்திலும் ₹ 5,000 எடுத்துக் கொண்டார். கணக்கிடப்பட வேண்டிய எடுப்புகள் மீதான வட்டி ஆண்டுக்கு 4%. 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய எடுப்புகள் மீது வட்டி, சராசரி கால முறையைப் பயன்படுத்திக் கணக்கிடவும்.

தீர்வு

வெண்ணிலாவின் எடுப்புகள் மீதான வட்டி கணக்கிடுதல் (சராசரி கால முறையை பயன்படுத்தி)

மொத்த எடுப்புத் தொகை = 5,000 × 2 = ₹ 10,000

எடுப்புகள் ஒவ்வொரு அரையாண்டு இறுதியிலும் எடுத்திருந்தால், சராசரி காலம் = 9

எடுப்புகள் மீது வட்டி = மொத்த எடுப்புத் தொகை × வட்டி வீதம் × $\frac{\text{சராசரி காலம்}}{12}$

$$= ₹\ 10,000 \times \frac{4}{100} \times \frac{9}{12} = ₹\ 300$$

12th-Accountancy-Unit-03.indd 102 12/10/2021 12:50:51 AM

3.8 கூட்டாளிகளின் ஊதியம் மற்றும் கழிவு

சில நிறுவனங்களில் கூட்டாளிகளுக்கான உழைப்பூதியம், ஊதியம் அல்லது கழிவு போன்ற வகையில் அனுமதிக்கப்படலாம். இது கூட்டாளிகள் தங்கள் திறன் மற்றும் நிபுணத்துவம், மேலாண்மைப் பணி போன்ற பங்களிப்பினை நிறுவனத்திற்கு அளிப்பதால் வழங்கப்படுகிறது. அவ்வாறு அனுமதிக்கப்பட்டால் இது குறித்து கூட்டாண்மை ஒப்பாவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். கூட்டாண்மை ஏடுகளில் பதிவு செய்யப்பட வேண்டிய குறிப்பேட்டுப் பதிவுகள் பின்வருவன:

(அ) கூட்டாளிகளுக்குத் தரவேண்டிய ஊதியம் மற்றும் கழிவு

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	கூட்டாளியின் ஊதியம் க/கு ப		xxx	
	கூட்டாளியின் கழிவு க/கு ப		xxx	
	கூட்டாளியின் முதல் க/கு			xxx

(ஆ) கணக்காண்டின் இறுதியில் கூட்டாளிகளின் ஊதியம் மற்றும் கழிவு கணக்கை முடிக்க

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	இலாபநட்டப் பகிர்வு க/கு ப		xxx	
	கூட்டாளியின் ஊதியம் க/கு			xxx
	கூட்டாளியின் கழிவு க/கு			xxx

மாணவர் குறிப்பு: நிறுவனத்தில் இலாபம் இருந்தால் மட்டுமே கூட்டாளிகள் ஊதியம் பெற தகுதியுடையவராகிறார்கள். ஆகையால், இலாப நட்டப் பகிர்வு கணக்கு பற்று வைக்கப்படுகிறது. உழைப்பூதியம் கூட்டாளிகளுக்கு தரப்பட வேண்டியுள்ளதால் கூட்டாளிகளின் முதல்/நடப்புக் கணக்கு வரவு வைக்கப்படுகிறது.

கூட்டாளிகளின் கழிவு, நிகர இலாபத்தில் குறிப்பிட்ட விழுக்காடு, கழிவுக்கு முன் உள்ள நிகர இலாபத்தில் அல்லது கழிவுக்குப் பின் உள்ள நிகர இலாபத்தில் அனுமதிக்கப்படலாம். இது போன்ற நிலையில் கழிவு கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படுகிறது:

(i) கழிவுக்கு முன் உள்ள நிகர இலாபத்தில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் கழிவு

$$= \text{கழிவுக்கு முன் உள்ள நிகர இலாபம்} \times \frac{\text{கழிவு வீதம்}}{100}$$

(ii) கழிவுக்குப் பின் உள்ள நிகர இலாபத்தில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் கழிவு

$$= \text{கழிவுக்கு முன் உள்ள நிகர இலாபம்} \times \frac{\text{கழிவு வீதம்}}{100 + \text{கழிவு வீதம்}}$$

எடுத்துக்காட்டு 19

சையது, சாமுவேல் மற்றும் சுதாகர் மூவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அவர்கள் தங்கள் இலாப நட்டங்களை சமமாகப் பகிர்ந்து வருகின்றனர். அவர்கள் நிறுவனத்தின் தொழிலுக்கு அளித்த பங்களிப்புக்காக, கூட்டாண்மை ஒப்பாவணத்தின் விதிமுறைகளின் படி சாமுவேலிற்கு மாத ஊதியம் ₹ 2,000 அனுமதிக்கப்பட்டது மற்றும் சுதாகருக்கு கழிவு ஆண்டுக்கு ₹ 6,000 அனுமதிக்கப்பட்டது. கூட்டாளிகளுடைய முதல் மாறுபடும் முதல் எனக் கொண்டு தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

12th-Accountancy-Unit-03.indd 103 12/10/2021 12:50:52 AM

தீர்வு

சாமுவேலின் ஊதியம் = 2,000 × 12 = ₹ 24,000

சுதாகரின் கழிவு = ₹ 6,000

குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	சாமுவேலின் ஊதியம் க/கு ப		24,000	
	சாமுவேலின் முதல் க/கு			24,000
	(சாமுவேலின் ஊதியம் முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது)			
	சுதாகரின் கழிவு க/கு ப		6,000	
	சுதாகரின் முதல் க/கு			6,000
	(சுதாகரின் கழிவு முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது)			
	இலாப நட்டப் பகிர்வு க/கு ப		30,000	
	சாமுவேலின் ஊதியம் க/கு			24,000
	சுதாகரின் கழிவு க/கு			6,000
	(ஊதியம் மற்றும் கழிவு கணக்கிற்கு மாற்றப்பட்டது)			

எடுத்துக்காட்டு 20

முரளி மற்றும் சேது இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். முரளி, எந்தவொரு கழிவுக்கு முன் உள்ள நிகர இலாபத்தில் 10% கழிவாகப் பெற வேண்டும். சேது, அனைத்து கழிவுக்குப் பின் உள்ள நிகர இலாபத்தில் 10% கழிவாகப் பெற வேண்டும். 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய கழிவு கணக்கிடுவதற்கு முன்னர் உள்ள நிகர இலாபம் ₹ 1,10,000. முரளி மற்றும் சேதுவிற்கு தரவேண்டிய கழிவினைக் கண்டுபிடிக்கவும்.

தீர்வு

கழிவு கணக்கிடுதல்

முரளி:

$$= \text{கழிவுக்கு முன் உள்ள நிகர இலாபம்} \times \frac{\text{கழிவு வீதம்}}{100}$$

$$= 1,10,000 \times \frac{10}{100} = ₹\ 11,000$$

சேது:

முரளியின் கழிவிற்கு பின் உள்ள நிகர இலாபம் = 1,10,000 –11,000 = ₹ 99,000

$$\text{சேதுவின் கழிவு} = \text{கழிவுக்கு முன் உள்ள நிகர இலாபம்} \times \frac{\text{கழிவு வீதம்}}{100 + \text{கழிவு வீதம்}}$$

$$= 99,000 \times \frac{10}{(100+10)} = ₹\ 9,000$$

12th-Accountancy-Unit-03.indd 104 12/10/2021 12:50:52 AM

3.9 கூட்டாளிகளிடமிருந்து பெற்ற கடன் மீதான வட்டி

சிலநேரங்களில் ஒரு கூட்டாளி நிறுவனத்திற்கு கடன் அல்லது முன்பணம் வழங்கலாம். இச்சூழ்நிலையில் கூட்டாளியின் கடன் அல்லது முன்பண கணக்கு, ஏடுகளில் தனியாக பராமரிக்க வேண்டும். கூட்டாளிகள் தங்களின் கடன் அல்லது முன்பணம் மீது அவர்கள் ஒப்புக் கொண்ட விகிதத்தில் வட்டி பெற உரிமையுண்டு. அவ்வாறான ஒப்பந்தம் ஏதுமில்லாத போது கூட்டாளிகள் ஆண்டிற்கு 6% வட்டி பெற உரிமையுண்டு (இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932, பிரிவு 13 ஈ–ன்படி). கூட்டாண்மை நிறுவனத்தின் ஏடுகளில் கீழ்க்கண்ட குறிப்பேட்டுப் பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(அ) கூட்டாளிகளின் கடன் மீதான வட்டி வழங்கும் போது

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	கூட்டாளியின் கடன் மீதான வட்டி க/கு ப		xxx	
	கூட்டாளியின் கடன் க/கு			xxx

குறிப்பு: கூட்டாளியின் கடன் மீதான வட்டி, நிறுவனத்திற்கு ஒரு செலவு என்பதால் நிறுவனத்தின் ஏடுகளில் பற்று வைக்கப்படுகிறது. கடன் மீதான வட்டி, பெற வேண்டிய தொகை என்பதால், பொதுவாக கடன் தொகையுடன் கூட்டப்படுகிறது மற்றும் கூட்டாளிகளின் கடன் கணக்கில் வரவு செய்யப்படுகிறது.

(ஆ) கூட்டாளிகளின் கடன் மீதான வட்டி கணக்கை முடிக்க

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	இலாபநட்டக் க/கு ப		xxx	
	கூட்டாளியின் கடன் மீதான வட்டி க/கு			xxx

மாணவர் குறிப்பு: கூட்டாளிகளின் கடன் மீதான வட்டி ஒரு செலவு. அதாவது, நிறுவனத்தில் இலாபம் இருந்தாலும் அல்லது நட்டம் இருந்தாலும் இதைச் செலுத்த வேண்டும். ஆகையால், கூட்டாளிகளின் கடன் மீதான வட்டி இலாபநட்டக் கணக்கிற்கு மாற்றப்பட வேண்டும்.

3.10 கூட்டாளிகளுக்கிடையேயான இலாபப் பகிர்வு

நிறுவனத்தின் இலாபநட்டக் கணக்கின் படியான நிகர இலாபம், முதல் மீது வட்டி, எடுப்புகள் மீது வட்டி போன்ற சரிக்கட்டுதல்களுக்கு உட்பட்டது. இச்சரிக்கட்டுதல்களை இலாபநட்டப் பகிர்வு கணக்கு தயாரிப்பதன் மூலம் மேற்கொள்ளலாம். இலாப நட்டப் பகிர்வு கணக்கின் இருப்பாகவரும் இலாபமானது கூட்டாளிகளின் இலாபப் பகிர்வு விகிதத்தில் அவர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுகிறது. இலாபப் பகிர்வு விகிதம் இல்லையென்றால் சம விகிதத்தில் பகிர்ந்தளிக்கப் படுகிறது. கூட்டாளிகளுக்கிடையே இலாபம் பகிர்ந்தளிக்க ஏடுகளில் பின்வரும் குறிப்பேட்டுப்பதிவு செய்யப்பட வேண்டும்.

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	இலாபநட்டப் பகிர்வு க/கு ப		xxx	
	கூட்டாளிகள் முதல் / நடப்பு க/கு			xxx

குறிப்பு: நட்டம் ஏற்பட்டால் இப்பதிவினை மாற்றிப் பதிய வேண்டும்.

12th-Accountancy-Unit-03.indd 105 12/10/2021 12:50:52 AM

3.11 இலாபநட்டப் பகிர்வு கணக்கு

இலாபநட்டப் பகிர்வு கணக்கு இலாப நட்டக் கணக்கின் நீட்டிப்பாகும். இது கூட்டாளிகளிடமிருந்து பெற வேண்டிய தொகை மற்றும் கூட்டாளிகளுக்குச் செலுத்த வேண்டியது தொடர்பான நடவடிக்கைகளைச் சரிக்கட்டும் நோக்கத்திற்காக தயாரிக்கப்படுகிறது. இது அடிப்படையில் ஒரு பெயரளவு கணக்கு. நிகர இலாபம், எடுப்புகள் மீதான வட்டி போன்றவை இக்கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன. முதல் மீது வட்டி, ஊதியம் மற்றும் கூட்டாளிகளின் பிற உழைப்பூதியம் போன்றவை இக்கணக்கில் பற்று வைக்கப்படுகின்றன. இக்கணக்கின் இருப்பான இலாபம் அல்லது நட்டம், கூட்டாளிகளின் முதல் அல்லது நடப்புக் கணக்கிற்கு இலாபப் பங்கு விகிதத்தில் மாற்றப்படுகிறது.

3.11.1 இலாபநட்டப் பகிர்வு கணக்கின் படிவம்

இலாபநட்டப் பகிர்வு கணக்கின் படிவம் பின்வருமாறு:

ப **இலாபநட்டப் பகிர்வு கணக்கு** **வ**

விவரம்	₹	விவரம்	₹
கூட்டாளிகளின் முதல்மீது வட்டி க/கு	xxx	இலாபநட்டக் க/கு *	xxx
கூட்டாளிகளின் ஊதியம் க/கு	xxx	கூட்டாளிகளின் எடுப்புகள் மீதான	
கூட்டாளிகளின் கழிவுக/கு	xxx	வட்டி க/கு	xxx
கூட்டாளிகளின் முதல் / நடப்பு க/கு (இலாபம்)	xxx		
	xxx		xxx

*இலாபத் தொகை இலாப நட்டக் கணக்கிலிருந்து மாற்றப்பட்டது.

எடுத்துக்காட்டு 21

அருளப்பன் மற்றும் நல்லசாமி இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அவர்கள் தங்கள் இலாப நட்டங்களை 4:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். 2018, ஜனவரி 1 அன்று அவர்களுடைய முதல் முறையே ₹ 20,000 மற்றும் ₹ 10,000. கூட்டாண்மை ஒப்பாவணம் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகிறது:

(அ) முதல் மீது வட்டி ஆண்டுக்கு 5 % அனுமதிக்க வேண்டும்.

(ஆ) அருளப்பன் மற்றும் நல்லசாமி இருவருக்கும் விதித்த எடுப்புகள் மீதான வட்டி முறையே ₹ 200 மற்றும் ₹ 300 ஆகும்.

(இ) முதல் மீது வட்டி மற்றும் எடுப்புகள் மீதான வட்டி கழிப்பதற்கு முன் உள்ள நிறுவனத்தின் நிகர இலாபம் ₹ 18,000.

கூட்டாளிகளுடைய முதல் மாறுபடும் முதல் எனக் கொண்டு தேவையான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும் மற்றும் 2018, டிசம்பர் 31 ஆம் நாளைய இலாபநட்டப் பகிர்வு கணக்கையும் தயார் செய்யவும்.

12th-Accountancy-Unit-03.indd 106 12/10/2021 12:50:52 AM

தீர்வு

குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
2018	முதல் மீதான வட்டி க/கு ப		1,500	
டிசம்பர் 31	அருளப்பன் முதல் க/கு			1,000
	நல்லசாமி முதல் க/கு			500
	(முதல் மீதான வட்டி 5% அனுமதிக்கப்பட்டது)			
,,	இலாபநட்டப் பகிர்வு க/கு ப		1,500	
	முதல் மீதான வட்டி க/கு			1,500
	(முதல் மீதான வட்டி கணக்கு முடிக்கப்பட்டது)			
,,	அருளப்பன் முதல் க/கு ப		200	
	நல்லசாமி முதல் க/கு ப		300	
	எடுப்புகள் மீதான வட்டி க/கு			500
	(எடுப்புகள் மீதான வட்டி கணக்கிடப்பட்டது)			
,,	எடுப்புகள் மீதான வட்டி க/கு ப		500	
	இலாபநட்டப் பகிர்வு க/கு			500
	(எடுப்புகள்மீதான வட்டி கணக்கு முடிக்கப்பட்டது)			
,,	இலாபநட்டப் பகிர்வு க/கு ப		17,000	
	அருளப்பன் முதல் க/கு			13,600
	நல்லசாமி முதல் க/கு			3,400
	(இலாபம் முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது)			

ப 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாபநட்டப் பகிர்வு கணக்கு வ

விவரம்	₹	₹	விவரம்	₹
முதல் மீதான வட்டி க/கு:			இலாபநட்ட க/கு	18,000
அருளப்பன்		1,000	எடுப்புகள்மீதான வட்டி க/கு:	
நல்லசாமி		500	அருளப்பன்	200
கூட்டாளிகளின் முதல் க/கு: (இலாபம்)			நல்லசாமி	300
அருளப்பன் (4/5)	13,600			
நல்லசாமி (1/5)	3,400	**17,000**		
		18,500		18,500

12th-Accountancy-Unit-03.indd 107 12/10/2021 12:50:52 AM

எடுத்துக்காட்டு 22

துரை மற்றும் வேலன் 2018, ஏப்ரல் 1 அன்று கூட்டாண்மை ஒப்பந்தத்தில் ஈடுபட்டனர். துரை ₹ 25,000 மற்றும் வேலன் ₹ 30,000 முதலாக கொண்டுவந்தனர். ஒப்பந்தம் பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது:

(அ) துரை மற்றும் வேலன் இலாப நட்டங்களை 2:3 என்ற விகிதத்தில் பகிர வேண்டும்.

(ஆ) கூட்டாளிகளுக்கு முதல் மீது வட்டி ஆண்டுக்கு 5% தரப்பட வேண்டும்.

(இ) எடுப்புகள் மீதான வட்டி கணக்கிடப்பட வேண்டியது: துரை ₹ 300 மற்றும் வேலன் ₹ 450.

(ஈ) துரைக்கு ஊதியம் ஆண்டுக்கு ₹ 5,000 வழங்கப்பட வேண்டும் மற்றும்

(உ) வேலனுக்கு தரப்பட வேண்டிய கழிவு ₹ 2,000.

அவ்வாண்டில் வட்டி, ஊதியம் மற்றும் கழிவு போன்றவற்றை சரிக்கட்டுவதற்கு முன் நிறுவனம் ஈட்டிய இலாபம் ₹20,000. இலாபநட்டப் பகிர்வு கணக்கைத் தயாரிக்கவும்.

தீர்வு

ப 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாபநட்டப் பகிர்வு கணக்கு வ

விவரம்	₹	₹	விவரம்	₹
முதல் மீதான வட்டி க/கு:			இலாபநட்ட க/கு	20,000
துரை (25,000 x 5%)		1,250	எடுப்புகள் மீதான வட்டி க/கு:	
வேலன் (30,000 x 5%)		1,500	துரை	300
துரை ஊதிய க/கு		5,000	வேலன்	450
வேலன் கழிவு க/கு		2,000		
கூட்டாளிகளின் முதல் க/கு:				
(இலாபம் மாற்றப்பட்டது)				
துரை (11,000 x 2/5)	4,400			
வேலன் (11,000 x 3/5)	6,600	**11,000**		
		20,750		20,750

எடுத்துக்காட்டு 23

ரிச்சர்ட் மற்றும் ரிஸ்வான், 2018, ஜனவரி 1 அன்று முறையே ₹ 3,00,000 மற்றும் ₹ 2,00,000 முதலாகக் கொண்டு தொழில் தொடங்கினர்.

கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி,

(அ) முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6% தரப்பட வேண்டும்.

(ஆ) ரிஸ்வான் ஆண்டுக்கு ₹ 50,000 ஊதியம் பெற வேண்டும்.

(இ) முதல் மீது வட்டி மற்றும் ரிஸ்வானின் ஊதியத்தை கழித்த பின், கழிவுக்குப் பின் உள்ள இலாபத்தில் 10% ரிச்சர்ட் கழிவாகப் பெற வேண்டும்.

(ஈ) இரு கூட்டாளிகளுக்கு இடையேயான இலாபப் பகிர்வு விகிதம் 3:2.

அவ்வாண்டில் நிறுவனம் ஈட்டிய இலாபம் ₹ 3,00,000.

நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் – 31 இல் கணக்கு முடிக்கிறது எனக் கொண்டு இலாபநட்டப் பகிர்வு கணக்கை தயாரிக்கவும்.

12th-Accountancy-Unit-03.indd 108 12/10/2021 12:50:52 AM

தீர்வு

ப 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாபநட்டப் பகிர்வு கணக்கு வ

விவரம்	₹	₹	விவரம்	₹
முதல் மீதான வட்டி க/கு:			இலாபநட்ட க/கு	3,00,000
ரிச்சர்ட் (3,00,000 x 6%)	18,000			
ரிஸ்வான் (2,00,000 x 6%)	12,000	30,000		
ரிஸ்வான் ஊதிய க/கு		50,000		
ரிச்சர்ட் கழிவு க/கு		20,000		
கூட்டாளிகளின் முதல் க/கு: (இலாபம்)				
ரிச்சர்ட் (3/5)	1,20,000			
ரிஸ்வான் (2/5)	80,000	**2,00,000**		
		3,00,000		3,00,000

குறிப்பு:

கழிவு கணக்கிடுதல்:

கழிவுக்கு முன் உள்ள இலாபம் = 3,00,000 – (50,000+30,000) = ₹ 2,20,000

$$\text{கழிவு} = \text{கழிவுக்கு முன் உள்ள நிகர இலாபம்} \times \frac{\text{கழிவு வீதம்}}{100 + \text{கழிவு வீதம்}}$$

$$\text{கழிவு} = 2,20,000 \times \frac{10}{110} = ₹\ 20,000$$



வரையறுத்த பொறுப்பு கூட்டாண்மை

வரையறுத்த பொறுப்பு கூட்டாண்மை என்ற கூட்டாண்மை வகையில் கூட்டாளிகளின் பொறுப்பு அவர்கள் முதல் அளவிற்கு வரையறுக்கப்பட்டுள்ளது. இது தனது கூட்டாளிகளிடமிருந்து தனிப்பட்டு இயங்கும் ஒரு சட்டப்பூர்வமான நிறுவனம். இது வரையறுத்த பொறுப்பு கூட்டாண்மைச் சட்டம், 2008 விதி முறைகளின் படி உருவாக்கப்பட்டுள்ளது. இது நிலைப்பேற்றுத் தன்மை மற்றும் நீடித்த வாழ்வினை உடையது. வரையறுத்த பொறுப்பு கூட்டாண்மையின் கூட்டாளிகளுக்கிடையே ஏற்படும் எந்த மாற்றமும் இந்த நிறுவனத்தின் வாழ்வு, உரிமைகள் அல்லது பொறுப்புகளைப் பாதிப்பதில்லை. கூட்டாண்மைச் சட்டம், 1932 –ன் விதிமுறைகள் வரையறுத்த பொறுப்பு கூட்டாண்மைக்கு பொருந்துவதில்லை. ஒரு தனி நபர் அல்லது ஒரு கூட்டுருவாக்க அமைப்பு இதன் கூட்டாளி ஆகலாம். கூட்டாளிகள் தங்கள் தவறான செயல்கள் அல்லது விலக்குகளினால் நிறுவனத்தின் கடமைகளுக்கு பொறுப்பாவார்களே தவிர, இக்கூட்டாண்மை நிறுவனத்தின் கடமைகளுக்கு கூட்டாளிகள் தனிப்பட்ட முறையில் பொறுப்பாவதில்லை.

12th-Accountancy-Unit-03.indd 109 12/10/2021 12:50:53 AM

நினைவில் கொள்ள வேண்டியவை

- கூட்டாண்மை நிறுவனத்தில் இலாபம் மற்றும் நட்டங்கள் கூட்டாளிகள் ஒப்புக் கொண்ட இலாப விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இலாபப் பகிர்வு விகிதம் ஏதும் இல்லை எனில், இலாபங்கள் அல்லது நட்டங்களை கூட்டாளிகள் சமமாகப் பகிர்ந்து கொள்ளவேண்டும்.
- கூட்டாளிகளுக்கிடையே கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாதபோது முதல் மீது வட்டி, எடுப்புகள் மீது வட்டி மற்றும் ஊதியம் அல்லது பிற உழைப்பூதியம் போன்றவை எந்தக் கூட்டாளிக்கும் வழங்க வேண்டியதில்லை.
- கூட்டாளிகள் தங்களின் கடன் அல்லது முன்பணம் மீது அவர்கள் ஒப்புக் கொண்ட விகிதத்தில் வட்டி பெற உரிமையுண்டு. அவ்வாறான ஒப்பந்தம் ஏதுமில்லாத போது கூட்டாளிகள் ஆண்டிற்கு 6 % வட்டி பெற உரிமையுண்டு.
- நிலைமுதல் முறையை நிறுவனம் பின்பற்றும்போது ஒவ்வொரு கூட்டாளிக்கும் முதல் கணக்கையும் தயாரிப்பதுடன், நடப்புக் கணக்கையும் தயாரிக்க வேண்டும்.
- மாறுபடும் முதல் முறையைப் பின்பற்றும் போது, அனைத்துச் சரிக்கட்டுதல்களான கூட்டாளியால் கொண்டு வரப்பட்ட கூடுதல் முதல், கூட்டாளியின் இலாபப்பங்கு, முதல் மீது வட்டி, எடுப்புகள் மீது வட்டி போன்றவை முதல் கணக்கில் பதியப்பட வேண்டும்.
- இலாப நட்டப் பகிர்வுக் கணக்கில் முதல் மீது வட்டி, எடுப்புகள் மீது வட்டி மற்றும் கூட்டாளிகளின் ஊதியம் போன்ற அனைத்துச் சரிக்கட்டுதல்களும் செய்யப்படுகின்றன. இக்கணக்கு மூலம் கண்டறிந்த இலாபம், கூட்டாளிகளுக்கிடையே இலாபப் பகிர்வு விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

சுய ஆய்வு வினாக்கள்

CWOFV

I சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாத நிலையில் நிறுவனத்தின் இலாபம் கூட்டாளிகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுவது
   (அ) சமமான விகிதத்தில் (ஆ) முதல் விகிதத்தில்
   (இ) இரண்டும் (அ) மற்றும் (ஆ) (ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

2. கூட்டாளிகளுக்கிடையே கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாதபோது முதல் மீது வட்டி
   (அ) வழங்கப்படுவதில்லை (ஆ) வங்கி வீதத்தில் வழங்கப்படும்
   (இ) ஆண்டுக்கு 5 % வழங்கப்படும் (ஈ) ஆண்டுக்கு 6% வழங்கப்படும்

3. கூட்டாளிகளிடமிருந்து நிறுவனம் கடன்கள் பெற்றிருந்தால், அக்கடன்களுக்கு இந்திய கூட்டாண்மைச் சட்டம், 1932 –ன் படி வழங்கப்படும் வட்டி வீதம்
   (அ) ஆண்டுக்கு 8% (ஆ) ஆண்டுக்கு 12%
   (இ) ஆண்டுக்கு 5% (ஈ) ஆண்டுக்கு 6%

4. பின்வருவனவற்றில் எது இலாபநட்டப் பகிர்வு கணக்கில் காட்டப்படும்?
   (அ) அலுவலகச் செலவுகள் (ஆ) பணியாளர் ஊதியம்
   (இ) கூட்டாளியின் ஊதியம் (ஈ) வங்கிக்கடன் மீதான வட்டி

5. கூட்டாண்மை நிறுவனத்தில், நிலைமுதல் முறை பின்பற்றப்படும்போது, பின்வருவனவற்றுள் எது முதல் கணக்கில் காட்டப்படும்?
   (அ) கூடுதல் முதல் கொண்டுவந்தது (ஆ) முதல் மீது வட்டி
   (இ) எடுப்புகள் மீது வட்டி (ஈ) இலாபப் பகிர்வு

12th-Accountancy-Unit-03.indd 110 12/10/2021 12:50:53 AM

6. ஒரு கூட்டாளி ஒவ்வொரு மாத நடுவிலும் ஒரு குறிப்பிட்ட தொகையை வழக்கமாக எடுத்துக் கொள்ளும்போது, அந்த எடுப்புகள் மீது கணக்கிடப்படும் வட்டிக்குரிய மாதங்கள் சராசரியாக

(அ) 5.5 மாதங்கள் (ஆ) 6 மாதங்கள்

(இ) 12 மாதங்கள் (ஈ) 6.5 மாதங்கள்

7. பின்வருவனவற்றில் எது சரியற்ற இணை?

(அ) எடுப்புகள் மீது வட்டி – முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்

(ஆ) முதல் மீது வட்டி – முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்

(இ) கடன்மீது வட்டி – முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்

(ஈ) இலாபப் பகிர்வு – முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்

8. கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாதபோது கூட்டாளிகள் பெறத் தகுதியுடையது

(அ) சம்பளம் (ஆ) கழிவு

(இ) கடன் மீது வட்டி (ஈ) முதல் மீது வட்டி

9. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.

(அ) கூட்டாளிகள் இலாபம் மற்றும் நட்டத்தை சமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

(ஆ) கூட்டாளிகள் முதல் மீது வட்டி ஆண்டுக்கு 7% அனுமதிக்க வேண்டும்.

(இ) கூட்டாளிகளுக்கு சம்பளம் அல்லது ஊதியம் அனுமதிக்கப்பட மாட்டாது.

(ஈ) கூட்டாளிகளிடமிருந்து பெற்ற கடன் மீதான வட்டி ஆண்டுக்கு 6% அனுமதிக்க வேண்டும்.

10. எடுப்பு மீது வட்டி, முதல் மீது வட்டி மற்றும் ஊதியம் கழித்தபின் உள்ள இலாபம் ₹ 10,500. கீதா என்ற கூட்டாளி கழிவுக்குப்பின் உள்ள நிகர இலாபத்தில் 5% கழிவு பெற உரியவராயின் கழிவுத்தொகையை கண்டறியவும்.

(அ) ₹ 50 (ஆ) ₹ 150

(இ) ₹ 550 (ஈ) ₹ 500

விடை

1. (அ)	2. (அ)	3. (ஈ)	4. (இ)	5. (அ)	6. (ஆ)	7. (இ)	8. (இ)	9. (ஆ)	10. (ஈ)

II மிகக்குறுகிய வினாக்கள்

1. கூட்டாண்மை வரைவிலக்கணம் தரவும்.
2. கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?
3. நிலைமுதல் முறை என்றால் என்ன?
4. கூட்டாளி ஒருவருக்கு முதல் மீது வட்டி அனுமதிக்க மேற்கொள்ள வேண்டிய குறிப்பேட்டுப் பதிவு என்ன?
5. இலாபநட்டப் பகிர்வு கணக்கு ஏன் தயாரிக்கப்பட வேண்டும்?

III குறுகிய வினாக்கள்

1. கூட்டாண்மையின் சிறப்பியல்புகளைத் தரவும்.
2. கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கங்கள் ஏதேனும் ஆறினைத் தரவும்.
3. நிலைமுதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகளைத் தரவும்.
4. கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாதபோது, இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932–ன் படி கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து சிறு குறிப்பு தரவும்.

12th-Accountancy-Unit-03.indd 111 12/10/2021 12:50:53 AM

5. ஜெயராமன் என்ற கூட்டாளி ஒவ்வொரு மாத நடுவிலும் ₹ 10,000 எடுத்துக் கொண்டார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6% அனுமதிக்க வேண்டும். 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய எடுப்புகள் மீது வட்டி கணக்கிடவும்.

(விடை: எடுப்புகள் மீது வட்டி : ₹ 3,600)

IV பயிற்சி வினாக்கள்

1. ஆகாஷ், பாலா, சந்துரு மற்றும் டேனியல் ஆகியோர் ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகள். கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாதபோது பின்வருவனவற்றை எவ்வாறு மேற்கொள்வீர்கள்?

(i) ஆகாஷ் என்பவர் அதிக முதல் வழங்கியுள்ளார். அவர் முதல் மீது வட்டி ஆண்டுக்கு 10% கோருகிறார்.

(ii) பாலா ஒவ்வொரு மாதமும் ₹ 3,000 எடுத்துக் கொள்கிறார். ஏனைய கூட்டாளிகள் பாலாவிடம் ஆண்டுக்கு 8% எடுப்புகள் மீது வட்டி நிறுவனத்திற்கு அளிக்குமாறு கேட்கிறார்கள். ஆனால், பாலா அதனை ஒப்புக்கொள்ளவில்லை.

(iii) ஆகாஷ், இலாபத்தினை முதல் விகிதத்தில் பகிர்ந்தளிக்க வேண்டும் என்கிறார். ஆனால் பிற கூட்டாளிகள் அதனை ஒப்புக்கொள்ளவில்லை.

(iv) டேனியல் தனது முழு நேரத்தையும் தொழிலில் செலவிடுவதால் அவர் ஒவ்வொரு மாதமும் ₹ 10,000 ஊதியம் வேண்டுமென்று கோருகிறார்.

(v) சந்துருவால் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட கடன் ₹ 50,000. அவர் கடன் மீது வட்டி ஆண்டுக்கு 12% வேண்டுமென்று கோருகிறார்.

(விடை: (i) எந்த ஒரு கூட்டாளிக்கும் முதல் மீது வட்டி செலுத்த வேண்டியதில்லை;
(ii) கூட்டாளியின் எடுப்புகளுக்கு வட்டி கணக்கிடக் கூடாது;
(iii) இலாபங்கள் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்;
(iv) எந்தக் கூட்டாளிக்கும் ஊதியம் வழங்க வேண்டியதில்லை;
(v) கடன் மீது வட்டி ஆண்டுக்கு 6% செலுத்தப்பட வேண்டும்)

2. பின்வரும் தகவல்களிலிருந்து ரூபன் மற்றும் டெரி அவர்களின் முதல், நிலை முதல் எனக்கொண்டு, அவர்களின் முதல் கணக்குகளைத் தயாரிக்கவும்.

விவரம்	ரூபன் ₹	டெரி ₹
2018, ஏப்ரல் 1 அன்று முதல்	70,000	50,000
2018, ஏப்ரல் 1 அன்று நடப்புக் கணக்கு (வ)	25,000	15,000
கூடுதல் முதல் கொண்டு வந்தது	18,000	16,000
2018 – 2019 – ல் எடுப்புகள்	10,000	6,000
எடுப்புகள் மீது வட்டி	500	300
இலாபப் பங்கு (2018 – 2019)	35,000	25,800
முதல் மீது வட்டி	3,500	2,500
சம்பளம்	–	18,000
கழிவு	12,000	–

(விடை: முதல் கணக்கு இருப்பு: ரூபன் ₹ 88,000 (வ); டெரி ₹ 66,000 (வ)
நடப்புக் கணக்கு இருப்பு : ரூபன் ₹ 65,000 (வ); டெரி ₹ 55,000 (வ))

3. அருண் மற்றும் செல்வம் என்ற கூட்டாளிகள் தங்கள் முதல் கணக்குகளை நிலைமுதல் முறையில் பராமரித்து வருகின்றனர். பின்வரும் விவரங்களைக் கொண்டு கூட்டாளிகளின் முதல்

12th-Accountancy-Unit-03.indd 112 12/10/2021 12:50:53 AM

கணக்குகளைத் தயாரிக்கவும்.

விவரம்	அருண் ₹	செல்வம் ₹
2018, ஜனவரி 1 அன்று முதல்	2,20,000	1,50,000
2018, ஜனவரி 1 அன்று நடப்புக் கணக்கு	4,250(ப)	10,000(வ)
அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல்	–	70,000
சொந்த பயனுக்காக எடுத்தது	10,000	20,000
எடுப்புகள் மீது வட்டி	750	600
2018 ஆம் ஆண்டிற்கான இலாபப் பங்கு	22,000	15,000
முதல் மீது வட்டி	1,100	750
கழிவு	6,900	–
ஊதியம்	–	6,850

(விடை: முதல் கணக்கு இருப்பு: அருண் ₹ 2,20,000 (வ); செல்வம் ₹ 2,20,000 (வ)
நடப்புக் கணக்கு இருப்பு: அருண் ₹ 15,000 (வ); செல்வம் ₹ 12,000 (வ))

4. பின்வரும் தகவல்களிலிருந்து, பத்மினி, மற்றும் பத்மா என்ற கூட்டாளிகளின் முதல் மாறுபடும் முதல் எனக் கொண்டு அவர்களின் முதல் கணக்குகளைத் தயாரிக்கவும்.

விவரம்	பத்மினி ₹	பத்மா ₹
2018, ஜனவரி 1 அன்று முதல் (வரவிருப்பு)	5,00,000	4,00,000
2018 ஆம் ஆண்டில் எடுப்புகள்	70,000	40,000
எடுப்புகள் மீது வட்டி	2,000	1,000
2018 – ல் இலாபப் பங்கு	52,000	40,000
முதல் மீது வட்டி	30,000	24,000
ஊதியம்	45,000	–
கழிவு	–	21,000

(விடை: முதல் கணக்கு இருப்பு : பத்மினி ₹ 5,55,000 (வ); பத்மா ₹ 4,44,000 (வ))

5. மன்னன் மற்றும் ரமேஷ் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 3:2 என்ற இலாப விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். 2018, ஏப்ரல் 1 அன்று அவர்களின் முதல் முறையே மன்னன் ₹ 1,50,000 மற்றும் ரமேஷ் ₹ 1,00,000 ஆகும். அவர்களின் நடப்புக் கணக்குகள் ₹ 25,000 மற்றும் ₹ 20,000 என வரவிருப்பைக் காட்டியது. 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6% எனக் கணக்கிட்டு, அதற்குரிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(விடை: முதல் மீது வட்டி: மன்னன் ₹ 9,000; ரமேஷ் ₹ 6,000)

12th-Accountancy-Unit-03.indd 113 12/10/2021 12:50:53 AM

6. பிரகாஷ் மற்றும் சுப்ரியா என்ற இரு கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 5:3 என்ற இலாப விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2018, ஏப்ரல் 1 அன்று அவர்களின் முதல் கணக்குகளின் இருப்புகள் பிரகாஷ் ₹ 3,00,000 மற்றும் சுப்ரியா ₹ 2,00,000 ஆகும். 2018, ஜூலை 1 அன்று பிரகாஷ் கூடுதல் முதலாக ₹ 60,000 கொண்டு வந்தார். அவ்வாண்டில் சுப்ரியா ₹ 30,000 கூடுதல் முதல் கொண்டு வந்தார். 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6% எனக் கணக்கிட்டு, அதற்குரிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(விடை: முதல் மீது வட்டி: பிரகாஷ் ₹ 20,700; சுப்ரியா ₹ 12,900)

7. 2018, ஜனவரி 1 அன்று பேகம் மற்றும் பாத்திமா என்ற கூட்டாளிகளின் முதல் கணக்குகள் முறையே ₹ 50,000 மற்றும் ₹ 40,000 இருப்பினைக் காட்டியது. 2018, அக்டோபர் 1 அன்று பேகம் கூடுதல் முதலாக ₹ 10,000 கொண்டு வந்தார் மற்றும் 2018, மே 1 அன்று பாத்திமா கொண்டுவந்த கூடுதல் முதல் ₹ 9,000. டிசம்பர் 31, 2018 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 4% கணக்கிடவும்.

(விடை: முதல் மீது வட்டி: பேகம் ₹ 2,100; பாத்திமா ₹ 1,840)

8. சுபா மற்றும் சுதா என்ற கூட்டாளிகள் தங்கள் இலாப நட்டங்களை 2:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். அவர்களின் பின்வரும் இருப்புநிலைக் குறிப்பிலிருந்து 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 5% கணக்கிடவும்.

2018, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல் கணக்குகள்:			நிலைச் சொத்துகள்	70,000
சுபா	40,000		நடப்புச் சொத்துகள்	50,000
சுதா	60,000	1,00,000		
நடப்புப் பொறுப்புகள்		20,000		
		1,20,000		1,20,000

அவ்வாண்டில் சுபா மற்றும் சுதாவின் எடுப்புகள் முறையே ₹ 8,000 மற்றும் ₹ 10,000; அவ்வாண்டில் ஈட்டிய இலாபம் ₹ 30,000.

(விடை: முதல் மீது வட்டி: சுபா ₹ 1,800; சுதா ₹ 2,600)

9. இராஜன் மற்றும் தேவன் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாப நட்டங்களை 2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். அவர்களின் பின்வரும் இருப்புநிலைக் குறிப்பிலிருந்து 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6% கணக்கிடவும்.

2018, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல் கணக்குகள்:			பல்வகைச் சொத்துகள்	2,20,000
இராஜன்	1,00,000			
தேவன்	80,000	1,80,000		
இலாபநட்டப் பகிர்வு கணக்கு		40,000		
		2,20,000		2,20,000

2018, ஏப்ரல் 1 அன்று இராஜன் கொண்டுவந்த கூடுதல் முதல் ₹ 40,000 மற்றும் 2018, செப்டம்பர் 1 அன்று தேவன் கொண்டு வந்த கூடுதல் முதல் ₹ 30,000. அவ்வாண்டின் எடுப்புகள் முறையே இராஜன் ₹ 20,000, தேவன் ₹ 10,000 ஆகும். அவ்வாண்டில் ஈட்டிய இலாபம் ₹ 70,000.

(விடை: முதல் மீது வட்டி: இராஜன் ₹ 5,400; தேவன் ₹ 3,600)

12th-Accountancy-Unit-03.indd 114 12/10/2021 12:50:53 AM

10. அகமது மற்றும் பஷீர் வழங்கிய முதல் முறையே ₹ 60,000 மற்றும் ₹ 40,000. அவர்களின் இலாபப் பகிர்வு விகிதம் 2:1. அவ்வாண்டின் முதல் மீது வட்டி கணக்கிடுவதற்கு முன் இலாபம் ₹ 5,000. பின்வரும் நிலைகளில் முதல் மீதான வட்டித் தொகையைக் கணக்கிடவும்.

(i) முதல்மீது வட்டி குறித்து கூட்டாண்மை ஒப்பாவணத்தில் ஏதும் குறிப்பிடாத போது

(ii) கூட்டாண்மை ஒப்பாவணத்தின் படி, முதல்மீது வட்டி ஆண்டுக்கு 4% அனுமதிக்கப் படும்போது

(iii) கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி முதல்மீது வட்டி ஆண்டுக்கு 6% அனுமதிக்கும்போது

(விடை: (i) முதல்மீது வட்டி அனுமதிக்கப்படுவதில்லை.
(ii) போதிய இலாபம் இருப்பதால் முதல்மீது வட்டி வழங்கப்படும்.
அகமது: ₹ 2,400; பஷீர் ₹ 1,600
(iii) போதிய இலாபம் இல்லாததால், முதல்மீது வட்டி வழங்கப்பட இயலாது.
இலாபம் ₹ 5,000 கூட்டாளிகளின் முதல் விகிதமாகிய 3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்)

11. மணி என்ற கூட்டாளி 2018, செப்டம்பர் 1 அன்று ₹ 30,000 எடுத்துக்கொண்டார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6% என கணக்கிடப்பட வேண்டும். 2018, டிசம்பர் 31 அன்று எடுப்புகள் மீது வட்டி கணக்கிட்டு மாறுபடும் முதல் முறையில் அதற்குரிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(விடை: மணியின் எடுப்புகள் மீது வட்டி: ₹ 600)

12. சந்தோஷ் என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6% கணக்கிடப்பட வேண்டும். டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் 2018 ஆம் ஆண்டில் அவருடைய எடுப்புகள் பின்வருமாறு:

நாள்	₹
பிப்ரவரி 1	2,000
மே 1	10,000
ஜூலை 1	4,000
அக்டோபர் 1	6,000

எடுப்புகள் மீதான வட்டித் தொகையைக் கணக்கிடவும்.

(விடை: எடுப்புகள் மீது வட்டி : ₹ 720)

13. குமார் என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6% கணக்கிடப்பட வேண்டும். டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் 2018 ஆம் ஆண்டில் அவருடைய எடுப்புகள் பின்வருமாறு:

நாள்	₹
மார்ச் 1	4,000
ஜூன் 1	4,000
செப்டம்பர் 1	4,000
டிசம்பர் 1	4,000

எடுப்புகள் மீது வட்டி கணக்கிடவும்.

(விடை: குமாரின் எடுப்புகள் மீது வட்டி : ₹ 440)

14. 2018 ஆம் ஆண்டில் மேத்யூ என்ற கூட்டாளி எடுத்த எடுப்புகள் ₹ 20,000. எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 10% என கணக்கிடப்பட்டது. 2018, டிசம்பர் 31 அன்று எடுப்புகள் மீது வட்டி கணக்கிடவும்.

(விடை: எடுப்புகள் மீது வட்டி: ₹ 1,000)

12th-Accountancy-Unit-03.indd 115 12/10/2021 12:50:53 AM

15. சந்தோஷ் என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6% கணக்கிடப்பட வேண்டும். 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டில் அவருடைய எடுப்புகள் பின்வருமாறு:

நாள்	₹
பிப்ரவரி 1	2,000
மே 1	10,000
ஜூலை 1	4,000
அக்டோபர் 1	6,000

பெருக்குத் தொகை முறையைப் பயன்படுத்தி எடுப்புகள் மீது வட்டி கணக்கிடவும்.

(விடை: எடுப்புகள் மீது வட்டி: ₹ 720)

16. கவிதா என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. அவர் வழக்கமாக ஒவ்வொரு மாதமும் ₹ 2,500 எடுத்துக் கொள்கிறார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 4% கணக்கிடப்பட வேண்டும். எடுப்புகள் மீது வட்டி சராசரி கால முறையைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் கணக்கிடவும். அவர்

(i) ஒவ்வொரு மாதத் தொடக்கத்தில் எடுத்திருந்தால்

(ii) ஒவ்வொரு மாத இடையில் எடுத்திருந்தால்

(ii) ஒவ்வொரு மாத இறுதியில் எடுத்திருந்தால்

(விடை: எடுப்புகள் மீது வட்டி: (i) ₹ 650 (ii) ₹ 600 (iii) ₹ 550)

17. கெவின் மற்றும் பிரான்சிஸ் இருவரும் கூட்டாளிகள். கெவின் ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் ₹ 5,000 எடுத்துக் கொண்டார். எடுப்புகள் மீதான வட்டி ஆண்டுக்கு 6%. 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய எடுப்புகள் மீது வட்டி சராசரி கால முறையைப் பயன்படுத்தி கணக்கிடவும்.

(விடை: எடுப்புகள் மீது வட்டி: கெவின்: ₹ 450)

18. ராம் மற்றும் ஷியாம் இருவரும் கூட்டாளிகள். ராம் ஒவ்வொரு அரையாண்டின் தொடக்கத்திலும் ₹ 18,000 எடுத்துக் கொண்டார். எடுப்புகள் மீதான வட்டி ஆண்டுக்கு 10%. 2018, டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய எடுப்புகள் மீது வட்டி சராசரி கால முறையைப் பயன்படுத்திக் கணக்கிடவும்.

(விடை: எடுப்புகள் மீது வட்டி: ராம்: ₹ 2,700)

19. ஜனனி, கமலி மற்றும் லட்சுமி மூவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அவர்கள் தங்கள் இலாப நட்டங்களை சமமாகப் பகிர்ந்து வருகின்றனர். அவர்கள் நிறுவனத்தின் தொழிலுக்கு அளித்த பங்களிப்புக்காக, கூட்டாண்மை ஒப்பாவணத்தின் விதிமுறைகளின் படி, கமலிக்கு மாத ஊதியம் ₹ 10,000 அனுமதிக்கப்பட்டது மற்றும் லட்சுமிக்கு கழிவு ஆண்டுக்கு ₹ 40,000 அனுமதிக்கப்பட்டது. கூட்டாளிகளுடைய முதல் மாறுபடும் முதல் எனக் கொண்டு தேவையான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

20. சிபி மற்றும் மனோஜ் இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். சிபி எந்தவொரு கழிவுக்கு முன் உள்ள நிகர இலாபத்தில் 20% கழிவாகப் பெற வேண்டும். மனோஜ், அனைத்து கழிவுக்குப் பின் உள்ள நிகர இலாபத்தில் 20% கழிவாகப் பெற வேண்டும். 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய கழிவு கணக்கிடுவதற்கு முன்னர் உள்ள நிகர இலாபம் ₹ 60,000. சிபி மற்றும் மனோஜின் கழிவினைக் கண்டுபிடிக்கவும். மேலும் இலாபப் பகிர்வினையும் கணக்கிடவும்.

(விடை: கழிவு: சிபி: ₹ 12,000; மனோஜ்: ₹ 8,000)

(விடை: இலாபப் பங்கு: சிபி: ₹ 20,000; மனோஜ்: ₹ 20,000)

12th-Accountancy-Unit-03.indd 116 12/10/2021 12:50:54 AM

21. ஆனந்த் மற்றும் நாராயணன் இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அவர்கள் தங்கள் இலாப நட்டங்களை 5:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். 2018, ஜனவரி 1 அன்று அவர்களுடைய முதல் முறையே ₹ 50,000 மற்றும் ₹ 30,000. கூட்டாண்மை ஒப்பாவணம் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகிறது:

(அ) முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6% அனுமதிக்க வேண்டும்.

(ஆ) ஆனந்த் மற்றும் நாராயணனுக்கு விதித்த எடுப்புகள் மீதான வட்டி முறையே ₹ 1,000 மற்றும் ₹ 800.

(இ) முதல் மீது வட்டி மற்றும் எடுப்புகள் மீதான வட்டி கழிப்பதற்கு முன் உள்ள நிறுவனத்தின் நிகர இலாபம் ₹ 35,000.

கூட்டாளிகளுடைய முதல், மாறுபடும் முதல் எனக் கொண்டு தேவையான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும் மற்றும் 2018, டிசம்பர் 31 ஆம் நாளைய இலாபநட்டப் பகிர்வு கணக்கையும் தயார் செய்யவும்.

(விடை: இலாபப் பங்கு : ஆனந்த் ₹ 20,000 ; நாராயணன் ₹ 12,000)

22. தினேஷ் மற்றும் சுகுமார் 2018, ஜனவரி 1 அன்று கூட்டாண்மை ஒப்பந்தத்தில் ஈடுபட்டனர். தினேஷ் ₹ 1,50,000 மற்றும் சுகுமார் ₹ 1,20,000 முதலாக கொண்டுவந்தனர். ஒப்பந்தம் பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது:

(அ) தினேஷ் மற்றும் சுகுமார் இலாப நட்டங்களை 2:1 என்ற விகிதத்தில் பகிர வேண்டும்.

(ஆ) கூட்டாளிகளுக்கு முதல் மீது வட்டி ஆண்டுக்கு 4% தரப்பட வேண்டும்.

(இ) எடுப்புகள் மீதான வட்டி கணக்கிடப்பட வேண்டியது தினேஷ் ₹ 3,600 மற்றும் சுகுமார் ₹ 2,200.

(ஈ) தினேஷிற்கு சம்பளம் ஆண்டுக்கு ₹ 60,000 வழங்கப்பட வேண்டும் மற்றும்

(உ) சுகுமாருக்கு தரப்பட வேண்டிய கழிவு ₹ 80,000.

2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டில் வட்டி, சம்பளம் மற்றும் கழிவு போன்றவற்றை சரிக்கட்டுவதற்கு முன் நிறுவனம் ஈட்டிய இலாபம் ₹ 2,20,000.

இலாபநட்டப் பகிர்வு கணக்கைத் தயாரிக்கவும்.

(விடை: இலாபப் பங்கு: தினேஷ் ₹ 50,000; சுகுமார் ₹ 25,000)

23. அந்தோணி மற்றும் ரஞ்சித் 2018, ஏப்ரல் 1 அன்று முறையே ₹ 4,00,000 மற்றும் ₹ 3,00,000 முதலாகக் கொண்டு தொழில் தொடங்கினர். கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி அந்தோணி ஆண்டுக்கு ₹ 90,000 ஊதியம் பெற வேண்டும். முதல் மீது வட்டி ஆண்டுக்கு 5% மற்றும் அந்தோனியின் ஊதியம் மற்றும் கழிவினை கழித்ததற்கு பின் உள்ள இலாபத்தில் 25% ரஞ்சித் கழிவாகப் பெற வேண்டும். இரு கூட்டாளிகளுக்கு இடையேயான இலாபப் பகிர்வு விகிதம் 1:1. அவ்வாண்டில் நிறுவனம் ஈட்டிய இலாபம் ₹ 3,65,000.

இலாபநட்டப் பகிர்வு கணக்கை தயாரிக்கவும். நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31–ல் கணக்கு முடிக்கிறது.

(விடை: கழிவு : ரஞ்சித் ₹ 48,000; இலாபப் பங்கு: அந்தோணி ₹ 96,000, ரஞ்சித் ₹ 96,000)

12th-Accountancy-Unit-03.indd 117 12/10/2021 12:50:54 AM

நிகழ்வாய்வு

மலர் மற்றும் மணி இருவரும் நல்ல நண்பர்கள். அவர்கள் விளையாட்டுப் பொருள்களை வாங்கி விற்கும் தொழிலைத் தொடங்க விரும்பினார்கள். எனவே அவர்கள் ஒரு கூட்டாண்மையை உருவாக்கினார்கள். இருவரும் சம அளவு முதல் தொகையை கொண்டு வந்தனர். முதலினைத் தவிர மணி நிறுவனத்திற்கு கடன் வழங்கினார். இருப்பினும், கூட்டாண்மை ஒப்பாவணம் ஏதுமில்லை. விற்பனையில் சிறந்து விளங்கிய மலர் தன்னுடைய விற்பனைத் திறனால் தொழிலின் மதிப்பை உயர்த்தினார். நிறுவனம், முதல் மற்றும் நடப்பு கணக்கு ஆகிய இரண்டு தனிக் கணக்குகளைப் பராமரித்து வந்தது. தொழில் மிகவும் பிரபலமடைந்தது. ஆனால் கிடைக்கும் வருமானத்தில் செலவுகளை மேற்கொள்ள முடியாததால் நட்டம் ஏற்பட்டது. தொழிலின் முதலாண்டு இறுதியில் அவர்களுக்குள் பின்வருவனவற்றில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

1. மலர் தன்னுடைய கூடுதல் முயற்சிகளுக்காக மாதந்தோறும் ₹ 10,000 கோருகிறார். ஆனால் மணி இதனை ஏற்கவில்லை.
2. மணி தான் நிறுவனத்திற்கு வழங்கிய கடனுக்கு வட்டி கோருகிறார். ஆனால் மலர் நிறுவனத்தில் நட்டம் ஏற்பட்டதைக் கூறி, இதனை ஏற்கவில்லை.
3. மணி தன்னுடைய உறவினரை கூட்டாளியாகச் சேர்க்க விரும்பினார். ஆனால் மலர் இதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை.

அவர்கள் இருவரும் இப்பிரச்சினைகளைத் தீர்க்க உங்கள் உதவியை நாடுகிறார்கள்.

தொடர் ஆய்விற்கு

ஒரு தொழில் நன்கு வளர்ந்து நல்ல பெயரைப் பெற்றது. இதனை பணத்தால் மதிப்பிட்டு கணக்கேடுகளில் பதிவு செய்ய முடியுமா?

பார்வை

1. M C Shukla, T S Grewal and S C Gupta, Advanced Accounts, 19th ed., 2017, S.Chand Publishing, New Delhi.
2. R L Gupta and V K Gupta, Financial Accounting, 11th ed., 2014, Sultan Chand and Sons, New Delhi.
3. S P Jain and K L Narang, Advanced Accountancy Vol – I, 2016, Kalyani Publishers, New Delhi.
4. Dalston L Cecil and Jenitra L Merwin, Financial Accounting, 3rd ed., 2017, Learntech Press, Trichy.
5. Fundamentals of Accounting, 2017, The Institute of Chartered Accountants of India, New Delhi.

12th-Accountancy-Unit-03.indd 118 12/10/2021 12:50:54 AM

அலகு 4

கூட்டாண்மை கணக்குகள் – நற்பெயர்

பொருளடக்கம்

4.1 அறிமுகம்

4.2 நற்பெயரின் தன்மை

4.3 ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் நற்பெயர் மதிப்பினைத் தீர்மானிக்கும் காரணிகள்

4.4 கூட்டாண்மை நிறுவனத்தில் நற்பெயர் மதிப்பிடுவதன் தேவை

4.5 நற்பெயரின் வகைகள்

4.6 நற்பெயர் மதிப்பீட்டு முறைகள்

நினைவுகூற வேண்டிய கருத்துகள்

கூட்டாண்மை கணக்குகளில் நற்பெயர் குறித்து கற்பதற்கு முன் பின்வரும் கருத்துகளை நினைவில் கொள்ள வேண்டும்:

- கூட்டாண்மை நிறுவனத்தின் பொருள் மற்றும் இயல்புகள்
- புலனாகாச் சொத்துகளின் – பொருள்

கற்றல் நோக்கங்கள்

மாணவர்கள்

- கூட்டாண்மை நிறுவனத்தில் நற்பெயர் மதிப்பிடுவதன் தேவை மற்றும் அதனைத் தீர்மானிக்கும் காரணிகளைப் புரிந்து கொள்ளுதல்
- பல்வேறு நற்பெயர் மதிப்பீட்டு முறைகளைப் புரிந்து கொள்ளுதல்

தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய சொற்கள்

- நற்பெயர்
- சராசரி இலாபம்
- சாதாரண இலாபம்
- உயர் இலாபம்

Z82LM

12th-Accountancy-Unit-04.indd 119 12/9/2021 11:12:42 PM

4.1 அறிமுகம்



மாணவர் செயல்பாடு 4.1

இரவி என்பவர் நகரின் முக்கிய பகுதியில் 10 ஆண்டுகளுக்கு மேலாக பழக்கடை வைத்திருக்கிறார். அது ஒரு வாடகைக் கடையாகும். அவர் தன்னுடைய கடைக்கு நம்பிக்கையான வாடிக்கையாளர்களைப் பெற்றிருந்தார். வியாபாரம் தொடர்ச்சியாக அதிக இலாபம் ஈட்டும் வகையில் நல்ல முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தற்போது, இரவி வேறொரு நகரில் ஒரு பெரிய சிறப்பங்காடியை தொடங்க நினைக்கிறார். அவர் பிறருக்கு கொடுக்க வேண்டிய அனைத்துக் கடன்களையும் தீர்த்து விட்டார். அவருடைய நண்பர் இராஜா, இரவியின் தொழிலை வாங்கி, அதிலிருந்த விற்காத அனைத்துப் பழங்களையும் எடுத்துக்கொண்டு, தொழிலை தொடர்ந்து நடத்தத் திட்டமிடுகிறார். இரவி தன்னுடைய வியாபாரத்தை விற்பதற்காக ₹ 1,00,000 கேட்டார். ஆனால் இராஜா, இரவி வைத்திருக்கும் சரக்கிருப்பின் தற்போதைய மதிப்பு ₹ 5,000 மட்டுமே எனக் கருதுகிறார். எனவே, அவர் அந்த தொழிலை வாங்கத் தயங்குகிறார். இராஜாவுக்கு உங்கள் ஆலோசனை என்ன? இரவி தான் வைத்திருக்கும் சொத்துகளின் மதிப்பைவிட அதிகமான விலையை கேட்கிறார் என்று ஏன் நீங்கள் நினைக்கிறீர்கள்?

ஒரு தொழிலுக்கு நன்மையை தரக்கூடிய அத்தொழிலின் புகழ் அல்லது நன்மதிப்பு நற்பெயர் ஆகும். இது, அத்தொழில் அதிக இலாபம் ஈட்ட உதவுகிறது. இது எதிர்காலத்தில் நிறுவனம் மிகுதியாக ஈட்டக்கூடிய வருமானங்களின் தற்போதைய மதிப்பு ஆகும். இது ஒரு புலனாகாச் சொத்து. ஏனெனில், இதற்கென்று தனியாக உருவம் ஏதுமில்லை. இது இருப்புநிலைக் குறிப்பில் நிலைச்சொத்துகளின் கீழ் காட்டப்பெறும்.

ஒரு பழமையான மற்றும் சிறப்பாக உருவாக்கப்பட்டு நீண்டகாலமாக இயங்கி வரும் தொழில் நிறுவனம் பொதுமக்களிடையே புகழ் மற்றும் நன்மதிப்பினைப் பெறுகிறது. அதற்கு காரணம் நல்ல தரமான பொருள் மற்றும் சேவை, தொழிலின் அமைவிடம் போன்றவை ஆகும். இதனால், இந்நிறுவனம் ஒரு புதிய நிறுவனத்தோடு ஒப்பிடும்போது, அதிக இலாபத்தை ஈட்ட உதவுகிறது. அந்த பண மதிப்பிலான நன்மையே நற்பெயர் ஆகும்.

4.2 நற்பெயரின் தன்மை

நற்பெயரின் தன்மைகளைப் பின்வருமாறு விளக்கலாம்:

(i) நற்பெயர் ஒரு புலனாகா நிலைச்சொத்து. இதற்கென்று தனியாக உருவம் ஏதுமில்லாததால், இது ஒரு புலனாகாச் சொத்து. இதை பார்க்கவோ, தொட்டுணரவோ முடியாது.

(ii) இது தொழில் நிறுவனத்தின் இலாபத்தன்மையைப் பொறுத்து திட்டவட்டமான மதிப்பைக் கொண்டுள்ளது.

(iii) இதனை தொழில் நிறுவனத்திடமிருந்து பிரிக்க இயலாது.

(iv) இது அதிக இலாபம் ஈட்டுவதற்கும் மற்றும் அதிக வாடிக்கையாளர்களைக் கவர்வதற்கும் உதவுகிறது.

(v) தொழில் நிறுவனத்தை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ வாங்கும்போது அல்லது விற்கும் போது மட்டுமே நற்பெயரை வாங்கவோ அல்லது விற்கவோ முடியும்.



மாணவர் செயல்பாடு 4.2

ஒரு கூட்டாளியை நேர்காணல் செய்யவும். கூட்டாண்மை நிறுவனத்தின் நற்பெயருக்கு பங்களிக்கும் காரணிகளை அவருடன் விவாதித்து உங்கள் கண்டுபிடிப்புகளை வகுப்பில் உள்ள அனைவருக்கும் தெரியப்படுத்தவும்.

12th-Accountancy-Unit-04.indd 120 12/9/2021 11:12:42 PM

4.3 ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் நற்பெயர் மதிப்பினைத் தீர்மானிக்கும் காரணிகள்

பொதுவாக, ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் நற்பெயர் மதிப்பினைத் தீர்மானிக்கும் காரணிகள் பின்வருமாறு:

(i) நிறுவனத்தின் இலாபம் ஈட்டும் திறன்

நிறுவனத்தின் இலாபம் ஈட்டும் திறன் நற்பெயரின் மதிப்பினைத் தீர்மானிக்கிறது. அதிக இலாபம் ஈட்டும் ஒரு நிறுவனம் அல்லது எதிர்காலத்தில் அதிக இலாபம் ஈட்டும் திறனைக் கொண்டுள்ள ஒரு நிறுவனம் அதிகமான நற்பெயர் மதிப்பினைக் கொண்டிருக்கும்.

(ii) வியாபார நிறுவனத்தின் சாதகமான அமைவிடம்

வியாபார நிறுவனமானது வாடிக்கையாளர்களால் எளிதில் சென்றடையக்கூடிய முக்கிய இடத்தில் அமைந்திருந்தால், அது அதிக வாடிக்கையாளர்களைக் கவரும். முக்கியமற்ற இடங்களில் அமைந்துள்ள நிறுவனத்தோடு ஒப்பிடுகையில், இந்நிறுவனத்தின் விற்பனை மற்றும் இலாபம் அதிகமாக இருக்கும். எனவே, அந்நிறுவனம் அதிக மதிப்பிலான நற்பெயரைக் கொண்டிருக்கும்.

(iii) நல்ல தரமான பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குதல்

நல்ல தரமான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதால் வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றிருக்கும் நிறுவனத்தின் நற்பெயர் அதிகமாக இருக்கும்.

(iv) வியாபார நிறுவனத்தின் கால அளவு

நீண்ட ஆண்டுகள் வணிகத்தை நடத்திவரும் நிறுவனத்தை வாடிக்கையாளர் நன்கு அறிந்திருப்பதால் அந்த நிறுவனம் அதிக நன்மதிப்பைக் கொண்டிருக்கும். அந்நிறுவனத்தை புதிய நிறுவனத்துடன் ஒப்பீடு செய்யும்போது, அதிக வருமானம் மற்றும் அதிக மதிப்பிலான நற்பெயரைப் பெற்றிருக்கும்.

(v) திறமைமிகு மேலாண்மை

திறமையான மேலாண்மைத் திறன் கொண்டிருக்கும் நிறுவனம், திறமை குறைந்த மேலாண்மைத் திறன் கொண்டுள்ள நிறுவனத்தோடு ஒப்பிடுகையில் அதிகமான இலாபம் ஈட்டும் மற்றும் அதிக மதிப்பிலான நற்பெயரைக் கொண்டிருக்கும்.

(vi) போட்டியின் அளவு

போட்டியே இல்லாத அல்லது குறைவான போட்டியைக் கொண்டுள்ள நிறுவனத்தின் நற்பெயர் மதிப்பு அதிகமானதாக இருக்கும்.

(vii) பிற காரணிகள்

உரிமையாளரின் பிரபலம், ஈர்க்கக்கூடிய விளம்பரம், வாடிக்கையாளரிடம் நெருங்கிய தொடர்பு போன்ற பிற காரணிகளும் தொழிலின் நற்பெயரின் மதிப்பை உயர்த்தக்கூடியதாகும்.

மாணவர் செயல்பாடு 4.3

ஏதேனும் ஐந்து வணிகத்தின் அடையாளச் சின்னங்களை சேகரித்து உங்களது நண்பனை அந்நிறுவனத்தின் பெயரை அடையாளம் காணச் செய்யவும்.

4.4 கூட்டாண்மை நிறுவனங்களின் நற்பெயரை மதிப்பீடு செய்வதற்கான தேவை

கூட்டாண்மை நிறுவனங்களில் கூட்டாளிகளின் பரஸ்பர உரிமைகளில் மாற்றம் ஏற்படும்போதெல்லாம் நற்பெயர் மதிப்பீடுச் செய்வதற்கான தேவை எழுகிறது. கூட்டாளிகளின் உரிமைகளைக் காக்கும் பொருட்டு பின்வரும் சூழ்நிலைகளில் நற்பெயரை மதிப்பிடுவதற்கான தேவை எழுகிறது:

12th-Accountancy-Unit-04.indd 121 12/9/2021 11:12:42 PM

(i) இலாபப் பகிர்வு விகிதத்தில் மாற்றம் ஏற்படும்போது

(ii) கூட்டாண்மை நிறுவனத்தில் புதிய கூட்டாளி சேர்க்கப்படும்போது

(iii) கூட்டாண்மை நிறுவனத்தில் இருக்கும் கூட்டாளி ஒருவர் நிறுவனத்தை விட்டு விலகும் போது அல்லது கூட்டாளி ஒருவர் இறக்கும் போது

(iv) ஒரு கூட்டாண்மை நிறுவனத்தைக் கலைக்கும் போது

4.5 நற்பெயரின் வகைகள்

நற்பெயரை, வாங்கப்பட்ட நற்பெயர் மற்றும் தன்னுருவாக்க நற்பெயர் என வகைப்படுத்தலாம்.

(i) வாங்கப்பட்ட அல்லது பெறப்பட்ட நற்பெயர்

நற்பெயரானது, ரொக்கம் அல்லது பொருளைச் செலுத்தி பெறப்பட்டிருந்தால் அது வாங்கப்பட்ட அல்லது பெறப்பட்ட நற்பெயர் என்றழைக்கப்படுகிறது. ஒரு நிறுவனம் ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கும் நிறுவனத்தை வாங்கும்போது அதற்காகச் செலுத்தப்படும் தொகையானது வாங்கப்பெறும் நிறுவனத்தின் நிகரச் சொத்துகளை (சொத்துகள் – பொறுப்புகள்) விட கூடுதலாக இருக்கலாம். பெறப்பட்ட நிகரச் சொத்துகளின் மதிப்பைவிட கூடுதலாக உள்ள கொள்முதல் மறுபயன் வாங்கப்பட்ட நற்பெயர் என்று கருதப்படுகிறது. இந்திய கணக்கியல் தரநிலை 10 (AS10) – ல் நிலைச்சொத்துகள் கணக்கியல் குறித்துக் கூறுகையில், நற்பெயருக்காக பணமோ அல்லது பணத்தின் மதிப்போ மறுபயனாகச் செலுத்தப்பட்டிருந்தால் மட்டும் அந்நற்பெயரானது கணக்கேடுகளில் பதியப்பெறுதல் வேண்டும். ஆகையால், வாங்கப்பட்ட நற்பெயரானது கணக்கேடுகளில் பதியப்படலாம். அது இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கத்தில் நிலைச்சொத்தின் கீழ் காட்டப்பட வேண்டும்.

(ii) தன்னுருவாக்க நற்பெயர்

தொழிலின் சிறப்பம்சங்களான சாதகமான இடவமைவு, நம்பகமான வாடிக்கையாளர்கள் போன்ற சிறப்பியல்புகளை அடிப்படையாகக் கொண்டு, நிறுவனமே தானாக உருவாக்கிக் கொள்ளும் நற்பெயரே தன்னுருவாக்க நற்பெயர் ஆகும். இவ்வகை தன்னுருவாக்க நற்பெயர் கணக்கேடுகளில் பதிவு செய்யப்படக்கூடாது.

4.6 நற்பெயரை மதிப்பிடும் முறைகள்

பொதுவாக நற்பெயரை பின்வரும் முறைகளில் மதிப்பிடலாம்.

4.6.1 சராசரி இலாப அடிப்படையில்

இம்முறையில் நற்பெயரானது, கடந்த சில ஆண்டுகளின் சராசரி இலாபத்தைக் கொள்முதல் செய்வதன் மூலம் மதிப்பிடப்படுகிறது. ஒரு புதிய நிறுவனம் ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கும் நிறுவனத்தின் தற்போதைய நிலையை அடைவதற்கு சராசரியாக எடுத்துக்கொள்ளும் காலத்தை பொதுவாக அடிப்படையாகக் கொண்டு கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படுகிறது. கடந்த ஆண்டுகளின் சராசரி இலாபத்தை எதிர்காலத்தில் எத்தனை ஆண்டுகள் ஈட்ட முடியும் என்பதை அடிப்படையாகக் கொண்டும் இதனை நிர்ணயம் செய்யலாம்.

சராசரி இலாபம் கணக்கிடும்போது, பிழைகளைத் திருத்தம் செய்வதுடன், பின்வரும் சரிக்கட்டுதல்களை செய்ய வேண்டும்.

சரிக்கட்டப்பட்ட இலாபம் = ஈட்டப்பட்ட இலாபம்

+ எதிர்காலத்தில் தேவைப்படாத கடந்தகாலச் செலவுகள்

– எதிர்காலத்தில் ஈட்டமுடியாத கடந்தகால வருமானங்கள்

+ எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் கூடுதல் வருமானங்கள்

- எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் கூடுதல் செலவுகள்

சராசரி இலாபமானது, சாதாரண சராசரி இலாபமாகவோ அல்லது கூட்டு சராசரி இலாபமாகவோ இருக்கலாம்.

12th-Accountancy-Unit-04.indd 122 12/9/2021 11:12:42 PM

(அ) சாதாரண சராசரி இலாப முறை

இம்முறையில் நற்பெயரானது, சராசரி இலாபத்தை குறிப்பிட்ட கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கையால் பெருக்குவதன் மூலம் கணக்கிடப்படுகிறது. சாதாரண சராசரி இலாபம், சரிக்கட்டப்பட்ட சில ஆண்டுகளின் இலாபத்தைக் கூட்டி அதை மொத்த ஆண்டுகளின் எண்ணிக்கையால் வகுப்பதன் மூலம் கணக்கிடப்படுகிறது.

நற்பெயர் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

$$\text{சராசரி இலாபம்} = \frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$$

எடுத்துக்காட்டு 1

ஒரு நிறுவனத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளின் இலாபங்கள் பின்வருமாறு:
2014: ₹ 4,000; 2015: ₹ 3,000; 2016: ₹ 5,000; 2017: ₹ 4,500 மற்றும் 2018: ₹ 3,500
5 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

தீர்வு

நற்பெயர் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

$$\text{சராசரி இலாபம்} = \frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$$

$$= \frac{4,000 + 3,000 + 5,000 + 4,500 + 3,500}{5}$$

$$= \frac{20,000}{5} = ₹\ 4,000$$

நற்பெயர் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

$= 4,000 \times 3 = ₹\ 12,000$

எடுத்துக்காட்டு 2

ஒரு நிறுவனத்தின் கடந்த நான்கு ஆண்டுகளின் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் பின்வருமாறு:
2015: ₹ 15,000; 2016: ₹ 17,000; 2017: ₹ 6,000 (நட்டம்); 2018: ₹ 14,000
4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 5 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

தீர்வு

நற்பெயர் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

$$\text{சராசரி இலாபம்} = \frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$$

$$= \frac{15,000 + 17,000 - 6,000 + 14,000}{4}$$

$$= \frac{40,000}{4} = ₹\ 10,000$$

நற்பெயர் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

$= 10,000 \times 5 = ₹\ 50,000$

12th-Accountancy-Unit-04.indd 123 12/9/2021 11:12:43 PM

எடுத்துக்காட்டு 3

ஒரு கூட்டாண்மை நிறுவனம் விலகும் கூட்டாளி ஒருவரின் கணக்கைத் தீர்ப்பதற்காக நற்பெயரை மதிப்பிட முடிவு செய்தது. அந்த நிறுவனத்தின் கடந்த நான்கு ஆண்டுகளின் இலாபங்கள் பின்வருமாறு:

2015: ₹ 40,000; 2016: ₹ 50,000; 2017: ₹ 48,000 ; 2018: ₹ 46,000

வியாபாரம் கூட்டாளிகளில் ஒருவரால் நடத்தப்பட்டது. அவருக்கு எவ்வித ஊதியமும் வழங்கப்படவில்லை. அக்கூட்டாளியின் நியாயமான ஊதியம் ஆண்டுக்கு ₹ 6,000 என மதிப்பிடப்பட்டது.

கடந்த 4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

தீர்வு

$$\text{சராசரி இலாபம்} = \frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$$

$$= \frac{40,000 + 50,000 + 48,000 + 46,000}{4}$$

$$= \frac{1,84,000}{4} = ₹\ 46,000$$

கூட்டாளியின் ஊதியத்தினைச் சரிக்கட்டுவதற்கு முன் சராசரி இலாபம்	=	₹ 46,000
கழிக்க: கூட்டாளியின் ஊதியம்	=	6,000
சராசரி இலாபம்	=	40,000

நற்பெயர் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

= 40,000 × 3 = ₹ 1,20,000

எடுத்துக்காட்டு 4

அருள் வணிக நிறுவனத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து 3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

(அ) டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுகளான 2016, 2017 மற்றும் 2018 ன் இலாபங்கள் முறையே ₹ 46,000, ₹ 44,000, மற்றும் ₹ 50,000.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹ 5,000 சேர்ந்துள்ளது.

(இ) 2017ஆம் ஆண்டின் இறுதிச் சரக்கிருப்பு ₹ 10,000 அதிகமாக மதிப்பிடப்பட்டது.

தீர்வு

சரிக்கட்டப்பட்ட இலாபம் கணக்கிடுதல்

விவரம்	2016 ₹	2017 ₹	2018 ₹
இலாபம்	46,000	44,000	50,000
கழிக்க: திரும்பத் திரும்ப நிகழா வருமானம்	5,000	-	-
	41,000	44,000	50,000
கழிக்க: இறுதிச் சரக்கிருப்பு அதிகமாக மதிப்பிடப்பட்டது	-	10,000	-
	41,000	34,000	50,000
கூட்டுக: தொடக்கச் சரக்கிருப்பு அதிகமாக மதிப்பிடப்பட்டது	-	-	10,000
சரிக்கட்டப்பட்ட பின் இலாபம்	41,000	34,000	60,000

மாணவர் குறிப்பு: 2017 ல் இறுதிச் சரக்கிருப்பின் மதிப்பு அதிகமாக மதிப்பிடப்பட்டிருக்கும் போது 2018–ல் தொடக்கச் சரக்கிருப்பு அதிகமாக மதிப்பிடப்பட்டதாகிறது.

12th-Accountancy-Unit-04.indd 124 12/9/2021 11:12:43 PM

$$\text{சராசரி இலாபம்} = \frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$$

$$= \frac{41,000 + 34,000 + 60,000}{3}$$

$$= \frac{1,35,000}{3} = ₹\ 45,000$$

நற்பெயர் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

$= 45,000 \times 2 = ₹\ 90,000$

எடுத்துக்காட்டு 5

கூட்டாண்மை அடிப்படையில் நடத்தப்படும் ஒரு வணிகத்தின் விவரங்கள் பின்வருமாறு:

(அ) ஈட்டிய இலாபங்கள் : 2016: ₹ 30,000; 2017: ₹ 29,000 மற்றும் 2018: ₹ 32,000.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹ 3,000 சேர்ந்துள்ளது.

(இ) சரக்கிருப்பு தீயினால் சேதமடைந்ததால் 2017 ஆம் ஆண்டின் இலாபத்தில் ₹ 2,000 குறைக்கப்பட்டது.

(ஈ) சரக்கிருப்பு காப்பீடு செய்யப்படவில்லை. ஆனால், எதிர்காலத்தில் காப்பீடு செய்வதென முடிவு செய்யப்பட்டது. அதற்கான காப்பீட்டுக் கட்டணம் ஆண்டுக்கு ₹ 5,600 என மதிப்பிடப்பட்டது.

3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

தீர்வு

சரிக்கட்டப்பட்ட இலாபம் கணக்கிடுதல்

விவரம்	2016 ₹	2017 ₹	2018 ₹
இலாபம்	30,000	29,000	32,000
கழிக்க: திரும்பத் திரும்ப நிகழா வருமானம்	3,000	-	-
	27,000	29,000	32,000
கூட்டுக: சரக்கிருப்பு தீயினால் சேதமடைந்தது (அசாதாரண நட்டம்)	-	2,000	-
சரிக்கட்டப்பட்ட பின் இலாபம்	27,000	31,000	32,000

$$\text{சராசரி இலாபம்} = \frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$$

$$= \frac{27,000 + 31,000 + 32,000}{3}$$

$$= \frac{90,000}{3} = ₹\ 30,000$$

12th-Accountancy-Unit-04.indd 125 12/9/2021 11:12:43 PM

விவரம்	₹
எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய காப்பீட்டு முனைமத்தினை சரிக்கட்டுவதற்கு முன் சராசரி இலாபம்	30,000
கழிக்க : எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய காப்பீட்டு முனைமம்	5,600
சராசரி இலாபம்	24,400

நற்பெயர் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

= 24,400 × 2

= ₹ 48,800

(ஆ) கூட்டு சராசரி இலாப முறை

இம்முறையில், நற்பெயரானது கூட்டு சராசரி இலாபத்தினைக் கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கையால் பெருக்குவதன் மூலம் கணக்கிடப்படுகிறது.

நற்பெயர் = கூட்டு சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

இம்முறையில், ஒவ்வொரு ஆண்டு இலாபத்தின் மீதும் நிறைகள் ஒதுக்கப்படுகின்றன. ஒதுக்கப்பட்ட நிறைகளை அந்தந்த ஆண்டின் இலாபத்தோடு பெருக்கி, கூட்டு இலாபம் கண்டறியப்படுகிறது. கூட்டு சராசரி இலாபம் கணக்கிட, கூட்டு இலாபத்தின் மொத்தத்தை ஒதுக்கப்பட்ட நிறைகளின் மொத்தத்தால் வகுக்க வேண்டும்.

$$\text{கூட்டு சராசரி இலாபம்} = \frac{\text{கூட்டு இலாபங்களின் மொத்தம்}}{\text{நிறைகளின் மொத்தம்}}$$

இம்முறையானது, இலாபத்தின் போக்கு படிப்படியாக அதிகரித்துக் கொண்டு அல்லது குறைந்து கொண்டு போகும்போது பயன்படுத்தப்படுகிறது. பொதுவாக, சமீபத்திய ஆண்டுகளின் இலாபத்திற்கு அதிக நிறை ஒதுக்கப்படுகிறது.

எடுத்துக்காட்டு 6

புதிய கூட்டாளி ஒருவரை சேர்ப்பதற்காக, ஒரு நிறுவனம் 4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் கூட்டு சராசரி இலாபத்தினை பயன்படுத்தி, நற்பெயரை மதிப்பிட முடிவு செய்தது. கடந்த நான்கு ஆண்டுகளின் இலாபங்கள் மற்றும் அந்தந்த ஆண்டுகளுக்கான நிறைகள் பின்வருமாறு:

விவரம்	2015	2016	2017	2018
இலாபம் (₹)	20,000	22,000	24,000	28,000
நிறை	1	2	3	4

நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

தீர்வு

கூட்டு சராசரி இலாப முறை கணக்கிடல்

ஆண்டு	இலாபம் (அ) ₹	நிறைகள் (ஆ)	கூட்டு இலாபம் (அ × ஆ) ₹
2015	20,000	1	20,000
2016	22,000	2	44,000
2017	24,000	3	72,000
2018	28,000	4	1,12,000
மொத்தம்		**10**	**2,48,000**

12th-Accountancy-Unit-04.indd 126 12/9/2021 11:12:43 PM

$$\text{கூட்டு சராசரி இலாபம்} = \frac{\text{கூட்டு இலாபங்களின் மொத்தம்}}{\text{நிறைகளின் மொத்தம்}}$$

$$= \frac{2,48,000}{10} = ₹\ 24,800$$

நற்பெயர் = கூட்டு சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

$= 24,800 \times 3 = ₹\ 74,400$

4.6.2 உயர் இலாப முறைகள்

இம்முறைகளில் நற்பெயரின் மதிப்பைக் கண்டறிய உயர் இலாபம் அடிப்படையாக உள்ளது. ஒரு வியாபாரத்தின் உயர் இலாபம் என்பது சாதாரண இலாபத்தை விட கூடுதலாக உள்ள சராசரி இலாபம் ஆகும்.

உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்

சராசரி இலாபம், குறிப்பிட்ட ஆண்டுகளின் சரிக்கட்டப்பட்ட ஈட்டிய இலாபங்கள் கூட்டப்பட்டு, மொத்த ஆண்டுகளின் எண்ணிக்கையால் வகுக்கப்படுவதன் மூலம் கண்டறியப்படுகிறது. சாதாரண இலாபம் என்பது ஒரே தன்மையுடைய வியாபார நிறுவனங்கள் சாதாரண சூழ்நிலைகளில் வழக்கமாக ஈட்டும் இலாபம் ஆகும்.

சாதாரண இலாபம் = பயன்படுத்தப்பட்ட முதல் × சாதாரண இலாப விகிதம்

பயன்படுத்தப்பட்ட முதல் = நிலைச் சொத்துகள் + நடப்புச் சொத்துகள் – நடப்புப் பொறுப்புகள்

சாதாரண இலாப விகிதம் = ஒரு தொழிலில் ஒரே தன்மையுடைய வியாபார நிறுவனங்கள் சாதாரண சூழ்நிலைகளில் ஈட்டும் இலாப விகிதம்.

(அ) உயர் இலாபத்தில் கொள்முதல் முறை

இம்முறையில், உயர் இலாபத்தை குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்குரிய கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கையால் பெருக்குவதன் மூலம் நற்பெயர் கணக்கிடப்படுகிறது.

நற்பெயர் = உயர் இலாபம் × கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

எடுத்துக்காட்டு 7

பின்வரும் விவரங்களிலிருந்து, உயர் இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

(i) பயன்படுத்தப்பட்ட முதல்: ₹ 2,00,000

(ii) சாதாரண இலாப விகிதம் 15%

(iii) வியாபாரத்தின் சராசரி இலாபம் ₹ 42,000

தீர்வு

சாதாரண இலாபம் = பயன்படுத்தப்பட்ட முதல் × சாதாரண இலாப விகிதம்

$= 2,00,000 \times 15\% = ₹\ 30,000$

உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்

$= 42,000 - 30,000$

$= ₹\ 12,000$

நற்பெயர் = உயர் இலாபம் × கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

$= 12,000 \times 3$

= ₹ 36,000

12th-Accountancy-Unit-04.indd 127 12/9/2021 11:12:44 PM

எடுத்துக்காட்டு 8

பின்வரும் விவரங்களிலிருந்து, உயர் இலாபத்தில் 5 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

(அ) பயன்படுத்தப்பட்ட முதல் : ₹ 1,20,000

(ஆ) சாதாரண இலாப விகிதம் : 20%

(இ) 5 ஆண்டுகளுக்குரிய நிகர இலாபம் :

2014: ₹ 30,000; 2015: ₹ 32,000; 2016: ₹ 35,000; 2017: ₹ 37,000 மற்றும் 2018: ₹ 40,000

(ஈ) கூட்டாளிகளுக்கான உழைப்பூதியம் ஆண்டுக்கு ₹ 2,800.

தீர்வு

$$\text{சராசரி இலாபம்} = \frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$$

$$= \frac{30,000 + 32,000 + 35,000 + 37,000 + 40,000}{5}$$

$$= \frac{1,74,000}{5} = ₹\ 34,800$$

விவரம்	₹
கூட்டாளிகளுக்கு உழைப்பூதியம் வழங்குவதற்கு முன் சராசரி இலாபம்	34,800
கழிக்க : கூட்டாளிகளுக்கான உழைப்பூதியம்	2,800
சராசரி இலாபம்	32,000

சாதாரண இலாபம் = பயன்படுத்தப்பட்ட முதல் × சாதாரண இலாப விகிதம்

= 1,20,000 × 20%

= ₹ 24,000

உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்

= 32,000 – 24,000

= ₹ 8,000

நற்பெயர் = உயர் இலாபம் × கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

= 8,000 × 5

= ₹ 40,000

(ஆ) ஆண்டுத்தொகை முறை

இம்முறையில், உயர் இலாபத்தினை ஆண்டுத்தொகை காரணியின் தற்போதைய மதிப்புடன் பெருக்குவதன் மூலம் நற்பெயரின் மதிப்பைக் கண்டறியலாம்.

நற்பெயர் = உயர் இலாபம் × ஆண்டுத்தொகை காரணியின் தற்போதைய மதிப்பு

ஆண்டுத்தொகை காரணியின் தற்போதைய மதிப்பு என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்டவட்டி வீதத்தில் ஒரு ரூபாயின் தற்போதைய ஆண்டு மதிப்பாகும். இதனை, ஆண்டுத்தொகை அட்டவணை அல்லது சூத்திரத்தைப் பயன்படுத்துவதன் மூலம் அறியலாம்.

12th-Accountancy-Unit-04.indd 128 12/9/2021 11:12:44 PM



ஆண்டுத்தொகை என்பது தொடர்ச்சியான இடைவெளிகளில் தொடர்ந்து சீராக பெறப்படும் ரொக்க ஓட்டத்தைக் குறிக்கும். குறிப்பிட்ட ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் ஒரு குறிப்பிட்ட வட்டி வீதத்தில் ஒரு ரூபாயின் தற்போதைய மதிப்பை ஆண்டுத்தொகை அட்டவணை காண்பிக்கும். கீழ்க்கண்ட சூத்திரத்தைப் பயன்படுத்தி ஆண்டுத்தொகைக் காரணி கணக்கிடப்படுகிறது.

$$\text{ஆண்டுத்தொகை காரணி} = \frac{(1+i)^n - 1}{i(1+i)^n}$$

அதில், i = வட்டி வீதம்
n = எதிர்நோக்கும் ஆண்டுகள்

எடுத்துக்காட்டு 9

பின்வரும் விவரங்களைக் கொண்டு, ஆண்டுத்தொகை முறையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

(அ) பயன்படுத்தப்பட்ட முதல் ₹ 50,000

(ஆ) சாதாரண இலாப விகிதம்: 10%

(இ) 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் இலாபங்கள் முறையே ₹ 13,000, ₹ 15,000 மற்றும் ₹ 17,000.

(ஈ) 3 ஆண்டுகளில் 10% வட்டி வீதத்தில் ₹ 1 ன் தற்போதைய ஆண்டுத்தொகை மதிப்பு ₹ 2.4868.

தீர்வு

$$\text{சராசரி இலாபம்} = \frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$$

$$= \frac{13,000 + 15,000 + 17,000}{3}$$

$$= \frac{45,000}{3}$$

$$= ₹\ 15,000$$

சாதாரண இலாபம் = பயன்படுத்தப்பட்ட முதல் x சாதாரண இலாப விகிதம்

$= 50,000 \times 10\%$

$= ₹\ 5,000$

உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்

$= 15,000 - 5,000$

$= ₹\ 10,000$

நற்பெயர் = உயர் இலாபம் x ஆண்டுத்தொகை மதிப்பு

$= 10,000 \times 2.4868 = ₹\ 24,868$

(இ) உயர் இலாபத்தினை மூலதனமாக்கல் முறை

இம்முறையில், சாதாரண இலாப விகிதத்தில் உயர் இலாபத்தை மூலதனமாக்கப்படுவதன் மூலம் நற்பெயரின் மதிப்பு கணக்கிடப்படுகிறது. அதாவது, மூலதனமாக்கப்பட்ட உயர் இலாபமே நற்பெயர் ஆகும்.

$$\text{நற்பெயர்} = \frac{\text{உயர் இலாபம்}}{\text{சாதாரண இலாப விகிதம்}} \times 100$$

12th-Accountancy-Unit-04.indd 129 12/9/2021 11:12:44 PM

எடுத்துக்காட்டு 10

பின்வரும் தகவல்களிலிருந்து, உயர் இலாபத்தினை மூலதனமாக்கல் முறையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

(அ) பயன்படுத்தப்பட்ட முதல் ₹ 4,00,000

(ஆ) சாதாரண இலாப விகிதம் 10%

(இ) இலாபம் 2016: ₹ 62,000; 2017: ₹ 61,000 மற்றும் 2018: ₹ 63,000

தீர்வு

$$\text{சராசரி இலாபம்} = \frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$$

$$= \frac{62,000 + 61,000 + 63,000}{3}$$

$$= \frac{1,86,000}{3}$$

$$= ₹\ 62,000$$

சாதாரண இலாபம் = பயன்படுத்தப்பட்ட முதல் × சாதாரண இலாப விகிதம்

$$= 4,00,000 \times 10\%$$

$$= ₹\ 40,000$$

உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்

$$= 62,000 - 40,000$$

$$= ₹\ 22,000$$

$$\text{நற்பெயர்} = \frac{\text{உயர் இலாபம்}}{\text{சாதாரண இலாப விகிதம்}} \times 100$$

$$= \frac{22,000}{10} \text{ x } 100$$

$$= ₹\ 2,20,000$$

4.6.3 மூலதனமாக்கல் முறை

இம்முறையில் நற்பெயர் என்பது, வியாபாரத்தின் பயன்படுத்தப்பட்ட முதலை விட கூடுதலாக உள்ள மூலதனமாக்கப்பட்ட சராசரி இலாபம் ஆகும்.

நற்பெயர் = வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பு – பயன்படுத்தப்பட்ட முதல்

சராசரி இலாபத்தைச் சாதாரண இலாப விகிதத்தின் அடிப்படையில் மூலதனமாக்குதல் மூலம் வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பை கணக்கிடலாம்.

$$\text{வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பு} = \frac{\text{சராசரி இலாபம்}}{\text{சாதாரண இலாப விகிதம்}} \times 100$$

பயன்படுத்தப்பட்ட முதல் = நிலைச் சொத்துகள் (நற்பெயர் தவிர) + நடப்புச் சொத்துகள் – நடப்புப் பொறுப்புகள்

12th-Accountancy-Unit-04.indd 130 12/9/2021 11:12:44 PM

எடுத்துக்காட்டு 11

பின்வரும் தகவல்களிலிருந்து மூலதனமாக்கல் முறையில் நற்பெயரின் மதிப்பைக் காணவும்.

(அ) சராசரி இலாபம் = ₹ 60,000

(ஆ) சாதாரண இலாப விகிதம் = 10%

(இ) பயன்படுத்தப்பட்ட முதல் = ₹ 4,50,000

தீர்வு

$$\text{சராசரி இலாபத்தின் மொத்த மூலதன மதிப்பு} = \frac{\text{சராசரி இலாபம்}}{\text{சாதாரண இலாப விகிதம்}} \times 100$$

$$= \frac{60,000}{10} \text{ x } 100$$

$$= ₹\ 6,00,000$$

நற்பெயர் = வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பு – பயன்படுத்தப்பட்ட முதல்

= 6,00,000 – 4,50,000

= ₹ 1,50,000



சராசரி இலாபத்தினை மூலதனமாக்கல் முறை மற்றும் உயர் இலாபத்தினை மூலதனமாக்கல் முறையில் கணக்கிடப்படும் நற்பெயரின் மதிப்பு சமமாக இருக்கும்.

நினைவில் கொள்ள வேண்டியவை

- ஒரு தொழிலுக்கு நன்மையைத் தரக்கூடிய அத்தொழிலின் புகழ் அல்லது நன்மதிப்பு நற்பெயர் ஆகும்.
- நற்பெயர் ஒரு புலனாகா நிலைச்சொத்து ஆகும்.
- கூட்டாளிகளின் உரிமைகளைக் காக்கும் பொருட்டு பின்வரும் சூழ்நிலைகளில் நற்பெயரை மதிப்பிடுவதற்கான தேவை எழுகிறது:
  இலாபப் பகிர்வு விகிதத்தில் மாற்றம் ஏற்படும்போதும், கூட்டாண்மை நிறுவனத்தில் புதிய கூட்டாளி சேர்க்கப்படும் போதும், கூட்டாண்மை நிறுவனத்தில் இருக்கும் கூட்டாளி ஒருவர் நிறுவனத்தை விட்டு விலகும் போதும் அல்லது கூட்டாளி ஒருவர் இறக்கும் போதும், ஒரு கூட்டாண்மை நிறுவனத்தைக் கலைக்கும் போதும்
- வாங்கப்பட்ட நற்பெயர் மட்டும் கணக்கேடுகளில் காட்டப்படுகிறது. தன்னுருவாக்கப்பட்ட நற்பெயர் கணக்கேடுகளில் காட்டப்படுவதில்லை.
- பொதுவாக நற்பெயரை பின்வரும் முறைகளில் மதிப்பிடலாம்:
  சராசரி இலாப முறை, உயர் இலாப முறைகள் மற்றும் மூலதனமாக்கல் முறை

சுய ஆய்வு வினாக்கள்



I சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது?

(அ) நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து (ஆ) நற்பெயர் ஒரு நடப்புச் சொத்து

(இ) நற்பெயர் ஒரு கற்பனைச் சொத்து (ஈ) நற்பெயரினை வாங்க முடியாது

12th-Accountancy-Unit-04.indd 131 12/9/2021 11:12:45 PM

2. உயர் இலாபம் பின்வரும் இரண்டிற்கும் இடையேயான வேறுபாடாகும்

(அ) பயன்படுத்தப்பட்ட முதல் மற்றும் சராசரி இலாபம் (ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள்

(இ) சராசரி இலாபம் மற்றும் சாதாரண இலாபம் (ஈ) நடப்பு ஆண்டின் இலாபம் மற்றும் சராசரி இலாபம்

3. ஒரே வகை நிறுவனங்களின் சராசரி இலாபவிகிதமாக கருதப்படுவது

(அ) சராசரி இலாபம் (ஆ) சாதாரண இலாப விகிதம்

(இ) எதிர்நோக்கும் இலாப விகிதம் (ஈ) இவைகளில் ஏதுமில்லை

4. கீழ் வருவனவற்றில் எது சரியானது?

(அ) உயர் இலாபம் = மொத்த இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை

(ஆ) உயர் இலாபம் = கூட்டு இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை

(இ) உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்

(ஈ) உயர் இலாபம் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகள்

5. சரியற்ற இணையினை அடையாளம் காணவும்

(அ) சராசரி இலாபமுறையில் நற்பெயர் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

(ஆ) உயர் இலாப முறையில் நற்பெயர் = உயர் இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

(இ) ஆண்டுத்தொகை முறையில் நற்பெயர் = சராசரி இலாபம் x ஆண்டுத்தொகை காரணியின் தற்போதைய மதிப்பு

(ஈ) கூட்டு சராசரி இலாப முறையில் நற்பெயர் = கூட்டு சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

6. சராசரி இலாபம் ₹ 25,000 மற்றும் சாதாரண இலாபம் ₹ 15,000 ஆக இருக்கும் போது, உயர் இலாபம்

(அ) ₹ 25,000 (ஆ) ₹ 5,000

(இ) ₹ 10,000 (ஈ) ₹ 15,000

7. 2017– ல் கணக்கேட்டின்படி இலாபம் ₹ 35,000; இலாபத்தில் சேர்ந்துள்ள திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹ 1,000 மற்றும் 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அசாதாரண நட்டம் ₹ 2,000 எனில், சரிக்கட்டப்பட்ட இலாபம்

(அ) ₹ 36,000 (ஆ) ₹ 35,000

(இ) ₹ 38,000 (ஈ) ₹ 34,000

8. ஒரு வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பு ₹ 1,00,000; சொத்துகள் ₹ 1,50,000 மற்றும் பொறுப்புகள் ₹ 80,000. மூலதனமாக்க முறையில் நற்பெயரின் மதிப்பு

(அ) ₹ 40,000 (ஆ) ₹ 70,000

(இ) ₹ 1,00,000 (ஈ) ₹ 30,000

விடை

1. (அ)	**2. (இ)**	**3. (ஆ)**	**4. (இ)**	**5. (இ)**	**6. (இ)**	**7. (அ)**	**8. (ஈ)**

12th-Accountancy-Unit-04.indd 132 12/9/2021 11:12:45 PM

II மிகக் குறுகிய வினாக்கள்

1. நற்பெயர் என்றால் என்ன?
2. வாங்கப்பட்ட நற்பெயர் என்றால் என்ன?
3. உயர் இலாபம் என்றால் என்ன?
4. சாதாரண இலாப விகிதம் என்றால் என்ன?
5. கூட்டாண்மை நிறுவனத்தில் நற்பெயரை மதிப்பிடும் ஏதேனும் இரண்டு சூழ்நிலைகளைத் தரவும்.

III குறுகிய வினாக்கள்

1. நற்பெயரைத் தீர்மானிக்கும் ஏதேனும் ஆறு காரணிகளைத் தரவும்.
2. உயர் இலாப முறையில் நற்பெயர் எவ்வாறு கணக்கிடப்படுகிறது?
3. மூலதனமாக்க முறையில் நற்பெயரின் மதிப்பு எவ்வாறு கணக்கிடப்படுகிறது?
4. பின்வரும் விவரங்களிலிருந்து சராசரி இலாபம் கணக்கிடவும்.

   2016: ₹ 8,000; 2017: ₹ 10,000; 2018: ₹ 9,000

   (விடை: சராசரி இலாபம்: ₹ 9,000)

5. சராசரி இலாபம் ₹15,000 ஆக இருக்கும்போது 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

   (விடை: நற்பெயர்: ₹ 30,000)

IV பயிற்சி வினாக்கள்

சாதாரண சராசரி இலாபமுறை

1. ஒரு நிறுவனத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளின் இலாபங்கள் பின்வருமாறு:

2014: ₹ 10,000; 2015: ₹ 11,000; 2016: ₹ 12,000; 2017: ₹ 13,000 மற்றும் 2018: ₹ 14,000

5 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

(விடை: சராசரி இலாபம்: ₹ 12,000; நற்பெயர்: ₹ 24,000)

2. பின்வரும் விவரங்களிலிருந்து, கடந்த 4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

ஆண்டு	முடிவு	தொகை ₹
2015	இலாபம்	5,000
2016	இலாபம்	8,000
2017	நட்டம்	3,000
2018	இலாபம்	6,000

(விடை: சராசரி இலாபம்: ₹ 4,000; நற்பெயர்: ₹ 12,000)

12th-Accountancy-Unit-04.indd 133 12/9/2021 11:12:45 PM

3. ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து, கடந்த 4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

(அ) 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளான இலாபங்கள் முறையே ₹ 10,000, ₹ 12,500, ₹ 12,000 மற்றும் ₹ 11,500 .

(ஆ) வியாபாரம் கூட்டாளிகளில் ஒருவரால் நடத்தப்பட்டது. அக்கூட்டாளியின் நியாயமான உழைப்பூதியம் ஆண்டுக்கு ₹ 1,500. இந்தத் தொகை மேற்கண்ட இலாபங்களைக் கணக்கிடும் போது சேர்க்கப்படவில்லை.

(விடை: சராசரி இலாபம்: ₹ 10,000; நற்பெயர்: ₹ 30,000)

4. ஸ்ரீதேவி நிறுவனத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து, 3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 4 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

(அ) டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுகளான 2016, 2017 மற்றும் 2018 – ன் இலாபங்கள் முறையே ₹ 1,75,000, ₹ 1,50,000, மற்றும் ₹ 2,00,000

(ஆ) 2016 ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹ 45,000 சேர்ந்துள்ளது.

(இ) 2017ஆம் ஆண்டின் இறுதிச் சரக்கிருப்பு ₹ 30,000 அதிகமாக மதிப்பிடப்பட்டது.

(விடை: சராசரி இலாபம்: ₹ 1,60,000; நற்பெயர்: ₹ 6,40,000)

5. கூட்டாண்மை அடிப்படையில் நடத்தப்படும் ஒரு வணிகத்தின் விவரங்கள் பின்வருமாறு:

(i) ஈட்டிய இலாபங்கள்: 2016: ₹ 25,000; 2017: ₹ 23,000 மற்றும் 2018: ₹ 26,000.

(ii) 2016 ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹ 2,500 சேர்ந்துள்ளது.

(iii) சரக்கிருப்பு தீயினால் சேதமடைந்ததால் 2017 ஆம் ஆண்டின் இலாபத்தில் ₹ 3,500 குறைக்கப்பட்டது.

(iv) சரக்கிருப்பு காப்பீடு செய்யப்படவில்லை. ஆனால் எதிர்காலத்தில் காப்பீடு செய்வதென முடிவு செய்யப்பட்டது. அதற்கான காப்பீட்டுக் கட்டணம் ஆண்டுக்கு ₹ 250 என மதிப்பிடப்பட்டது.

3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

(விடை: சராசரி இலாபம்: ₹ 24,750; நற்பெயர்: ₹ 49,500)

கூட்டு சராசரி இலாபமுறை

6. கடந்த 4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் கூட்டு சராசரி இலாபத்தினை பயன்படுத்தி, நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

ஆண்டு	இலாபம் ₹	நிறைகள்
2015	10,000	1
2016	12,000	2
2017	16,000	3
2018	18,000	4

(விடை: கூட்டு சராசரி இலாபம்: ₹ 15,400; நற்பெயர்: ₹ 46,200)

12th-Accountancy-Unit-04.indd 134 12/9/2021 11:12:45 PM

உயர் இலாபத்தில் கொள்முதல் முறை

7. பின்வரும் விவரங்களிலிருந்து, உயர் இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

(அ) நிறுவனத்தின் மொத்த சொத்துகள் ₹ 5,00,000

(ஆ) நிறுவனத்தின் பொறுப்புகள் ₹ 2,00,000

(இ) இவ்வகைத் தொழில்களின் சாதாரண இலாப விகிதம் 12.5%

(ஈ) நிறுவனத்தின் சராசரி இலாபம் ₹ 60,000.

(**விடை : உயர் இலாபம்: ₹ 22,500; நற்பெயர்: ₹ 45,000**)

8. **ஒரு** கூட்டாண்மை நிறுவனம் கடந்த மூன்று வருடங்களாக ஈட்டிய நிகர இலாபங்கள் பின்வருமாறு: 2016: ₹ 20,000; 2017: ₹ 17,000 மற்றும் 2018: ₹ 23,000.

மேற்குறிப்பிட்ட காலம் முழுவதும் நிறுவனத்தில் பயன்படுத்தப்பட்ட முதல் ₹ 80,000. நிறுவனம் கொண்டுள்ள இடரினைக் கருத்தில் கொண்டு, பயன்படுத்தப்பட்ட முதல் மீதான சாதாரண இலாப வீதம் 15% என கருதப்பட்டது. உயர் இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

(**விடை: உயர் இலாபம்: ₹ 8,000; நற்பெயர்: ₹ 16,000**)

ஆண்டுத்தொகை முறை

9. பின்வரும் விவரங்களைக் கொண்டு, ஆண்டுத்தொகை முறையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

(i) சராசரி இலாபம்	₹ 14,000
(ii) சாதாரண இலாபம்	₹ 4,000
(iii) சாதாரண இலாப விகிதம்	15%
(iv) நற்பெயருக்கான கொள்முதல் ஆண்டுகள்	5

5 ஆண்டுகளில் ஆண்டுக்கு 15% என்ற வட்டி விகிதத்தில் ₹ 1 ன் தற்போதைய ஆண்டுத்தொகை மதிப்பு ₹ 3.352

(**விடை: உயர் இலாபம்: ₹ 10,000; நற்பெயர்: ₹ 33,520**)

உயர் இலாபத்தில் மூலதனமாக்கல் முறை

10. பின்வரும் தகவல்களிலிருந்து, உயர் இலாபத்தினை மூலதனமாக்கல் முறையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

(அ) சாதாரண இலாப விகிதம் 10%

(ஆ) கடந்த 4 ஆண்டுகளின் இலாபங்கள் ₹ 30,000, ₹ 40,000, ₹ 50,000 மற்றும் ₹ 45,000.

(இ) மேற்குறிப்பிட்ட இலாபம் ₹ 30,000 ல் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹ 3,000 சேர்ந்துள்ளது.

(ஈ) சராசரி பயன்படுத்தப்பட்ட முதல் ₹ 3,00,000.

(**விடை: சராசரி இலாபம்: ₹ 40,500; உயர் இலாபம்: ₹ 10,500; நற்பெயர் : ₹ 1,05,000**)

மூலதனமாக்கல் முறை

11. பின்வரும் தகவல்களிலிருந்து மூலதனமாக்கல் முறையில் நற்பெயரின் மதிப்பைக் காணவும்.

(அ) சராசரி இலாபம் ₹ 20,000

(ஆ) சாதாரண இலாப விகிதம் 10%

(இ) பயன்படுத்தப்பட்ட முதல் ₹ 1,50,000

(**விடை: மொத்த மூலதன மதிப்பு : ₹ 2,00,000; நற்பெயர்: ₹ 50,000**)

12th-Accountancy-Unit-04.indd 135 12/9/2021 11:12:46 PM

நிகழ்வாய்வு

பிரியா,பிரவீன்மற்றும்பூஜாமூவரும்வீட்டுஉபயோகப்பொருட்களைவாங்கிவிற்கும் கூட்டாண்மைத் தொழிலைச் செய்து வந்தனர். அவர்களுக்குள் கூட்டாண்மை ஒப்பந்தம் இருந்தது. அவர்களின் கடை, நிறைய சாத்தியமான வாடிக்கையாளர்களை கொண்ட முக்கியமான இடத்தில் அமைந்திருந்தது. அக்கடையின் பணியாளர்களுக்கு நல்ல பயிற்சியும் ஊக்கமும் அளிக்கப்பட்டிருந்தது. கூட்டாளிகள் நல்ல மேலாண்மைத் திறன் மிக்கவர்களாக இருந்தனர். இதன் விளைவாக, வாடிக்கையாளர்களின் தேவைகள் திறம்பட நிறைவேற்றப்பட்டன. வாடிக்கையாளர்களுக்கு விற்பனைக்குப் பின் சேவையும் அளிக்கப்பட்டதால் அவர்கள் மகிழ்ச்சியடைந்தனர். மிகக் குறுகிய காலத்திலேயே நிறுவனம் நன் மதிப்பு மற்றும் வலுவான வாடிக்கையாளர் அடித்தளத்தைக் கொண்டிருந்தது.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு நிறுவனத்தின் மதிப்பு அதன் நிகரச் சொத்து மதிப்பைவிட அதிகமாக உள்ளதென கூட்டாளிகள் முடிவு செய்தனர். எனவே, அவர்கள் நற்பெயரின் மதிப்பைக் கண்டறிந்து அதனை கணக்கேடுகளில் பதிவு செய்ய விரும்பினர்.

பின் வருவன குறித்து விவாதிக்கவும்.

(1) நிறுவனத்தின் நற்பெயர் மதிப்பினை பாதிக்கும் காரணிகளை அடையாளம் காணவும்.

(2) நற்பெயர் மதிப்பிடும் முறைகளின் பெயர்களைக் கூறவும்.

(3) நற்பெயரின் மதிப்பைக் கணக்கேடுகளில் பதிவுச் செய்ய வேண்டும் என்ற கூட்டாளிகளின் முடிவை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? அதற்கான காரணங்களை கணக்கியல் தரநிலைகள் விதிகள்படி விளக்கவும்.

தொடர் ஆய்விற்கு

ஒரு கூட்டாண்மை நிறுவனம் தன்னுடைய நிறுவனத்தை விரிவுபடுத்த விரும்பியது. ஆனால், நிறுவனத்தை திறம்பட நடத்த இரண்டுக்கு மேற்பட்ட மேலாண்மைத் திறன் கொண்ட நபர்கள் தேவை. மேலும், நிறுவன விரிவாக்கத்திற்கு அதிக நிதியும் தேவைப்படுகிறது. இந்த சூழ்நிலையில் என்ன செய்ய வேண்டும்?

பார்வை

1. M C Shukla, T S Grewal and S C Gupta, Advanced Accounts, 19th ed., 2017, S.Chand Publishing, New Delhi
2. R L Gupta and V K Gupta, Financial Accounting, 11th ed., 2014, Sultan Chand and Sons, New Delhi
3. S P Jain and K L Narang, Advanced Accountancy Vol – I, 2016, Kalyani Publishers, New Delhi
4. Dalston L Cecil and Jenitra L Merwin, Financial Accounting, 3rd ed., 2017, Learntech Press, Trichy
5. Fundamentals of Accounting, 2017, The Institute of Chartered Accountants of India, New Delhi.

12th-Accountancy-Unit-04.indd 136 12/9/2021 11:12:46 PM

அலகு 5

கூட்டாளி சேர்ப்பு

பொருளடக்கம்

5.1 அறிமுகம்

5.2 கூட்டாளியை சேர்க்கும் போது செய்ய வேண்டிய சரிக்கட்டுதல்கள்

5.3 பகிர்ந்து தரா இலாபங்கள், காப்புகள் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்தளித்தல்

5.4 சொத்துகள் மற்றும் பொறுப்புகளை மறுமதிப்பீடு செய்தல்

5.5 புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாகவிகிதம்

5.6 நற்பெயரை சரிக்கட்டுதல்

5.7 புதிய இலாபப் பகிர்வு விகிதத்தின் படி முதல் கணக்கைச் சரிக்கட்டுதல்

நினைவுகூற வேண்டிய கருத்துகள்

கூட்டாளி சேர்ப்பு கற்பதற்கு முன் கீழ்க்கண்டவற்றை நினைவு கூற வேண்டும்:

- கூட்டாண்மை நிறுவனத்தின் பொருள் மற்றும் சிறப்பியல்புகள்
- கூட்டாண்மை ஒப்பாவணம்
- கூட்டாளிகளின் முதல் கணக்குகள்
- நற்பெயரை மதிப்பீடு செய்தல்

கற்றல் நோக்கங்கள்

மாணவர்கள்

- கூட்டாளியைச் சேர்க்கும் போது செய்ய வேண்டிய கணக்கியல் நடைமுறைகள் பற்றி புரிந்து கொள்ளுதல்
- மறுமதிப்பீடு கணக்கு, முதல் கணக்குகள் மற்றும் கூட்டாளியைச் சேர்த்த பின்னர் நிறுவனத்தின் இருப்பு நிலைக் குறிப்பு ஆகியவற்றை தயாரித்தல்

தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய சொற்கள்

- கூட்டாளி சேர்ப்பு
- தியாக விகிதம்
- மறுமதிப்பீடு கணக்கு

12th-Accountancy-Unit-05_TM.indd 137 12/9/2021 11:13:47 PM

5.1 அறிமுகம்



மாணவர் செயல்பாடு 5.1

நீங்கள் ஒரு நிறுவனத்தின் கூட்டாளி என்று வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் ஒரு புதிய கூட்டாளியை உங்கள் நிறுவனத்தில் சேர்க்கப் போகிறீர்கள். அப்போது, உங்கள் கூட்டாண்மை ஒப்பாவணத்தில் இடம்பெற வேண்டிய ஏதேனும் ஐந்து உடன்பாடுகளை நினைவு கூறுங்கள்.

ஏற்கனவே நடந்து கொண்டிருக்கும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தில் ஒரு நபரை புதிய கூட்டாளியாக சேர்க்கலாம். இதுவே கூட்டாளி சேர்ப்பு என்று அழைக்கப்படுகிறது. தொழில் விரிவாக்கத்திற்கு தேவையான கூடுதல் முதல் பெறுவதற்காகவும் அல்லது புதிய கூட்டாளியின் நிர்வாகத்திறனைப் பயன்படுத்திக் கொள்ளவும் அல்லது இவை இரண்டிற்காகவும் புதிய கூட்டாளி சேர்க்கப்படலாம். பொதுவாக, ஒரு புதிய கூட்டாளி நிறுவனத்திற்கு முதல் கொண்டுவர வேண்டும். அதன் மூலம், அவருக்கு நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் நிறுவனத்தின் வருங்கால இலாபங்களில் பங்கெடுக்கும் உரிமை கிடைக்கிறது.

கூட்டாண்மையில் ஒரு புதிய கூட்டாளியைச் சேர்க்கும்போது நிறுவனத்தின் பழைய ஒப்பந்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு, ஒரு புதிய ஒப்பந்தத்தின் மூலம் நிறுவனம் மாற்றி அமைக்கப்படுகிறது.

இந்தியக் கூட்டாண்மைச் சட்டம் 1932, பிரிவு 31 (1) ன்படி கூட்டாளிகளின் உடன்படிக்கைக்கு உட்பட்டு, ஏற்கனவே இருக்கக்கூடிய அனைத்து கூட்டாளிகளின் இசைவு இன்றி எந்த ஒரு புதிய கூட்டாளியையும் நிறுவனத்தில் சேர்க்க இயலாது.

5.2 கூட்டாளியை சேர்க்கும் போது செய்ய வேண்டிய தேவையான சரிக்கட்டுதல்கள்

கூட்டாளியை சேர்க்கும் போது அவர் தனது முதல் தொகையை ரொக்கமாகவோ அல்லது பொருளாகவோ அல்லது இரண்டுமாகவோ கொண்டு வரலாம். பதிய கூட்டாளி கொண்டு வரும் மூலதனத்தை கணக்கிடும் போது செய்ய வேண்டிய குறிப்பேட்டுப்பதிவுகள் பின்வருமாறு:

குறிப்பேட்டுப்பதிவு

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	ரொக்கம் / வங்கி க/கு ப		xxx	
	சொத்துகள் க/கு ப		xxx	
	கூட்டாளிகளின் முதல் க/கு			xxx

ஒரு கூட்டாளியைச் சேர்க்கும் போது பொதுவாக கூட்டாளிகளின் பரஸ்பர உரிமைகளில் மாற்றம் ஏற்படுகிறது. புதிய கூட்டாளி, கூட்டாண்மையில் தான் சேர்ந்த நாளிலிருந்து நிறுவனத்தின் அனைத்துச் செயல்களுக்கும் பொறுப்பாகிறார். எனவே, புதிய கூட்டாளியை சேர்க்கும் முன் உள்ள பகிர்ந்து தரா இலாபம், நட்டம் மற்றும் காப்புகள் ஆகியவற்றை பழைய கூட்டாளிகளுக்கு பகிர்ந்து தரவேண்டும். அதுபோலவே, சொத்துகளையும் பொறுப்புகளையும் மறுமதிப்பீடு செய்து அதிலிருந்து கிடைக்கும் இலாபம் அல்லது நட்டத்தை பழைய கூட்டாளிகளுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும். ஒரு புதிய கூட்டாளியை சேர்க்கும் போது பின்வரும் சரிக்கட்டுதல்களை செய்ய வேண்டும்:

1. பகிர்ந்து தரா இலாபம், காப்பு மற்றும் நட்டம் ஆகியவற்றை பகிர்ந்தளித்தல்
2. சொத்துகளையும் பொறுப்புகளையும் மறுமதிப்பீடு செய்தல்
3. புதிய இலாபவிகிதம் மற்றும் தியாகவிகிதத்தை நிர்ணயித்தல்
4. நற்பெயர் சரிக்கட்டுதல்
5. முதல் கணக்கை புதிய இலாபவிகிதத்தின் அடிப்படையில் சரிக்கட்டுதல் (ஒப்புக் கொண்டால்)

12th-Accountancy-Unit-05_TM.indd 138 12/9/2021 11:13:48 PM

5.3 பகிர்ந்துதரா இலாபங்கள், காப்புகள் மற்றும் நட்டங்களை பகிர்ந்தளித்தல்

கடந்த ஆண்டுகளின் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் கூட்டாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படாமல் இருந்தால் அது பகிர்ந்து தரா இலாபம் எனப்படும். அவ்வாறான பகிர்ந்து தரா காப்புகள், இலாபங்கள் அல்லது நட்டங்கள் பழைய கூட்டாளிகளுக்கு உரியன. எனவே, அவை பழைய கூட்டாளிகளுக்கு பழைய இலாபவிகிதத்தில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். காப்புகள் என்பதில் பொதுக்காப்பு, காப்புநிதி, தொழிலாளர் ஈட்டு நிதி மற்றும் முதலீட்டு மாறுபடும் நிதி ஆகியவை அடங்கும். தொழிலாளர் ஈட்டு நிதியில் எதிர் நோக்கக் கூடிய இழப்பீடுகளை சரி செய்த பின்னர் மீதமுள்ள தொகை கூட்டாளிகளின் முதல் கணக்குக்கு மாற்றப்பட வேண்டும். இதற்கு பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளை செய்ய வேண்டும்:

(அ) பகிர்ந்து தரா இலாபங்கள் மற்றும் காப்புகளை மாற்றுவதற்கு

குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்		பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	இலாப நட்டப் பகிர்வு க/கு	ப		xxx	
	பொதுக்காப்பு க/கு	ப		xxx	
	காப்புநிதி க/கு	ப		xxx	
	தொழிலாளர் ஈட்டு நிதி க/கு	ப		xxx	
	முதலீட்டு மாறுபடும் நிதி க/கு	ப		xxx	
	பழைய கூட்டாளிகளின் முதல்/ நடப்பு க/கு (பழைய இலாபவிகிதத்தில்)				xxx

(அ) பகிர்ந்து தரா நட்டம் மாற்றுவதற்கு

குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்		பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	கூட்டாளிகளின் முதல் / நடப்பு க/கு	ப		xxx	
	இலாப நட்ட க/கு (பழைய இலாப விகிதத்தில்)				xxx



முதலீட்டு மாறுபடும் நிதி

முதலீடுகளின் சந்தை மதிப்பில் ஏற்படும் இறக்கத்தை சரிக்கட்டுவதற்காக முதலீட்டு மாறுபடும் நிதி இலாபத்திலிருந்து உருவாக்கப்படுகிறது. முதலீடுகளின் சந்தை மதிப்பு, ஏட்டு மதிப்பிற்கு சமமாகவோ அல்லது அதிகமாகவோ இருப்பின், முதலீட்டு மாறுபடும் நிதி முழுவதும் பழைய கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு பழைய இலாப விகிதத்தில் மாற்றப்படுகிறது. முதலீடுகளின் சந்தை மதிப்பு, ஏட்டு மதிப்பிற்கு குறைவாக இருப்பின், அதன் வேறுபாடு முதலீட்டு மாறுபடும் நிதியிலிருந்து கழிக்கப்பட்டு, மீதமுள்ள தொகை பழைய கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு பழைய இலாப விகிதத்தில் மாற்றப்படுகிறது.

எடுத்துக்காட்டு 1

மாலா மற்றும் விமலா எனும் கூட்டாளிகள் முறையே 3:2 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 31.03.2017 அன்று வர்ஷினி என்பவரை கூட்டாளியாக சேர்த்தனர். அவர் சேர்ந்த நாளில் நிறுவன ஏடுகளில் காப்பு நிதி ₹ 50,000 எனக் காட்டியது. காப்புநிதியை பகிர்ந்தளிக்க குறிப்பேட்டுப் பதிவு தரவும்.

12th-Accountancy-Unit-05_TM.indd 139 12/9/2021 11:13:48 PM

தீர்வு

குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
2017	பொதுக்காப்பு க/கு ப		50,000	
மார்ச் 31	மாலா முதல் க/கு (50,000 x 3/5)			30,000
	விமலா முதல் க/கு (50,000 x 2/5)			20,000
	(பொதுக்காப்பு பழைய கூட்டாளிகளின் முதல் கணக்குக்கு பழைய இலாபவிகிதத்தில் மாற்றப்பட்டது)			

எடுத்துக்காட்டு 2

கவிதா மற்றும் இராதா எனும் கூட்டாளிகள் முறையே 4:3 எனும் விகிதத்தில் இலாபநட்டம் பகிர்ந்து வந்தனர். 1.1.2019 அன்று அவர்கள் தீபா என்பவரை கூட்டாளியாக சேர்த்தனர். அந்நாளில் அவர்களுடைய இருப்புநிலைக் குறிப்பில் இலாப நட்டக் கணக்கு பற்று இருப்பாக ₹ 70,000 பகிர்ந்து தரா நட்டமாக சொத்துகள் பக்கத்தில் காட்டியது. கூட்டாளி சேர்ப்பின் போது பகிர்ந்து தரா நட்டத்தை மாற்றுவதற்கு குறிப்பேட்டுப் பதிவு தரவும்.

தீர்வு

குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
2019	கவிதா முதல் க/கு (4/7) ப		40,000	
ஜனவரி 1	இராதா முதல் க/கு (3/7) ப		30,000	
	இலாப நட்ட க/கு			70,000
	(பகிர்ந்து தரா நட்டம் பழைய கூட்டாளிகளின் முதல் கணக்குக்கு பழைய இலாபவிகிதத்தில் மாற்றப்பட்டது)			

எடுத்துக்காட்டு 3

இரத்ன குமார் மற்றும் ஆரோக்கியதாஸ் எனும் கூட்டாளிகள் முறையே 3.2 என இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். 31 மார்ச் 2017 ஆம் நாளைய அவர்களது இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல் கணக்குகள்:			கட்டடம்	30,000
இரத்ன குமார்	30,000		பொறித்தொகுதி	60,000
ஆரோக்கியதாஸ்	50,000	80,000	அறைகலன்	20,000
இலாப நட்டப் பகிர்வு க/கு		20,000	கடனாளிகள்	10,000
பொதுக்காப்பு		5,000	சரக்கிருப்பு	15,000
தொழிலாளர் ஈட்டு நிதி		15,000	வங்கி ரொக்கம்	15,000
பற்பல கடனீந்தோர்		30,000		
		1,50,000		1,50,000

2017, ஏப்ரல் 1 அன்று, டேவிட் என்பவரை கூட்டாளியாகச் சேர்த்தனர். கூட்டாளி சேர்ப்பின் போது பகிர்ந்து தரா இலாபம் மற்றும் காப்பினை பகிர்ந்தளிக்க குறிப்பேட்டுப் பதிவு தரவும்.

12th-Accountancy-Unit-05_TM.indd 140 12/9/2021 11:13:48 PM

தீர்வு

குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
2017	இலாப நட்டப் பகிர்வு க/கு ப		20,000	
ஏப்ரல் 1	பொதுக்காப்பு க/கு ப		5,000	
	தொழிலாளர் ஈட்டு நிதி க/கு ப		15,000	
	இரத்ன குமார் முதல் க/கு (40,000 x 3/5)			24,000
	ஆரோக்கியதாஸ் முதல் க/கு (40,000 x 2/5)			16,000
	(பகிர்ந்து தரா இலாபம் மற்றும் காப்பு பழைய கூட்டாளிகளின் முதல் கணக்குக்கு பழைய இலாப விகிதத்தில் மாற்றப்பட்டது)			

5.4 சொத்துகள் மற்றும் பொறுப்புகளை மறுமதிப்பீடு செய்தல்

கூட்டாண்மையில் கூட்டாளி ஒருவரை சேர்க்கும் போது, சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் ஏட்டு மதிப்பும், நடப்பு மதிப்பும் மாறுபடலாம். எனவே, அவை மறுமதிப்பீடு செய்யப்படுகிறது. சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் நடப்பு மதிப்பை தீர்மானிப்பது மறுமதிப்பீடு எனப்படுகிறது. மறுமதிப்பீடு தயாரிப்பதற்கான காரணங்கள் பின்வருமாறு:

(i) நிறுவனத்தின் உண்மையான மற்றும் நேர்மையான நிதிநிலையை அறிவது மற்றும்

(ii) சொத்துகளையும் மற்றும் பொறுப்புகளையும் மறுமதிப்பீடு செய்வதன் மூலம் கிடைக்கப்பெற்ற இலாபத்தினை பழைய கூட்டாளிகளுக்கு தருவது.

சொத்துகளையும் பொறுப்புகளையும் மறுமதிப்பீட்டு செய்து கணக்கில் கொண்டு வருவதற்கு இரண்டு முறைகள் உள்ளன.

(அ) சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் திருத்திய மதிப்பை ஏடுகளில் காட்டப்பெறுவது

(ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் மதிப்பை ஏடுகளில் காட்டாமல் இருப்பது.

5.4.1 சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் மதிப்பை ஏடுகளில் காட்டப்பெறுவது

இம்முறையில் சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் திருத்திய மதிப்பு, கூட்டாளியை சேர்த்தவுடன் கணக்கேடுகளிலும் தயாரிக்கப்படும் இருப்புநிலைக் குறிப்பிலும் காட்டப்படும். சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் அதிகரிக்கும் மற்றும் குறையும் மதிப்பினை பதிவு செய்ய மறுமதிப்பீடு கணக்கு தயாரிக்கப்படுகிறது. மறுமதிப்பீட்டுக் கணக்கு சரிக்கட்டப்பட்ட இலாப நட்ட கணக்கு என்றும் அழைக்கப்படும். இது ஒரு பெயரளவு கணக்கு ஆகும். மறுமதிப்பீட்டுக் கணக்கு சொத்துகளின் மதிப்பு அதிகரிக்கும் போதும் மற்றும் பொறுப்புகளின் மதிப்பு குறையும் போதும் வரவு செய்யப்படும். சொத்துகளின் மதிப்பு குறையும் போதும் மற்றும் பொறுப்புகளின் மதிப்பு அதிகரிக்கும் போதும் மறுமதிப்பீட்டுக் கணக்கு பற்று செய்யப்படும்.

பதிவு பெறாத சொத்துகள் ஏதேனும் இருப்பின் அது மறுமதிப்பீட்டு கணக்கில் வரவு செய்யப்படும் மற்றும் பதிவு பெறாத பொறுப்புகள் ஏதேனும் இருப்பின் அது மறுமதிப்பீட்டுக் கணக்கில் பற்று செய்யப்படும். அதிலிருந்து கிடைக்கும் இலாபம் அல்லது நட்டம் பழைய கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு பழைய இலாப விகிதத்தில் மாற்றப்படும். மறு மதிப்பீட்டு கணக்கின் பற்றுப் பக்கத்தின் மொத்தத் தொகையை விட வரவு பக்கத்தின் மொத்தத் தொகை அதிகமாக இருப்பின் அந்த வேறுபாட்டுத் தொகை மறுமதிப்பீட்டு இலாபம் ஆகும். மறுமதிப்பீட்டுக் கணக்கின் வரவுப் பக்கத்தின் மொத்தத்தைவிட பற்றுப்பக்கத்தின் மொத்தம் அதிகமாக இருந்தால் அந்த வேறுபாட்டுத்தொகை மறுமதிப்பீட்டு நட்டமாகும்.

12th-Accountancy-Unit-05_TM.indd 141 12/9/2021 11:13:48 PM

சொத்துகளையும் பொறுப்புகளையும் மறுமதிப்பீடு செய்யும் போது பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகள் செய்யப்படுகின்றன.

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	1. **சொத்துகளின் மதிப்பு அதிகரிக்கும் போது**			
	குறிப்பிட்ட சொத்து க/கு ப		xxx	
	மறுமதிப்பீட்டு க/கு			xxx
	2. **சொத்துகளின் மதிப்பு குறையும் போது**			
	மறுமதிப்பீட்டு க/கு ப		xxx	
	குறிப்பிட்ட சொத்து க/கு			xxx
	3. **பொறுப்புகளின் மதிப்பு அதிகரிக்கும் போது**			
	மறுமதிப்பீட்டு க/கு ப		xxx	
	குறிப்பிட்ட பொறுப்பு க/கு			xxx
	4. **பொறுப்புகளின் மதிப்பு குறையும் போது**			
	குறிப்பிட்ட பொறுப்பு க/கு ப		xxx	
	மறுமதிப்பீட்டு க/கு			xxx
	5. **ஏட்டில் பதிவு செய்யாத சொத்துகளை பதிவு செய்யும் போது**			
	குறிப்பிட்ட சொத்து க/கு ப		xxx	
	மறுமதிப்பீட்டு க/கு			xxx
	6. **ஏட்டில் பதிவு செய்யாத பொறுப்புகளை பதிவு செய்யும் போது**			
	மறுமதிப்பீட்டு க/கு ப		xxx	
	குறிப்பிட்ட பொறுப்பு க/கு			xxx
	7. **மறுமதிப்பீட்டு கணக்கின் இருப்பினை மாற்ற**			
	(அ) மறுமதிப்பீட்டு இலாபமாக இருந்தால்			
	மறுமதிப்பீட்டு க/கு ப		xxx	
	பழைய கூட்டாளிகளின் முதல் க/கு			xxx
	(பழைய விகிதத்தில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக)			
	(ஆ) மறுமதிப்பீட்டு நட்டமாக இருந்தால்			
	பழைய கூட்டாளிகளின் முதல் க/கு ப		xxx	
	(பழைய விகிதத்தில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக)			
	மறுமதிப்பீட்டு க/கு			xxx

மறுமதிப்பீட்டுக் கணக்கின் படிவம்

ப **மறுமதிப்பீட்டுக் கணக்கு** வ

விவரம்	₹	விவரம்	₹
குறிப்பிட்ட சொத்து க/கு (நிகர குறைவு)	xxx	குறிப்பிட்ட சொத்து க/கு (நிகர அதிகரிப்பு)	xxx
குறிப்பிட்ட பொறுப்பு க/கு (நிகர அதிகரிப்பு)	xxx	குறிப்பிட்ட பொறுப்பு க/கு (நிகர குறைவு)	xxx
பழைய கூட்டாளிகளின் முதல் கணக்கு (மறுமதிப்பீட்டு இலாபம் பழைய விகிதத்தில் பகிர்ந்தளித்தது) *	xxx	பழைய கூட்டாளிகளின் முதல் கணக்கு (மறுமதிப்பீட்டு நட்டம் பழைய விகிதத்தில் பகிர்ந்தளித்தது) *	xxx
	xxx		xxx

* இது மறுமதிப்பீட்டு இலாபமாகவோ அல்லது நட்டமாகவோ இருக்கலாம்.

12th-Accountancy-Unit-05_TM.indd 142 12/9/2021 11:13:48 PM

எடுத்துக்காட்டு 4

இராஜேஷ் மற்றும் இரமேஷ் எனும் கூட்டாளிகள் 3.2 என இலாபநட்டம் பகிர்ந்து வந்தனர். இராமன் என்பவரை புதிய கூட்டாளியாக சேர்த்துக் கொண்டனர். அவர்களது புதிய இலாப விகிதம் 5:3:2. பின்வரும் மறுமதிப்பீடுகள் செய்யப்பட்டன. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கு தயாரிக்கவும்.

(அ) கட்டடத்தின் மதிப்பு ₹ 15,000 உயர்த்தப்பட்டது

(ஆ) இயந்திரத்தின் மதிப்பு ₹ 4,000 குறைக்கப்பட்டது

(இ) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ₹ 1,000 உருவாக்கப்பட்டது

தீர்வு

குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	கட்டடம் க/கு ப		15,000	
	மறுமதிப்பீட்டு க/கு			15,000
	(கட்டடத்தின் மதிப்பு உயர்த்துவது பதிவு செய்யப்பட்டது)			
	மறுமதிப்பீட்டு க/கு ப		5, 000	
	இயந்திரம் க/கு			4,000
	வாரா ஐயக்கடன் ஒதுக்கு க/கு			1,000
	(இயந்திரத்தின் மதிப்பு குறைப்பது மற்றும் ஒதுக்கு பதிவு செய்யப்பட்டது)			
	மறுமதிப்பீட்டு க/கு ப		10,000	
	இராஜேஷ் முதல் க/கு			6,000
	இரமேஷ் முதல் க/கு			4,000
	(மறுமதிப்பீட்டு இலாபம் பகிர்ந்தளித்தது)			

மறுமதிப்பீட்டுக் கணக்கு

ப வ

விவரம்	₹	₹	விவரம்	₹
இயந்திரம் க/கு		4,000	கட்டடம் க/கு	15,000
வாரா ஐயக்கடன் ஒதுக்கு க/கு		1,000		
மறுமதிப்பீட்டு இலாபம்:				
இராஜேஷ் முதல் க/கு (3/5)	6,000			
இரமேஷ் முதல் க/கு (2/5)	4,000	**10,000**		
		15,000		15,000

12th-Accountancy-Unit-05_TM.indd 143 12/9/2021 11:13:48 PM

எடுத்துக்காட்டு 5

ஸ்ரீராம் மற்றும் ராஜ் எனும் கூட்டாளிகள் முறையே 2:1 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 1.4.2017 நெல்சன் என்பவரை புதிய கூட்டாளியாக சேர்த்தனர். கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(i) சரக்கிருப்பு மதிப்பை ₹ 5,000 உயர்த்த வேண்டும்

(ii) ஏடுகளில் பதிவு பெறாமலுள்ள முதலீடுகள் ₹ 7,000 தற்போது பதிவு செய்தல் வேண்டும்

(iii) அலுவலக சாதனங்கள் மதிப்பை ₹ 10,000 குறைக்க வேண்டும்

(iv) கொடுபடாமலுள்ள கூலி ₹ 9,500 க்கு வகை செய்யவேண்டும்

குறிப்பேடு பதிவுகள் தந்து மறுமதிப்பீடு கணக்கு தயாரிக்கவும்.

தீர்வு

குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
2017 ஏப்ரல் 1	சரக்கிருப்பு க/கு ப		5,000	
	முதலீடுகள் க/கு ப		7,000	
	மறுமதிப்பீட்டு க/கு			12,000
	(சரக்கிருப்பின் மதிப்பு அதிகரிப்பு மற்றும் பதிவு பெறாமலுள்ள முதலீடுகள் பதிவு செய்யப்பட்டது)			
,,	மறுமதிப்பீட்டு க/கு ப		19,500	
	அலுவலக சாதனங்கள் க/கு			10,000
	கொடுபட வேண்டிய கூலி க/கு			9,500
	(அலுவலக சாதனங்களின் மதிப்பு குறைப்பது மற்றும் கொடுபடா கூலி பதிவு செய்யப்பட்டது)			
,,	ஸ்ரீராம் முதல் க/கு ப		5,000	
	ராஜ் முதல் க/கு ப		2,500	
	மறுமதிப்பீட்டு க/கு			7,500
	(மறுமதிப்பீட்டு நட்டம் முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது)			

ப **மறுமதிப்பீட்டுக் கணக்கு** **வ**

விவரம்	₹	விவரம்	₹	₹
அலுவலக சாதனங்கள் க/கு	10,000	சரக்கிருப்பு க/கு		5,000
கொடுபட வேண்டிய கூலி க/கு	9,500	முதலீடுகள் க/கு		7,000
		மறுமதிப்பீட்டு நட்டம்:		
		ஸ்ரீராம் முதல் க/கு (2/3)	5,000	
		ராஜ் முதல் க/கு (1/3)	2,500	**7,500**
	19,500			19,500

12th-Accountancy-Unit-05_TM.indd 144 12/9/2021 11:13:48 PM

எடுத்துக்காட்டு 6

ரகு மற்றும் சாம் எனும் கூட்டாளிகள் முறையே 3:2 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். 2017 மார்ச் 31 அன்று அவர்களின் இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹	₹
முதல் கணக்குகள்:			இயந்திரம்		30,000
ரகு	40,000		அறைகலன்		10,000
சாம்	30,000	70,000	சரக்கிருப்பு		10,000
பற்பல கடனீந்தோர்		30,000	கடனாளிகள்	21,000	
			கழிக்க: வாரா		
			ஐயக்கடன் ஒதுக்கு	1,000	20,000
			வங்கி		30,000
		1,00,000			1,00,000

1.4.2017 அன்று பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு பிரகாஷ் என்பவரை கூட்டான்மையில் சேர்த்தனர்.

(அ) பிரகாஷ் ₹ 10,000 முதல் கொண்டு வருவது

(ஆ) இயந்திரம் ₹ 24,000 என மதிப்பிடப்பட்டது

(இ) அறைகலனின் மதிப்பில் ₹ 3,000 குறைப்பது

(ஈ) வாரா ஐயக்கடன் ஒதுக்கை ₹ 3,000 என அதிகரிப்பது

(உ) ஏடுகளில் பதிவு பெறாமலுள்ள கணக்குகளின் மூலம் பெறவேண்டியவைகள் மதிப்பு ₹ 1,000 பதிவு செய்தல்

குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டு கணக்கு மற்றும் முதல் கணக்குகளைத் தயாரிக்கவும்.

தீர்வு

குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
2017	வங்கி க/கு ப		10,000	
ஏப்ரல் 1	பிரகாஷ் முதல் க/கு			10,000
	(பிரகாஷ் முதல் கொண்டு வந்தது)			
,,	மறுமதிப்பீட்டு க/கு ப		11,000	
	இயந்திரம் க/கு			6,000
	அறைகலன் க/கு			3,000
	வாரா ஐயக்கடன் ஒதுக்கு க/கு			2,000
	(இயந்திரம் மற்றும் அறைகலன் மீதான தேய்மானம் மற்றும் வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கியது)			

12th-Accountancy-Unit-05_TM.indd 145 12/9/2021 11:13:49 PM

,,	கணக்குகளின் மூலம் பெறவேண்டியவைகள் க/கு		1,000	
	மறுமதிப்பீட்டு க/கு			1,000
	(பதிவு பெறாத கணக்குகளின் மூலம் பெற வேண்டியவைகள் பதிவு செய்யப்பட்டது)			
,,	ரகு முதல் க/கு		6,000	
	சாம் முதல் க/கு ப		4,000	
	மறுமதிப்பீட்டு க/கு			10,000
	(மறுமதிப்பீட்டு நட்டம் முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது)			

ப **மறுமதிப்பீட்டுக் கணக்கு** **வ**

விவரம்	₹	விவரம்	₹	₹
இயந்திரம் க/கு	6,000	கணக்குகள் மூலம் பெற		1,000
அறைகலன் க/கு	3,000	வேண்டியவைகள் க/கு		
வாரா ஐயக்கடன் ஒதுக்கு க/கு	2,000	மறுமதிப்பீட்டு நட்டம்:		
		ரகு முதல் க/கு (3/5)	6,000	
		சாம் முதல் க/கு (2/5)	4,000	**10,000**
	11,000			11,000

ப **முதல் கணக்கு** **வ**

நாள்	விவரம்	ரகு ₹	சாம் ₹	பிரகாஷ் ₹	நாள்	விவரம்	ரகு ₹	சாம் ₹	பிரகாஷ் ₹
	மறுமதிப்பீட்டு க/கு	6,000	4,000	-		இருப்பு கீ/கொ	40,000	30,000	-
	இருப்பு கீ/இ	**34,000**	**26,000**	**10,000**		வங்கி க/கு	-	-	10,000
		40,000	30,000	10,000			40,000	30,000	10,000
						இருப்பு கீ/கொ	34,000	26,000	10,000

எடுத்துக்காட்டு 7

ஆனந்த் மற்றும் பாலு என்ற கூட்டாளிகள் முறையே 7 : 3 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 31 மார்ச், 2018 ஆம் நாளைய அவர்களது இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு:

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல் கணக்குகள்:			நிலம்	60,000
ஆனந்த்	50,000		சரக்கிருப்பு	40,000
பாலு	30,000	80,000	கடனாளிகள்	20,000
பற்பல கடனீந்தோர்		20,000	கைரொக்கம்	10,000
இலாப நட்ட க/கு		30,000		
		1,30,000		1,30,000

12th-Accountancy-Unit-05_TM.indd 146 12/9/2021 11:13:49 PM

2018 ஏப்ரல் 1 ஆம் நாளன்று அவர்கள் சந்துரு என்பவரை கீழ்க்காணும் சரிக்கட்டுதல்களுக்கு ஒப்புக்கொண்டு 1/4 பங்குக்கு ₹ 20,000 முதலுடன் கூட்டாளியாக கூட்டான்மையில் சேர்த்துக் கொண்டனர்

(அ) சரக்கிருப்பு மதிப்பை ₹ 3,000 குறைப்பது

(ஆ) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ₹ 2,000 உருவாக்குவது

(இ) நிலத்தின் மதிப்பை ₹ 10,000 மதிப்பேற்றம் செய்வது

மறுமதிப்பீட்டுக் கணக்கு மற்றும் முதல் கணக்கினை கூட்டாளி சேர்ப்பிற்குப் பின் தயாரிக்கவும்.

தீர்வு

ப **மறுமதிப்பீட்டுக் கணக்கு** **வ**

விவரம்	₹	₹	விவரம்	₹
சரக்கிருப்பு க/கு		3,000	நிலம் க/கு	10,000
வாரா ஐயக்கடன் ஒதுக்கு க/கு		2,000		
மறுமதிப்பீட்டு இலாபம்:				
ஆனந்த் முதல் க/கு (7/10)	3,500			
பாலு முதல் க/கு (3/10)	1,500	**5,000**		
		10,000		10,000

ப **முதல் கணக்கு** **வ**

விவரம்	ஆனந்த் ₹	பாலு ₹	சந்துரு ₹	விவரம்	ஆனந்த் ₹	பாலு ₹	சந்துரு ₹
இருப்பு கீ/இ	**74,500**	**40,500**	**20,000**	இருப்பு கீ/கொ	50,000	30,000	-
				வங்கி க/கு	-	-	20,000
				மறுமதிப்பீட்டு க/கு	3,500	1,500	-
				இலாப நட்ட க/கு	21,000	9,000	-
	74,500	40,500	20,000		74,500	40,500	20,000
				இருப்பு கீ/கொ	74,500	40,500	20,000

மாணவர் செயல்பாடு 5.2

வகுப்பு முழுவதற்குமான விளையாட்டு: உங்கள் நிலையை மாற்றிக் கொள்ளவும்

ஒரு மாணவன் ஒரு நடவடிக்கையை சொல்லவும். அந்நடவடிக்கையின் விளைவு மறுமதிப்பீட்டு இலாபமாக இருந்தால், மற்ற மாணவர்கள் எழுந்து நிற்க வேண்டும் மற்றும் நட்டமாக இருந்தால் அவர்கள் உட்கார வேண்டும்.

உதாரணங்கள்: ஒரு மாணவன் கட்டடத்தின் மீது தேய்மானம் என்று சொன்னால், மற்ற மாணவர்கள் உட்கார வேண்டும்.

ஒரு மாணவன் அறைகலன் மறுமதிப்பீடு அதிகரிப்பு என்று சொன்னால், மற்ற மாணவர்கள் எழுந்து நிற்க வேண்டும்.

இது குழுவாகவோ அல்லது இணையாகவோ விளையாடலாம்.

12th-Accountancy-Unit-05_TM.indd 147 12/9/2021 11:13:49 PM

5.4.2 சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் திருத்திய மதிப்பை ஏடுகளில் காட்டாமல் இருப்பது

இம்முறையில், சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அதன் உண்மையான மதிப்புகளிலேயே கூட்டாளியை சேர்த்தவுடன் கணக்கேடுகளிலும், தயாரிக்கப்படும் இருப்புநிலைக் குறிப்பிலும் காட்டப்படும். அதன் திருத்திய மதிப்பில் காட்டப்படாது. மறுமதிப்பீட்டின் இறுதி விளைவு கூட்டாளிகளின் முதல் கணக்குகள் மூலம் சரிக்கட்டப்படும். திருத்திய மதிப்பை ஏடுகளில் காட்டாமல் இருப்பதற்காக நினைவுக் குறிப்பு மறுமதிப்பீட்டுக் கணக்கு என்ற ஒரு தற்காலிகக் கணக்கு தயாரிக்கப்படுகிறது.

5.5 புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம்

5.5.1 புதிய இலாபப் பகிர்வு விகிதம்

ஒரு கூட்டாளியைச் சேர்க்கும் போது புதிய இலாபப் பகிர்வு விகிதம் நிர்ணயிக்க வேண்டியது அவசியம். ஏனெனில், புதிய கூட்டாளி நிறுவனத்தின் வருங்கால இலாபத்தில் பங்கு பெறும் உரிமை பெறுகிறார். புதிய இலாப விகிதம் என்பது நிறுவனத்தின் வருங்கால இலாபத்தை புதிய கூட்டாளி உட்பட அனைத்துக் கூட்டாளிகளும் பகிர்ந்து கொள்ள ஒப்புக் கொண்ட விகிதம் ஆகும். புதிய இலாபப் பகிர்வு விகிதம் ஒப்புக்கொள்ளவில்லை என்றால், கூட்டாளிகள் இலாபம் மற்றும் நட்டத்தை சமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

5.5.2 தியாக விகிதம்

பழைய கூட்டாளிகள் புதிய கூட்டாளிக்கு அவர்கள் இலாபத்தின் ஒரு பகுதியினை தியாகம் செய்யலாம். இந்த தியாகத்தை அனைத்துக் கூட்டாளிகள் அல்லது சில கூட்டாளிகள் செய்யலாம். தியாக விகிதம் என்பது பழைய கூட்டாளிகள் தங்கள் இலாபத்தில் ஒரு விகிதத்தை புதிய கூட்டாளிக்கு ஆதரவாக தியாகம் செய்வது அல்லது விட்டுக் கொடுப்பது ஆகும். இந்த தியாக விகிதம் கணக்கிடுவதன் நோக்கம் புதிய கூட்டாளி கொண்டு வரும் நற்பெயரைப் பகிர்ந்து கொள்வதாகும். புதிய பங்கை பழைய பங்கிலிருந்து கழிப்பதன் மூலம் தியாகப் பங்கு கணக்கிடப்படுகிறது.

தியாகப் பங்கு = பழைய பங்கு – புதிய பங்கு

தியாக விகிதம் = பழைய கூட்டாளிகள் தியாகம் செய்த பங்கின் விகிதம்

புதிய கூட்டாளியின் பங்கு என்பது பழைய கூட்டாளிகளால் தியாகம் செய்யப்பட்ட பங்குகளின் கூட்டுத்தொகை ஆகும்.

மாணவர் குறிப்பு: புதிய இலாபப் பகிர்வு விகிதம் வினாவில் தரப்படவில்லை எனில், இது வினாவில் தரப்பட்ட தகவல்கள் அடிப்படையில் கணக்கிட வேண்டும்.



12th-Accountancy-Unit-05_TM.indd 148 12/9/2021 11:13:49 PM



சில நேரங்களில் புதிய கூட்டாளியைச் சேர்க்கும் போது, ஏற்கனவே இருக்கும் கூட்டாளி கூட புதிய இலாபப் பங்கு பழைய பங்கை விட அதிகமாக இருக்கும் போது ஆதாயம் அடையலாம். இத்தருணத்தில் ஆதாயம் பெற்ற கூட்டாளி தியாகம் செய்த கூட்டாளிக்கு நிறுமத்தின் மொத்த நற்பெயரில் அவரது ஆதாய பங்கு அளவிற்கு ஈடுகட்ட வேண்டும்.

தியாக விகிதம் மற்றும் புதிய இலாபப் பகிர்வு விகிதம் வெவ்வேறு தருணங்களில் கணக்கிடுதல்

1. புதிய இலாபப் பங்கு விகிதம் கொடுக்கப்பட்டிருந்தால்

புதிய இலாபப் பங்கு விகிதம் கொடுக்கப்பட்டிருக்கும் போது தியாகப் பங்கு பின்வருமாறு கணக்கிடப்படுகிறது:

தியாகப் பங்கு விகிதம் = பழைய கூட்டாளிகள் செய்த தியாகப் பங்கின் விகிதம்

தியாகப் பங்கு = பழைய பங்கு – புதிய பங்கு

எடுத்துக்காட்டு 8

அன்பு மற்றும் இராஜு என்ற இரு கூட்டாளிகள் 3:2 என்ற இலாப விகிதத்தில் இலாபத்தைப் பகிர்ந்து வந்தனர். அக்ஷய் என்பவரை கூட்டாளியாகச் சேர்த்தனர். அன்பு, இராஜு மற்றும் அக்ஷய் அவர்களின் புதிய இலாபப் பங்கு 5:3:2. தியாக விகிதத்தைக் கணக்கிடவும்.

தீர்வு

அன்பு, இராஜு அவர்களின் பழைய பங்கு = 3:2 அதாவது, $\frac{3}{5}:\frac{2}{5}$

அன்பு, இராஜு மற்றும் அக்ஷய்–ன் புதிய இலாபப் பங்கு = 5:3:2 அதாவது, $\frac{5}{10}:\frac{3}{10}:\frac{2}{10}$

தியாகப் பங்கு = பழைய பங்கு – புதிய பங்கு

அன்பு $= \frac{3}{5}-\frac{5}{10}=\frac{6-5}{10}=\frac{1}{10}$

இராஜு $\frac{2}{5}-\frac{3}{10}=\frac{4-3}{10}=\frac{1}{10}$

அன்பு, இராஜுவின் தியாகப் பங்கு $\frac{1}{10}:\frac{1}{10}$ அதாவது, 1:1

2. புதிய இலாபப்பங்கு விகிதம் கொடுக்கப்படவில்லையெனில்

(அ) தியாகப்பங்கு கொடுக்கப்பட்டிருந்தால்

புதிய இலாபப் பங்கு விகிதம் கொடுக்கப்படவில்லையெனில், ஆனால் பழைய கூட்டாளியின் தியாகம் கொடுக்கப்பட்டிருந்தால் புதிய இலாபப் பகிர்வு விகிதம் பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.

பழைய கூட்டாளியின் புதியபங்கு = பழைய பங்கு – தியாகப் பங்கு

புதிய கூட்டாளியின் பங்கு = பழைய கூட்டாளிகளின் தியாகப் பங்கின் கூட்டுத்தொகை

12th-Accountancy-Unit-05_TM.indd 149 12/9/2021 11:13:49 PM

எடுத்துக்காட்டு 9

ஹரி மற்றும் சலீம் என்ற இரு கூட்டாளிகள் 5:3 என்ற இலாப விகிதத்தில் இலாபத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் ஜோயல் என்பவரை $\frac{1}{8}$ பங்கிற்கு கூட்டாளியாகச் சேர்த்தனர். அவர் அப்பங்கு முழுவதையும் ஹரி என்பவரிடம் பெற்றுக் கொண்டார். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.

தீர்வு

தியாக விகிதம் மற்றும் புதிய இலாபப் பகிர்வு விகிதம் கணக்கிடுதல்

பழைய கூட்டாளிகளின் தியாகப் பங்கு

ஹரி $= \frac{1}{8}$

சலீம் $= 0$

தியாக விகிதம் $= 1:0$

ஹரி மற்றும் சலீம் அவர்களின் பழைய பங்கு 5:3 அதாவது, $\frac{5}{8}:\frac{3}{8}$

பழைய கூட்டாளியின் புதிய பங்கு = பழைய பங்கு – தியாகப் பங்கு

ஹரி $= \frac{5}{8}-\frac{1}{8}=\frac{5-1}{8}=\frac{4}{8}$

சலீம் $= \frac{3}{8}$

புதிய கூட்டாளி ஜோயல் பங்கு $= \frac{1}{8}$

ஹரி, சலீம் மற்றும் ஜோயல் அவர்களின் புதிய இலாபப் பகிர்வு விகிதம் $\frac{4}{8}:\frac{3}{8}:\frac{1}{8}$ அதாவது, 4:3:1

எடுத்துக்காட்டு 10

ரவி மற்றும் குமார் என்ற இரு கூட்டாளிகள் 7:3 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் கிறிஸ்டி என்பவரை $\frac{3}{7}$ பங்கிற்கு கூட்டாளியாகச் சேர்த்தனர். கிறிஸ்டி ரவியிடமிருந்து $\frac{2}{7}$ பங்கும், குமாரிடமிருந்து $\frac{1}{7}$ பங்கும் பெறுகிறார். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.

தீர்வு

தியாக விகிதம் மற்றும் புதிய இலாபப் பகிர்வு விகிதம் கணக்கிடுதல்

தியாகப் பங்கு $= \frac{2}{7},\frac{1}{7}$

ரவி மற்றும் குமார் அவர்களின் தியாக விகிதம் 2:1

பழைய இலாபப் பகிர்வு விகிதம் = 7:3 அல்லது $\frac{7}{10}:\frac{3}{10}$

பழைய கூட்டாளிகளின் புதிய பங்கு = பழைய பங்கு – தியாகப் பங்கு

ரவி $= \frac{7}{10}-\frac{2}{7}=\frac{49-20}{70}=\frac{29}{70}$

குமார் $= \frac{3}{10}-\frac{1}{7}=\frac{21-10}{70}=\frac{11}{70}$

12th-Accountancy-Unit-05_TM.indd 150 12/9/2021 11:13:49 PM

புதிய கூட்டாளியின் பங்கு

கிறிஸ்டி $= \frac{3}{7}$

கிறிஸ்டியின் பங்கிற்குரிய பகுதியை சமன் செய்யும் பொருட்டு, 10 ஆல் பெருக்கி மற்றும் வகுக்க வேண்டும்.

$$= \frac{3}{7} \times \frac{10}{10} = \frac{30}{70}$$

ரவி, குமார் மற்றும் கிறிஸ்டி அவர்களின் புதிய இலாபப் பகிர்வு விகிதம் = $\frac{29}{70} : \frac{11}{70} : \frac{30}{70} = 29 : 11 : 30$

எடுத்துக்காட்டு 11

ஹமீது மற்றும் கோவிந்த் என்ற இரு கூட்டாளிகள் 5:3 விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் ஜான் என்பவரை கூட்டாளியாகச் சேர்த்தனர். ஜான் ஹமீதிடமிருந்து 1/5 பங்கும், கோவிந்திடமிருந்து 1/5 பங்கும் பெறுகிறார். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.

தீர்வு

தியாக விகிதம் மற்றும் புதிய இலாபப் பகிர்வு விகிதம் கணக்கிடுதல்

தியாகப் பங்கு $\frac{1}{5}, \frac{1}{5}$

ஹமீது மற்றும் கோவிந்த் அவர்களின் தியாக விகிதம் 1:1

பழைய பங்கு 5:3 அதாவது, $\frac{5}{8} : \frac{3}{8}$

பழைய கூட்டாளியின் புதிய பங்கு = பழைய பங்கு – தியாகப் பங்கு

ஹமீது $= \frac{5}{8} - \frac{1}{5} = \frac{25-8}{40} = \frac{17}{40}$

கோவிந்த் $= \frac{3}{8} - \frac{1}{5} = \frac{15-8}{40} = \frac{7}{40}$

புதிய கூட்டாளியின் பங்கு

ஜான் = பழைய கூட்டாளிகளின் தியாகப் பங்கின் கூட்டுத்தொகை

$$= \frac{1}{5} + \frac{1}{5} = \frac{2}{5}$$

ஜானின் பங்கிற்குரிய பகுதியை சமன் செய்யும் பொருட்டு, 8 ஆல் பெருக்கி மற்றும் வகுக்க வேண்டும்.

ஜானின் பங்கு $\frac{2}{5} \times \frac{8}{8} = \frac{16}{40}$

ஹமீது, கோவிந்த் மற்றும் ஜான் அவர்களின் புதிய இலாபப் பகிர்வு விகிதம் $\frac{17}{40} : \frac{7}{40} : \frac{16}{40}$ அல்லது 17:7:16

(ஆ) தியாகப் பங்கின் விகிதம் கொடுக்கப்பட்டிருந்தால்

(i) தியாகப் பங்கு பழைய கூட்டாளியின் பங்கின் மீது விகிதத்தில் கொடுக்கப்பட்டிருந்தால்

புதிய இலாபப் பகிர்வு விகிதம் கொடுக்கப்படாத போது, ஆனால் தியாகப் பங்கு பழைய கூட்டாளிகளின் பங்கின் மீது விகிதத்தில் கொடுக்கப்பட்டிருந்தால், புதிய இலாபப் பகிர்வு விகிதம் பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.

12th-Accountancy-Unit-05_TM.indd 151 12/9/2021 11:13:49 PM

பழைய கூட்டாளியின் தியாகப்பங்கு	= பழைய பங்கு x தியாகப் பங்கின் விகிதம்
பழைய கூட்டாளியின் புதிய பங்கு	= பழைய பங்கு – தியாகப் பங்கு
புதிய கூட்டாளியின் பங்கு	= பழைய கூட்டாளிகளின் தியாகப் பங்கின் கூட்டுத்தொகை

எடுத்துக்காட்டு 12

சுரேஷ் மற்றும் தினேஷ் என்ற இரு கூட்டாளிகள் 3:2 விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் இரமேஷ் என்பவரை கூட்டாளியாகச் சேர்த்தனர். சுரேஷ் என்பவர் தன்பங்கில் 1/5 பங்கும், தினேஷ் என்பவர் தன் பங்கில் 2/5 பங்கும் தியாகம் செய்கின்றனர். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.

தீர்வு

தியாக விகிதம் மற்றும் புதிய இலாபப் பகிர்வு விகிதம் கணக்கிடுதல்

பழைய பங்கு = 3:2 அதாவது, சுரேஷ் $\frac{3}{5}$ மற்றும் தினேஷ் $\frac{2}{5}$

தியாகப் பங்கு = பழைய பங்கு x தியாகப் பங்கின் விகிதம்

சுரேஷ் $= \frac{3}{5} \times \frac{1}{5} = \frac{3}{25}$

தினேஷ் $= \frac{2}{5} \times \frac{2}{5} = \frac{4}{25}$

சுரேஷ் மற்றும் தினேஷ் அவர்களின் தியாக விகிதம் $\frac{3}{25}$ மற்றும் $\frac{4}{25}$, அதாவது, 3:4

புதிய பங்கு = பழைய பங்கு – தியாகப் பங்கு

சுரேஷ் $= \frac{3}{5} - \frac{3}{25} = \frac{15-3}{25} = \frac{12}{25}$

தினேஷ் $= \frac{2}{5} - \frac{4}{25} = \frac{10-4}{25} = \frac{6}{25}$

புதிய கூட்டாளியின் பங்கு = சுரேஷ் மற்றும் தினேஷ் அவர்களின் தியாகப் பங்கின் கூட்டுத்தொகை

ரமேஷ் $= \frac{3}{25} + \frac{4}{25} = \frac{3+4}{25} = \frac{7}{25}$

சுரேஷ், தினேஷ் மற்றும் இரமேஷ் அவர்களின் புதிய இலாபப் பகிர்வு விகிதம் = $\frac{12}{25} : \frac{6}{25} : \frac{7}{25}$ அதாவது, 12:6:7

எடுத்துக்காட்டு 13

பிரசாந்த் மற்றும் நிஷா என்ற இரு கூட்டாளிகள் 3:2 விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் ரம்யா என்பவரை கூட்டாளியாகச் சேர்த்தனர். பிரசாந்த் தன்பங்கில் 2/5 பங்கும், நிஷா தன் பங்கில் 2/5 பங்கும் தியாகம் செய்கின்றனர். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.

தீர்வு

தியாக விகிதம் மற்றும் புதிய இலாபப் பகிர்வு விகிதம் கணக்கிடுதல்

பழைய பங்கு = 3:2 அதாவது, பிரசாந்த் $\frac{3}{5}$ மற்றும் நிஷா $\frac{2}{5}$

12th-Accountancy-Unit-05_TM.indd 152 12/9/2021 11:13:50 PM

தியாகப் பங்கு = பழைய பங்கு x தியாகப் பங்கின் விகிதம்

பிரசாந்த் $= \frac{3}{5} \times \frac{2}{5} = \frac{6}{25}$

நிஷா $= \frac{2}{5} \times \frac{2}{5} = \frac{4}{25}$

பிரசாந்த் மற்றும் நிஷாவின் தியாகப் பங்கு $\frac{6}{25}$ மற்றும் $\frac{4}{25}$, அதாவது, 3:2

புதிய பங்கு = பழைய பங்கு – தியாகப் பங்கு

பிரசாந்த் $= \frac{3}{5} - \frac{6}{25} = \frac{15-6}{25} = \frac{9}{25}$

நிஷா $= \frac{2}{5} - \frac{4}{25} = \frac{10-4}{25} = \frac{6}{25}$

புதிய கூட்டாளியின் பங்கு = பிரசாந்த் மற்றும் நிஷா தியாகப் பங்கின் கூட்டுத்தொகை

ரம்யா $= \frac{6}{25} + \frac{4}{25} = \frac{6+4}{25} = \frac{10}{25}$

பிரசாந்த், நிஷா மற்றும் ரம்யா அவர்களின் புதிய இலாபப் பகிர்வு விகிதம் = $\frac{9}{25} : \frac{6}{25} : \frac{10}{25}$ அதாவது, 9:6:10

(ii) புதிய கூட்டாளியின் பங்கில் தியாகப் பங்கின் விகிதம் கொடுக்கப்பட்டிருந்தால்

புதிய இலாபப் பகிர்வு விகிதம் கொடுக்கப்படாமல், ஆனால் புதிய கூட்டாளியின் பங்கில் தியாகப் பங்கின் விகிதம் கொடுக்கப்பட்டிருந்தால் புதிய இலாபப் பகிர்வு விகிதம் பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.

பழைய கூட்டாளியின் புதிய பங்கு = பழைய பங்கு – தியாகப் பங்கு

தியாகப் பங்கு = புதிய கூட்டாளியின் பங்கு x தியாகப் பங்கின் விகிதம்

எடுத்துக்காட்டு 14

ரமேஷ் மற்றும் ராஜு என்ற இரு கூட்டாளிகள் 2:1 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் ரஞ்சன் என்பவரை 1/4 பங்குக்கு கூட்டாளியாகச் சேர்த்தனர். ரஞ்சன் அவரது பங்கை பழைய கூட்டாளிகளிடமிருந்து 3:2 என்ற விகிதத்தில் வாங்கினார். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.

தீர்வு

தியாக விகிதம் மற்றும் புதிய இலாபப் பகிர்வு விகிதம் கணக்கிடுதல்

ரஞ்சன் பங்கு $= \frac{1}{4}$

பழைய விகிதம் = 2:1 அதாவது, $\frac{2}{3} : \frac{1}{3}$

தியாகப் பங்கின் விகிதம் = 3:2 அதாவது, $\frac{3}{5} : \frac{2}{5}$

12th-Accountancy-Unit-05_TM.indd 153 12/9/2021 11:13:50 PM

தியாகப் பங்கு = புதிய கூட்டாளியின் பங்கு x தியாகப் பங்கின் விகிதம்

ரமேஷ் $= \frac{1}{4} \times \frac{3}{5} = \frac{3}{20}$

ராஜு $= \frac{1}{4} \times \frac{2}{5} = \frac{2}{20}$

ரமேஷ் மற்றும் ராஜு வின் தியாகப் பங்கு $\frac{3}{20}$ மற்றும் $\frac{2}{20}$, அதாவது 3:2

பழைய கூட்டாளியின் புதிய பங்கு = பழைய பங்கு – தியாகப் பங்கு

ரமேஷ் $= \frac{2}{3} - \frac{3}{20} = \frac{40-9}{60} = \frac{31}{60}$

ராஜு $= \frac{1}{3} - \frac{2}{20} = \frac{20-6}{60} = \frac{14}{60}$

புதிய கூட்டாளியின் பங்கு

ரஞ்சன் $= \frac{1}{4}$

ரஞ்சனின் பங்கிற்குரிய பகுதியை சமன் செய்யும் பொருட்டு, 15 ஆல் பெருக்கி மற்றும் வகுக்க வேண்டும்.

$$= \frac{1}{4} \times \frac{15}{15} = \frac{15}{60}$$

எனவே, புதிய இலாபப் பகிர்வு விகிதம் = $\frac{31}{60} : \frac{14}{60} : \frac{15}{60}$ = 31:14:15

எடுத்துக்காட்டு 15

மகேஷ் மற்றும் தனுஷ் என்ற இரு கூட்டாளிகள் 2:1 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் அருண் என்பவரை 1/4 பங்குக்கு கூட்டாளியாகச் சேர்த்தனர். அருண் தன்னுடைய பங்கை மகேஷ் மற்றும் தனுஷ் ஆகிய இரு கூட்டாளிகளிடமிருந்தும் சம விகிதத்தில் வாங்கினார். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.

தீர்வு

தியாக விகிதம் மற்றும் புதிய இலாபப் பகிர்வு விகிதம் கணக்கிடுதல்

அருணின் பங்கு $= \frac{1}{4}$

தியாகப் பங்கின் விகிதம் = 1:1(சமமாக) அதாவது, $\frac{1}{2} : \frac{1}{2}$

தியாகப் பங்கு = புதிய கூட்டாளியின் பங்கு x தியாகப் பங்கின் விகிதம்

மகேஷ் $= \frac{1}{4} \times \frac{1}{2} = \frac{1}{8}$

தனுஷ் $= \frac{1}{4} \times \frac{1}{2} = \frac{1}{8}$

மகேஷ் மற்றும் தனுஷ்–ன் தியாகப் பங்கு $\frac{1}{8} : \frac{1}{8}$ அதாவது, 1:1

பழைய கூட்டாளியின் புதிய பங்கு = பழைய பங்கு – தியாகப் பங்கு

மகேஷ் $= \frac{2}{3} - \frac{1}{8} = \frac{16-3}{24} = \frac{13}{24}$

12th-Accountancy-Unit-05_TM.indd 154 12/9/2021 11:13:50 PM

தனுஷ் $= \frac{1}{3} - \frac{1}{8} = \frac{8-3}{24} = \frac{5}{24}$

புதிய கூட்டாளியின் பங்கு

அருண் $= \frac{1}{4}$

அருணின் பங்கிற்குரிய பகுதியை சமன் செய்யும் பொருட்டு, 6 ஆல் பெருக்கி மற்றும் வகுக்க வேண்டும்.

$= \frac{1}{4} \times \frac{6}{6} = \frac{6}{24}$

புதிய இலாபப் பகிர்வு விகிதம் $= \frac{13}{24} : \frac{5}{24} : \frac{6}{24}$ அதாவது, 13:5:6.

(இ) தியாகப் பங்கு மற்றும் தியாகப் பங்கின் விகிதம் கொடுக்கப்படாத போது

புதிய இலாபப் பங்கு விகிதம், தியாகப் பங்கு மற்றும் தியாகப் பங்கின் விகிதம் கொடுக்கப்படாத போது, ஆனால் புதிய கூட்டாளியின் பங்கு மட்டும் கொடுக்கப்பட்டிருக்கும் போது, பழைய பங்கின் விகிதத்தை தியாகப் பங்கு என எடுத்துக் கொண்டு புதிய இலாபப் பகிர்வு விகிதம் கணக்கிடப்படுகிறது.

புதிய இலாபப் பகிர்வு விகிதம் பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.

தியாகப் பங்கு	= புதிய கூட்டாளியின் பங்கு x பழைய பங்கு
பழைய கூட்டாளியின் புதிய பங்கு	= பழைய பங்கு – தியாகப் பங்கு

எடுத்துக்காட்டு 16

விமல் மற்றும் ஆதி என்ற இரு கூட்டாளிகள் 2:1 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் ஜெயம் என்பவரை 1/4 பங்குக்கு கூட்டாளியாகச் சேர்த்தனர். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.

தீர்வு

தியாக விகிதம் மற்றும் புதிய இலாபப் பகிர்வு விகிதம் கணக்கிடுதல்

தியாகப் பங்கு மற்றும் தியாகப் பங்கின் விகிதம் மற்றும் புதிய இலாபப் பங்கு விகிதம் குறிப்பிடாத போது, பழைய இலாபப் பகிர்வு விகிதத்தை இருக்கும் கூட்டாளிகளின் தியாகப் பங்காக எடுத்துக்கொள்ள வேண்டும். அதாவது, 2:1.

விமல் மற்றும் ஆதியின் தியாக விகிதம் 2:1

மொத்த பங்கு 1 என எடுத்துக் கொள்ளவும்

ஜெயம் பங்கு $= \frac{1}{4}$

மீதமுள்ளப் பங்கு $= 1 - \frac{1}{4} = \frac{4-1}{4}$

$= \frac{3}{4}$

பழைய கூட்டாளியின் புதிய பங்கு = மீதப் பங்கு x பழையப் பங்கு

விமல் $= \frac{3}{4} \times \frac{2}{3} = \frac{6}{12}$

ஆதி $= \frac{3}{4} \times \frac{1}{3} = \frac{3}{12}$

12th-Accountancy-Unit-05_TM.indd 155 12/9/2021 11:13:50 PM

புது கூட்டாளியின் பங்கு

ஜெயம் $= \frac{1}{4}$

ஜெயம் பங்கிற்குரிய பகுதியை சமன் செய்யும் பொருட்டு, 3 ஆல் பெருக்கி மற்றும் வகுக்க வேண்டும்.

ஜெயம் பங்கு $= \frac{1}{4} \times \frac{3}{3} = \frac{3}{12}$

விமல், ஆதி மற்றும் ஜெயம் அவர்களின் புதிய இலாபப் பகிர்வு விகிதம் = $\frac{6}{12} : \frac{3}{12} : \frac{3}{12}$ அதரவது, 2 : 1 : 1

எடுத்துக்காட்டு 17

அனில், சுனில் மற்றும் ஹரி என்ற மூன்று கூட்டாளிகள் 4:3:3 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் ராஜா என்பவரை 20% இலாபத்திற்கு கூட்டாளியாகச் சேர்த்தனர். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.

தீர்வு

தியாக விகிதம் மற்றும் புதிய இலாபப் பகிர்வு விகிதம் கணக்கிடுதல்

அனில், சுனில் மற்றும் ஹரியின் பழைய இலாப விகிதம் = 4:3:3 அல்லது $\frac{4}{10} : \frac{3}{10} : \frac{3}{10}$

இலாபத்தில் ராஜாவின் பங்கு = 20% அல்லது 20/100 அல்லது 1/5

மொத்த பங்கு 1 என எடுத்துக் கொள்ளவும்

மீதப் பங்கு $= 1 - \frac{1}{5} = \frac{5-1}{5}$

$= \frac{4}{5}$

பழைய கூட்டாளியின் புதிய பங்கு = மீதப் பங்கு x பழையப் பங்கு

அனில் $= \frac{4}{5} \times \frac{4}{10} = \frac{16}{50}$

சுனில் $= \frac{4}{5} \times \frac{3}{10} = \frac{12}{50}$

ஹரி $= \frac{4}{5} \times \frac{3}{10} = \frac{12}{50}$

புதிய கூட்டாளியின் பங்கு

ராஜா $= \frac{1}{5}$

ராஜா பங்கிற்குரிய பகுதியை சமன் செய்யும் பொருட்டு, 10 ஆல் பெருக்கி மற்றும் வகுக்க வேண்டும்.

ராஜாவின் பங்கு $= \frac{1}{5} \times \frac{10}{10} = \frac{10}{50}$

அனில், சுனில், ஹரி மற்றும் ராஜாஅவர்களின் புதிய இலாபப் பகிர்வு விகிதம் = $\frac{16}{50} : \frac{12}{50} : \frac{12}{50} : \frac{10}{50}$
அதாவது, 8:6:6:5.

தியாக விகிதம் = 4:3:3

5.6 நற்பெயர் குறித்த சரிக்கட்டல்கள்

ஒரு நிறுவனம் ஈட்டியுள்ள நன்மதிப்பு தற்போதைய இலாபம் மற்றும் எதிர் கால இலாபம் ஆகியவற்றில் விளைவை ஏற்படுத்தும். கூட்டாளி சேர்க்கையின் போது, பழைய கூட்டாளிகள் புதிய கூட்டாளிக்கென ஒரு பகுதி பங்கினை தியாகம் செய்கின்றனர். எனவே, பழைய கூட்டாளிகளின்

12th-Accountancy-Unit-05_TM.indd 156 12/9/2021 11:13:50 PM

தியாகத்திற்கு இழப்பீடாக, நிறுவனத்தின் நற்பெயர் மதிப்பிடப்படுகிறது மற்றும் சரிகட்டப்படுகிறது. முதல் மட்டுமில்லாமல் புதிய கூட்டாளி நற்பெயருக்காகவும் பங்களிப்பதுண்டு. இந்த நற்பெயர் பழைய கூட்டாளிகளின் தியாக விகிதத்தின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படும்.

5.6.1. நற்பெயருக்கான கணக்கியல் செயல்முறைகள்

கூட்டாளி சேர்க்கையின் போது நற்பெயருக்கான கணக்கியல் செயல்முறைகள் கீழே விவாதிக்கப்பட்டுள்ளது:

1. புதிய கூட்டாளி நற்பெயருக்காக ரொக்கம் அல்லது சொத்து கொண்டு வரும் போது
2. புதிய கூட்டாளி நற்பெயருக்கென ரொக்கம் அல்லது சொத்து ஏதும் கொண்டு வராத போது
3. புதிய கூட்டாளி நற்பெயருக்கான ஒரு பகுதியை மட்டும் ரொக்கம் அல்லது சொத்துகளாக கொண்டு வரும் போது.
4. பழைய நற்பெயர்

1. புதிய கூட்டாளி நற்பெயருக்காக பணம் கொண்டு வரும் போது

புதிய கூட்டாளி முதல் தொகையோடு, கூடுதலாக நற்பெயருக்காகவும் பணம் கொண்டுவரும் போது, அது பழைய கூட்டாளிகளின் தியாக விகிதத்தின்படி அவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும். பின்வரும் குறிப்பேட்டு பதிவுகள் அதற்காக செய்யப்படுகின்றன.

(i) நற்பெயர் ரொக்கமாக கொண்டு வந்து, பழைய கூட்டாளிகளின் முதல் கணக்கில் வரவு செய்யும்போது:

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	ரொக்கம் / வங்கி க/கு ப		XXX	
	பழைய கூட்டாளிகளின் முதல் / நடப்பு க/கு (தியாக விகிதப்படி)			XXX

(ii) நற்பெயர் சொத்துகளாக கொண்டு வரப்பட்டு பழைய கூட்டாளிகளின் முதல் கணக்கில் வரவு செய்யும்போது:

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	குறிப்பிட்ட சொத்து க/கு ப		XXX	
	பழைய கூட்டாளிகளின் முதல் / நடப்பு க/கு (தியாக விகிதப்படி)			XXX

(iii) நற்பெயருக்காக பெற்ற ரொக்கம், பழைய கூட்டாளிகளால் எடுத்துக்கொள்ளப்படும் போது:

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	பழைய கூட்டாளிகளின் முதல் / நடப்பு க/கு ப		XXX	
	ரொக்கம் / வங்கி க/கு			XXX

எடுத்துக்காட்டு 18

அமுதா மற்றும் புவனா இருவரும் கூட்டாளிகள். அவர்கள் 5:3 என்ற விகிதத்தில் இலாப–நட்டம் பகிர்ந்து வந்தனர். சித்ரா 3/8 பங்கு விகிதத்தில் புதிய கூட்டாளியாக சேர்கிறார். அப்போது ₹ 8,000 தமது நற்பெயர் பங்களிப்பாக கொண்டு வருகிறார். அவர்கள் மாறுபடும் முதல் முறையில் கணக்கினை பராமரிக்கின்றனர். நற்பெயருக்கென தொகை முழுவதையும் அவர்கள் எடுத்துக்கொள்கிறார்கள். நற்பெயரைச் சரிகட்டத் தேவையான குறிப்பேட்டுப்பதிவுகளை உருவாக்கவும்.

12th-Accountancy-Unit-05_TM.indd 157 12/9/2021 11:13:50 PM

தீர்வு

பழைய கூட்டாளிகளின் தியாகம் கொடுக்கப்படவில்லை. அவர்களின் பழைய இலாபப் பகிர்வு விகிதமான 5:3 தியாக விகிதமாக எடுத்துக் கொள்ள வேண்டும். எனவே, தியாக விகிதம் 5:3 ஆகும்.

குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
2019 ஜனவரி 1	வங்கி க/கு ப		8,000	
	அமுதாவின் முதல் க/கு (5/8)			5,000
	புவனாவின் முதல் க/கு (3/8)			3,000
	(நற்பெயருக்காக பெற்ற தொகை அமுதா மற்றும் புவனாவின் தியாக விகிதப்படி பகிரப்பட்டது)			
,,	அமுதாவின் முதல் க/கு ப		5,000	
	புவனாவின் முதல் க/கு ப		3,000	
	வங்கி க/கு			8,000
	(கூட்டாளிகளால் தொகை எடுக்கப்பட்டது)			

எடுத்துக்காட்டு 19

அருண், பாபு மற்றும் சார்லஸ் மூவரும் கூட்டாளிகள். அவர்கள் இலாபம் மற்றும் நட்டங்களை சமமாக பகிர்ந்து கொள்கின்றனர். அவர்கள் துரை என்பவரை 1/4 விகிதத்தில் எதிர்கால இலாபத்தினை பகிர்ந்துகொள்ள ஒப்புக்கொண்டு கூட்டாண்மையில் சேர்க்கின்றனர். நிறுவனத்தின் நற்பெயர் மதிப்பு ₹ 36,000 என்று மதிப்பிடப்படுகிறது. நற்பெயருக்காக துரை தமது பங்கின் அளவு தொகை கொண்டு வருகிறார். பழைய கூட்டாளிகள் நற்பெயருக்கான பாதித் தொகையினை எடுத்துக் கொண்டனர். மாறுபடும் முதல் முறையில் ஏடுகள் பராமரிக்கப்படுகின்றன எனக் கொண்டு தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளை தரவும்.

தீர்வு

துரையின் நற்பெயர் பங்கு = 36,000 × 1/4 = ₹ 9,000

பழைய கூட்டாளிகளின் தியாக விகிதம் கொடுக்கப்படவில்லை. பழைய இலாபப் பகிர்வு விகிதமான 1:1:1 தியாக விகிதமாக கொள்ளப்படுகிறது. எனவே, தியாக விகிதம் 1:1:1.

குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	வங்கி க/கு ப		9,000	
	அருண் முதல் க/கு			3,000
	பாபு முதல் க/கு			3,000
	சார்லஸ் முதல் க/கு			3,000
	(நற்பெயருக்காக பெறப்பட்ட தொகை பழைய கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு தியாக விகிதப்படி அளிக்கப்பட்டது)			

12th-Accountancy-Unit-05_TM.indd 158 12/9/2021 11:13:50 PM

	அருண் முதல் க/கு ப பாபு முதல் க/கு ப சார்லஸ் முதல் க/கு ப வங்கி க/கு (பழைய கூட்டாளிகள் நற்பெயருக்கான தொகையை எடுத்துக் கொண்டது)		1,500 1,500 1,500	 4,500

எடுத்துக்காட்டு 20

வாசு மற்றும் தேவி இருவரும் கூட்டாளிகள். அவர்கள் 3:2 என்ற விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வருகின்றனர். அவர்கள் நிலா என்பவரை 1/4 இலாப பங்கிற்கு கூட்டாண்மையில் சேர்க்கின்றனர். நிலா தன்னுடைய பங்காக ₹ 3,000 நற்பெயருக்கென செலுத்துகிறார். அவர்களின் புதிய இலாபப்பகிர்வு விகிதம் 3:3:2. நிலைமுதல் முறையில் கணக்குகள் பராமரிக்கப்படுகின்றன எனக்கொண்டு, தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளை உருவாக்கவும்.

தீர்வு

தியாக விகிதம் கணக்கிடுதல்:

தியாக விகிதம் = பழைய பங்கு – புதிய பங்கு

வாசு $= \frac{3}{5} - \frac{3}{8} = \frac{24-15}{40} = \frac{9}{40}$

தேவி $= \frac{2}{5} - \frac{3}{8} = \frac{16-15}{40} = \frac{1}{40}$

எனவே, தியாக விகிதம் = 9:1

குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	வங்கி க/கு ப வாசுவின் நடப்பு க/கு (9/10) தேவியின் நடப்பு க/கு (1/10) (நற்பெயருக்கென கொண்டுவரப்பட்ட ரொக்கம் பழைய கூட்டாளிகளின் தியாக விகிதப்படி வரவு செய்யப்பட்டது)		3,000	 2,700 300

2. புதிய கூட்டாளி நற்பெயருக்கென ரொக்கம் அல்லது சொத்து ஏதும் கொண்டு வராத போது

புதிய கூட்டாளி நற்பெயருக்காக பணம் அல்லது சொத்துகள் ஏதும் கொண்டு வராத போது, அவருடைய நற்பெயருக்கான பங்கினை கூட்டாளிகளின் முதல் கணக்கில் சரிக்கட்ட வேண்டும். அதற்கான பின்வரும் குறிப்பேட்டுப் பதிவினைத் தரவேண்டும்.

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	புதிய கூட்டாளியின் முதல் க/கு ப பழைய கூட்டாளியின் முதல் / நடப்பு க/கு (தியாக விகிதப்படி)		xxx	 xxx

12th-Accountancy-Unit-05_TM.indd 159 12/9/2021 11:13:51 PM

எடுத்துக்காட்டு 21

அசோக் மற்றும் மும்தாஜ் இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அவர்கள் 5:1 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வருகின்றனர். அவர்கள் தருண் என்பவரை 2/9 இலாப விகிதத்தில் நிறுவனத்தில் சேர்க்க முடிவு செய்கின்றனர். சேர்க்கையின் போது நிறுவனத்தின் நற்பெயர் மதிப்பு ₹ 27,000 என்று மதிப்பிடப்படுகிறது. தருணால் தன்னுடைய பங்கிற்கான நற்பெயர் மதிப்பிற்கான தொகையைக் கொண்டுவர முடியவில்லை. நிறுவனம் மாறுபடும் முதல் முறையில் கணக்கினைப் பராமரிக்கிறதெனக் கொண்டு தேவையான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

தீர்வு

பழைய கூட்டாளிகளின் தியாகம் குறிப்பிடப்படவில்லை. பழைய கூட்டாளிகளின் இலாப விகிதமான 5:1 தியாக விகிதமாக கருத வேண்டும். எனவே, தியாகவிகிதம் 5:1.

தருணின் நற்பெயர் = $27,000 \times \frac{2}{9}$ = ₹ 6,000

குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	தருணின் முதல் க/கு ப		6,000	
	அசோக் முதல் க/கு (5/6)			5,000
	மும்தாஜ் முதல் க/கு (1/6)			1,000
	(தருணின் நற்பெயர் பழைய கூட்டாளிகளின் முதல் கணக்கில் பழைய இலாப விகிதத்தில் சரிக்கட்டப்பட்டது)			

3. புதிய கூட்டாளி, நற்பெயருக்கான ஒரு பகுதியை மட்டும் ரொக்கம் அல்லது சொத்துகளாக கொண்டு வரும் போது.

சில நேரங்களில் புதிய கூட்டாளி நற்பெயருக்கென ஒரு பகுதியை மட்டும் ரொக்கம் அல்லது சொத்துகளாகக் கொண்டு வருவதுண்டு. அந்நிலைகளில், ரொக்கம் அல்லது சொத்துகள் குறிப்பிட்ட கணக்கில் பற்றுவைக்கப்படுகிறது. கொண்டு வராத தொகை புதிய கூட்டாளியின் முதல் கணக்கில் பற்று செய்யப்படுகிறது. இத்தொகையானது பழைய கூட்டாளிகளின் முதல் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. இதற்கு பின்வரும் குறிப்பேட்டுப் பதிவினைத் தரவேண்டும்.

குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	ரொக்கம் / வங்கி க/கு ப		xxx	
	புதிய கூட்டாளியின் முதல் க/கு ப		xxx	
	பழைய கூட்டாளிகள் முதல் / நடப்பு க/கு (தியாக விகிதப்படி)			xxx

எடுத்துக்காட்டு 22

அரவிந்த் மற்றும் பாலாஜி இருவரும் 3:2 விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வரும் கூட்டாளிகள். அவர்கள் அனிருத் என்பவரை புதிய கூட்டாளியாகச் சேர்க்க அனுமதித்தனர். புதிய இலாபப்பகிர்வு விகிதமாக 1:1:1 என்பதை மூவரும் ஒப்புக் கொள்கின்றனர். அனிருத் செலுத்த வேண்டிய நற்பெயர் மதிப்பு ₹ 20,000 என்று மதிப்பிடப்படுகிறது. அதில், அவர் ₹ 12,000 ரொக்கம் செலுத்துகிறார். மாறுபடும் முதல் முறையில் கணக்குகள் உள்ளதெனக் கொண்டு நற்பெயருக்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

12th-Accountancy-Unit-05_TM.indd 160 12/9/2021 11:13:51 PM

தீர்வு

தியாக விகிதம் கணக்கீடு

தியாகவிகிதம் = பழைய பங்கு – புதிய பங்கு

அரவிந்த் $= \frac{3}{5} - \frac{1}{3} = \frac{9-5}{15} = \frac{4}{15}$

பாலாஜி $= \frac{2}{5} - \frac{1}{3} = \frac{6-5}{15} = \frac{1}{15}$

எனவே, தியாக விகிதம் = 4:1

குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	ரொக்கக் க/கு ப		12,000	
	அனிருத் முதல் க/கு ப		8,000	
	அரவிந்த் முதல் க/கு (4/5)			16,000
	பாலாஜி முதல் க/கு (1/5)			4,000
	(அனிருத்தின் நற்பெயர் பங்கு பழைய கூட்டாளிகளின் முதல் கணக்கில் வரவு வைக்கப்பட்டது)			

4. பழைய நற்பெயர்

நற்பெயர் ஏற்கனவே கணக்கேடுகளில் இருந்தால், கூட்டாளி சேர்க்கையின்போது கூட்டாளிகள் முடிவெடுத்தால் அதனை போக்கெழுத பழைய கூட்டாளிகளின் முதல் கணக்கில் அல்லது நடப்புக் கணக்கில் பழைய இலாபவிகிதத்தில் மாற்றிட வேண்டும். இதற்கு பின்வரும் குறிப்பேட்டுப் பதிவினைத் தர வேண்டும்.

குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	கூட்டாளிகள் முதல் / நடப்பு க/கு (பழைய விகிதம்) ப		xxx	
	நற்பெயர் க/கு			xxx
	(பழைய நற்பெயர் போக்கெழுதியது)			

எடுத்துக்காட்டு 23

சதீஷ் மற்றும் சுதன் இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அவர்கள் 4:3 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வருகின்றனர். 2018 ஏப்ரல் 1 அன்று சசி என்பவரை கூட்டாளியாகச் சேர்த்துக்கொண்டனர். சசி கூட்டாண்மையில் சேர்ந்த அன்று நிறுவன ஏடு நற்பெயர் மதிப்பினை ₹ 35,000 என்று காட்டியது. மாறுபடும் முதல் முறையில் பராமரிக்கப்படுவதாக கருதி தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும். கூட்டாளிகள் பின்வரும் முடிவினை எடுத்தனர்.

(i) ஏட்டில் உள்ள நற்பெயர் தொகை முழுவதையும் போக்கெழுதுவது

(ii) ஏட்டில் உள்ள நற்பெயரில் ₹ 21,000 மட்டும் போக்கெழுதுவது

12th-Accountancy-Unit-05_TM.indd 161 12/9/2021 11:13:51 PM

தீர்வு

(i) ஏட்டில் உள்ள நற்பெயர் தொகை முழுவதையும் போக்கெழுதுவது

குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்		பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
2018	சதீஷின் முதல் க/கு (4/7)	ப		20,000	
ஏப்ரல் 1	சுதனின் முதல் க/கு (3/7)	ப		15,000	
	நற்பெயர் க/கு				35,000
	(ஏட்டில் உள்ள நற்பெயரைப் போக்கெழுதியது)				

(ii) ஏட்டில் உள்ள நற்பெயர் தொகையில் ₹ 21,000 மட்டும் போக்கெழுதுவது

குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்		பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
2018	சதீஷின் முதல் க/கு (21,000 x 4/7)	ப		12,000	
ஏப்ரல் 1	சுதனின் முதல் க/கு (21,000 x 3/7)	ப		9,000	
	நற்பெயர் க/கு				21,000
	(ஏட்டில் உள்ள நற்பெயரில் ₹ 21,000 போக்கெழுதியது)				



புதிய கூட்டாளி நற்பெயருக்கான தொகையை பழையக் கூட்டாளிகளிக்கு தனிப்பட்ட முறையில் வழங்கும் போது, கூட்டாண்மை நிறுவன ஏடுகளில் பதிவுகள் ஏதும் செய்யப்படுவதில்லை.

5.7 புதிய இலாபப்பகிர்வு விகித அடிப்படையில் முதலினைச் சரிக்கட்டுதல்

சில நேரங்களில், கூட்டாளிகள் நிறுவனத்தை மாற்றி அமைக்கும்போது, தங்களது புதிய இலாபப்பகிர்வு விகிதத்திற்கேற்ப முதலினையும் மாற்றி அமைக்க ஒப்புக்கொள்கின்றனர். இது இரண்டு சூழ்நிலைகளில் அமைகிறது.

புதிய கூட்டாளி தமது இலாப விகித பங்கிற்கேற்ப முதல் கொண்டு வரும் தேவை ஏற்படலாம். புதிய கூட்டாளியின் முதல், மாற்றியமைக்கப்பட்ட நிறுவன முதலுக்கேற்ப கணக்கிடப்படும் அல்லது பழைய கூட்டாளிகளின் ஒருங்கிணைக்கப்பட்ட முதலுக்கேற்ப மாற்றப்படும்.

பழைய கூட்டாளிகள் தமது புதிய இலாபப்பகிர்வு விதிதத்திற்கேற்ப முதலினை மாற்றும் தேவை ஏற்படலாம். புதிய கூட்டாளி தமது இலாபப் பங்கிற்கேற்ப முதல் கொண்டுவரும்போது, பழைய கூட்டாளிகளின் முதலையும் கணக்கிடவேண்டும். இதில், பழைய கூட்டாளிகளின் குறையும் முதல் அல்லது கூடுதல் முதல் அவர்களின் நடப்பு கணக்குகள் மூலம் சரிக்கட்டப்படும் அல்லது கூட்டாளிகளால் ரொக்கம் கொண்டு வரப்படும் அல்லது எடுத்துக் கொள்ளப்படும்.

12th-Accountancy-Unit-05_TM.indd 162 12/9/2021 11:13:51 PM

விரிவான கணக்குகள்

எடுத்துக்காட்டு 24

வெற்றி மற்றும் இரஞ்சித் இருவரும் கூட்டாளிகள். அவர்கள் 3:2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். அவர்களது 31–12–2017 நாளன்றைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு இருந்தது.

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல் கணக்குகள்:			அறைகலன்	25,000
வெற்றி	30,000		சரக்கிருப்பு	20,000
இரஞ்சித்	20,000	50,000	கடனாளிகள்	10,000
காப்பு நிதி		5,000	கைரொக்கம்	35,000
பற்பல கடனீந்தோர்		45,000	இலாப நட்ட க/கு (நட்டம்)	10,000
		1,00,000		1,00,000

பின்வரும் சரிக்கட்டுதல்களில் 01.01.2018 அன்று சூரியா என்பவர் நிறுவனத்தின் புதிய கூட்டாளியாக சேர்கிறார்.

(i) சூரியா 1/4 இலாபப் பங்கிற்காக ₹ 10,000 முதல் கொண்டுவருகிறார்.

(ii) சரக்கிருப்பு 10% குறைத்து மதிப்பிடப்படுகிறது.

(iii) கடனாளிகள் ₹ 7,500 என மதிப்பிடப்படுகிறது.

(iv) அறைகலன் மதிப்பு ₹ 40,000 என மாற்றி அமைக்கப்படுகிறது.

(v) கொடுபட வேண்டிய கூலி ₹ 4,500 இதுவரை பதிவு செய்யப்படவில்லை.

புதிய கூட்டாளி சேர்க்கைக்கு பின் நிறுவனத்தின் மறுமதிப்பீடு கணக்கு, கூட்டாளிகளின் முதல் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு தயார் செய்யவும்.

தீர்வு

ப **மறுமதிப்பீட்டுக் கணக்கு** **வ**

விவரம்	₹	₹	விவரம்	₹
சரக்கிருப்பு க/கு		2,000	அறைகலன் க/கு	15,000
கடனாளிகள் க/கு		2,500		
கொடுபட வேண்டிய கூலி க/கு		4,500		
மறுமதிப்பீட்டு இலாபம் :				
வெற்றி முதல் க/கு (3/5)	3,600			
இரஞ்சித் முதல் க/கு (2/5)	2,400	**6,000**		
		15,000		15,000

12th-Accountancy-Unit-05_TM.indd 163 12/9/2021 11:13:51 PM

ப முதல் கணக்கு வ

விவரம்	வெற்றி ₹	இரஞ்சித் ₹	சூரியா ₹	விவரம்	வெற்றி ₹	இரஞ்சித் ₹	சூரியா ₹
இலாப நட்ட க/கு	6,000	4,000	-	இருப்பு கீ/கொ	30,000	20,000	-
இருப்பு கீ/இ	**30,600**	**20,400**	**10,000**	காப்பு நிதி க/கு	3,000	2,000	-
				மறுமதிப்பீடு க/கு	3,600	2,400	-
				ரொக்கக் க/கு	-	-	10,000
	36,600	24,400	10,000		36,600	24,400	10,000
				இருப்பு கீ/கொ	30,600	20,400	10,000

01-01-2018 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹	₹
முதல் க/கு:			அறைகலன்	25,000	
வெற்றி	30,600		கூட்டுக: மதிப்பேற்றம்	15,000	40,000
இரஞ்சித்	20,400		சரக்கிருப்பு	20,000	
சூரியா	10,000	61,000	கழிக்க: மதிப்பு குறைப்பு	2,000	18,000
பற்பல கடனீந்தோர்		45,000	கடனாளிகள்	10,000	
கொடுபடவேண்டிய கூலி		4,500	கழிக்க: மதிப்பு குறைப்பு	2,500	7,500
			கை ரொக்கம்	35,000	
			கூட்டுக: சூரியாவின் முதல்	10,000	45,000
		1,10,500			1,10,500

எடுத்துக்காட்டு 25

2018, மார்ச் 31 ஆம் நாளைய ரேகா மற்றும் மேரியின் இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல் கணக்குகள்:			கட்டடம்	50,000
ரேகா	50,000		சரக்கிருப்பு	8,000
மேரி	30,000	80,000	பற்பல கடனாளிகள்	60,000
பொதுக் காப்பு		40,000	வங்கி ரொக்கம்	32,000
தொழிலாளர் ஈட்டு நிதி		10,000		
பற்பல கடனீந்தோர்		20,000		
		1,50,000		1,50,000

12th-Accountancy-Unit-05_TM.indd 164 12/9/2021 11:13:51 PM

ரேகா, மேரி இருவரும் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 3:1 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்கின்றனர். அவர்கள் கவிதாவை 1/4 பங்கு விகிதத்தில் கூட்டாண்மையில் சேர்த்துக்கொண்டு, இப்பங்கு முழுவதையும் ரேகாவிடமிருந்து பெற ஒப்புகின்றனர்.

பின்வரும் சரிக்கட்டுதல்கள் பின்பற்றப்படுகின்றன:

(i) கவிதா ₹ 20,000 முதலாக கொண்டு வர வேண்டும். அவருடைய பங்கான நற்பெயர் ₹ 4,000 என மதிப்பிடப்படுகிறது. அவர் நற்பெயருக்கென ரொக்கம் கொண்டுவரவில்லை.

(ii) கட்டடத்தின் மீது 10% தேய்மானம் உருவாக்கவும்.

(iii) சரக்கிருப்பு ₹ 6,000 என மறுமதிப்பீடு செய்யப்படுகிறது.

(iv) வாரா ஐயக்கடன் ஒதுக்கு 5% உருவாக்கவும்.

கூட்டாளி சேர்க்கைக்கு பின் பேரேட்டு கணக்குகள் மற்றும் இருப்புநிலைக் குறிப்பினை தயார் செய்யவும்.

தீர்வு

ப **மறுமதிப்பீட்டுக் கணக்கு** **வ**

விவரம்	₹	விவரம்	₹	₹
கட்டடம் க/கு	5,000	மறுமதிப்பீட்டு நட்டம்:		
சரக்கிருப்பு க/கு	2,000	ரேகா முதல் க/கு (3/4)	7,500	
வாரா ஐயக்கடன் ஒதுக்கு க/கு	3,000	மேரி முதல் க/கு (1/4)	2,500	**10,000**
	10,000			10,000

முதல் கணக்கு

விவரம்	ரேகா ₹	மேரி ₹	கவிதா ₹	விவரம்	ரேகா ₹	மேரி ₹	கவிதா ₹
மறுமதிப்பீடு க/கு	7,500	2,500	-	இருப்பு கீ/கொ	50,000	30,000	-
ரேகா				வங்கி க/கு	-	-	20,000
முதல் க/கு	-	-	4,000	பொதுக்காப்பு க/கு	30,000	10,000	-
(நற்பெயர் பங்கு)				தொழிலாளர்			
				ஈட்டுநிதி க/கு	7,500	2,500	-
இருப்பு கீ/இ	**84,000**	**40,000**	**16,000**	கவிதா முதல் க/கு	4,000		
				(நற்பெயர் பங்கு)		-	-
	91,500	42,500	20,000		91,500	42,500	20,000
				இருப்பு கீ/கொ	84,000	40,000	16,000

12th-Accountancy-Unit-05_TM.indd 165 12/9/2021 11:13:51 PM

2018, ஏப்ரல் 1 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹	₹
முதல் கணக்குகள்:			கட்டடம்	50,000	
ரேகா	84,000		கழிக்க: தேய்மானம்	5,000	45,000
மேரி	40,000		சரக்கிருப்பு	8,000	
கவிதா	16,000	1,40,000	கழிக்க: மதிப்பு குறைப்பு	2,000	6,000
பற்பல கடனீந்தோர்		20,000	பற்பல கடனாளிகள்	60,000	
			கழிக்க: வாரா		
			ஐயக்கடன் ஒதுக்கு	3,000	57,000
			வங்கி (32,000+20,000)		52,000
		1,60,000			1,60,000

எடுத்துக்காட்டு 26

அமீர் மற்றும் ராஜா என்ற கூட்டாளிகளின் இலாபப்பகிர்வு விகிதம் 3:2. 2018, டிசம்பர் 31 ஆம் நாளைய அவர்களின் இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல் கணக்குகள்:			இயந்திரம்	60,000
அமீர்	80,000		அறைகலன்	40,000
இராஜா	70,000	1,50,000	கடனாளிகள்	30,000
காப்பு நிதி		15,000	சரக்கிருப்பு	10,000
கடனீந்தோர்		35,000	முன்கூட்டிச் செலுத்திய காப்பீடு	40,000
			வங்கி ரொக்கம்	20,000
		2,00,000		2,00,000

ரோஹித் என்பவர் புதிய கூட்டாளியாகச் சேர்க்கப்பட்டார். அவர் எதிர்கால இலாபத்தில் தன்னுடைய 1/5 பங்கிற்காக ₹ 30,000 முதலாகக் கொண்டு வந்தார். அவர் நற்பெயரில் தன்னுடைய பங்காக ₹ 10,000 கொண்டு வந்தார்.

மறுமதிபீடுப் பின்வருமாறு செய்யப்பட்டது

(i) சரக்கிருப்பின் மதிப்பு ₹ 14,000 ஆக அதிகரிக்கப்பட்டது.

(ii) அறைகலன் மீது 5% தேய்மானம் நீக்கப்படவேண்டும்.

(iii) இயந்திரம் மதிப்பு ₹ 80,000 ஆக மறுமதிப்பீடு செய்யப்பட்டது.

தேவையான பேரேட்டு கணக்குகள் தயார் செய்து சேர்ப்பிற்கு பின் உள்ள இருப்புநிலைக் குறிப்பினைத் தயார் செய்யவும்.

12th-Accountancy-Unit-05_TM.indd 166 12/9/2021 11:13:51 PM

தீர்வு

ப **மறுமதிப்பீட்டுக் கணக்கு** வ

விவரம்	₹	₹	விவரம்	₹
அறைகலன் க/கு		2,000	சரக்கிருப்பு க/கு	4,000
மறுமதிப்பீட்டு இலாபம்:			இயந்திரம் க/கு	20,000
அமீர் முதல் க/கு (3/5)	13,200			
இராஜா முதல் க/கு (2/5)	8,800	**22,000**		
		24,000		24,000

ப **முதல் கணக்கு** வ

விவரம்	அமீர் ₹	இராஜா ₹	ரோஹித் ₹	விவரம்	அமீர் ₹	இராஜா ₹	ரோஹித் ₹
இருப்பு கீ/இ	**1,08,200**	**88,800**	**30,000**	இருப்பு கீ/கொ	80,000	70,000	-
				வங்கி க/கு	-	-	30,000
				காப்பு நிதி க/கு	9,000	6,000	-
				மறுமதிப்பீட்டு க/கு	13,200	8,800	-
				வங்கி க/கு* (நற்பெயர் பங்கு)	6,000	4,000	-
	1,08,200	88,800	30,000		1,08,200	88,800	30,000
				இருப்பு கீ/கொ	1,08,200	88,800	30,000

குறிப்பு: தியாக விகிதம் கொடுக்கப்படாமல் ஆனால், புதிய கூட்டாளியின் இலாபவிகிதம் கொடுக்கப்பட்டிருந்தால், பழைய இலாப விகிதத்தை (3:2) தியாக விகிதமாகக் கொண்டு புதிய கூட்டாளியின் நற்பெயரை பழைய கூட்டாளிகளுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும்.

ப **வங்கி கணக்கு** வ

நாள்	விவரம்	₹	நாள்	விவரம்	₹
	இருப்பு கீ/கொ	20,000		இருப்பு கீ/இ	**60,000**
	ரோஹித் முதல் க/கு	30,000			
	அமீர் முதல் க/கு	6,000			
	இராஜா முதல் க/கு	4,000			
		60,000			60,000

12th-Accountancy-Unit-05_TM.indd 167 12/9/2021 11:13:52 PM

2019, ஜனவரி 1 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹	₹
முதல் கணக்குகள்:			இயந்திரம்	60,000	
அமீர்	1,08,200		கூட்டுக: மதிப்பேற்றம்	20,000	80,000
இராஜா	88,800		அறைகலன்	40,000	
ரோஹித்	30,000	2,27,000	கழிக்க: தேய்மானம்	2,000	38,000
கடனீந்தோர்		35,000	கடனாளிகள்		30,000
			சரக்கிருப்பு	10,000	
			கூட்டுக: மதிப்பேற்றம்	4,000	14,000
			முன்கூட்டிச் செலுத்திய காப்பீடு		40,000
			வங்கி ரொக்கம்		60,000
		2,62,000			2,62,000

எடுத்துக்காட்டு 27

வீணா மற்றும் பியர்ல் ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகள். முறையே 2:1 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். அவர்களின் 2018, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல் கணக்குகள்:			கட்டடம்	60,000
வீணா	60,000		இயந்திரம்	30,000
பியர்ல்	40,000	1,00,000	கடனாளிகள்	20,000
காப்பு நிதி		30,000	சரக்கிருப்பு	10,000
தொழிலாளர் ஈட்டு நிதி		10,000	வங்கி ரொக்கம்	30,000
பற்பல கடனீந்தோர்		10,000		
		1,50,000		1,50,000

01–04–2018 அன்று டெரி என்பவர் பின்வரும் நிபந்தனைக்குட்பட்டு கூட்டாளியாகச் சேர்க்கப்பட்டார்.

(i) வீணா, பியர்ல் மற்றும் டெரியின் புதிய இலாபப்பகிர்வு விகிதம் 5:3:2 ஆகும்.

(ii) டெரி ₹ 30,000 முதலாக கொண்டு வர வேண்டும்.

(iii) சரக்கிருப்பின் மதிப்பை 20% குறைக்க வேண்டும்.

(iv) தொழிலாளர் ஈட்டு நிதி மீது எதிர்பார்க்கப்படும் கோருரிமை ₹ 1,000.

(v) பதிவுறா முதலீடுகள் ₹ 11,000 ஏடுகளில் கொண்டுவரப்பட வேண்டும்.

(vi) நிறுவனத்தின் நற்பெயர் ₹ 30,000 என மதிப்பிடப்பட்டது. டெரி தன்னுடைய நற்பெயரின் பங்கினை ரொக்கமாக கொண்டுவந்தார். டெரி நற்பெயராகக் கொண்டு வந்த தொகை முழுவதையும் பழைய கூட்டாளிகள் எடுத்துக் கொண்டனர்.

தேவையான பேரேட்டு கணக்குகள் மற்றும் சேர்ப்பிற்கு பின் உள்ள இருப்புநிலைக் குறிப்பினை தயார் செய்யவும்.

12th-Accountancy-Unit-05_TM.indd 168 12/9/2021 11:13:52 PM

தீர்வு

ப **மறுமதிப்பீட்டுக் கணக்கு** வ

விவரம்	₹	₹	விவரம்	₹
சரக்கிருப்பு க/கு		2,000	முதலீடுகள் க/கு	11,000
மறுமதிப்பீட்டு இலாபம்:				
வீணா முதல் க/கு (2/3)	6,000			
பியர்ல் முதல் க/கு (1/3)	3,000	**9,000**		
		11,000		11,000

வீணா மற்றும் பியர்ல் பழைய விகிதம் = 2:1 அதாவது, $\frac{2}{3}:\frac{1}{3}$

வீணா, பியர்ல் மற்றும் டெரியின் புதிய பங்கு = 5:3:2 அதாவது, $\frac{5}{10}:\frac{3}{10}:\frac{2}{10}$

தியாகப் பங்கு = பழைய பங்கு – புதிய பங்கு

வீணா $= \frac{2}{3}-\frac{5}{10}=\frac{20-15}{30}=\frac{5}{30}$

பியர்ல் $= \frac{1}{3}-\frac{3}{10}=\frac{10-9}{30}=\frac{1}{30}$

வீணா மற்றும் பியர்ல் தியாக விகிதம்= 5:1

ப **முதல் கணக்கு** வ

விவரம்	வீணா ₹	பியர்ல் ₹	டெரி ₹	விவரம்	வீணா ₹	பியர்ல் ₹	டெரி ₹
வங்கி க/கு	5,000	1,000	-	இருப்பு கீ/கொ	60,000	40,000	-
இருப்பு கீ/இ	**92,000**	**56,000**	**30,000**	வங்கி க/கு	-	-	30,000
				பொதுக்காப்பு க/கு	20,000	10,000	-
				தொழிலாளர் ஈட்டு நிதி க/கு (10,000- 1,000)	6,000	3,000	-
				மறுமதிப்பீடு க/கு	6,000	3,000	-
				வங்கி க/கு* (நற்பெயர் பங்கு)	5,000	1,000	-
	97,000	57,000	30,000		97,000	57,000	30,000
				இருப்பு கீ/கொ	92,000	56,000	30,000

* நிறுவனத்தின் நற்பெயர் ₹ 30,000
நற்பெயரில் டெரியின் பங்கு = 30,000 x 2/10 = ₹ 6,000

12th-Accountancy-Unit-05_TM.indd 169 12/9/2021 11:13:52 PM

இத்தொகை வீணா மற்றும் பியர்ல் அவர்களின் தியாக விகிதம் 5:1 இல் பகிர்ந்து கொள்ளப்படவேண்டும்.

ப **வங்கி கணக்கு** **வ**

விவரம்	₹	விவரம்	₹
இருப்பு கீ/கொ	30,000	வீணா முதல் க/கு	5,000
டெரி முதல் க/கு	30,000	பியர்ல் முதல் க/கு	1,000
வீணா முதல் க/கு	5,000	இருப்பு கீ/இ	**60,000**
பியர்ல் முதல் க/கு	1,000		
	66,000		66,000

2018 ஏப்ரல் 1 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்		₹
முதல் கணக்குகள்			கட்டடம்		60,000
வீணா	92,000		இயந்திரம்		30,000
பியர்ல்	56,000		முதலீடுகள்		11,000
டெரி	30,000	1,78,000	கடனாளிகள்		20,000
தொழிலாளர் ஈட்டு			சரக்கிருப்பு	10,000	
நிதி (10,000–9,000)		1,000	கழிக்க: தேய்மானம்	2,000	8,000
பற்பல கடனீந்தோர்		10,000	வங்கி ரொக்கம்		60,000
		1,89,000			1,89,000

நினைவில் கொள்ள வேண்டியவை

- ஒரு கூட்டாண்மை நிறுவனத்தில் புதிய கூட்டாளி சேர்க்கப்படும் போது, புதிய உடன்படிக்கை மூலம் அந்த நிறுவனம் மாற்றியமைக்கப்படுகிறது மற்றும் ஏற்கனவே உள்ள உடன்படிக்கை முடிவுக்கு வருகிறது.
- ஒரு கூட்டாளி சேர்க்கப்படும்போது, பொதுவாக கூட்டாளிகளின் பரஸ்பர உரிமைகளில் மாற்றம் ஏற்படுகிறது. புதிய கூட்டாளி நிறுவனத்தின் வருங்கால இலாபம் மற்றும் சொத்துகளில் பங்கு பெறும் உரிமை பெறுகிறார்.
- புதிய கூட்டாளி அவர் கூட்டாளியாகச் சேர்க்கப்பட்ட நாளிலிருந்து, நிறுவனம் மேற்கொள்ளும் அனைத்துச் செயல்களுக்கும் பொறுப்பாகிறார்.
- புதிய கூட்டாளி சேரும்முன் நிறுவனத்தில் உள்ள பகிர்ந்துதரா இலாபங்கள், நட்டங்கள் மற்றும் காப்புகள் அனைத்தும், புதிய கூட்டாளியின் சேர்ப்பின்போது பழைய கூட்டாளிகளுக்கு பழைய இலாப விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.
- கூட்டாண்மை நிறுவனத்தில் புதிய கூட்டாளி சேர்க்கப்படும்போது, சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மறுமதிப்பீடு செய்யப்பட வேண்டும். மற்றும் அந்த மறுமதிப்பீடு மீதான இலாபம் அல்லது நட்டம் பழைய கூட்டாளிகளுக்கு பழைய இலாப விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

12th-Accountancy-Unit-05_TM.indd 170 12/9/2021 11:13:52 PM

- ❖ புதிய கூட்டாளி சேர்க்கப்படும்போது புதிய இலாபப் பகிர்வு விகிதம் நிர்ணயிக்கப்பட வேண்டியது அவசியம். ஏனெனில் புதிய கூட்டாளி நிறுவனத்தின் வருங்கால இலாபத்தில் பங்குபெறும் உரிமை பெறுகிறார்.
- ❖ புதிய இலாபப் பகிர்வு விகிதத்தைக் கூட்டாளிகள் ஒப்புக்கொள்ளவில்லை எனில் கூட்டாளிகள் இலாபம் மற்றும் நட்டங்களை சமமாகப் பகிர்ந்து கொள்வர்.
- ❖ பழைய கூட்டாளிகள் தங்கள் இலாபத்தில் ஒரு பகுதியை புதிய கூட்டாளிக்கு தியாகம் செய்வதை ஈடுசெய்யும் பொருட்டு புதிய கூட்டாளிகள் கொண்டுவரும் நற்பெயர், தியாகம் செய்யும் பழைய கூட்டாளிகளுக்கு தியாக விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படுகிறது.
- ❖ தியாக விகிதம் என்பது தியாகம் செய்யப்பட்ட அல்லது புதிய கூட்டாளிக்கு பழைய கூட்டாளிகள் விட்டுக் கொடுத்த இலாபத்தின் விகிதாச்சாரம் ஆகும்.

சுய ஆய்வு வினாக்கள்

OG3I2

I சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. மறுமதிபீட்டுக் கணக்கு ஒரு

(அ) சொத்து க/கு (ஆ) பெயரளவு க/கு

(இ) ஆள்சார் க/கு (ஈ) ஆள்சாரா க/கு

2. மறுமதிப்பீட்டில் சொத்துகளின் மதிப்பு உயர்வது

(அ) ஆதாயம் (ஆ) நட்டம்

(இ) செலவு (ஈ) இவற்றுள் எதுவுமில்லை

3. கூட்டாளி சேர்ப்பின் போது சொத்துகள் மற்றும் பொறுப்புகளை மறுமதிப்பீடு செய்யும் போது ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் யாருடைய முதல் கணக்கிற்கு மாற்றப்படுகிறது?

(அ) பழைய கூட்டாளிகள் (ஆ) புதிய கூட்டாளி

(இ) அனைத்து கூட்டாளிகள் (ஈ) தியாகம் செய்த கூட்டாளிகள்

4. கூட்டாளியின் புதிய இலாபப்பகிர்வை விட பழைய இலாபப் பகிர்வு அதிகமாக இருந்தால் அவ்வேறுபாடு அழைக்கப்படுவது

(அ) முதல் விகிதம் (ஆ) தியாக விகிதம்

(இ) ஆதாய விகிதம் (ஈ) இவற்றுள் எதுவுமில்லை

5. கூட்டாளி சேர்ப்பின்போது புதிய கூட்டாளி நற்பெயருக்காக கொண்டு வரும் தொகை, யாருடைய முதல்கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்?

(அ) அனைத்து கூட்டாளிகள் (ஆ) பழைய கூட்டாளிகள்

(இ) புதிய கூட்டாளி (ஈ) தியாகம் செய்த கூட்டாளிகள்

12th-Accountancy-Unit-05_TM.indd 171 12/9/2021 11:13:52 PM

6. கூட்டாளி சேர்ப்பு தொடர்பாக பின்வரும் கூற்றுகளில் எது உண்மையானதல்ல?

(அ) பொதுவாக கூட்டாளிகளின் பரஸ்பர உரிமைகள் மாறும்

(ஆ) முந்தைய ஆண்டுகளின் இலாபம் மற்றும் நட்டங்கள் பழைய கூட்டாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்

(இ) கூட்டாண்மை நிறுவனமானது புதிய ஒப்பந்தத்தின் கீழ் மறு கட்டமைக்கப்படும்

(ஈ) ஏற்கனவே உள்ள ஒப்பந்தமானது முடிவுக்கு கொண்டு வரப்படாது

7. பட்டியல் I ஐ மற்றும் பட்டியல் II உடன் ஒப்பீடு செய்து சரியான விடையை கீழே கொடுக்கப்பட்டுள்ள சரியான குறியீட்டை பயன்படுத்தி தெரிவு செய்யவும்.

பட்டியல் I	பட்டியல் II
(i) தியாக விகிதம்	1. முதலீட்டு மாறுபடும் நிதி
(ii) பழைய இலாபப் பகிர்வு விகிதம்	2. பகிர்ந்துதரா இலாபம்
(iii) மறுமதிப்பீட்டு கணக்கு	3. நற்பெயர்
(iv) முதல் கணக்கு	4. பதிவுறா பொறுப்பு

குறியீடுகள்:

	(i)	(ii)	(iii)	(iv)
(அ)	1	2	3	4
(ஆ)	3	2	4	1
(இ)	4	3	2	1
(ஈ)	3	1	2	4

8. பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடுக்கவும்

(அ) மறுமதிப்பீட்டு இலாபம் (ஆ) பகிர்ந்தளிக்கப்படாத இலாபம்

(இ) புதிய கூட்டாளி கொண்டு வந்த நற்பெயர் (ஈ) முதலீட்டு மாறுபடும் நிதி

9. ஜேம்ஸ் மற்றும் கமல் இலாப நட்டங்களை 5:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர். அவர்கள் சுனில் என்பவரை 1/5 இலாப பங்கிற்கு கூட்டாளியாக சேர்த்துக் கொண்டனர். தியாக விகிதத்தை கணக்கிடவும்.

(அ) 1:3 (ஆ) 3:1

(இ) 5:3 (ஈ) 3:5

10. பாலாஜி மற்றும் கமலேஷ் கூட்டாளிகள். இலாப நட்டங்களை 2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொண்டனர். அவர்கள் யோகேஷ் என்பவரை கூட்டாண்மையில் சேர்த்துக் கொண்டனர். பாலாஜி, கமலேஷ் மற்றும் யோகேஷின் புதிய இலாப் பகிர்வு விகிதம் 3:1:1. பாலாஜி மற்றும் கமலேஷின் தியாக விகிதத்தைக் கணக்கிடவும்.

(அ) 1:3 (ஆ) 3:1

(இ) 2:1 (ஈ) 1:2

விடை

1. (ஆ)	**2. (அ)**	**3. (அ)**	**4. (ஆ)**	**5. (ஈ)**	**6. (ஈ)**	**7. (ஆ)**	**8. (இ)**	**9. (இ)**	**10. (ஈ)**

12th-Accountancy-Unit-05_TM.indd 172 12/9/2021 11:13:52 PM

II மிகக் குறுகிய வினாக்கள்

1. சொத்துகள் மற்றும் பொறுப்புகளை மறுமதிப்பீடு செய்தல் என்றால் என்ன?
2. புதிய கூட்டாளி சேர்க்கையின்போது, பகிர்ந்துதரா இலாபங்கள் மற்றும் நட்டங்கள் எவ்வாறு கூட்டாளிகளிக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது?
3. தியாக விகிதம் என்றால் என்ன?
4. புதிய கூட்டாளி சேர்க்கப்படும் போது, ஏற்கனவே உள்ள நற்பெயரை பழைய கூட்டாளிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.
5. பின்வருவனவற்றுள் மறுமதிப்பீட்டு கணக்கில் பற்று அல்லது வரவு வைக்கப்படுவதைத் தரவும்.

   (அ) சொத்தின் மீதான தேய்மானம்

   (ஆ) பதிவுறா பொறுப்புகள்

   (இ) கொடுபடவேண்டிய செலவிற்கான ஒதுக்கீடு

   (ஈ) சொத்தின் மீதான மதிப்பேற்றம்

III குறுகிய வினாக்கள்

1. கூட்டாளி சேர்ப்பின் போது மேற்கொள்ள வேண்டிய சரிகட்டுதல்கள் யாவை?
2. சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மறுமதிப்பீடு செய்வதற்கான குறிப்பேட்டுப் பதிவுகள் யாவை?
3. நற்பெயருக்கான கணக்கியல் செயல்முறை குறித்து சிறு குறிப்பு தரவும்.

IV பயிற்சி கணக்குகள்

பகிர்ந்துதரா இலாபங்கள், காப்புகள் மற்றும் நட்டங்கள் பகிர்ந்தளித்தல்

1. அருள் மற்றும் அனிதா என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை 4:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். 31.3.2018 அன்று புதிய கூட்டாளியாக அஜய் என்பவர் சேர்த்துகொள்ளப்பட்டார். சேர்க்கையின்போது, நிறுவன ஏடுகளில் பொதுக்காப்பு ₹ 42,000 எனக் காட்டியது. பொதுக்காப்பினை பகிர்ந்தளிப்பதற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

   (விடை: அருள்: ₹ 24,000 (வரவு); அனிதா: ₹ 18,000 (வரவு))

2. அஞ்சலி மற்றும் நித்யா என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை 5:3 என்ற விகிதத்தில் பகிர்ந்துவருகின்றனர். அவர்கள் பிரமிளா என்பவரை 1.1.2018 அன்று கூட்டாளியாகச் சேர்த்தனர். அந்நாளில் அவர்களின் இருப்பு நிலைக்குறிப்பின் சொத்துகள் பக்கத்தில் பகிர்ந்து தரா நட்டம் ₹ 40,000 ஆக இருந்தது. சேர்ப்பின் போது பகிர்ந்து தரா நட்டத்தை பகிர்வதற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

   (விடை: அஞ்சலி: ₹ 25,000 (பற்று); நித்யா:₹ 15,000 (வரவு))

3. ஓவியா மற்றும் காவியா இருவரும் கூட்டாளிகள். அவர்கள் தங்கள் இலாப நட்டங்களை 5:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். அவர்கள் அகல்யா என்பவரை கூட்டாளியாகச் சேர்த்து கொண்டனர். 2019, மார்ச் 31 ஆம் நாளைய இருப்பு நிலைக்குறிப்பு பின்வருமாறு:

12th-Accountancy-Unit-05_TM.indd 173 12/9/2021 11:13:52 PM

2019 மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல் கணக்கு:			கட்டடம்	40,000
ஓவியா	50,000		பொறித்தொகுதி	50,000
காவியா	40,000	90,000	அறைகலன்	30,000
இலாப நட்டப் பகிர்வு க/கு		40,000	கடனாளிகள்	20,000
பொதுக்காப்பு		8,000	சரக்கிருப்பு	10,000
தொழிலாளர் ஈட்டு நிதி		12,000	ரொக்கம்	20,000
பற்பல கடனீந்தோர்		20,000		
		1,70,000		1,70,000

சேர்ப்பின்போது பகிர்ந்து தரா இலாபம் மற்றும் காப்பு ஆகியவற்றை மாற்றுவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(விடை: ஓவியா: ₹ 37,500; காவியா: ₹ 22,500)

சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மறுமதிப்பீடு செய்தல்

4. ஹரி, மாதவன் மற்றும் கேசவன் ஆகிய கூட்டாளிகள் இலாப நட்டங்களை 5:3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். 2017, ஏப்ரல் 1 அன்று வான்மதி புதிய கூட்டாளியாகச் சேர்த்தபின் அவர்களின் இலாப விகிதம் 4:3:2:1 என முடிவு செய்யப்பட்டது. பின்வரும் சரிக்கட்டுதல்கள் செய்யப்பட வேண்டும்:

(அ) வளாகத்தின் மதிப்பு ₹ 60,000 அதிகரிக்கப்பட்டது

(ஆ) சரக்கிருப்பு மீது ₹ 5,000, அறைகலன் மீது ₹ 2,000, இயந்திரம் மீது ₹ 2,500 தேய்மானம் நீக்கப்பட வேண்டும்.

(இ) கொடுபட வேண்டிய பொறுப்பு ₹ 500 உருவாக்கப்பட வேண்டும்.

குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து, மறுமதிப்பீட்டுக் கணக்கினை தயார் செய்யவும்.

(விடை: மறுமதிப்பீட்டு இலாபம்: ₹ 50,000)

5. சீனு மற்றும் சிவா இருவரும் கூட்டாளிகள். அவர்கள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 5:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர். சுப்பு என்பவரை புதிய கூட்டாளியாக சேர்க்கும்போது அவர்கள் பின்வரும் முடிவுகள் எடுத்தனர்.

(i) கட்டடம் மதிப்பினை ₹ 40,000 உயர்த்த வேண்டும்.

(ii) கணக்கேடுகளில் இதுவரை பதியப்படாத ₹ 10,000 மதிப்புள்ள முதலீடுகளை கணக்கில் கொண்டுவர வேண்டும்.

(iii) இயந்திரம் மதிப்பு ₹ 14,000 மற்றும் அறைகலன் மதிப்பு ₹ 12,000 குறைக்க வேண்டும்.

(iv) பற்பல கடனீந்தோரில் ₹16,000 போக்கெழுத வேண்டும்.

குறிப்பேட்டுப் பதிவுகள் மற்றும் மறு மதிப்பீட்டுக் கணக்கினைத் தயார் செய்யவும்.

(விடை: மறுமதிப்பீட்டு இலாபம்: ₹ 40,000)

12th-Accountancy-Unit-05_TM.indd 174 12/9/2021 11:13:52 PM

6. சாய் மற்றும் சங்கர் இருவரும் கூட்டாளிகள். அவர்கள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 5:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். அந்நிறுவனத்தின் 2017 டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்பு நிலைக்குறிப்பு பின்வருமாறு இருந்தது.

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹	₹
முதல் கணக்குகள்:			கட்டடம்		34,000
சாய்	48,000		அறைகலன்		6,000
சங்கர்	40,000	88,000	முதலீடுகள்		20,000
கடனீந்தோர்		37,000	கடனாளிகள்	40,000	
கொடுபடவேண்டிய கூலி		8,000	கழிக்க: வாராக்கடன் ஒதுக்கு	3,000	37,000
			பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு		12,000
			சரக்கிருப்பு		16,000
			வங்கி		8,000
		1,33,000			1,33,000

2017, டிசம்பர் 31 இல் சண்முகம் என்பவர் 1/4 இலாபப்பகிர்வு விகிதத்தில் கூட்டாண்மையில் சேருகிறார். அவர் பின்வரும் சரிகட்டுதலுக்குட்பட்டு ₹ 12,000 முதலாக கொண்டு வருகிறார்.

(அ) அறைகலன் ₹ 5,000 மற்றும் கட்டடம் ₹ 50,000 ஆகவும் மறுமதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

(ஆ) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ₹ 5,500 ஆக உயர்த்த வேண்டும்.

(இ) பதிவுறாத ₹ 6,000 மதிப்புள்ள முதலீடு கணக்கில் கொண்டுவரப்பட வேண்டும்.

(ஈ) பதிவுறாத ₹ 2,500 மதிப்புள்ள பொறுப்பு பதிவு செய்யப்பட வேண்டும்.

குறிப்பேட்டுப் பதிவுகளைத் தந்து, மறுமதிப்பீட்டுக் கணக்கு மற்றும் கூட்டாளி சேர்க்கைக்கு பின் உள்ள முதல் கணக்கினையும் பதிவு செய்யவும்.

(விடை: மறுமதிப்பீட்டு இலாபம் ₹ 16,000; முதல் க/கு: சாய் ₹ 58,000 (வரவு); சங்கர் ₹ 46,000 (வரவு); சண்முகம் ₹ 12,000 (வரவு))

7. அமல் மற்றும் விமல் இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அவர்கள் 7:5 என்ற விகிதத்தில் இலாபங்கள் மற்றும் நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 2019, மார்ச் 31 அன்றைய அவர்களின் இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல் கணக்குகள்:			கட்டடம்	80,000
அமல்	70,000		அறைகலன்	20,000
விமல்	50,000	1,20,000	சரக்கிருப்பு	25,000
பற்பல கடனீந்தோர்		30,000	கடனாளிகள்	30,000
இலாப நட்ட க/கு		24,000	வங்கி	19,000
		1,74,000		1,74,000

1.4.2019 இல் நிர்மல் புதிய கூட்டாளியாக சேருகிறார். அவர் ₹ 30,000 முதலுடன் எதிர்கால இலாபப்பங்கில் 1/3 விகிதத்தில், பின்வரும் சரிக்கட்டலுடன் கூட்டாளியாகிறார்.

12th-Accountancy-Unit-05_TM.indd 175 12/9/2021 11:13:52 PM

(அ) சரக்கிருப்பின் மதிப்பு ₹ 5,000 குறைக்கப்பட வேண்டும்.

(ஆ) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ₹ 3,000 உருவாக்கப்பட வேண்டும்.

(இ) கட்டடம் ₹ 20,000 மதிப்பேற்றம் செய்யப்பட வேண்டும்.

மறுமதிப்பீட்டுக் கணக்கு மற்றும் கூட்டாளி சேர்க்கைக்கு பின்பான கூட்டாளி முதல் கணக்கு தயார் செய்யவும்.

(விடை: மறுமதிப்பீடு இலாபம்: ₹ 12,000; முதல் க/கு: அமல் ₹ 91,000 (வரவு);

விமல்: ₹ 65,000 (வரவு); நிர்மல்: ₹ 30,000 (வரவு))

தியாக விகிதம் மற்றும் புதிய இலாபப் பகிர்வு விகிதம்

8. பிரவீணா மற்றும் தான்யா என்ற இரு கூட்டாளிகள் 7:3 என்ற இலாப விகிதத்தில் இலாபத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் மாலினி என்பவரை கூட்டாண்மையில் சேர்த்துக் கொண்டனர். பிரவீணா, தான்யா மற்றும் மாலினி அவர்களின் புதிய இலாப விகிதம் 5:2:3. தியாக விகிதத்தைக் கணக்கிடவும்.

(விடை: தியாக விகிதம்: 2:1)

9. ஆனந்த் மற்றும் சுமன் என்ற கூட்டாளிகள், இலாப நட்டங்களை 3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். அவர்கள் சரண் என்பவரை 1/5 பங்கிற்கு கூட்டாளியாகச் சேர்த்தனர். அவர் அப்பங்கு முழுவதையும் ஆனந்த்திடமிருந்து பெற்றுக் கொண்டார். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதத்தைக் கணக்கிடவும்.

(விடை: புதிய இலாபப் பகிர்வு விகிதம்: 2:2:1; தியாக விகிதம்: 1:0)

10. இராஜா மற்றும் இரவி என்ற இரு கூட்டாளிகள் 3:2 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் இராம் என்பவரை ¼ இலாபப் பங்கிற்கு கூட்டாளியாகச் சேர்த்தனர். இராம், 1/20 பங்கினை இராஜாவிடமும், 4/20 பங்கினை இரவியிடமும் பெறுகிறார். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.

(விடை: புதிய இலாபப் பகிர்வு விகிதம்: 11:4:5; தியாக விகிதம்: 1:4)

11. விமலா மற்றும் கமலா இருவரும் கூட்டாளிகள். 4:3 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். வினிதா என்பவர் விமலாவிடம் 1/14 பங்கும் மற்றும் கமலாவிடமிருந்து 1/14 பங்கும் பெற்று கூட்டாண்மையில் சேருகிறார். அவர்களின் புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.

(விடை: புதிய இலாபப் பகிர்வு விகிதம்: 7:5:2; தியாக விகிதம்: 1:1)

12. கோவிந்த் மற்றும் கோபால் இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தில் 5:4 விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் இரஹீம் என்பவரை கூட்டாளியாகச் சேர்த்தனர். கோவிந்த் தன் பங்கில் 2/9 பாகத்தினையும், கோபால் தன் பங்கில் 1/9 பாகத்தினையும் இரஹீமிற்காக தியாகம் செய்கின்றனர். புதிய இலாபப் பகிர்வு விகிதத்தையும் மற்றும் தியாக விகிதத்தையும் கணக்கிடவும்.

(விடை: புதிய இலாபப் பகிர்வு விகிதம்: 35:32:14; தியாக விகிதம்: 5:2)

13. பிரேமா மற்றும் சந்திரா 5:3 விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வருகின்றனர். ஹேமா என்பவர் கூட்டாளியாக சேருகிறார். பிரேமா தன் பங்கில் 1/8 பாகமும், சந்திரா தன் பங்கில் 1/8 பாகமும் ஹேமாவிற்காக தியாகம் செய்கின்றனர். புதிய இலாபப் பகிர்வு விகிதத்தையும் மற்றும் தியாக விகிதத்தையும் கணக்கிடவும்.

(விடை: புதிய இலாபப் பகிர்வு விகிதம்: 35:21:8; தியாக விகிதம்: 5:3)

14. கார்த்திக் மற்றும் கண்ணன் இருவரும் இலாபத்தை சமமாக பகிர்ந்து கொள்ளும் கூட்டாளிகள். அவர்கள் கைலாஷ் என்பவரை 1/4 இலாபப் பங்குக்கு கூட்டாளியாகச் சேர்த்தனர். கைலாஷ் தனது பங்கை பழைய கூட்டாளிகளிடமிருந்து 7:3 என்ற விகிதத்தில் பெறுகிறார். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.

(விடை: புதிய இலாபப் பகிர்வு விகிதம்: 13:17:10; தியாக விகிதம்: 7:3)

12th-Accountancy-Unit-05_TM.indd 176 12/9/2021 11:13:53 PM

15. செல்வம் மற்றும் செந்தில் இருவரும் 2:3 என்ற விகிதத்தில் இலாபம் பகிரும் கூட்டாளிகள். இதில், சிவா என்பவர் 1/5 பங்கு விகிதத்தில் கூட்டாளியாக சேருகிறார். சிவா, இப்பங்கினை செல்வம் மற்றும் செந்தில் இருவரிடமும் சமமாக பெறுகிறார். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கண்டறியவும்.

(விடை: புதிய இலாபப் பகிர்வு விகிதம்: 3:5:2; தியாக விகிதம்: 1:1)

16. மாலா மற்றும் அனிதா இருவரும் கூட்டாளிகள். அவர்கள் 3:2 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். மெர்சி என்பவர் 1/5 இலாப விகிதத்தில் கூட்டாண்மையில் கூட்டாளியாக சேருகிறார். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.

(விடை: புதிய இலாபப் பகிர்வு விகிதம்: 12:8:5; தியாக விகிதம்: 3:2)

17. அம்பிகா, தரணி மற்றும் பத்மா மூவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அம்மூவரும் 5:3:2 என்ற விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். அவர்கள் இரம்யா என்பவரை 25% இலாபம் தருவதாக கூட்டாண்மையில் அனுமதித்தனர். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கண்டறியவும்.

(விடை: புதிய இலாபப் பகிர்வு விகிதம்: 15:9:6:10; தியாக விகிதம்: 5:3:2)

நற்பெயருக்கான சரிக்கட்டுதல்கள்

18. அபர்ணா மற்றும் ப்ரியா இருவரும் கூட்டாளிகள். அவர்கள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். பிருந்தா 1/5 இலாபப் பங்கிற்கு கூட்டாண்மையில் சேருகிறார். அவர் தமது நற்பெயர் பங்காக ₹ 10,000 கொண்டுவருகிறார். கூட்டாளிகளின் முதல் கணக்குகள் மாறுபடும் முதல் முறையில் கணக்கிடப்படுகிறது. கூட்டாளிகள் தமது நற்பெயர் தொகை முழுவதையும் எடுத்துக்கொண்டனர். இதற்கு தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(விடை: நற்பெயர் பங்கு: அபர்ணா: ₹ 6,000; ப்ரியா: ₹ 4,000)

19. தீபக், செந்தில் மற்றும் சந்தோஷ் ஆகிய கூட்டாளிகள் இலாப நட்டங்களை சமமாகப் பகிர்ந்து கொள்கின்றனர். அவர்கள் ஜெரால்டு என்பவரை 1/3 இலாபப் பங்கிற்கு கூட்டாளியாக சேர்த்துக் கொண்டனர்.நிறுவனத்தின்நற்பெயர்₹45,000எனமதிப்பிடப்பட்டுஅதற்கானதன்னுடையபங்கினை ஜெரால்டு ரொக்கமாக கொண்டு வந்தார். பழைய கூட்டாளிகள் தங்களின் நற்பெயருக்கான மதிப்பில் பாதித்தொகையினை எடுத்துக்கொண்டனர். மாறுபடும் முதல் முறையைப் பின்பற்றுவதாகக் கொண்டு நற்பெயரை சரிக்கட்டுவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(விடை: நற்பெயர் பங்கு: தீபக்: ₹ 5,000; செந்தில்: ₹ 5,000; சந்தோஷ்: ₹ 5,000)

20. மாலதி மற்றும் ஷோபனா இருவரும் கூட்டாளிகள். அவர்கள் 5:4 என்ற விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வருகின்றனர். அவர்கள் ஜெயஸ்ரீ என்பவரை 1/3 இலாபப் பங்கிற்கு கூட்டாண்மையில் சேர்க்கின்றனர். ஜெயஸ்ரீ தன்னுடைய பங்காக ₹ 6,000 நற்பெயருக்கென செலுத்துகிறார். அவர்களின் புதிய இலாபப்பகிர்வு விகிதம் 3:2:1. நிலைமுதல் முறையில் கணக்குகள் பராமரிக்கப்படுகின்றன எனக்கொண்டு, நற்பெயர் சரிக்கட்டுதலுக்கான தேவையான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

(விடை: நற்பெயர் பங்கு: மாலதி நடப்பு க/கு: ₹ 2,000; ஷோபனா நடப்பு க/கு: ₹ 4,000)

21. அனு மற்றும் அருள் இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அவர்கள் 4:1 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வருகின்றனர். அவர்கள் மனோ என்பவரை 2/5 இலாப விகிதத்தில் நிறுவனத்தில் சேர்க்க முடிவு செய்கின்றனர். சேர்க்கையின் போது நிறுவனத்தின் நற்பெயர் மதிப்பு ₹ 25,000 என்று மதிப்பிடப்படுகிறது. மனோ தன்னுடைய பங்கிற்கான நற்பெயர் மதிப்பிற்கான தொகையைக் கொண்டுவர முடியவில்லை. மாறுபடும் முதல் முறையினை அடிப்படையாக கொண்டு நற்பெயர் சரிக்கட்டுவதற்கு தேவையான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

(விடை: நற்பெயர் பங்கு: அனு: ₹ 8,000; அருள்: 2,000)

12th-Accountancy-Unit-05_TM.indd 177 12/9/2021 11:13:53 PM

22. வருண் மற்றும் பாரத் இருவரும் கூட்டாளிகள். அவர்களின் இலாப நட்டம் விகிதம் 5:4 ஆகும். அவர்கள் தாமு என்பவரை புதிய கூட்டாளியாக சேர்த்தனர். புதிய இலாபப் பகிர்வு விகிதமாக 1:1:1 என்பதை மூவரும் ஒப்புக் கொள்கின்றனர். தாமு செலுத்த வேண்டிய நற்பெயர் மதிப்பு ₹ 15,000 என மதிப்பிடப்பட்டது. அதில், அவர் ₹ 10,000 ரொக்கம் செலுத்துகிறார். மாறுபடும் முதல் முறையில் கணக்குகள் உள்ளதெனக் கொண்டு நற்பெயருக்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

(விடை: நற்பெயர் பங்கு: வருண்: ₹ 10,000; பாரத்: ₹ 5,000)

23. சாம் மற்றும் ஜோஸ் என்னும் கூட்டாளிகள் 3:2 என்னும் விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 2018, ஏப்ரல் 1 அன்று ஜோயல் என்பவரை கூட்டாளியாக சேர்த்துக்கொண்டனர். ஜோயல் கூட்டாண்மையில் சேர்ந்த அன்று நிறுவன ஏடுகளில் நற்பெயர் ₹ 30,000 ஆக இருந்தது. மாறுபடும் முதல் முறையில் கணக்குகள் பராமரிக்கப்படுவதாகக் கருதி கூட்டாளிகளின் பின்வரும் முடிவுகளின்படி குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(அ) ஏட்டில் உள்ள நற்பெயர் தொகை முழுவதையும் போக்கெழுதுவது

(ஆ) ஏட்டில் உள்ள நற்பெயரில் ₹ 20,000–ஐ போக்கெழுதுவது

(விடை: நற்பெயர்: (அ) சாம்: ₹ 18,000 (பற்று); ஜோஸ்: ₹ 12,000 (பற்று);

(ஆ) சாம்: ₹ 12,000 (பற்று); ஜோஸ்: ₹ 8,000 (பற்று))

விரிவான கணக்குகள்

24. இராஜன் மற்றும் செல்வா இருவரும் கூட்டாளிகள். அவர்கள் 3:1 விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களை பகிர்ந்து வந்தனர். அவர்களது 31–03–2017 நாளன்றைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு இருந்தது.

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல் கணக்குகள்:			கட்டடம்	25,000
இராஜன்	30,000		அறைகலன்	1,000
செல்வா	16,000	46,000	சரக்கிருப்பு	20,000
பொதுக் காப்பு		4,000	கடனாளிகள்	16,000
கடனீந்தோர்		37,500	பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	3,000
			வங்கி ரொக்கம்	12,500
			இலாப நட்ட க/கு (நட்டம்)	10,000
		87,500		87,500

01.04.2017–இல் பின்வரும் நிபந்தனைகளுடன் கணேசன் என்பவர் புதிய கூட்டாளியாக சேருகிறார்.

(i) கணேசன் 1/5 இலாபப்பங்கிற்கென ₹ 10,000 முதல் கொண்டுவருகிறார்.

(ii) சரக்கிருப்பு மற்றும் அறைகலன் மதிப்பில் 10% குறைத்து மதிப்பிடப்படுகிறது. கடனாளிகள் மீது 5% ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கப்படுகிறது.

(iii) கட்டடத்தின் மீது 20% மதிப்பேற்றம் செய்யப்படுகிறது.

மறுமதிப்பீட்டுக் கணக்கு புதிய கூட்டாளி சேர்க்கைக்கு பின் உள்ள கூட்டாளிகளின் முதல் கணக்கு மற்றும் இருப்பு நிலைக்குறிப்பு தயார் செய்யவும்.

(விடை: மறுமதிப்பீடு இலாபம்: ₹ 2,100; முதல் க/கு: இராஜன்: ₹ 27,075;
செல்வா: ₹ 15,025; கணேசன்: ₹ 10,000; இருப்பு நிலைக்குறிப்பு மொத்தம்: 89,600)

12th-Accountancy-Unit-05_TM.indd 178 12/9/2021 11:13:53 PM

25. சுந்தர் மற்றும் சுரேஷ் என்னும் கூட்டாளிகள் 3:2 என்ற விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். 2017, ஜனவரி 1–ல் அவர்களின் இருப்பு நிலைக்குறிப்பு பின்வருமாறு:

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல் கணக்குகள்:			கட்டடம்	40,000
சுந்தர்	30,000		அறைகலன்	13,000
சுரேஷ்	20,000	50,000	சரக்கிருப்பு	25,000
கடனீந்தோர்		50,000	கடனாளிகள்	15,000
பொதுக்காப்பு		10,000	பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	14,000
தொழிலாளர் ஈட்டுநிதி		15,000	வங்கி	18,000
		1,25,000		1,25,000

அவர்கள் சுகுமார் என்பவரை ¼ இலாபப் பங்கிற்கு பின்வரும் விவரங்கள் அடிப்படையில் கூட்டாளியாகச் சேர்த்தனர்.

(i) சுகுமார் ₹ 30,000 முதலாக கொண்டுவருகிறார். நற்பெயரில் அவருடைய பங்கு ₹ 5,000 என மதிப்பிடப்படுகிறது. அவர் நற்பெயருக்கென ரொக்கம் கொண்டுவரவில்லை.

(ii) சரக்கிருப்பு ₹ 20,000 என மதிப்பிடப்பட்டது.

(iii) அறைகலன் மீது ₹ 2,000 தேய்மானம் நீக்கப்பட்டது.

(iv) கட்டடம் மீது 20% தேய்மானம் நீக்கப்பட்டது.

தேவையான பேரேட்டு கணக்குகளை தயார்செய்து கூட்டாளி சேர்ப்பிற்கு பின்வரும் இருப்பு நிலைக்குறிப்பையும் தயார் செய்யவும்.

(விடை: மறுமதிப்பீடு நட்டம்: ₹ 15,000; முதல் கணக்குகள்: சுந்தர்: ₹ 39,000; சுரேஷ்: ₹ 26,000; சுகுமார்: ₹ 25,000; இருப்புநிலைக் குறிப்பு மொத்தம்: ₹ 1,40,000)

26. இலாப நட்டங்களை சமமாகப் பகிர்ந்து கொள்ளும் ஜேம்ஸ் மற்றும் ஜஸ்டினாவின் 1.1.2017 ம் நாளன்றைய இருப்பு நிலைக்குறிப்பு பின்வருமாறு:

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல் கணக்குகள்:			கட்டடம்	70,000
ஜேம்ஸ்	40,000		சரக்கிருப்பு	30,000
ஜஸ்டினா	50,000	90,000	கடனாளிகள்	20,000
கடனீந்தோர்		35,000	வங்கி ரொக்கம்	15,000
காப்பு நிதி		15,000	முன்கூட்டிச் செலுத்திய காப்பீடு	5,000
		1,40,000		1,40,000

மேற்கூறிய நாளில் பாலன் என்பவரை எதிர்கால இலாபத்தில் 1/5 பங்கிற்கு பின்வரும் விவரங்கள் அடிப்படையில் கூட்டாளியாக சேர்த்தனர்.

12th-Accountancy-Unit-05_TM.indd 179 12/9/2021 11:13:53 PM

(i) பாலன் ₹ 25,000 முதல் கொண்டுவந்தார்.

(ii) நற்பெயரில் அவருடைய பங்காக ₹ 10,000 ரொக்கமாக கொண்டுவந்தார்.

(iii) சொத்துகள் கீழ்க்கண்டவாறு மதிப்பிடப்பட்டன:

கட்டடம் ₹ 80,000; கடனாளிகள் ₹ 18,000; சரக்கிருப்பு ₹ 33,000.

தேவையான பேரேட்டுக் கணக்குகளை தயார் செய்து கூட்டாளி சேர்ப்பிற்கு பின்வரும் இருப்புநிலைக் குறிப்பினைத் தயார் செய்யவும்.

(விடை: மறுமதிப்பீட்டு இலாபம்: ₹ 1 1,000; முதல் கணக்குகள்: ஜேம்ஸ்: ₹ 58,000; ஜஸ்டினா: ₹ 68,000; பாலன்: ₹ 25,000; இருப்பு நிலைக்குறிப்பு மொத்தம்: ₹ 1,86,000)

27. அன்பு மற்றும் சங்கர் என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை 3:2 எனும் விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். அவர்களின் 2018, மார்ச் 31 ஆம் நாளைய இருப்பு நிலைக்குறிப்பு பின்வருமாறு:

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல் கணக்குகள்:			கணிப்பொறி	40,000
அன்பு	4,00,000		வாகனம்	1,60,000
சங்கர்	3,00,000	7,00,000	சரக்கிருப்பு	4,00,000
இலாப நட்ட க/கு		1,20,000	கடனாளிகள்	3,60,000
கடனீந்தோர்		1,20,000	வங்கி ரொக்கம்	40,000
தொழிலாளர் ஈட்டு நிதி		60,000		
		10,00,000		10,00,000

பின்வரும் விவரங்கள் அடிப்படையில் இராஜேஷ் என்பவர் 1/5 பங்கிற்கு கூட்டாளியாகச் சேர்க்கப்பட்டார்.

(i) நிறுவனத்தின் நற்பெயர் ₹ 75,000 என மதிப்பிடப்பட்டது. இராஜேஷ் நற்பெயரில் தன்னுடைய பங்கினை ரொக்கமாகக் கொண்டு வந்தார்.

(ii) இராஜேஷ் ₹ 1,50,000 முதலாகக் கொண்டு வந்தார்.

(iii) வாகனம் ₹ 2,00,000, சரக்கிருப்பு ₹ 3,80,000, கடனாளிகள் ₹ 3,50,000 என மதிப்பிடப்பட்டது.

(iv) எதிர்பார்க்கப்படும் தொழிலாளர் ஈட்டு நிதி மீதான கோரிக்கை ₹ 10,000.

(v) பதிவுறா முதலீடு ₹ 5,000 கணக்கில் கொண்டுவரப்பட்டது.

மறுமதிப்பீடு கணக்கு, முதல் கணக்கு மற்றும் இராஜேஷின் சேர்ப்பிற்கு பின்வரும் இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்யவும்.

(விடை: மறுமதிப்பீட்டு இலாபம்: ₹ 15,000; முதல் கணக்குகள்: அன்பு: ₹ 5,20,000; சங்கர்: ₹ 3,80,000; இராஜேஷ்: ₹ 1,50,000; இருப்பு நிலைக்குறிப்பு மொத்தம்: ₹ 1 1,80,000)

12th-Accountancy-Unit-05_TM.indd 180 12/9/2021 11:13:53 PM

மாணவர் செயல்பாடு 5.3

பின்வரும் நடவடிக்கைகளை வாசித்து பகுப்பாய்வு செய்து பின்வரும் அட்டவணையில் சொத்து மற்றும் பொறுப்பு என எழுதி உரிய பத்தியில் (✓) குறியீடு செய்யவும். முதல் இரு நடவடிக்கைகள் எடுத்துக்காட்டாக செய்யப்பட்டிருக்கிறது.

(1) சரக்கிருப்பின் மதிப்பு ₹ 2,500 லிருந்து ₹ 3,000 என மறுமதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

(2) கட்டடம் ₹ 2,00,000 லிருந்து ₹ 1,60,000 என மறுமதிப்பீடு செய்யப்பட்டது.

(3) கடனீந்தோர் மீது தள்ளுபடி ₹ 2,000 லிருந்து ₹ 1,800 ஆக மறுமதிப்பீடு செய்யப்பட்டது.

(4) அறைகலன் மதிப்பு ₹ 2,000 குறைக்கப்பட்டது.

(5) கொடுபடவேண்டிய கூலி மீது ₹ 1,000 ஒதுக்கீடு உருவாக்கப்பட்டது.

(6) வாகனம் ₹ 20,000 லிருந்து ₹ 28,000 ஆக மறுமதிப்பீடு செய்யப்பட்டது.

(7) கொடுபடவேண்டிய சம்பளம் ₹ 10,000 என உருவாக்கப்பட்டது.

(8) வாரா ஐயக்கடன் ஒதுக்கிற்கு ₹ 1,000 ஒதுக்கப்பட்டது.

(9) நிலம் ₹ 2,00,000 லிருந்து ₹ 2,50,000 என மதிப்பிடப்பட்டது.

(10) பொருத்துகைகள் ₹ 20,000 லிருந்து ₹ 22,000 என மறுமதிப்பீடு செய்யப்பட்டது.

நடவடிக்கை எண்	சொத்து / பொறுப்பு	கூடுதல்	குறைவு	மறுமதிப்பீட்டுக் கணக்கு பற்று	மறுமதிப்பீட்டுக் கணக்கு வரவு
1	சொத்து	✓			✓
2	சொத்து		✓	✓	
3					
4					
5					
6					
7					
8					
9					
10					

மேற்கூறிய செயல்பாட்டிலிருந்து நீங்கள் என்ன முடிவு செய்வீர்கள்? கீழ்க்காணும் அட்டவணையை நிரப்புவதன் வாயிலாக உங்களின் புரிதலை வெளிப்படுத்துங்கள். பொருத்தமான பத்தியில் கூடுதல், குறைவு என்பதை எழுதவும். எடுத்துகாட்டிற்காக ஒருபத்தி நிரப்பப்பட்டுள்ளது.

மறுமதிப்பீடு கணக்கு	பற்று	வரவு
சொத்து	குறைவு	?
பொறுப்பு	?	?

12th-Accountancy-Unit-05_TM.indd 181 12/9/2021 11:13:53 PM

நிகழ்வாய்வு

சீதா மற்றும் சுமதி நகரின் பரபரப்பான பகுதியில் கூட்டாண்மை அடிப்படையில் உணவகம் ஒன்றை தொடங்கினர். அவ்வுணவகம் சிறந்த வாடிக்கையாளர் சேவை மற்றும் தரமான உணவு போன்றவற்றால் அதிக வாடிக்கையாளர்களை கவர்ந்தது. இரண்டாம் ஆண்டிறுதியிலிருந்து அவ்வுணவகம் இலாபம் ஈட்ட ஆரம்பித்தது. ஐந்து ஆண்டுகளுக்குப் பின் அவர்கள் மேலும் ஒரு உணவகக் கிளையை தொடங்கி வியாபாரத்தை விரிவுபடுத்த திட்டமிட்டனர். அவர்களின் நண்பர்களில் ஒருவரான சூசன் சந்தையிடுகை திறமை மிகுந்தவர். எனவே சீதாவும் சுமதியும், சூசனை கூட்டாண்மையில் சேர்க்க பரஸ்பரம் ஒப்புக்கொண்டனர். ஆனால் கூட்டாண்மை நிறுவனத்திற்கு எந்த ஒரு கூட்டாண்மை ஒப்பாவணமும் கிடையாது. சேர்ப்பின்போது, சொத்துகள் பொறுப்புகள் மறுமதிப்பீடு செய்யப்பட்டன. கூட்டாளிகள் நற்பெயரை தாங்களாகவே உருவாக்கி கொண்டனர். வெகுவிரைவில் சூசன் தன்னுடைய சந்தையிடுகை திறமையினால் அருகிலுள்ள ஒரு அலுவலகத்தின் அனைத்து பணியாளர்களுக்கும் உணவு அளிப்பதற்கான ஒப்பந்தத்தை பெற்றுக் கொண்டார். இது நிறுவனத்திற்கு அதிக இலாபத்தை ஈட்டித்தந்தது.

பின்வருவனவற்றை விவாதிக்கவும்:

1. சீதாவும் சுமதியும் கூட்டாண்மை ஒப்பாவணம் வைத்திருக்க வேண்டும் என நினைக்கிறீர்களா?
2. ஒப்பாவணம் இல்லாத நிலையில் என்ன செய்ய வேண்டும்?
3. ஏற்கனவே உள்ள நிறுவனத்தில் சூசன் சேர்க்கப்படும் போது மேற்கொள்ள வேண்டிய சரிகட்டுதல்கள் யாவை?
4. தாங்களாகவே உருவாக்கப்பட்ட நற்பெயரை நிறுவனம் ஏடுகளில் பதிவு செய்யமுடியுமா?
5. சூசன் மறுமதிப்பீட்டின் ஆதாயத்திலிருந்து ஒரு பங்கினை எதிர்பார்க்கிறார். அவர் ஒரு பங்கினை பெறுவது சாத்தியமானதா?
6. சூசன் புதிய ஒப்பந்தத்தின் மீது கழிவினைக் கோருகிறார். இதனை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா?

தொடர் ஆய்விற்கு

வியாபாரத்தை தொடர்ந்து நடத்தவேண்டும் என்பது கூட்டாளிகளுக்கு கட்டாயமானதா? ஏதேனும் ஒரு கூட்டாளி கூட்டாண்மையை விட்டு விலகினால் என்ன நடக்கும்? கூட்டாண்மை முடிவுக்கு கொண்டுவரப்படுமா?

பார்வை

1. M C Shukla, T S Grewal and S C Gupta, Advanced Accounts, 19th ed., 2017, S.Chand Publishing, New Delhi.
2. R L Gupta and V K Gupta, Financial Accounting, 11th ed., 2014, Sultan Chand and Sons, New Delhi.
3. S P Jain and K L Narang, Advanced Accountancy Vol – I, 2016, Kalyani Publishers, New Delhi.
4. Dalston L Cecil and Jenitra L Merwin, Financial Accounting, 3rd ed., 2017, Learntech Press, Trichy.
5. Fundamentals of Accounting, 2017, The Institute of Chartered Accountants of India, New Delhi.

12th-Accountancy-Unit-05_TM.indd 182 12/9/2021 11:13:53 PM

அலகு 6

கூட்டாளி விலகல் மற்றும் கூட்டாளி இறப்பு

பொருளடக்கம்

கூட்டாளி விலகல்

6.1 அறிமுகம்

6.2 கூட்டாளி விலகலின்போது செய்யவேண்டிய சரிகட்டுதல்கள்

6.3 பகிர்ந்து தரா இலாபங்கள், காப்புகள் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்தளித்தல்

6.4 சொத்துகளையும் பொறுப்புகளையும் மறுமதிப்பீடு செய்தல்

6.5 புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் ஆதாய விகிதம் கணக்கிடுதல்

6.6 நற்பெயர் சரிக்கட்டல்

6.7 கூட்டாளி விலகும் நாள் வரை உள்ள நடப்பு ஆண்டு இலாபத்தை சரிக்கட்டல்

6.8 விலகும்கூட்டாளிக்கு செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்துதல்

கூட்டாளி இறப்பு

6.9 கூட்டாளி இறப்பின் போது செய்ய வேண்டிய சரிக்கட்டல்கள்

நினைவுகூற வேண்டிய கருத்துகள்

RECALL

கூட்டாளி விலகல் மற்றும் கூட்டாளி இறப்பு ஆகியவற்றைப் பற்றி கற்பதற்கு முன்னர் பின்வரும் கருத்துகளை நினைவில் கொள்ள வேண்டும்:

- கூட்டாண்மை நிறுவனத்தின் பொருள் மற்றும் இயல்புகள்
- கூட்டாண்மை ஒப்பாவணம்
- கூட்டாளிகளின் முதல் கணக்குகள்
- நற்பெயர் மதிப்பீடு செய்தல்

கற்றல் நோக்கங்கள்

மாணவர்கள்

- கூட்டாளி விலகலின்போதும் மற்றும் கூட்டாளி இறப்பின்போதும் செய்ய வேண்டிய கணக்கியல் நடைமுறைகள் குறித்து புரிந்து கொள்ளுதல்
- கூட்டாளி விலகல் மற்றும் கூட்டாளி இறப்பின்போது தயாரிக்க வேண்டிய கூட்டாண்மை கணக்குகள் தயார் செய்தல்

தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய சொற்கள்

- கூட்டாளி விலகல்
- ஆதாய விகிதம்
- நிறைவேற்றாளர் கணக்கு

TUSV3

12th-Accountancy-Unit-06_TM.indd 183 12/9/2021 11:17:03 PM

கூட்டாளி விலகல்

6.1 அறிமுகம்



மாணவர் செயல்பாடு 6.1

கூட்டாண்மையிலிருந்து ஒரு கூட்டாளி விலகுவதற்கான ஏதேனும் மூன்று காரணங்களைப் பற்றி சிந்திக்கவும்.

ஒரு கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து கூட்டாளி ஒருவர் வெளியே சென்றால், அது கூட்டாளி விலகல் எனப்படும். கூட்டாளியின் உடல்நிலை பாதிப்பு, முதுமை, வேறு இடத்தில் நல்ல வாய்ப்புகள் கிடைத்தல், இதர கூட்டாளிகளுடன் ஏற்படும் கருத்து வேறுபாடுகள் முதலியன ஒரு கூட்டாளி கூட்டாண்மையிலிருந்து விலகுவதற்கு காரணங்களாகும். கூட்டாளி விலகினால், பழைய ஒப்பந்தம் முடிவுக்கு வந்துவிடும். கூட்டாண்மை நிறுவனம் திருத்தி அமைக்கப்பட்டு, தொடரும் கூட்டாளிகள் புதிய ஒப்பந்தத்துடன் தொழிலைத் தொடரலாம். கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து விலகும் நபருக்கு வெளிச்செல்லும் கூட்டாளி அல்லது விலகும் கூட்டாளி என்று பெயர்.

இந்திய கூட்டாண்மை சட்டம் 1932 பிரிவு 32(1) –ன் படி

(அ) அனைத்து கூட்டாளிகளின் ஒப்புதலுடன்
(ஆ) கூட்டாளிகளின் வெளிப்படை ஒப்பந்தத்தின்படி, அல்லது
(இ) விருப்பத்தின் அடிப்படையிலான கூட்டாண்மையில், கூட்டாளி ஒருவர் அவரது விலகல் விருப்பத்தை அனைத்து கூட்டாளிகளுக்கும் எழுத்துப்பூர்வமான அறிவிப்பு அளிப்பதன் மூலம் கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து விலகலாம் என்று கூறுகிறது.

விலகும் கூட்டாளி, தான் விலகும் நாள் வரை நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாகிறார். விலகும் கூட்டாளி நிறுவனத்தில் இருந்து விலகும் நேரத்தில் தான் விலகுவதாக ஒரு பொது அறிவிப்பு அளிக்க வேண்டியது அவசியமாகும். அப்போதுதான், தான் விலகிய பிறகு நிறுவனத்தின் செயல்பாடுகள் மூலம் மூன்றாம் நபர்களுக்கு செலுத்த வேண்டிய பொறுப்புகளில் இருந்து அவர் விடுபட முடியும். தொடரும் கூட்டாளிகள் விலகும் கூட்டாளிக்குச் செலுத்த வேண்டிய தொகையைக் கொடுத்து கணக்கினைத் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

6.2 கூட்டாளி விலகலின் போது செய்ய வேண்டிய சரிகட்டுதல்கள்

கூட்டாளி விலகும் போது, பொதுவாக தொடரும் கூட்டாளிகளின் பரஸ்பர உரிமைகள் மாறுபடும். கூட்டாளி ஒருவர், தான் விலகும் நாள் வரை நிறுவனத்தில் ஏற்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாகிறார். ஆகையால், அவர் விலகும் நாள் வரை நிறுவனத்தில் பகிர்ந்துதரா இலாபங்கள், நட்டங்கள் மற்றும் காப்புகள் போன்றவற்றை அனைத்து கூட்டாளிகளுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும். சொத்துகள் மற்றும் பொறுப்புக்களை மறுமதிப்பீடு செய்து அதிலிருந்து கிடைக்கும் இலாபத்தை அல்லது நட்டத்தை அனைத்து கூட்டாளிகளுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும். ஒரு கூட்டாளி நிறுவனத்தில் இருந்து விலகும் போது பின்வரும் சரிகட்டுதல்கள் அவசியமாகிறது :

(1) பகிர்ந்து தரா இலாபங்கள், காப்புகள் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்தளித்தல்
(2) சொத்துகளையும் பொறுப்புகளையும் மறுமதிப்பீடு செய்தல்
(3) புதிய இலாப விகிதம் மற்றும் ஆதாய விகிதம் ஆகியவற்றைத் தீர்மானித்தல்
(4) நற்பெயர் சரிக்கட்டுதல்
(5) கூட்டாளி விலகும் நாள் வரை உள்ள நடப்பு ஆண்டு இலாபம் அல்லது நட்டத்தை சரிக்கட்டுதல்
(6) விலகும் கூட்டாளிக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்துதல்

மாணவர் குறிப்பு: இலாப விகிதம் கணக்கிடுதல் மற்றும் விலகும் கூட்டாளிக்கு செலுத்த வேண்டிய தொகைகளைச் செலுத்துதல் போன்ற இந்த சரிக்கட்டுதல்களை தவிர மற்ற அனைத்துச் சரிக்கட்டுதல்களும் கூட்டாளி சேர்ப்பில் செய்த சரிக்கட்டுதல்கள் போன்றே இருக்கும்.

12th-Accountancy-Unit-06_TM.indd 184 12/9/2021 11:17:03 PM

6.3 பகிர்ந்து தரா இலாபங்கள், காப்புகள் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்தளித்தல்

கடந்த ஆண்டுகளின் இலாபங்கள் அல்லது நட்டங்கள் கூட்டாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படாமல் இருந்தால் அது பகிர்ந்து தரா இலாபங்கள் அல்லது நட்டங்கள் எனப்படும். காப்புகள் என்பதில் பொதுக்காப்பு, காப்புநிதி, தொழிலாளர் ஈட்டு நிதி மற்றும் முதலீட்டு மாறுபடும் நிதி ஆகியவை அடங்கும். அவ்வாறான பகிர்ந்து தரா காப்புகள், இலாபங்கள் அல்லது நட்டங்கள் அனைத்து கூட்டாளிகளுக்கும் உரியவை. எனவே, அவை அனைத்துக் கூட்டாளிகளுக்கும் பழைய இலாபவிகிதத்தில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். தொழிலாளர் ஈட்டு நிதியில் எதிர் நோக்கக் கூடிய இழப்பீடுகளை சரி செய்த பின்னர் மீதமுள்ள தொகை கூட்டாளிகளின் முதல் கணக்குக்கு மாற்றப்பட வேண்டும். அதற்கு பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளை செய்ய வேண்டும்:

(அ) பகிர்ந்து தரா இலாபங்கள் மற்றும் காப்புகளை மாற்றுதல்

நாள்	விவரம்		பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	இலாப நட்டப் பகிர்வு க/கு	ப		xxx	
	பொதுக்காப்பு க/கு	ப		xxx	
	காப்புநிதி க/கு	ப		xxx	
	தொழிலாளர் ஈட்டு நிதி க/கு	ப		xxx	
	முதலீட்டு மாறுபடும் நிதி க/கு	ப		xxx	
	பழைய கூட்டாளிகளின் முதல்/ நடப்பு க/கு (பழைய இலாபவிகிதத்தில்)				xxx

(ஆ) பகிர்ந்து தரா நட்டத்தை மாற்றுதல்

நாள்	விவரம்		பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	பழைய கூட்டாளிகளின் முதல்/ நடப்பு க/கு	ப		xxx	
	இலாப நட்ட க/கு (பழைய இலாபவிகிதத்தில்)				xxx

எடுத்துக்காட்டு 1

விவின், ஹரி மற்றும் ஜாய் என்ற கூட்டாளிகள் 3:2:1 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வருகின்றனர். 31–3–2017 அன்று ஹரி விலகினார். அவர் விலகிய நாளில், நிறுவனத்தின் ஏடுகளில் பொதுக்காப்பு ₹ 60,000 காட்டியது. பொதுக்காப்பு மாற்றுவதற்கான குறிப்பேட்டுப் பதிவைத் தரவும்.

தீர்வு

குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்		பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
2017 மார்ச் 31	பொதுக்காப்பு க/கு	ப		60,000	
	விவின் முதல் க/கு (60000 x 3/6)				30,000
	ஹரி முதல் க/கு (60000 x 2/6)				20,000
	ஜாய் முதல் க/கு (60000 x 1/6)				10,000
	(பொதுக்காப்பு அனைத்துக் கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு பழைய இலாப விகிதத்தில் மாற்றப்பட்டது)				

12th-Accountancy-Unit-06_TM.indd 185 12/9/2021 11:17:04 PM

எடுத்துக்காட்டு 2:

மேரி, மீனா மற்றும் மரியம் எனும் கூட்டாளிகள் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தில் இலாபநட்டங்களை சமமாகப் பகிர்ந்து வந்தனர். 1–1–2019 அன்று மேரி கூட்டாண்மையிலிருந்து விலகினார். அந்நாளில், அந்நிறுவனத்தின் இருப்புநிலைக் குறிப்பு சொத்துகள் பக்கத்தில் ₹ 75,000 பகிர்ந்து தரா நட்டம் எனக் காட்டியது. பகிர்ந்து தரா நட்டத்தைப் பகிர்ந்தளிப்பதற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

தீர்வு

குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
2019 ஜன 1	மேரி முதல் க/கு ப		25,000	
	மீனா முதல் க/கு ப		25,000	
	மரியம் முதல் க/கு ப		25,000	
	இலாப நட்ட க/கு			75,000
	(பகிர்ந்து தரா நட்டம் அனைத்து கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு பழைய இலாப விகிதத்தில் மாற்றப்பட்டது.)			

எடுத்துக்காட்டு 3

பிரின்ஸ், தேவ், சசிரேகா எனும் கூட்டாளிகள் ஒரு நிறுவனத்தின் இலாப நட்டங்களை 2:4:1 எனும் விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2019, மார்ச் 31 ஆம் நாளைய அவர்களுடைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல் கணக்குகள்:			கட்டடம்	40,000
பிரின்ஸ்	30,000		பொறித்தொகுதி	50,000
தேவ்	50,000		அறைகலன்	10,000
சசிரேகா	20,000	1,00,000	சரக்கிருப்பு	15,000
இலாப நட்டப் பகிர்வு க/கு		10,000	கடனாளிகள்	20,000
பொதுக்காப்பு		15,000	வங்கி ரொக்கம்	15,000
தொழிலாளர் ஈட்டு நிதி		17,000		
பற்பல கடனீந்தோர்		8,000		
		1,50,000		1,50,000

1–4–2019 அன்று சசிரேகா கூட்டாண்மையிலிருந்து விலகினார். பகிர்ந்து தரா இலாபத்தைப் பகிர்ந்தளிப்பதற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

12th-Accountancy-Unit-06_TM.indd 186 12/9/2021 11:17:04 PM

தீர்வு

குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
2019	இலாப நட்டப் பகிர்வு க/கு	ப	10,000	
மார்ச் 31	பொதுக்காப்பு க/கு	ப	15,000	
	தொழிலாளர் ஈட்டு நிதி க/கு	ப	17,000	
	பிரின்ஸ் முதல் க/கு (42000 x 2/7)			12,000
	தேவ் முதல் க/கு (42000 x 4/7)			24,000
	சசிரேகா முதல் க/கு (42000 x 1/7)			6,000
	(பகிர்ந்து தரா இலாபம் மற்றும் காப்புகள் அனைத்து கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு பழைய இலாப விகிதத்தில் மாற்றப்பட்டது)			

6.4 சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மறுமதிப்பீடு செய்தல்

கூட்டாண்மையிலிருந்து ஒரு கூட்டாளி விலகும் போது, சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் நடப்பு மதிப்பு, ஏட்டு மதிப்பிலிருந்து மாறுபடலாம். எனவே, அவை மறுமதிப்பீடு செய்யப்படுகின்றன. சொத்துகளையும் பொறுப்புகளையும் மறுமதிப்பீடு செய்வது கணக்குகளில் இரண்டு முறைகளில் கையாளப்படுகின்றன.

(அ) சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் திருத்திய மதிப்பை ஏடுகளில் காட்டப்பெறுவது
(ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் திருத்திய மதிப்பை ஏடுகளில் காட்டாமல் இருப்பது.

(அ) சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் மதிப்பை கணக்கேடுகளில் காட்டப்பெறுவது

இம்முறையில், சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அவற்றின் திருத்திய மதிப்புகளுடன் கூட்டாளி விலகியவுடன் தயாரிக்கப்படும் **கணக்கேடுகளிலும்**, இருப்புநிலைக் குறிப்பிலும் காட்டப்படும். சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் மதிப்புகளில் ஏற்ப்படும் அதிகரிப்பு மற்றும் குறைவு பதிவு செய்ய மறுமதிப்பீட்டுக் கணக்கு தயாரிக்கப்படுகிறது. மறுமதிப்பீட்டுக் கணக்கு சரிக்கட்டப்பட்ட இலாப நட்ட கணக்கு என்றும் அழைக்கப்படும். இது ஒரு பெயரளவு கணக்கு ஆகும்.

மறுமதிப்பீட்டுக்கணக்கு, சொத்துகளின் மதிப்பு அதிகரிக்கும் போதும் மற்றும் பொறுப்புகளின் மதிப்பு குறையும் போதும் வரவு செய்யப்படும்.

சொத்துகளின் மதிப்பு குறையும் போதும் மற்றும் பொறுப்புகளின் மதிப்பு அதிகரிக்கும் போதும் மறுமதிப்பீட்டுக் கணக்கு பற்று செய்யப்படும். பதிவு பெறாத சொத்துகள் ஏதேனும் இருப்பின் அது மறுமதிப்பீட்டுக் கணக்கில் வரவு செய்யப்படும் மற்றும் பதிவுப் பெறாத பொறுப்புகள் ஏதேனும் இருப்பின் அது மறுமதிப்பீட்டுக் கணக்கில் பற்று செய்யப்படும். அதிலிருந்து கிடைக்கும் இலாபம் அல்லது நட்டம் அனைத்து கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு பழைய இலாப விகிதத்தில் மாற்றப்படும்.

12th-Accountancy-Unit-06_TM.indd 187 12/9/2021 11:17:04 PM

சொத்துகளையும் பொறுப்புகளையும் மறுமதிப்பீடு செய்யும் போது பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகள் செய்யப்படுகின்றன.

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	1. சொத்துகளின் மதிப்பு அதிகரிக்கும் போது			
	குறிப்பிட்ட சொத்து க/கு ப		xxx	
	மறுமதிப்பீட்டு க/கு			xxx
	2. சொத்துகளின் மதிப்பு குறையும் போது			
	மறுமதிப்பீட்டு க/கு ப		xxx	
	குறிப்பிட்ட சொத்து க/கு			xxx
	3. பொறுப்புகளின் மதிப்பு அதிகரிக்கும் போது			
	மறுமதிப்பீட்டு க/கு ப		xxx	
	குறிப்பிட்ட பொறுப்பு க/கு			xxx
	4. பொறுப்புகளின் மதிப்பு குறையும் போது			
	குறிப்பிட்ட பொறுப்பு க/கு ப		xxx	
	மறுமதிப்பீட்டு க/கு			xxx
	5. ஏடுகளில் பதிவு செய்யாத சொத்துகளை பதிவு செய்யும் போது			
	குறிப்பிட்ட சொத்து க/கு ப		xxx	
	மறுமதிப்பீட்டு க/கு			xxx
	6. ஏடுகளில் பதிவு செய்யாத பொறுப்புகளை பதிவு செய்யும் போது			
	மறுமதிப்பீட்டு க/கு ப		xxx	
	குறிப்பிட்ட பொறுப்பு க/கு			xxx
	7. மறுமதிப்பீட்டு கணக்கின் இருப்பினை மாற்ற			
	(அ) மறுமதிப்பீட்டு இலாபமாக இருந்தால்			
	மறுமதிப்பீட்டு க/கு ப		xxx	
	அனைத்து கூட்டாளிகளின் முதல் கணக்கு (பழைய விகிதத்தில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக)			xxx
	(அ) மறுமதிப்பீட்டு நட்டமாக இருந்தால்			
	அனைத்து கூட்டாளிகளின் முதல் கணக்கு ப (பழைய விகிதத்தில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக)		xxx	
	மறுமதிப்பீட்டு க/கு			xxx

12th-Accountancy-Unit-06_TM.indd 188 12/9/2021 11:17:04 PM

மறுமதிப்பீட்டுக் கணக்கின் படிவம் பின்வருமாறு:

ப **மறுமதிப்பீட்டுக் கணக்கு** **வ**

விவரம்	₹	விவரம்	₹
குறிப்பிட்ட சொத்து க/கு (நிகர குறைவு)	xxx	குறிப்பிட்ட சொத்து க/கு (நிகர அதிகரிப்பு)	xxx
குறிப்பிட்ட பொறுப்பு க/கு (நிகர அதிகரிப்பு)	xxx	குறிப்பிட்ட பொறுப்பு க/கு (நிகர குறைவு)	xxx
அனைத்து கூட்டாளிகளின் முதல் கணக்கு (மறுமதிப்பீட்டு இலாபம் பழைய விகிதத்தில் பகிர்ந்தளித்தது) *	xxx	அனைத்து கூட்டாளிகளின் முதல் க/கு (மறுமதிப்பீட்டு நட்டம் பழைய விகிதத்தில் பகிர்ந்தளித்தது) *	xxx
	xxx		xxx

* இது மறுமதிப்பீட்டு இலாபமாகவோ அல்லது நட்டமாகவோ இருக்கலாம்.

எடுத்துக்காட்டு 4

ரம்யா, சாரா மற்றும் தாரா என்ற கூட்டாளிகள் முறையே 5:3:2 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். 2018, ஏப்ரல் 1 அன்று தாரா கூட்டாண்மையிலிருந்து விலகினார். பின்வரும் சரிக்கட்டுதல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(i) வளாகத்தின் மதிப்பை ₹ 40,000 உயர்த்த வேண்டும்
(ii) சரக்கிருப்பு ₹ 3,000, இயந்திரம் ₹ 6,500 மதிப்பு குறைக்க வேண்டும்.
(iii) கொடுபடாச் செலவுகள் ₹ 500 ஒதுக்கு உருவாக்க வேண்டும்.

குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கு தயாரிக்கவும்.

தீர்வு

குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
2018 ஏப்ரல் 1	வளாகம் க/கு ப மறுமதிப்பீட்டு க/கு (வளாகம் மதிப்பு உயர்த்தப்பட்டது)		40,000	40,000
,,	மறுமதிப்பீட்டு க/கு ப சரக்கிருப்பு க/கு இயந்திரம் க/கு கொடுபடாச் செலவுகள் க/கு (சொத்துகளின் மதிப்பு குறைப்பு மற்றும் கொடுபடா பொறுப்பு பதிவு செய்யப்பட்டது)		10,000	3,000 6,500 500
,,	மறுமதிப்பீட்டு க/கு ப ரம்யா முதல் க/கு சாரா முதல் க/கு தாரா முதல் க/கு (மறுமதிப்பீட்டு இலாபம் பகிர்ந்தளிக்கப்பட்டது)		30,000	15,000 9,000 6,000

12th-Accountancy-Unit-06_TM.indd 189 12/9/2021 11:17:04 PM

ப மறுமதிப்பீட்டுக் கணக்கு வ

விவரம்	₹	₹	விவரம்	₹
சரக்கிருப்பு க/கு		3,000	வளாகம் க/கு	40,000
இயந்திரம் க/கு		6,500		
கொடுபடாச் செலவுகள் க/கு		500		
மறுமதிப்பீட்டு இலாபம்:				
ரம்யா முதல் க/கு (5/10)	15,000			
சாரா முதல் க/கு (3/10)	9,000			
தாரா முதல் க/கு (2/10)	6,000	**30,000**		
		40,000		40,000

மாணவர் செயல்பாடு 6.2

மறுமதிப்பீட்டு இலாபத்தை அதிகரிக்கக்கூடிய ஏதேனும் நான்கு நடவடிக்கைகளை எழுதவும்.

எடுத்துக்காட்டு 5

பிரபு, ரகு மற்றும் சிவா என்ற கூட்டாளிகள் 3:2:1 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். 2017 ஏப்ரல், 1 ஆம் நாளன்று பிரபு கூட்டாண்மையிலிருந்து விலகினார். பின்வரும் சரிக்கட்டுதல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(i) கட்டடத்தின் மதிப்பு ₹ 12,000 உயர்த்துவது
(ii) அறைகலன் மதிப்பை ₹ 8,500 குறைப்பது
(iii) கொடுபடா சம்பளத்திற்காக ₹ 6,500 ஒதுக்கு உருவாக்குவது

குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கு தயாரிக்கவும்.

தீர்வு

குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
2017 ஏப்ரல் 1	கட்டடம் க/கு ப		12,000	
	மறுமதிப்பீட்டு க/கு			12,000
	(கட்டடத்தின் மதிப்பு உயர்த்தப்பட்டது)			
,,	மறுமதிப்பீட்டு க/கு ப		15,000	
	அறைகலன் க/கு			8,500
	கொடுபடா செலவுகள் க/கு			6,500
	(அறைகலன் மதிப்பை குறைத்தது மற்றும் கொடுபடா சம்பளம் ஒதுக்கு உருவாக்கியது)			
,,	பிரபு முதல் க/கு ப		1,500	
	ரகு முதல் க/கு ப		1,000	
	சிவா முதல் க/கு ப		500	
	மறுமதிப்பீட்டுக் க/கு			3,000
	(மறுமதிப்பீட்டு மீதான நட்டம் முதல் கணக்கிற்கு மாற்றியது)			

12th-Accountancy-Unit-06_TM.indd 190 12/9/2021 11:17:04 PM

ப மறுமதிப்பீட்டுக் கணக்கு வ

விவரம்	₹	விவரம்	₹	₹
அறைகலன் க/கு	8,500	கட்டடம் க/கு		12,000
கொடுபடாச் செலவுகள் க/கு	6,500	மறுமதிப்பீட்டு நட்டம்		
		பிரபு முதல் க/கு (3/6)	1,500	
		ரகு முதல் க/கு (2/6)	1,000	
		சிவா முதல் க/கு (1/6)	500	**3,000**
	15,000			15,000

எடுத்துக்காட்டு 6

ஜான், ஜேம்ஸ் மற்றும் இராஜா என்ற கூட்டாளிகள் முறையே சமமாக இலாப நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 31.03.2019 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு.

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹	₹
முதல் கணக்குகள்:			அலுவலக சாதனங்கள்		70,000
ஜான்	80,000		இயந்திரம்		1,40,000
ஜேம்ஸ்	60,000		பற்பல கடனாளிகள்	52,000	
இராஜா	1,00,000	2,40,000	கழிக்க: வாரா		
பற்பல கடனீந்தோர்		1,20,000	ஐயக்கடன் ஒதுக்கு	2,000	50,000
			சரக்கிருப்பு		60,000
			வங்கி ரொக்கம்		40,000
		3,60,000			3,60,000

2019, மார்ச் 31 ஆம் நாளன்று பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு கூட்டாண்மையிலிருந்து விலகினார்.

i) இயந்திரம் ₹1,30,000 ஆக மதிப்பிடுவது
ii) அலுவலக சாதனங்கள் மதிப்பை ₹ 2,000 குறைப்பது
iii) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ₹ 3,000 ஆக உயர்த்துவது
iv) ஏடுகளில் பதிவு பெறாமல் உள்ள முதலீடுகள் ₹ 25,000 பதிவு செய்ய வேண்டும்.

குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கு தயாரிக்கவும்.

தீர்வு

குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
2019	மறுமதிப்பீட்டு க/கு ப		13,000	
மார்ச் 31	இயந்திரம் க/கு			10,000
	அலுவலக சாதனங்கள் க/கு			2,000
	வாரா ஐயக்கடன் ஒதுக்கு க/கு			1,000
	(இயந்திரம், அலுவலக சாதனம் மீது தேய்மானம் நீக்கியது மற்றும் வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கியது)			

12th-Accountancy-Unit-06_TM.indd 191 12/9/2021 11:17:04 PM

,,	முதலீடுகள் க/கு	ப	25,000	
	மறுமதிப்பீட்டு க/கு			25,000
	(பதிவு பெறா முதலீடுகள் பதிவு செய்யப்பட்டது)			
,,	மறுமதிப்பீட்டு க/கு	ப	12,000	
	ஜான் முதல் க/கு			4,000
	ஜேம்ஸ் முதல் க/கு			4,000
	இராஜா முதல் க/கு			4,000
	(மறுமதிப்பீடு மீதான இலாபம் முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது)			

ப **மறுமதிப்பீட்டுக் கணக்கு** **வ**

விவரம்	₹	₹	விவரம்	₹
இயந்திரம் க/கு		10,000	முதலீடுகள் க/கு	25,000
அலுவலக சாதனம் க/கு		2,000		
வாரா ஐயக்கடன் ஒதுக்கு க/கு		1,000		
மறுமதிப்பீட்டு இலாபம்:				
ஜான் முதல் க/கு (1/3)	4,000			
ஜேம்ஸ் முதல் க/கு (1/3)	4,000			
இராஜா முதல் க/கு (1/3)	4,000	**12,000**		
		25,000		25,000

ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் திருத்திய மதிப்பை கணக்கேடுகளில் காட்டாமல் இருப்பது

இம்முறையில் சொத்துகளும் மற்றும் பொறுப்புகளும் அதன் உண்மையான மதிப்புகளிலேயே காட்டப்படும். கூட்டாளி விலகிய உடன் கணக்கேடுகளிலும் மற்றும் தயாரிக்கப்படும் இருப்புநிலைக் குறிப்பிலும் அதன் திருத்திய மதிப்பில் காட்டப்படாது. மறுமதிப்பீட்டுக் கணக்கின் இறுதி விளைவு கூட்டாளிகளின் முதல் கணக்குகளில் சரிக்கட்டப்படும். திருத்திய மதிப்பை ஏடுகளில் காட்டாமல் இருப்பதற்கு நினைவுக்குறிப்பு மறுமதிப்பீட்டுக் கணக்கு என்ற ஒரு தற்காலிகக் கணக்குத் தயாரிக்கப்படுகிறது.

6.5 புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் ஆதாய விகிதம் தீர்மானித்தல்

6.5.1 புதிய இலாபப் பகிர்வு விகிதம்

ஒரு கூட்டாளி விலகும்போது, தொடரும் கூட்டாளிகள் விலகிய கூட்டாளியின் இலாபப்பங்கினை பெறுவதற்கு புதிய இலாப விகிதம் கணக்கிடுவது அவசியமாகிறது. புதிய இலாப விகிதம் என்பது, தொடரும் கூட்டாளிகள் எதிர்காலத்தில் இலாபத்தைப் பிரித்துக் கொள்ள ஒப்புக் கொண்ட ஒரு விகிதம் ஆகும். அவ்வாறு ஒப்புக்கொள்ளப்பட்ட புதிய விகிதம் இல்லையெனில், தொடரும் கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை சமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

12th-Accountancy-Unit-06_TM.indd 192 12/9/2021 11:17:04 PM

6.5.2 ஆதாய விகிதம்

தொடரும் கூட்டாளிகள் விலகும் கூட்டாளியின் இலாபப் பங்கிலிருந்து ஒரு பகுதியை ஆதாயமாகப் பெறுகின்றனர். அந்த ஆதாயம் அனைத்துக் கூட்டாளிகளாலும் அல்லது ஒருசில கூட்டாளிகளாலும் பிரித்துக் கொள்ளப்படும்,. ஆதாய விகிதம் என்பது தொடரும் கூட்டாளிகளுக்கு கிடைக்கப்பெற்ற இலாபத்தின் விகிதாச்சாரம் ஆகும். ஆதாய விகிதம் கணக்கிடுவதின் நோக்கம் விலகும் கூட்டாளிக்கு கொடுக்கப்படும் நற்பெயரை ஏற்றுக் கொள்வதாகும். ஆதாயப்பங்கு பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.

ஆதாயப் பங்கு = புதிய பங்கு – பழைய பங்கு

ஆதாய விகிதம் = தொடரும் கூட்டாளிகளுக்கு கிடைக்கப்பெற்ற ஆதாயத்தின் விகிதமாகும்

மாணவர் குறிப்பு

புதிய இலாப விகிதம் கணக்கில் கொடுக்கப்படவில்லை எனில், இதனைக் கணக்கில் கொடுக்கப்பட்டிருக்கின்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கணக்கிட வேண்டும்.

ஆதாய விகிதம் மற்றும் புதிய இலாப விகிதத்தை பல்வேறு சூழ்நிலைகளில் கணக்கிடுதல்

1. புதிய இலாப விகிதம் கொடுக்கப்பட்டிருந்தால்

புதிய இலாப விகிதம் கொடுக்கப்பட்டிருந்தால், பின்வருமாறு ஆதாய விகிதம் மட்டுமே பின்வருமாறு கணக்கிட வேண்டும்.

ஆதாய விகிதம் = தொடரும் கூட்டாளிகள் பெற்ற ஆதாயத்தின் விகிதம்

ஆதாய பங்கு = புதிய பங்கு – பழைய பங்கு

எடுத்துக்காட்டு 7

கிரண், வினோத் மற்றும் விமல் எனும் கூட்டாளிகள் 5:3:2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். கிரண் விலகினார். வினோத் மற்றும் விமல் ஆகியோரின் புதிய இலாப விகிதம் 2:1 ஆகும். ஆதாய விகிதத்தை கணக்கிடவும்.

தீர்வு

ஆதாய பங்கு = புதிய பங்கு – பழைய பங்கு

வினோத் = $\frac{2}{3}-\frac{3}{10}=\frac{20-9}{30}=\frac{11}{30}$

விமல் = $\frac{1}{3}-\frac{2}{10}=\frac{10-6}{30}=\frac{4}{30}$

ஆகையால், வினோத் மற்றும் விமல் ஆகியோரின் ஆதாய விகிதம் = 11 : 4

2. புதிய இலாப விகிதம் கொடுக்கப்படவில்லை எனில்

அ) விலகும் கூட்டாளியின் பங்கினை ஒரே ஒரு கூட்டாளி மட்டும் பெறுதல்

புதிய இலாப விகிதம் கொடுக்கப்படவில்லை எனில் மற்றும் ஒரே ஒரு தொடரும் கூட்டாளி மட்டும் விலகும் கூட்டாளியின் பங்கினை ஆதாயமாக பெறும்போது, புதிய இலாப விகிதம் பின்வருமாறு கணக்கிடப்படும்.

தொடரும் கூட்டாளியின் புதிய பங்கு = பழைய பங்கு + ஆதாயப் பங்கு

எடுத்துக்காட்டு 8

ஆர்யா, பெனின் மற்றும் சார்லஸ் என்ற கூட்டாளிகள் முறையே 3:3:2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். அவர்களில் சார்லஸ் என்பவர் விலகினார். அவருடைய பங்கு முழுவதையும் ஆர்யா எடுத்துக் கொண்டார். ஆர்யா மற்றும் பெனின் ஆகியோரின் புதிய இலாப விகிதம் மற்றும் ஆதாய விகிதத்தைக் கணக்கிடவும்.

12th-Accountancy-Unit-06_TM.indd 193 12/9/2021 11:17:05 PM

ஆர்யாவின் ஆதாயப் பங்கு = $\frac{2}{8}$

ஆதாய விகிதம் = $\frac{2}{8}:0$ அதாவது $\frac{1}{4}:0$ அல்லது $1:0$

தொடரும் கூட்டாளியின் புதிய பங்கு = பழைய பங்கு + ஆதாயப் பங்கு

ஆர்யா = $\frac{3}{8}+\frac{2}{8}=\frac{5}{8}$

பெனின் = $\frac{3}{8}+0=\frac{3}{8}$

ஆகவே, ஆர்யா மற்றும் பெனின் ஆகியோரின் புதிய இலாப விகிதம் $\frac{5}{8}:\frac{3}{8}$ அதாவது 5:3

ஆ) விலகும் கூட்டாளியின் பங்கை ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டாளிகள் ஆதாயமாக பெறுவது

(i) விலகும் கூட்டாளியின் பங்கின் மீதான ஆதாயப் பங்கு விகிதாச்சாரம் கொடுக்கப்பட்டிருந்தால்

புதிய இலாப விகிதம் கொடுக்கப்படாத நிலையில், ஆனால் விலகும் கூட்டாளியின் பங்கினை பகிர்ந்துகொள்ள ஆதாய விகிதாச்சாரம் கொடுக்கப்பட்டிருந்தால், புதிய இலாப விகிதம் பின்வருமாறு கணக்கிட வேண்டும்.

தொடரும் கூட்டாளியின் புதிய பங்கு = பழைய பங்கு + ஆதாயப் பங்கு

ஆதாயப் பங்கு = விலகும் கூட்டாளியின் பங்கு x ஆதாயப் பங்கின் விகிதாச்சாரம்

எடுத்துக்காட்டு 9

ராகுல், ரவி மற்றும் ரோஹித் எனும் கூட்டாளிகள் முறையே 5 : 3 : 2 என்ற விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். அவர்களில் ரோஹித் விலகினார். அவருடைய பங்கு ராகுல் மற்றும் ரவி ஆகியோரால் 3: 2 எனும் விகிதத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. புதிய இலாப விகிதம் மற்றும் ஆதாய விகிதம் கணக்கிடவும்.

தீர்வு

ரோஹித் பங்கு = $\frac{2}{10}$

ஆதாயப் பங்கு = விலகும் கூட்டாளியின் பங்கு x ஆதாயப்பங்கின் விகிதாச்சாரம்

ராகுல் = $\frac{2}{10}\times\frac{3}{5}=\frac{6}{50}$

ரவி = $\frac{2}{10}\times\frac{2}{5}=\frac{4}{50}$

ஆதாய விகிதம் = $\frac{6}{50}:\frac{4}{50}$ அதாவது 3:2

தொடரும் கூட்டாளிகளின் புதிய பங்கு = பழைய பங்கு + ஆதாயப் பங்கு

ராகுல் = $\frac{5}{10}+\frac{6}{50}=\frac{25+6}{50}=\frac{31}{50}$

ரவி = $\frac{3}{10}+\frac{4}{50}=\frac{15+4}{50}=\frac{19}{50}$

ஆகையால், ராகுல் மற்றும் ரவி ஆகியோரின் புதிய விகிதம் = $\frac{31}{50}:\frac{19}{50}$ அதாவது 31:19

12th-Accountancy-Unit-06_TM.indd 194 12/9/2021 11:17:05 PM

எடுத்துக்காட்டு 10

குமார், கேசவன் மற்றும் மனோகர் எனும் கூட்டாளிகள் முறையே $\frac{1}{2}$, $\frac{1}{3}$ மற்றும் $\frac{1}{6}$ எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். மனோகர் விலகினார். அவருடைய பங்கினை குமார் மற்றும் கேசவன் இருவரும் சமமாக எடுத்துக் கொண்டனர். புதிய இலாப விகிதத்தையும் மற்றும் ஆதாய விகிதத்தையும் கணக்கிடவும்.

தீர்வு

ஆதாய விகிதம் = 1:1

மனோகர் பங்கினை குமார் மற்றும் கேசவன் ஆகியோர் சமமாக எடுத்துக் கொள்கின்றனர்.

மனோகரின் பங்கு = $\frac{1}{6}$

ஆதாயப்பங்கு = விலகும் கூட்டாளியின் பங்கு x ஆதாயப் பங்கின் விகிதாச்சாரம்

குமார் $= \frac{1}{6} \times \frac{1}{2} = \frac{1}{12}$

கேசவன் $= \frac{1}{6} \times \frac{1}{2} = \frac{1}{12}$

எனவே, குமார் மற்றும் கேசவன் ஆகியோரின் ஆதாய விகிதம் = $\frac{1}{12} : \frac{1}{12}$ அதாவது 1:1

தொடரும் கூட்டாளியின் புதிய பங்கு = பழைய பங்கு + ஆதாயப்பங்கு

குமார் $= \frac{1}{2} + \frac{1}{12} = \frac{6+1}{12} = \frac{7}{12}$

கேசவன் $= \frac{1}{3} + \frac{1}{12} = \frac{4+1}{12} = \frac{5}{12}$

எனவே, குமார் மற்றும் கேசவன் ஆகியோரின் புதிய இலாப விகிதம் $\frac{7}{12} : \frac{5}{12}$ அதாவது 7:5

(ii) ஆதாயப்பங்கு விகிதாச்சாரம் கொடுக்கப்படாத போது:

புதிய இலாப விகிதம், ஆதாயப்பங்கு மற்றும் ஆதாயப்பங்கின் விகிதாச்சாரம் கொடுக்கப்படவில்லை எனில், புதிய பங்கினைக் கணக்கிடுவதற்கு அவர்களுடைய ஆதாயப் பங்கை பழைய பங்கின் விகிதாச்சாரம் என எடுத்துக் கொள்ள வேண்டும். எனவே, தொடரும் கூட்டாளிகளுக்கிடையேயான பழைய விகிதமே புதிய இலாபப் பகிர்வு விகிதமாகவும் மற்றும் ஆதாய விகிதமாகவும் அமையும்.

எடுத்துக்காட்டு 11

இராஜா, ரோஜா மற்றும் பூஜா எனும் கூட்டாளிகள் 4:5:3 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். நிறுவனத்திலிருந்து ரோஜா என்பவர் விலகினார். புதிய இலாப விகிதத்தையும் மற்றும் ஆதாய விகிதத்தையும் கணக்கிடவும்.

தீர்வு

புதிய இலாப விகிதம், ஆதாயப்பங்கு மற்றும் ஆதாயப்பங்கு விகிதாச்சாரம் ஆகியவை கொடுக்கப்படாததால், புதிய பங்கினைக் கணக்கிடுவதற்கு அவர்களுடைய ஆதாயப் பங்கை பழைய பங்கின் விகிதாச்சாரத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். எனவே, தொடரும் கூட்டாளிகளான இராஜா மற்றும் பூஜா ஆகியோரின் பழைய இலாபப் பகிர்வு விகிதம், புதிய இலாபப்பகிர்வு விகிதமாகவும் மற்றும் ஆதாய விகிதமாகவும் இருக்கும். அதாவது, 4:3.

12th-Accountancy-Unit-06_TM.indd 195 12/9/2021 11:17:05 PM

6.5.3 தியாக விகிதத்திற்கும் மற்றும் ஆதாய விகிதத்திற்கும் உள்ள வேறுபாடுகள்

அடிப்படை	தியாக விகிதம்	ஆதாய விகிதம்
1. பொருள்	இது புதிய கூட்டாளிக்கு, பழைய கூட்டாளிகள், தியாகம் செய்து கொடுக்கும் இலாபப் பங்கின் விகிதாச்சாரம் ஆகும்.	இது தொடரும் கூட்டாளிகள் விலகும் கூட்டாளியிடமிருந்து பெறும் ஆதாயப் பங்கின் விகிதாரச்சாரம் ஆகும்.
2. நோக்கம்	இது தியாகம் செய்யும் கூட்டாளிகளுக்கு நற்பெயர் தொகையைச் சரிக்கட்டிக் கொள்வதை தீர்மானிப்பதற்காகக் கணக்கிடப்படுகிறது.	இது ஆதாயம் பெறும் கூட்டாளிகளுக்கு நற்பெயர் தொகையை சரிக்கட்டிக் கொள்வதை தீர்மானிப்பதற்காகக் கணக்கிடப்படுகிறது.
3. கணக்கிடும் காலம்	இது புதிய கூட்டாளி சேர்ப்பின் போது கணக்கிடப்படுகிறது.	இது கூட்டாளி ஒருவர் விலகும் போது கணக்கிடப்படுகிறது.
4. கணக்கிடும் முறை	இது பழைய இலாப விகிதத்திற்கும் மற்றும் புதிய இலாப விகிதத்திற்கும் உள்ள வேறுபாடு ஆகும். தியாக விகிதம் = பழைய இலாப விகிதம் – புதிய இலாப விகிதம்	இது புதிய இலாப விகிதத்திற்கும் மற்றும் பழைய இலாப விகிதத்திற்கும் உள்ள வேறுபாடு ஆகும். ஆதாய விகிதம் = புதிய இலாப விகிதம் – பழைய இலாப விகிதம்.

6.6 நற்பெயர் சரிக்கட்டப்படுதல்

நிறுவனம் பெற்றுள்ள நல்ல பெயர், நிறுவனத்தின் தற்போதைய அல்லது எதிர்காலத்தில் ஈட்டப் போகும் இலாபத்தில் பாதிப்பை உண்டாக்கும். கூட்டாளி விலகும்போது, விலகும் கூட்டாளியின் இலாபத்திலிருந்து ஒரு பகுதியை தொடரும் கூட்டாளிகள் ஆதாயமாகப் பெறுகின்றனர். எனவே, விலகும் கூட்டாளியின் நற்பெயர் மதிப்பிடப்பட்டு அவருடைய பங்கு ஆதாயம்பெறும் கூட்டாளிகளின் முதல் கணக்கில் சரி செய்யப்பட வேண்டும். அதற்கான குறிப்பேட்டுப் பதிவு பின்வருமாறு.

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	தொடரும் கூட்டாளிகளின் முதல் / நடப்பு க/கு (ஆதாய விகிதத்தில்) ப		xxx	
	விலகும் கூட்டாளி முதல் / நடப்பு க/கு			xxx

எடுத்துக்காட்டு 12

சுரேஷ், செந்தாமரை மற்றும் இராஜ் ஆகியோர் ஒரு நிறுவனத்தின் இலாப நட்டங்களை 3:2:1 எனும் விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். சுரேஷ் என்பவர் அக்கூட்டாண்மையிலிருந்து விலகினார். அவர் விலகிய நாளில் நிறுவனத்தின் நற்பெயர் ₹ 36,000 என மதிப்பிடப்பட்டது. கூட்டாளிகளின் முதல் கணக்குகள் மாறுபடும் முதல் எனக் கொண்டு நற்பெயர் பதிவிற்கான தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

தீர்வு

புதிய இலாப விகிதமும், தொடரும் கூட்டாளிகளின் ஆதாய விகிதமும் தரப்படாததால், அவர்கள் 2:1 என்ற பழைய இலாப விகிதத்திலேயே ஆதாயம் பெறுகிறார்கள் எனக் கொள்ள வேண்டும். ஆகவே, ஆதாய விகிதம் = 2:1 ஆகும்.

நற்பெயரில் சுரேஷின் பங்கு = $36,000 \times \frac{3}{6}$ = ₹18,000

12th-Accountancy-Unit-06_TM.indd 196 12/9/2021 11:17:05 PM

குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	செந்தாமரை முதல் க/கு (18000 x 2 / 3) ப		12,000	
	இராஜ் முதல் க/கு (18000 x 1/3) ப		6,000	
	சுரேஷ் முதல் க/கு			18,000
	(நற்பெயரில் சுரேஷின் பங்கு சரிக்கட்டப்பட்டது)			

6.6.1 ஏடுகளில் ஏற்கனவே இருக்கும் நற்பெயர்

கூட்டாளி விலகும் நாளில், ஏற்கனவே இருப்புநிலைக் குறிப்பில் தோன்றும் நற்பெயரை, கூட்டாளிகள் போக்கெழுத முடிவெடுத்தால், அதனை கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு / நடப்புக் கணக்கிற்கு பழைய இலாப விகிதத்தில் மாற்றி போக்கெழுதலாம். அதற்கான குறிப்பேட்டுப் பதிவு பின்வருமாறு:

குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	கூட்டாளிகளின் முதல் / நடப்பு க/கு (பழைய விகிதத்தில்) ப		xxx	
	நற்பெயர் க/கு			xxx
	(ஏற்கனவே இருக்கும் நற்பெயர் போக்கெழுதப்பட்டது)			

எடுத்துக்காட்டு 13

நரேஷ், மணி மற்றும் முத்து ஆகிய கூட்டாளிகள் 2:2:1 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். 2019 மார்ச் 31ஆம் நாள் நிறுவனத்திலிருந்து முத்து விலகினார். முத்து விலகிய நாளன்று, ஏடுகளில் நற்யெர் ₹ 40,000 எனக் காட்டியது. அவர்கள் முதல் மாறுபடும் முதல் எனக் கொண்டு, தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

அ) நற்பெயர் முழுவதையும் போக்கெழுத கூட்டாளிகள் முடிவெடுத்தால்
ஆ) நற்பெயரில் பாதித்தொகையை போக்கெழுத கூட்டாளிகள் முடிவெடுத்தால்

தீர்வு

(அ) நற்பெயர் முழுவதையும் போக்கெழுதினால்:

குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
2019	நரேஷ் முதல் க/கு (40,000 x 2/5) ப		16,000	
மார்ச் 31	மணி முதல் க/கு (40,000 x 2/5) ப		16,000	
	முத்து முதல் க/கு (40,000 x 1/5) ப		8,000	
	நற்பெயர் க/கு			40,000
	(நற்பெயர் போக்கெழுதியது)			

12th-Accountancy-Unit-06_TM.indd 197 12/9/2021 11:17:05 PM

(ஆ) நற்பெயரில் பாதித்தொகையை போக்கெழுதினால் (அதாவது ₹ 20,000)

குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
2019 மார்ச் 31	நரேஷ் முதல் க/கு (20,000 x2/5) ப		8,000	
	மணி முதல் க/கு (20,000 x2/5) ப		8,000	
	முத்து முதல் க/கு (20,000 x1/5) ப		4,000	
	நற்பெயர் க/கு			20,000
	(நற்பெயரில் பாதித் தொகையை போக்கெழுதியது)			

6.7 கூட்டாளி விலகும் நாள்வரையிலான நடப்பாண்டின் இலாபத்தை சரிக்கட்டுதல்

கூட்டாளி ஒருவர் ஒரு கணக்காண்டின் இடையிலேயே விலகும்போது, நடப்பாண்டின் இலாபம் அல்லது நட்டத்தில் அவர் விலகும் நாள்வரையிலான, அவருக்குரிய பங்கினை அவருக்கு பிகிர்ந்து அளிக்க வேண்டும். இது நடப்பாண்டின் விற்பனையை அடிப்படையாகக் கொண்டு திட்டமிடப்படலாம். முந்தைய ஆண்டின் இலாபம் அல்லது கடந்த ஆண்டுகளின் சராசரி இலாபம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டும் நடப்பாண்டு இலாபம் திட்டமிடப்படலாம். அதற்கான குறிப்பேட்டுப் பதிவு பின்வருமாறு.

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	இலாபநட்ட அனாமத்து க/கு ப		xxx	
	விலகும் கூட்டாளியின் முதல் / நடப்பு க/கு			xxx
	(விலகும் கூட்டாளியின் நடப்பாண்டின் இலாபத்தை அவருடைய முதல் கணக்கில் வரவு வைக்கப்பட்டது)			

குறிப்பு: நட்டம் ஏதேனும் இருப்பின், விலகும் கூட்டாளியின் முதல் / நடப்புக் கணக்கினைப் பற்றும் இலாப நட்ட அனாமத்துக் கணக்கினை வரவும் வைக்க வேண்டும்.

இலாபநட்ட அனாமத்து கணக்கு கணக்காண்டின் இறுதியில் முடிக்கப்பட்டு அதன் இருப்பு இலாபநட்ட கணக்கிற்கு மாற்றப்படுகிறது.



இலாபநட்ட அனாமத்து கணக்கு ஒரு தற்காலிக கணக்கு ஆகும். விலகிய அல்லது பாதிக்கப்பட்ட கூட்டாளியின் நடப்பு ஆண்டு இலாபம் அல்லது நட்டத்தை அவர் விலகும் தேதி வரை அல்லது இறந்த தேதிவரை பகிர்ந்தளிப்பதற்காகத் தயாரிக்கப்படுகிறது.

எடுத்துக்காட்டு 14

ஜஸ்டினா, நவி மற்றும் ரித்திகா எனும் கூட்டாளிகள் இலாப நட்டங்களை சமமாகப் பகிர்ந்து வந்தனர். 31.3.2019 அன்று ரித்திகா என்பவர் கூட்டாண்மையிலிருந்து விலகினார். முந்தைய ஆண்டுகளின் இலாபம் பின்வருமாறு.

2016: ₹ 5,000; 2017: ₹ 10,000; 2018: ₹ 30,000; 2019 ஆம் ஆண்டிற்கான ரித்திகாவின் இலாபப் பங்கை அவர் விலகும் நாள் வரை பின்வரும் நிலைகளில் கணக்கிடவும்.

(அ) முந்தைய ஆண்டின் இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு இலாபத்தைப் பகிர்ந்தளிக்க வேண்டும்.

(ஆ) கடந்த மூன்று ஆண்டுகளின் சராசரி இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு இலாபத்தைப் பகிர்ந்தளிக்க வேண்டும்.

மேலும், கூட்டாளிகளின் முதல் கணக்கு மாறுபடும் முதல் முறை எனக் கொண்டு தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

12th-Accountancy-Unit-06_TM.indd 198 12/9/2021 11:17:05 PM

தீர்வு

(அ) முந்தைய ஆண்டின் இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு பகிர்ந்தளித்தால்

ரித்திகாவின் மூன்று மாதங்களுக்கான இலாபப் பங்கு = $30,000 \times \frac{3}{12} \times \frac{1}{3}$ = ₹ 2,500

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
2019	இலாப நட்ட அனாமத்து க/கு ப		2,500	
மார்ச் 31	ரித்திகா முதல் க/கு			2,500
	(ரித்திகாவின் நடப்பாண்டின் இலாபத்தின் பங்கு அவருடைய கணக்கில் வரவு வைக்கப்பட்டது)			

(ஆ) கடந்த மூன்று ஆண்டுகளின் சராசரி இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு பகிர்ந்தளித்தல்

சராசரி இலாபம் = $\frac{5,000 + 10,000 + 30,000}{3}$

= ₹ 15,000

ரித்திகாவின் மூன்று மாதங்களுக்கான இலாபப் பங்கு = $15,000 \times \frac{3}{12} \times \frac{1}{3}$ = ₹ 1,250

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
2019	இலாப நட்ட அனாமத்து க/கு ப		1,250	
மார்ச் 31	ரித்திகா முதல் க/கு			1,250
	(நடப்பாண்டு இலாபத்தில் ரித்திகாவின் பங்கு அவருடைய கணக்கில் வரவு வைக்கப்பட்டது)			

6.8 விலகும் கூட்டாளிக்கு சேர வேண்டிய தொகையை தீர்த்தல்

கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து கூட்டாளி ஒருவர் விலகும்போது, நற்பெயர், பகிர்ந்து தரா இலாபம் அல்லது நட்டம், மறுமதிப்பீட்டு இலாபம் அல்லது நட்டம், கூட்டாளியின் ஊதியம் ஆகியவற்றை சரிக்கட்டிய பிறகு கிடைக்கக்கூடிய முதல் கணக்கின் இருப்பு அக்கூட்டாளிக்கு செலுத்தப்பட வேண்டும். கூட்டாண்மை ஒப்பாவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறு அவருக்கு சேர வேண்டிய தொகையைத் தீர்வுச்செய்ய வேண்டும். பின்வரும் வழிகளில் விலகும் கூட்டாளிக்கு செலுத்த வேண்டிய தொகை தீர்க்கப்படலாம்.

i) அவருக்கு சேரவேண்டிய முழுத்தொகையையும் ரொக்கமாக உடனடியாக செலுத்தலாம்.

ii) மொத்தத் தொகையையும் கூட்டாளியின் கடன் கணக்கிற்கு மாற்றி விடலாம்.

iii) பாதித் தொகையை உடனடியாக ரொக்கமாகவும் மீதித் தொகையை கடன் கணக்கிற்கு மாற்றி விடலாம்.

அதற்கான குறிப்பேட்டுப் பதிவுகள் பின்வருமாறு:

12th-Accountancy-Unit-06_TM.indd 199 12/9/2021 11:17:05 PM

(அ) கூட்டாளிக்கு சேர வேண்டிய தொகையை உடனடியாக ரொக்கமாகச் செலுத்தினால்

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	விலகும் கூட்டாளி முதல் க/கு ப		xxx	
	ரொக்கம் / வங்கி க/கு			xxx

(ஆ) கூட்டாளிக்கு சேர வேண்டிய தொகையை உடனடியாக ரொக்கமாக செலுத்தவில்லை என்றால்

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	விலகும் கூட்டாளி முதல் க/கு ப		xxx	
	விலகும் கூட்டாளி கடன் க/கு			xxx

(இ) கூட்டாளிக்கு சேர வேண்டிய தொகையை பாதி ரொக்கமாகவும் பாதி கடனாகவும் செலுத்தினால்

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	விலகும் கூட்டாளி முதல் க/கு ப		xxx	
	ரொக்கம் / வங்கி க/கு (செலுத்திய ரொக்கம்)			xxx
	விலகும் கூட்டாளியின் கடன் க/கு			xxx

கூட்டாளி விலகலின்போது அவருக்கு சேர வேண்டிய தொகையினை முழுவதுமாக செலுத்தவில்லை என்றால் கூட்டாளி விலகலுக்குப் பின் தயாரிக்கப்படும் இருப்பு நிலைக் குறிப்பில் விலகும் கூட்டாளியின் கடன் கணக்கு, பொறுப்புகள் பக்கத்தில் தோன்றும்.

மாணவர் செயல்பாடு 6.3

ஒரு கூட்டாளி கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து விலகுகிறார். கூட்டாண்மையில் இருந்து அவர் விலகிய பின் அவருக்கு செலுத்த வேண்டிய இறுதித் தொகை ₹ 25,000 ஆகும். அவர் ₹ 15,000த்தை உடனடியாக பெற்றுக் கொண்டார். மீதமுள்ள தொகை நிறுவனத்திடம் உள்ளது. அவருடைய விலகலுக்கு பிறகு கணக்கேடுகளில் அது என்ன தாக்கத்தை ஏற்படுத்தும்?

உங்களுக்குத் தெரியுமா?

விலகும் கூட்டாளி / பாதிக்கப்பட்ட கூட்டாளிக்கு உடனடியாக ரொக்கம் செலுத்தப்படவில்லை எனில், மற்றும் அவர்களுக்கிடையே அது தொடர்பான எந்த ஒப்பந்தமும் இல்லாத போது இந்தியக் கூட்டாண்மைச் சட்டம் பிரிவு 37ல் உள்ள விதிகள் பொருந்தும். பிரிவு 37ன்படி விலகும் கூட்டாளி அல்லது விலகும் கூட்டாளியின் பிரதிநிதி அல்லது இறந்த கூட்டாளியின் பிரதிநிதி ஆகியோர் பின்வரும் ஏதேனும் ஒரு விருப்பத்தை தெரிவு செய்து கொள்ளலாம்:

(அ) நிறுவனத்தின் சொத்துகளில் அவருக்குரிய பங்கின் மூலம் கிடைக்கப்பெற்ற இலாபப் பங்கினை பெறலாம்.

(ஆ) நிறுவனத்தின் சொத்துகளில் அவருக்குரிய பங்கில் அவருக்கு சேரவேண்டிய தொகைக்கு ஆண்டுக்கு 6% வட்டி பெறலாம்.

12th-Accountancy-Unit-06_TM.indd 200 12/9/2021 11:17:06 PM

எடுத்துக்காட்டு 15

கவிதா, குமுதா மற்றும் லலிதா ஆகிய கூட்டாளிகள் தங்கள் இலாப நட்டங்களை முறையே 5:3:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2018, டிசம்பர் 31 அன்று குமுதா நிறுவனத்திலிருந்து விலகுகிறார். அவர் விலகும் நாளில் அவருடைய முதல் கணக்கு ₹ 2,00,000 வரவு இருப்பினைக் காட்டியது.

(i) அவருடைய தொகை காசோலை மூலம் உடனடியாகச் செலுத்தப்பட்டால்
(ii) அவருடைய தொகை உடனடியாகச் செலுத்தப்படவில்லையெனில்
(iii) ₹ 70,000 உடனடியாக காசோலை மூலம் செலுத்தப்பட்டது

என்ற சூழ்நிலைகளுக்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

தீர்வு

குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
2018 டிசம்பர் 31	(i) குமுதா முதல் க/கு ப வங்கி க/கு (தொகை உடனடியாகச் செலுத்தப்பட்டது)		2, 00,000	 2, 00,000
,,	(ii) குமுதா முதல் க/கு ப குமுதா கடன் க/கு (தொகை கடன் கணக்கிற்கு மாற்றப்பட்டது)		2,00,000	 2,00,000
,,	(iii) குமுதா முதல் க/கு ப வங்கி க/கு குமுதா கடன் க/கு (₹ 70,000 உடனடியாகச் செலுத்தப்பட்டு, மீதித் தொகை கடன் கணக்கிற்கு மாற்றப்பட்டது)		2,00,000	 70,000 1,30,000

எடுத்துக்காட்டு 16

மணி, ரமா மற்றும் தேவன் ஆகியோர் ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகள். தங்கள் இலாப நட்டங்களை முறையே 4:3:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். அவர்களின் 2019, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல் கணக்குகள்:			கட்டடம்	80,000
மணி	50,000		சரக்கிருப்பு	20,000
ரமா	50,000		அறைகலன்	70,000
தேவன்	50,000	1,50,000	கடனாளிகள்	20,000
பற்பல கடனீந்தோர்		20,000	கைரொக்கம்	10,000
இலாபநட்டக் க/கு		30,000		
		2,00,000		2,00,000

12th-Accountancy-Unit-06_TM.indd 201 12/9/2021 11:17:06 PM

பின்வரும் சரிகட்டுதல்களுக்குட்பட்டு மணி 31.03.2019 அன்று கூட்டாண்மையிலிருந்து விலகுகிறார்.

(i) சரக்கிருப்பில் ₹ 5,000 மதிப்பு குறைக்கப்பட வேண்டும்

(ii) வாரா ஐயக்கடனுக்கு ₹ 1,000 ஒதுக்கு உருவாக்க வேண்டும்

(iii) கட்டடத்தின் மதிப்பு ₹ 16,000 அதிகரிக்கப்பட வேண்டும்

(iv) மணிக்குச் சேரவேண்டியத் தொகை உடனடியாகச் செலுத்தப்படவில்லை

மறுமதிப்பீட்டு கணக்கு மற்றும் கூட்டாளி விலகலுக்குப் பின் உள்ள முதல் கணக்கினைத் தயாரிக்கவும்.

தீர்வு

ப **மறுமதிப்பீட்டுக் கணக்கு** வ

விவரம்	₹	₹	விவரம்	₹
சரக்கிருப்பு க/கு		5,000	கட்டடக் க/கு	16,000
வாரா ஐயக்கடன் ஒதுக்கு க/கு		1,000		
மறுமதிப்பீட்டு இலாபம்:				
மணி முதல் க/கு (4/10)	4,000			
ரமா முதல் க/கு (3/10)	3,000			
தேவன் முதல் க/கு (3/10)	3,000	**10,000**		
		16,000		16,000

ப **முதல் கணக்கு** வ

விவரம்	மணி ₹	ரமா ₹	தேவன் ₹	விவரம்	மணி ₹	ரமா ₹	தேவன் ₹
மணி கடன் க/கு	66,000			இருப்பு கீ/கொ	50,000	50,000	50,000
இருப்பு கீ/இ	–	**62,000**	**62,000**	மறுமதிப்பீட்டுக் க/கு	4,000	3,000	3,000
				இலாபநட்ட க/கு	12,000	9,000	9,000
	66,000	62,000	62,000		66,000	62,000	62,000
				இருப்பு கீ/கொ	–	62,000	62,000

12th-Accountancy-Unit-06_TM.indd 202 12/9/2021 11:17:06 PM

விரிவான கணக்குகள்

எடுத்துக்காட்டு 17

சார்லஸ், முத்து மற்றும் சேகர் என்ற கூட்டாளிகள் முறையே 3:4:2 என்ற விகிதத்தில் இலாபங்களைப் பகிர்ந்து கொண்டனர். 2018, டிசம்பர் 31 ஆம் நாளைய அவர்களின் இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு.

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல் கணக்குகள்:			அறைகலன்	20,000
சார்லஸ்	30,000		சரக்கிருப்பு	40,000
முத்து	40,000		கடனாளிகள்	30,000
சேகர்	20,000	90,000	வங்கி ரொக்கம்	42,000
தொழிலாளர் ஈட்டு நிதி		27,000	இலாபநட்ட க/கு (நட்டம்)	18,000
பற்பல கடனீந்தோர்		33,000		
		1,50,000		1,50,000

1.1.2019 அன்று பின்வரும் ஏற்பாடுகளின்படி சார்லஸ் கூட்டாண்மையிலிருந்து விலகினார்.

(i) சரக்கிருப்பின் மதிப்பு 10% அதிகரிக்கப்பட வேண்டும்

(ii) அறைகலன் மீது 5% தேய்மானம் நீக்கப்பட வேண்டும்

(iii) வாராக்கடன் மீது ₹ 1,000 ஒதுக்கு உருவாக்க வேண்டும்

(iv) கொடுபடா பழுதுபார்ப்புச் செலவு ₹ 11,000 இன்னமும் பதியப்படவில்லை

(v) சார்லஸிற்கு உரியத்தொகை உடனடியாகச் செலுத்தப்பட்டது

மறுமதிப்பீட்டுக் கணக்கு, விலகலுக்குப் பின் உள்ள கூட்டாளிகளின் முதல் கணக்கு மற்றும் இருப்பு நிலைக் குறிப்பினைத் தயார் செய்யவும்.

தீர்வு

ப **மறுமதிப்பீட்டுக் கணக்கு** வ

விவரம்	₹	விவரம்	₹	₹
அறைகலன் க/கு	1,000	சரக்கிருப்பு க/கு		4,000
வாராக்கடன் ஒதுக்கு க/கு	1,000	மறுமதிப்பீட்டு நட்டம்:		
கொடுபட வேண்டிய பழுதுபார்ப்புச் செலவு	11,000	சார்லஸ் முதல் க/கு (3/9)	3,000	
		முத்து முதல் க/கு (4/9)	4,000	
		சேகர் முதல் க/கு (2/9)	2,000	**9,000**
	13,000			13,000

12th-Accountancy-Unit-06_TM.indd 203 12/9/2021 11:17:06 PM

ப முதல் கணக்கு வ

விவரம்	சார்லஸ் ₹	முத்து ₹	சேகர் ₹	விவரம்	சார்லஸ் ₹	முத்து ₹	சேகர் ₹
இலாபநட்ட க/கு	6,000	8,000	4,000	இருப்பு கீ/கொ	30,000	40,000	20,000
மறுமதிப்பீட்டு க/கு (நட்டம்)	3,000	4,000	2,000	தொழிலாளர் ஈட்டு நிதி	9,000	12,000	6,000
வங்கி க/கு	30,000	-	-				
இருப்பு கீ/இ		**40,000**	**20,000**				
	39,000	52,000	26,000		39,000	52,000	26,000
				இருப்பு கீ / கொ	-	40,000	20,000

2019, ஜனவரி 1 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹	₹
முதல் கணக்குகள்:			அறைகலன்	20,000	
முத்து	40,000		கழிக்க: தேய்மானம்	1,000	19,000
சேகர்	20,000	60,000	சரக்கிருப்பு	40,000	
பற்பல கடனீந்தோர்		33,000	கூட்டுக: மதிப்பேற்றம்	4,000	44,000
கொடுபடவேண்டிய பழுதுபார்ப்புச் செலவு		11,000	கடனாளிகள்	30,000	
			கழிக்க: வாராக்கடன் ஒதுக்கு	1,000	29,000
			வங்கி ரொக்கம்	42,000	
			கழிக்க: சார்லஸிற்கு செலுத்தியது	30,000	12,000
		1,04,000			1,04,000

எடுத்துக்காட்டு 18

ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகளான இரகு, இரவி, இரமேஷ் தங்களுடைய இலாபநட்டங்களை 2:3:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2019, மார்ச் 31 ஆம் நாளைய அவர்களின் இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு.

2018, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹	₹
முதல் கணக்குகள்:			கட்டடம்		60,000
இரகு	30,000		இயந்திரம்		70,000
இரவி	40,000		சரக்கிருப்பு		20,000
இரமேஷ்	20,000	90,000	கடனாளிகள்	18,000	
காப்புநிதி		36,000	கழிக்க: வாராக்கடன்		
பற்பல கடனீந்தோர்		50,000	ஒதுக்கு	1,000	17,000
			வங்கி ரொக்கம்		9,000
		1,76,000			1,76,000

12th-Accountancy-Unit-06_TM.indd 204 12/9/2021 11:17:06 PM

பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு இரமேஷ் 31.03.2019 அன்று விலகினார்.

(i) நிறுவனத்தின் நற்பெயர் ₹ 24,000 என மதிப்பிடப்பட்டது

(ii) இயந்திரம் மீது 10% தேய்மானம் நீக்க வேண்டும்

(iii) கட்டடம் 20% மதிப்பேற்றம் செய்யப்பட வேண்டும்

(iv) சரக்கிருப்பு ₹ 2,000 மதிப்பேற்றம் செய்யப்பட வேண்டும்

(v) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ₹ 1,000 அதிகரிக்கப்பட வேண்டும்

(vi) இரமேஷிற்கு சேர வேண்டியத் தொகை உடனடியாக வழங்கப்படவில்லை

தேவையான பேரேட்டுக் கணக்குகளைத் தயாரித்து, விலகலுக்குப் பின் உள்ள இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

தீர்வு

ப **மறுமதிப்பீட்டுக் கணக்கு** வ

விவரம்	₹	₹	விவரம்	₹
இயந்திரம் க/கு		7,000	கட்டடம் க/கு	12,000
வாராக்கடன் ஒதுக்கு க/கு		1,000	சரக்கிருப்பு க/கு	2,000
மறுமதிப்பீட்டு இலாபம்:				
இரகு முதல் க/கு (2/6)	2,000			
இரவி முதல் க/கு (3/6)	3,000			
இரமேஷ் முதல் க/கு (1/6)	1,000	**6,000**		
		14,000		14,000

ப **முதல் கணக்கு** வ

விவரம்	இரகு ₹	இரவி ₹	இரமேஷ் ₹	விவரம்	இரகு ₹	இரவி ₹	இரமேஷ் ₹
இரமேஷ்				இருப்பு கீ /கொ	30,000	40,000	20,000
முதல் க/கு	1,600	2,400	-	காப்புநிதி க/கு	12,000	18,000	6,000
இரமேஷ்				மறுமதிப்பீட்டு க/கு	2,000	3,000	1,000
கடன் க/கு			31,000	இரகு முதல் க/கு	-	-	1,600
இருப்பு கீ / இ	**42,400**	**58,600**	-	இரவி முதல் க/கு	-	-	2,400
	44,000	61,000	31,000		44,000	61,000	31,000
				இருப்பு கீ/கொ	42,400	58,600	-

12th-Accountancy-Unit-06_TM.indd 205 12/9/2021 11:17:06 PM

2019, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹	₹
முதல் கணக்குகள்:			கட்டடம்	60,000	
இரகு	42,400		கூட்டுக: மதிப்பேற்றம்	12,000	72,000
இரவி	58,600	1,01,000	இயந்திரம்	70,000	
இரமேஷின் கடன்		31,000	கழிக்க: தேய்மானம்	7,000	63,000
பற்பல கடனீந்தோர்		50,000	சரக்கிருப்பு	20,000	
			கூட்டுக: மதிப்பேற்றம்	2,000	22,000
			கடனாளிகள்	18,000	
			கழிக்க: வாராக்கடன் ஒதுக்கு	2,000	16,000
			வங்கி ரொக்கம்		9,000
		1,82,000			1,82,000

மாணவர் குறிப்பு

1. புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் ஆதாய விகிதம் கொடுக்கப்படவில்லை. எனவே, தொடரும் கூட்டாளிகள் பழைய இலாப பகிர்வு விகிதமான 2:3 -ல் ஆதாயம் பெற்றுக் கொள்கிறார்கள் என எடுத்துக் கொள்ள வேண்டும்.

2. நற்பெயரில் இரமேஷின் பங்கு = $24,000 \times \frac{1}{6}$ = ₹ 4,000

   இரமேஷின் நற்பெயர் ஏற்பு

   இரகு: 4,000 X 2/5 = ₹ 1,600
   இரவி: 4,000 X 3/5 = ₹ 2,400

எடுத்துக்காட்டு 19

ஒரு கூட்டாண்மை நிறுவனத்தில் முத்து, முரளி மற்றும் மனோஜ் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபத்தினை 3 : 1 : 2 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொண்டனர். 2018, டிசம்பர் 31 ஆம் நாளைய அவர்களின் இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல் கணக்குகள்:			இயந்திரம்	45,000
முத்து	20,000		அறைகலன்	5,000
முரளி	25,000		கடனாளிகள்	30,000
மனோஜ்	20,000	65,000	சரக்கிருப்பு	20,000
பொதுக்காப்பு		6,000		
கடனீந்தோர்		29,000		
		1,00,000		1,00,000

12th-Accountancy-Unit-06_TM.indd 206 12/9/2021 11:17:06 PM

பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு 2018, டிசம்பர் 31 அன்று மனோஜ் விலகுகிறார்:

(i) முத்துவும் முரளியும் இலாப நட்டங்களை 3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ள வேண்டும்.
(ii) சொத்துகள் பின்வருமாறு மதிப்பீடு செய்யப்படவேண்டும்.

இயந்திரம் ₹ 43,000, சரக்கிருப்பு ₹ 27,000, கடனாளிகள் ₹ 28,000.

(iii) நிறுவனத்தின் நற்பெயர் ₹ 30,000 என மதிப்பிடப்பட்டது.
(iv) மனோஜ் –க்கு செலுத்த வேண்டிய இறுதித் தொகை உடனடியாக செலுத்தப்படவில்லை.

மனோஜ் விலகலுக்குப் பின் உடனடியாக தயாரிக்கப்பட வேண்டிய தேவையான பேரேட்டுக் கணக்குகள் மற்றும் இருப்புநிலைக் குறிப்பினைத் தயாரிக்கவும்.

தீர்வு

ப **மறுமதிப்பீட்டுக் கணக்கு** **வ**

விவரம்	₹	₹	விவரம்	₹
இயந்திரம் க/கு		2,000	சரக்கிருப்பு க/கு	7,000
கடனாளிகள் க/கு		2,000		
மறுமதிப்பீட்டு இலாபம்:				
முத்து முதல் க/கு	1,500			
முரளி முதல் க/கு	500			
மனோஜ் முதல் க/கு	1,000	**3,000**		
		7,000		7,000

ப **முதல் கணக்கு** **வ**

விவரம்	முத்து ₹	முரளி ₹	மனோஜ் ₹	விவரம்	முத்து ₹	முரளி ₹	மனோஜ் ₹
மனோஜ் முதல் க/கு	3,000	7,000	-	இருப்பு கீ/கொ	20,000	25,000	20,000
மனோஜ் கடன் க/கு			33,000	பொதுக் காப்பு க/கு	3,000	1,000	2,000
இருப்பு கீ/இ	**21,500**	**19,500**	-	மறுமதிப்பீட்டுக் க/கு (இலாபம்)	1,500	500	1,000
				முத்து முதல் க/கு	-	-	3,000
				முரளி முதல் க/கு	-	-	7,000
	24,500	26,500	33,000		24,500	26,500	33,000
				இருப்பு கீ/கொ	21,500	19,500	-

குறிப்பு:

(i) ஆதாய விகிதம் கணக்கிடுதல்

ஆதாய பங்கு = புதிய பங்கு – பழைய பங்கு

முத்து $= \frac{3}{5} - \frac{3}{6} = \frac{18-15}{30} = \frac{3}{30}$

12th-Accountancy-Unit-06_TM.indd 207 12/9/2021 11:17:07 PM

முரளி $= \frac{2}{5} - \frac{1}{6} = \frac{12-5}{30} = \frac{7}{30}$

எனவே, முத்து மற்றும் முரளியின் ஆதாய விகிதம் = 3:7

(ii) நற்பெயருக்கான சரிக்கட்டுதல்

நிறுவனத்தின் நற்பெயர் = ₹ 30,000

நற்பெயரில் மனோஜின் பங்கு = 30,000 x $\frac{2}{6}$ = ₹ 10,000

இது முத்து மற்றும் முரளியின் முதல் கணக்கில் 3:7 என்ற ஆதாய விகிதத்தில் சரிக்கட்டப்பட வேண்டும்.

அதாவது,

முத்து : 10,000 x $\frac{3}{10}$ = ₹ 3,000

முரளி : 10,000 x $\frac{7}{10}$ = ₹ 7,000

2017, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹	₹
முதல் கணக்குகள்:			இயந்திரம்	45,000	
முத்து	21,500		கழிக்க: தேய்மானம்	2,000	43,000
முரளி	19,500	41,000	அறைகலன்		5,000
மனோஜ் கடன் க/கு		33,000	கடனாளிகள்	30,000	
கடனீந்தோர்		29,000	கழிக்க: வாராக்கடன் ஒதுக்கு	2,000	28,000
			சரக்கிருப்பு	20,000	
			கூட்டுக: மதிப்பேற்றம்	7,000	27,000
		1,03,000			1,03,000

கூட்டாளியின் இறப்பு

6.9 கூட்டாளியின் இறப்பின் போது தேவையான சரிக்கட்டுதல்கள்

ஒரு கூட்டாளியின் இறப்பின் போது, கூட்டாண்மை கலைக்கப்படலாம் அல்லது மறுவடிவமைக்கப்படலாம். கூட்டாளியின் இறப்பின்போது கீழ்கண்ட சரிக்கட்டுதல்கள் செய்யப்பட வேண்டும்.

(1) பகிர்ந்துத்தரா இலாபங்கள், காப்புகள் மற்றும் நட்டங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்
(2) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மறுமதிப்பீடு செய்யப்பட வேண்டும்
(3) புதிய இலாபப்பகிர்வு விகிதம் மற்றும் ஆதாய விகிதம் நிர்ணயிக்க வேண்டும்
(4) நற்பெயர் சரிக்கட்டுதல்கள்
(5) கூட்டாளியின் இறப்பு நாள் வரையிலான நடப்பு ஆண்டின் இலாபம் அல்லது நட்டத்தைச் சரிக்கட்டுதல்
(6) இறந்த கூட்டாளிக்கு உரிய தொகையை தீர்வு செய்தல்

கூட்டாளி இறப்பின் போது செய்ய வேண்டிய சரிக்கட்டுதல்கள், இறந்த கூட்டாளிக்குரிய தொகையை செலுத்துவதைத் தவிர பெரும்பாலும் கூட்டாளி விலகலுக்கு செய்ய வேண்டியவை போன்றதேயாகும்.

12th-Accountancy-Unit-06_TM.indd 208 12/9/2021 11:17:07 PM

கூட்டாளி விலகலின்போது நிறுவனம் கூட்டாளியிடம் செலுத்த வேண்டிய தொகை அவரிடமே வழங்கப்படும். ஆனால், கூட்டாளி இறப்பின் போது அவருக்குச் சேரவேண்டியத் தொகை அவருடைய நிறைவேற்றாளர் அல்லது சட்டமுறை பிரதிநிதியிடம் வழங்கப்படும். இறந்த கூட்டாளியின் தொகையைச் செலுத்துவதற்கு கீழ்க்கண்ட குறிப்பேட்டுப பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(i) **இறந்த கூட்டாளிக்குச் சேரவேண்டிய தொகையை அவரின் நிறைவேற்றாளர் அல்லது சட்டமுறை பிரதிநிதியிடம் மாற்றுவதற்கானப் பதிவு**

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	இறந்த கூட்டாளியின் முதல் க/கு ப		xxx	
	இறந்த கூட்டாளியின் நிறைவேற்றாளர் க/கு			xxx

(ii) ரொக்கம் செலுத்தும் போது

(அ) சேரவேண்டியத் தொகை உடனடியாகச் செலுத்தும் போது

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	இறந்த கூட்டாளியின் நிறைவேற்றாளர் க/கு ப		xxx	
	ரொக்கம் / வங்கி க/கு			xxx

(ஆ) சேரவேண்டியத் தொகை உடனடியாக ரொக்கமாக செலுத்தப்படாத போது

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	இறந்த கூட்டாளியின் நிறைவேற்றாளர் க/கு ப		xxx	
	இறந்த கூட்டாளியின் நிறைவேற்றாளர் கடன் க/கு			xxx

(இ) சேர வேண்டியத் தொகையின் ஒரு பகுதி மட்டும் உடனடியாகச் செலுத்தப்படும் போது

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	இறந்த கூட்டாளியின் நிறைவேற்றாளர் க/கு ப		xxx	
	ரொக்கக் க/கு / வங்கி க/கு (செலுத்திய தொகை)			xxx
	இறந்த கூட்டாளியின் நிறைவேற்றாளர் கடன் க/கு			xxx

எடுத்துக்காட்டு: 20

இரத்னா, பாஸ்கர், மற்றும் இப்ராஹிம் ஆகிய கூட்டாளிகள் 2:3:4 என்ற விகிதத்தில் இலாப நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 2018, டிசம்பர் 31 அன்று இரத்னா இறந்துவிட்டார். அவருக்குச் செலுத்த வேண்டிய இறுதித் தொகை ₹ 1,00,000 வரவு இருப்பினைக் காட்டியது. கீழ்கண்ட சூழ்நிலைகளில் குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(அ) சேரவேண்டியத் தொகை உடனடியாகக் காசோலை மூலம் செலுத்தப்பட்டது
(ஆ) சேரவேண்டியத் தொகை உடனடியாகச் செலுத்தப்படவில்லை
(இ) ₹ 60,000 காசோலை மூலம் உடனடியாகச் செலுத்தப்பட்டது

12th-Accountancy-Unit-06_TM.indd 209 12/9/2021 11:17:07 PM

தீர்வு

குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	(அ) இரத்னாவின் நிறைவேற்றாளர் க/கு ப வங்கி க/கு (சேரவேண்டியத்தொகைஉடனடியாகச்செலுத்தப்பட்டது)		1,00,000	 1,00,000
	(ஆ) இரத்னாவின் நிறைவேற்றாளர் க/கு ப இரத்னாவின் நிறைவேற்றாளர் கடன் க/கு (சேரவேண்டியத் தொகை கடன் கணக்கிற்கு மாற்றப்பட்டது)		1,00,000	 1,00,000
	(இ) இரத்னாவின் நிறைவேற்றாளர் க/கு ப வங்கி க/கு இரத்னாவின் நிறைவேற்றாளர் கடன் க/கு (₹ 60,000 செலுத்தப்பட்டு மீதித் தொகை கடன் கணக்கிற்கு மாற்றப்பட்டது)		1,00,000	 60,000 40,000



கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகளின் ஆயுள் மீது ஆயுள் காப்பீடு செய்யப்படலாம். ஆயுள் காப்பீடு தனி ஆயுள் காப்பீடாகவும், கூட்டு ஆயுள் காப்பீடாகவோ இருக்கலாம். தனி ஆயுள் காப்பீடாக இருந்தால் கூட்டாளியின் இறப்பின்போது அவருடைய காப்பீட்டு திட்டாவணம் மட்டுமே முதிர்வடைந்து காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து காப்பீட்டுத் தொகை பெறப்படுகிறது.

கூட்டு ஆயுள் காப்பீடாக இருக்கும் போது அனைத்துக் கூட்டாளிகளின் ஆயுளுக்கும் ஒரே காப்பீடு செய்யப்படுகிறது. ஏதேனும் ஒரு கூட்டாளி இறக்கும் போழுது காப்பீட்டு திட்டாவணம் முதிர்வடைந்து திட்டாவணத் தொகை பெறப்படும். இரு வகையான திட்டாவணத்திலும் காப்பீட்டு முனைமமானது கூட்டாண்மை நிறுவனத்தால் செலுத்தப்படுகிறது. காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பெறப்படும் தொகை இறந்த கூட்டாளிக்குச் செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்துவதற்கு பயன்படுத்தப்படும்.

எடுத்துக்காட்டு 21

சுந்தர், விவேக், மற்றும் பாண்டியன் என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை 3:2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொண்டனர். அவர்களின் 2018, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு:

2017, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல் கணக்குகள்:			நிலம்	80,000
சுந்தர்	50,000		சரக்கிருப்பு	20,000
விவேக்	40,000		கடனாளிகள்	30,000
பாண்டியன்	10,000	1,00,000	வங்கிரொக்கம்	14,000
பொதுக்காப்பு		36,000	இலாப நட்டக் க/கு (நட்டம்)	6,000
பற்பல கடனீந்தோர்		14,000		
		1,50,000		1,50,000

12th-Accountancy-Unit-06_TM.indd 210 12/9/2021 11:17:07 PM

1.1.2019 அன்று பாண்டியன் இறந்து விட்டார் மற்றும் அவரின் இறப்பின்போது பின்வரும் சரிக்கட்டுதல்கள் செய்யப்பட்டன.

(i) சரக்கிருப்பின் மதிப்பு 10% தேய்மானம் குறைக்கப்பட வேண்டும்.

(ii) நிலத்தின் மதிப்பு ₹ 11,000 அதிகரிக்கப்பட வேண்டும்.

(iii) கடனாளிகள் மதிப்பு ₹ 3,000 குறைக்க வேண்டும்.

(iv) பாண்டியனுக்கு செலுத்த வேண்டிய இறுதித் தொகை செலுத்தப்படவில்லை.

கூட்டாளியின் இறப்பிற்கு பின் நிறுமத்தின் மறுமதிப்பீட்டுக் கணக்கு, கூட்டாளிகள் முதல் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

தீர்வு

ப **மறுமதிப்பீட்டுக் கணக்கு** **வ**

விவரம்	₹	₹	விவரம்	₹
சரக்கிருப்பு க/கு		2,000	நிலம் க/கு	11,000
கடனாளிகள் க/கு		3,000		
மறுமதிப்பீட்டு இலாபம்:				
சுந்தர் முதல் க/கு (3/6)	3,000			
விவேக் முதல் க/கு (2/6)	2,000			
பாண்டியன் முதல் க/கு (1/6)	1,000	**6,000**		
		11,000		11,000

ப **முதல் கணக்கு** **வ**

விவரம்	சுந்தர் ₹	விவேக் ₹	பாண்டியன் ₹	விவரம்	சுந்தர் ₹	விவேக் ₹	பாண்டியன் ₹
இலாபநட்டக் க/கு	3,000	2,000	1,000	இருப்பு கீ/கொ	50,000	40,000	10,000
பாண்டியனின் நிறைவேற்றாளர் க/கு			16,000	பொதுக்காப்பு க/கு	18,000	12,000	6,000
இருப்பு கீ/இ	**68,000**	**52,000**		மறுமதிப்பீட்டுக் க/கு (இலாபம்)	3,000	2,000	1,000
	71,000	54,000	17,000		71,000	54,000	17,000
				இருப்பு கீ/கொ	68,000	52,000	

12th-Accountancy-Unit-06_TM.indd 211 12/9/2021 11:17:07 PM

2019, ஜனவரி 1 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹	₹
முதல் கணக்குகள்:			நிலம்	80,000	
சுந்தர்	68,000		கூட்டுக: மதிப்பேற்றம்	11,000	91,000
விவேக்	52,000	1,20,000	சரக்கிருப்பு	20,000	
பாண்டியனின் நிறைவேற்றாளர் க/கு		16,000	கழிக்க: மதிப்பு குறைப்பு	2,000	18,000
பற்பல கடனீந்தோர்		14,000	கடனாளிகள்	30,000	
			கழிக்க: மதிப்பு குறைப்பு	3,000	27,000
			வங்கி ரொக்கம்		14,000
		1,50,000			1,50,000

எடுத்துக்காட்டு 22

இரமேஷ், இரவி மற்றும் ஆகாஷ் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாப நட்டங்களை தங்கள் முதல் விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 31.12.2017 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

31.12.2017 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல் கணக்குகள்:			பொறி மற்றும் இயந்திரம்	45,000
இரமேஷ்	30,000		சரக்கிருப்பு	22,000
இரவி	30,000		கடனாளிகள்	15,000
ஆகாஷ்	20,000	80,000	வங்கி ரொக்கம்	10,000
பொதுக்காப்பு		8,000	கைரொக்கம்	4,000
கடனீந்தோர்		8,000		
		96,000		96,000

31.3.2018 அன்று ஆகாஷ் இறந்து விட்டார். ஆகாஷின் இறப்பின்போது பின்வரும் சரிக்கட்டுதல்கள் செய்யப்பட்டன.

(i) பொறி மற்றும் இயந்திரம் ₹ 54,000 என மதிப்பிடப்பட்டது.

(ii) சரக்கிருப்பின் மதிப்பில் ₹ 1,000 குறைக்கப்பட வேண்டும்.

(iii) நிறுவனத்தின் நற்பெயர் ₹ 24,000 என மதிப்பிடப்பட்டது.

(iv) கடந்த நிதியாண்டின் இறுதியில் இருந்து கூட்டாளி இறந்த நாள் வரை உள்ள இலாபத்தின் பங்கு, கூட்டாளியின் இறப்பிற்கு முன் உள்ள மூன்று முழு ஆண்டுகளின் சராசரி இலாப அடிப்படையிலானது.

2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான இலாபம் முறையே ₹ 66,000, ₹ 60,000 மற்றும் ₹ 66,000 ஆகும்.

ஆகாஷ் இறப்பிற்குப் பின் உடனடியாக தயாரிக்கப்பட வேண்டிய பேரேட்டுக் கணக்குகள் மற்றும் இருப்புநிலைக் குறிப்பினைத் தயாரிக்கவும்.

12th-Accountancy-Unit-06_TM.indd 212 12/9/2021 11:17:07 PM

தீர்வு

ப **மறுமதிப்பீட்டுக் கணக்கு** **வ**

விவரம்	₹	₹	விவரம்	₹
சரக்கிருப்பு க/கு		1,000	பொறி மற்றும் இயந்திரம்	9,000
மறுமதிப்பீட்டு இலாபம்:				
இரமேஷ் முதல் க/கு (3/8)	3,000			
இரவி முதல் க/கு (3/8)	3,000			
ஆகாஷ் முதல் க/கு (2/8)	2,000	**8,000**		
		9,000		9,000

ப **முதல் கணக்கு** **வ**

விவரம்	இரமேஷ் ₹	இரவி ₹	ஆகாஷ் ₹	விவரம்	இரமேஷ் ₹	இரவி ₹	ஆகாஷ் ₹
ஆகாஷ் முதல் க/கு	3,000	3,000		இருப்பு கீ/கொ	30,000	30,000	20,000
				பொதுக் காப்பு	3,000	3,000	2,000
				மறுமதிப்பீட்டு க/கு (இலாபம்)	3,000	3,000	2,000
ஆகாஷின் நிறைவேற்றாளர் க/கு			**34,000**	இலாப நட்ட அனாமத்து க/கு			4,000
இருப்பு கீ/இ	**33,000**	**33,000**		இரமேஷ் முதல் க/கு			3,000
				இரவி முதல் க/கு			3,000
	36,000	36,000	34,000		36,000	36,000	34,000
				இருப்பு கீ/கொ	33,000	33,000	

2018, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹	₹
முதல் கணக்குகள்			பொறி மற்றும் இயந்திரம்	45,000	
இரமேஷ்	33,000		கூடடுக: மதிப்பேற்றம்	9,000	54,000
இரவி	33,000	66,000	சரக்கிருப்பு	22,000	
ஆகாஷ் நிறைவேற்றாளர் க/கு		34,000	கழிக்க: மதிப்பு குறைப்பு	1,000	21,000
பற்பல கடனீந்தோர்		8,000	கடனாளிகள்		15,000
			வங்கி ரொக்கம்		10,000
			கைரொக்கம்		4,000
			இலாப நட்ட அனாமத்து க/கு		4,000
		1,08,000			1,08,000

12th-Accountancy-Unit-06_TM.indd 213 12/9/2021 11:17:07 PM

குறிப்பு:

(i) இலாபப் பகிர்வு விகிதம்

இலாபப் பகிர்வு விகிதம் = முதல் விகிதம் = 30,000: 30,000: 20,000 அதாவது, 3:3:2

இரமேஷ் மற்றும் இரவியின் இலாபப் பகிர்வு விகிதம் = பழைய இலாபப் பகிர்வு விகிதம்

= 3:3 அதாவது 1:1

(ii) நடப்பாண்டின் இலாபம் கணக்கிடுதல்

$$\text{சராசரி இலாபம்} = \frac{66,000 + 60,000 + 66,000}{3} = \frac{1,92,000}{3} = ₹\ 64,000$$

நடப்பாண்டின் இலாபம்= $64,000 \times 3/12 = ₹\ 16,000$

நடப்பாண்டின் இலாபத்தில் ஆகாஷின் பங்கு (இறந்த நாள் வரைக்கும்) = $16,000 \times 2/8 = ₹\ 4,000$

(iii) நற்பெயரில் ஆகாஷ் பங்கு = $24,000 \times 2/8 = ₹\ 6,000$

இது இரமேஷ் மற்றும் இரவியால் 1:1 என்ற ஆதாய விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும்.

நினைவில் கொள்ள வேண்டியவை

- ஒரு கூட்டாளி விலகும்போது, பழைய கூட்டாண்மை முடிவுக்கு வருகிறது. நிறுவனம் மறுவடிவமைப்பு செய்யப்படுகிறது. மற்ற கூட்டாளிகள் புதிய ஒப்பந்தத்துடன் கூட்டாண்மையில் தொடர்கிறார்கள்.
- விலகும் கூட்டாளி, விலகும் நாள் வரை கூட்டாண்மை நிறுவனத்தின் செயல்களுக்கு பொறுப்பானவராவார்.
- கூட்டாளி விலகலின்போது, கூட்டாளி விலகும் தேதி வரையிலான பகிர்ந்து தரா இலாபம், நட்டம் மற்றும் காப்புகள் அனைத்து கூட்டாளிகளுக்கும் பழைய இலாபப்பகிர்வு விகிதத்தில் பகிந்தளிக்கபடும்.
- கூட்டாளி ஒருவர் கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து விலகும்போது, நிறுவனத்தின் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மறுமதிப்பீடு செய்யப்படுகின்றன. மறுமதிப்பீட்டின் இலாபம் அல்லது நட்டம் அனைத்து கூட்டாளிகளுக்கும் பழைய இலாபப்பகிர்வு விகிதத்தில் பகிர்ந்தளிக்கபடும்.
- கூட்டாளி விலகலின் போது, தொடரும் கூட்டாளிகள் விலகும் கூட்டாளியின் இலாபத்தின் ஒரு பங்கினைக் கூடுதலாகப் பெறுகின்றனர். எனவே, விலகும் கூட்டாளியின் நற்பெயர் பங்கினையும் மதிப்பிட்டு, சரிக்கட்டுதல் செய்து, ஆதாயம் பெறும் கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு கொண்டு செல்ல வேண்டும்.
- ஆதாய விகிதம் என்பது, தொடரும் கூட்டாளிகள் அடையும் இலாபவிகிதம் ஆகும். இதனை, புதிய பங்கிலிருந்து, பழைய பங்கினை கழிப்பதன் மூலம் காணலாம்.
- விலகும் கூட்டாளிக்கு செலுத்த வேண்டிய முழுத் தொதையினையும் உடனடியாக ரொக்கமாக செலுத்தலாம், அல்லது முழுத்தொகையினையும் கூட்டாளியின் கடன் கணக்கிற்கு மாற்றலாம், அல்லது ஒரு பகுதி ரொக்கத் தொகையினை உடனடியாகவும், எஞ்சிய பகுதியினை கூட்டாளியின் கடன் கணக்கிற்கும் மாற்றலாம்.

12th-Accountancy-Unit-06_TM.indd 214 12/9/2021 11:17:08 PM

சுய ஆய்வு வினாக்கள்

I சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. கூட்டாளி ஒருவர் ஜூன் 30 அன்று கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து விலகுகிறார். அவர் கூட்டாண்மை நிறுவனத்தின் அனைத்து செயல்களுக்கும் பொறுப்பாவது
   (அ) நடப்பு கணக்காண்டின் இறுதி வரைக்கும்
   (ஆ) முந்தைய கணக்காண்டின் இறுதி வரைக்கும்
   (இ) கூட்டாளி விலகும் நாள் வரைக்கும்
   (ஈ) கூட்டாளியின் கணக்கைத் தீர்வு செய்யும் வரைக்கும்

2. கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து கூட்டாளி விலகலின்போது பகிர்ந்து தரா இலாபங்கள் மற்றும் நட்டங்கள் கூட்டாளிகளுக்கு இந்த அடிப்படையில் பகிரப்படுகிறது.
   (அ) புதிய இலாபப் பகிர்வு விகிதம்
   (ஆ) பழைய இலாபப் பகிர்வு விகிதம்
   (இ) ஆதாய விகிதம்
   (ஈ) தியாக விகிதம்

3. கூட்டாளி விலகலின் போது பொதுக்காப்பு மாற்றப்படுவது
   (அ) அனைத்து கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு
   (ஆ) மறுமதிப்பீட்டுக் கணக்கிற்கு
   (இ) தொடரும் கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு
   (ஈ) நினைவுக் குறிப்பு மறுமதிப்பீட்டு கணக்கிற்கு



4. மறுமதிப்பீட்டின்போது, பொறுப்புகளின் அதிகரிப்பு தருவது
   (அ) ஆதாயம்
   (ஆ) நட்டம்
   (இ) இலாபம்
   (ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

5. ஒரு கூட்டாளி விலகலின்போது, ஆதாய விகிதத்தின் நிர்ணயம் எதற்கு தேவைப்படுகிறது?
   (அ) மறுமதிப்பீட்டு இலாபம் அல்லது நட்டம் மாற்றப்படுவதற்கு
   (ஆ) பகிர்ந்து தரா இலாபங்கள் மற்றும் நட்டங்களை பகிர்ந்தளிப்பதற்கு
   (இ) நற்பெயரை சரிக்கட்டுவதற்கு
   (ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

6. விலகும் கூட்டாளிக்குரிய தீர்வுத்தொகை உடனடியாக செலுத்தாதபோது, அது மாற்றப்படும் கணக்கு
   (அ) வங்கி க/கு
   (ஆ) விலகும் கூட்டாளியின் முதல் க/கு
   (இ) விலகும் கூட்டாளியின் கடன் க/கு
   (ஈ) பிற கூட்டாளிகளின் முதல் க/கு

7. ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளியாக இருந்த 'A' என்பவர் 2019, மார்ச் 31 அன்று இறந்து விட்டார். அவருக்கு செலுத்த வேண்டிய இறுதித்தொகை ₹ 25,000 உடனடியாகச் செலுத்தப்படவில்லை. அது மாற்றப்பட வேண்டிய கணக்கு
   (அ) A–ன் முதல் கணக்கு
   (ஆ) A–ன் கடன் கணக்கு
   (இ) A –ன் நிறைவேற்றாளர் கணக்கு
   (ஈ) A –ன் நிறைவேற்றாளர்கடன் கணக்கு

12th-Accountancy-Unit-06_TM.indd 215 12/9/2021 11:17:08 PM

8. A, B மற்றும் C என்ற கூட்டாளிகள் 2:2:1 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து வந்தனர். B–ன் விலகலின் போது நிறுவனத்தின் நற்பெயர் ₹ 30,000 என மதிப்பிடப்பட்டது. கூட்டாளி B–க்கு ஈடு செய்வதற்கு A மற்றும் C யின் பங்களிப்பைக் கண்டறியவும்.

(அ) ₹ 20,000 மற்றும் ₹ 10,000

(ஆ) ₹ 8,000 மற்றும் ₹ 4,000

(இ) ₹ 10,000 மற்றும் ₹ 20,000

(ஈ) ₹ 15,000 மற்றும் ₹ 15,000

9. A, B மற்றும் C என்ற கூட்டாளிகள் 4:2:3 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து வந்தனர். தற்போது C விலகுகிறார். A மற்றும் B யின் புதிய இலாபப் பகிர்வு விகிதம்

(அ) 4:3 (ஆ) 3:4 (இ) 2:1 (ஈ) 1:2

10. X, Y மற்றும் Z என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை சமமாகப் பகிர்ந்து வந்தனர். 2019, ஏப்ரல் 1 அன்று X இறந்து விட்டார். 2018 இல் இலாபம் ₹ 36,000 என்ற அடிப்படையில் 2019 ஆம் ஆண்டுக்குரிய இலாபத்தில் X ன் பங்கினைக் கண்டறியவும்.

(அ) ₹ 1,000 (ஆ) ₹ 3,000 (இ) ₹ 12,000 (ஈ) ₹ 36,000

விடை

1 (இ)	**2(ஆ)**	**3(அ)**	**4(ஆ)**	**5 (இ)**	**6(இ)**	**7(ஈ)**	**8(ஆ)**	**9(இ)**	**10(ஆ)**

II மிகக் குறுகிய வினாக்கள்

1. கூட்டாளி விலகல் என்றால் என்ன?
2. ஆதாய விகிதம் என்றால் என்ன?
3. ஆதாய விகிதம் கணக்கிடுவதன் நோக்கம் என்ன?
4. இறந்த கூட்டாளிக்கு செலுத்த வேண்டிய தொகையினை அவருடைய நிறைவேற்றாளர் கணக்கிற்கு மாற்றுவதற்குரிய குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

III குறுகிய வினாக்கள்

1. கூட்டாளி விலகலின்போது செய்யப்பட வேண்டிய சரிக்கட்டுதல்களை பட்டியலிடவும்.
2. தியாக விகிதத்திற்கும் ஆதாய விகிதத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?
3. வெளிச்செல்லும் கூட்டாளிக்குச் செலுத்தவேண்டிய தொகையினை எவ்வாறு தீர்வு செய்யலாம்?

IV பயிற்சி வினாக்கள்

பகிர்ந்து தரா இலாபங்கள், காப்புகள் மற்றும் நட்டங்களின் பகிர்வு

1. தீனா, சூர்யா மற்றும் ஜானகி என்ற கூட்டாளிகள் 5:3:2 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 31.3.2018 அன்று தீனா கூட்டாண்மையை விட்டு விலகினார். அவருடைய விலகலின் போது நிறுவனத்தின் கணக்கேடுகள் ₹ 50,000 காப்பு நிதியினைக் காட்டியது. காப்பு நிதியினை மாற்றுவதற்கு தேவையான குறிப்பேட்டுப் பதிவினை தரவும்.

(விடை: காப்பு நிதி: தீனா: ₹ 25,000 (வ); சூர்யா: ₹ 15,000 (வ); ஜானகி: ₹ 10,000 (வ))

12th-Accountancy-Unit-06_TM.indd 216 12/9/2021 11:17:08 PM

2. ரோஸி, ரதி மற்றும் இராணி என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபங்கள் மற்றும் நட்டங்களை சமமாகப் பகிர்ந்து வந்தனர். 1.1.2018 அன்று, ரதி கூட்டாண்மையிலிருந்து விலகினார். அந்நாளைய இருப்புநிலைக்குறிப்பின் சொத்துகள் பக்கம் ₹ 45,000 பகிர்ந்துத்தரா நட்டங்கள் இருப்பைக் காட்டியது. பகிர்ந்து தரா நட்டத்தை பகிர்ந்தளிப்பதற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

(விடை: ரோஸி: ₹ 15,000(ப); ரதி: ₹ 15,000 (ப.); ராணி: ₹ 15,000 (ப))

3. ஆகாஷ், முகேஷ் மற்றும் சஞ்சய் என்ற கூட்டாளிகள் 3:2:1 என்ற விகிதத்தில் இலாபங்கள் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 2017, மார்ச் 31 அன்று அவர்களுடைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல் கணக்குகள்:			கட்டடம்	1,10,000
ஆகாஷ்	40,000		வாகனம்	30,000
முகேஷ்	60,000		சரக்கிருப்பு	26,000
சஞ்சய்	30,000	1,30,000	கடனாளிகள்	25,000
இலாபநட்டப் பகிர்வு க/கு		12,000	கைரொக்கம்	15,000
பொதுக்காப்பு		24,000		
தொழிலாளர் ஈட்டு நிதி		18,000		
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு		22,000		
		2,06,000		2,06,000

பகிர்ந்து தரா இலாபத்தினைப் பதிவு செய்யும் குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

(விடை: ஆகாஷ் க/கு: ₹ 27,000(வ); முகேஷ் க/கு: ₹ 18,000 (வ); சஞ்சய் க/கு: ₹ 9,000 (வ))

சொத்துகள் மற்றும் பொறுப்புகளை மறுமதிப்பீடு செய்தல்

4. ரோஜா, நீலா மற்றும் கனகா என்ற கூட்டாளிகள் 4:3:3 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 2017 ஏப்ரல் 1 அன்று ரோஜா என்பவர் கூட்டாண்மையிலிருந்து விலகினார். அவருடைய விலகலின்போது கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்கள் செய்வதற்கு ஒப்புக் கொள்ளப்பட்டன.

(i) கட்டடத்தின் மதிப்பில் ₹ 30,000 அதிகரிக்க வேண்டும்.

(ii) சரக்கிருப்பு மதிப்பில் ₹ 5,000 மற்றும் அறைகலன் மதிப்பில் ₹ 12,000 குறைக்க வேண்டும்.

(iiii) கொடுபடா பொறுப்புகளுக்கு ₹ 1,000 ஒதுக்கு உருவாக்க வேண்டும்.

குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கினைத் தயாரிக்கவும்.

(விடை: மறுமதிப்பீட்டு இலாபம் : ₹ 12,000)

5. வினோத், கார்த்தி மற்றும் பிரணவ் என்ற கூட்டாளிகள் 2:2:1 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 2018, ஏப்ரல் 1 அன்று பிரணவ் என்பவர் கூட்டாண்மையிலிருந்து விலகினார். அவருடைய விலகலின்போது கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்கள் செய்யப்பட வேண்டும்.

(i) நிலம் மற்றும் கட்டடத்தின் மதிப்பை ₹ 18,000 அதிகரிக்க வேண்டும்.

(ii) இயந்திரத்தின் மதிப்பை ₹ 15,000 குறைக்க வேண்டும்.

(iii) கொடுபட வேண்டியச் செலவுகளுக்கு ₹ 8,000 ஒதுக்கு உருவாக்க வேண்டும்.

குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கினைத் தயாரிக்கவும்.

(விடை: மறுமதிப்பீட்டு நட்டம் : ₹ 5,000)

12th-Accountancy-Unit-06_TM.indd 217 12/9/2021 11:17:08 PM

6. சந்துரு, விஷால் மற்றும் ரமணன் என்ற கூட்டாளிகள் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் இலாபம் மற்றும் நட்டங்களை சமமாகப் பகிர்ந்து வந்தனர். 2018, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

பொறுப்புகள்		₹	சொத்துகள்		₹
முதல் கணக்குகள்:			அறைகலன்		60,000
சந்துரு	60,000		இயந்திரம்		1,20,000
விஷால்	70,000		பற்பல கடனாளிகள்	33,000	
ரமணன்	70,000	2,00,000	கழிக்க: ஐயக்கடன்		
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு		80,000	ஒதுக்கு	3,000	30,000
			பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு		50,000
			வங்கி ரொக்கம்		20,000
		2,80,000			2,80,000

ரமணன் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு 2019, மார்ச் 31 அன்று கூட்டாண்மையிலிருந்து விலகினார்.

(i) இயந்திரம் ₹ 1,50,000 என மதிப்பிடப்பட்டது.
(ii) அறைகலன் மதிப்பில் ₹ 10,000 குறைக்கப்பட்டது.
(iii) ஐயக்கடன் ஒதுக்கு ₹ 5,000 ஆக அதிகரிக்கப்பட வேண்டும்.
(iv) ஏடுகளில் பதியப்பெறாத முதலீடுகள் ₹ 30,000 தற்போது பதியப்பட வேண்டும்.

தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கு தயார் செய்யவும்.

(விடை: மறுமதிப்பீட்டு இலாபம் : ₹ 48, 000;

புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் ஆதாய விகிதம்

7. கயல், மாலா மற்றும் நீலா என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபங்களை 2:2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். கயல் என்பவர் கூட்டாண்மையை விட்டு விலகுகிறார். மாலா மற்றும் நீலாவுக்கும் இடையே உள்ள புதிய இலாபப் பகிர்வு விகிதம் 3:2. ஆதாய விகிதத்தைக் கணக்கிடவும்.

(விடை: ஆதாய விகிதம்: 1 : 1)

8. சுனில், சுமதி மற்றும் சுந்தரி என்ற கூட்டாளிகள், தங்கள் இலாபங்களை 3:3:4 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். சுந்தரி என்பவர் கூட்டாண்மையை விட்டு விலகுகிறார் மற்றும் அவருடைய பங்கு முழுவதையும் சுனில் எடுத்துக் கொள்கிறார். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் ஆதாய விகிதத்தைக் கணக்கிடவும்.

(விடை: ஆதாய விகிதம்: 1 : 0; புதிய இலாபப் பகிர்வு விகிதம்: 7:3)

9. ராமு, சோமு மற்றும் கோபு என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபங்களை 3:5:7 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். கோபு என்பவர் கூட்டாண்மையை விட்டு விலகுகிறார் மற்றும் அவருடைய பங்கை 3:1 எனும் விகிதத்தில் ராமுவும் சோமுவும் எடுத்துக் கொள்கின்றனர். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் ஆதாய விகிதத்தைக் கணக்கிடவும்.

(விடை: ஆதாய விகிதம் : 3:1; புதிய இலாபப் பகிர்வு விகிதம்: 11:9)

10. நவீன், ரவி மற்றும் குமார் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபங்களை முறையே 1/2, 1/4 மற்றும் 1/4 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். குமார் என்பவர் கூட்டாண்மையை விட்டு விலகுகிறார் மற்றும் அவருடைய பங்கை நவீன் மற்றும் ரவி சமமாக எடுத்துக் கொண்டார். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் ஆதாய விகிதத்தைக் கணக்கிடவும்.

(விடை: புதிய இலாபப் பகிர்வு விகிதம் 5:3; ஆதாய விகிதம் 1:1)

12th-Accountancy-Unit-06_TM.indd 218 12/9/2021 11:17:08 PM

11. மணி, கனி மற்றும் சோனி என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபங்களை 4:5:6 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். மணி என்பவர் கூட்டாண்மையை விட்டு விலகுகிறார். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் ஆதாய விகிதத்தைக் கணக்கிடவும்.

(விடை: புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் ஆதாய விகிதம் 5:6)

நற்பெயருக்கான சரிக்கட்டுதல்

12. ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் ராஜன், சுமன் மற்றும் ஜெகன் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 4:3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். சுமன் என்பவர் கூட்டாண்மையை விட்டு விலகினார். அவர் விலகும் நாளன்று நற்பெயர் ₹ 45,000 என மதிப்பிடப்பட்டது. மாறுபடும் முதல் முறை எனக்கொண்டு, நற்பெயருக்கு தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(விடை: நற்பெயரில் சுமனின் பங்கு : ₹ 15,000; ராஜனின் முதல்: ₹ 10,000 (ப); ஜெகனின் முதல்: ₹ 5,000 (ப))

13. ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் பாலு, சந்துரு மற்றும் நிர்மல் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 5:3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2018, மார்ச் 31 அன்று நிர்மல் என்பவர் கூட்டாண்மையை விட்டு விலகுகிறார். நிர்மல் விலகும் நாளன்று, நிறுமத்தின் ஏடுகளில் இருந்த நற்பெயரின் மதிப்பு ₹ 60,000. மாறுபடும் முதல் முறை எனக்கொண்டு, தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளை கீழ்கண்ட நிலைகளில் தரவும்.

(அ) ஏற்கனவே இருக்கின்ற நற்பெயர் முழுவதையும் போக்கெழுதுவதற்கு கூட்டாளிகள் தீர்மானித்தால்

(ஆ) ஏற்கனவே இருக்கின்ற நற்பெயரில் பாதியை போக்கெழுதுவதற்கு கூட்டாளிகள் தீர்மானித்தால்

(விடை: (அ) பாலுவின் முதல்: ₹ 30,000 (ப); சந்துருவின் முதல்: ₹ 18,000 (ப); நிர்மலின் முதல்: ₹ 12,000 (ப)

(ஆ) பாலுவின் முதல்: ₹ 15,000 (ப); சந்துருவின் முதல்: ₹ 9,000 (ப); நிர்மலின் முதல்: ₹ 6,000 (ப))

கூட்டாளியின் விலகல் நாள் வரையிலான நடப்பாண்டின் இலாபம் அல்லது நட்டத்திற்கான சரிக்கட்டுதல்கள்

14. இராணி, ஜெயா மற்றும் ரதி என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 2:2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 31.3.2018 அன்று ரதி என்பவர் கூட்டாண்மையை விட்டு விலகினார். முந்தைய ஆண்டுகளின் இலாபம் பின்வருமாறு:

2014: ₹ 10,000; 2015: ₹ 20,000; 2016: ₹ 18,000 மற்றும் 2017: ₹ 32,000

2018 ஆம் ஆண்டில் கூட்டாளி விலகல் நாள் வரையிலான இலாபத்தில் ரதிக்குரிய இலாபப் பங்கினை கீழ்க்கண்ட நிலைகளில் தயாரிக்கவும்.

(i) இலாபம் முந்தைய ஆண்டுகளின் இலாபத்தின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுவதாக இருந்தால்

(ii) இலாபம் கடந்த நான்கு ஆண்டுகளின் சராசரி இலாபத்தின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப் படுவதாக இருந்தால்

மேலும் மாறுபடும் முதல் முறை எனக்கொண்டு, தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்.

(விடை: (அ) ரதியின் இலாபப் பங்கு: ₹ 1,600); (ஆ) ரதியின் இலாபப் பங்கு : ₹ 1,000)

விலகும் கூட்டாளியின் கணக்கைத் தீர்த்தல்

15. கவின், மதன் மற்றும் ரஞ்சித் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை முறையே 4:3:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2018, டிசம்பர் 31 அன்று கவின் கூட்டாண்மையை விட்டு விலகுகிறார். விலகலுக்குப்பின் தேவையான சரிக்கட்டுதல்களைச் செய்த பிறகு அவருடைய முதல் கணக்கு ₹ 1,50,000 வரவிருப்பைக் காட்டியது. பின்வரும் நிலைகளில் பதிய வேண்டிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(i) விலகும் கூட்டாளிக்குச் செலுத்த வேண்டிய தொகை உடனடியாக காசோலை மூலம் செலுத்தப் பட்டது.

(ii) விலகும் கூட்டாளிக்குச் செலுத்த வேண்டிய தொகை உடனடியாகச் செலுத்தப்படவில்லை.

(iii) ₹1,00,000 உடனடியாக காசோலை மூலம் செலுத்தப்பட்டது, மீதத்தொகை இன்னும் செலுத்தப்பட உள்ளது.

(விடை: (ஆ) கவின் கடன் க/கு : ₹ 1,50,000; (இ) கவின் கடன் க/கு : ₹ 50,000)

12th-Accountancy-Unit-06_TM.indd 219 12/9/2021 11:17:08 PM

16. ஒரு கூட்டண்மை நிறுவனத்தில் மஞ்சு, சாரு மற்றும் லாவண்யா என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 5:3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2018, மார்ச் 31 ஆம் நாளைய அவர்களுடைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல் கணக்குகள்:			கட்டடம்	1,00,000
மஞ்சு	70,000		அறைகலன்	80,000
சாரு	70,000		சரக்கிருப்பு	60,000
லாவண்யா	70,000	2,10,000	கடனாளிகள்	40,000
பற்பல கடனீந்தோர்		40,000	கைரொக்கம்	20,000
இலாப நட்டக் கணக்கு		50,000		
		3,00,000		3,00,000

பின்வரும் சரிக்கட்டுதல்களுக்கு உட்பட்டு மஞ்சு என்பவர் 31.03.2018 அன்று கூட்டாண்மையிலிருந்து விலகினார்.

(i) சரக்கிருப்பின் மதிப்பில் ₹ 10,000 குறைக்க வேண்டும்.
(ii) ஐயக்கடன் ஒதுக்கு ₹ 3,000 உருவாக்க வேண்டும்.
(iii) கட்டடத்தில் ₹ 28,000 மதிப்பேற்றம் செய்ய வேண்டும்.
(iv) மஞ்சுவுக்கு செலுத்த வேண்டிய இறுதித் தொகை இன்னும் செலுத்தப்படவில்லை.

மறுமதிப்பீட்டுக் கணக்கு மற்றும் விலகலுக்குப் பின் கூட்டாளிகளின் முதல் கணக்கினைத் தயார் செய்யவும்.

(விடை: மறுமதிப்பீட்டு இலாபம்: ₹15,000; மஞ்சு கடன் கணக்கு : ₹1,02,500(வ), முதல் கணக்கு: சாரு: ₹ 89,500(வ.); லாவண்யா ₹ 83,000(வ))

விரிவான கணக்குகள்

17. ஒரு கூட்டண்மை நிறுவனத்தில் கண்ணன், ரஹிம் மற்றும் ஜான் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 5:3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2017, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல் கணக்குகள்:			கட்டடம்	90,000
கண்ணன்	1,00,000		இயந்திரம்	60,000
ரஹிம்	80,000		கடனாளிகள்	30,000
ஜான்	40,000	2,20,000	சரக்கிருப்பு	20,000
			வங்கி ரொக்கம்	50,000
தொழிலாளர் ஈட்டு நிதி		30,000	இலாபநட்டக் க/கு (நட்டம்)	20,000
கடனீந்தோர்		20,000		
		2.70,000		2,70,000

ஜான் 2018, ஜனவரி 1 அன்று பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு கூட்டாண்மையிலிருந்து விலகினார்.

(i) கட்டடத்தின் மீது 10% மதிப்பேற்றம் செய்யப்பட்டது.
(ii) சரக்கிருப்பு மதிப்பு 5% குறைக்க வேண்டும்.
(iii) ₹ 1,000 வாராக்கடன் ஒதுக்கு உருவாக்க வேண்டும்.
(iv) பதிவுறா பொறுப்பு ₹ 8,000 என கண்டறியப்பட்டது.
(v) விலகும் கூட்டாளிக்குரிய தொகை உடனடியாகச் செலுத்தப்பட்டது.

12th-Accountancy-Unit-06_TM.indd 220 12/9/2021 11:17:08 PM

மறுமதிப்பீட்டுக் கணக்கு, கூட்டாளிகள் முதல் கணக்கு மற்றும் விலகலுக்குப் பின் நிறுவனத்தின் இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

(விடை: மறுமதிப்பீட்டு நட்டம்: ₹ 1,000; முதல் கணக்கு: கண்ணன் : ₹ 1,04,500, ரஹிம்: ₹ 82,700, ஜானுக்குச் செலுத்திய தொகை ₹ 41,800; இருப்புநிலைக் குறிப்பு மொத்தம் : ₹ 2,15,200)

18. ஒரு கூட்டாண்மை நிறுவனத்தில் சரண், அருண் மற்றும் கரண் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 4:3:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2016, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹	₹
முதல் கணக்குகள்:			கட்டடம்		60,000
சரண்	60,000		இயந்திரம்		40,000
அருண்	50,000		முதலீடுகள்		20,000
கரண்	40,000	1,50,000	சரக்கிருப்பு		12,000
பொதுக்காப்பு		15,000	கடனாளிகள்	25,000	
கடனீந்தோர்		35,000	கழிக்க: வாராக்கடன் ஒதுக்கு	1000	24,000
			வங்கி ரொக்கம்		44,000
		2,00,000			2,00,000

1.1.2017 அன்று கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு கரண் விலகினார்.

(i) நிறுவனத்தின் நற்பெயர் ₹ 21,000 என மதிப்பிடப்பட்டது.
(ii) இயந்திரம் மீது 10% மதிப்பேற்றம் செய்ய வேண்டும்.
(iii) கட்டடம் ₹ 80,000 ஆக மதிப்பிட வேண்டும்.
(iv) வாராக்கடன் ஒதுக்கு ₹ 2,000 ஆக அதிகரிக்க வேண்டும்.
(v) சரக்கிருப்பு மதிப்பில் ₹ 2,000 குறைக்க வேண்டும்.
(vi) கரணுக்கு செலுத்த வேண்டிய தொகை உடனடியாகச் செலுத்தப்படவில்லை.

தேவையான பேரேட்டுக் கணக்குகளை தயார் செய்யவும் மற்றும் விலகலுக்குப் பின் உள்ள கூட்டாண்மை நிறுவனத்தின் இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்யவும்.

(விடை: மறுமதிப்பீட்டு இலாபம்: ₹ 21,000; முதல் க/கு: சரண்: ₹ 70,800; அருண்: ₹ 58,100; கரண் கடன் க/கு: ₹ 57,100; இருப்புநிலைக் குறிப்பு : ₹ 2,21,000)

19. ஒரு கூட்டண்மை நிறுவனத்தில் இராஜேஷ், சதீஷ் மற்றும் மதன் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 3:2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 31.3.2017, ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹	₹
முதல் கணக்குகள் :			வளாகம்		4,00,000
இராஜேஷ்	4,00,000		இயந்திரம்		4,20,000
சதீஷ்	3,00,000		கடனாளிகள்		1,60,000
மதன்	2,50,000	9,50,000	சரக்கிருப்பு		3,00,000
பொதுக்காப்பு		1,20,000	வங்கி ரொக்கம்		20,000
கடனீந்தோர்		50,000			
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு		1,80,000			
		13,00,000			13,00,000

12th-Accountancy-Unit-06_TM.indd 221 12/9/2021 11:17:09 PM

கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு 2017, மார்ச் 31 அன்று மதன் விலகினார்.

(i) இராஜேஷ் மற்றும் சதீஷ் 3:2 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களை பகிர்ந்து கொள்வர்.

(ii) சொத்துகள் பின்வருமாறு மறுமதிப்பீடு செய்யப்பட்டது: இயந்திரம் ₹ 3,90,000, சரக்கிருப்பு ₹ 2,90,000, கடனாளிகள் ₹ 1,52,000.

(iii) நிறுவனத்தின் நற்பெயர் ₹ 1,20,000 என மதிப்பிடப்பட்டது.

(iv) மதனுக்கு செலுத்த வேண்டிய இறுதித் தொகை உடனடியாக செலுத்தப்படவில்லை.

தேவையான பேரேட்டுக் கணக்குகள் மற்றும் மதனின் விலகலுக்குப் பின் உள்ள இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்யவும்.

(விடை: மறுமதிப்பீட்டு நட்டம்: ₹ 48,000; மதன் கடன் க/கு: ₹ 2,82,000;
இராஜேஷ் முதல் க/கு: ₹ 4,24,000; சுரேஷ் முதல் க/கு: ₹ 3,16,000;
இருப்புநிலைக் குறிப்பு மொத்தம் : ₹ 12,52,000)

கூட்டாளியின் இறப்பு

20. ஜனனி, ஜானகி, மற்றும் ஜமுனா என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபங்கள் மற்றும் நட்டங்களை முறையே 3:3:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2017, டிசம்பர் 31 அன்று ஜானகி இறந்து விட்டார். அவருக்குச் செலுத்த வேண்டிய தொகை ₹ 1,40,000 என வரவிருப்பைக் காட்டியது. கீழ்க்கண்ட நிலைகளில் குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(i) செலுத்த வேண்டிய தொகை காசோலை மூலம் உடனடியாகச் செலுத்தப் பட்டது.

(ii) செலுத்த வேண்டிய தொகை உடனடியாகச் செலுத்தப்படவில்லை.

(iii) உடனடியாக ₹ 75,000 காசோலை மூலம் செலுத்தப்பட்டது, மீதித்தொகை இன்னும் செலுத்தப்பட வேண்டி உள்ளது.

21. வர்ஷா, சாந்தி மற்றும் மாதுரி என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை முறையே 5:4:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2017, டிசம்பர் 31 அன்றைய அவர்களுடைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

2017, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல் கணக்குகள்:			வளாகம்	1,20,000
வர்ஷா	80,000		சரக்கிருப்பு	40,000
சாந்தி	60,000		கடனாளிகள்	50,000
மாதுரி	20,000	1,60,000	வங்கி ரொக்கம்	18,000
பொதுக்காப்பு		48,000	இலாப நட்டக் க/கு	12,000
பற்பல கடனீந்தோர்		32,000	(நட்டம்)	
		2,40,000		2,40,000

1.1.2018 அன்று மாதுரி இறந்து விட்டார். அவரின் இறப்பின் போது பின்வரும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

(i) சரக்கிருப்பின் மதிப்பில் ₹ 5,000 குறைக்கப்பட வேண்டும்.

(ii) வளாகம் மீது 20% மதிப்பேற்றம் செய்யப்பட வேண்டும்.

12th-Accountancy-Unit-06_TM.indd 222 12/9/2021 11:17:09 PM

(iii) வாராக்கடன் ஒதுக்கு ₹ 4,000 உருவாக்க வேண்டும்.

(iv) மாதுரிக்குச் செலுத்த வேண்டியத் தொகை இன்னும் செலுத்தப்படவில்லை.

கூட்டாளியின் இறப்பிற்கு பின் நிறுவனத்தின் மறுமதிப்பீட்டுக் கணக்கு, கூட்டாளிகள் முதல் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

(விடை: மறுமதிப்பீட்டு இலாபம் ₹ 15,000; வர்ஷாவின் முதல் க/கு ₹ 1,01,250; சாந்தியின் முதல் க/கு ₹ 77,000; மாதுரியின் நிறைவேற்றாளர் க/கு ₹ 32,750; இருப்புநிலைக் குறிப்பு மொத்தம் ₹ 2,43,000)

22. விஜயன், சுதன் மற்றும் சுமன் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை தங்கள் முதல் விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். அவர்களுடைய 31.12.2018 அன்றைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு.

31.12.2018 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

பொறுப்புகள்	₹	₹	சொத்துகள்	₹
முதல் கணக்குகள்:			கட்டடம்	80,000
விஜயன்	70,000		சரக்கிருப்பு	45,000
சுதன்	50,000		கடனாளிகள்	25,000
சுமன்	30,000	1,50,000	வங்கி ரொக்கம்	20,000
பொதுக்காப்பு		18,000	கைரொக்கம்	15,000
கடனீந்தோர்		17,000		
		1,85,000		1,85,000

சுமன் 31.3.2019 அன்று இறந்து விட்டார். சுமனின் இறப்பின் போது, பின்வரும் சரிக்கட்டுதல்கள் செய்யப்பட்டன.

(i) கட்டடம் ₹ 1,00,000 என மதிப்பிடப்பட வேண்டும்.

(ii) சரக்கிருப்பின் மதிப்பு ₹ 5,000 குறைக்க வேண்டும்.

(iii) நிறுவனத்தின் நற்பெயர் ₹ 36,000 என மதிப்பிடப் பட்டது.

(iv) கடந்த நிதியாண்டின் இறுதியில் இருந்து கூட்டாளி இறந்த நாள் வரை உள்ள இலாபத்தின் பங்கு, கூட்டாளியின் இறப்பிற்கு முன் உள்ள மூன்று முழு ஆண்டுகளின் சராசரி இலாப அடிப்படையிலானது.

2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான இலாபங்கள் முறையே ₹ 40,000, ₹ 50,000 மற்றும் ₹ 30,000 ஆகும்.

சுமனின் இறப்பிற்குப் பின் உடனடியாக தயாரிக்கப்பட வேண்டிய பேரேட்டுக் கணக்குகள் மற்றும் இருப்புநிலைக் குறிப்பினைத் தயாரிக்கவும்.

(விடை: மறுமதிப்பீட்டு இலாபம் ₹ 15,000; விஜயன் முதல் க/கு: ₹ 81,200; சுதன் முதல் க/கு: ₹ 58,000; சுமனின் நிறைவேற்றாளர் க/கு: ₹ 45,800; இருப்புநிலைக் குறிப்பு மொத்தம் ₹ 2,02,000)

12th-Accountancy-Unit-06_TM.indd 223 12/9/2021 11:17:09 PM

நிகழ்வாய்வு

அருண், பாலு மற்றும் சரண் ஆகியோர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். சில ஆண்டுகளுக்குப்பிறகு, சரண் தனது உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் கூட்டாண்மையிலிருந்து விலக விரும்பினார். மற்ற இரு கூட்டாளிகளும் இதனை ஏற்றுக்கொண்டனர். காப்புகள், சொத்துகள் மற்றும் பொறுப்புகளை மறுமதிப்பீடு செய்தல் போன்ற சரிக்கட்டுதல்கள் செய்த பிறகு சரணின் முதல் கணக்கு ₹ 1,40,000 இருப்பைக் காட்டியது. ஆனால், அருண் மற்றும் பாலு சரணுக்கு ₹ 1,65,000 செலுத்தினர். அவருடைய விலகலுக்குப் பிறகு நிறுவனத்தின் ஒரு வாடிக்கையாளர், நிறுவனம் வழங்கிய மோசமான சேவைகளுக்காக நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தொடர்ந்தார்.

பின்வருவன குறித்து விவாதிக்கவும்:

1. உடல்நலக் குறைவு தவிர வேறு எந்தக் காரணங்கள் விலகலுக்கான காரணங்களாக இருக்க முடியும்?
2. சரண் நிறுவனத்தை விட்டு விலகும்போது கணக்குகளில் என்ன சரிக்கட்டுதல்கள் செய்யப்பட வேண்டும்.
3. சரணுக்கு ₹ 1,40,000 க்குப் பதிலாக ₹ 1,65,000 செலுத்தியதற்கான காரணம் என்னவாக இருந்திருக்க முடியும்?
4. சரணுக்குச் செலுத்த வேண்டிய தொகையினைச் செலுத்தி கணக்கைத் தீர்க்கப் போதுமான தொகை இல்லையெனில் என்ன செய்ய முடியும்?
5. வாடிக்கையாளர் தொடுத்த வழக்கின் மீது சரணுக்கு பொறுப்பேதுமுண்டா?

தொடர் ஆய்விற்கு

ஒரு கூட்டாளியின் இறப்பிற்குப் பின் ஏனைய கூட்டாளிகள் கூட்டாண்மை நிறுவனத்தை கலைக்க ஒப்புக் கொண்டால், என்ன செய்ய வேண்டும்?

பார்வை

1. M C Shukla, T S Grewal and S C Gupta, Advanced Accounts, 19th ed., 2017, S.Chand Publishing, New Delhi
2. R L Gupta and V K Gupta, Financial Accounting, 11th ed., 2014, Sultan Chand and Sons, New Delhi
3. S P Jain and K L Narang, Advanced Accountancy Vol – I, 2016, Kalyani Publishers, New Delhi
4. Dalston L Cecil and Jenitra L Merwin, Financial Accounting, 3rd ed., 2017, Learntech Press, Trichy
5. Fundamentals of Accounting, 2017, The Institute of Chartered Accountants of India, New Delhi.

12th-Accountancy-Unit-06_TM.indd 224 12/9/2021 11:17:09 PM

அலகு 7

நிறுமக் கணக்குகள்

பொருளடக்கம்

7.1 அறிமுகம்

7.2 நிறுமத்தின் பொருள் மற்றும் வரைவிலக்கணம்

7.3 நிறுமத்தின் பண்புகள்

7.4 பங்குகளின் பொருள் மற்றும் வகைகள்

7.5 பங்கு முதலின் பிரிவுகள்

7.6 நேர்மைப் பங்குகள் வெளியீடு

7.7 நேர்மைப் பங்கு முதல் வெளியீட்டிற்கான வழிமுறைகள்

7.8 ரொக்கத்திற்கு தவணை முறையில் பங்கு வெளியீடு

7.9 மொத்தமாக ரொக்கத்திற்கு பங்கு வெளியீடு

7.10 ரொக்கமில்லா மறுபயனுக்காக பங்குகளை வெளியிடுதல்

நினைவுகூற வேண்டிய கருத்துகள்

நிறுமக் கணக்குகள் பற்றிக் கற்பதற்கு முன் பின்வரும் கருத்துகளை நினைவில் கொள்ள வேண்டும்:

- கூட்டுப் பங்கு நிறுமம்
- இரட்டைப்பதிவு முறை

கற்றல் நோக்கங்கள்

மாணவர்கள்

- பங்குகள் வெளியீடு, ஒறுப்பிழப்பு, மற்றும் மறுவெளியீடு செய்வதிலுள்ள சட்ட விதிமுறைகள் குறித்துப் புரிந்து கொள்ளுதல்.
- பங்குகள் வெளியீடு, ஒறுப்பிழப்பு மற்றும் பங்குகள் மறுவெளியீட்டிலுள்ள கணக்கியல் செயல்முறைகள் பற்றிப் புரிந்து கொள்ளுதல்.

தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய சொற்கள்

- முன்னுரிமைப் பங்குகள்
- நேர்மைப் பங்குகள்
- மிகை ஒப்பம்
- விகித அளவு அடிப்படை ஒதுக்கீடு
- அழைப்பு முன்பணம்
- அழைப்பு நிலுவை

4KZNL

12th-Accountancy-Unit-07_TM.indd 225 12/9/2021 11:19:11 PM

7.1 அறிமுகம்



மாணவர் செயல்பாடு 7.1

பின் வருவனவற்றை படியுங்கள். அதில், பொதுவானதாக எதைக் கண்டறிந்தீர்கள்? அவைகள், என்னவென்று உங்களுக்கு புரிகிறது?

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம். (டி.என்.பி.எல்)

பாரத மிகு மின் நிறுவனம் (பி.எச்.இ.எல்.)

இன்ஃபோசிஸ் வரையறு நிறுமம்

இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன்

மனித தேவைகள் மற்றும் விருப்பங்கள் எப்போதும் வளர்ந்து கொண்டிருக்கின்றன. அவற்றை எதிர்கொள்ள, உற்பத்தியினை பெரிய அளவில் மேற்கொள்ள வேண்டும். இதற்கு, பேரளவு முதல், நவீன தொழில் நுட்பம் மற்றும் மேலாண்மைத் திறன் ஆகியவை தொழில் நிறுவனங்களுக்கு தேவைப்படுகின்றன. தனிவணிகர் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்கள், தாங்களாகத் தங்கள் முதலீட்டினை பெரிய அளவில் உயர்த்திக் கொள்ள முடியாது. இக்குறையிலிருந்து மீள்வதற்கு "நிறுமம்" என்ற அமைப்பு உருவானது. நிறுமங்களின், முதல் பல்வேறு சிறிய அலகுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். அதனை 'பங்குகள்' என்று அழைப்பர். நிறுமத்திற்கு தேவையான முதல், பொதுமக்களிடம் பங்குகள் வாங்குமாறும் மற்றும் வணிகத்தில் முதலீடு செய்யுமாறும் அழைப்பதன் மூலம் உயர்த்திக் கொள்ள முடியும். இந்த முதலீட்டாளர்கள் நிறுமத்தின் பங்குதாரர்கள் அல்லது உறுப்பினர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். பங்கு வெளியீட்டின் மூலம் பெறப்படும் பணம் பங்குமுதல் என்று அழைக்கப்படுகிறது. பங்குதாரர்களுக்கான இலாபம் ஈவுத்தொகையாக பகிர்ந்தளிக்கப்படுகிறது.

நிறுமத்தின் அனைத்து உறுப்பினர்களும், நிர்வாகத்தில் பங்கேற்பது நடைமுறை சாத்தியமாகாது. எனவே, அவர்கள் ஆண்டு பொதுக்கூட்டத்தில், வணிக நிர்வாகத்தில் பங்குபெறும் இயக்குனர் அவையை நியமிக்கிறார்கள். பங்குதாரர்களின் பொறுப்பு பங்குகளின் முக மதிப்பளவிற்கு இருக்கும். ஒரு வரையறுக்கப்பட்ட நிறுமம் மற்ற வணிக அமைப்புகளிலிருந்து வேறுபட்டது. இது ஒரு தனிச் சட்டப்பூர்வமான அமைப்பாகும்.

7.2 நிறுமத்தின் பொருள் மற்றும் வரையறை

நிறுமம் என்பது தன்னார்வமாக செயல்படும் நபர்களின் சங்கம். இது ஒரு தனிச் சட்டப்பூர்வமான நிறுவனமாகும். இது நீண்டகாலம் நிலைத்திருக்கக் கூடியது மற்றும் உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.

லின்ட்லே பிரபு அவர்களின் கூற்றுப்படி, "பொதுவான பங்கிற்காக பணம் அல்லது பண மதிப்பினை வழங்கி அதனை சில தொழில் அல்லது வணிகத்தில் பயன்படுத்தி, அதிலிருந்து பெறும் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து கொள்ளும் பல நபர்களின் கூட்டமைப்பே நிறுமம் ஆகும். பங்களிப்பாக பெறக்கூடிய பொதுப்பங்குகளின் பண மதிப்பே நிறுமத்தின் மூலதனம் ஆகும். அம்மூலதனத்திற்கு பங்களிப்புச் செய்யும் நபர்கள் அல்லது அந்நிறுமத்தை உருவாக்குபவர்கள் அல்லது அந்நிறுமம் யாருக்குச் சொந்தமானதோ அவர்கள் நிறுமத்தின் உறுப்பினர்கள் ஆவர். ஒவ்வொரு உறுப்பினருக்கும் உரிய மூலதனத்தின் பகுதி அவருக்கான பங்கு ஆகும்".

7.3 நிறுமத்தின் பண்புகள்

நிறுமத்தின் பண்புகள் பின்வருமாறு:

(அ) **தன்னிச்சையான அமைப்பு:** ஒரு நிறுமம் என்பது தன்னார்வ நபர்களின் சங்கம் ஆகும். எந்த ஒரு சட்டமும் எவரையும் நிறுமத்தைத் தோற்றுவிக்க கட்டாயப்படுத்த முடியாது.

12th-Accountancy-Unit-07_TM.indd 226 12/9/2021 11:19:11 PM

(ஆ) **தனிச்சட்ட உரு:** நிறுமம் ஒரு செயற்கை நபர். இது ஒரு தனிச் சட்டப்பூர்வமான அமைப்பாகும். இது அதன் உறுப்பினர்களிடமிருந்து தனித்தியங்குகிறது.

(இ) **பொதுமுத்திரை:** ஒரு நிறுமம் அதற்கான பொது முத்திரையைப் பெற்றிருக்கலாம். அது ஆவணங்களின் மீது பதிக்கப்படலாம்.

(ஈ) **நீண்ட வாழ்நாள்:** ஒரு நிறுமம் எப்பொழுதும் தொடர்ந்து இயங்கக் கூடியது. அதன் உறுப்பினர்களின் மாற்றங்களினால், அதன் தொடர்ச்சி பாதிக்கப்படுவதில்லை. சட்டத்தால் மட்டுமே இதனைக் கலைக்க முடியும்.

(உ) **வரையறு பொறுப்பு:** பங்குதாரர்களின் பொறுப்பு அவர்கள் நிறுமத்தில் வாங்கிய பங்குகளின் முக மதிப்பு அளவிற்கு அல்லது பொறுப்புறுதி அளித்த அளவிற்கு வரையறுக்கப்பட்டுள்ளது.

(ஊ) **பங்குகளின் மாற்றத்தக்கத் தன்மை:** தனிநிறுமம் தவிர, நிறுமத்தின் பங்குகள் எளிதில் மாற்றக் கூடியவை.

7.4 பங்குகளின் பொருள் மற்றும் வகைகள்

ஒரு நிறுமத்தின் முதல், குறிப்பிட்ட பண மதிப்பிலான சிறிய அலகுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். இந்த அலகுகள் 'பங்குகள்' என அழைக்கப்படுகின்றன. நிறுமங்கள் வெளியிடும் பங்குகளை இருவகைகளாகப் பிரிக்கலாம்.

(i) முன்னுரிமைப் பங்குகள் மற்றும்
(ii) நேர்மைப் பங்குகள்

(i) முன்னுரிமைப் பங்குகள்

நேர்மைப் பங்குகளைவிட பின்வரும் இரு முன்னுரிமைகளைப் பெற்றுள்ள பங்குகள், முன்னுரிமைப் பங்குகள் ஆகும்.

(அ) நிறுமத்தின் வாழ்நாள் முழுவதும் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் பங்காதாயம் பெறும் முன்னுரிமை.

(ஆ) நிறும கலைப்பின்போது, முதலை திரும்பப் பெறும் முன்னுரிமை.

(ii) நேர்மைப் பங்குகள்

முன்னுரிமைப்பங்குகள் அல்லாத பங்குகள் நேர்மைப் பங்குகள் ஆகும். இவ்வகை பங்குகள் எவ்விதமான முன்னுரிமையையும் பெற்றிருக்கவில்லை. நேர்மைப்பங்குகளுக்கான பங்காதாய விகிதம் நிலையாக இருப்பதில்லை. நிறுமத்தின் ஈட்டிய இலாபத்திற்கேற்ப இது இருக்கும். நிறுமக் கலைப்பின்போதும், முன்னுரிமைப் பங்குதாரர்களுக்கு முதலை திரும்ப செலுத்திய பிறகே நேர்மைப் பங்குதாரர்களுக்கு செலுத்தப்படும். நேர்மைப் பங்குகளை சாதாரண பங்குகள் மற்றும் பொது நிலைப்பங்குகள் என்றும் கூறலாம்.

7.5 பங்குமுதலின் பிரிவுகள்

ஒரு நிறுமத்தின் பங்குமுதல் பின்வரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன:

(i) அங்கீகரிக்கப்பட்ட முதல்

இது அமைப்பு முறையேட்டின் படி அங்கீகரிக்கப்பட்ட முதல் ஆகும். இது அதிகப்பட்சமாக முதலாக திரட்ட அனுமதிக்கப்பட்ட தொகை. இதனைப் 'பதிவு செய்யப்பட்ட முதல்' அல்லது 'பெயரளவு முதல்' என்றும் கூறலாம்.

(ii) வெளியிட்ட முதல்

வாங்குவதற்கென வெளியிடப்பட்ட அங்கீகரித்த முதலின் ஒரு பகுதி வெளியிட்ட முதல் ஆகும்.

(iii) ஒப்பிய முதல்

வெளியிட்ட முதலில், வாங்குவதற்கு ஒப்புக்கொண்ட, மேலும் நிறுமத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட முதல் ஒப்பிய முதல் ஆகும்.

12th-Accountancy-Unit-07_TM.indd 227 12/9/2021 11:19:11 PM

(iv) அழைக்கப்பட்ட முதல்

பணம் செலுத்தப்பட, நிறுமத்தால் அழைக்கப்பட்ட ஒப்பிய முதலின், ஒரு பகுதி அழைக்கப்பட்ட முதல் ஆகும்

(v) செலுத்தப்பட்ட முதல்

பங்குதாரர்களால் உண்மையில் செலுத்தப்பட்ட, அழைக்கப்பட்ட முதலின் ஒரு பகுதி செலுத்தப்பட்ட முதல் ஆகும்.

(vi) காப்பு முதல்

ஒரு நிறுமம் அதன் கலைப்பின்போது மட்டும் அழைப்பு விடுக்கலாம் என ஒதுக்கி வைத்துள்ள ஒப்பிய முதலின் ஒரு பகுதியினை 'காப்பு முதல்' என்று அழைக்கலாம்.

மாணவர் செயல்பாடு 7.2

ஒரு நிறுமத்தின் ஆண்டறிக்கை பின்வரும் விவரங்களைப் பெற்றிருந்தது. அதனுடைய பங்குகளின் முகமதிப்பு ஒவ்வொன்றும் ₹ 10. நிறுமத்தின் பதிவு செய்யப்பட்ட முதல், வெளியிட்ட முதல், ஒப்பிய பங்கு முதல், மற்றும் அழைக்கப்பட்ட முதல் போன்றவற்றை அடையாளம் காணவும். மேலும், நிறுமம் வெளியிட்டுள்ள பங்குகளின் எண்ணிக்கையையும் கண்டறியவும்.

- ₹ 5,00,000
- ₹ 2,00,000
- ₹ 3,00,000
- ₹ 3,50,000

7.6 நேர்மைப் பங்குகள் வெளியீடு

ஒரு பொது நிறுமம் தனது முதலினைப் பெற பின்வரும் வழிகளில் பங்குகளை வெளியிடலாம்:

1. பொது வெளியீடு
2. தனியார் ஒதுக்கு
3. உரிமை வெளியீடு
4. மேலுாதிய பங்கு வெளியீடு

1. பொது வெளியீடு

ஒரு பொதுநிறுமம் தகவலறிக்கை மூலம் பொது மக்களுக்கு வெளியிடும் நேர்மைப் பங்கு வெளியீட்டினை பொது வெளியீடு என்று அழைப்பர். இது தொடக்க பொது முனைவு மற்றும் கூடுதல் முனைவுகளையும் உள்ளடக்கியது.

2. தனியார் ஒதுக்கு

தனியார் ஒதுக்கு என்பது நிறுமத்தால், ஒரு குறிப்பிட்ட நபர்களின் குழுவிற்கு (பொது வெளியீடாக அல்லாமல்) நேர்மைப் பங்குகளுக்கான முனைவு அல்லது தனியார் ஒதுக்கு அழைப்பு கடிதம் விடுப்பதாகும். இது, இந்திய நிறுமச்சட்டம், 2013, பிரிவு 42 –ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதாக இருக்க வேண்டும்.

3. உரிமை வெளியீடு

நிறுமத்தில் ஏற்கனவே உள்ள பங்குதாரர்களுக்கு, முனைவு கடிதம் மூலம் பங்குகளை ஒதுக்கீடு செய்வது உரிமை வெளியீடு ஆகும்.

4. மேலுாதிய பங்கு வெளியீடு

நிறுமத்தில் ஏற்கனவே பங்குதாரர்களாக உள்ளவர்களுக்கு பகிர்ந்துதரா இலாபத்திலிருந்து இலவசமாக நேர்மைப் பங்குகளை வெளியிடுவது மேலுாதிய பங்கு வெளியீடு எனப்படும்.

12th-Accountancy-Unit-07_TM.indd 228 12/9/2021 11:19:12 PM

7.7 நேர்மைப் பங்குகள் வெயிடுவதற்கான செயல்முறை

இந்திய நிறுமச்சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின் படியும், இந்திய பங்கு மாற்றக வாரியத்தின் வழிகாட்டுதலின் படியும் ஒரு நிறுமமானது பங்குகளை வெளியிட முடியும்.

(i) **பங்குகள் வாங்க அழைப்பு விடுத்தல்:** ஒரு பொது நிறுமம் தகவலறிக்கையை வெளியிட்டு பொதுமக்களை தன்னுடைய பங்குகளை வாங்குவதற்கு அழைப்பு விடுக்க வேண்டும்.

(ii) **விண்ணப்பம் பெறுதல்:** தகவலறிக்கையின் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்துடன் விண்ணப்பத் தொகையையும் அட்டவணையிலிடப்பட்ட வங்கியில் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் வைப்பு செய்திட வேண்டும். விண்ணப்பத் தொகையானது பங்கின் பெயரளவு மதிப்பில் குறைந்தது 5 சதவீதமாக இருக்க வேண்டும்.

(iii) **பங்குகள் ஒதுக்கீடு:** தகவலறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குறுமப்பங்கொப்பம் பொதுமக்களால் ஒப்புக் கொள்ளப்பட்டால் நிறுமம் பங்குகளை ஒதுக்கீடு செய்யலாம். ஒதுக்கீடு செய்யப்படாதவர்களுக்கு அவர்களுடைய விண்ணப்பத் தொகை திருப்பி அளிக்கப்படும். குறுமப்பங்கொப்பம் பெறப்படவில்லையெனில் பெற்ற அனைத்து விண்ணப்பத் தொகையையும் விண்ணப்பத்தாரர்களுக்கு திருப்பி அளித்திட வேண்டும்.



இந்திய நிறுமச்சட்டம் 2013, பிரிவு 39–ன் படி விண்ணப்பத் தொகையானது பங்கின் பெயரளவு மதிப்பில் குறைந்தது 5 சதவீதமாக இருக்க வேண்டும் அல்லது செபியின் வழிகாட்டுதலின் படியான வேறு ஏதேனும் சதவீதம் அல்லது தொகையாக இருக்கலாம். செபியின் வழிகாட்டுதலின்படி, குறைந்த அளவு பங்கு விண்ணப்பத் தொகை, வெளியீட்டு விலையில் 25 சதவீதத்திற்கு குறைவாக இருக்கக் கூடாது.

நிறுமம் நேர்மைப் பங்குகளை ரொக்கத்திற்கோ அல்லது ரொக்கத்திற்காக இல்லாமல் மறுபயனுக்காகவோ வெளியீடு செய்யலாம். ரொக்கத்திற்காக வெளியிடப்படும்போது ரொக்கமானது (i) தவணை முறையிலோ (ii) ஒரே தடவையாகவோ (மொத்தத் தொகை) பெறப்படலாம்.

7.8 ரொக்கத்திற்கு தவணை முறையில் பங்குகளை வெளியிடுதல்

தவணை முறையில் பங்கு முதலானது கீழ்க்கண்டவாறு பெறப்படாலம்:

முதல் தவணை விண்ணப்பத் தொகையாகும்
இரண்டாம் தவணை ஒதுக்கீட்டுத் தொகையாகும்
மூன்றாம் தவணை முதல் அழைப்புத் தொகையாகும்
கடைசித் தவணை இறுதி அழைப்புத் தொகையாகும்.

பங்குகளை ஒதுக்கீடு செய்தபின்பு, தேவைப்படும் போதெல்லாம் அழைப்பினை மேற்கொள்ளலாம். அழைப்பு என்பது பகுதி செலுத்தப்பெற்ற பங்குதாரர்களை பங்கின் முழு தொகையைச் செலுத்தும் வகையில் அடுத்த தவணைத் தொகைகளை செலுத்துமாறு நிறுமம் கேட்டுக் கொள்வதாகும். ஒன்றிற்கு மேற்பட்ட அழைப்புகள் இருக்கலாம். இந்த அழைப்புகள் வரிசை எண்கள் அடிப்படையில் முதல் அழைப்பு, இரண்டாம் அழைப்பு, மூன்றாம் அழைப்பு என்பது போன்று வேறுபடுத்தப்படலாம். கடைசி தவணையானது, இறுதி அழைப்பாக இருக்கும். கடைசி அழைப்பு இறுதி அழைப்பு என்ற வார்த்தையுடன் இருக்கும். எடுத்துக்காட்டு மூன்றாவது அழைப்பு கடைசி அழைப்பாக இருந்தால் அது மூன்றாம் மற்றும் இறுதி அழைப்பு என்றிருக்கும்.



நிறுமத்தின் செயல்முறைவிதிகளில் கொடுக்கப்பட்டிருக்கும் விதிகளின் படி அழைப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும். செயல்முறை விதிகளில் அதுகுறித்து விதிகள் இல்லாமலிருந்தால் இந்திய நிறுமச்சட்டம் 2013 அட்டவணை I–ல் பட்டியல் F–ல் கொடுக்கப்பட்டுள்ள பின்வரும் விதிமுறைகள் பொருந்தும்:

இரண்டு அழைப்புகளுக்கிடையே ஒருமாத கால இடைவெளி இருக்கவேண்டும்.

ஒரு அழைப்பின் தொகை பங்கின் முக மதிப்பில் 25%–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

12th-Accountancy-Unit-07_TM.indd 229 12/9/2021 11:19:12 PM

நேர்மைப்பங்குகள் ரொக்கத்திற்காக முகமதிப்பிலோ அல்லது முனைமத்திலோ வெளியிடப்படலாம். நிறுமம் பங்குகளை முகமதிப்பிற்கு சமமான தொகையில் (பெயரளவு மதிப்பில்) வெளியீடு செய்தால் அது முகமதிப்பில் வெளியிடுதல் எனப்படும். நிறுமம் பங்குகளை முகமதிப்பைவிட அதிகமான விலையில் வெளியீடு செய்தால் அது முனைமத்தில் வெளியிடுதல் எனப்படும். மிகுதியான தொகை முனைமம் என்றழைக்கப்படும்.

(i) பங்குகள் ரொக்கத்திற்காக முகமதிப்பில் வெளியிடுதல்:

பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகள் பதியப்பட வேண்டும்:

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	1. விண்ணப்பத் தொகை பெறும்போது			
	வங்கி க/கு ப		xxx	
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு			xxx
	2. பங்கு ஒதுக்கீட்டின் போது விண்ணப்பத் தொகையை மாற்றுவதற்கு			
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு ப		xxx	
	நேர்மைப் பங்குமுதல் க/கு			xxx
	3. நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கான விண்ணப்பத் தொகையை திரும்பச் செலுத்துதல்			
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு ப		xxx	
	வங்கி க/கு			xxx
	4. ஒதுக்கீட்டுத்தொகை பெறவேண்டியது			
	நேர்மைப்பங்கு ஒதுக்கீட்டு க/கு ப		xxx	
	நேர்மைப் பங்குமுதல் க/கு			xxx
	5. ஒதுக்கீட்டுப் பணம் பெறும்போது			
	வங்கி க/கு ப		xxx	
	நேர்மைப் பங்கு ஒதுக்கீடு க/கு			xxx
	6. அழைப்பின் போது அழைப்புத் தொகை பெற வேண்டியது			
	நேர்மைப் பங்கு அழைப்பு க/கு ப		xxx	
	நேர்மைப் பங்குமுதல் க/கு			xxx
	7. அழைப்பு பணம் பெறும்போது			
	வங்கி க/கு ப		xxx	
	நேர்மைப் பங்கு அழைப்பு க/கு			xxx

எடுத்துக்காட்டு 1

தாய் நிறுமம் ₹ 10 மதிப்புள்ள 1,00,000 நேர்மைப் பங்குகளை வெளியீடு செய்தது. விண்ணப்பத்தின்போது ₹ 5; ஒதுக்கீட்டின்போது ₹ 2; முதலாம் அழைப்பின்போது ₹ 2 மற்றும் இறுதி அழைப்பின்போது ₹ 1 செலுத்தவேண்டும். அனைத்து பங்குகளும் ஒப்பப்பட்டு தொகை பெறப்பட்டது. குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்.

12th-Accountancy-Unit-07_TM.indd 230 12/9/2021 11:19:12 PM

தீர்வு

தாய் நிறுமத்தின் ஏடுகளில்
குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	வங்கி க/கு ப		5,00,000	
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு			5,00,000
	(விண்ணப்பத் தொகை பெற்றது)			
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு ப		5,00,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு			5,00,000
	(பங்கு விண்ணப்பத் தொகையை பங்கு முதல் கணக்கிற்கு மாற்றியது)			
	நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டு க/கு ப		2,00,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு			2,00,000
	(பங்கு ஒதுக்கீட்டுத் தொகை பெற வேண்டியது)			
	வங்கி க/கு ப		2,00,000	
	நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டு க/கு			2,00,000
	(ஒதுக்கீட்டுத் தொகை பெற்றது)			
	நேர்மைப் பங்கு முதலாம் அழைப்பு க/கு ப		2,00,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு			2,00,000
	(பங்கு முதலாம் அழைப்புத் தொகை பெற வேண்டியது)			
	வங்கி க/கு ப		2,00,000	
	நேர்மைப் பங்கு முதலாம் அழைப்பு க/கு			2,00,000
	(பங்கு முதலாம் அழைப்புத் தொகை பெற்றது)			
	நேர்மைப் பங்கு இரண்டாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு ப		1,00,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு			1,00,000
	(பங்கு மீதான இரண்டாம் மற்றும் இறுதி அழைப்புத் தொகை பெற வேண்டியது)			
	வங்கி க/கு ப		1,00,000	
	நேர்மைப்பங்கு இரண்டாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு			1,00,000
	(இரண்டாம் மற்றும் இறுதி அழைப்புத் தொகை பெற்றது)			

7.8.1 குறை ஒப்பம்

பொது மக்களுக்கு வெளியிடப்படும் அனைத்துப் பங்குகளும் முழுவதும் ஒப்பப்படாமல் போகலாம். வெளியிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையைவிட ஒப்பப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தால் அது குறை ஒப்பம் எனப்படும். இந்தச் சூழ்நிலையில் தகவலறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குறுமப் பங்கொப்பம் பெறப்பட்டிருந்தால் விண்ணப்பம் செய்தவர்கள் அனைவரும் ஒதுக்கீட்டினைப் பெற்றுக் கொள்வார்கள்.

12th-Accountancy-Unit-07_TM.indd 231 12/9/2021 11:19:12 PM

எடுத்துக்காட்டு 2

ஜாய் நிறுமம் ₹ 10 மதிப்புள்ள 10,000 நேர்மைப் பங்குகளை விண்ணப்பத்தின் போது ₹ 5, ஒதுக்கீட்டின் போது ₹ 3, முதலாம் மற்றும் இறுதி அழைப்பின் போது ₹ 2 செலுத்தும் வகையில் வெளியிட்டது. 9,000 பங்குகளை வாங்க பொதுமக்கள் விண்ணப்பித்தனர். இயக்குனர்கள் 9,000 பங்குகளையும் ஒதுக்கீடு செய்து அதற்கான தொகையையும் பெற்றுக் கொண்டனர். தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

தீர்வு

ஜாய் நிறுமத்தின் ஏடுகளில்
குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	வங்கி க/கு (9,000 × 5) ப		45,000	
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு			45,000
	(விண்ணப்பத் தொகை பெற்றது)			
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு ப		45,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு			45,000
	(விண்ணப்பத் தொகை பங்குமுதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது)			
	நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டு க/கு ப		27,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு			27,000
	(ஒதுக்கீட்டுத் தொகை பெற வேண்டியது)			
	வங்கி க/கு ப		27,000	
	நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டு க/கு			27,000
	(ஒதுக்கீட்டுத் தொகை பெற்றது)			
	நேர்மைப் பங்கு முதலாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு ப		18,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு			18,000
	(அழைப்புத் தொகை பெற வேண்டியது)			
	வங்கி க/கு ப		18,000	
	நேர்மைப் பங்கு முதலாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு			18,000
	(அழைப்புத் தொகை பெற்றது)			

7.8.2 மிகை ஒப்பம்

வெளியிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையை விட விண்ணப்பிக்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் அது மிகை ஒப்பம் எனப்படும். பின்வரும் மூன்று மாற்று வழிகளில் இச்சூழ்நிலையை கையாளலாம்.

(அ) சில விண்ணப்பங்கள் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, சில விண்ணப்பங்கள் முழுவதையும் நிராகரித்தல், நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்பத் தொகையை திருப்பியளித்தல்.

(ஆ) அனைத்து விண்ணப்பங்களுக்கும் விண்ணப்பித்த பங்குகளுக்கேற்ப விகிதாச்சாரத்தில் ஒதுக்கீடு செய்தல். இது விகித அளவு அடிப்படை ஒதுக்கீடு எனப்படும். மிகுதியாக பெற்ற விண்ணப்பத் தொகையை திருப்பி அளிக்கலாம் அல்லது ஒதுக்கீடு மற்றும் அழைப்புத் தொகையில் சரிக்கட்டுவதற்காக வைத்திருக்கலாம்.

(இ) மேலே குறிப்பிட்ட இரண்டு முறைகளையும் இணைத்தும் செயல்படுத்தலாம்.

12th-Accountancy-Unit-07_TM.indd 232 12/9/2021 11:19:12 PM

எடுத்துக்காட்டு 3

பாரத் நிறுமம் ₹ 10 மதிப்புள்ள 1,00,000 பங்குகளை முகமதிப்பில் பொதுமக்களுக்கு வெளியிட்டது. பங்குகள் மீதான பணம் செலுத்த வேண்டிய விவரங்கள் பின்வருமாறு:

விண்ணப்பத்தின் போது பங்கொன்றிற்கு	₹ 5
ஒதுக்கீட்டின் போது பங்கொன்றிற்கு	₹ 3
முதலாம் மற்றும் இறுதி அழைப்பின் போது பங்கொன்றிற்கு	₹ 2

1,20,000 பங்குகளுக்கு விண்ணப்பத் தொகை பெறப்பட்டது. கூடுதல் விண்ணப்பத் தொகை உடனடியாக திருப்பிச் செலுத்தப்பட்டது. மேற்கண்டவற்றை பதிவு செய்ய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

தீர்வு

பாரத் நிறுவன ஏடுகளில்
குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்		பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	வங்கி க/கு (1,20,000 × 5)	ப		6,00,000	
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு				6,00,000
	(விண்ணப்பத் தொகை பெற்றது)				
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு (1,00,000 × 5)	ப		5,00,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு				5,00,000
	(நேர்மைப் பங்கு விண்ணப்பத் தொகையை பங்கு முதலுக்கு மாற்றியது)				
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு (20,000 × 5)	ப		1,00,000	
	வங்கி க/கு				1,00,000
	(மிகுதியான பங்கு விண்ணப்பத்தொகை திருப்பிச் செலுத்தியது)				
	நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டு க/கு	ப		3,00,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு				3,00,000
	(ஒதுக்கீட்டுத் தொகை பெற வேண்டியது)				
	வங்கி க/கு	ப		3,00,000	
	நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டு க/கு				3,00,000
	(ஒதுக்கீட்டுத் தொகை பெற்றது)				
	நேர்மைப் பங்கு முதலாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு	ப		2,00,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு				2,00,000
	(பங்கு முதலாம் மற்றும் இறுதி அழைப்பு தொகை பெற வேண்டியது)				
	வங்கி க/கு	ப		2,00,000	
	நேர்மைப் பங்கு முதலாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு				2,00,000
	(பங்கு முதலாம் மற்றும் இறுதி அழைப்புத் தொகை பெற்றது)				

12th-Accountancy-Unit-07_TM.indd 233 12/9/2021 11:19:12 PM

எடுத்துக்காட்டு 4

கான் நிறுமம் ₹ 10 மதிப்புள்ள 50,000 பங்குகளை விண்ணப்பத்தின் போது ₹ 4, ஒதுக்கீட்டின் போது ₹ 4 மற்றும் முதலாம் மற்றும் இறுதி அழைப்பின் போது ₹ 2 என செலுத்தும் வகையில் பொதுமக்களுக்கு வெளியிட்டது. 65,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இயக்குனர்கள் 50,000 பங்குகளை விகித அளவு அடிப்படையில் ஒதுக்கீடு செய்யவும், மிகுதியாகப் பெற்ற விண்ணப்பத் தொகையை ஒதுக்கீட்டிற்கு பயன்படுத்தி கொள்ளவும் முடிவு செய்தனர். அனைத்துத் தொகைகளும் பெறப்பட்டன எனக் கொண்டு தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

தீர்வு

கான் நிறும ஏடுகளில்
குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	வங்கி க/கு (65,000 × 4) ப		2,60,000	
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு			2,60,000
	(விண்ணப்பத் தொகை பெற்றது)			
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு (50,000 × 4) ப		2,00,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு			2,00,000
	(விண்ணப்பத் தொகை பங்கு முதல் கணக்கிற்கு மாற்றியது)			
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு (15,000 × 4) ப		60,000	
	நேர்மைப்பங்கு ஒதுக்கீட்டு க/கு			60,000
	(மிகுதியாகப் பெற்ற விண்ணப்பத் தொகை ஒதுக்கீட்டிற்கு பயன்படுத்தப்பட்டது)			
	நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டு க/கு ப		2,00,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு			2,00,000
	(பங்கு ஒதுக்கீட்டு தொகை பெற வேண்டியது)			
	வங்கி க/கு (2,00,000 – 60,000) ப		1,40,000	
	நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டு க/கு			1,40,000
	(ஒதுக்கீட்டுத் தொகை பெற்றது)			
	நேர்மைப் பங்கு முதலாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு (50,000 × 2) ப		1,00,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு			1,00,000
	(பங்கு முதலாம் மற்றும் இறுதி அழைப்பு பணம் பெற வேண்டியது)			
	வங்கி க/கு ப		1,00,000	
	நேர்மைப் பங்கு முதலாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு			1,00,000
	(வங்கி முதலாம் மற்றும் இறுதி அழைப்பு பணம் பெற்றது)			

எடுத்துக்காட்டு 5

சுதா நிறுமம் ₹ 10 மதிப்புள்ள 1,00,000 பங்குகளை விண்ணப்பத்தின் போது ₹ 3, ஒதுக்கீட்டின் போது ₹ 4, மீதமுள்ள தொகை தேவையானபொழுது என்ற அடிப்படையில் பொதுமக்களுக்கு வெளியிட்டது. 1,40,000 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அவற்றை இயக்குனர்கள் பின்வருமாறு ஒதுக்கீடு செய்தனர்.

12th-Accountancy-Unit-07_TM.indd 234 12/9/2021 11:19:13 PM

60,000 பங்குகளுக்கான விண்ணப்பதாரர்களுக்கு – முழுமையாக
75,000 பங்குகளுக்கான விண்ணப்பதாரர்களுக்கு – 40,000 பங்குகள் (மிகுதியான விண்ணப்ப பணம் ஒதுக்கீட்டிற்கு பயன்படுத்தப்படும்)
5,000 பங்குகளுக்கான விண்ணப்பதாரர்களுக்கு – எதுவுமில்லை

அனைத்து தொகைகளும் பெறப்பட்டன. ஒதுக்கீட்டுத் தொகை பெறுவது வரையிலான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

தீர்வு

சுதா நிறுமம் ஏடுகளில்
குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	வங்கி க/கு (1,40,000 × 3) ப		4,20,000	
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு			4,20,000
	(விண்ணப்பத் தொகை பெற்றது)			
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு (1,00,000 × 3) ப		3,00,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு			3,00,000
	(விண்ணப்பத் தொகையை பங்கு முதலுக்கு மாற்றியது)			
	நேர்மைப்பங்கு விண்ணப்பக் க/கு (5,000 × 3) ப		15,000	
	வங்கி க/கு			15,000
	(மிகுதியான விண்ணப்பத் தொகை திருப்பியளிக்கபட்டது)			
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு (35,000 × 3) ப		1,05,000	
	நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டு க/கு			1,05,000
	(மிகுதியான விண்ணப்பத்தொகை ஒதுக்கீட்டிற்கு பயன்படுத்தப்பட்டது)			
	நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டு க/கு (1,00,000 × 4) ப		4,00,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு			4,00,000
	(பங்கு ஒதுக்கீட்டுத் தொகை பெற வேண்டியது)			
	வங்கி க/கு ப		2,95,000	
	நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டு க/கு			2,95,000
	(பங்கு ஒதுக்கீட்டுத் தொகைப் பெற்றது)			

குறிப்பு

விண்ணப்பித்த பங்குகள்	ஒதுக்கப்பட்ட பங்குகள்	விண்ணப்பத் தொகைப் பெற்றது	விண்ணப்பத் தொகை	ஒதுக்கீட்டு தொகையில் பகிரப்பட்டது	திருப்பி அனுப்பியது
60,000	60,000	1,80,000	1,80,000	-	-
75,000	40,000	2,25,000	1,20,000	1,05,000	
5,000	-	15,000	-	-	15,000

12th-Accountancy-Unit-07_TM.indd 235 12/9/2021 11:19:13 PM

7.8.3 அழைப்பு முன்பணம்

பங்கின் அழைக்கப்பட்ட மதிப்பை விட அதிகமாகப் பெறப்பட்ட தொகை அழைப்பு முன்பணம் எனப்படும். இது பங்கு விண்ணப்பம் அல்லது பங்கு ஒதுக்கீடு அல்லது பங்கு அழைப்புக் கணக்கில் அதிகமாக பெறப்பட்ட தொகையாகும். அவ்வாறு அதிகமாகப் பெறப்பட்ட தொகையை திருப்பி அளிக்க வேண்டும் அல்லது எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய தொகைகளில் சரிக்கட்ட வேண்டும். அவ்வாறு எதிர்காலத்தில் செலுத்தப்பட வேண்டிய தொகைகளில் சரிக்கட்ட தீர்மானித்தால், அந்த அதிகமாகப் பெறப்பட்ட தொகையை அழைப்பு முன்பணம் என்ற தனிக்கணக்கிற்கு மாற்றலாம்.

அழைப்பு முன்பணம் நிறுமத்தின் பங்கு முதலில் ஒரு பகுதி அல்ல மற்றும் அதற்கு பங்காதாயம் ஏதும் செலுத்த வேண்டியதில்லை. இது இருப்புநிலைக் குறிப்பில் இதர நடப்புப் பொறுப்புகளின் கீழ் காட்டப்படும்.

இந்திய நிறுமச் சட்டம், 2013 பிரிவு 50–ன் படி, நிறுமச் செயல்முறை விதிகள் அங்கீகரித்தால் மட்டுமே அழைப்பு முன்பணம் ஏற்றுக்கொள்ளப்படும். இந்திய நிறுமச் சட்டம், 2013 அட்டவணை F–ன் படி நிறுமச் செயல்முறை விதிகளில் கூறி உள்ளவாறு அழைப்பு முன்பணத்திற்கு வட்டியாக ஆண்டுக்கு 12% மிகாமல் செலுத்தப்பட வேண்டும்.

மாணவர் குறிப்பு

ஒதுக்கீடு செய்யப்பட்ட பங்குகள் மீது கூடுதலாகப் பெறப்பட்ட விண்ணப்பத் தொகையை ஒதுக்கீட்டுப் பணத்தில் சரிக்கட்டிய பிறகு அதிகமாக உள்ள தொகை அழைப்பு முன்பணக் கணக்கிற்கு மாற்றப்பட வேண்டும்.

குறிப்பேட்டுப் பதிவுகள் பின்வருமாறு:

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	(அ) ஒதுக்கீடு மற்றும் அழைப்பின் போது பெறப்பட்ட முன்பணத்திற்கு			
	வங்கி க/கு ப		xxx	
	அழைப்பு முன்பணக் க/கு			xxx
	(ஆ) அழைப்புக் கணக்கில் சரிசெய்யப்படும்போது			
	அழைப்பு முன்பணக் க/கு ப		xxx	
	பங்கு அழைப்பு க/கு			xxx

எடுத்துக்காட்டு 6

அருணா ஆலைகள் வரையறு நிறுமத்தின் பதிவு செய்யப்பட்ட பங்கு முதல் ₹ 5,00,000. அதில் 20,000 பங்குகளை ₹ 10 வீதம் பின்வருமாறு செலுத்தத்தக்க வகையில் வெளியிட்டது. விண்ணப்பத்தின் மீது ₹ 4; ஒதுக்கீட்டின் மீது ₹ 4; முதலாம் மற்றும் இறுதி அழைப்பின் மீது ₹ 2. வெளியிட்டப் பங்குகள் அனைத்தும் ஒப்பப்பட்டன. அனைத்து தொகைகளும் பெறப்பட்டன. ஆனால், ஒரு பங்குதாரர் தான் வைத்துள்ள 300 பங்குகளுக்கான அனைத்து தொகைகளையும் ஒதுக்கீட்டின்போதே முழுவதுமாக செலுத்தி விட்டார். குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

12th-Accountancy-Unit-07_TM.indd 236 12/9/2021 11:19:13 PM

தீர்வு

அருணா நிறும ஏடுகளில்
குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	வங்கி க/கு (20,000 × 4) ப		80,000	
	பங்கு விண்ணப்பக் க/கு			80,000
	(பங்கு விண்ணப்பப் பணம் பெறப்பட்டது)			
	பங்கு விண்ணப்பக் க/கு ப		80,000	
	பங்குமுதல் க/கு			80,000
	(விண்ணப்ப பணம் பங்கு முதலுக்கு மாற்றப்பட்டது)			
	பங்கு ஒதுக்கீடு க/கு (20,000 × 4) ப		80,000	
	பங்குமுதல் க/கு			80,000
	(பங்கு ஒதுக்கீடு பணம் பெற வேண்டியது)			
	வங்கி க/கு (20,000 × 4) + (300x2) ப		80,600	
	பங்கு ஒதுக்கீடு க/கு			80,000
	அழைப்பு முன்பணம் க/கு (300 × 2)			600
	(பங்கு ஒதுக்கீடு பணம் மற்றும் அழைப்பு முன்பணம் பெறப்பட்டது)			
	பங்கு முதலாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு (20,000 × 2) ப		40,000	
	பங்குமுதல் க/கு			40,000
	(பங்கு முதலாம் மற்றும் இறுதி அழைப்புத் தொகை பெற வேண்டியது)			
	வங்கி க/கு (19,700 × 2) ப		39,400	
	அழைப்பு முன்பணம் க/கு ப		600	
	பங்கு முதலாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு			40,000
	(பங்கு முதலாம் மற்றும் இறுதி அழைப்புத் தொகை பெறப்பட்டு, அழைப்பு முன்பணம் சரிக்கட்டப்பட்டது).			

12th-Accountancy-Unit-07_TM.indd 237 12/9/2021 11:19:13 PM

7.8.4 அழைப்பு நிலுவை

பங்குதாரர் ஒருவர் தான் செலுத்த வேண்டிய ஒதுக்கீட்டுத் தொகை அல்லது அழைப்புத் தொகையை செலுத்தத் தவறினால், இன்னமும் செலுத்தப்படாமல் உள்ள தொகை 'அழைப்பு நிலுவை' எனப்படும். பிறிதொரு வகையில் கூறவேண்டுமானால், அழைக்கப்பட்டும், செலுத்தப்படாமல் உள்ள தொகை 'அழைப்பு நிலுவை' எனப்படும்.

இந்திய நிறுமச் சட்டம், 2013 அட்டவணை F–ன் படி, நிறும செயல்முறை விதிகளில் உள்ளவாறு அழைப்பு நிலுவைக்கு வட்டி வசூலிக்கப்படும். அவ் வட்டி வீதம் ஆண்டுக்கு 10% மேல் மிகக் கூடாது. அழைப்பு நிலுவையைப் பதிவு செய்ய இரண்டு முறைகள் உள்ளன.

(i) அழைப்பு நிலுவைக் கணக்கு துவங்காதபோது

இம்முறையில் பங்குதாரர்களால் செலுத்தப்படாத குறிப்பிட்ட அழைப்புத் தொகையினை, அவற்றை செலுத்தும் வரை அல்லது ஒறுப்பிழப்பு செய்யும் வரை அது குறிப்பிட்ட அழைப்பு நிலுவைக் கணக்கில் காட்டப்படும்.

(ii) அழைப்பு நிலுவைக் கணக்கு துவங்கும்போது

இம்முறையில், பங்குதாரர்களால் செலுத்தப்படாத அழைப்புத் தொகை, அழைப்பு நிலுவை என்ற ஒரு தனிக்கணக்கிற்கு பற்று செய்து மாற்றப்படுகிறது. அழைப்பு நிலுவைத் தொகை வசூலிக்கப்படும் போது அல்லது பங்குகளை ஒறுப்பிழப்பு செய்யும்போது அழைப்பு நிலுவைக் கணக்கு வரவு வைக்கப்படும்.

எடுத்துக்காட்டு 7

ஜெயம் டயர்ஸ் நிறுமம் 15,000 சாதாரணப்பங்குகளை ₹ 10 வீதம் பின்வருமாறு செலுத்தும்படி வெளியிட்டது. விண்ணப்பத்தின் மீது ₹ 3 ஒதுக்கீட்டின் மீது ₹ 5 முதலாம் மற்றும் இறுதி அழைப்பின் மீது ₹ 2. அனைத்து தொகையும் பெறப்பட்டது. ஆனால் 100 பங்குகளை வைத்திருக்கும் ஒரு பங்குதாரர் அழைப்பு பணத்தை செலுத்தத் தவறினார். அழைப்பு நிலுவைக் கணக்கைப் பயன்படுத்தி அழைப்பிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

தீர்வு

குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	நேர்மைப் பங்கு முதலாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு (15,000 × 2) ப		30,000	
	பங்குமுதல் க/கு			30,000
	(பங்கு முதலாம் மற்றும் இறுதி அழைப்புத் தொகை பெற வேண்டியது)			
	வங்கி க/கு (14,900 × 2) ப		29,800	
	அழைப்பு நிலுவை க/கு (100 × 2) ப		200	
	நேர்மைப் பங்கு முதலாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு			30,000
	(அழைப்பு பணம் பெறப்பட்டது, பெறப்படாத தொகை அழைப்பு நிலுவைக் கணக்கில் எடுத்துச் செல்லப்பட்டது)			

7.8.5 பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தல்

பங்குதாரர் ஒருவர் ஒதுக்கீட்டு பணத்தையோ அல்லது அழைப்புப் பணத்தையோ செலுத்தத் தவறினால் அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்படும். ஒறுப்பிழப்பு செய்யும் போது, ஒதுக்கீடு ரத்து செய்யப்படுவதால், அந்த அளவிற்கு செலுத்திய முதல் குறைக்கப்படும். ஒறுப்பிழப்பு செய்ததற்கு பிறகு அந்த நபர் பங்குதாரர் என்ற தகுதியை இழக்கிறார். ஒறுப்பிழப்பின் போது பங்குதாரரால் இதுவரை செலுத்தப்பட்டத் தொகை நிறுமத்திற்கு ஆதாயமாகும் மற்றும் ஒறுப்பிழப்பு கணக்கில் அத்தொகை வரவு

12th-Accountancy-Unit-07_TM.indd 238 12/9/2021 11:19:13 PM

வைக்கப்படும். பங்குகள் ஒறுப்பிழப்புக் கணக்கு இருப்புநிலைக் குறிப்பில் ஒரு தனித் தலைப்பில் பங்கு முதல் கணக்கின் கீழ்க்காட்டப்படும். இது கணக்குகளின் குறிப்புகள் பகுதியில் காட்டப்படும்.

நிறுமத்தின் ஏடுகளில் பின்வரும் குறிப்பேட்டுப் பதிவு செய்யப்பட வேண்டும்.

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	பங்கு முதல் க/கு (அழைக்கப்பட்ட முதல்) ப		xxx	
	பங்கு ஒதுக்கீடு க/கு (நிலுவையில் உள்ளது)			xxx
	பங்கு அழைப்பு க/கு (நிலுவையில் உள்ளது)			xxx
	பங்கு ஒறுப்பிழப்பு க/கு (இதுவரை செலுத்திய தொகை)			xxx
	(ஒதுக்கீட்டுப்பணம் மற்றும் அழைப்பு பணம் செலுத்தாததால் பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன)			

எடுத்துக்காட்டு 8

அனிதா என்பவர் தஞ்சாவூர் மோட்டார் வரையறு நிறுமத்தின் ₹ 10 மதிப்புள்ள 500 நேர்மைப் பங்குகளை வைத்துள்ளார். அவர் விண்ணப்பத்தின் மீது ₹ 3, ஒதுக்கீட்டின் மீது ₹ 5 செலுத்தி உள்ளார். ஆனால் முதலாம் மற்றும் இறுதி அழைப்புத் தொகையான ₹ 2 செலுத்தவில்லை. அழைப்புத் தொகையை செலுத்தத் தவறியதால் இயக்குநர்கள் அப்பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தனர். ஒறுப்பிழப்பிற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

தீர்வு

குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	நேர்மைப் பங்கு முதல் க/கு (500 × 10) ப		5,000	
	நேர்மைப் பங்குமுதலாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு (500 × 2)			1,000
	பங்கு ஒறுப்பிழப்பு க/கு (500 × 8)			4,000
	(அழைப்புப் பணம் செலுத்தாததால் 500 பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன)			

எடுத்துக்காட்டு 9

முத்து என்பவர் ₹ 10 மதிப்புள்ள 20 சாதாரண பங்குகளை வைத்திருந்தார். அவர் அதன் விண்ணப்பத் தொகையாக ₹ 2 செலுத்திய நிலையில் ஒதுக்கீட்டுப் பணம் ₹ 3 மற்றும் முதல் அழைப்பு பணம் ₹ 1 செலுத்தவில்லை. முதல் அழைப்புக்கு பின்னர் இயக்குநர்கள் அப்பங்குகளை ஒறுப்பிழப்பு செய்ய முடிவு செய்தனர். பங்கு ஒறுப்பிழப்பிற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

தீர்வு

குறிப்பேட்டுப் பதிவு

நாள்	விவரம்			பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	நேர்மைப் பங்கு முதல் க/கு	(20 × 6)	ப		120	
	நேர்மைப் பங்கு ஒதுக்கீடு க/கு	(20 × 3)				60
	நேர்மைப் பங்கு முதல் அழைப்பு க/கு	(20 × 1)				20
	பங்கு ஒறுப்பிழப்பு க/கு	(20 × 2)				40
	(பங்குகள் ஒறுப்பிழப்பு செய்தது)					

மாணவர் குறிப்பு

நேர்மைப் பங்குகளில் அழைக்கப்பட்ட தொகையான ₹ 6 பற்று செய்ய வேண்டும்.

12th-Accountancy-Unit-07_TM.indd 239 12/9/2021 11:19:13 PM

7.8.6 ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளை மறுவெளியீடு செய்தல்

ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகள் நிறுமத்தால் மறுவெளியீடு செய்யப்படலாம். அப்பங்குகள் எந்த விலையிலும் மறுவெளியீடு செய்யலாம். ஆனால், வெளியீட்டு விலை ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளின் செலுத்தப் பெறாத தொகையைக் காட்டிலும் குறைவாக இருக்கக் கூடாது.

உதாரணமாக, ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட ஒரு பங்கின் மதிப்பு ₹ 10 அதற்கு ₹ 4 விண்ணப்பப் பணமாக செலுத்தப்பட்டிருந்தது. அப்பங்குகள் முழுவதும் செலுத்தப்பட்டவைகளாக மறுவெளியீடு செய்யப்பட்டன. அதன் புதிய விலை குறைந்தபட்சமாக ₹ 6 (10-4) என நிர்ணயிக்கப்பட வேண்டும். ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகள் நட்டத்தில் மறுவெளியீடு செய்யப்படும் போது, அந்த நட்டம் ஒறுப்பிழப்பு கணக்கில் பற்று செய்யப்படுகிறது. ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகள் முனைமத்தில் மறுவெளியீடு செய்யப்பட்டால், அந்த முனைமத்தொகை பத்திர முனைமக் கணக்கில் வரவு வைக்கப்படும். பின்வருமாறு குறிப்பேடுகள் பதியப்படுகின்றன.

நாள்	விவரம்		பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	(i) முகமதிப்பில் மறுவெளியீடு செய்தால்				
	வங்கி க/கு	ப		xxx	
	பங்குமுதல் க/கு				xxx
	(ii) முனைமத்தில் மறுவெளியீடு செய்தால்				
	வங்கி க/கு	ப		xxx	
	பங்குமுதல் க/கு				xxx
	பத்திர முனைமக் க/கு				xxx
	(iii) நட்டத்தில் மறுவெளியீடு செய்தால்				
	வங்கி க/கு	ப		xxx	
	ஒறுப்பிழப்பு க/கு (நட்டத்தில் வெளியிடுதல்)	ப		xxx	
	பங்குமுதல் க/கு				xxx

மறுவெளியீட்டு விலை ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளின் செலுத்தப் பெறாத தொகையை விட அதிகமாக இருப்பின், அதன் விளைவு மறுவெளியீட்டின் இலாபமாகும். அது ஒரு முதலின இலாபமாகும். அது முதலினக் காப்பு கணக்கிற்கு மாற்றப்பட வேண்டும். அதற்கான குறிப்பேட்டுப் பதிவு பின்வருமாறு.

நாள்	விவரம்		பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	ஒறுப்பிழப்பு க/கு	ப		xxx	
	முதலினக் காப்பு க/கு				xxx

ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளில் ஒரு பகுதி பங்குகள் மட்டும் மறுவெளியீடு செய்யப்பட்டால், மறுவெளியீட்டில் கிடைத்த இலாபத் தொகை மறுவெளியீடு செய்யப்பட்ட பங்குகளின் விகிதாச்சார அளவிற்கு முதலினக் காப்பு கணக்கிற்கு மாற்றப்படும். அந்த விகிதாச்சாரத் தொகை பின்வருமாறு கணக்கிடப்படும்.

$$\frac{\text{ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட மொத்தத் தொகை}}{\text{ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட மொத்த பங்குகளின் எண்ணிக்கை}} \times \text{மறுவெளியீடு செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை}$$

பங்குகள் ஒறுப்பிழப்பு கணக்கில் மீதம் உள்ள தொகை இருப்புநிலைக் குறிப்பில் பங்கு முதல் கணக்குக்கு கீழ் தனி தலைப்பில் காட்டப்படும். அந்த கணக்குகளின் குறிப்புகள் கீழ் தரப்படும்.

12th-Accountancy-Unit-07_TM.indd 240 12/9/2021 11:19:13 PM

எடுத்துக்காட்டு 10

அனு நிறுமத்தால் ₹ 10 முகமதிப்பில் வெளியிடப்பட்ட நேர்மைப் பங்குகளில், தியாகு என்பவர் வைத்திருந்த ₹ 200 நேர்மைப் பங்குகளுக்கு இறுதி அழைப்புத் தொகையான ₹ 3 செலுத்தாத காரணத்தால் அவை ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன. அப்பங்குகள் ₹ 6 வீதம் லக்ஷ்மனுக்கு மறுவெளியீடு செய்யப்பட்டன். ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

தீர்வு

அனு நிறுமத்தின் ஏடுகளில்
குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்			பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	நேர்மைப் பங்கு முதல் க/கு	(200 × 10)	ப		2,000	
	நேர்மைப் பங்கு இறுதி அழைப்பு க/கு	(200 × 3)				600
	பங்கு ஒறுப்பிழப்பு க/கு	(200 × 7)				1,400
	(200 பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன)					
	வங்கி க/கு	(200 × 6)	ப		1,200	
	பங்கு ஒறுப்பிழப்பு க/கு	(200 × 4)	ப		800	
	நேர்மைப் பங்குமுதல் க/கு	(200 × 10)				2,000
	(ஒறுப்பிழப்பு செய்த பங்குகள் மறுவெளியீடு செய்யப்பட்டன)					
	பங்கு ஒறுப்பிழப்பு க/கு	(1,400-800)	ப		600	
	முதலினக் காப்பு க/கு					600
	(பங்கு ஒறுப்பிழப்பு கணக்கு முதலினக் காப்பு கணக்கிற்கு மாற்றப்பட்டது)					

எடுத்துக்காட்டு 11

மருது நிறுமம் ₹ 10 மதிப்புள்ள 150 பங்குகளை பங்கொன்றுக்கு ₹ 4 இறுதி அழைப்புத் தொகை செலுத்தத் தவறியதால் ஒறுப்பிழப்பு செய்தது. அவற்றில் 100 பங்குகளை பங்கொன்றுக்கு ₹ 9 வீதம் மறுவெளியீடு செய்தது. ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

தீர்வு

மருது நிறுமத்தின் ஏடுகளில்
குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்			பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	பங்குமுதல் க/கு	(150 × 10)	ப		1,500	
	பங்கு இறுதி அழைப்பு க/கு	(150 × 4)				600
	பங்கு ஒறுப்பிழப்பு க/கு	(150 × 6)				900
	(150 பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன)					
	வங்கி க/கு	(100 × 9)	ப		900	
	பங்கு ஒறுப்பிழப்பு க/கு	(100 × 1)	ப		100	
	பங்குமுதல் க/கு	(100 × 10)				1,000
	(ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட 100 பங்குகள் ₹ 9 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டன)					

12th-Accountancy-Unit-07_TM.indd 241 12/9/2021 11:19:13 PM

	பங்கு ஒறுப்பிழப்பு க/கு ப முதலினக் காப்பு க/கு (மறுவெளியீட்டின் இலாபம் முதலினக் காப்பு கணக்கிற்கு மாற்றப்பட்டது)		500	500

குறிப்பு: 150 பங்குகளுக்கான ஒறுப்பிழப்புத் தொகை = ₹ 900

100 பங்குகளுக்கான ஒறுப்பிழப்புத் தொகை = $\frac{900}{150}$ x 100 = ₹ 600

இலாபம் அல்லது நட்டம் = ஒறுப்பிழப்புத் தொகை – மறுவெளியீட்டுத் தள்ளுபடி

= 600 – 100

நிகர ஆதாயம் = ₹ 500

எடுத்துக்காட்டு 12

ஜெமினி வரையறு நிறுமம் பங்கொன்றுக்கு ₹ 10 மதிப்புள்ள ₹ 7 அழைக்கப்பட்ட 20 சாதாரண பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தது. மகேஷ் என்பவர் அப்பங்குகளுக்கான விண்ணப்பம் மற்றும் ஒதுக்கீடு பணம் ₹ 5 செலுத்தி இருந்தார். அவற்றில் 15 பங்குகள் பங்கொன்றுக்கு ₹ 6 வீதம் பெற்றுக் கொண்டு ₹ 7 வீதம் செலுத்தப்பட்ட பங்குகளாக நரேஷ் என்பவருக்கு மறுவெளியீடு செய்யப்பட்டது. பங்கு ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

தீர்வு

ஜெமினி நிறுமத்தின் ஏடுகளில்
குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	நேர்மைப் பங்குமுதல் க/கு (20 × 7) ப		140	
	நேர்மைப் பங்குமுதல் அழைப்பு க/கு (20 × 2)			40
	பங்கு ஒறுப்பிழப்பு க/கு (20 × 5)			100
	(₹ 7 அழைக்கப்பட்ட 20 பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன)			
	வங்கி க/கு (15 × 6) ப		90	
	பங்கு ஒறுப்பிழப்பு க/கு ப		15	
	நேர்மைப்பங்குமுதல் க/கு (15 × 7)			105
	(15 பங்குகள் ₹ 7 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டன)			
	பங்கு ஒறுப்பிழப்பு க/கு ப		60	
	முதலினக் காப்பு க/கு			60
	(பங்கு ஒறுப்பிழப்பு கணக்கு முதலினக் காப்பு கணக்கிற்கு மாற்றப்பட்டது)			

குறிப்பு: முதலினக் காப்பிற்கு மாற்றுவதற்கான கணக்கீடு

15 பங்குகளை ஒறுப்பிழப்பு செய்ததற்கான தொகை = $\frac{100}{20} \times 15$ = 75

கழிக்க: மறுவெளியீட்டு நட்டம் 15

முதலினக் காப்பிற்கு மாற்ற வேண்டியது 60

பங்கு ஒறுப்பிழப்பு கணக்கில் உள்ள மீதமுள்ள தொகை (40–15) = ₹ 25 இருப்புநிலைக் குறிப்பில் தோன்றும்.

12th-Accountancy-Unit-07_TM.indd 242 12/9/2021 11:19:14 PM

எடுத்துக்காட்டு 13

ஜெனிபர் நிறுமம் பங்கொன்று ₹ 10 முகமதிப்புள்ள 10,000 நேர்மைப் பங்குகளை வெளியிட்டது. பங்கொன்றுக்கு விண்ணப்பத்தின் மீது ₹ 3, ஒதுக்கீட்டின் மீது ₹ 3, முதல் அழைப்பின் மீது ₹ 2 மற்றும் இரண்டாம் மற்றும் இறுதி அழைப்பின் மீது ₹ 2 செலுத்த வேண்டி இருந்தது. சுப்பு என்பவர் 100 பங்குகளுக்கான இரண்டாவது மற்றும் இறுதி அழைப்பினைக் கட்ட தவறினார். எஞ்சிய தொகைகள் அனைத்தும் பெறப்பட்டன. சுப்புவின் பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன மற்றும் அவைகள் ஹேமா என்பவருக்கு பங்கு ஒன்று ₹ 7 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டன. மேற்கண்ட நடவடிக்கைகளுக்கு குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்.

தீர்வு

ஜெனிபர் நிறுமத்தின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	வங்கி க/கு (10,000 x 3) ப		30,000	
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு			30,000
	(பங்கு விண்ணப்பப் பணம் பெற்றது)			
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு ப		30,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு			30,000
	(பங்கு விண்ணப்பப் பணம் பங்குமுதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது)			
	நேர்மைப்பங்கு ஒதுக்கீட்டு க/கு (10,000 x 3) ப		30,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு			30,000
	(ஒதுக்கீட்டுப் பணம் பெற வேண்டியது)			
	வங்கி க/கு (10,000 x 3) ப		30,000	
	நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டு க/கு			30,000
	(ஒதுக்கீட்டுப் பணம் பெற்றது)			
	நேர்மைப் பங்கு முதல் அழைப்பு க/கு ப		20,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு			20,000
	(முதல் அழைப்பு பணம் பெற வேண்டியது)			
	வங்கி க/கு (10,000 x 2) ப		20,000	
	நேர்மைப் பங்கு முதல் அழைப்பு க/கு			20,000
	(முதல் அழைப்பு பணம் பெற்றது)			
	நேர்மைப் பங்கு இரண்டாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு (10,000 x 2) ப		20,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு			20,000
	(இரண்டாம் மற்றும் இறுதி அழைப்பு பணம் பெற வேண்டியது)			
	வங்கி க/கு (9,900 x 2) ப		19,800	
	நேர்மைப் பங்கு இரண்டாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு			19,800
	(இரண்டாம் மற்றும் இறுதி அழைப்பு பணம் பெற்றது)			

12th-Accountancy-Unit-07_TM.indd 243 12/9/2021 11:19:14 PM

	நேர்மைப் பங்குமுதல் க/கு (100 x 10) ப		1,000	
	நேர்மைப் பங்கு இரண்டாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு			200
	பங்கு ஒறுப்பிழப்பு க/கு			800
	(100 பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது)			
	வங்கி க/கு (100 x 7) ப		700	
	பங்கு ஒறுப்பிழப்பு க/கு ப		300	
	நேர்மைப் பங்குமுதல் க/கு (100 x 10)			1,000
	(ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகள் மறுவெளியீடு செய்யப்பட்டது)			
	பங்கு ஒறுப்பிழப்பு க/கு (800-300) ப		500	
	முதலினக் காப்பு க/கு			500
	(மறுவெளியீட்டு இலாபம் முதலினக்காப்பு கணக்கிற்கு மாற்றப்பட்டது)			

எடுத்துக்காட்டு 14

X நிறுமம் ₹ 10 மதிப்புள்ள 10,000 நேர்மைப் பங்குகளை வெளியீடு செய்தது. பங்குகள் மீதான பணம் செலுத்த வேண்டிய விவரங்கள் பின்வருமாறு:

விண்ணப்பத்தின் போது	₹ 2	முதல் அழைப்பின் போது	₹ 2
ஒதுக்கீட்டின் போது	₹ 4	இரண்டாவது மற்றும் இறுதி அழைப்பின் போது	₹ 2

30,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. 10,000 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. மீதமுள்ள விண்ணப்பங்கள் விகிதச்சார அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மிகுதியாகப் பெற்ற விண்ணப்பத் தொகையை ஒதுக்கீட்டிற்கு பயன்படுத்தி கொள்ளப்பட்டது. இயக்குனர்கள் இரண்டு அழைப்புகளையும் மேற்கொண்டனர். 600 பங்குகளின் இரண்டாம் அழைப்புத் தொகையை தவிர அனைத்து தொகைகளும் பெறப்பட்டன. பின்னர் அப்பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன. அவற்றில், 400 பங்குகள் ஒரு பங்கிற்கு ₹ 7 பெற்றுக் கொண்டு, முழுமையாக செலுத்திய பங்காக மறுவெளியீடு செய்யபட்டன. குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்.

தீர்வு

X நிறுமத்தின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	வங்கி க/கு (30,000 x 2) ப		60,000	
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு			60,000
	(30,000 பங்குகளுக்கான விண்ணப்பப் பணம் பெற்றது)			
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு (10,000 x 2) ப		20,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு			20,000
	(பங்கு விண்ணப்பப் பணம் பங்குமுதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது)			
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு ப		40,000	
	வங்கி க/கு (10,000 x 2)			20,000
	நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டு க/கு (10,000 x 2)			20,000
	(நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு பணம் திருப்பி அளிக்கப்பட்டது மற்றும் மிகுதியாகப் பெற்ற விண்ணப்பத் தொகை ஒதுக்கீட்டிற்கு சரிக்கட்டப்பட்டது)			

12th-Accountancy-Unit-07_TM.indd 244 12/9/2021 11:19:14 PM

	நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டு க/கு (10,000 x 4)	ப		40,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு				40,000
	(ஒதுக்கீட்டுக் பணம் பெற வேண்டியது)				
	வங்கி க/கு (40,000-20,000)	ப		20,000	
	நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டு க/கு				20,000
	(ஒதுக்கீட்டு பணம் பெற்றது)				
	நேர்மைப் பங்கு முதல் அழைப்பு க/கு (10,000 x 2)	ப		20,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு				20,000
	(முதல் அழைப்பு பணம் பெற வேண்டியது)				
	வங்கி க/கு	ப		20,000	
	நேர்மைப் பங்கு முதல் அழைப்பு க/கு				20,000
	(முதல் அழைப்பு பணம் பெற்றது)				
	நேர்மைப் பங்கு இரண்டாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு (10,000 x 2)	ப		20,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு				20,000
	(இரண்டாம் மற்றும் இறுதி அழைப்பு பணம் பெற வேண்டியது)				
	வங்கி க/கு (9,400 x 2)	ப		18,800	
	நேர்மைப் பங்கு இரண்டாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு				18,800
	(9,400 பங்குகளுக்கான இரண்டாம் மற்றும் இறுதி அழைப்பு பணம் பெற்றது)				
	நேர்மைப் பங்குமுதல் க/கு (600 x 10)	ப		6,000	
	நேர்மைப் பங்கு இரண்டாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு (600 x 2)				1,200
	பங்கு ஒறுப்பிழப்பு க/கு (600 x 8)				4,800
	(600 பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது)				
	வங்கி க/கு (400 x 7)	ப		2,800	
	பங்கு ஒறுப்பிழப்பு க/கு (400 x 3)	ப		1,200	
	நேர்மைப் பங்குமுதல் க/கு				4,000
	(ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட 400 பங்குகள் மறுவெளியீடு செய்யப்பட்டது)				
	பங்கு ஒறுப்பிழப்பு க/கு	ப		2,000	
	முதலினக் காப்பு க/கு				2,000
	(மறுவெளியீட்டு இலாபம் முதலினக் காப்பு கணக்கிற்கு மாற்றப்பட்டது)				

குறிப்பு:

ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட 600 பங்குகளுக்கான தொகை = ₹ 4,800

400 பங்குகளுக்கான ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட தொகை = $\frac{4,800}{600} \times 400$ = ₹ 3,200

கழிக்க: மறுவெளியீட்டு நட்டம்	1,200
நிகர ஆதாயம் முதலினக் காப்பு கணக்கிற்கு மாற்றப்பட்டது	2,000

12th-Accountancy-Unit-07_TM.indd 245 12/9/2021 11:19:14 PM

7.8.7 பங்குகளை முனைமத்தில் வெளியிடுதல்

ஒரு நிறுமம் தனது பங்குகளை முகமதிப்பினை விட (பெயரளவு மதிப்பு) அதிக விலைக்கு வெளியிடும் போது அந்தப் பங்குகள் முனைமத்தில் வெளியிடுதல் என்று அழைக்கப்படுகிறது. முகமதிப்பைவிட மிகுதியான தொகை முனைமத்தொகை ஆகும். இது பத்திர முனைமக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது. பத்திர முனைமத்தொகையானது விண்ணப்பத் தொகையிலோ அல்லது ஒதுக்கீட்டுத் தொகையிலோ அல்லது அழைப்புத் தொகையிலோ அடங்கியிருக்கலாம். பத்திர முனைமத்தொகை இருப்புநிலைக் குறிப்பில், கணக்குகளுக்கான குறிப்புகளில் காப்புகள் மற்றும் மிகுதி என்ற தனித் தலைப்பின் கீழ் காட்டப்படுகிறது.

பத்திர முனைமத்தினைப் பதிவு செய்வதற்கான குறிப்பேட்டுப் பதிவுகள் பின்வருமாறு:

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	(i) முனைமமானது விண்ணப்பத்தொகையுடன் பெறப்பட்டால்			
	(அ) விண்ணப்பத் தொகை பெறும்போது (விண்ணப்பத் தொகை + முனைமம்)			
	வங்கி க/கு ப		xxx	
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு			xxx
	(ஆ) விண்ணப்பத் தொகையினை மாற்றும் போது			
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு ப		xxx	
	நேர்மைப் பங்குமுதல் க/கு			xxx
	பத்திர முனைமக் க/கு			xxx
	(ii) முனைமமானது ஒதுக்கீட்டுத் தொகை/ அழைப்புத் தொகையுடன் பெறப்பட்டால்			
	(அ) ஒதுக்கீட்டுத் தொகை / அழைப்புத் தொகை பெற வேண்டியது (ஒதுக்கீட்டுத் தொகை / அழைப்புத் தொகை + முனைமம்)			
	நேர்மைப்பங்கு ஒதுக்கீட்டு/அழைப்பு க/கு ப		xxx	
	நேர்மைப் பங்குமுதல் க/கு			xxx
	பத்திர முனைமக் க/கு			xxx
	(ஆ) ஒதுக்கீட்டு / அழைப்புத் தொகை பெறும்போது			
	வங்கி க/கு ப		xxx	
	நேர்மைப்பங்கு ஒதுக்கீட்டு / அழைப்பு க/கு			xxx
	(iii) பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்படும் போது (முனைமம் பெறப்படாத போது)			
	நேர்மைப் பங்குமுதல் க/கு ப		xxx	
	பத்திர முனைமக் க/கு ப		xxx	
	நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டு க/கு			xxx
	நேர்மைப் பங்கு அழைப்பு க/கு			xxx
	பங்கு ஒறுப்பிழப்பு க/கு			xxx

மாணவர் குறிப்பு: ஏற்கனவே முனைமத்தொகை பெறப்பட்ட பங்குகளை ஒறுப்பிழப்பு செய்யும்போது பத்திர முனைமக் கணக்கில் பற்று வைக்கக் கூடாது.

12th-Accountancy-Unit-07_TM.indd 246 12/9/2021 11:19:14 PM

எடுத்துக்காட்டு 15

ஷெரோ ஹெல்த் கேர் நிறுமம் ஒன்று ₹ 10 மதிப்புள்ள 3,00,000 நேர்மைப்பங்குகளை பங்கொன்றுக்கு ₹ 2 வீதம் முனைமத்தில் வெளியிட விண்ணப்பங்களைக் கோரியது.

விண்ணப்பத்தின் போது ₹ 3

ஒதுக்கீட்டின் போது ₹ 5 (முனைமம் உட்பட)

முதல் மற்றும் இறுதி அழைப்பின் போது ₹ 4

மிகை ஒப்பம் உள்ள நிலையில் 4,00,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. மிகுதியாகப் பெற்ற விண்ணப்பங்கள் இயக்குநர்களால் நிராகரிக்கப்பட்டன. அனைத்துத் தொகைகளும் பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

தீர்வு

குறிப்பு: நிராகரிக்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை = 4,00,000 – 3,00,000 = ₹ 1,00,000

ஷெரோ ஹெல்த் கேர் நிறுமத்தின் ஏடுகளில்
குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	வங்கி க/கு (4,00,000 x 3) ப		12,00,000	
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு			12,00,000
	(₹ 3 வீதம் 4,00,000 பங்குகளுக்கான விண்ணப்பத் தொகை பெறப்பட்டது)			
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு (3,00,000 x 3) ப		9,00,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு			9,00,000
	(பங்கு விண்ணப்பத் தொகை பங்குமுதலுக்கு மாற்றப்பட்டது)			
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு (1,00,000 x 3) ப		3,00,000	
	வங்கி க/கு			3,00,000
	(நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கான விண்ணப்பத் தொகை திருப்பியனுப்பப் பட்டது)			
	நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டுக் க/கு (3,00,000 x 5) ப		15,00,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு (3,00,000 x 3)			9,00,000
	பத்திர முனைமக் க/கு (3,00,000 x 2)			6,00,000
	(3,00,000 பங்குகளுக்கான பங்கு ஒதுக்கீட்டுத் தொகை பங்கொன்றுக்கு ₹ 5 வீதம், முனைமம் ₹ 2 உட்பட பெறவேண்டியது)			
	வங்கி க/கு (3,00,000 x 5) ப		15,00,000	
	நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டுக் க/கு			15,00,000
	(ஒதுக்கீட்டுத் தொகை பெற்றது)			
	நேர்மைப் பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்பு க/கு ப		12,00,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு (3,00,000 x 4)			12,00,000
	(அழைப்புத்தொகை பெற வேண்டியது)			

12th-Accountancy-Unit-07_TM.indd 247 12/9/2021 11:19:14 PM

	வங்கி க/கு ப		12,00,000	
	நேர்மைப் பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்பு க/கு			12,00,000
	(அழைப்புத்தொகை பெற்றது)			

எடுத்துக்காட்டு 16

கீர்த்திகா நிறுமம் பங்கொன்று ₹10 வீதம் நேர்மைப் பங்குகளை 10% முனைமத்தில் வெளியிட்டது. தொகையானது விண்ணப்பத்தின் போது ₹ 2, ஒதுக்கீட்டின் போது ₹ 3 (முனைமம் உட்பட), முதல் அழைப்பின் போது ₹ 3, மற்றும் இரண்டாம் மற்றும் இறுதி அழைப்பின் போது ₹ 3 எனச் செலுத்தப்பட வேண்டும்.

பின்வரும் தருணங்களில் பங்குகளை ஒறுப்பிழப்பு செய்வதற்கு தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(i) 50 பங்குகளை வைத்திருக்கும் மோகன் என்பவர் இரண்டாம் மற்றும் இறுதி அழைப்புத் தொகையை செலுத்தத் தவறியதால் அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன.

(ii) 50 பங்குகளை வைத்திருக்கும் மோகன் என்பவர் ஒதுக்கீட்டுத் தொகை, முதல் அழைப்பு, இரண்டாம் மற்றும் இறுதி அழைப்புத் தொகை செலுத்தத் தவறியதால் அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன.

(iii) 50 பங்குகளை வைத்திருக்கும் மோகன் என்பவர் ஒதுக்கீட்டுத் தொகை மற்றும் முதல் அழைப்புத் தொகை செலுத்தத் தவறியதால் முதல் அழைப்பிற்கு பின் அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்புச் செய்யப்பட்டன.

தீர்வு

கீர்த்திகா நிறுமத்தின் ஏடுகளில்
குறிப்பேட்டுப் பதிவுகள்

(i) இறுதி அழைப்புத்தொகை செலுத்தப்படாத போது

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	நேர்மைப் பங்குமுதல் க/கு (50 x 10) ப		500	
	நேர்மைப் பங்கு இரண்டாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு (50 x3)			150
	பங்கு ஒறுப்பிழப்பு க/கு (50 x 7)			350
	(50 பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன)			

குறிப்பு: முனைமத் தொகை நிறுமத்தால் பெறப்பட்டதால் முனைமத் தொகையை இரத்து செய்தல் கூடாது.

(ii) ஒதுக்கீட்டுத் தொகை, முதல் அழைப்பு, இரண்டாம் அழைப்பு மற்றும் இறுதி அழைப்புத் தொகை பெறப்படாத போது

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	நேர்மைப் பங்கு முதல் க/கு (50 x 10) ப		500	
	பத்திர முனைமக் க/கு (50 x 1) ப		50	
	நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டுக் க/கு (50 x 3)			150
	நேர்மைப் பங்கு முதல் அழைப்பு க/கு (50 x 3)			150
	நேர்மைப் பங்கு இரண்டாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு (50 x 3)			150
	பங்கு ஒறுப்பிழப்பு க/கு (50 x 2)			100
	(50 பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன)			

12th-Accountancy-Unit-07_TM.indd 248 12/9/2021 11:19:15 PM

(iii) ஒதுக்கீட்டுத் தொகை மற்றும் அழைப்புத் தொகை பெறப்படாத போது

நாள்	விவரம்			பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	நேர்மைப் பங்குமுதல் க/கு	(50 x 7)	ப		350	
	பத்திர முனைமக் க/கு	(50 x 1)	ப		50	
	நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டுக் க/கு	(50 x 3)				150
	நேர்மைப் பங்கு முதல் அழைப்பு க/கு	(50 x 3)				150
	பங்கு ஒறுப்பிழப்பு க/கு	(50 x 2)				100
	(50 பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன)					

எடுத்துக்காட்டு 17

திவ்யா நிறுமம் 10,000 ₹ 10 மதிப்புள்ள நேர்மைப் பங்குகளை ₹ 2 முனைமத்தில் 14,000 பங்குகள் விண்ணப்பித்தவர்களுக்கு விகித அளவு அடிப்படையில் ஒதுக்கீடு செய்தது. மிகுதியாகப் பெறப்பட்ட விண்ணப்பத் தொகை ஒதுக்கீட்டுத் தொகையில் சரிக்கட்டப்படும். பங்கொன்றுக்கு விண்ணப்பத்தின் போது ₹ 2, ஒதுக்கீட்டின் போது ₹ 5 (முனைமம் ₹ 2 உட்பட) முதல் அழைப்பின்போது ₹ 3 மற்றும் இறுதி அழைப்பின்போது ₹ 2 செலுத்தப்பட வேண்டும். விகாஸ் என்ற பங்குதாரர் தன்னுடைய 300 பங்குகளுக்கு முதல் மற்றும் இறுதி அழைப்புகளை செலுத்தத் தவறினார். அனைத்துப் பங்குகளும் ஒறுப்பிழப்புச் செய்யப்பட்டன. அவற்றில் 200 பங்குகள் பங்கொன்று ₹ 9 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டன. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

தீர்வு

திவ்யா நிறுமத்தின் ஏடுகளில்
குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்		பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	வங்கி க/கு (14,000 x 2)	ப		28,000	
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு				28,000
	(14,000 பங்குகளுக்கு விண்ணப்பப் பணம் பெறப்பட்டது)				
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு (10,000 x 2)	ப		20,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு				20,000
	(விண்ணப்பத் தொகை பங்குமுதலுக்கு மாற்றப்பட்டது)				
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு (4,000 x 2)	ப		8,000	
	நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டு க/கு				8,000
	(மிகுதியான விண்ணப்பத் தொகை ஒதுக்கீட்டிற்கு சரிசெய்யப்பட்டது)				
	நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டுக் க/கு (10,000 x 5)	ப		50,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு (10,000 x 3)				30,000
	பத்திர முனைமக் க/கு (10,000 x 2)				20,000
	(ஒதுக்கீட்டுத் தொகை பெற வேண்டியது)				
	வங்கி க/கு (50,000 – 8,000)	ப		42,000	
	நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டுக் க/கு				42,000
	(ஒதுக்கீட்டுத் தொகை பெற்றது)				

12th-Accountancy-Unit-07_TM.indd 249 12/9/2021 11:19:15 PM

	நேர்மைப் பங்கு முதல் அழைப்பு க/கு (10,000 x 3) ப நேர்மைப் பங்குமுதல் க/கு (முதல் அழைப்புத் தொகை பெறவேண்டியது)		30,000	30,000
	வங்கி க/கு (9,700 x 3) ப நேர்மைப் பங்கு முதல் அழைப்பு க/கு (9,700 பங்குகளுக்குரிய முதல் அழைப்புத் தொகை பெற்றது)		29,100	29,100
	நேர்மைப் பங்கு இரண்டாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு ப நேர்மைப் பங்குமுதல் க/கு (இரண்டாம் மற்றும் இறுதி அழைப்புத்தொகை பெற வேண்டியது)		20,000	20,000
	வங்கி க/கு (9,700 x 2) ப நேர்மைப் பங்கு இரண்டாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு (9,700 பங்குகளுக்குரிய இரண்டாம் மற்றும் இறுதி அழைப்புத் தொகை பெற்றது)		19,400	19,400
	நேர்மைப் பங்குமுதல் க/கு (300 x 10) ப நேர்மைப் பங்கு முதல் அழைப்பு க/கு (300 x 3) நேர்மைப் பங்கு இரண்டாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு (300 x 2) பங்கு ஒறுப்பிழப்பு க/கு (300 x 5) (முதல் மற்றும் இரண்டாம் அழைப்புத் தொகை செலுத்தாததால் 300 பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன)		3,000	 900 600 1,500
	வங்கி க/கு (200 x 9) ப பங்கு ஒறுப்பிழப்பு க/கு ப நேர்மைப் பங்குமுதல் க/கு (200 பங்குகள் மறுவெளியீடு செய்யப்பட்டன)		1,800 200	 2,000
	பங்கு ஒறுப்பிழப்பு க/கு ப முதலினக் காப்பு க/கு (ஒறுப்பிழப்பு செய்த 200 பங்குகளை மறுவெளியீடு செய்ததில் கிடைத்த இலாபம் முதலினக் காப்பிற்கு மாற்றப்பட்டது)		800	800

குறிப்பு:

ஒறுப்பிழப்பு செய்த 300 பங்குகளுக்கான தொகை = ₹ 1,500

ஒறுப்பிழப்பு செய்த 200 பங்குகளுக்கான தொகை = $\frac{1,500}{300} \times 200$ = ₹ 1,000

கழிக்க: மறுவெளியீட்டு நட்டம்	200
நிகர ஆதாயம் முதலினக் காப்பிற்கு மாற்றப்பட்டது	800

எடுத்துக்காட்டு 18

தங்கம் நிறுமம் பங்கொன்று ₹ 10 வீதம் 50,000 நேர்மைப் பங்குகளை, பங்கொன்று ₹ 2 வீதம் முனைமத்தில் வெளியிட்டது. தொகை கீழ்க்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பத்தின் போது	₹ 5
ஒதுக்கீட்டின் போது	₹ 5 (முனைமம் உட்பட)
முதல் மற்றும் இறுதி அழைப்பின் போது	₹ 2

12th-Accountancy-Unit-07_TM.indd 250 12/9/2021 11:19:15 PM

அனைத்துப் பங்குகளும் ஒப்பப்பட்டன. பிரியா என்பவருக்கு ஒதுக்கப்பட்ட 500 பங்குகள் மீதான ஒதுக்கீட்டுத் தொகை, முதல் மற்றும் இறுதி அழைப்புத் தொகை தவிர அனைத்துத் தொகையும் பெறப்பட்டது. அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன. ஒறுப்பிழப்பு செய்த அனைத்து பங்குகளும் தேவி என்பவருக்கு ₹ 8 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

தீர்வு

தங்கம் நிறுமத்தின் ஏடுகளில்
குறிப்பேட்டுப் பதிவுகள்

நாள்	விவரம்			பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	வங்கி க/கு (50,000 x 5)		ப		2,50,000	
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு					2,50,000
	(விண்ணப்பத் தொகை பெற்றது)					
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு		ப		2,50,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு					2,50,000
	(விண்ணப்பத் தொகை பங்கு முதலுக்கு மாற்றப்பட்டது)					
	நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டுக் க/கு	(50,000 x 5)	ப		2,50,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு	(50,000 x 3)				1,50,000
	பத்திர முனைமக் க/கு	(50,000 x 2)				1,00,000
	(ஒதுக்கீட்டுத் தொகை பெறவேண்டியது)					
	வங்கி க/கு	(49,500 x 5)	ப		2,47,500	
	நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டு க/கு					2,47,500
	(500 பங்குகள் தவிர ஒதுக்கீட்டுத் தொகை பெற்றது)					
	நேர்மைப் பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்பு க/கு	(50,000 x 2)	ப		1,00,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு					1,00,000
	(முதல் மற்றும் இறுதி அழைப்புத் தொகை பெற வேண்டியது)					
	வங்கி க/கு	(49,500 x 2)	ப		99,000	
	நேர்மைப் பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்பு க/கு					99,000
	(முதல் மற்றும் இறுதி அழைப்புத் தொகை பெற்றது)					
	நேர்மைப் பங்குமுதல் க/கு	(500 x 10)	ப		5,000	
	பத்திர முனைமக் க/கு	(500 x 2)	ப		1,000	
	நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டுக் க/கு	(500 x 5)				2,500
	நேர்மைப் பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்பு க/கு	(500 x 2)				1,000
	பங்கு ஒறுப்பிழப்பு க/கு	(500 x 5)				2,500
	(500 பங்குகள் மீதான ஒதுக்கீட்டுத் தொகை, முதல் மற்றும் இறுதி அழைப்புத் தொகை செலுத்தாததால் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது)					
	வங்கி க/கு	(500 x 8)	ப		4,000	
	பங்கு ஒறுப்பிழப்புக் க/கு	(500 x 2)	ப		1,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு	(500 x 10)				5,000
	(ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட 500 பங்குகள் மறுவெளியீடு செய்யப்பட்டது)					

12th-Accountancy-Unit-07_TM.indd 251 12/9/2021 11:19:15 PM

	பங்கு ஒறுப்பிழப்பு க/கு (2,500–1,000)	ப		1,500	
	முதலினக் காப்பு க/கு				1,500
	(ஒறுப்பிழப்பு செய்த பங்குகளை மறுவெளியீடு செய்ததில் கிடைத்த இலாபம் முதலினக் காப்பிற்கு மாற்றப்பட்டது)				

7.9 மொத்தத் தொகையில் ரொக்கத்திற்கு பங்குகளை வெளியீடு செய்தல்

பங்குகள் முகமதிப்பிலோ அல்லது முனைமத்திலோ வெளியிடப்பட்டு, அதற்குரிய தொகையை ஒரு தவணையில் செலுத்த வேண்டியிருந்தால், அந்தப் பங்குகள் மொத்தத் தொகையில் வெளியிட்டதாக கருதப்படுகிறது.

இதற்குரிய குறிப்பேட்டுப் பதிவுகள் பின்வருமாறு:

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	(i) விண்ணப்பத் தொகை பெறும்போது			
	வங்கி க/கு	ப	xxx	
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு			xxx
	(ii) விண்ணப்பத் தொகையை மாற்றும் போது			
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு	ப	xxx	
	நேர்மைப் பங்குமுதல் க/கு			xxx
	பத்திர முனைமக் க/கு (முனைமத்தில் வெளியிட்டால்)			xxx

எடுத்துக்காட்டு 19

சாரா நிறுமம் பங்கொன்று ₹ 10 வீதம் 10,000 நேர்மைப் பங்குகளை விண்ணப்பத்தின்போது முழுத்தொகையும் செலுத்தும் வகையில் வெளியிட்டது. கீழ்க்கண்ட நிலைகளில் குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்.

(i) பங்குகளை முகமதிப்பில் வெளியிட்டால்

(ii) பங்கொன்று ₹ 2 முனைமத்தில் வெளியிட்டால்

தீர்வு

சாரா நிறுமத்தின் ஏடுகளில்
குறிப்பேட்டுப் பதிவுகள்

(i) பங்குகளை முகமதிப்பில் வெளியிட்டால்

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	வங்கி க/கு (10,000 x10)	ப	1,00,000	
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு			1,00,000
	(விண்ணப்பத் தொகை பெறப்பட்டது)			
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு	ப	1,00,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு			1,00,000
	(விண்ணப்பத் தொகை மாற்றப்பட்டது)			

12th-Accountancy-Unit-07_TM.indd 252 12/9/2021 11:19:15 PM

(ii) பங்குகளை முனைமத்தில் வெளியிட்டால்

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	வங்கி க/கு (10,000 x 12) ப		1,20,000	
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு			1,20,000
	(விண்ணப்பத் தொகை பெறப்பட்டது)			
	நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு ப		1,20,000	
	நேர்மைப் பங்குமுதல் க/கு (10,000 x 10)			1,00,000
	பத்திர முனைமக் க/கு (10,000 x 2)			20,000
	(விண்ணப்பத் தொகை பங்குமுதலுக்கு மாற்றப்பட்டது)			

7.10 ரொக்கத்திற்கு அல்லாத மறுபயனுக்காக பங்குகளை வெளியிடுதல்

நிறுமம், நிலம் மற்றும் கட்டடம், இயந்திரம் போன்ற நிலைச்சொத்துகளை வாங்கும்போது, பங்குகளை ரொக்கத்திற்கு அல்லாத மறுபயனுக்காக வெளியிடலாம். இத்தருணத்தில் கீழ்க்கண்ட குறிப்பேட்டுப் பதிவுகளைப் பதிய வேண்டும்.

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	(i) சொத்துகளை வாங்கும்போது			
	குறிப்பிட்ட சொத்து க/கு ப		xxx	
	விற்பனையாளர் க/கு			xxx
	(ii) பங்குகளை வெளியிடும்போது			
	விற்பனையாளர் க/கு ப		xxx	
	நேர்மைப் பங்குமுதல் க/கு			xxx
	பத்திர முனைமக் க/கு (முனைமத்தில் வெளியிட்டால்)			xxx

ஒரு நிறுமம் வணிக நிறுவனத்தை வாங்குவதற்காகவும், தோற்றுவிப்பாளர்களுக்கு அவர்களின் பணிக்காகவும், தரகர் மற்றும் ஒப்புறுதியாளர்களுக்கு கழிவு கொடுப்பதற்காகவும் போன்ற ரொக்கத்திற்கு அல்லாத மறுபயனுக்காக பங்குகளை வெளியிடலாம்.

எடுத்துக்காட்டு 20

ராஜன் நிறுமம் ₹ 6,00,000 மதிப்புள்ள இயந்திரத்தை ஜெகன் நிறுவனத்திடமிருந்து வாங்கியது. அது பங்கொன்று ₹ 10 மதிப்புள்ள முற்றிலும் செலுத்தப்பட்ட நேர்மைப் பங்குகளை அவர்களுக்கு செலுத்த வேண்டிய தொகைக்காக வழங்கியது. கீழ்க்கண்ட நிலைகளில் பதிய வேண்டிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(i) பங்குகளை முகமதிப்பில் வெளியிட்டால்
(ii) பங்குகளை 50% முனைமத்தில் வெளியிட்டால்

12th-Accountancy-Unit-07_TM.indd 253 12/9/2021 11:19:15 PM

தீர்வு

ராஜன் நிறுமத்தின் ஏடுகளில்
குறிப்பேட்டுப் பதிவுகள்

(i) பங்குகளை முகமதிப்பில் வெளியிடும் போது

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	இயந்திரம் க/கு ப ஜெகன் நிறுவனக் க/கு (இயந்திரம் வாங்கியது)		6,00,000	6,00,000
	ஜெகன் நிறுவனக் க/கு ப நேர்மைப் பங்குமுதல் க/கு (பங்கொன்று ₹ 10 வீதம் 60,000 முற்றிலும் செலுத்தப்பட்ட பங்குகளை வெளியிட்டது)		6,00,000	6,00,000

(ii) பங்குகளை 50% முனைமத்தில் வெளியிடும்போது

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
	இயந்திரம் க/கு ப ஜெகன் நிறுவனக் க/கு (இயந்திரம் வாங்கியது)		6,00,000	6,00,000
	ஜெகன் நிறுவனக் க/கு ப நேர்மைப் பங்குமுதல் க/கு (40,000 x 10) பத்திர முனைமக் க/கு (40,000 x 5) (பங்கொன்று ₹ 10 வீதம் 40,000 பங்குகள் 50% முனைமத்தில் வெளியிடப்பட்டது)		6,00,000	4,00,000 2,00,000

மாணவர் குறிப்பு

வெளியிடப்பட வேண்டிய பங்குகளின் எண்ணிக்கையைக் கணக்கிடுதல்

மொத்தத் தொகை = ₹ 6,00,000

பங்குகளின் முகமதிப்பு = ₹ 10

முனைமம் = 50%; ஆகையால், முனைமத் தொகை = 10 x 50% = ₹ 5

வெளியீட்டு விலை = முக மதிப்பு + முனைமம் = 10 + 5 = ₹ 15

வெளியிடப்பட வேண்டிய நேர்மைப் பங்குகளின் எண்ணிக்கை

$$= \frac{\text{மொத்தத் தொகை}}{\text{வெளியீட்டு விலை}} = \frac{6,00,000}{15} = 40,000 \text{ பங்குகள்}$$

மாணவர் செயல்பாடு 7.3

மூன்று வரையறு நிறுமங்களின் தகவலறிக்கையைப் பெறவும். அவற்றை வாசித்து இந்த பாடப்பகுதியில் நீங்கள் கற்றுக் கொண்ட விவரங்களை அடையாளம் காணவும். அதில், கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் மற்றும் தகவல்களைப் பகுப்பாய்வு செய்யுங்கள்.

12th-Accountancy-Unit-07_TM.indd 254 12/9/2021 11:19:15 PM

நினைவில் கொள்ள வேண்டியவை

- அங்கீகரிக்கப்பட்ட முதல் என்பது அமைப்பு முறையேட்டின் படி, அங்கீகரிக்கப்பட்ட அதிகபட்ச தொகையாகும்.
- ஒப்பிய முதலின் ஒரு பகுதி காப்பு முதலாகும். இது நிறுமம் கலைக்கப்படும் போது அழைக்கப்படும்.
- ஒரு பொது நிறுமம் நேர்மைப் பங்குகளை தகவலறிக்கை மூலம் வெளியிட அழைப்பு விடுவதை பொது வெளியீடு என்று அழைக்கிறோம்.
- பங்கு முதலினை தவணை முறையில் பெறும்போது, முதல் தவணை விண்ணப்பத் தொகை என்று அழைக்கப்படும்.
- வெளியிடப்பட்ட பங்குகளைவிட, குறைவான பங்குகள் ஏற்பு செய்வதை குறை ஒப்பம் என்று கூறுவர்.
- தகவலறிக்கையில் சொல்லப்பட்ட குறுமப்பங்கொப்பம் பெறப்பட்டவுடன் கிடைக்கும் போது ஒரு நிறுமம், பங்குகளைப் பொதுமக்களுக்கு ஒதுக்கீடு செய்யலாம்.
- விண்ணப்பங்களை ஒதுக்கீடு செய்யும் போது பங்குகளை விகித அளவில் ஒதுக்குவது விகித அளவு அடிப்படை ஒதுக்கீடு என்று அழைக்கப்படுகிறது.
- பங்குகளின் அழைக்கப்பட்டத் தொகையைவிட கூடுதலான தொகைச் செலுத்தப்பட்டால் அது அழைப்பு முன் பணம் எனப்படும்.
- ஒரு பங்குதாரர் ஒதுக்கீடு அல்லது அழைப்புகளில் தொகையினைச் செலுத்த தவறினால், செலுத்தாமல் உள்ள தொகை அழைப்பு நிலுவை என்று அறியப்படும்.
- ஒரு நிறுமம் பங்குகளை அதன் முகமதிப்பினைவிட கூடுதலாக வெளியிடுவதை, முனைமத்தில் வெளியிடல் என்கிறோம்.

சுய ஆய்வு வினாக்கள்

GBR6Y

I சரியான விடையை தேர்வு செய்யவும்

1. முன்னுரிமைப் பங்கு என்பது
   (i) நிலையான விகிதத்தில் பங்காதாயம் பெறுவதற்கான முன்னுரிமையைப் பெற்ற பங்கு
   (ii) கலைப்பின்போது பங்கு முதலை திரும்பப்பெறுவதற்கான முன்னுரிமையைப் பெற்ற பங்கு
   (அ) (i) மட்டும் சரியானது (ஆ) (ii) மட்டும் சரியானது
   (இ) (i) மற்றும் (ii) சரியானது (ஈ) (i) மற்றும் (ii) தவறானவை

2. நிறுமக் கலைப்பின்போது மட்டுமே அழைக்கப்படக் கூடிய பங்கு முதலின் ஒரு பகுதி இவ்வாறு அழைக்கப்படும்.
   அ) அங்கீகரிக்கப்பட்ட முதல் ஆ) அழைக்கப்பட்ட முதல்
   இ) முதலினக் காப்பு ஈ) காப்பு முதல்

3. ஒறுப்பிழப்பு செய்யும்போது பங்கு முதல் கணக்கு எதில் பற்று வைக்கப்படுகிறது?
   (அ) முகமதிப்பு (ஆ) பெயரளவு மதிப்பு
   (இ) செலுத்தப்பட்ட தொகை (ஈ) அழைக்கப்பட்ட தொகை

12th-Accountancy-Unit-07_TM.indd 255 12/9/2021 11:19:16 PM

4. ஒறுப்பிழப்புச் செய்த பங்குகளை மறுவெளியீடு செய்த பிறகு, பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கின் இருப்பு மாற்றப்படுவது

(அ) பொதுக்காப்பு கணக்கிற்கு (ஆ) முதலினக் காப்பு கணக்கிற்கு

(இ) பத்திர முனைமக் கணக்கிற்கு (ஈ) உபரி கணக்கிற்கு

5. முகமதிப்பை விட அதிகமாக பெற்ற தொகை வரவு வைக்கப்படும் கணக்கு

(அ) பத்திர முனைமக் கணக்கு (ஆ) அழைப்பு முன்பணக் கணக்கு

(இ) பங்குமுதல் கணக்கு (ஈ) பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கு

6. பின்வரும் வாக்கியங்களில் எது தவறானது?

(அ) வெளியிடப்பட்ட பங்குமுதல் அங்கீகரிக்கப்பட்ட பங்குமுதலை விட ஒருபோதும் அதிகமாக இருக்கக் கூடாது.

(ஆ) பங்குகள் குறை ஒப்பமாக இருக்கும் நிலையில் வெளியிடப்பட்ட பங்குமுதல், ஒப்பிய பங்குமுதலை விட குறைவாக இருக்கும்.

(இ) காப்பு முதல் நிறுமத்தை கலைக்கும்போது செலுத்துமாறு அழைப்பு விடுக்கப்படுகிறது.

(ஈ) செலுத்தப்பட்ட பங்குமுதல், அழைக்கப்பட்ட பங்கு முதலின் ஒரு பகுதி ஆகும்.

7. சொத்துகளை வாங்கி பங்குகள் வெளியிடும்போது வரவு வைக்கப்படும் கணக்கு

(அ) விற்பனையாளர் க/கு (ஆ) பற்பல சொத்துகள் க/கு

(இ) பங்குமுதல் க/கு (ஈ) வங்கி க/கு

8. சரியான குறியீட்டைப் பயன்படுத்தி பொருத்தமான இணையை தேர்ந்தெடுக்கவும்

(A) குறை ஒப்பம் – (i) முன்கூட்டிச் செலுத்திய அழைப்பு பணம்

(B) மிகை ஒப்பம் – (ii) வெளியிட்ட பங்குகளை விட அதிகமாக ஒப்பப்பட்டது

(C) அழைப்பு நிலுவை – (iii) வெளியிட்ட பங்குகளை விட குறைவாக ஒப்பப்பட்டது

(D) அழைப்பு முன்பணம் – (iv) செலுத்தப்பெறாத அழைப்பு பணம்

	(A)	(B)	(C)	(D)
(அ)	(i)	(ii)	(iii)	(iv)
(ஆ)	(iv)	(iii)	(ii)	(i)
(இ)	(iii)	(ii)	(iv)	(i)
(ஈ)	(iii)	(iv)	(i)	(ii)

9. ₹ 8 செலுத்தப்பட்ட, ₹ 10 மதிப்புள்ள பங்கு ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது எனில், அதன் குறைந்த அளவு மறுவெளியீட்டு விலை

(அ) பங்கொன்று ₹ 10 (ஆ) பங்கொன்று ₹ 8

(இ) பங்கொன்று ₹ 5 (ஈ) பங்கொன்று ₹ 2

10. சுப்ரீம் நிறுமம் பங்கொன்று ₹ 10 மதிப்புடைய 100 பங்குகளை இறுதி அழைப்புத்தொகை ₹ 2 செலுத்தாததால் ஒறுப்பிழப்பு செய்தது. அவை அனைத்தும் பங்கொன்று ₹ 9 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டன. முதலினக் காப்புக்கு மாற்றப்பட வேண்டிய தொகை.

(அ) ₹ 700 (ஆ) ₹ 800 (இ) ₹ 900 (ஈ) ₹ 1,000

விடை

1. (இ)	2. (ஈ)	3. (ஈ)	4. (ஆ)	5. (அ)	6. (ஆ)	7. (இ)	8. (இ)	9. (ஈ)	10. (அ)

12th-Accountancy-Unit-07_TM.indd 256 12/9/2021 11:19:16 PM

II மிகக் குறுகிய வினாக்கள்

1. பங்கு என்றால் என்ன?
2. மிகை ஒப்பம் என்றால் என்ன?
3. அழைப்பு நிலுவை என்பதன் பொருள் என்ன?
4. பத்திர முனைமக் கணக்கு பற்றி சிறுகுறிப்பு வரையவும்.
5. பங்குகள் ஏன் ஒறுப்பிழப்பு செய்யப்படுகின்றன?

III குறுகிய வினாக்கள்

1. முன்னுரிமைப் பங்குகளுக்கும், நேர்மைப் பங்குகளுக்குமுள்ள வேறுபாடுகளை கூறவும்.
2. அழைப்பு முன்பணம் குறித்து சுருக்கமாக எழுதவும்.
3. ஒறுப்பிழப்பு செய்த பங்குகளின் மறுவெளியீடு என்றால் என்ன?
4. சிறுகுறிப்பு வரைக.
   (அ) அங்கீகரிக்கப்பட்ட முதல்
   (ஆ) காப்புமுதல்
5. ரொக்கம் தவிர இதர மறுபயனுக்கு பங்கு வெளியீடு என்றால் என்ன?

IV. பயிற்சி கணக்குகள்

1. புராகிரஸ் வரையறு நிறுமம் 50,000 சாதாரணப் பங்குகளை, பங்குகொன்று ₹ 10 வீதம் வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ₹ 2, ஒதுக்கீட்டின் போது ₹ 4 முதலாவது அழைப்பின் போது ₹ 2 மற்றும் இரண்டாவது அழைப்பின் போது ₹ 2 செலுத்தப்பட்ட வேண்டும். அனைத்து பங்குகளும் ஒப்பப்பட்டன மற்றும் அனைத்து தொகைகளும் முறையாக பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்.

குறை ஒப்பம்

2. சம்பத் நிறுமம் 25,000 நேர்மைப் பங்குகளை, பங்கு ஒன்று ₹ 10 என பொதுமக்களுக்கு வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ₹ 3, ஒதுக்கீட்டின் போது ₹ 4, முதலாம் மற்றும் இறுதி அழைப்பின் போது ₹ 3 செலுத்தப்பட வேண்டும். பொதுமக்களால் 24,000 பங்குகள் ஒப்பப்பட்டன. இயக்குனர்கள் அனைத்து பங்குகளையும் ஒதுக்கீடு செய்தனர். அதற்காக தொகை முழுவதும் முறையாகப் பெறப்பட்டன. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

மிகை ஒப்பம்

3. சரண்யா வரையறு நிறுமம் பங்கு ஒன்றின் மதிப்பு ₹ 10 வீதம், 20,000 நேர்மைப் பங்குகளை முகமதிப்பில் பொதுமக்களுக்கு வெளியிட்டது. பங்குகளுக்கானத் தொகை கீழ்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பத்தின் போது	₹ 3
ஒதுக்கீட்டின் போது	₹ 4
முதலாம் மற்றும் இறுதி அழைப்பின் போது	₹ 3

30,000 பங்குகளுக்கான தொகை விண்ணப்பத்தின் போது பெறப்பட்டது. கூடுதலான விண்ணப்பத் தொகை திருப்பி, உடனடியாக அனுப்பப்பட்டது. இதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

4. கஜா வரையறு நிறுமம் பங்கு ஒன்றின் மதிப்பு ₹ 10 வீதம் 40,000 நேர்மைப் பங்குகளை பொதுமக்களிடம் வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ₹ 2, ஒதுக்கீட்டின் போது ₹ 5 மற்றும் முதலாம் மற்றும் இறுதி அழைப்பின் போது ₹ 3 என தொகை செலுத்தப்பட வேண்டும். 50,000 பங்குகளுக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டன. 40,000 பங்குகளுக்கு விகித அளவு அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டன. கூடுதலாக உள்ள விண்ணப்பத் தொகை ஒதுக்கீட்டிற்கு பயன்படுத்தப்பட்டது. அனைத்து தொகையும் முறையாக பெறப்பட்டன எனக் கொண்டு, குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

12th-Accountancy-Unit-07_TM.indd 257 12/9/2021 11:19:16 PM

5. லலிதா வரையறு நிறுமம் ₹ 10 வீதம் 30,000 நேர்மைப் பங்குகளை பொதுமக்களிடம் வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ₹ 2, ஒதுக்கீட்டின் போது ₹ 3, மீதம் தேவைப்படும் போது செலுத்தப்பட வேண்டும். 50,000 பங்குகளுக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இயக்குனர்கள் பின்வருமாறு ஒதுக்கீடு செய்தனர்.

10,000 பங்குகளுக்கான விண்ணப்பம் – முழுவதும் ஒதுக்கீடு

35,000 பங்குகளுக்கான விண்ணப்பம் – 20,000 பங்குகள் (மிகுதித் தொகை ஒதுக்கீட்டில் சரிசெய்யப்படும்).

5,000 பங்குகளுக்கான விண்ணப்பம் – ஒதுக்கீடு இல்லை

அனைத்து தொகைகளும் முறையாக பெறப்பட்டன. ஒதுக்கீடு பெறும் வரையிலான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

அழைப்பு முன்பணம்

6. அஞ்சலி மாவு அரைக்கும் வரையறு நிறுமம் பங்கு ஒன்று ₹ 10 வீதம் ₹ 4,00,000 அங்கீகரிக்கப்பட்ட முதல் கொண்டுள்ளது. அதில், 30,000 நேர்மைப் பங்குகளை விண்ணப்பத்துடன் ₹ 2, ஒதுக்கீட்டில் ₹ 5 மற்றம் முதலாவது அழைப்பில் ₹ 3 பெற வெளியிட்டது. அனைத்து பங்குகளும் ஒப்பப்பட்டன. அனைத்து தொகைகளும் பெறப்பட்டன. ஆனால், ஒதுக்கீட்டில், 500 பங்குள்ள ஒரு பங்குதாரர் முழுவதுமான தனது தொகையினை செலுத்திவிட்டார். குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

அழைப்பு நிலுவை

7. முத்து வரையறு நிறுமம் பங்கு ஒன்று ₹ 10 வீதம் ₹ 50,000 நேர்மைப் பங்குகளை பின்வருமாறு செலுத்தும் வண்ணம் வெளியிட்டது.

விண்ணப்பத்தின் மீது ₹ 2, ஒதுக்கீட்டின் மீது ₹ 4, முதல் மற்றும் இறுதி அழைப்பின் மீது ₹ 4, 1000 பங்குகள் வைத்துள்ள ஒருவர் அழைப்புத் தொகையை செலுத்தவில்லை. இதைத்தவிர, ஏனைய அனைத்து தொகைகளும் பெறப்பட்டன. அழைப்பு நிலுவை கணக்கினைப் பயன்படுத்தி அழைப்புக்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(விடை: அழைப்பு நிலுவை ₹ 4,000)

பங்குகள் ஒறுப்பிழப்பு

8. வானவில் மின்பொருள் வரையறு நிறுமம் ₹ 10 மதிப்பில் வெளியிட்ட 1,000 நேர்மைப் பங்குகளை அர்ஜீன் தம்வசம் வைத்திருந்தார். அவர் விண்ணப்பத்தின் மீது ₹ 3, ஒதுக்கீட்டின் மீது ₹ 4 செலுத்தி விட்டார். ஆனால், முதல் மற்றும் இறுதி அழைப்பின் மீதான ₹ 3 அவரால் செலுத்த முடியவில்லை. அழைப்பு தொகை செலுத்தாத காரணத்தினால் இயக்குனர்கள், அப்பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தனர். ஒறுப்பிழப்பிற்கான குறிப்பிட்டுப் பதிவுகளைத் தரவும்.

(விடை: ஒறுப்பிழப்பு பங்கு கணக்கு: ₹ 7,000)

9. இலக்ஷித் என்பவர் ₹ 10 மதிப்புள்ள 50 நேர்மைப் பங்குகளை தன்வசம் வைத்துள்ளார். அவர் அதற்கென விண்ணப்பத்தின் மீது ₹ 2 செலுத்தியுள்ளார். ஆனால், ஒதுக்கீட்டின் மீது ₹ 4 மற்றும் முதலாவது அழைப்பின் மீது ₹ 2 செலுத்தவில்லை. முதலாவது அழைப்பிற்கு பின் இயக்குனர்கள் பங்கினை ஒறுப்பிழப்பு செய்தனர். ஒறுப்பிழப்பு செய்த பங்குகளுக்கான குறிப்பேட்டு பதிவினைத் தரவும்.

(விடை: ஒறுப்பிழப்பு பங்கு கணக்கு: ₹ 100)

பங்குகளை மறுவெளியீடு செய்தல்

10. கௌதம் வரையறு நிறுமம், இராகவ் அவர்களின் ₹ 10 மதிப்பிலான 500 நேர்மைப் பங்குகளின் இறுதி அழைப்பு ₹ 2 செலுத்தாத காரண்த்தினால் ஒறுப்பிழப்பு செய்தது. ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகள், மதன் என்பவருக்கு பங்கு ஒன்று ₹ 8 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டது. ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டு பதிவுகளைத் தரவும்.

(விடை: முதலினக் காப்பு கணக்கு: ₹ 3,000)

12th-Accountancy-Unit-07_TM.indd 258 12/9/2021 11:19:16 PM

11. நிவேதா வரையறு நிறுமம் ₹ 10 மதிப்பிலான 1,000 நேர்மைப் பங்குகளை, அழைப்புத் தொகை பங்கு ஒன்றிற்கு ₹ 4 வீதம் செலுத்தவில்லை என ஒறுப்பிழப்பு செய்தது. இதில், பங்கு ஒன்றிற்கக ₹ 7 வீதம் 800 பங்குகள் மறுவெளியீடு செய்யப்பட்டன. ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(விடை: முதலினக் காப்பு கணக்கு: ₹ 2,400)

12. நதியா ஜவுளி வரையறு நிறுமம் ₹ 10 மதிப்பிலான ₹ 8 அழைக்கப்பட்ட 100 பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தது. இதில் மயூரி பங்கு ஒன்றுக்கு ₹ 6 விண்ணப்பம் மற்றும் ஒதுக்கீட்டிற்கான தொகையினைச் செலுத்தி இருந்தார். அவற்றில் 75 பங்குகள் பங்கு ஒன்றிற்கு ₹ 7 பெற்றுக் கொண்டு ₹ 8 வீதம் செலுத்தப்பட்ட பங்குகளாக சௌந்தர்யா என்பவருக்கு மறுவெளியீடு செய்யப்பட்டது. ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(விடை: முதலினக் காப்பு கணக்கு: ₹ 375)

13. சைமன் வரையறு நிறுமம் ஒன்று ₹ 10 வீதம் 50,000 நேர்மைப் பங்குகளை வெளியிட்டது. விண்ணப்பத்தின் மீது பங்கொன்று ₹ 1, ஒதுக்கீட்டின் மீது பங்கொன்றிற்கு ₹ 5, முதலாவது அழைப்பின் மீது பங்கொன்றிற்கு ₹ 2, மேலும் இரண்டாவது மற்றும் இறுதி அழைப்பிற்கு ₹ 2, செலுத்தப்பட வேண்டும். அனைத்து பங்குகளும் ஏற்கப்பட்டன. செழியன் வைத்திருந்த 2,000 பங்குகள் தவிர அனைத்து தொகைகளும் முழுமையாக பெறப்பட்டன. அவர் இரண்டாவது மற்றும் இறுதி அழைப்பினை செலுத்தவில்லை. அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்பு செய்து இளங்கோ என்பவருக்கு பங்கொன்றிற்கு ₹ 8 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டது. மேற்கண்ட நடவடிக்கைகளுக்கு குறிப்பேட்டுப் பதிவினை தரவும்.

(விடை: முதலினக் காப்பு கணக்கு: ₹ 12,000)

14. காஞ்சனா வரையறு நிறுமம் பங்கு ஒன்றின் மதிப்பு ₹ 10 வீதம் 50,000 நேர்மைப் பங்குகளை பின்வருமாறு வெளியிட்டது.

விண்ணப்பத்தின் மீது	₹ 1
ஒதுக்கீட்டின் மீது	₹ 5
முதாலவது அழைப்பின் மீது	₹ 2
இரண்டாவது மற்றும் இறுதி அழைப்பின் மீது	₹ 2

70,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. 8,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் மறுக்கப்பட்டன. மேலும், இதர விண்ணப்பங்களுக்கு விகித அளவு அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டன. இயக்குனர்கள் இரண்டு அழைப்புகளும் விடுத்தனர். 1,500 பங்குகளின் இரண்டாவது மற்றும் இறுதி அழைப்பின் தொகையை தவிர, அனைத்து பங்குகளுக்குமான தொகை பெறப்பட்டது. அப்பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டனர். பின்னர், 1200 ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகள் பங்கு ஒன்றின் மதிப்பு ₹ 8 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டன. இதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(விடை: முதலினக் காப்பு கணக்கு: ₹ 7,200)

முனைமத்தில் பங்கு வெளியீடு

15. விஸ்வநாத் அறைகலன் வரையறு நிறுமம், ஒன்று ₹ 10 வீதம் 20,000 நேர்மைப் பங்குகளை பங்கொன்றிற்கு ₹ 2 முனைமத்தில் வெளியிட அழைப்பு விடுத்தது.

₹ 2 விண்ணப்பத்தின் மீதும்

₹ 5 (முனைமம் உள்பட) ஒதுக்கீட்டின் மீதும்

₹ 5 முதலாம் மற்றும் இறுதி அழைப்பின் மீதும்

மிகை ஒப்பமாக 30,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. கூடுதலாக பெறப்பட்ட விண்ணப்பங்கள் இயக்குனர்களால் நிராகரிக்கப்பட்டன. அனைத்துத் தொகையும் பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

12th-Accountancy-Unit-07_TM.indd 259 12/9/2021 11:19:16 PM

16. யுனைடட் இண்டஸ்ட்ரிஸ் வரையறு நிறுமம் ₹ 10 மதிப்பிலான நேர்மைப் பங்குகளை 10% முனைமத்தில் வெளியிட்டது. விண்ணப்பத்தின் மீது ₹ 3, ஒதுக்கீட்டின் மீது (முனைமம் உள்பட) ₹ 4, முதலாவது அழைப்பின் மீது ₹ 2 மற்றும் இறுதி அழைப்பின் மீது ₹ 2 என தொகை செலுத்தப்பட வேண்டும்.

பின்வரும் நடவடிக்கைகளின் சூழ்நிலைகளுக்கேற்ப ஒறுப்பிழப்பு குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

(i) 250 பங்குகள் வைத்துள்ள மனோஜ் இரண்டாவது மற்றும் இறுதி அழைப்பினை செலுத்தத் தவறியதால், அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன.

(ii) 250 பங்குகள் வைத்துள்ள மனோஜ் ஒதுக்கீட்டு, முதலாவது மற்றும் இறுதி அழைப்பினை செலுத்தத் தவறியதால், அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன.

(iii) 250 பங்குகள் வைத்துள்ள மனோஜ் ஒதுக்கீடு மற்றும் முதலாவது அழைப்பினை, செலுத்தத் தவறியதால் முதலாவது அழைப்பிற்கு பின் அவரது பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன.

(விடை: பங்கு ஒறுப்பிழப்பு கணக்கு (i) ₹ 2,000, (ii) ₹ 750, (iii) ₹ 750)

17. கஸ்தூரி வரையறு நிறுமம் ₹ 10 மதிப்புள்ள 20,000 நேர்மைப் பங்குகளை ₹ 2 முனைமத்தில் வெளியிட்டது. 30,000 பங்குகளுக்கான விண்ணப்பதாரர்களுக்கு விகித அளவு அடிப்படையில் ஒதுக்கீடு செய்தது. ₹ 3 விண்ணப்பத்தின் மீதும், ₹ 5 ஒதுக்கீட்டின் மீதும் (முனைமம் ₹ 2 உள்பட), ₹ 2 முதல் அழைப்பின் மீதும் மற்றும் ₹ 2 இறுதி அழைப்பின் மீதும் செலுத்தப்பட வேண்டும். சுபின் என்னும் பங்குதாரர் தன்னுடைய 500 பங்குகளுக்கான முதலாவது மற்றும் இறுதி அழைப்பிற்கான தொகையினை கட்டத் தவறினார். அவரது பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன. அதில், 400 பங்குகள் ஒன்று ₹ 8 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டன. தேவையான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

(விடை: முதலினக் காப்பு கணக்கு: ₹ 1600)

18. வைரம் வரையறு நிறுமம் ஒன்று ₹ 10 வீதம் 60,000 நேர்மைப் பங்குகளை ₹ 2 முனைமத்தில் பின்வரும் செலுத்துதலுக்கேற்ப வெளியிட்டது.

விண்ணப்பத்தின் போது	₹ 6
ஒதுக்கீட்டின் போது	₹ 4 (முனைமம் உள்பட)
முதலாம் மற்றும் இறுதி அழைப்பின் போது	₹ 2

அனைத்துப் பங்குகளும் ஏற்கப்பட்டன. சரிதாவின் 1,000 பங்குகளுக்கான ஒதுக்கீடு, முதலாவது அழைப்பு மற்றும் இறுதி அழைப்பிற்கானத் தொகை தவிர, ஏனைய அனைத்தும் பெறப்பட்டன. அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன. ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட அனைத்து பங்குகளும் பரிமளா என்பவருக்கு பங்கு ஒன்று ₹ 7 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்.

(விடை: முதலினக் காப்பு கணக்கு: ₹ 3,000)

ரொக்கத்திற்கு பங்கு வெளியீடு (மொத்தமாக செலுத்துதல்)

19. அப்துல் வரையறு நிறுமம் ₹ 10 மதிப்புள்ள 50,000 நேர்மைப் பங்குகளை வெளியிட்டது. அனைத்துத் தொகையும், விண்ணப்பத்துடன் செலுத்துமாறு பின்வரும் நிலைகளில் குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

(i) பங்குகளை முகமதிப்பில் வெளியிட்டால்

(ii) பங்கொன்று ₹ 2 முனைமத்தில் வெளியிட்டால்

12th-Accountancy-Unit-07_TM.indd 260 12/9/2021 11:19:16 PM

ரொக்கம் தவிர, இதர மறுபயனுக்கு பங்கு வெளியிடல்

20. பாரடைஸ் வரையறு நிறுமம், ₹4,40,000 மதிப்புள்ள சொத்துகளை சுகுணா அறைகலன் வரையறு நிறுவனத்திடமிருந்து வாங்கியது. இதற்குப் பதிலாக ₹10 மதிப்புள்ள முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளை செலுத்தி நிறைவு செய்தனர். பின்வரும் சூழலுக்கான பதிவுகளைத் தரவும்.

அ) பங்குகளை முகமதிப்பில் வெளியிட்டால்

ஆ) பங்குகளை 10% முனைமத்தில் வெளியிட்டால்

(விடை: (அ) பங்குமுதல் கணக்கு ₹ 4,40,000 (ஆ) பங்குமுதல் கணக்கு: ₹ 4,00,000; பத்திர முனைமக் கணக்கு: ₹ 40,000)

மாணவர் செயல்பாடு 7.4

விடுபட்ட விவரங்களைக் கொண்டு பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளை நிறைவு செய்யவும்.

நாள்	விவரம்	பே. ப.எ.	பற்று ₹	வரவு ₹
1.	_____ ப பங்கு விண்ணப்பக் க/கு (ஒன்று ₹ 1 வீதம் விண்ணப்பத் தொகை பெற்றது)		2,00,000	_____
2.	பங்கு விண்ணப்பக் க/கு ப பங்குமுதல் க/கு (பங்கு விண்ணப்பத் தொகை _____ பங்குகளுக்கான _____ மாற்றப்பட்டது)		_____	2,00,000

12th-Accountancy-Unit-07_TM.indd 261 12/9/2021 11:19:16 PM

நிகழ்வாய்வு

மாலா மற்றும் மேரி இருவரும் ஒரு கூட்டாண்மை வணிகத்தில் ஈடுபட்டனர். அவ்வணிகத்தின் செயல்திறன் மற்றும் இலாபத்தன்மை நன்றாக இருந்தது. அவர்கள் மேலும் முதலிட்டு அதனை விரிவாக்கம் செய்ய விரும்பினர். ஆனால், அவர்களிருவரும் சொந்த சேமிப்பாக குறைவான தொகையைக் கொண்டிருந்தனர். இது அவ்வணிகத்தை விரிவு செய்ய போதுமானதல்ல. எனவே, அவர்கள் தம்முடைய வணிகத்தை வரையறு நிறுமமாக மாற்றவிரும்பி எம் & எம் வரையறு நிறுமமாக என்று பதிவும் செய்தனர். அந்நிறுமம், தமது அங்கீகரிக்கப்பட்ட முதலான ₹ 10,00,000 ஐ 1,00,000 அலகுகளாகப் பிரித்தது. எம் & எம் நிறுமம் தொடங்குவதற்காக நிலம், அறைகலன் மற்றும் பொருத்துகைகள் போன்ற சில நிலைச் சொத்துகளை ஒரு விற்பனையாளரிடமிருந்து வாங்கியது. ஆனால், நிறுமம் இதற்கென ரொக்கமோ அல்லது காசோலையோ கொடுக்கவில்லை.

செய்தித்தாள்களில் எம் & எம் வரையறு நிறுமம் பங்கு வெளியீட்டிற்கான விளம்பரம் கொடுக்கப்பட்டது. 50,000 பங்குகள் பொதுமக்களுக்கென வெளியிடப்பட்டது. அதனுடைய இலாபத்தன்மை மற்றும் புகழின் காரணமாக எம் & எம் நிறுமம் 60,000 பங்குகளுக்கான விண்ணப்பங்களைப் பெற்றது.

தற்போது, பின்வருவன குறித்து விவாதிக்கவும்.

1. முதலை அதிகரிப்பது தவிர, ஒரு கூட்டா ண்மை நிறுவனம் நிறுமமாக மாற்றுவதற்கான ஏதேனும் ஒரு காரணத்தைக் கூறவும்.
2. பங்குகள் வெளியீடு தவிர, நிதித்திரட்டும் மற்ற ஆதாரங்கள் யாவை?
3. எம் & எம் வரையறு நிறுமத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதல் எவ்வளவு?
4. ஒவ்வொரு பங்கின் மதிப்பு என்ன?
5. எம் & எம் நிறுமம் நிலைச்சொத்துகளை கடனுக்கு வாங்கிய விற்பனையாளருக்கு செலுத்த வேறு வழி ஏதுமுண்டா?
6. எம் & எம் நிறுமம் 1,00,000 க்கும் அதிகமான பங்குகள் வெளியிட அனுமதிக்கப்படுமா?
7. எம் & எம் நிறுமத்தின் வெளியிட்ட பங்கு முதல் எவ்வளவு?
8. மிகை ஒப்பத்தினை இயக்குனர்கள் எவ்வாறு கையாளுவார்கள்?

தொடர் ஆய்விற்கு

எந்த ஒரு நிறுமத்திலும் முதலீடு செய்வதற்கு முன்பாக பங்குதாரர்கள் அல்லது சாத்தியமுள்ள முதலீட்டாளர்கள் நிறுவனத்தின் செயல்திறனை அறிந்துகொள்ள விரும்புவர். அவர்கள் இத்தகைய தகவல்களை எங்கிருந்து பெறுகிறார்கள்?

Reference

1. M C Shukla, T S Grewal and S C Gupta, Advanced Accounts, 19th ed., 2017, S. Chand Publishing, New Delhi.
2. S P Jain and K L Narang, Corporate Accounting I, 9th ed., 2018, Kalyani Publishers, New Delhi.
3. Fundamentals of Accounting, 2017, The Institute of Chartered Accountants of India, New Delhi.

12th-Accountancy-Unit-07_TM.indd 262 12/9/2021 11:19:17 PM

அலகு

8

நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு

பொருளடக்கம்

8.1 அறிமுகம்

8.2 நிதிநிலை அறிக்கைகள்

8.3 நிறுமங்களின் நிதி நிலை அறிக்கைகள்

8.4 நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு

8.5 நிதிநிலை அறிக்கை பகுப்பாய்விற்கான கருவிகள்

8.6 ஒப்பீட்டு அறிக்கைகள் தயாரித்தல்

8.7 பொது அளவு அறிக்கைகள் தயாரித்தல்

8.8 போக்குப் பகுப்பாய்வு

நினைவுகூற வேண்டிய கருத்துகள்

நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வினை கற்பதற்கு முன் கீழ்க்கண்டவற்றை நினைவு கூற வேண்டும்:

- கணக்கியல் கொள்கைகள்
- இந்தியக் கணக்கியல் தர நிலைகள்
- இலாப நட்டக் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு தயாரித்தல்

கற்றல் நோக்கங்கள்

மாணவர்கள்

- நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் பொருள் மற்றும் நோக்கங்கள் பற்றி புரிந்து கொள்ளுதல்
- நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளைப் புரிந்து கொள்ளுதல்
- நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு செய்யும் கருவிகளைப் பயன்படுத்துதல்

தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய சொற்கள்

- நிதிநிலை அறிக்கைகள்
- நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு
- பொது அளவு அறிக்கை
- ஒப்பீட்டு அறிக்கை
- போக்கு விகித பகுப்பாய்வு

DC7XM

12th-Accountancy-Unit-08_TM.indd 263 12/9/2021 11:22:20 PM

8.1 அறிமுகம்

வியாபார நிறுவனங்கள் இலாபத் தன்மை மற்றும் நிதிநிலையை அறிந்து கொள்ள ஒரு கணக்காண்டின் இறுதியில் வருமான அறிக்கை மற்றும் இருப்புநிலைக் குறிப்பினைத் தயாரிக்கின்றன. இவ்வறிக்கைகள் குறிப்பிட்ட கணக்காண்டிற்கான பல்வேறு செலவுகளின், வருமானங்களின் மொத்தம் மற்றும் நிகர முடிவான, இலாபம் அல்லது நட்டம், அக்கணக்காண்டின் இறுதி நாளன்றைய சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மற்றும் முதல் ஆகியவற்றை அளிக்கிறது. எனவே, நிதிநிலை அறிக்கைகள் என்பது நிதிநிலை தகவல்களுக்கான ஆதாரமாகும். இருந்தபோதிலும் இவ்வறிக்கைகள் பல்வேறு இனங்களுக்கான தொடர்பு அல்லது இரண்டு நாள்களுக்கிடையில் இந்த இனங்களின் தொகைகளில் ஏற்படும் மாற்றத்திற்கான காரணங்களை அல்லது அம்மாற்றங்களினால் ஏற்படும் விளைவுகளைத் தருவதில்லை. இக்காரணங்களுக்காக பல்வேறு நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

8.2 நிதிநிலை அறிக்கைகள்

8.2.1 நிதிநிலை அறிக்கைகள் – பொருள்

ஒரு கணக்காண்டின் இறுதியில் வியாபாரத்தின் இயக்க முடிவுகள் மற்றும் நிதிநிலையை அறிந்து கொள்ள தயாரிக்கப்படும் அறிக்கைகளே நிதிநிலை அறிக்கைகள் ஆகும். வியாபார நிறுவனங்களால் தயாரிக்கப்படும் வருமான அறிக்கை மற்றும் இருப்புநிலைக் குறிப்பு ஆகியவை அடிப்படை நிதிநிலை அறிக்கைகளாகும். வருமான அறிக்கையானது உற்பத்தி கணக்கு, வியாபாரக் கணக்கு, இலாப நட்டக்கணக்கு போன்றவற்றை உள்ளடக்கியதாகும். இது ஒரு கணக்காண்டின் வியாபார நடவடிக்கைகளின் நிகர முடிவினைக் காட்டும். இருப்புநிலைக் குறிப்பானது ஒரு குறிப்பிட்ட நாளன்றைய நிதிநிலையை வெளிப்படுத்தும் சொத்துகள் மற்றும் பொறுப்புகளைக் கொண்ட ஓர் அறிக்கையாகும்.

மேற்கண்ட இவ்விரு அடிப்படை அறிக்கைகள் தவிர வியாபார நிறுவனங்கள் ரொக்க ஓட்ட அறிக்கை, நிதி ஓட்ட அறிக்கை மற்றும் நிதி நிலை மாற்ற அறிக்கை போன்றவைகளையும் தயாரிக்கலாம்.

8.2.2 நிதி நிலை அறிக்கைகளின் இயல்புகள்

நிதி நிலை அறிக்கைகளின் இயல்புகள் பின்வருமாறு:

(i) நிதிநிலை அறிக்கைகள், ஒரு கணக்காண்டின் இறுதியில் கணக்கேடுகளில் பதிவு செய்யப்பட்ட நடவடிக்கைகளின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன.

(ii) இவ்வறிக்கைகள், ஒட்டுமொத்த நிறுவனத்திற்கும் தயாரிக்கப்படுகின்றன.

(iii) ஒரே தன்மையுடைய தகவல்களை அதாவது நிலைச்சொத்துகள் மற்றும் நடப்புச் சொத்துகள் போன்று குழுமப்படுத்துதல் மூலமாக அர்த்தமுள்ள தகவல்களைத் தருகிறது.

(iv) புராதன அடக்கவிலை அடிப்படையில் நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன.

(v) நிதிநிலை அறிக்கைகள் அவற்றின் ஒப்பீட்டுத் தன்மை மற்றும் உண்மைத்தன்மையை உறுதி செய்யும் வகையில் கணக்கியல் கோட்பாடுகள் மற்றும் கணக்கியல் தரநிலைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன.

(vi) நிதிநிலை அறிக்கையானது சில நிகழ்வுகளில் தனிப்பட்ட முடிவுகளை உள்ளடக்கியதாகும். எடுத்துகாட்டாக தேய்மானம் நீக்கும் முறை மற்றும் காப்பு சதவீதம் முடிவு செய்தல்.

8.2.3 நிதி நிலை அறிக்கைகளின் முக்கியத்துவம்

நிதி நிலை அறிக்கைகள் வியாபார நிறுவனத்தின் இயக்க முடிவுகள் மற்றும் நிதிநிலையை வெளிப்படுத்துகின்றன. பல்வேறு பயனீட்டாளர்களுக்கான நிதிநிலை அறிக்கைகளின் முக்கியத்துவம் பின்வருமாறு:

(i) **மேலாண்மைக்கு:** நிதிநிலை அறிக்கைகளானது முடிவுகளை எடுப்பதற்கும் மற்றும் பல்வேறு துறைகளில் வணிக நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் தேவையானத் தகவல்களை மேலாண்மைக்குத் தருகிறது.

(ii) **பங்குதாரர்களுக்கு:** வணிக நிறுவனம் வளர்ச்சிக்கு தேவையான ஆதாரங்களைக் கொண்டுள்ளதா மற்றும் தொடர்ந்து பங்குதாரராக நீடிப்பதா என்பதை முடிவு செய்யவும் பங்குதாரர்களுக்கு நிதிநிலை அறிக்கைகள் உதவியாக இருக்கின்றன.

12th-Accountancy-Unit-08_TM.indd 264 12/9/2021 11:22:20 PM

(iii) **எதிர்கால முதலீட்டாளர்களுக்கு:** பத்திரங்களை மதிப்பீடு செய்து அவற்றை பிற தொழிலமைப்புகளின் பத்திரங்களோடு ஒப்பீடு செய்து அதனடிப்படையில் தங்கள் முதலீடுகள் மீதான முடிவினை எடுப்பதற்கு நிதிநிலை அறிக்கைகள் பயனுள்ளதாக இருக்கின்றன.

(iv) **கடனீந்தோருக்கு:** தொழிலின், கடன்களை திருப்பிச் செலுத்தும் திறனைப் பற்றிய தகவல்களை நிதிநிலை அறிக்கைகள் வாயிலாக கடனீந்தோர் பெற்றுக் கொள்ள முடிகிறது.

(v) **வங்கியர்களுக்கு:** கடன் மற்றும் மேல்வரைப்பற்று தொகைக்கு ஈடான பிணையங்கள் போதுமானதாக உள்ளதா என்பது குறித்த தகவல்களை அறிவதற்கு நிதிநிலை அறிக்கைகள் வங்கியர்களுக்கு இன்றியமையாததாகிறது.

(vi) **அரசாங்கத்திற்கு:** வணிக நிறுவனங்களின் வரிசார்ந்த பொறுப்புகளை மதிப்பிடவும், தொழிற்கொள்கைகள் உருவாக்கம் மற்றும் திருத்தம் செய்வதிலும் நிதிநிலை அறிக்கைகள் அரசாங்கத்திற்கு மிகவும் முக்கியமானதாக விளங்குகின்றன.

(vii) **பணியாளர்களுக்கு:** நிறுவனத்தின் சம்பளம் செலுத்தும் திறன் மற்றும் பணியாளர்களுக்கு அந்நிறுவனத்தில் எதிர்கால வளர்ச்சி இருக்கிறதா போன்றவற்றை குறித்து நிதிநிலை அறிக்கைகள் வாயிலாக பணியாளர்கள் தெரிந்து கொள்கின்றனர்.

8.2.4 நிதிநிலை அறிக்கையின் குறைபாடுகள்

நிதிநிலை அறிக்கையின் குறைபாடுகள் பின்வருமாறு:

(i) **பணம் சாரா தகவல்கள் இல்லாமை:** பணம் சாரா தகவல்களும் வியாபார முடிவெடுத்தலுக்கு முக்கியமானதாகும். எடுத்துக்காட்டாக, பணியாளர்களின் திறமை, மேலாண்மையின் திறமை போன்றவை. ஆனால், இவை நிதிநிலை அறிக்கைகளில் இடம் பெறுவதில்லை.

(ii) **கடந்த கால விவரங்களின் பதிவேடு:** நிதிநிலை அறிக்கைகள் கடந்த கால விவரங்களின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன. எனவே அவை நடப்பு நிலைமையை வெளிப்படுத்தாமல் போகலாம்.

(iii) **விலை நிலை மாற்றங்களை பொருட்படுத்துவதில்லை:** விலை நிலைகளில் ஏற்படும் மாற்றங்கள் நிதிநிலை அறிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. எனவே, அவை நடப்பு நிலைமையை வெளிப்படுத்தாமல் போகலாம்.

(iv) **நிலைத்தன்மை குறைவு:** பல்வேறு நிறுவனங்கள், பல்வேறு கணக்கியல் முறைகளை பின்பற்றுகின்றன. எனவே, இரண்டு தொழிலமைப்புகளை ஒப்பீடு செய்வது கடினமாகும்.

(v) **இடைக்கால அறிக்கைகளை மட்டுமே தருகிறது:** நிதிநிலை அறிக்கைகள் ஒவ்வொரு கணக்காண்டின் இறுதியில் தயாரிக்கப்படுகின்றன. ஆனால், வணிகத்தின் உண்மையான நிலவரத்தை, நிறுவனத்தின் கலைப்பின் போது மட்டுமே அறிய இயலும். எனவே, நிதிநிலை அறிக்கைகள் நிறுவனத்தின் துல்லியமான நிலையினை வெளிக்காட்டாது.

(vi) **புறப்பயனீட்டாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட தகவல்கள்:** புறப்பயனீட்டாளர்கள் அணுகல் வரையறுக்கப்பட்டுள்ளதால் அவர்கள், முழுமையான தொடர்ச்சியான நிதிநிலை முடிவுகளைப் பெறமுடியாது.

(vii) **தனிப்பட்ட முடிவுகளினால் பாதிக்கப்படுகிறது:** நிதிநிலை அறிக்கைகள் தயாரிப்பு என்பது தனிநபரின் முடிவுக்குட்பட்டது. எனவே, இவை ஒருதலை பட்சமானதாக இருக்கலாம்.

8.3 நிறுமங்களின் நிதிநிலை அறிக்கைகள்

நிறுமங்களின் நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்படும்போது இந்திய நிறுமச்சட்டம் 2013–ன் படி பின்வரும் விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்:

(i) பிரிவு 2(40)–ன் படி நிதிநிலை அறிக்கைகள் என்பது இருப்புநிலைக்குறிப்பு, இலாபநட்டக் கணக்கு / வருவாய் செலவினக் கணக்கு, ரொக்க ஓட்ட அறிக்கை, பங்கு மூலதனத்தின் மாற்றம் குறித்த அறிக்கை மற்றும் மேற்கண்டவகைகளின் விளக்கக் குறிப்பு ஏதேனும் இருந்தால் அவற்றையும் குறிக்கும்.

12th-Accountancy-Unit-08_TM.indd 265 12/9/2021 11:22:20 PM

(ii) இந்திய நிறுமச்சட்டம் 2013 பிரிவு 129 (1)–ன் படி நிதிநிலை அறிக்கைகள், நிறும நடவடிக்கைகளின் உண்மையான, நியாயமான நிலையை எடுத்துக்காட்டுவதாகவும் பிரிவு 133–ல் கொடுக்கப்பட்டுள்ள தரநிலைகளின் படியும் இருக்க வேண்டும் என்று கூறுகிறது.

(iii) மேலும், பிரிவு 129 (1)–ன் படி நிதிநிலை அறிக்கைகள் இந்திய நிறுமச்சட்டம் 2013 பட்டியல் III–ல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் படியே தயாரிக்கப்பட வேண்டும் எனவும் கூறுகிறது.



நிறுமத்தின் நிதிநிலை அறிக்கைகளானது இந்திய நிறுமச் சட்டம் 2013 பிரிவு 129 (1)–ல் குறிப்பிட்ட கணக்கியல் தரநிலைகளை பின்பற்றாதபோது, நிறுமத்தின் நிதிநிலை அறிக்கைகள் கணக்கியல் தரநிலைகலிருந்து வேறுபடும் இடங்கள், அவ்வேறுபாட்டிற்கான காரணங்கள், அவ்வேறுபாட்டினால் நிதிநிலையில் ஏற்பட்ட விளைவுகள் குறித்து நிதிநிலை அறிக்கைகளில் வெளிப்படுத்த வேண்டும்.



மாணவர் செயல்பாடு 8.1

ஒரு தணிக்கையாளரை உங்களுடைய வகுப்பிற்கு வரவழைத்து பல்வேறு வணிக அமைப்புகளின் நிதிநிலை அறிக்கைகள் தயாரிப்பது குறித்து கலந்துரையாடவும்.

குறிப்பு: இலாபநட்ட அறிக்கை (பட்டியல் III–ல் பகுதி II) மற்றும் இருப்புநிலைக் குறிப்பு (பட்டியல் III–ல் பகுதி I) போன்றவை இங்கு புரிதலுக்காக மட்டுமே வழங்கப்பட்டுள்ளதேயன்றி, தேர்வுக்கானதல்ல.

இந்திய நிறுமச்சட்டம் 2013 அட்டவணை III

பகுதி II – இலாபநட்ட அறிக்கை

நிறுமத்தின் பெயர் ……

ஆண்டுக்குரிய இலாபநட்ட அறிக்கை ……

(……ரூபாயில்)

விவரம்		குறிப்பு எண்	நடப்பு ஆண்டிற்கான எண்ணிக்கை	முந்தைய ஆண்டிற்கான எண்ணிக்கை
1		2	3	4
I	இயக்கம் மூலம் பெற்ற வருவாய்		xxx	xxx
II	இதர வருமானம்		xxx	xxx
III	மொத்த வருமானம் (I + II)		xxx	xxx
IV	செலவுகள்:			
	பயன்படுத்தப்பட்ட பொருட்களின் அடக்கவிலை		xxx	xxx
	கொள்முதல் செய்யப்பட்ட சரக்குகள்		xxx	xxx
	முடிவுற்ற பொருட்களின் சரக்கிருப்பின் மாற்றங்கள்		xxx	xxx
	முடிவுறா உற்பத்தி பொருட்கள் மற்றும் சரக்கிருப்பு		xxx	xxx
	தொழிலாளர்களுக்கான நலச் செலவுகள்		xxx	xxx
	நிதிசார் செலவுகள்		xxx	xxx
	தேய்மானம் மற்றும் போக்கெழுதுதல் செலவுகள்		xxx	xxx
	இதர செலவுகள்		xxx	xxx
	மொத்த செலவுகள்		xxx	xxx

12th-Accountancy-Unit-08_TM.indd 266 12/9/2021 11:22:21 PM

V	விதிவிலக்கான அசாதாரண செலவு மற்றும் வரிக்கு முன்னர் உள்ள இலாபம் (III – IV)		xxx	xxx
VI	விதி விலக்கான தொகைகள்		xxx	xxx
VII	அசாதாரண தொகைகள் மற்றும் வரிக்கு முன்னர் உள்ள இலாபம் (V – VI)		xxx	xxx
VIII	அசாதரண தொகைகள்		xxx	xxx
IX	வரிக்கு முன்னர் உள்ள இலாபம் (VII – VIII)		xxx	xxx
X	வரிசார்ந்த செலவுகள்:			
	(1) நடப்பாண்டு வரி		xxx	xxx
	(2) நீண்ட கால வரி		xxx	xxx
XI	நடப்பாண்டிற்கான செயல்பாடுகளிலிருந்து பெறும் இலாபம் (நட்டம்)		xxx	xxx
XII	தொடரா செயல்பாடுகளிலிருந்து பெறும் இலாபம் (நட்டம்)		xxx	xxx
XIII	தொடாரா செயல்பாடுகளுக்கான வரிச் செலவு		xxx	xxx
XIV	தொடாரா செயல்பாடுகளுக்கான இலாபம் (நட்டம்) (வரிக்குப்பின்) (XII – XIII)		xxx	xxx
XV	நடப்பாண்டிற்கான இலாபம் (நட்டம்) (XI – XIV)		xxx	xxx
XVI	ஒரு நேர்மைப் பங்கு பெற்ற வருமானம்			
	(1) அடிப்படை		xxx	xxx
	(2) நீர்த்த		xxx	xxx

பகுதி I இருப்பு நிலைக்குறிப்பு

நிறுமத்தின் பெயர்.....

நாளன்றைய இருப்பு நிலைக்குறிப்பு..... (.....ரூபாயில்)

விவரம்	குறிப்பு எண்	நடப்பு ஆண்டிற்கான எண்ணிக்கை	முந்தைய ஆண்டிற்கான எண்ணிக்கை
(1)	(2)	(3)	(4)
I பங்குமூலதனம் மற்றும் பொறுப்புகள்			
1. பங்குதாரர் நிதி			
அ) பங்கு முதல்			
ஆ) காப்பு மற்றும் மிகுதி			
இ) பங்காணை மூலம் பெற்ற தொகை			
2. ஒதுக்கீடு நிலுவையிலுள்ள பங்குகள் விண்ணப்பம் மீதான பணம்			
3. நீண்ட காலப் பொறுப்புகள்			
அ) நீண்ட காலக் கடன்			
ஆ) நீண்ட கால வரி சார்ந்த நிகர பொறுப்புகள்			
இ) பிற நீண்ட காலப் பொறுப்புகள்			
ஈ) நீண்ட கால ஒதுக்குகள்			
4. நடப்புப் பொறுப்புகள்			
அ) குறுகிய காலக் கடன்			
ஆ) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள்			
இ) பிற நடப்புப் பொறுப்புகள்			
ஈ) குறுகிய கால ஒதுக்குகள்			
மொத்தம்			

12th-Accountancy-Unit-08_TM.indd 267 12/9/2021 11:22:21 PM

II சொத்துகள் **1. நீண்ட காலச் சொத்துகள்** அ) நிலைச் சொத்துகள் i) புலனாகும் சொத்துகள் ii) புலனாகாச் சொத்துகள் iii) முடிவுறா உற்பத்தி பொருட்களுக்கான முதல் iv) வளர்ந்துவரும் புலனாகாச் சொத்துகள் ஆ) நீண்ட கால முதலீடுகள் இ) நீண்டகால நிகர வரி சார்ந்த சொத்துகள் ஈ) நீண்டகால கடன் மற்றும் முன்பணம் உ) பிற நீண்டகாலச் சொத்துகள் **2. நடப்புச் சொத்துகள்** அ) நடப்பு முதலீடுகள் ஆ) சரக்கிருப்புகள் இ) கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகள் ஈ) ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள் உ) குறுகிய காலகடன் மற்றும் முன்பணம் ஊ) பிற நடப்புச் சொத்துகள் **மொத்தம்**			



இந்திய நிறுமச் சட்டம் 2013 அட்டவணை III ன் படி நிதிநிலை அறிக்கையில் இடம்பெறும் தொகைகளை நிறுமத்தின் விற்பனை அடிப்படையில் கீழ்க்கண்டவாறு முழுமைப்படுத்திக் கொள்ளலாம்.

விற்பனை	முழுமைப்படுத்த வேண்டியது
அ) நூறு கோடிக்கு குறைவானத் தொகை	அருகிலுள்ள நூற்றுக்கு,ஆயிரத்திற்கு, இலட்சத்திற்கு, மில்லியனுக்கு அல்லது அவற்றின் தசமங்கள்.
ஆ) நூறு கோடி ரூபாய் மற்றும் அதற்கு மேலாக	அருகிலுள்ள இலட்சத்திற்கு, பத்து மில்லியனுக்கு அல்லது கோடிக்கு அல்லது அவற்றின் தசமங்கள்.

ஒரு அளவிற்கான அலகு பயன்படுத்தப்பட்டால் நிதிநிலை அறிக்கைகள் முழுவதற்கும் அதே அலகினையே பயன்படுத்த வேண்டும்.

8.4.1. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் பொருள்

நிதிநிலை அறிக்கையில் காணப்படும் பல்வேறு விவரங்களுக்கிடையேயான தொடர்புகளை கண்டறிந்து, மதிப்பிட்டு ஒப்பீடு செய்வதே நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு ஆகும். இது வணிக நிறுவனத்தின் செயல்பாடுகளையும், நிதி நிலையையும் புரிந்து கொள்வதற்கு வழி செய்கிறது.

இது பகுப்பாய்வின் நோக்கத்திற்கு ஏற்றவகையில் விவரங்களை மறுவரிசைப்படுத்துதல், கருவிகளை பயன்படுத்துதல். விவரங்களுக்கிடையேயான தொடர்புகளை மதிப்பீடு செய்தல் மற்றும் பகுப்பாய்வு அடிப்படையில் முடிவினை அடைதல் ஆகியவற்றை உள்ளடக்கியது. எனவே, நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு என்பது பகுப்பாய்வு மற்றும் அதுகுறித்த விளக்கமளித்தலையும் கொண்டதாகும்.

12th-Accountancy-Unit-08_TM.indd 268 12/9/2021 11:22:21 PM

பகுப்பாய்வு என்பது கணக்கிடப்பட்ட தொகைகளைச் சோதனை செய்தல் மற்றும் அவற்றிற்கிடையேயான தொடர்பினை ஏற்படுத்துதல் ஆகும். மேலும், அதன் செயல்பாடுகள் அல்லது மாற்றங்கள் ஏற்படுவதற்கானக் காரணங்களைக் கண்டறிவதற்கு அவற்றை ஒப்பீடு செய்வதைக் குறிக்கும். உய்த்துணர்தல் என்பது பகுப்பாய்வின் முடிவுகளை விவரித்தல் மற்றும் விளக்குதலைக் குறிக்கும்.

8.4.2 நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் நோக்கங்கள்

1. வருவாயீட்டும் தன்மை மற்றும் இலாபமீட்டும் திறனை ஆய்வு செய்வதற்காக
2. நீண்டகால மற்றும் குறுகிய கால கடனைத் தீர்க்கும் திறன் பற்றி அறிய
3. சொத்துகளை பயன்படுத்துவதிலும், செயல்பாடுகளிலும் ஆற்றலைத் தீர்மானிப்பதற்கு
4. நிர்வாகம் மற்றம் பணியாளர்களின் திறமையைத் தீர்மானிப்பதற்கு
5. உற்பத்தி, மற்றும் விற்பனையின் போக்கினைத் தீர்மானிப்பதற்கு
6. எதிர்கால முன்கணிப்பு மற்றும் திட்டபட்டியல் தயாரிப்பதற்கு
7. நிறுவனத்திற்குள்ளேயும், பிற நிறுவனங்களோடும் ஒப்பீடு செய்வதற்கு



நிறுவனத்திற்குள்ளேயான ஒப்பீடு என்பது நிறுவனத்தின் பலதுறைகள் மற்றும் பிரிவுகள் ஆகியவற்றை ஒப்பீடு செய்வதாகும்.

நிறுவனங்களுக்கு இடையிலான ஒப்பீடு என்பது நிறுவனத்தை பிற நிறுவனம் அல்லது நிறுவனங்களுடன் ஒப்பீடு செய்வதைக் குறிக்கும்.

8.4.3 நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் குறைபாடுகள்

நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் குறைபாடுகள் பின்வருமாறு:

1. பணம்சாரா தகவல்கள் புறக்கணிப்பு விலை நிலை மாற்றங்கள் புறக்கணிப்பு போன்ற நிதிநிலை அறிக்கைகளில் காணப்படும் எல்லா குறைபாடுகளும் நிதிநிலை அறிக்கை பகுப்பாய்விலும் காணப்படுகின்றன.
2. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு என்பது ஒரு வழிதானே தவிர இதுவே முடிவல்ல. அதாவது இது மேலாண்மை மற்றும் பிற பங்குதாரர்களுக்கான ஒரு கருவியே ஆகும். முடிவுகளை உய்த்துணர்தல் என்பது அக மற்றும் புறக்காரணிகளுக்கான முக்கியத்துவத்துடன் நிதிநிலை பகுப்பாய்வாளர்களால் மட்டுமே செய்யப்படும்.
3. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு செய்வதற்கு நிபுணத்துவ அறிவு தேவையானதாகும்.
4. பகுப்பாய்வு செய்யப்பட்ட தவல்களைப் பற்றி வெவ்வேறு வல்லுனர்களால் வெவ்வேறு கருத்துகள் தரப்படுவதால் உய்த்துணர்தல் என்பது தனிப்பட்ட முடிவுகளை உள்ளடக்கியதாகும்.

8.5 நிதிநிலை அறிக்கை பகுப்பாய்விற்கான கருவிகள்

நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு செய்வதற்கு பல்வேறு கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. பகுப்பாய்வு செய்வதன் நோக்கத்தின் அடிப்படையில் அக்கருவிகள் தேர்வு செய்யப்படுகின்றன. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்விற்கு பயன்படுத்தப்படும் கருவிகளில் பொதுவானவை பின்வருமாறு:

(i) ஒப்பீட்டு அறிக்கை

ஒரு வியாபார நிறுவனத்தின் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளின் நிதிநிலை அறிக்கையில் காணப்படும் பல்வேறு தனிப்பட்ட விவரங்களின் நிகர உயர்வு மற்றும் குறைவு ஆகியவற்றை ஒப்பிட்டுத் தரக்கூடிய அறிக்கையே ஒப்பீட்டு அறிக்கையாகும். இது பல்வேறு காலங்களின் உண்மையானத் தொகைகளையும், அந்த தொகைகளின் உயர்வு மற்றும் குறைவின் அறுதி இட்டத் தொகையாகவும் மற்றும் அவ்வுயர்வினை அல்லது குறைவினை சதவீதத்திலும் காட்டும். ஒப்பீட்டு வருமான அறிக்கை மற்றும் ஒப்பீட்டு இருப்புநிலைக் குறிப்பு ஆகிய இரண்டு அடிப்படை ஒப்பீட்டு அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன.

12th-Accountancy-Unit-08_TM.indd 269 12/9/2021 11:22:21 PM

(ii) பொது அளவு அறிக்கைகள்

பொது அளவு அறிக்கைகள் சில பொதுவான அடிப்படையிலான பல்வேறு விவரங்களின் தொடர்பினைக் காட்டுவதாகும். இது சதவீதத்தில் குறிக்கப்படுகிறது. பொது அடிப்படை என்பது மொத்த சொத்துகள் அல்லது மொத்த பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் அல்லது விற்பனை மூலம் பெற்ற வருவாய் (நிகர விற்பனை) போன்றவை ஆகும். பொது அளவு அறிக்கைகளில் பொது அளவு வருமான அறிக்கை மற்றும் பொது அளவு இருப்புநிலைக் குறிப்பு போன்றவைகள் அடங்கும்.

பொது அளவு வருமான அறிக்கையில் விற்பனை மூலம் பெற்ற வருவாயை 100 என எடுத்துக் கொள்ளப்பட்டு பல்வேறு செலவுகள் மற்றும் வருமானங்கள், விற்பனை மூலம் பெற்ற வருவாயின் சதவீதமாக வெளிப்படுத்தப்படுகின்றன. பொது அளவு இருப்பு நிலைக்குறிப்பில், இருப்பு நிலைக்குறிப்பின் மொத்தம் அதாவது சொத்துகளின் மொத்தம் அல்லது பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகளின் மொத்தம் 100 என எடுத்துக்கொள்ளப்பட்டு, பல்வேறு சொத்துகள் மற்றும் பொறுப்புகள், சொத்துகளின் மொத்தம் அல்லது பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகளின் மொத்தத்தின் சதவீதமாக வெளிப்படுத்தப்படுகின்றன.

பொது அளவு அறிக்கைகளை முந்தைய ஆண்டின் அறிக்கைகளோடு ஒப்பீடு செய்ய முடியும். மேலும், ஒரே விதமான கணக்கியல் கொள்கைகளைப் பின்பற்றும் அதே வகையான நிறுவனங்களுக்கிடையேயும் ஒப்பீடு செய்யலாம்.

(iii) போக்குப் பகுப்பாய்வு

போக்கு என்பது இயக்கத்தின் போக்கினை குறிப்பதாகும். போக்குப் பகுப்பாய்வு என்பது ஒரு காலக் கட்டத்திற்கு மேல் உள்ள தொகைகளின் இயக்கத்தை ஆய்வு செய்வதாகும். போக்கு என்பது வளர்ந்து வரும் போக்காகவோ அல்லது குறைந்து செல்லும் அல்லது முறையற்ற போக்காகவோ இருக்கலாம். இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக உள்ள தகவல்களை பகுப்பாய்வு செய்ய ஒப்பீட்டு அளவு அறிக்கை முறையை பயன்படுத்துவது கடினமானதாகும். எனவே, போக்குப் பகுப்பாய்வு பயன்படுத்தப்படலாம். ஒரு ஆண்டு பொதுவாக முதல் ஆண்டு என்பது அடிப்படை ஆண்டாக எடுத்து கொள்ளப்படும். அடிப்படை ஆண்டின் தொகை 100 என எடுத்துக்கொள்ளப்படும். மற்ற ஆண்டுகளுக்கான தொகைகள் அடிப்படை ஆண்டின் தொகையோடு ஒப்பிடப்பட்டு சதவீதத்தில் வெளிப்படுத்தப்படுகிறது, இவ்வாறாக, போக்கு தீர்மானிக்கப்படுகிறது.

(iv) நிதி ஓட்டப் பகுப்பாய்வு

"நிதி" என்பது நடைமுறை முதலைக் குறிப்பதாகும். நடைமுறை முதல் என்பது நடப்புப் பொறுப்புகளை விட அதிகமாக உள்ள நடப்புச் சொத்துகளைக் குறிப்பதாகும். ஓட்டம் என்பது இயக்கம் என்பதைக் குறிக்கும். மேலும், அது உள்ஓட்டம் மற்றும் வெளிஓட்டம் என்பதையும் உள்ளடக்கியதாகும். நிதி ஓட்டப் பகுப்பாய்வு என்பது குறிப்பிட்ட காலத்தில் உள்வரும் நிதி (ஆதாரங்கள்) வெளிச் செல்லும் நிதி (பயன்பாடுகள்) ஆகியவற்றை வெளிப்படுத்தும் ஒரு நிதி ஓட்ட அறிக்கை தயாரிப்பதாகும். நிதி ஓட்ட பகுப்பாய்வு என்பது கடன்பெறும் தன்மையை மதிப்பிடுதல், நிதியியல் திட்டமிடுதல் மற்றும் நிதித்திட்ட பட்டியல் தயாரித்தல் போன்றவற்றிற்கு மிகவும் பயனுடையதாகும்.

(v) ரொக்க ஓட்டப் பகுப்பாய்வு

ரொக்க ஓட்ட பகுப்பாய்வு என்பது ரொக்க ஓட்ட அறிக்கை தயாரிப்பதைக் குறிக்கும். இது ஒரு குறிப்பிட்ட காலத்தில் உள்வரும் மற்றும் வெளிச் செல்லும் ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகளை வெளிப்படுத்தும். ரொக்கம் என்பது கை ரொக்கம் மற்றும் வங்கியில் உள்ள கேட்பு வைப்புகளை உள்ளடக்கியது. ரொக்கத்திற்கு சமமானவைகள் என்பது குறுகிய காலத்தில் அதிக நட்டமில்லாமல் ரொக்கமாக மாற்றக்கூடிய குறுகிய கால முதலீடுகளைக் குறிக்கும். ரொக்க ஓட்டப் பகுப்பாய்வு வணிக நிறுவனத்தின் நீர்மைத்தன்மை மற்றும் கடன் தீர்க்கும் திறன் விகிதங்கள் கணக்கிடுவதற்கு உதவிகரமானதாக இருக்கிறது.

8.6 ஒப்புநோக்கு அறிக்கைகள் தயாரித்தல்

ஒப்புநோக்கு அறிக்கை ஐந்து பத்திகளைக் கொண்டது. ஒப்புநோக்கு அறிக்கைகள் தயாரிக்கப்படும் போது பின்பற்ற வேண்டிய நிலைகள் பின்வருமாறு:

12th-Accountancy-Unit-08_TM.indd 270 12/9/2021 11:22:21 PM

(i) பத்தி 1 : இந்தப் பத்தியில் வருமான அறிக்கை மற்றும் இருப்புநிலைக்குறிப்பில் உள்ள விவரங்கள் பதியப்படும்

(ii) பத்தி 2 : முதல் ஆண்டிற்கான தொகையைப் பதிவு செய்யவும்

(iii) பத்தி 3 : இரண்டாம் ஆண்டிற்கான தொகையைப் பதிவு செய்யவும்

(iv) பத்தி 4 : முதலாண்டு தொகைக்கும் இரண்டாமாண்டு தொகைக்கும் இடையேயான வேறுபாட்டினைக் காட்டவும். 2–ம் ஆண்டில் மதிப்பு அதிகரித்திருந்தால் கூட்டல் அடையாளமும் மதிப்பு குறைந்திருந்தால் கழித்தல் அடையாளமும் இட வேண்டும்.

(v) பத்தி 5 : 4–ஆம் பத்தியில் கொடுக்கப்பட்டுள்ள தொகையினை இரண்டாம் பத்தியில் (முதல் ஆண்டு தொகை) கொடுக்கப்பட்டுள்ள தொகையுடன் வகுத்து (கூடும் அல்லது குறையும் தொகை) 4–ஆம் பத்தியின் தொகைக்கான கூடும் அல்லது குறையும் சதவீதத்தினைக் காட்டவும்.

$$\text{கூடும் அல்லது குறையும் சதவீதம்} = \frac{\text{கூடும் அல்லது குறையும் தொகை}}{\text{முதல் ஆண்டிற்கான தொகை}} \times 100$$

ஒப்பு நோக்கும் அறிக்கையின் படிவம்

விவரம்	ஆண்டு 1	ஆண்டு 2	தொகையின் கூடுதல் (+) அல்லது குறைவு (–)	சதவீதத்தின் கூடுதல் (+) அல்லது குறைவு (–)
	₹	₹	₹	
(1)	(2)	(3)	(4)	(5)



கிடைமட்ட பகுப்பாய்வு

பல ஆண்டுகளுக்கான தொகைகளைப் பகுப்பாய்வு செய்வதற்கு எடுத்துக் கொண்டால், அப்பகுப்பாய்வு கிடைமட்ட பகுப்பாய்வு என்றழைக்கப்படும். பொதுவாக, ஒரு ஆண்டானது அடிப்படை ஆண்டாக எடுத்துக் கொள்ளப்பட்டு, பிற ஆண்டுகளுடனான தொகை அடிப்படை ஆண்டுடன் ஒப்பீடு செய்யப்படுகிறது. ஒப்பீடு அறிக்கைகள், மற்றும் போக்கு சதவீதங்கள் போன்றவை கிடைமட்ட பகுப்பாய்விற்கான எடுத்துகாட்டுகள் ஆகும்.

செங்குத்துப் பகுப்பாய்வு

ஒரு கணக்காண்டிற்குரிய தொகை மட்டுமே பகுப்பாய்விற்கு எடுத்து கொள்ளப்படுமானால் அது செங்குத்துப் பகுப்பாய்வு என்றழைக்கப்படும். இங்கு, ஒரே கணக்காண்டிலுள்ள நிதி அறிக்கைகளின் பல்வேறு விவரங்களுக்கிடையே தொடர்பு ஏற்படுத்தப்படுகிறது. பொது அளவு அறிக்கை தயாரித்தல், விகிதங்கள் கணக்கிடுதல் ஆகியவை செங்குத்துப் பகுப்பாய்விற்கான எடுத்துக்காட்டுகள் ஆகும்.

எடுத்துக்காட்டு 1

பின்வரும் விவரங்களிலிருந்து தருண் & கோ நிறுமத்தின் ஒப்பீட்டு வருமான அறிக்கை தயார் செய்யவும்.

விவரம்	2016-17	2017-18
	₹	₹
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	2,00,000	2,50,000
இதர வருமானங்கள்	50,000	40,000
செலவுகள்	1,50,000	1,20,000

12th-Accountancy-Unit-08_TM.indd 271 12/9/2021 11:22:21 PM

தீர்வு

தருண் வரையறு நிறுமத்தின்
2017, மார்ச் 31 மற்றும் 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும்ஒப்பு நோக்கும் ஆண்டுகளுக்குரிய வருமான அறிக்கை

விவரம்	2016-17	2017-18	தொகையின் கூடுதல் (+) அல்லது குறைவு (–)	சதவீதத்தின் கூடுதல் (+) அல்லது குறைவு (–)
	₹	₹	₹	
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	2,00,000	2,50,000	+50,000	+25
கூட்டுக: இதர வருமானங்கள்	50,000	40,000	–10,000	–20
மொத்த வருமானங்கள்	2,50,000	2,90,000	+40,000	+16
கழிக்க: செலவுகள்	1,50,000	1,20,000	–30,000	–20
வரிக்கு முன்னர் உள்ள இலாபம்	1,00,000	1,70,000	+70,000	+70

மாணவர் குறிப்பு

விற்பனை மூலம் பெற்ற வருவாயின் கூடுதல் மற்றும் குறைதல் சதவீதக் கணக்கீடு

$$\frac{\text{தொகையின் கூடுதல் அல்லது குறைவு}}{\text{முதல் வருடத் தொகை}} \times 100 = \frac{50,000}{2,00,000} \times 100 = 25\%$$

மாணவர் செயல்பாடு 8.2

முந்தைய ஆண்டு வருமான அறிக்கையை நடப்பு ஆண்டு வருமான அறிக்கையுடன் ஒப்பிடும் போது வரிக்கு முன்னர் உள்ள இலாபம் 70 சதவீதம் உயர்ந்துள்ளது. இவ்வுயர்விற்கான காரணங்கள் ஏதேனும் மூன்றினை சிந்தனை செய்யவும்.

எடுத்துக்காட்டு 2

பின்வரும் விவரங்களிலிருந்து அப்துல் வரையறு நிறுமத்தின் ஒப்பீட்டு வருமான அறிக்கையை தயார் செய்யவும்.

விவரம்	2015-16 ₹	2016-17 ₹
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	3,00,000	3,60,000
இதர வருமானம்	1,00,000	60,000
செலவுகள்	2,00,000	1,80,000
வருமான வரி	30%	30%

தீர்வு

அப்துல் வரையறு நிறுமத்தின்
2016, மார்ச் 31 மற்றும் 2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய ஒப்பீட்டு வருமான அறிக்கை

விவரம்	2015-16	2016-17	தொகையின் கூடுதல் (+) அல்லது குறைவு (–)	சதவீதத்தின் கூடுதல் (+) அல்லது குறைவு (–)
	₹	₹	₹	
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	3,00,000	3,60,000	+60,000	+20
கூட்டுக: இதர வருமானங்கள்	1,00,000	60,000	–40,000	–40
மொத்த வருமானங்கள்	4,00,000	4,20,000	+20,000	+5
கழிக்க: செலவுகள்	2,00,000	1,80,000	–20,000	–10
வரிக்கு முன் இலாபம்	2,00,000	2,40,000	+40,000	+20
கழிக்க: வருமானவரி 30%	60,000	72,000	+12,000	+20
வரிக்கு பின்னர் உள்ள இலாபம்	1,40,000	1,68,000	+28,000	+20

12th-Accountancy-Unit-08_TM.indd 272 12/9/2021 11:22:22 PM

எடுத்துக்காட்டு 3

பின்வரும் விவரங்களிலிருந்து மேரி வரையறு நிறுமத்தின் ஒப்பீட்டு வருமான அறிக்கையை தயார் செய்யவும்.

விவரம்	2015-16	2016-17
	₹	₹
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	4,00,000	5,00,000
இயக்கச் செலவுகள்	2,00,000	1,80,000
வருமான வரி (வரிக்கு முன் இலாபத்தில் %)	20	50

தீர்வு

மேரி வரையறு நிறுமத்தின்
2016, மார்ச் 31 மற்றும் 2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய
ஒப்பீட்டு வருமான அறிக்கை

விவரம்	2015-16	2016-17	தொகையின் கூடுதல் (+) அல்லது குறைவு (–)	சதவீதத்தின் கூடுதல் (+) அல்லது குறைவு (–)
	₹	₹	₹	
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	4,00,000	5,00,000	+1,00,000	+25
கழிக்க: இயக்கச் செலவுகள்	2,00,000	1,80,000	–20,000	–10
வரிக்கு முன் இலாபம்	2,00,000	3,20,000	+1,20,000	+60
கழிக்க: வருமானவரி	40,000	1,60,000	+1,20,000	+300
வரிக்கு பின்னர் உள்ள இலாபம்	1,60,000	1,60,000	-	-

குறிப்பு: வருமானவரி கணக்கீடு

2015-2016 2,00,000 x 20% = 40,000
2016-2017 3,20,000 x 50% = 1,60,000

எடுத்துக்காட்டு 4

சந்திரா நிறுமத்தின் பின்வரும் இருப்புநிலைக்குறிப்பிலிருந்து 2016 மார்ச் 31 மற்றும் 2017 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய ஒப்பீட்டு இருப்புநிலைக்குறிப்பினைத் தயார் செய்யவும்.

விவரம்	2016, மார்ச் 31	2017, மார்ச் 31
	₹	₹
I. பங்குமூலதனம் மற்றும் பொறுப்புகள்		
பங்குதாரர் நிதி	1,00,000	2,60,000
நீண்ட காலப் பொறுப்புகள்	50,000	60,000
நடப்புப் பொறுப்புகள்	25,000	30,000
மொத்தம்	1,75,000	3,50,000
II. சொத்துகள்		
நிலைச் சொத்துகள்	1,00,000	2,00,000
நடப்புச் சொத்துகள்	75,000	1,50,000
மொத்தம்	1,75,000	3,50,000

12th-Accountancy-Unit-08_TM.indd 273 12/9/2021 11:22:22 PM

தீர்வு

சந்திரா வரையறு நிறுமத்தின்
2016, மார்ச் 31 மற்றும் 2017, மார்ச் 31 ஆம் நாளைய
ஒப்பீட்டு இருப்புநிலைக்குறிப்பு

விவரம்	2015-16	2016-17	தொகையின் கூடுதல் (+) அல்லது குறைவு (–)	சதவீதத்தின் கூடுதல் (+) அல்லது குறைவு (–)
	₹	₹	₹	
I. பங்குமூலதனம் மற்றும் பொறுப்புகள்				
பங்குதாரர் நிதி	1,00,000	2,60,000	+1,60,000	+160
நீண்ட காலப் பொறுப்புகள்	50,000	60,000	+10,000	+20
நடப்புப் பொறுப்புகள்	25,000	30,000	+5,000	+20
மொத்தம்	1,75,000	3,50,000	+1,75,000	+100
II. சொத்துகள்				
நிலைச் சொத்துகள்	1,00,000	2,00,000	+1,00,000	+100
நடப்புச் சொத்துகள்	75,000	1,50,000	+75,000	+100
மொத்தம்	1,75,000	3,50,000	+1,75,000	+100

எடுத்துக்காட்டு 5

பின்வரும் மலர் நிறுமத்தின் 2016, மார்ச் 31 மற்றும் 2017, மார்ச் 31 ஆம் நாளைய ஒப்பீட்டு இருப்புநிலைக் குறிப்பினைத் தயார் செய்யவும்.

விவரம்	2016, மார்ச் 31	2017, மார்ச் 31
	₹	₹
I. பங்குமூலதனம் மற்றும் பொறுப்புகள்		
1. பங்குதாரர் நிதி		
அ) பங்கு முதல்	2,00,000	2,50,000
ஆ) காப்பும் மிகுதியும்	50,000	50,000
2. நீண்ட காலப் பொறுப்புகள்		
நீண்ட காலக் கடன்கள்	30,000	60,000
3. நடப்புப் பொறுப்புகள்		
கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள்	20,000	60,000
மொத்தம்	3,00,000	4,20,000
II. சொத்துகள்		
1. நீண்ட காலச் சொத்துகள்		
அ) நிலைச் சொத்துகள்	1,00,000	1,50,000
ஆ) நீண்ட கால முதலீடுகள்	50,000	75,000
2. நடப்புச் சொத்துகள்		
சரக்கிருப்பு	75,000	1,50,000
ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள்	75,000	45,000
மொத்தம்	3,00,000	4,20,000

12th-Accountancy-Unit-08_TM.indd 274 12/9/2021 11:22:22 PM

தீர்வு

மலர் வரையறு நிறுமத்தின்
2016, மார்ச் 31 மற்றும் 2017, மார்ச் 31 ஆம் நாளைய
ஒப்பீட்டு இருப்புநிலைக்குறிப்பு

விவரம்	2015–16	2016–17	தொகையின் கூடுதல் (+) அல்லது குறைவு (–)	சதவீதத்தின் கூடுதல் (+) அல்லது குறைவு (–)
	₹	₹	₹	
I. பங்குமூலதனம் மற்றும் பொறுப்புகள்				
1. பங்குதாரர் நிதி				
அ) பங்கு முதல்	2,00,000	2,50,000	+50,000	+25
ஆ) காப்பும் மிகுதியும்	50,000	50,000	-	-
2. நீண்ட காலப் பொறுப்புகள்				
நீண்ட காலக் கடன்கள்	30,000	60,000	+30,000	+100
3. நடப்புப் பொறுப்புகள்				
கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள்	20,000	60,000	+40,000	+200
மொத்தம்	3,00,000	4,20,000	+1,20,000	+40
II. சொத்துகள்				
1. நீண்டகாலச் சொத்துகள்				
அ) நிலைச் சொத்துகள்	1,00,000	1,50,000	+50,000	+50
ஆ) நீண்ட கால முதலீடுகள்	50,000	75,000	+25,000	+50
2. நடப்புச் சொத்துகள்				
சரக்கிருப்பு	75,000	1,50,000	+75,000	+100
ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள்	75,000	45,000	–30,000	–40
மொத்தம்	3,00,000	4,20,000	+1,20,000	+40

மாணவர் செயல்பாடு 8.3

குழு செயல்பாடு: செய்தித்தாள்கள், வணிக இதழ்கள் மற்றும் இணையதளங்களிலிருந்து ஒரே வகையான நிறுமங்களின் நிதிநிலை அறிக்கைகளைச் சேகரித்து ஒப்பீடு செய்து அவைகளைப் பகுப்பாய்வு செய்யவும்.

8.7 பொது அளவு அறிக்கைகள் தயாரித்தல்

பொது அளவு அறிக்கைகள் மூன்று பத்திகளுடன் தயாரிக்கப்படுகின்றன. பொது அளவு அறிக்கைகள் தயாரிக்க பின்வரும் படிநிலைகள் பின்பற்றப்படுகின்றன.

(i) **பத்தி 1** – வருமான அறிக்கை அல்லது இருப்புநிலைக் குறிப்பில் உள்ள இனங்களின் விவரங்கள் இப்பத்தியில் எழுதப்படுகின்றன.

(ii) **பத்தி 2** – தொகையினைப் பதிவு செய்யவும்.

(iii) **பத்தி 3** – பொதுவான அடிப்படையாக 100 என்பதை எடுத்துக் கொள்ளவும். எடுத்துக்காட்டாக விற்பனை மூலம் பெற்ற வருவாய் என்பது வருமான அறிக்கைக்கு அடிப்படையாகவும், இருப்புநிலைக் குறிப்பின் மொத்தத் தொகை, இருப்புநிலைக் குறிப்பிற்கு அடிப்படையாகவும் எடுத்துக்கொள்ளப்படலாம். பத்தி 2–ல் உள்ள விவரங்களுக்கு பொதுவான அடிப்படையை கொண்டு சதவீதம் கணக்கீடு செய்து 3–ஆம் பத்தியில் பதிவு செய்யவும்.

12th-Accountancy-Unit-08_TM.indd 275 12/9/2021 11:22:22 PM

பொது அளவு அறிக்கையின் படிவம்

விவரம்	தொகை	சதவீதம்

எடுத்துக்காட்டு 6

குமார் நிறுமத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து 2018 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பொது அளவு வருமான அறிக்கையை தயார் செய்யவும்.

விவரம்	2017-18
	₹
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	5,00,000
இதர வருமானம்	20,000
செலவுகள்	3,00,000

தீர்வு

குமார் நிறுமத்தின்
2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான
பொது அளவு வருமான அறிக்கை

விவரம்	தொகை	விற்பனை மூலம் பெற்ற வருவாயில் சதவீதம்
	₹	
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	5,00,000	100
கூட்டுக: இதர வருமானம்	20,000	4
மொத்த வருவாய்	5,20,000	104
கழிக்க: செலவுகள்	3,00,000	60
வரிக்கு முன்னர் உள்ள இலாபம்	2,20,000	44

குறிப்பு: பிற வருமானத்திற்கான சதவீதம் கணக்கிடுதல்

$$\frac{20,000}{5,00,000} \times 100 = 4\%$$

எடுத்துக்காட்டு 7

பின்வரும் விவரங்களிலிருந்து மணி மற்றும் கனி நிறுமங்களின் 2019 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான பொது அளவு வருமான அறிக்கையைத் தயார் செய்யவும்.

விவரம்	மணி நிறுமம்	கனி நிறுமம்
	₹	₹
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	2,00,000	2,50,000
இதர வருமானம்	30,000	25,000
செலவுகள்	1,10,000	1,25,000

12th-Accountancy-Unit-08_TM.indd 276 12/9/2021 11:22:22 PM

தீர்வு

2019, மார்ச் 31 ஆம் நாளைய பொது அளவு வருவாய் அறிக்கை

விவரம்	மணி நிறுமம்		கனி நிறுமம்	
	தொகை	விற்பனை மூலம் பெற்ற வருவாயில் சதவீதம்	தொகை	விற்பனை மூலம் பெற்ற வருவாயில் சதவீதம்
	₹		₹	
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	2,00,000	100	2,50,000	100
கூட்டுக: இதர வருமானம்	30,000	15	25,000	10
மொத்த வருவாய்	2,30,000	115	2,75,000	110
கழிக்க: செலவுகள்	1,10,000	55	1,25,000	50
வரிக்கு முன்னர் உள்ள இலாபம்	1,20,000	60	1,50,000	60

எடுத்துக்காட்டு 8

பின்வரும் விவரங்களைக் கொண்டு சிவா வரையறு நிறுமத்தின் மார்ச் 31, 2016 மற்றும் மார்ச் 31, 2017 க்கான பொது அளவு வருவாய் அறிக்கையினை தயார் செய்யவும்.

விவரம்	2015-16	2016-17
	₹	₹
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	2,00,000	3,00,000
இதர வருமானம்	25,000	75,000
செலவுகள்	2,50,000	1,50,000
வருமான வரி %	40	40

தீர்வு

சிவா வரையறு நிறுமத்தின்
2016, மார்ச் 31 மற்றும் 2017, மார்ச் 31 ஆண்டுகளுக்குரிய
பொது அளவு வருவாய் அறிக்கை.

விவரம்	2015–16 தொகை	2015–16 விற்பனை மூலம் பெற்ற வருவாயில் சதவீதம்	2016–17 தொகை	2015–16 விற்பனை மூலம் பெற்ற வருவாயில் சதவீதம்
	₹		₹	
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	2,00,000	100.00	3,00,000	100
கூட்டுக: இதர வருமானம்	25,000	12.50	75,000	25
மொத்த வருவாய்	2,25,000	112.50	3,75,000	125
கழிக்க: செலவுகள்	2,50,000	125.00	1,50,000	50
வரிக்கு முன்னர் உள்ள இலாபம்/நட்டம்	–25,000	–12.50	2,25,000	75
கழிக்க: வருமான வரி (40%)	-	-	90,000	30
வரிக்கு பின்னர் உள்ள இலாபம்	–25,000	–12.50	1,35,000	45

12th-Accountancy-Unit-08_TM.indd 277 12/9/2021 11:22:22 PM

எடுத்துக்காட்டு 9

மரியா வரையறு நிறுமத்தின் 2018, மார்ச் 31 ஆம் நாளைய பொது அளவு இருப்புநிலைக்குறிப்பு தயார் செய்யவும்.

விவரம்	2018, மார்ச் 31
	₹
I. பங்குமூலதனம் மற்றும் பொறுப்புகள்	
பங்குதாரர் நிதி	4,00,000
நீண்ட காலப் பொறுப்புகள்	3,20,000
நடப்புப் பொறுப்புகள்	80,000
மொத்தம்	8,00,000
II. சொத்துகள்	
நிலைச் சொத்துகள்	6,00,000
நடப்புச் சொத்துகள்	2,00,000
மொத்தம்	8,00,000

தீர்வு

மரியா வரையறு நிறுமத்தின்
2018, மார்ச் 31 ஆம் நாளைய பொது அளவு இருப்புநிலைக்குறிப்பு

விவரம்	தொகை	மொத்த சொத்துகளில் சதவீதம்
	₹	
I. பங்குமூலதனம் மற்றும் பொறுப்புகள்		
பங்குதாரர் நிதி	4,00,000	50
நீண்ட காலப் பொறுப்புகள்	3,20,000	40
நடப்புப் பொறுப்புகள்	80,000	10
மொத்தம்	8,00,000	100
II. சொத்துகள்		
நிலைச் சொத்துகள்	6,00,000	75
நடப்புச் சொத்துகள்	2,00,000	25
மொத்தம்	8,00,000	100

எடுத்துக்காட்டு 10

சர்மிளா வரையறு நிறுமம் மற்றும் சங்கீதா வரையறு நிறுமத்தின் 2109, மார்ச் 31 ஆம் நாளைய பொது அளவு இருப்புநிலைக் குறிப்பு தயார் செய்யவும்.

விவரம்	சர்மிளா நிறுமம்	சங்கீதா நிறுமம்
	₹	₹
I. பங்குமூலதனம் மற்றும் பொறுப்புகள்		
பங்குதாரர் நிதி	5,00,000	11,00,000
நீண்ட காலப் பொறுப்புகள்	4,00,000	7,00,000
நடப்புப் பொறுப்புகள்	1,00,000	2,00,000
மொத்தம்	10,00,000	20,00,000
II. சொத்துகள்		
நிலைச் சொத்துகள்	6,50,000	18,00,000
நடப்புச் சொத்துகள்	3,50,000	2,00,000
மொத்தம்	10,00,000	20,00,000

12th-Accountancy-Unit-08_TM.indd 278 12/9/2021 11:22:22 PM

தீர்வு

சர்மிளா வரையறு நிறுமம் மற்றும் சங்கீதா வரையறு நிறுமத்தின்
2019, மார்ச் 31 ஆம் நாளைய பொது அளவு இருப்புநிலைக்குறிப்பு

விவரம்	சர்மிளா நிறுமம்		சங்கீதா நிறுமம்	
	தொகை ₹	மொத்த சொத்துகளில் சதவீதம்	தொகை ₹	மொத்த சொத்துகளில் சதவீதம்
I. பங்குமூலதனம் மற்றும் பொறுப்புகள்				
பங்குதாரர் நிதி	5,00,000	50	11,00,000	55
நீண்ட காலப் பொறுப்புகள்	4,00,000	40	7,00,000	35
நடப்புப் பொறுப்புகள்	1,00,000	10	2,00,000	10
மொத்தம்	10,00,000	100	20,00,000	100
II. சொத்துகள்				
நிலைச் சொத்துகள்	6,50,000	65	18,00,000	90
நடப்புச் சொத்துகள்	3,50,000	35	2,00,000	10
மொத்தம்	10,00,000	100	20,00,000	100

எடுத்துக்காட்டு 11

சேலம் வரையறு நிறுமத்தின் 2017, மார்ச் 31 மற்றும் 2018, மார்ச் 31– க்கான பொது அளவு நிதிநிலை அறிக்கை தயார் செய்யவும்.

விவரம்	31 மார்ச் 2017 ₹	31 மார்ச் 2018 ₹
I. பங்குமூலதனம் மற்றும் பொறுப்புகள்		
1. பங்குதாரர் நிதி		
அ) பங்கு முதல்	5,00,000	6,00,000
ஆ) காப்பும் மிகுதியும்	4,00,000	3,60,000
2. நீண்ட காலப் பொறுப்புகள்		
நீண்ட காலக் கடன்கள்	8,00,000	2,40,000
3. நடப்புப் பொறுப்புகள்		
கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள்	3,00,000	-
மொத்தம்	20,00,000	12,00,000
II. சொத்துகள்		
1. நீண்ட காலச் சொத்துகள்		
அ) நிலைச் சொத்துகள்	10,00,000	6,00,000
ஆ) நீண்டகால முதலீடுகள்	5,00,000	2,40,000
2. நடப்புச் சொத்துகள்		
சரக்கிருப்பு	3,00,000	1,20,000
ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள்	2,00,000	2,40,000
மொத்தம்	20,00,000	12,00,000

தீர்வு

12th-Accountancy-Unit-08_TM.indd 279 12/9/2021 11:22:23 PM

சேலம் வரையறு நிறுவனத்தின்
2017, மார்ச் 31 மற்றும் 2018, மார்ச் 31 ஆம் நாளைய பொது அளவு இருப்புநிலைக் குறிப்பு

விவரம்	2017, மார்ச் 31 தொகை	2017, மார்ச் 31 மொத்த சொத்துகளில் சதவீதம்	2018, மார்ச் 31 தொகை	2018, மார்ச் 31 மொத்த சொத்துகளில் சதவீதம்
	₹		₹	
I. பங்குமூலதனம் மற்றும் பொறுப்புகள்				
1. பங்குதாரர் நிதி				
அ) பங்கு முதல்	5,00,000	25	6,00,000	50
ஆ) காப்பும் மிகுதியும்	4,00,000	20	3,60,000	30
2. நீண்ட காலப் பொறுப்புகள்				
நீண்ட காலக் கடன்கள்	8,00,000	40	2,40,000	20
3. நடப்புப் பொறுப்புகள்				
கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள்	3,00,000	15	-	-
மொத்தம்	20,00,000	100	12,00,000	100
II. சொத்துகள்				
1. நீண்ட காலச் சொத்துகள்				
அ) நிலைச் சொத்துகள்	10,00,000	50	6,00,000	50
ஆ) நீண்டகால முதலீடுகள்	5,00,000	25	2,40,000	20
2. நடப்புச் சொத்துகள்				
சரக்கிருப்பு	3,00,000	15	1,20,000	10
ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள்	2,00,000	10	2,40,000	20
மொத்தம்	20,00,000	100	12,00,000	100

8.8 போக்குப் பகுப்பாய்வு

போக்குப் பகுப்பாய்வினைக் கணக்கிட பின்வரும் படிநிலைகள் பின்பற்றப்படுகின்றன.

(i) கொடுக்கப்பட்ட ஆண்டுகளில் முதலாவது ஆண்டை அடிப்படை ஆண்டாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

(ii) அடிப்படை ஆண்டின் எண்ணாக 100ஐ எடுத்துக் கொள்ளவும்.

(iii) அடிப்படை ஆண்டின் எண்ணிலிருந்து மற்ற ஆண்டுகளின் சதவீதத்தை வெளிக் கொண்டு வந்து போக்கினைக் கணக்கிடலாம்.

எடுத்துக்காட்டு 12

பின்வரும் விவரங்களைக் கொண்டு குறிஞ்சி வரையறு நிறுவனத்தின் போக்கு சதவீதங்களைக் கணக்கிடவும்.

விவரம்	₹ ஆயிரங்களில்		
	2015-16	2016-17	2017-18
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	120	132	156
இதர வருமானம்	50	38	65
செலவுகள்	100	135	123

12th-Accountancy-Unit-08_TM.indd 280 12/9/2021 11:22:23 PM

தீர்வு

குறிஞ்சி வரையறு நிறுமத்தின் போக்கு பகுப்பாய்வு

விவரம்	₹ ஆயிரங்களில்			போக்கு சதவீதங்கள்		
	2015-16	2016-17	2017-18	2015-16	2016-17	2017-18
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	120	132	156	100	110	130
கூட்டுக: இதர வருமானம்	50	38	65	100	76	130
மொத்தம்	170	170	221	100	100	130
கழிக்க: செலவுகள்	100	135	123	100	135	123
இலாபம்	70	35	98	100	50	140

குறிப்பு: விற்பனை மூலம் பெற்ற வருவாயின் போக்கு சதவீதங்கள் கணக்கிடுதல்

$$2016\text{-}17: \frac{132}{120} \times 100 = 110\%$$

$$2017\text{-}18: \frac{156}{120} \times 100 = 130\%$$

எடுத்துக்காட்டு 13

பின்வரும் விவரங்களைக் கொண்டு, முல்லை வரையறு நிறுமத்தின் போக்கு சதவீதங்களைக் கணக்கிடவும்.

விவரம்	₹ இலட்சங்களில்		
	2015-16	2016-17	2017-18
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	100	120	160
இதர வருமானம்	20	24	20
செலவுகள்	20	14	40
வருமானவரி	30%	30%	30%

தீர்வு

முல்லை வரையறு நிறுமத்தின் போக்குப் பகுப்பாய்வு

விவரம்	₹ இலட்சங்களில்			போக்கு சதவீதங்கள்		
	2015-16	**2016-17**	**2017-18**	**2015-16**	**2016-17**	**2017-18**
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	100	120	160	100	120	160
கூட்டுக: இதர வருமானங்கள்	20	24	20	100	120	100
மொத்த வருமானங்கள்	120	144	180	100	120	150
கழிக்க: செலவுகள்	20	14	40	100	70	200
வரிக்கு முன்னர் உள்ள இலாபம்	100	130	140	100	130	140
கழிக்க: வருமானவரி 30%	30	39	42	100	130	140
வரிக்கு பின்னர் உள்ள இலாபம்	70	91	98	100	130	140

12th-Accountancy-Unit-08_TM.indd 281 12/9/2021 11:22:23 PM

எடுத்துக்காட்டு 14

பின்வரும் விவரங்களைக் கொண்டு நெய்தல் வரையறு நிறுமத்தின் போக்கு சதவீதங்களைக் கணக்கிடவும்.

விவரம்	₹ இலட்சங்களில்		
	2015-16	2016-17	2017-18
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	150	135	90
இதர வருமானம்	25	5	15
செலவுகள்	125	75	50
வருமானவரி	40%	40%	40%

தீர்வு

நெய்தல் வரையறு நிறுமத்தின் போக்குப் பகுப்பாய்வு

விவரம்	₹ இலட்சங்களில்			போக்குப் பகுப்பாய்வு		
	2015–16	2016–17	2017–18	2015–16	2016–17	2017–18
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	150	135	90	100	90	60
கூட்டுக: இதர வருமானம்	25	5	15	100	20	60
மொத்த வருவாய்	175	140	105	100	80	60
கழிக்க: செலவுகள்	125	75	50	100	60	40
வரிக்கு முன்னர் உள்ள இலாபம்	50	65	55	100	130	110
கழிக்க: வருமானவரி (40%)	20	26	22	100	130	110
வரிக்கு பின்னர் உள்ள இலாபம்	30	39	33	100	130	110

எடுத்துக்காட்டு 15

பின்வரும் விவரங்களைக் கொண்டு பாலை வரையறு நிறுமத்தின் போக்குப் பகுப்பாய்வினைக் கணக்கிடவும்.

விவரம்	₹ இலட்சங்களில்		
	வருடம் 1	வருடம் 2	வருடம் 3
I. பங்குமூலதனம் மற்றும் பொறுப்புகள்			
பங்குதாரர் நிதி	250	275	300
நீண்ட காலப் பொறுப்புகள்	100	125	100
நடப்புப் பொறுப்புகள்	50	40	80
மொத்தம்	400	440	480
II. சொத்துகள்			
நிலைச் சொத்துகள்	300	360	390
நடப்புச் சொத்துகள்	100	80	90
மொத்தம்	400	440	480

12th-Accountancy-Unit-08_TM.indd 282 12/9/2021 11:22:23 PM

தீர்வு

பாலை வரையறு நிறுமத்தின் போக்குப் பகுப்பாய்வு

விவரம்	₹ இலட்சங்களில்			போக்கு சதவீதங்கள்		
	வருடம் 1	வருடம் 2	வருடம் 3	வருடம் 1	வருடம் 2	வருடம் 3
I. பங்குமூலதனம் மற்றும் பொறுப்புகள்						
பங்குதாரர் நிதி	250	275	300	100	110	120
நீண்ட காலப் பொறுப்புகள்	100	125	100	100	125	100
நடப்புப் பொறுப்புகள்	50	40	80	100	80	160
மொத்தம்	400	440	480	100	110	120
II. சொத்துகள்						
நிலைச் சொத்துகள்	300	360	390	100	120	130
நடப்புச் சொத்துகள்	100	80	90	100	80	90
மொத்தம்	400	440	480	100	110	120

எடுத்துக்காட்டு 16

பூமி வரையறு நிறுமத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து போக்கு சதவீதங்களைக் கணக்கிடவும்.

விவரம்	₹ இலட்சங்களில்		
	வருடம் 1	வருடம் 2	வருடம் 3
I. பங்குமூலதனம் மற்றும் பொறுப்புகள்			
1. பங்குதாரர் நிதி			
அ) பங்கு முதல்	200	254	212
ஆ) காப்பும் மிகுதியும்	60	60	90
2. நீண்ட காலப் பொறுப்புகள்			
நீண்ட காலக் கடன்கள்	140	154	168
3. நடப்புப் பொறுப்புகள்			
கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள்	40	60	80
மொத்தம்	440	528	550
II. சொத்துகள்			
1. நீண்ட காலச் சொத்துகள்			
அ) நிலைச் சொத்துகள்	200	236	206
ஆ) நீண்டகால முதலீடுகள்	80	100	120
2. நடப்புச் சொத்துகள்			
சரக்கிருப்பு	120	132	144
ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள்	40	60	80
மொத்தம்	440	528	550

12th-Accountancy-Unit-08_TM.indd 283 12/9/2021 11:22:23 PM

தீர்வு

பூமி வரையறு நிறுமத்தின் போக்குப் பகுப்பாய்வு

விவரம்	₹ இலட்சங்களில்			போக்கு சதவீதங்கள்		
	வருடம் 1	வருடம் 2	வருடம் 3	வருடம் 1	வருடம் 2	வருடம் 3
I. பங்குமூலதனம் மற்றும் பொறுப்புகள்						
1. பங்குதாரர் நிதி						
அ) பங்கு முதல்	200	254	212	100	127	106
ஆ) காப்பும் மிகுதியும்	60	60	90	100	100	150
2. நீண்ட காலப் பொறுப்புகள்						
நீண்ட காலக் கடன்கள்	140	154	168	100	110	120
3. நடப்புப் பொறுப்புகள்						
கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள்	40	60	80	100	150	200
மொத்தம்	440	528	550	100	120	125
II. சொத்துகள்						
1. நீண்ட காலச் சொத்துகள்						
அ) நிலைச் சொத்துகள்	200	236	206	100	118	103
ஆ) நீண்டகால முதலீடுகள்	80	100	120	100	125	150
2. நடப்புச் சொத்துகள்						
சரக்கிருப்பு	120	132	144	100	110	120
ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள்	40	60	80	100	150	200
மொத்தம்	440	528	550	100	120	125

மாணவர் செயல்பாடு 8.4

குழு செயல்பாடு: கணக்குப்பதிவியல் மற்றும் பிற பாடங்களில் குறைந்தது நான்கு வகுப்புத் தேர்வுகளின் மதிப்பெண்களை பதிவு செய்யவும். போக்கு சதவிகிதத்தைப் பயன்படுத்தி உங்கள் மதிப்பெண்களைப் பகுப்பாய்வு செய்யவும்.

நினைவில் கொள்ள வேண்டியவை

- நிதிநிலை அறிக்கைகள், பொதுவாக வருமான அறிக்கை மற்றும் இருப்புநிலைக் குறிப்பு என்ற இரண்டு அடிப்படை அறிக்கைகளைக் குறிக்கிறது.
- குறிப்புகள் மற்றும் பட்டியல்கள் ஆகியவையும் நிதிநிலை அறிக்கைகளின் பகுதி ஆகும்.
- நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு, ஒப்பீட்டு அறிக்கை, பொது அளவு அறிக்கை, போக்கு பகுப்பாய்வு, நிதி ஓட்ட அறிக்கை மற்றும் ரொக்க ஓட்ட அறிக்கை போன்ற கருவிகளை உள்ளடக்கியதாகும்.
- ஒப்பீட்டு அறிக்கை என்பது ஒரு வணிக நிறுவனத்தின் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளின் நிதிநிலை அறிக்கைகளில் உள்ள தனித்தனி இனங்களின் நிகர அதிகரிப்பு அல்லது நிகர குறைவு குறித்த ஒப்பீடுகளைத் தரும் அறிக்கையே ஆகும்.
- பொது அளவு அறிக்கை சில பொது அடிப்படைகளைக் கொண்டு பல்வேறு இனங்களின் தொடர்பினைக் காட்டுவதாகும். பொது அளவு அறிக்கை இனங்கள், பொது அளவு அடிப்படையின் சதவிகிதமாக காட்டப்படுகின்றன.
- போக்கு பகுப்பாய்வு பல ஆண்டுகளுக்கு மேலுள்ள தொகைகளில் ஏற்படும் மாற்றங்களை ஆய்வு செய்வதாகும்.

12th-Accountancy-Unit-08_TM.indd 284 12/9/2021 11:22:23 PM

சுய ஆய்வு வினாக்கள்

சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. பின்வரும் வாக்கியங்களில் எது சரியானதல்ல?
   (அ) குறிப்புகள் மற்றும் பட்டியல்களும் நிதிநிலை அறிக்கைகளின் பகுதி ஆகின்றன.
   (ஆ) நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளில் பொது அளவு அறிக்கை உள்ளடங்கும்.
   (இ) போக்குப் பகுப்பாய்வு என்பது ஓராண்டில் தொகைகளில் ஏற்படும் மாற்றங்களை ஆய்வு செய்தலைக் குறிப்பதாகும்.
   (ஈ) பொது அளவு அறிக்கை சில பொது அடிப்படைகளைக் கொண்டு பல்வேறு இனங்களின் தொடர்பினைக் காட்டுவதாகும். இவ்வினங்கள், பொது அளவு அடிப்படையின் சதவிகிதமதாக காட்டப்படுகின்றன.

2. இருப்புநிலைக் குறிப்பு, வணிக நிறுவனத்தின் நிதிநிலை பற்றிய _____ தகவல்களை வழங்குகிறது.
   (அ) ஒரு காலக்கட்டத்திற்கு மேலான (ஆ) ஒரு குறிப்பிட்ட நாளுக்குரிய
   (இ) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான (ஈ) குறிப்பிட்ட கணக்காண்டிற்குரிய

3. நிதிநிலை அறிக்கைகள் பகுப்பாய்வின் பின்வரும் எந்த கருவி பல்வேறு ஆண்டுகளுக்கான விவரங்களை பகுப்பாய்வு செய்வதற்கு ஏற்புடையதாகும்?
   (அ) ரொக்க ஓட்ட பகுப்பாய்வு (ஆ) பொது அளவு அறிக்கை
   (இ) ஒப்பீட்டு அறிக்கை (ஈ) போக்கு ஆய்வு

4. நிதிநிலை அறிக்கைகள் வெளிக்காட்டாதது
   (அ) பணம்சாரா தகவல்கள் (ஆ) கடந்தகால தகவல்கள்
   (இ) குறுகிய கால தகவல்கள் (ஈ) நீண்டகால தகவல்கள்

5. பின்வருவனவற்றில் எது நிதிநிலைப் பகுப்பாய்வின் ஒரு கருவி அல்ல?
   (அ) போக்குப் பகுப்பாய்வு (ஆ) பொது அளவு அறிக்கை
   (இ) ஒப்பீட்டு அறிக்கை (ஈ) நிர்ணயிக்கப்பட்ட அடக்கவிலையியல்

6. நிதி என்னும் சொல் குறிப்பிடுவது
   (அ) நடப்புப் பொறுப்புகள் (ஆ) நடைமுறை முதல்
   (இ) நிலைச் சொத்துகள் (ஈ) நீண்டகாலச் சொத்துகள்

7. பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது அல்ல?
   (அ) நிதிநிலை அறிக்கையின் குறைபாடுகள் அனைத்தும் நிதிநிலை அறிக்கைகள் பகுப்பாய்விற்கும் பொருந்தும்.
   (ஆ) நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு ஒரு வழிமுறை, இது ஒரு முடிவல்ல.
   (இ) நிதி நிலை அறிக்கை பகுப்பாய்விற்கு நிபுணத்துவம் தேவையில்லை.
   (ஈ) ஆய்வு செய்யப்பட்ட தகவல்களை உய்த்துணர்வது தனிப்பட்ட கருத்துகளை உள்ளடக்கியதாகும்.

8. ஒரு வரையறு நிறுமத்தின் விற்பனை ₹ 1,25,000 லிருந்து ₹ 1,50,000க்கு அதிகரித்துள்ளது. இது ஒப்பீட்டு வருமான அறிக்கையில் எவ்வாறு தோன்றுகிறது?
   (அ) + 20 % (ஆ) + 120 % (இ) – 120 % (ஈ) – 20 %

9. ஒரு பொது அளவு இருப்புநிலைக் குறிப்பில், நீண்டகாலச் சொத்துகளின் சதவீதம் 75 எனில், நடப்புச் சொத்துகளின் சதவீதம் எவ்வளவு?
   (அ) 175 (ஆ) 125 (இ) 25 (ஈ) 100

12th-Accountancy-Unit-08_TM.indd 285 12/9/2021 11:22:23 PM

10. ஒரு வணிகத்தின் முதலாம் ஆண்டுச் செலவுகள் ₹ 80,000. இரண்டாம் ஆண்டில் செலவுகள் ₹ 88,000 ஆக அதிகரித்திருந்தது. இரண்டாம் ஆண்டின் போக்கு விகிதம் என்ன?

(அ) 10 % (ஆ) 110 % (இ) 90 % (ஈ) 11%

விடை

1. (இ)	**2.** (ஆ)	**3.** (ஈ)	**4.** (அ)	**5.** (ஈ)	**6.** (ஆ)	**7.**(இ)	**8.** (அ)	**9.** (இ)	**10.**(ஆ)

II மிகக் குறுகிய வினாக்கள்

1. நிதிநிலை அறிக்கைகள் யாவை?
2. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளைப் பட்டியலிடவும்.
3. நடைமுறை முதல் என்றால் என்ன?
4. போக்குப் பகுப்பாய்வு எப்போது இதர பகுப்பாய்வு கருவிகளை விட ஏற்புடையதாகும்?

III குறுகிய வினாக்கள்

1. நிதிநிலை அறிக்கைகள் கடந்தகால விவரங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப் படுகின்றன. இது எப்படி ஒரு குறைபாடாகும் என விளக்கவும்.
2. ரொக்க ஓட்ட பகுப்பாய்வு குறித்து சிறு குறிப்பு வரையுவும்.
3. நிதிநிலை அறிக்கையின் குறைபாடுகள் ஏதேனும் மூன்றினை விளக்கவும்.
4. ஒப்பீட்டு அறிக்கை தயாரிப்பில் உள்ள படிநிலைகளை விளக்கவும்.
5. பொது அளவு வருமான அறிக்கை தயாரிக்கும் வழிமுறைகளை விளக்கவும்.

IV பயிற்சி வினாக்கள்

ஒப்பீட்டு அறிக்கை பகுப்பாய்வு

1. அருள் நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயாரிக்கவும்.

விவரம்	2015-16 ₹	2016-17 ₹
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	50,000	60,000
இதர வருமானம்	10,000	30,000
செலவுகள்	40,000	50,000

(விடை: விற்பனை மூலம் பெற்ற வருவாய் : 20%; இதர வருமானம் : 200%; மொத்த வருவாய்: 50%; செலவுகள் : 25% வரிக்கு முன்னர் உள்ள இலாபம் : 100%)

2. பரணி நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து, ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயாரிக்கவும்.

விவரம்	2016-17 ₹	2017-18 ₹
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	30,000	45,000
இதர வருமானம்	4,000	6,000
செலவுகள்	10,000	15,000
வருமான வரி	30%	30%

விடை: விற்பனை மூலம் பெற்ற வருவாய் : 50%; இதர வருமானம்: 50%; மொத்த வருவாய்: 50%; செலவுகள்: 50%; வரிக்கு முன்னர் உள்ள இலாபம்: 50%; வரி: 50% ; வரிக்கு பின்னர் உள்ள இலாபம்; 50%)

12th-Accountancy-Unit-08_TM.indd 286 12/9/2021 11:22:23 PM

3. டேனியல் நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து, ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயார் செய்யவும்.

விவரம்	2015-16 ₹	2016-17 ₹
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	40,000	50,000
இயக்கச் செலவுகள்	25,000	27,500
வருமான வரி % (வரிக்கு முன்னர் உள்ள இலாபத்தில்)	30	30

(விடை: விற்பனை மூலம் பெற்ற வருவாய் : 25%; செலவுகள்: 10%; வரிக்கு முன்னர் உள்ள இலாபம் : 50%; வரி: 50%; வரிக்கு பின்னர் உள்ள இலாபம்; 50%)

4. முத்து நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கவும்.

விவரம்	2017, மார்ச் 31 ₹	2018, மார்ச் 31 ₹
I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்		
பங்குதாரர் நிதி	4,00,000	4,40,000
நீண்ட காலப் பொறுப்புகள்	1,50,000	1,65,000
நடப்புப் பொறுப்புகள்	75,000	82,500
மொத்தம்	6,25,000	6,87,500
II. சொத்துகள்		
நீண்டகாலச் சொத்துகள்	5,00,000	6,00,000
நடப்புச் சொத்துகள்	1,25,000	87,500
மொத்தம்	6,25,000	6,87,500

(விடை: பங்குதாரர் நிதி: 10%; நீண்டகால பொறுப்புகள்: 10%; நடப்புப் பொறுப்புகள்: 10%; மொத்த பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் : 10%; நீண்டகாலச் சொத்துகள் : 20%;நடப்புச் சொத்துகள்: –30%; மொத்தச் சொத்துகள் : 10%)

5. கலா நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கவும்.

விவரம்	2017, மார்ச் 31 ₹	2018, மார்ச் 31 ₹
I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்		
1. பங்குதாரர் நிதி		
(அ) பங்குமுதல்	3,00,000	3,60,000
(ஆ) காப்பும் மிகுதியும்	50,000	50,000
2. நீண்டகாலப் பொறுப்புகள்		
நீண்ட காலக் கடன்கள்	50,000	40,000
3. நடப்புப் பொறுப்புகள்		
கணக்குகள் மூலம் செலுத்தவேண்டியவைகள்	20,000	12,000
மொத்தம்	4,20,000	4,62,000

12th-Accountancy-Unit-08_TM.indd 287 12/9/2021 11:22:23 PM

II. சொத்துகள்		
1. நீண்டகாலச் சொத்துகள்		
(அ) நிலைச் சொத்துகள்	2,50,000	2,90,000
(ஆ) நீண்டகால முதலீடுகள்	50,000	40,000
2. நடப்புச் சொத்துகள்		
சரக்கிருப்பு	80,000	1,00,000
ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்குச் சமமானவைகள்	40,000	32,000
மொத்தம்	4,20,000	4,62,000

(விடை: பங்குமுதல்: 20%; காப்புகள் மற்றும் மிகுதி : – ; நீண்டகால பொறுப்புகள்:–20%; நடப்புப் பொறுப்புகள்: –40%; மொத்த பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் : 10%; நிலைச் சொத்துகள் : 16%; நீண்டகால முதலீடுகள் : – 20%; சரக்கிருப்பு: 25%; ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள் : – 20%; மொத்த சொத்துகள்: 10%)

பொது அளவு அறிக்கை

6. ராதா நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து 2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பொது அளவு வருமான அறிக்கையைத் தயார் செய்யவும்.

விவரம்	2016-17
	₹
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	4,50,000
இதர வருமானம்	67,500
செலவுகள்	1,35,000

(விடை: 2016–17: இதர வருமானம்: 15%; மொத்த வருவாய்: 115%; செலவுகள் : 30%; வரிக்கு முன்னர் உள்ள இலாபம் : 85%)

7. மரியா மற்றும் கலா நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பொது அளவு வருமான அறிக்கையைத் தயார் செய்யவும்.

விவரம்	மரியா நிறுமம்	கலா நிறுமம்
	₹	₹
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	1,00,000	2,00,000
இதர வருமானம்	10,000	30,000
செலவுகள்	70,000	1,20,000

(விடை: மரியா நிறுமம்: இதர வருமானம்: 10%; மொத்த வருவாய் : 110%; செலவுகள் : 70%; வரிக்கு முன்னர் உள்ள இலாபம் : 40% கலா நிறுமம்: இதர வருமானம்: 15%; மொத்த வருவாய் : 115%; செலவுகள் : 60%; வரிக்கு முன்னர் உள்ள இலாபம்: 55%)

8. சாம் நிறுவனத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து பொது அளவு வருமான அறிக்கையை தயார் செய்யவும்.

விவரம்	2015-16	2016-17
	₹	₹
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	4,00,000	5,00,000
இதர வருமானம்	80,000	50,000
செலவுகள்	2,40,000	2,50,000
வருமான வரி	30%	30%

(விடை: 2015–16: இதர வருமானம்: 20%; மொத்த வருவாய்: 120%; செலவுகள்: 60%; வரிக்கு முன்னர் உள்ள இலாபம் : 60%; வரி : 18%; வரிக்கு பின்னர் உள்ள இலாபம் : 42% 2016–17 இதர வருமானம் : 10%;மொத்த வருவாய் : 110%; செலவுகள்: 50%; வரிக்கு முன்னர் உள்ள இலாபம்: 60%: வரி : 18%; வரிக்கு பின்னர் உள்ள இலாபம்: 42%)

12th-Accountancy-Unit-08_TM.indd 288 12/9/2021 11:22:24 PM

9. மீனா நிறுமத்தின் 2018, மார்ச் 31 ஆம் நாளைய பொது அளவு இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்

விவரம்	2018, மார்ச் 31
	₹
I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்	
பங்குதாரர் நிதி	2,00,000
நீண்டகாலப் பொறுப்புகள்	1,60,000
நடப்புப் பொறுப்புகள்	40,000
மொத்தம்	4,00,000
II. சொத்துகள்	
நீண்டகாலச் சொத்துகள்	3,00,000
நடப்புச் சொத்துகள்	1,00,000
மொத்தம்	4,00,000

(விடை: பங்குதாரர் நிதி : 50%; நீண்ட காலப் பொறுப்புகள் : 40%; நடப்புப் பொறுப்புகள் : 10%; நீண்டகாலச் சொத்துகள் : 75%; நடப்புச் சொத்துகள் : 25%)

10. ராணி நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து பொது அளவு நிதிநிலை அறிக்கையினைத் தயார் செய்யவும்.

விவரம்	2016, மார்ச் 31	2017, மார்ச் 31
	₹	₹
I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்		
பங்குதாரர் நிதி	5,40,000	6,00,000
நீண்டகாலப் பொறுப்புகள்	2,70,000	2,50,000
நடப்புப் பொறுப்புகள்	90,000	1,50,000
மொத்தம்	9,00,000	10,00,000
II. சொத்துகள்		
நீண்டகாலச் சொத்துகள்	7,20,000	8,00,000
நடப்புச் சொத்துகள்	1,80,000	2,00,000
மொத்தம்	9,00,000	10,00,000

விடை: 2015–16: பங்குதாரர் நிதி : 60%; நீண்டகாலப் பொறுப்புகள்: 30%; நடப்புப் பொறுப்புகள் : 10%; நீண்டகாலச் சொத்துகள் : 80%; நடப்புச் சொத்துகள் : 20% 2016–17: பங்குதாரர் நிதி: 60%; நீண்ட காலப் பொறுப்புகள் : 25%; நடப்புப் பொறுப்புகள்: 15%; நீண்டகாலச் சொத்துகள்: 80%; நடப்புச் சொத்துகள் : 20%)

11. யாஸ்மின் மற்றும் சக்தி நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து பொது அளவு நிதிநிலை அறிக்கையினைத் தயார் செய்யவும்.

விவரம்	யாஸ்மின் நிறுமம்	சக்தி நிறுமம்
	₹	₹
I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்		
1. பங்குதாரர் நிதி		
(அ) பங்கு முதல்	2,00,000	3,00,000
(ஆ) காப்பும் மிகுதியும்	50,000	60,000
2.நீண்டகாலப் பொறுப்புகள்		
நீண்டகாலக் கடன்கள்	1,50,000	1,80,000
3. நடப்புப் பொறுப்புகள்		
கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள்	1,00,000	60,000
மொத்தம்	5,00,000	6,00,000

12th-Accountancy-Unit-08_TM.indd 289 12/9/2021 11:22:24 PM

II. சொத்துகள்		
1.நீண்டகாலச் சொத்துகள்		
(அ) நிலைச் சொத்துகள்	2,00,000	3,00,000
(ஆ) நீண்டகால முதலீடுகள்	50,000	1,20,000
2. நடப்புச் சொத்துகள்		
சரக்கிருப்பு	2,00,000	90,000
ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்குச் சமமானவைகள்	50,000	90,000
மொத்தம்	5,00,000	6,00,000

(விடை: யாஸ்மின் நிறுமம்: பங்குமுதல்: 40%; காப்புகள் மற்றும் மிகுதிகள்: 10%; நீண்டகாலப் பொறுப்புகள் : 30%; நடப்புப் பொறுப்புகள்: 20%; நிலைச் சொத்துகள்: 40%; நீண்டகால முதலீடுகள் : 10%; சரக்கிருப்பு: 40%; ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்குச் சமமானவைகள்: 10% சக்தி நிறுமம்: பங்கு முதல் : 50%; காப்புகள் மற்றும் மிகுதிகள் : 10% நீண்டகாலப் பொறுப்புகள் : 30%; நடப்புப் பொறுப்புகள்: 10%; நிலைச் சொத்துகள்: 50%; நீண்ட கால முதலீடுகள் : 20%; சரக்கிருப்பு: 15%; ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள் : 15%)

போக்கு ஆய்வு

12. பின்வரும் தகவல்களிலிருந்து கலா நிறுமத்தின் போக்கு சதவீதங்களைக் கணக்கிடுக.

விவரம்	₹ (ஆயிரத்தில்)		
	2015-16	**2016-17**	**2017-18**
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	400	500	600
இதர வருமானம்	100	150	200
செலவுகள்	200	290	350

(விடை: 2016–17: விற்பனை மூலம் பெற்ற வருவாய் : 125%; இதர வருமானம்: 150%; மொத்த வருவாய் : 130%; செலவுகள்: 145%; வரிக்கு முன்னர் உள்ள இலாபம்; 120% 2017–18: விற்பனை மூலம் பெற்ற வருவாய்: 150%; இதர வருமானம்: 200%; மொத்த வருவாய்: 160%; செலவுகள்: 175%; வரிக்கு முன்னர் உள்ள இலாபம்; 150%)

13. பின்வரும் தகவல்களிலிருந்து, கவிதா நிறுமத்தின் போக்கு சாவீதங்களை கணக்கிடவும்.

விவரம்	₹ (ஆயிரத்தில்)		
	2015-16	**2016-17**	**2017-18**
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	100	125	150
இதர வருமானம்	20	25	30
செலவுகள்	100	120	80
வருமான வரி	30%	30%	30%

(விடை: 2016–17: விற்பனை மூலம் பெற்ற வருவாய் : 125%; இதர வருமானம்: 125%; மொத்த வருவாய் : 125%; செலவுகள்: 120%; வரிக்கு முன்னர் உள்ள இலாபம் : 150%; வரி: 150%; வரிக்கு பின்னர் உள்ள இலாபம்: 150% 2017–18: விற்பனை மூலம் பெற்ற வருவாய்: 150%; இதர வருமானம்: 150%; மொத்த வருவாய்: 150%; செலவுகள்: 80%; வரிக்கு முன்னர் உள்ள இலாபம்: 500%; வரி: 500%; வரிக்கு பின்னர் உள்ள இலாபம்: 500%)

14. குமார் நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து போக்கு சதவிகிதங்களைக் கணக்கிடவும்.

விவரம்	₹ (ஆயிரத்தில்)		
	2015-16	**2016-17**	**2017-18**
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	300	270	150
இதர வருமானம்	50	80	60
செலவுகள்	250	200	125
வருமான வரி %	40	40	40

12th-Accountancy-Unit-08_TM.indd 290 12/9/2021 11:22:24 PM

(விடை: 2016–17: விற்பனை மூலம் பெற்ற வருவாய் : 90%; இதர வருமானம் : 160%; மொத்த வருவாய்: 100%; செலவுகள்: 80%; வரிக்கு முன்னர் உள்ள இலாபம்: 150%; வரி: 150%; வரிக்கு பின்னர் உள்ள இலாபம்: 150% 2017–18: விற்பனை மூலம் பெற்ற வருவாய் : 50%; இதர வருமானம்: 120%; மொத்த வருவாய்: 60%; செலவுகள்: 50%; வரிக்கு முன்னர் உள்ள இலாபம்: 85%; வரி: 85%; வரிக்கு பின்னர் உள்ள இலாபம்: 85%)

15. பின்வரும் தகவல்களிலிருந்து, அனு நிறுமத்தின் போக்கு சதவிகிதங்களை கணக்கிடவும்.

விவரம்	₹ (ஆயிரத்தில்)		
	முதலாம் ஆண்டு	இரண்டாம் ஆண்டு	மூன்றாம் ஆண்டு
I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்			
பங்குதாரர் நிதி	500	550	600
நீண்டகாலப் பொறுப்புகள்	200	250	240
நடப்புப் பொறுப்புகள்	100	80	120
மொத்தம்	800	880	960
II. சொத்துகள்			
நீண்டகாலச் சொத்துகள்	600	720	780
நடப்புச் சொத்துகள்	200	160	180
மொத்தம்	800	880	960

(விடை: இரண்டாம் ஆண்டு: பங்குதாரர் நிதி: 110%; நீண்டகாலப் பொறுப்புகள்: 125%; நடப்புப் பொறுப்புகள்: 80%; மொத்த பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்: 110%; நீண்டகாலச் சொத்துகள்: 120%; நடப்புச் சொத்துகள்: 80%; மொத்தச் சொத்துகள்: 110% மூன்றாம் ஆண்டு: பங்குதாரர் நிதி: 120%; நீண்டகாலப் பொறுப்புகள்: 120%; நடப்புப் பொறுப்புகள்: 120%; மொத்த பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்: 120%; நீண்டகாலச் சொத்துகள்: 130%; நடப்புச் சொத்துகள்: 90%; மொத்தச் சொத்துகள்: 120%

16. பின்வரும் தகவல்களிலிருந்து, பாபு நிறுமத்தின், போக்கு விகிதங்களைக் கணக்கிடுக.

விவரம்	₹ (ஆயிரத்தில்)		
	முதலாம் ஆண்டு	இரண்டாம் ஆண்டு	மூன்றாம் ஆண்டு
I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்			
1. பங்குதாரர் நிதி			
(அ) பங்குமுதல்	100	127	106
(ஆ) காப்புகள் மற்றும் மிகுதி	30	30	45
2. நீண்டகாலப் பொறுப்புகள்			
நீண்டகாலக் கடன்கள்	70	77	84
3. நடப்புப் பொறுப்புகள்			
கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள்	20	30	40
மொத்தம்	220	264	275
II. சொத்துகள்			
1. நீண்டகாலச் சொத்துகள்			
(அ) நிலைச் சொத்துகள்	100	118	103
(ஆ) நீண்டகாலமுதலீடுகள்	40	50	60

12th-Accountancy-Unit-08_TM.indd 291 12/9/2021 11:22:24 PM

2. நடப்புச் சொத்துகள்			
சரக்கிருப்பு	60	66	72
ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள்	20	30	40
மொத்தம்	220	264	275

(விடை: இரண்டாமாண்டு: பங்கு முதல்: 127%; காப்புகள் மற்றும் மிகுதி: 100%; நீண்டகாலப் பொறுப்புகள்: 110%; நடப்புப் பொறுப்புகள்: 150%; மொத்த பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்: 120%; நிலைச் சொத்துகள்: 118%; நீண்ட கால முதலீடுகள் : 125%; சரக்கிருப்பு: 110%; ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள்: 150%; மொத்தச் சொத்துகள்: 120% மூன்றாமாண்டு: பங்கு முதல்: 106%; காப்புகள் மற்றும் மிகுதி: 150%; நீண்டகாலப் பொறுப்புகள்: 120%; நடப்புப் பொறுப்புகள்: 200%; மொத்த பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்: 125%; நிலைச் சொத்துகள்: 103%; நீண்ட கால முதலீடுகள் : 150%; சரக்கிருப்பு: 120%; ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள்: 200%; மொத்தச் சொத்துகள்: 125%)

நிகழ்வாய்வு

இரவி மற்றும் இரஹீம் மின்னணு சாதனங்களை வாங்கி விற்கும் ஒரு கூட்டாண்மைத் தொழிலைத் தொடங்கினர். அவர்களின் வணிகம் வெற்றிகரமாக நடந்து வந்தது. அவர்கள் தங்கள் தொழிலை விரிவுப்படுத்த விரும்பினர். ஆனால், அவ்வாறு செய்வதற்கு போதுமான பணம் அவர்களிடம் இல்லை. ஆகையால் அவர்கள் தங்கள் தொழிலை ஒரு தனிநிறுமமாக மாற்றி, அதை இரவி மற்றும் இரஹீம் வரையறு நிறுமம் என்று பதிவு செய்தனர். முதல் இரண்டு ஆண்டுகள் சட்டப்பூர்வமான சடங்குகள், பணியாளர் தேர்வு மற்றும் பல்வேறு கணக்கேடுகள் பராமரிப்பு போன்றவற்றில் கவனம் செலுத்தினர். அவர்கள் நிதிநிலை அறிக்கைகளை இந்திய நிறுமச் சட்டம் 2013 பரிந்துரை படி தயாரித்தனர். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு வணிகத்தின் செயல்பாடுகள் நன்றாக உள்ளதா என்று அறிவதில் மிகுந்த ஆர்வம் கொண்டனர். அவர்கள் தங்கள் தொழில் முடிவுகளை தனியாள் வணிகரின் தொழிலோடு ஒப்பீடு செய்தனர்.

தற்போது பின்வருவன குறித்து விவாதிக்கவும்:

இரவி மற்றும் இரஹீம் வரையறு நிறுமத்தின் நிதிநிலை அறிக்கைகளை மதிப்பீடு செய்ய ஆர்வமுள்ளவர்கள் யார்? ஏன்?

இரவி மற்றும் இரஹீம் வரையறு நிறுமம் இந்திய நிறுமச் சட்டம் 2013 – ன் படி நிதிநிலை அறிக்கைகளை ஏன் தயாரிக்க வேண்டும்?

இரவி மற்றும் இரஹீம் வரையறு நிறுமம் தன்னுடைய நிதிநிலை அறிக்கைகளை ஆய்வு செய்ய சில கருவிகளை பரிந்தரை செய்யவும்.

இரவி மற்றும் இரஹீம் வரையறு நிறுமம் மூன்று ஆண்டுகளுக்கு அதிகமான தகவல்களை ஒப்பீடு செய்து ஆய்வு செய்ய சிறந்த கருவி எது?

இரவி மற்றும் இரஹீம் வரையறு நிறுமம் தங்கள் பணியாளர்கள் திறமையான மற்றும் செயல்நோக்கம் உடையவர்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகின்றனர். இதனை நிதிநிலை அறிக்கைகள் வாயிலாக ஆய்வு செய்வது சாத்தியமா?

தன்னுடைய தொழில் முடிவுகளை தனியாள் வணிகரின் தொழில் முடிவுடன் ஒப்பிடும் இரவி மற்றும் இரஹீம் வரையறு நிறுமத்தின் தீர்மானம் குறித்து நீங்கள் சிந்தித்ததுண்டா? இது நியாயமான முடிவைத் தருமா?

தொடர் ஆய்விற்கு

நிதிநிலை அறிக்கையில் உள்ள எண்ணற்றத் தொகைகளை ஒருங்கிணைத்து அவற்றை பொதுவான தலைப்பின் கீழ் கொண்டுவந்து பகுப்பாய்வு செய்வது சாத்தியமா?

Reference

1. M C Shukla, T S Grewal and S C Gupta, Advanced Accounts, 19th ed., 2017, S.Chand Publishing, New Delhi.
2. S.N. Maheswari, Mangement Accounting, 11th ed., 2014, Sultan Chand and Sons, New Delhi.
3. Dalston L Cecil and Jenitra L Merwin, Management Accounting, 3rd ed., 2017, Learntech Press, Trichy.
4. Accounting, Intermediate Course, 2017, The Institute of Chartered Accountants of India, New Delhi.

12th-Accountancy-Unit-08_TM.indd 292 12/9/2021 11:22:24 PM

அலகு
9

விகிதப் பகுப்பாய்வு

பொருளடக்கம்

9.1 அறிமுகம்
9.2 கணக்கியல் விகிதங்களின் பொருள்
9.3 விகிதப் பகுப்பாய்வின் பொருள் மற்றும் வரைவிலக்கணம்
9.4 விகிதப் பகுப்பாய்வின் நோக்கங்கள்
9.5 விகிதங்களின் வகைப்பாடு
9.6 விகிதங்கள் கணக்கிடுதல்
9.7 விகிதப் பகுப்பாய்வின் நன்மைகள்
9.8 விகிதப் பகுப்பாய்வின் குறைபாடுகள்

நினைவுகூற வேண்டிய கருத்துகள்

விகிதப் பகுப்பாய்வு பற்றி கற்பதற்கு முன் பின்வரும் கருத்துகளை நினைவில் கொள்ளவேண்டும்:

- இலாப நட்ட அறிக்கை
- இருப்பு நிலைக்குறிப்பு
- மொத்த இலாபம்
- நிகர இலாபம்
- விற்ற பொருளின் அடக்கவிலை

கற்றல் நோக்கங்கள்

மாணவர்கள்

- கணக்கியல் விகிதங்களின் பொருள் மற்றும் வகைப்பாடுகளைப் புரிந்து கொள்ளுதல்
- பல்வேறு விகிதங்களைக் கணக்கிடுதல்

தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய சொற்கள்

- விகிதம்
- விகிதப் பகுப்பாய்வு
- நீர்மைத் தன்மை விகிதங்கள்
- நீண்டகால கடன் தீர்க்கும் விகிதங்கள்
- இலாபத்தன்மை விகிதங்கள்
- சுழற்சி விகிதங்கள்
- பங்குதாரர் நிதி

12th-Accountancy-Unit-09.indd 293 12/9/2021 11:25:10 PM

9.1 அறிமுகம்



மாணவர் செயல்பாடு 9.1

பின்வரும் அறிக்கையைப் படிக்கவும்.

தனியாள் வணிகர் ஒருவர் தன்னுடைய தொழிலிலிருந்து ஆண்டுக்கு ₹ 1,00,000 இலாபம் ஈட்டுகிறார்.

- இந்த இலாபம் அதிகமானதா? காரணங்கள் தரவும்.
- இது அதிக இலாபமா அல்லது இல்லையா எனக் கூறுவதற்கு மேற்குறிப்பிட்ட தகவல்கள் போதுமானது என்று நீங்கள் நினைக்கிறீர்களா?
- வணிகரின் வியாபாரச் செயல்பாடுகள் சிறப்பாக உள்ளது என்று தீர்மானிக்க மேலும் என்ன தகவல்கள் உங்களுக்கு தேவைப்படுகிறது?

மேற்குறிப்பிட்ட விவரங்கள் குறித்து சிந்தனைச் செய்யவும் மற்றும் விவாதிக்கவும்.

வணிக நிறுவனங்களின் நிதி நிலை மற்றும் இயக்கச் செயல்பாட்டை நிதிநிலைப் பகுப்பாய்வின் மூலம் அறிய முடியும். நிதிநிலை அறிக்கைகள் பகுப்பாய்வு என்பது நிதிநிலை அறிக்கைகளில் உள்ள விவரங்களை ஆய்வு செய்தலும் மற்றும் தர்க்கரீதியான முடிவுகளை எடுப்பதையும் உள்ளடக்கியதாகும். நிதிநிலைப் பகுப்பாய்வு செய்வதற்கு பொது அளவு அறிக்கை, ஒப்பீட்டு அறிக்கை, விகிதப் பகுப்பாய்வு, ரொக்க ஓட்ட அறிக்கை போன்ற பல்வேறு கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. விகிதப் பகுப்பாய்வு நிதிநிலைப் பகுப்பாய்வு செய்யும் கருவிகளில் முக்கியமான ஒன்றாகும். நிதிநிலை அறிக்கைகளை பகுப்பாய்வு செய்வதற்கான பல்வேறு விகிதங்கள் கணக்கிடுதலை விகிதப் பகுப்பாய்வு உள்ளடக்கியது. இது தொழில் நிறுவனத்தின் செயல்பாட்டினை அளவிடுவதற்கான ஒரு முக்கியமான மற்றும் சக்திவாய்ந்த கருவியாகும்.

9.2. கணக்கியல் விகிதங்களின் பொருள்

விகிதம் என்பது இரண்டு தொடர்புடைய அல்லது ஒன்றைஒன்று சார்ந்த இனங்களுக்கு இடையே உள்ள தொடர்பைக் கணிதவியல் அடிப்படையில் வெளிப்படுத்துவதாகும். இது, இரு இனங்களுக்கு இடையே உள்ள தொடர்பினை எண்ணியல் அல்லது எண்ணிக்கையில் குறிக்கும். இது ஒரு இனத்தை அது தொடர்பான மற்றொரு இனத்தால் வகுப்பதன் மூலம் கணக்கிடப்படுகிறது. விகிதங்கள் கணக்கியல் தகவல்களின் அடிப்படையில் கணக்கிடப்படும் போது, அவை கணக்கியல் விகிதங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

கணக்கியல் விகிதங்கள் பின்வரும் ஏதேனும் ஒரு வடிவத்தில் வெளிப்படுத்தப்படலாம்.

(i) **விகிதாச்சாரம்:** இதில், விகிதம் ஒரு ஈவாக குறிப்பிடப்படுகிறது. எடுத்துக்காட்டு, 2 அல்லது 2:1.

(ii) **சதவிகிதம்:** இதில், விகிதம் சதவிகிதத்தில் குறிப்பிடப்படுகிறது. எடுத்துக்காட்டு, 25%.

(iii) **மடங்கு:** இதில், விகிதம், ஒரு குறிப்பிட்ட தொகை எத்தனை மடங்கு உள்ளது எனக் குறிப்பிடப்படுகிறது. எடுத்துக்காட்டு 4 மடங்கு.

9.3. விகிதப் பகுப்பாய்வின் பொருள் மற்றும் வரைவிலக்கணம்

விகிதப் பகுப்பாய்வு என்பது பல்வேறு விகிதங்களைக் கணக்கிடுவதன் வாயிலாக நிதிநிலை அறிக்கைகளை பகுப்பாய்வு செய்தலை உள்ளடக்கிய ஒரு கருவியாகும். இதில், வெவ்வேறு விகிதங்கள் கணக்கிடுதல் மற்றும் பகுப்பாய்வு செய்வதன் அடிப்படையில் முடிவுகள் தீர்மானிக்கப்படுகின்றன.

மையர்ஸ் அவர்களின் கூற்றுப்படி விகிதப் பகுப்பாய்வு என்பது "வணிகத்தில் உள்ள பல்வேறு நிதியியல் காரணிகளுக்கிடையேயான தொடர்பினைப் பகுப்பாய்வு செய்வதாகும்"

12th-Accountancy-Unit-09.indd 294 12/9/2021 11:25:10 PM

9.4. விகிதப் பகுப்பாய்வின் நோக்கங்கள்

விகிதப் பகுப்பாய்வின் நோக்கங்கள் பின்வருமாறு:

(i) கணக்கியல் தொகைகளை சுருக்கமாகக் கூற

(ii) நிதிநிலை அறிக்கைகள் பகுப்பாய்வு செய்வதற்கு வழிவகை செய்ய

(iii) தொழில் நிறுவனத்தின் இயக்க செயல்திறனை பகுப்பாய்வு செய்ய

(iv) திட்டமிடுதல் மற்றும் முன்கணித்தலுக்கு உதவ

(v) நிறுவனத்திற்குள்ளேயும் மற்றும் நிறுவனங்களுக்கிடையேயும் செயல்பாடுகளை ஒப்பிட்டுப் பார்க்க

9.5. விகிதங்களின் வகைப்பாடு

விகிதங்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அவை பின்வருமாறு:

(i) பாரம்பரிய அடிப்படை

(ii) செயல்பாட்டின் அடிப்படை

9.5.1. பாரம்பரிய அடிப்படை

பாரம்பரிய அடிப்படையில், எந்த நிதிநிலை அறிக்கையிலிருந்து விகிதங்கள் கணக்கிடப்படுகின்றன என்பதன் அடிப்படையில், விகிதங்கள் (i) இருப்புநிலைக் குறிப்பு விகிதங்கள் (ii) வருமான அறிக்கை விகிதங்கள் மற்றும் (iii) அறிக்கைகளுக்கிடையேயான விகிதங்கள் என வகைப்படுத்தப்படுகின்றன.



படம் 9.1 பாரம்பரிய அடிப்படையிலான விகிதங்கள்

படம் 9.1 பாரம்பரிய அடிப்படையிலான விகிதங்களுக்கு சில எடுத்துக்காட்டுகளைத் தருகிறது.

(i) இருப்புநிலைக் குறிப்பு விகிதம்

ஒரு விகிதத்தின் இரு இனங்களும் இருப்புநிலைக் குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டால், அது இருப்புநிலைக் குறிப்பு விகிதம் என வகைப்படுத்தப்படுகிறது.

(ii) வருமான அறிக்கை விகிதம்

ஒரு விகிதத்தின் இரு இனங்களும் வருமான அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்டால் அது வருமான அறிக்கை விகிதம் என வகைப்படுத்தப்படுகிறது.

(iii) அறிக்கைகளுக்கிடையேயான விகிதம்

ஒரு இனம் வருமான அறிக்கையிலிருந்தும் மற்றொரு இனம் இருப்புநிலைக் குறிப்பிலிருந்தும் எடுத்து விகிதம் கணக்கிடப்பட்டால், அது அறிக்கைகளுக்கிடையேயான விகிதம் என அழைக்கப்படுகிறது.

9.5.2. செயல்பாட்டின் அடிப்படை

செயல்பாட்டின் அடிப்படையில், எந்த நோக்கத்திற்காக விகிதங்கள் கணக்கிடப்பட வேண்டுமோ அதன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது மற்றும் இது அதிகமாக வழக்கத்தில் பயன்படுத்திவரும் முறையாகும். செயல்பாட்டின் அடிப்படையில் விகிதங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன.

(i) நீர்மைத்தன்மை விகிதங்கள்

(ii) நீண்டகால கடன் தீர்க்கும் விகிதங்கள்

(iii) சுழற்சி விகிதங்கள்

(iv) இலாபத்தன்மை விகிதங்கள்

12th-Accountancy-Unit-09.indd 295 12/9/2021 11:25:10 PM

படம் 9.2 செயல்பாட்டு அடிப்படையிலான விகிதங்களுக்கு சில எடுத்துக்காட்டுகளைத் தருகிறது.

9.6 விகிதங்களைக் கணக்கிடுதல்

9.6.1 நீர்மைத்தன்மை விகிதங்கள்

நீர்மைத்தன்மை என்பது எளிதாக ரொக்கமாக மாற்றக்கூடிய திறனைத் குறிக்கிறது. நீர்மைத்தன்மை விகிதங்கள், ஒருவணிகநிறுவனம்தன்னுடையகுறுகிய கால நிதிப் பொறுப்புகளை எதிர்கொள்ளும் திறனை மதிப்பிட உதவுகிறது. குறுகிய காலச் சொத்துகள் (நடப்புச் சொத்துகள்) நீண்டகாலச் சொத்துகளோடு (நிலைச் சொத்துகள்) ஒப்பீடு செய்யும் போது அதிக நீர்மைத் தன்மை கொண்டதாக இருக்கிறது. நீர்மைத்தன்மை விகிதங்கள் குறுகிய கால செயல்திறன் விகிதங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.



படம் 9.2 செயல்பாட்டு அடிப்படையிலான விகிதங்கள்

நீர்மைத்தன்மை விகிதங்கள் (i) நடப்பு விகிதம் (ii) விரைவு விகிதம் ஆகிய இரு விகிதங்களை உள்ளடக்கியது.

(i) நடப்பு விகிதம்

நடப்பு விகிதம், ஒரு வணிக நிறுவனத்தின் நடப்புச் சொத்துகளுக்கும் மற்றும் நடப்புப் பொறுப்புகளுக்கும் உள்ள விகிதாச்சாரத்தைத் தருகிறது. இது நடப்புச் சொத்துகளை நடப்புப் பொறுப்புகளால் வகுப்பதன் மூலம் கணக்கிடப்படுகிறது. நடப்பு விகிதம், ஒரு வணிக நிறுவனம் தனது நடப்புப் பொறுப்புகளை எப்போது செலுத்த வேண்டுமோ அப்போது, அதை எதிர்கொள்ளும் திறனைக் குறிக்கிறது. அது பின்வருமாறு கணக்கிடப்படுகிறது:

$$\text{நடப்பு விகிதம்} = \frac{\text{நடப்புச் சொத்துகள்}}{\text{நடப்புப் பொறுப்புகள்}}$$

நடப்புச் சொத்துகள்	நடப்புப் பொறுப்புகள்
நடப்புச் சொத்துகள் என்பது ரொக்க வடிவில் உள்ள அல்லது ரொக்கத்திற்குச் சமமான அல்லது எளிதில் ரொக்கமாக மாற்றக்கூடிய அல்லது குறுகிய காலத்தில் ரொக்கமாக அல்லது சமமாக மாற்றக் கூடிய சொத்துகள் ஆகும். அதாவது, ஓராண்டிற்குள் அல்லது ஒரு இயக்கச் சுழற்சியின் காலத்திற்குள் ரொக்கமாக மாற்றப்பட வேண்டும்.	நடப்புப் பொறுப்புகள் ஒரு குறுகிய காலத்திற்குள் திரும்பச் செலுத்தக்கூடிய பொறுப்புகள் ஆகும். அதாவது, ஓராண்டிற்குள் அல்லது ஒரு இயக்கச் சுழற்சியின் காலத்திற்குள் செலுத்தப்பட வேண்டும்.
நடப்புச் சொத்துகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியது (i) குறுகியகால முதலீடுகள் (ii) சரக்கிருப்பு (iii) கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகள் (பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மற்றும் பற்பல கடனாளிகள் கழிக்க கடனாளிகள் மீதான ஐயக்கடன் ஒதுக்கு) (iv) ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள் கைரொக்கம், வங்கி ரொக்கம் போன்றவை) (v) குறுகிய காலக் கடன்கள் மற்றும் முன்பணம் கொடுத்தது (vi) பிற நடப்புச் சொத்துகள் (முன்கூட்டிச் செலுத்திய செலவுகள், வருமானம் பெறவேண்டியது போன்றவை)	**நடப்புப் பொறுப்புகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியது** (i) குறுகியகாலக் கடன்கள் (ii) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் (செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு மற்றும் பற்பல கடனீந்தோர்) (iii) பிற நடப்புப் பொறுப்புகள் (செலவுகள் செலுத்த வேண்டியது, முன்கூட்டிப் பெற்ற வருமானம் போன்றவை) (iv) குறுகியகால ஒதுக்குகள்

12th-Accountancy-Unit-09.indd 296 12/9/2021 11:25:11 PM

நடப்பு விகிதம் அதிகமாக இருக்கும் போது, நிறுமம் நடப்புப் பொறுப்புகளை செலுத்துவதற்கான நல்ல நிலையில் உள்ளதால், நீர்மைத்தன்மை நிலைமை நன்றாக இருக்கிறது. இருப்பினும், மிக அதிகமான நடப்பு விகிதம் நிர்வாகத்தின் திறமையற்ற முதலீட்டுக் கொள்கைகளைக் காட்டலாம்.



இயக்கச் சுழற்சி என்பது செயலாக்கத்திற்கான ஒரு சொத்து வாங்கியதிலிருந்து அந்த சொத்து ரொக்கம் அல்லது ரொக்கத்திற்குச் சமமானவைகளாக மாற்றப்படும் வரை உள்ள காலத்தைக் குறிக்கிறது.

எடுத்துக்காட்டு 1

பின்வரும் தகவல்களிலிருந்து நடப்பு விகிதத்தைக் கண்டறியவும்.

விவரம்	₹	விவரம்	₹
குறுகிய கால முதலீடுகள்	80,000	வணிகக் கடனீந்தோர்	1,60,000
சரக்கிருப்பு	1,60,000	செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	1,00,000
கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகள்	4,00,000	கொடுபட வேண்டிய செலவுகள்	1,40,000
ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்குச் சமமானவைகள்	1,20,000	முன்கூட்டிச் செலுத்திய செலவுகள்	40,000

தீர்வு

$$\text{நடப்பு விகிதம்} = \frac{\text{நடப்புச் சொத்துகள்}}{\text{நடப்புப் பொறுப்புகள்}} = \frac{8,00,000}{4,00,000} = 2:1$$

நடப்புச் சொத்துகள் = குறுகிய கால முதலீடுகள் + சரக்கிருப்பு + கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகள் + ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்குச் சமமானவைகள் + முன்கூட்டிச் செலுத்திய செலவுகள்
= 80,000 + 1,60,000 + 4,00,000 + 1,20,000 + 40,000 = ₹ 8,00,000

நடப்புப் பொறுப்புகள் = வணிக கடனீந்தோர் + செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு + கொடுபட வேண்டிய செலவுகள்
= 1,60,000 + 1,00,000 + 1,40,000 = ₹ 4,00,000

(ii) விரைவு விகிதம்

விரைவு விகிதம் நீர்மைச் சொத்துகளுக்கும், நடப்புப் பொறுப்புகளுக்குமுள்ள விகிதாச்சாரமாகும். இது ஒரு வணிக நிறுவனம் தன்னுடைய நடப்புப் பொறுப்புகளை எப்போது செலுத்த வேண்டுமோ அப்போது அதை நீர்மைச் சொத்துகளிலிருந்து எதிர் கொள்ளும் நிலையில் உள்ளதா என்பதைக் குறிக்கிறது. நீர்மைச் சொத்துகள் என்பது சரக்கிருப்பு மற்றும் முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் நீங்கலாக உள்ள நடப்புச் சொத்துகள் ஆகும். இது நீர்மை விகிதம் அல்லது அமிலச் சோதனை விகிதம் என்றும் அழைக்கப்படுகிறது. இது கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படுகிறது:

$$\text{விரைவு விகிதம்} = \frac{\text{நீர்மைச் சொத்துகள்}}{\text{நடப்புப் பொறுப்புகள்}}$$

நீர்மைச் சொத்துகள் = நடப்புச் சொத்துகள் – சரக்கிருப்பு – முன்கூட்டிச் செலுத்திய செலவுகள்
விரைவு விகிதம் அதிகமாக இருக்கும் போது, நிறுவனத்தின் குறுகிய கால நிதி நிலை சிறப்பாக இருக்கும்.



சரக்கிருப்பு, நீர்மைச் சொத்து எனக் கருதப்படுவதில்லை. ஏனெனில், சரக்கிருப்பை விற்பனை செய்வதற்கு மற்றும் ரொக்கத்திற்கு மாற்றுவதற்கு சிறிது காலம் தேவைப்படுகிறது. அது போன்று, முன்கூட்டிச் செலுத்திய செலவுகளும் நீர்மைச் சொத்து எனக் கருதப்படுவதில்லை. ஏனெனில், அவை செலுத்தப்பட வேண்டிய காலத்திற்கு முன்னரே செலுத்தப்பட்ட செலவுகள் ஆகும். இதனை ரொக்கத்திற்கு மாற்ற முடியாது மற்றும் அதன் நன்மை மட்டுமே பெறமுடியும். எனவே அவை நீர்மைச் சொத்துகளில் சேர்க்கப்படுவதில்லை .

12th-Accountancy-Unit-09.indd 297 12/9/2021 11:25:11 PM



வழக்கமாக, 2:1 ஏற்றதான நடப்பு விகிதமாக கருதப்படுகிறது; 1:1 ஏற்றதான விரைவு விகிதமாகக் கருதப்படுகிறது. இருப்பினும், இது வணிகத்திற்கு வணிகம் மற்றும் தொழிலுக்கு தொழில் மாற்றம் பெறக்கூடியது.

எடுத்துக்காட்டு 2

கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆனந்த் கட்டுமான நிறுமத்தின் தகவல்களிலிருந்து, விரைவு விகிதத்தைக் கணக்கிடவும்.

விவரம்	₹
மொத்த நடப்புப் பொறுப்புகள்	1,00,000
மொத்த நடப்புச் சொத்துகள்	2,50,000
சரக்கிருப்பு	50,000
முன்கூட்டிச் செலுத்திய செலவுகள்	15,000

தீர்வு

$$\text{விரைவு விகிதம்} = \frac{\text{நீர்மைச் சொத்துகள்}}{\text{நடப்புப் பொறுப்புகள்}} = \frac{1,85,000}{1,00,000} = 1.85:1$$

நீர்மைச் சொத்துகள் = நடப்புச் சொத்துகள் – சரக்கிருப்பு – முன்கூட்டிச் செலுத்திய செலவுகள்

= 2,50,000 – 50,000 – 15,000

= ₹ 1,85,000



மாணவர் செயல்பாடு 9.2

ஒரே மாதிரியான ஐந்து தனியாள் வணிக நிறுவனங்களிடமிருந்து, கடந்த ஆறு மாதங்களுக்குரிய நடப்புச் சொத்துகள் மற்றும் நடப்புப் பொறுப்புகள் குறித்த தகவல்களைச் சேகரிக்கவும்.
நீர்மை விகிதங்களைக் கணக்கிட்டு அவற்றின் நீர்மைத் தன்மையினை ஒப்பீடு செய்யவும்.

எடுத்துக்காட்டு 3

மகேஷ் நிறுமத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

விவரம்	₹
I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்	
1. பங்குதாரர் நிதி	
நேர்மைப் பங்குமுதல்	2,00,000
2. நீண்டகால பொறுப்புகள்	
நீண்டகாலக் கடன்கள்	50,000
3. நடப்புப் பொறுப்புகள்	
(அ) குறுகிய காலக் கடன்கள்	17,000
(ஆ) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள்	25,000
(இ) இதர நடப்புப் பொறுப்புகள்	
கொடுபட வேண்டிய செலவுகள்	3,000
(ஈ) குறுகியகால ஒதுக்குகள்	5,000
மொத்தம்	**3,00,000**

12th-Accountancy-Unit-09.indd 298 12/9/2021 11:25:11 PM

சொத்துகள்	
1. நீண்டகால சொத்துகள்	
(அ) நிலைச் சொத்துகள்	
புலனாகும் சொத்துகள்	1,50,000
2. நடப்புச் சொத்துகள்	
(அ) சரக்கிருப்பு	45,000
(ஆ) கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகள்	70,000
(இ) ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்குச் சமமானவைகள்	30,000
(ஈ) இதர நடப்புச் சொத்துகள்	
முன்கூட்டிச் செலுத்திய செலவுகள்	5,000
மொத்தம்	**3,00,000**

(i) நடப்பு விகிதம் (ii) நீர்மை விகிதம் கணக்கிடவும்.

தீர்வு

$$\text{(i) நடப்பு விகிதம்} = \frac{\text{நடப்புச் சொத்துகள்}}{\text{நடப்புப் பொறுப்புகள்}} = \frac{1,50,000}{50,000} = 3:1$$

நடப்புச் சொத்துகள் = சரக்கிருப்பு + கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகள் + ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்குச் சமமானவைகள் + முன்கூட்டிச் செலுத்தியச் செலவுகள்

= 45,000 + 70,000 + 30,000 + 5,000 = ₹ 1,50,000

நடப்புப் பொறுப்புகள் = குறுகியகாலக் கடன்கள் + கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் + கொடுபட வேண்டிய செலவுகள் + குறுகிய கால ஒதுக்குகள்

= 17,000 + 25,000 + 3,000 + 5,000 = ₹ 50,000

$$\text{(ii) விரைவு விகிதம்} = \frac{\text{நீர்மைச் சொத்துகள்}}{\text{நடப்புப் பொறுப்புகள்}} = \frac{1,00,000}{50,000} = 2:1$$

நீர்மைச் சொத்துகள் = மொத்த நடப்புச் சொத்துகள் – சரக்கிருப்பு – முன்கூட்டிச் செலுத்திய செலவுகள்

= 1,50,000 – 45,000 – 5,000 = ₹ 1,00,000

9.6.2. நீண்டகால கடன் தீர்க்கும் திறன் விகிதங்கள்

நீண்டகால கடன் தீர்க்கும் திறன் என்பது, நீண்டகாலத்தில் தன் பொறுப்புகளை எதிர்கொள்ளும் நிறுவனத்தின் திறன் ஆகும். நீண்டகால கடன் தீர்க்கும் திறன் விகிதங்கள், கடன்களை நீண்ட காலத்தில் திருப்பிச் செலுத்துவதற்கான வணிகத்தின் திறனைத் தீர்மானிக்க உதவுகிறது. வணிகத்தின் நீண்டகால கடன் தீர்க்கும் திறனை மதிப்பீடு செய்ய வழக்கமாக பின்வரும் விகிதங்கள் கணக்கிடப்படுகின்றன:

(i) புற அக பொறுப்புகள் விகிதம்

(ii) உரிமையாளர் விகிதம்

(iii) முதல் உந்துதிறன் விகிதம்

12th-Accountancy-Unit-09.indd 299 12/9/2021 11:25:11 PM

(i) புற அக பொறுப்புகள் விகிதம்

புற அக பொறுப்புகள் விகிதம் ஒரு வணிக நிறுவனத்தின் நீண்டகால கடன் தீர்க்கும் திறனை மதிப்பிடுவதற்கு கணக்கிடப்படுகிறது. புற அக பொறுப்புகள் விகிதம் நீண்டகால கடன் மற்றும் பங்குதாரர் நிதிக்கும் உள்ள தொடர்பினை வெளிப்படுத்துகிறது. இது கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படுகிறது:

$$\text{புற அக பொறுப்புகள் விகிதம்} = \frac{\text{நீண்டகால கடன்}}{\text{பங்குதாரர் நிதி}}$$

நீண்டகால கடன்	பங்குதாரர் நிதி
நீண்டகால கடன் என்பது கடனீட்டுப் பத்திரங்கள், பத்திரங்கள், மற்றும் பிற நீண்டகால கடன்களை உள்ளடக்கியதாகும்.	பங்குதாரர் நிதி = நேர்மைப் பங்குமுதல் + முன்னுரிமைப் பங்குமுதல் + காப்புகள் மற்றும் மிகுதி

உங்களுக்குத் தெரியுமா?

இலாப நட்ட அறிக்கையின் பற்றிருப்பு, காப்புகள் மற்றும் மிகுதி என்ற தலைப்பின் கீழ் எதிர்மறை தொகையாக காட்டப்படும்.
பங்குதாரர் நிதியை கீழ்க்கண்டவாறும் கணக்கிடலாம்:
பங்குதாரர் நிதி = மொத்த சொத்துகள் – நீண்டகால பொறுப்புகள் – நடப்புப் பொறுப்புகள்

பொதுவாக, புற அக பொறுப்புகள் விகிதம் குறைவாக இருக்கும்போது நீண்டகால கடன் வழங்கியவர்களுக்கு இடர்பாடு குறைவாக இருக்கிறது. அதிகமான புற அக பொறுப்புகள் விகிதம் அதிக இடர்பாட்டைக் குறிக்கிறது. ஏனெனில், கடன் வழங்கியவர்களின் கடன்களை எதிர்கொள்ளுவது வணிக நிறுவனத்திற்கு கடினமாக இருக்கலாம்.

உங்களுக்குத் தெரியுமா?

வழக்கமாக, புற அக பொறுப்பு விகிதம் 1:1 ஆக இருந்தால் திருப்திகரமானதாக கருதப்படுகிறது. இருப்பினும், இது வணிகத்திற்கு வணிகம் மற்றும் தொழிலுக்கு தொழில் மாற்றம் பெறக்கூடியது.

எடுத்துக்காட்டு 4

பின்வரும் தகவல்களிலிருந்து புற அக பொறுப்புகள் விகிதம் கணக்கிடவும்:

31.03.2018 அன்றைய இருப்புநிலைக் குறிப்பு (வருவிய)

விவரம்	₹
I. **பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்**	
1. **பங்குதாரர் நிதி**	
(அ) பங்கு முதல்	
நேர்மைப் பங்குமுதல்	1,00,000
(ஆ) காப்புகள் மற்றும் மிகுதி	60,000
2. நீண்டகாலப் பொறுப்புகள்	
நீண்ட காலக் கடன்கள் (கடனீட்டுப் பத்திரங்கள்)	80,000
3. **நடப்புப் பொறுப்புகள்**	
(அ) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள்	50,000
(ஆ) இதர நடப்புப் பொறுப்புகள்	
கொடுபடவேண்டிய செலவுகள்	30,000
மொத்தம்	**3,20,000**

12th-Accountancy-Unit-09.indd 300 12/9/2021 11:25:11 PM

தீர்வு

$$\text{புற அக பொறுப்புகள் விகிதம்} = \frac{\text{நீண்டகாலக் கடன்}}{\text{பங்குதாரர் நிதி}} = \frac{80,000}{1,60,000} = 0.5:1$$

நீண்டகாலக் கடன் = கடனீட்டுப் பத்திரங்கள் = ₹ 80,000

பங்குதாரர் நிதி = நேர்மைப் பங்குமுதல் + காப்புகள் மற்றும் மிகுதி

= 1,00,000 + 60,000 = ₹ 1,60,000

(ii) உரிமையாளர் விகிதம்

உரிமையாளர் விகிதம் பங்குதாரர் நிதிக்கும் மொத்தச் சொத்துகளுக்கும் உள்ள விகிதாச்சாரத்தை தருகிறது. உரிமையாளர் விகிதம், எந்த அளவிற்கு மொத்தச் சொத்துகளுக்கு பங்குதாரர் நிதியிலிருந்து நிதி அளிக்கப்பட்டுள்ளது என்பதைக் காட்டுகிறது. இது பின்வருமாறு கணக்கிடப்படுகிறது:

$$\text{உரிமையாளர் விகிதம்} = \frac{\text{பங்குதாரர் நிதி}}{\text{மொத்த சொத்துகள்}}$$

அதிக உரிமையாளர் விகிதம், கடன் வழங்கியவர்கள் மற்றும் கடனீந்தோருக்கு அதிக திருப்தியைத் தருகிறது. ஏனெனில், நிறுவனம் நிதி திரட்ட வெளிப்புற ஆதாரங்களை குறைவாகவே சார்ந்துள்ளது.

எடுத்துக்காட்டு 5

பயோனியர் நிறுமத்தின் பின்வரும் இருப்புநிலைக் குறிப்பிலிருந்து உரிமையாளர் விகிதத்தைக் கணக்கிடவும்.

பயோனியர் நிறுமத்தின் 31.3.2019 அன்றைய இருப்புநிலைக் குறிப்பு

விவரம்	₹
I. **பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்**	
1. பங்குதாரர் நிதி	
(அ) பங்குமுதல்	
(i) நேர்மைப் பங்குமுதல்	1,00,000
(ii) முன்னுரிமைப் பங்குமுதல்	75,000
(ஆ) காப்புகள் மற்றும் மிகுதி	25,000
2. **நீண்டகால பொறுப்புகள்**	
நீண்டகாலக் கடன்கள்	-
3. நடப்புப் பொறுப்புகள்	
கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள்	2,00,000
மொத்தம்	**4,00,000**
II. **சொத்துகள்**	
1. **நீண்டகாலச் சொத்துகள்**	
(அ) நிலைச் சொத்துகள்	2,75,000
(ஆ) நீண்டகால முதலீடுகள்	50,000
2. **நடப்புச் சொத்துகள்**	
ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்குச் சமமானவைகள்	75,000
மொத்தம்	**4,00,000**

தீர்வு

$$\text{உரிமையாளர் விகிதம்} = \frac{\text{பங்குதாரர் நிதி}}{\text{மொத்த சொத்துகள்}} = \frac{2,00,000}{4,00,000} = 0.5:1$$

12th-Accountancy-Unit-09.indd 301 12/9/2021 11:25:11 PM

பங்குதாரர் நிதி = நேர்மைப் பங்குமுதல் + முன்னுரிமை பங்குமுதல் + காப்புகள் மற்றும் மிகுதி
= 1,00,000 + 75,000 + 25,000
= ₹ 2,00,000

(iii) முதல் உந்துதிறன் விகிதம்

முதல் உந்துதிறன் விகிதம் என்பது, நிலையான வருமானம் ஈட்டக்கூடிய நிதிகளுக்கும், நேர்மைப் பங்குதாரர்கள் நிதிக்கும் உள்ள விகிதாச்சாரம் ஆகும். நிலையான வருமான ஈட்டுகின்ற நிதிகள், நிலையான வட்டி மற்றும் நிலையான பங்காதாயம் ஈட்டுகின்ற நிதிகளை உள்ளடக்கியது. இது பின்வருமாறு கணக்கிடப்படுகிறது:

$$\text{முதல் உந்துதிறன் விகிதம்} = \frac{\text{நிலையான வட்டி மற்றும் நிலையான பங்காதாயம் ஈட்டுகின்ற நிதிகள்}}{\text{நேர்மைப் பங்குதாரர் நிதி}}$$

நிலையான வட்டி அல்லது நிலையான பங்காதாயம் ஈட்டுகின்ற நிதிகள்	நேர்மைப் பங்குதாரர் நிதி
முன்னுரிமைப் பங்குமுதல் கடனீட்டுப் பத்திரங்கள் பத்திரங்கள் நிலையான வட்டி செலுத்தும் நீண்டகாலக் கடன்கள்	**நேர்மைப் பங்குதாரர் நிதி** = நேர்மைப் பங்குமுதல் + காப்புகள் மற்றும் மிகுதி

முதல் உந்துதிறன் விகிதம் என்பது நீண்ட காலக் கடன் தீர்க்கும், செயல்திறன் மற்றும் மூலதனக் கட்டமைப்பின் ஒரு அளவீடாகும். முதல் உந்துதிறன் விகிதம் ஒன்றுக்கு அதிகமாக இருக்கும் போது, நிறுவனம் உயர் உந்துதல் திறனைக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

எடுத்துக்காட்டு 6

கீழ்வரும் தகவல்களிலிருந்து முதல் உந்து திறன் விகிதத்தைக் கணக்கிடவும்.

31.03.2018 அன்றைய இருப்புநிலைக் குறிப்பு (வருவிய)

விவரம்	₹
I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்	
1. **பங்குதாரர் நிதி**	
(அ) பங்குமுதல்	
நேர்மைப் பங்குமுதல்	2,00,000
6% முன்னுரிமைப் பங்குமுதல்	1,00,000
(ஆ) காப்புகள் மற்றும் மிகுதி	
பொதுக் காப்பு	1,25,000
மிகுதி	75,000
2. **நீண்டகாலப் பொறுப்புகள்**	
நீண்டகாலக் கடன்கள் (8% கடனீட்டுப் பத்திரங்கள்)	2,00,000
3. **நடப்புப் பொறுப்புகள்**	
கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள்	1,50,000
வரி ஒதுக்கு	50,000
மொத்தம்	**9,00,000**

$$\text{முதல் உந்துதிறன் விகிதம்} = \frac{\text{நிலையான வட்டி மற்றும் நிலையான பங்காதாயம் ஈட்டுகின்ற நிதிகள்}}{\text{நேர்மைப் பங்குதாரர் நிதி}}$$

$$= \frac{3,00,000}{4,00,000} = 0.75:1$$

12th-Accountancy-Unit-09.indd 302 12/9/2021 11:25:11 PM

நிலையான வட்டி மற்றும் நிலையான பங்காதாயம் ஈட்டுகின்ற நிதிகள் = 6% முன்னுரிமைப் பங்குமுதல் + 8% கடனீட்டுப் பத்திரங்கள்

= 1,00,000 + 2,00,000 = ₹ 3,00,000

நேர்மைப் பங்குதாரர் நிதி = நேர்மைப் பங்குமுதல் + பொதுக் காப்பு + மிகுதி

= 2,00,000 + 1,25,000 + 75,000 = ₹ 4,00,000

எடுத்துக்காட்டு 7

அருணன் நிறுமத்தின் 31.03.2019 ஆம் நாளைய பின்வரும் இருப்புநிலைக் குறிப்பிலிருந்து (i) புற அக பொறுப்புகள் விகிதம் (ii) உரிமையாளர் விகிதம் மற்றும் (iii) முதல் உந்துதிறன் விகிதம் கணக்கிடவும்.

அருணன் நிறுவனத்தின் 31.03.2019 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

விவரம்	₹
I. **பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்**	
1. **பங்குதாரர் நிதி**	
(அ) பங்கு முதல்	
நேர்மைப் பங்குமுதல்	1,50,000
8% முன்னுரிமைப் பங்குமுதல்	2,00,000
(ஆ) காப்புகள் மற்றும் மிகுதி	1,50,000
2. **நீண்டகாலப் பொறுப்புகள்**	
நீண்டகாலக் கடன்கள் (9% கடனீட்டுப் பத்திரங்கள்)	4,00,000
3. **நடப்புப் பொறுப்புகள்**	
(அ) வங்கியிலிருந்து பெற்ற குறுகிய காலக் கடன்கள்	25,000
(ஆ) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள்	75,000
மொத்தம்	**10,00,000**
II. **சொத்துகள்**	
1. **நீண்டகாலச் சொத்துகள்**	
நிலைச் சொத்துகள்	7,50,000
2. **நடப்புச் சொத்துகள்**	
(அ) சரக்கிருப்பு	1,20,000
(ஆ) கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகள்	1,00,000
(இ) ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள்	27,500
(ஈ) இதர நடப்புச் சொத்துகள்	
செலவுகள் முன்கூட்டிச் செலுத்தியது	2,500
மொத்தம்	**10,00,000**

தீர்வு

(i) புற அக பொறுப்புகள் விகிதம் $= \frac{\text{நீண்டகாலக் கடன்}}{\text{பங்குதாரர் நிதி}} = \frac{4,00,000}{5,00,000} = 0.8:1$

நீண்டகாலக் கடன் = 9% கடனீட்டுப் பத்திரங்கள் = ₹ 4,00,000

பங்குதாரர் நிதி = நேர்மைப் பங்குமுதல் + முன்னுரிமைப் பங்குமுதல் + காப்புகள் மற்றும் மிகுதி

= 1,50,000 + 2,00,000 + 1,50,000 = ₹ 5,00,000

(ii) உரிமையாளர் விகிதம் $= \frac{\text{உரிமையாளர் நிதி}}{\text{மொத்தச் சொத்துகள்}} = \frac{5,00,000}{10,00,000} = 0.5:1$

(iii) முதல் உந்துதிறன் விகிதம் $= \frac{\text{நிலையான வட்டி மற்றும் நிலையான பங்காதாயம் ஈட்டுகின்ற நிதிகள்}}{\text{நேர்மைப் பங்குதாரர் நிதி}} = \frac{6,00,000}{3,00,000} = 2:1$

12th-Accountancy-Unit-09.indd 303 12/9/2021 11:25:12 PM

நிலையான வட்டி மற்றும் நிலையான பங்காதாயம் ஈட்டுகின்ற நிதிகள்

= 8% முன்னுரிமைப் பங்குமுதல் + 9% கடனீட்டுப் பத்திரங்கள்

= 2,00,000 + 4,00,000 = ₹ 6,00,000

நேர்மைப் பங்குதாரர் நிதி = நேர்மைப் பங்குமுதல் + பொதுக் காப்பு + மிகுதி

= 1,50,000 + 1,50,000 = ₹ 3,00,000

9.6.3. சுழற்சி விகிதங்கள்

சுழற்சி விகிதங்கள், விற்பனையிலிருந்து பெற்ற வருவாயை உருவாக்குவதற்கு சொத்துகள் அல்லது பிற இனங்கள் எவ்வளவு திறமையாகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதைக் காட்டுகின்றன. இவற்றை செயல்பாட்டு விகிதங்கள் அல்லது செயல்திறன் விகிதங்கள் என்றும் அழைக்கலாம். இவை பல்வேறு இனங்களின் இயக்கத்தின் வேகத்தைக் காட்டுகின்றன. இவை ஒரு இனம், அதனோடு ஒப்பிடப்பட்ட இனத்தை விட எத்தனை மடங்கு உள்ளது என்பதை வெளிப்படுத்துகிது.

முக்கியமான சுழற்சி விகிதங்களாவன:

(i) சரக்கிருப்பு சுழற்சி விகிதம்
(ii) கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் சுழற்சி விகிதம்
(iii) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சுழற்சி விகிதம்
(iv) நிலைச்சொத்துகள் சுழற்சி விகிதம்

(i) சரக்கிருப்பு சுழற்சி விகிதம்

இது ஒரு குறிப்பிட்ட கணக்காண்டில், விற்பனை மூலம் பெற்ற வருவாயை (விற்பனை) அடைவதற்காக, சரக்கிருப்பின் சுழற்சி எத்தனை மடங்கு இருக்கின்றது என்பதைக் குறிக்கிறது. இவ்விகிதத்தில் விற்பனை மூலம் பெற்ற வருவாயின் அடக்கவிலை (விற்ற பொருளின் அடக்கவிலை), கொடுக்கப்பட்ட காலத்திற்குரிய சராசரி சரக்கிருப்புடன் ஒப்பீடு செய்யப்படுகிறது. இவ்விகிதம் பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.

$$\text{சரக்கிருப்பு சுழற்சி விகிதம்} = \frac{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாயின் அடக்கவிலை}}{\text{சராசரி சரக்கிருப்பு}}$$

விற்பனை மூலம் பெற்ற வருவாயின் அடக்கவிலை = கொள்முதல் செய்த சரக்குகள் + முடிவடைந்த பொருள்களின் சரக்கிருப்பு மாற்றம் + நேரடிச் செலவுகள்

(அல்லது)

= விற்பனை மூலம் பெற்ற வருவாய் – மொத்த இலாபம்

மாணவர் குறிப்பு

விற்பனை மூலம் பெற்ற வருவாய் என்பது நிகர விற்பனை ஆகும்.

சரக்கிருப்பு மாற்றம் = தொடக்கச் சரக்கிருப்பு – இறுதிச் சரக்கிருப்பு

நேரடிச் செலவுகள் = கூலி + உள் தூக்குக்கூலி + உள் ஏற்றிச்செல் செலவு + துறைமுகக் கட்டணம் + உள் நுழைவு வரி + இறக்குமதி வரி + நிலக்கரி, எரிவாயு, எரிபொருள் மற்றும் எரிசக்தி + இதர நேரடிச் செலவுகள்

$$\text{சராசரி சரக்கிருப்பு} = \frac{\text{தொடக்கச் சரக்கிருப்பு} + \text{இறுதிச் சரக்கிருப்பு}}{2}$$

இவ்விகிதத்தைக் கணக்கிட, விற்பனை மூலம் பெற்ற வருவாயின் அடக்கவிலை எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஏனெனில் சரக்கிருப்பு எப்போதும் அடக்கவிலையிலேயே மதிப்பிடப்படும். விதிவிலக்காக, நிகரத்தீர்வு மதிப்பானது அடக்கவிலையை விட குறைவாக இருக்கும் போது மட்டும், சரக்கிருப்பு நிகரத்தீர்வு மதிப்பில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. சரக்கிருப்பு சுழற்சி விகிதம் அதிகமாக இருக்கும்போது சரக்கிருப்பின் சுழற்சிதிறன் அதிகமாக இருக்கும். இருப்பினும், போதிய சரக்கிருப்பின்மை, சிறிய அளவில் சரக்குகள் வாங்குதல் போன்றவை அதிக சரக்கிருப்பு சுழற்சி விகிதத்திற்கு காரணமாக இருக்கலாம். அது போன்று, பயன்பாட்டில் இல்லாத பொருட்கள் சரக்கிருப்பில் சேர்ந்திருத்தல் குறைவான சரக்கிருப்பு சுழற்சி விகிதத்திற்கு காரணமாக இருக்கலாம். எனவே, சரக்கிருப்பு சுழற்சி விகிதத்தினை அது தொடர்பான இனங்களுடன் பகுப்பாய்வு செய்தல் வேண்டும்.

12th-Accountancy-Unit-09.indd 304 12/9/2021 11:25:12 PM

மாணவர் குறிப்பு:

தொடக்கச் சரக்கிருப்பு இல்லாதபோது, இறுதிச் சரக்கிருப்பு, சராசரி சரக்கிருப்பிற்கு பதிலாக எடுத்துக்கொள்ளப்படும்.

சரக்கிருப்பு மாற்று காலம்

சரக்கிருப்பு மாற்று காலம் என்பது சரக்கிருப்பை விற்பனை செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்படும் காலம் ஆகும். குறுகிய சரக்கிருப்பு மாற்று காலம், சரக்கிருப்பு மேலாண்மையின் அதிக செயல்திறனை குறிப்பிடுகிறது. இது பின்வருமாறு கணக்கிடப்படுகிறது:

$$\text{சரக்கிருப்பு மாற்று காலம் (நாட்களில்)} = \frac{\text{ஒரு ஆண்டிலுள்ள நாட்கள்}}{\text{சரக்கிருப்பு சுழற்சி விகிதம்}}$$

$$\text{சரக்கிருப்பு மாற்று காலம் (மாதங்களில்)} = \frac{\text{ஒரு ஆண்டிலுள்ள மாதங்கள்}}{\text{சரக்கிருப்பு சுழற்சி விகிதம்}}$$

எடுத்துக்காட்டு 8

சானியா நிறுமத்தின் கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து சரக்கிருப்பு சுழற்சி விகிதம் மற்றும் சரக்கிருப்பு மாற்று காலத்தை (மாதங்களில்) கணக்கிடவும்.

விவரம்	₹
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	1,90,000
அவ்வாண்டில் தொடக்கச் சரக்கிருப்பு	40,000
அவ்வாண்டில் இறுதிச் சரக்கிருப்பு	20,000
அவ்வாண்டில் மேற்கொண்ட கொள்முதல்	90,000
உள்தூக்குக்கூலி	10,000

தீர்வு

$$\text{சரக்கிருப்பு சுழற்சி விகிதம்} = \frac{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாயின் அடக்கவிலை}}{\text{சராசரி சரக்கிருப்பு}} = \frac{1,20,000}{30,000} = 4 \text{ மடங்கு}$$

விற்பனை மூலம் பெற்ற வருவாயின் அடக்கவிலை

தொடக்கச் சரக்கிருப்பு + நிகரக் கொள்முதல் + நேரடிச் செலவுகள் (உள்தூக்குக் கூலி) – இறுதிச் சரக்கிருப்பு

= 40,000 + 90,000 + 10,000 – 20,000

= ₹ 1,20,000

$$\text{சராசரி சரக்கிருப்பு} = \frac{\text{தொடக்கச் சரக்கிருப்பு} + \text{இறுதிச் சரக்கிருப்பு}}{2} = \frac{40,000 + 20,000}{2} = ₹\ 30,000$$

மாற்று காலம்

$$\text{சரக்கிருப்பு மாற்று காலம் (மாதங்களில்)} = \frac{\text{ஒரு ஆண்டிலுள்ள மாதங்கள்}}{\text{சரக்கிருப்பு சுழற்சி விகிதம்}} = \frac{12}{4} = 3 \text{ மாதங்கள்}$$

(ii) கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகளின் சுழற்சி விகிதம்

கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகளின் சுழற்சி விகிதத்தில், கணக்காண்டிற்குரிய கடன் விற்பனை மூலம் பெற்ற வருவாய், கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகளின் சராசரியுடன் ஒப்பீடு செய்யப்படுகிறது. இது கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளிலிருந்து துரிதமாக ரொக்கம் வசூலிப்பதைக் காட்டுகிறது. இவ்விகிதம் கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படுகிறது:

12th-Accountancy-Unit-09.indd 305 12/9/2021 11:25:12 PM

$$\text{கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் சுழற்சி விகிதம்} = \frac{\text{கடன் விற்பனை மூலம் பெற்ற வருவாய்}}{\text{கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் சராசரி}}$$

$$\text{கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் சராசரி} = \frac{\left[\text{கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் தொடக்க இருப்பு}\right] + \left[\text{கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் இறுதி இருப்பு}\right]}{2}$$

கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகள் = கடனாளிகள் + பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுகள்

கடன் விற்பனை மூலம் பெற்ற வருவாய் (நிகரக் கடன் விற்பனை), இவ்விகிதம் கணக்கிடுவதற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஏனெனில், கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகள் கடன் விற்பனை மூலம் மட்டும் தான் எழுகிறது. இவ்விகிதம் அதிகமாக இருந்தால், பெறவேண்டியவைகளை வசூலிக்கும் மேலாண்மை செயல்திறன் அதிகமாக இருக்கிறது என்று பொருள்.

மாணவர் குறிப்பு

கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகளின் தொடக்க இருப்பு கொடுக்கப்படாதபோது, இவ்விகிதத்தைக் கணக்கிட சராசரி கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகளின் சராசரிக்குப் பதிலாக, கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகளின் இறுதி இருப்பை எடுத்துக்கொள்ள வேண்டும்.

கடன் வசூலிப்புக் காலம்

கடன் வசூலிப்புக் காலம் என்பது கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகளை வசூலிப்பதற்கு எடுத்துக் கொள்ளும் சராசரி காலம் ஆகும். கடன் வசூலிக்கும் காலம் குறைவாக இருக்கும் போது கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகளிலிருந்து பணம் வசூலிக்கும் மேலாண்மை செயல்திறன் அதிகமாக இருக்கிறது என்று பொருள். கடன் வசூலிப்புக் காலம் கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படுகிறது:

$$\text{கடன் வசூலிப்புக் காலம் (நாட்களில்)} = \frac{\text{ஒரு ஆண்டிலுள்ள நாட்கள்}}{\text{கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகளின் சுழற்சி விகிதம்}}$$

$$\text{கடன் வசூலிப்புக் காலம் (மாதங்களில்)} = \frac{\text{ஒரு ஆண்டிலுள்ள மாதங்கள்}}{\text{கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகளின் சுழற்சி விகிதம்}}$$

எடுத்துக்காட்டு 9

ஹரிணி நிறுமத்தின் கடன் விற்பனை மூலம் பெற்ற வருவாய் தொகை ₹ 9,60,000. அந்த கணக்காண்டின் இறுதியில் இதன் வியாபார கடனாளிகள் மற்றும் பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு தொகை முறையே ₹ 1,00,000 மற்றும் ₹ 60,000. கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகளின் சுழற்சி விகிதம் மற்றும் கடன் வசூலிப்புக் காலம் (மாதங்களில்) கணக்கிடவும்.

தீர்வு

$$\text{கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் சுழற்சி விகிதம்} = \frac{\text{கடன் விற்பனை மூலம் பெற்ற வருவாய்}}{\text{கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் சராசரி}}$$

$$= \frac{9,60,000}{1,60,000} = 6 \text{ மடங்கு}$$

கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகள் = கடனாளிகள் + பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுகள்

= 1,00,000 + 60,000 = ₹ 1,60,000

மாணவர் குறிப்பு

கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகளின் தொடக்க இருப்பு கொடுக்கப்படாததால், கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகளின் சராசரிக்குப் பதிலாக, கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் இறுதி இருப்பு எடுத்துக்கொள்ளப்பட்டது.

$$\text{கடன் வசூலிப்புக் காலம் (மாதங்களில்)} = \frac{\text{ஒரு ஆண்டிலுள்ள மாதங்கள்}}{\text{கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகளின் சுழற்சி விகிதம்}}$$

$$= \frac{12}{6} = 2 \text{ மாதங்கள்}$$

12th-Accountancy-Unit-09.indd 306 12/9/2021 11:25:12 PM

(ii) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சுழற்சி விகிதம்

இது ஒரு குறிப்பிட்ட கணக்காண்டில், கடன் கொள்முதலை, கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சராசரியுடன் ஒப்பீடு செய்யப்படுவதைக் குறிக்கிறது. இது கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளுக்குத் துரிதமாக ரொக்கம் செலுத்துவதைக் காட்டுகிறது. இது கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படுகிறது:

$$\text{கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சுழற்சி விகிதம்} = \frac{\text{நிகர கடன் கொள்முதல்}}{\text{கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சராசரி}}$$

நிகர கடன் கொள்முதல் = மொத்த கடன் கொள்முதல் – கொள்முதல் திருப்பம்

$$\text{கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சராசரி} = \frac{\left[\text{கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் தொடக்க இருப்பு}\right] + \left[\text{கணக்குகள் முலம் செலுத்த வேண்டியவைகளின் இறுதி இருப்பு}\right]}{2}$$

கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் = வியாபார கடனீந்தோர் + செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுகள்

இவ்விகிதம் அதிகமாக இருந்தால், செலுத்த வேண்டியவைகளை மேலாண்மைச் செய்வதில் மேலாண்மை செயல்திறன் அதிகமாக இருக்கிறது என்று பொருள். அதாவது, சரக்களித்தோருக்கு செலுத்த வேண்டியத்தொகை விரைவாக செலுத்தித் தீர்க்கப்படுகிறது.

மாணவர் குறிப்பு

தொடக்கக் கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் இல்லாதபோது, சராசரி கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளுக்குப் பதிலாக இறுதிக் கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

கடன் செலுத்தும் காலம்

கடன் செலுத்தும் காலம் என்பது, கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளைச் செலுத்துவதற்கு வணிகம் எடுத்துக் கொள்ளும் சராசரி காலம் ஆகும். கடன் செலுத்தும் காலம் குறைவாக இருக்கும் போது, கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளை மேலாண்மை செய்வதில் மேலாண்மை செயல்திறன் அதிகமாக இருக்கிறது என்று பொருள். அதாவது, செலுத்த வேண்டியத்தொகை விரைவாக செலுத்தித் தீர்க்கப்படுகிறது. கடன் செலுத்தும் காலம் கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படுகிறது:

$$\text{கடன் செலுத்தும் காலம் (நாட்களில்)} = \frac{\text{ஒரு ஆண்டிலுள்ள நாட்கள்}}{\text{கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சுழற்சி விகிதம்}}$$

$$\text{கடன் செலுத்தும் காலம் (மாதங்களில்)} = \frac{\text{ஒரு ஆண்டிலுள்ள மாதங்கள்}}{\text{கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சுழற்சி விகிதம்}}$$

எடுத்துக்காட்டு 10

கல்பனா நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து, கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சுழற்சி விகிதம், சராசரி கடன் செலுத்தும் காலம் (நாட்களில்) கணக்கிடவும்.

விவரம்	₹
2018 – 2019 –ல் கடன் கொள்முதல்	1,00,000
1.4.2018 அன்று வியாபார கடனீந்தோர்	20,000
31.3.2019 அன்று வியாபார கடனீந்தோர்	10,000
1.4.2018 அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	4,000
31.3.2019 அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	6,000

12th-Accountancy-Unit-09.indd 307 12/9/2021 11:25:12 PM

தீர்வு

$$\text{கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சுழற்சி விகிதம்} = \frac{\text{நிகர கடன் கொள்முதல்}}{\text{கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சராசரி}}$$

$$= \frac{1,00,000}{20,000} = 5 \text{ மடங்கு}$$

$$\text{கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சராசரி} = \frac{\left[\text{கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் தொடக்க இருப்பு}\right] + \left[\text{கணக்குகள் முலம் செலுத்த வேண்டியவைகளின் இறுதி இருப்பு}\right]}{2}$$

$$= \frac{(20,000 + 4,000) + (10,000 + 6,000)}{2} = \frac{40,000}{2} = ₹\ 20,000$$

$$\text{கடன் செலுத்தும் காலம் (நாட்களில்)} = \frac{\text{ஒரு ஆண்டிலுள்ள நாட்கள்}}{\text{கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சுழற்சி விகிதம்}}$$

$$= \frac{365}{5} = 73 \text{ நாட்கள்.}$$

(iv) நிலைச் சொத்துகள் சுழற்சி விகிதம்

இது ஒரு குறிப்பிட்ட கணக்காண்டில், விற்பனை மூலம் பெறும் வருவாய்க்கும் (விற்பனை) நிலைச் சொத்துகளுக்கும் இடையே உள்ள தொடர்பைக் குறிக்கிறது. இது, நிலைச்சொத்துகளின் சுழற்சி, விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கு எத்தனை மடங்கு உள்ளது என்பதைக் காட்டுகிறது. இந்த விகிதம் நிலைச் சொத்துகளின் பயன்பாட்டின் திறனைக் குறிக்கிறது.

$$\text{நிலைச் சொத்துகள் சுழற்சி விகிதம்} = \frac{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}}{\text{சராசரி நிலைச் சொத்துகள்}}$$

$$\text{சராசரி நிலைச் சொத்துகள்} = \frac{\text{தொடக்க நிலைச் சொத்துகள் + இறுதி நிலைச் சொத்துகள்}}{2}$$

நிலைச் சொத்துகள் சுழற்சி விகிதம் அதிகமாக இருந்தால், நிலைச் சொத்துகளைப் பயன்படுத்துவதில் மேலாண்மைச் செயல்திறன் அதிகமாக இருக்கிறது என்று பொருள்.



நிலைச்சொத்துகள் சுழற்சி விகிதத்தை, விற்பனை மூலம் பெற்ற வருவாயைப் பயன்படுத்தி கணக்கிடுவதற்குப் பதிலாக விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை கொண்டும் கணக்கிடலாம்.

எடுத்துக்காட்டு 11

ஆஷிகா நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து நிலைச் சொத்துகள் சுழற்சி விகிதத்தைக் கணக்கிடவும்.

அவ்வாண்டில் விற்பனை மூலம் பெற்ற வருவாய் ₹ 60,00,000.

அவ்வாண்டின் இறுதியில் நிலைச்சொத்துகள் ₹ 6,00,000.

தீர்வு

$$\text{நிலைச் சொத்துகள் சுழற்சி விகிதம்} = \frac{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}}{\text{சராசரி நிலைச் சொத்துகள்}}$$

$$= \frac{60,00,000}{6,00,000} = 10 \text{ மடங்கு}$$

மாணவர் குறிப்பு

தொடக்க நிலைச் சொத்துகள் தரப்படாததால், சராசரி நிலைச் சொத்துகளுக்குப் பதிலாக இறுதி நிலைச் சொத்துகள் எடுத்துக்கொள்ளப்பட்டது.

12th-Accountancy-Unit-09.indd 308 12/9/2021 11:25:12 PM

எடுத்துக்காட்டு 12

டெல்ஃபி நிறுமத்திடமிருந்து பெறப்பட்ட பின்வரும் தகவல்களிலிருந்து (i) சரக்கிருப்பு சுழற்சி விகிதம் (ii) கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் சுழற்சி விகிதம் (iii) கணக்குகள் மூலம் செலுத்தப்பட வேண்டியவைகளின் சுழற்சி மற்றும் (iv) நிலைச் சொத்துகள் சுழற்சி விகிதம் கணக்கிடவும்.

விவரம்	2018, மார்ச் 31 ₹	2019, மார்ச் 31 ₹
சரக்கிருப்பு	1,40,000	1,00,000
கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகள்	80,000	60,000
கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள்	40,000	50,000
நிலைச் சொத்துகள்	5,50,000	5,00,000

கூடுதல் தகவல்கள்:

(i) அவ்வாண்டில் விற்பனை மூலம் பெற்ற வருவாய் ₹ 10,50,000
(ii) அவ்வாண்டின் கொள்முதல் ₹ 4,50,000
(iii) விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை ₹ 6,00,000.
விற்பனை மற்றும் கொள்முதலை கடன் நடவடிக்கைகளாகக் கருதவும்.

தீர்வு

(i) சரக்கிருப்பு சுழற்சி விகிதம் $= \frac{6,00,000}{1,20,000} = 5$ மடங்கு

சராசரி சரக்கிருப்பு $= \frac{\text{தொடக்கச் சரக்கிருப்பு + இறுதிச் சரக்கிருப்பு}}{2}$

$= \frac{1,40,000 + 1,00,000}{2} = \frac{2,40,000}{2} = ₹\ 1,20,000$

(ii) கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் சுழற்சி விகிதம் $= \frac{\text{கடன் விற்பனை மூலம் பெற்ற வருவாய்}}{\text{கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் சராசரி}}$

$= \frac{10,50,000}{70,000} = 15$ மடங்கு

கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் சராசரி $= \frac{\text{கணக்குகளின் மூலம் பெற வேண்டியவைகளின் தொடக்க இருப்பு + கணக்குகள் முலம் பெற வேண்டியவைகளின் இறுதி இருப்பு}}{2}$

$= \frac{80,000 + 60,000}{2} = \frac{1,40,000}{2} = ₹\ 70,000$

(iii) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சுழற்சி விகிதம் $= \frac{\text{நிகர கடன் கொள்முதல்}}{\text{கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சராசரி}}$

$= \frac{4,50,000}{45,000} = 10$ மடங்கு

கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சராசரி $= \frac{\text{கணக்குகளின் மூலம் செலுத்த வேண்டியவைகளின் தொடக்க இருப்பு + கணக்குகள் முலம் செலுத்த வேண்டியவைகளின் இறுதி இருப்பு}}{2}$

$= \frac{40,000 + 50,0000}{2} = \frac{90,000}{2} = ₹\ 45,000$

12th-Accountancy-Unit-09.indd 309 12/9/2021 11:25:12 PM

(iv) நிலைச்சொத்துகள் சுழற்சி விகிதம் = $\frac{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}}{\text{சராசரி நிலைச் சொத்துகள்}} = \frac{10.50,000}{5,25,000}$ = 2 மடங்கு

(iii) சராசரி நிலைச் சொத்துகள் = $\frac{\text{தொடக்க நிலைச் சொத்துகள் +இறுதி நிலைச் சொத்துகள்}}{2}$

$= \frac{5,50,000 + 5,00,000}{2} = \frac{10,50,000}{2}$ = ₹ 5,25,000

9.6.4. இலாபத் தன்மை விகிதங்கள்

இலாபத் தன்மை விகிதங்கள் ஒரு, வணிக நிறுவனத்தின் இலாபத்தன்மையை மதிப்பிட உதவுகிறது. இந்த விகிதங்கள் வணிக நிறுவனத்தில் உள்ள வளங்களைப் பயன்படுத்துவதன் மூலம் கிடைக்கும் வணிகத்தின் வருவாய்த் திறனை பகுப்பாய்வு செய்ய கணக்கிடப்படுகிறது. பொதுவாக, இந்த விகிதங்கள் சதவிகிதத்தில் வெளிப்படுத்தப் படுகின்றன.

வழக்கமாகப் பயன்படுத்தும் இலாபத்தன்மை விகிதங்களாவன

(i) மொத்த இலாப விகிதம்
(ii) இயக்க அடக்க விலை விகிதம்
(iii) இயக்க இலாப விகிதம்
(iv) நிகர இலாப விகிதம்
(v) முதலீட்டின் மீதான வருவாய்

(i) மொத்த இலாப விகிதம்

மொத்த இலாப விகிதம் என்பது மொத்த இலாபத்திற்கும், விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கும் உள்ள விகிதாச்சாரம் ஆகும். மொத்த இலாப விகிதம் விற்பனை மூலம் பெற்ற வருவாயில் உள்ள இலாபத்தின் சதவீதத்தைக் காட்டுகிறது. இது கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படுகிறது:

$$\text{மொத்த இலாப விகிதம்} = \frac{\text{மொத்த இலாபம்}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}} \times 100$$

மொத்த இலாபம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய் – விற்பனை மூலம் பெற்ற வருவாயின் அடக்கவிலை

அதிக மொத்த இலாப விகிதம் அதிக இலாபத்தன்மையைக் காட்டுகிறது. ஒரு வணிக நிறுவனத்தால் செலுத்தப்படும் மறைமுகச் செலவுகளை எதிர்நோக்குவதற்கு அது போதுமானதாக இருக்க வேண்டும்.

எடுத்துக்காட்டு 13

பின்வரும் தகவல்களிலிருந்து மொத்த இலாபம் கணக்கிடவும்:
விற்பனை மூலம் பெற்ற வருவாய் ₹ 1,00,000, விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை ₹ 80,000 மற்றும் கொள்முதல் ₹ 62,500.

தீர்வு

மொத்த இலாப விகிதம் = $\frac{\text{மொத்த இலாபம்}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}} \times 100 = \frac{20,000}{1,00,000} \times 100 = 20\%$

மொத்த இலாபம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய் – விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை

= 1,00,000 – 80,000 = ₹ 20,000

(ii) இயக்க அடக்க விலை விகிதம்

இயக்க அடக்க விலை விகிதம் என்பது இயக்க அடக்க விலைக்கும் விற்பனை மூலம் கிடைத்த வருவாய்க்கும் உள்ள விகிதாச்சாரம் ஆகும். இந்த விகிதம் வணிக இயக்கங்களின் செயல்திறன் குறித்த ஒரு சோதனை ஆகும். இது கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படுகிறது.

12th-Accountancy-Unit-09.indd 310 12/9/2021 11:25:13 PM

$$\text{இயக்க அடக்க விலை விகிதம்} = \frac{\text{இயக்க அடக்க விலை}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}} \times 100$$

இயக்க அடக்க விலை என்பது வணிகத்தின் செயல்பாட்டு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அடக்க விலை ஆகும்.

இயக்க அடக்க விலை = விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்க விலை + இயக்கச் செலவுகள்

இயக்கச் செலவுகள் = பணியாளர் நலன்களுக்கான செலவுகள் + தேய்மானம் + அலுவலக மற்றும் நிர்வாகம் தொடர்பான பிற செலவுகள், விற்பனை மற்றும் பகிர்வுச் செலவுகள்

குறைவான இயக்க அடக்க விலை விகிதம் அதிகமான இலாபத்தைக் காட்டுகிறது. குறைவான இயக்க அடக்க விலை விகிதம், கடன்மீது வட்டி, நிலைச் சொத்துகள் விற்பனை மீதான நட்டம் போன்ற இயக்கம் சாரா செலவுகளைச் செலுத்துவதற்கு வணிகத்தில் தொகை அதிக அளவு உள்ளது என்பதைக் குறிக்கிறது.

எடுத்துக்காட்டு 14

மரியா நிறுமத்தின் 2018 மார்ச் 31 ஆம் நாளைய இலாப நட்ட அறிக்கை பின்வருமாறு. இயக்க அடக்க விலை விகிதம் கணக்கிடவும்.

இலாப நட்ட அறிக்கை

விவரம்	குறிப்பு எண்	தொகை ₹
I. விற்பனை மூலம் பெற்ற வருவாய்		8,00,000
II. இதர வருமானம்		20,000
III. மொத்த வருவாய் (I +II)		**8,20,000**
IV. செலவுகள்:		
கொள்முதல் செய்த சரக்குகள்		4,50,000
சரக்கிருப்பு மாற்றம்		(–)40,000
பணியாளர் நலன்களுக்கான செலவுகள்	1	22,000
இதர செலவுகள்	2	68,000
மொத்த செலவுகள்		5,00,000
V. வரிக்கு முன்னர் உள்ள இலாபம் (III–IV)		**3,20,000**

கணக்குகளுக்கான குறிப்புகள்

விவரம்	தொகை ₹
1. பணியாளர் நலன்களுக்கான செலவுகள்	
கூலி (நேரடி)	10,000
சம்பளம்	12,000
மொத்தம்	22,000
2. இதர செலவுகள்	
நிர்வாகச் செலவுகள்	20,000
விற்பனை மற்றும் பகிர்வுச் செலவுகள்	28,000
நிலைச்சொத்து விற்றதில் ஏற்பட்ட நட்டம்	20,000
மொத்தம்	68,000

தீர்வு

$$\text{இயக்க அடக்க விலை விகிதம்} = \frac{\text{இயக்க அடக்க விலை}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}} \times 100$$

12th-Accountancy-Unit-09.indd 311 12/9/2021 11:25:13 PM

$$= \frac{4,20,000 + 60,000}{8,00,000} \times 100 = \frac{4,80,000}{8,00,000} \times 100 = 60\%$$

விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்க விலை = சரக்கிருப்பின் கொள்முதல் + சரக்கிருப்பு மாற்றம் + நேரடிச் செலவுகள் (கூலி)

= 4,50,000 + (40,000) + 10,000 = ₹ 4,20,000

இயக்கச் செலவுகள் = நிர்வாகச் செலவுகள் + விற்பனை மற்றும் பகிர்வுச் செலவுகள் + பணியாளர்கள் நலன்களுக்கானச் செலவுகள் (சம்பளம்)

= 20,000 + 28,000 + 12,000 = ₹ 60,000

இயக்க அடக்க விலை = விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்க விலை + இயக்கச் செலவுகள்

= 4,20,000 + 60,000 = ₹ 4,80,000

மாணவர் குறிப்பு

நிலைச்சொத்துகள் விற்பனை மீதான நட்டம் ஒரு இயக்கம் சாரா செலவு. எனவே, இது தவிர்க்கப்பட வேண்டும்.

(iii) இயக்க இலாப விகிதம்

இயக்க இலாப விகிதம், இயக்க இலாபத்திற்கும், விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கும் உள்ள விகிதத்தை தருகிறது. இயக்க இலாப விகிதம் வணிக நிறுவனத்தின் செயல்திறனைக் காட்டுகிறது. இது கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படுகிறது:

$$\text{இயக்க இலாப விகிதம்} = \frac{\text{இயக்க இலாபம்}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}} \times 100$$

இதற்கு மாற்றாக, இயக்க இலாப விகிதம் கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படலாம்.

இயக்க இலாப விகிதம் = 100 – இயக்க அடக்க விலை விகிதம்

இயக்க இலாபம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய் – இயக்க அடக்க விலை

அதிக இயக்க இலாப விகிதம் அதிக இலாபத்தைக் காட்டுகிறது. அதிக இயக்க இலாப விகிதம், வணிகத்தில் இயக்கம் சாரா செலவுகளைச் செலுத்துவதற்கான தொகை அதிகமாக உள்ளதைக் காட்டுகிறது.

மாணவர் குறிப்பு

இயக்க அடக்க விகிதம் + இயக்க இலாப விகிதம் = 100%

எடுத்துக்காட்டு 15

கீழ்க்கண்ட நிலைகளில் இயக்க இலாப விகிதம் காணவும்.

நிலை 1: விற்பனை மூலம் பெற்ற வருவாய் ₹ 10,00,000, இயக்க இலாபம் ₹ 1,50,000.

நிலை 2: விற்பனை மூலம் பெற்ற வருவாய் ₹ 15,00,000, இயக்க அடக்கம் ₹ 12,00,000.

நிலை 3: விற்பனை மூலம் பெற்ற வருவாய் ₹ 20,00,000, மொத்த இலாபம் விற்பனை மூலம் பெற்ற வருவாயில் 30%, இயக்கச் செலவுகள் ₹ 4,00,000.

தீர்வு

நிலை 1: இயக்க இலாப விகிதம் $= \frac{\text{இயக்க இலாபம்}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}} \times 100$

$$= \frac{1,50,000}{10,00,000} \times 100 = 15\%$$

12th-Accountancy-Unit-09.indd 312 12/9/2021 11:25:13 PM

நிலை 2: இயக்க இலாப விகிதம் = $\frac{\text{இயக்க இலாபம்}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}}$ x 100

$= \frac{3,00,000}{15,00,000}$ x 100 = 20%

இயக்க இலாபம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய் – இயக்க அடக்கம்

= 15,00,000 – 12,00,000 = ₹ 3,00,000

நிலை 3: இயக்க இலாப விகிதம் = $\frac{\text{இயக்க இலாபம்}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}}$ x 100

$= \frac{2,00,000}{20,00,000}$ x 100 = 10%

மொத்த இலாபம் = 20,00,000 30/100 = ₹ 6,00,000

இயக்க இலாபம் = மொத்த இலாபம் – இயக்கச் செலவுகள்

இயக்க இலாபம் = 6,00,000 – 4,00,000 = ₹ 2,00,000

(iv) நிகர இலாப விகிதம்

நிகர இலாபம் என்பது விற்பனை மூலம் பெற்ற வருவாயில் நிகர இலாபத்தின் சதவீதம் ஆகும். இது கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படுகிறது.

$$\text{நிகர இலாப விகிதம்} = \frac{\text{வரிக்குப் பின்னர் உள்ள நிகர இலாபம்}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}} \text{ x 100}$$

வரிக்குப் பின்னர் உள்ள நிகர இலாபம் = மொத்த இலாபம் + மறைமுக வருமானங்கள் – மறைமுகச் செலவுகள் – வரி

அல்லது

வரிக்குப் பின்னர் உள்ள நிகர இலாபம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய் – விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை – இயக்கச் செலவுகள் – இயக்கம் சாராச் செலவுகள் + இயக்கம் சாரா வருமானங்கள் – வரி

நிகர இலாப விகிதம், வணிக நிறுவனத்தின் ஒட்டுமொத்த இலாபத் தன்மையைக் காட்டுகிறது. அதிக நிகர இலாப விகிதம் அதிக இலாபத் தன்மையைக் காட்டுகிறது.

எடுத்துக்காட்டு 16

ஒரு வணிக நிறுவனத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து நிகர இலாபத்தைக் கணக்கிடவும்.

விவரம்	₹
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	3,50,000
விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை	1,50,000
நிர்வாகச் செலவுகள்	50,000
விற்பனைச் செலவுகள்	10,000

12th-Accountancy-Unit-09.indd 313 12/9/2021 11:25:13 PM

தீர்வு

$$\text{நிகர இலாப விகிதம்} = \frac{\text{வரிக்குப் பின்னர் உள்ள நிகரஇலாபம்}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}} \times 100 = \frac{1,40,000}{3,50,000} \times 100 = 40\%$$

நிகர இலாபம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய் – விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை – நிர்வாகச் செலவுகள் – விற்பனைச் செலவுகள்

= 3,50,000 – 1,50,000 – 50,000 – 10,000 = ₹ 1,40,000

மாணவர் குறிப்பு

வரி செலுத்த வேண்டியது இல்லை எனக் கொள்ளவும்.

எடுத்துக்காட்டு 17

முகேஷ் நிறுமத்தின் பின்வரும் இலாபம் நட்ட அறிக்கையிலிருந்து

(I) மொத்த இலாப விகிதம் (ii) நிகர இலாப விகிதம் கணக்கிடவும்.

முகேஷ் நிறுமத்தின் இலாப நட்ட அறிக்கை

விவரம்	தொகை ₹
I. விற்பனை மூலம் பெற்ற வருவாய்	5,00,000
II. இதர வருமானம்:	
முதலீடு மூலம் வருவாய்	40,000
III. மொத்த வருவாய் (I + II)	**5,40,000**
IV. செலவுகள்:	
கொள்முதல் செய்த சரக்குகள்	1,80,000
சரக்கிருப்பு மாற்றம்	20,000
பணியாளர் நலன்களுக்கான செலவுகள்	30,000
இதர செலவுகள்	1,10,000
வரி ஒதுக்கு	50,000
மொத்த செலவுகள்	3,90,000
V. **அவ்வாண்டிற்கான இலாபம்**	**1,50,000**

தீர்வு

$$\text{(i) மொத்த இலாப விகிதம்} = \frac{\text{மொத்த இலாபம்}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}} \times 100 = \frac{3,00,000}{5,00,000} \times 100 = 60\%$$

மொத்த இலாபம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய் – விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை

= 5,00,000 – 2,00,000 = ₹ 3,00,000

விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை = கொள்முதல் செய்த சரக்குகள் + சரக்கிருப்பு மாற்றம்

= 1,80,000 + 20,000 = ₹ 2,00,000

$$\text{(ii) நிகர இலாப விகிதம்} = \frac{\text{வரிக்கு பின்னர் உள்ள நிகர இலாபம்}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}} \times 100 = \frac{1,50,000}{5,00,000} \times 100 = 30\%$$

12th-Accountancy-Unit-09.indd 314 12/9/2021 11:25:13 PM

எடுத்துக்காட்டு 18

நவீன் நிறுமத்தின் பின்வரும் வணிக நடவடிக்கைகயிலிருந்து (i) மொத்த இலாப விகிதம் (ii) நிகர இலாப விகிதம் (iii) இயக்க அடக்கவிலை விகிதம் (iv) இயக்க இலாப விகிதம் கணக்கிடவும்.

இலாப நட்ட அறிக்கை

விவரம்	₹
I. விற்பனை மூலம் பெற்ற வருவாய்	20,000
II. இதர வருமானம்:	
முதலீடு மூலம் வருவாய்	200
III. மொத்த வருவாய் (I+II)	**20,200**
IV. செலவுகள்:	
கொள்முதல் செய்த சரக்குகள்	17,000
சரக்கிருப்பு மாற்றம்	(–)1,000
நிதிசார் செலவுகள்	300
இதர செலவுகள் (நிர்வாகம் மற்றும் விற்பனை)	2,400
மொத்த செலவுகள்	18,700
V. அவ்வாண்டிற்கான வரிக்கு முன்னர் உள்ள இலாபம் (III - IV)	**1,500**

தீர்வு

(i) மொத்த இலாப விகிதம் = $\frac{\text{மொத்த இலாபம்}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}} \times 100 = \frac{4,000}{20,000} \times 100 = 20\%$

விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை = கொள்முதல் செய்த சரக்குகள் + சரக்கிருப்பு மாற்றம் + நேரடிச் செலவுகள்

= 17,000 – 1,000 + 0 = ₹ 16,000

மொத்த இலாபம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய் – விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை

= 20,000 – 16,000 = ₹ 4,000

(ii) நிகர இலாப விகிதம் = $\frac{\text{வரிக்கு பின்னர் உள்ள நிகர இலாபம்}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}} \times 100 = \frac{1,500}{20,000} \times 100 = 7.5\%$

மாணவர் குறிப்பு

வரி இல்லை எனக் கொள்ளவும்.

(iii) இயக்க அடக்கவிலை விகிதம் = $\frac{\text{இயக்க அடக்கவிலை}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}} \times 100 = \frac{18,400}{20,000} \times 100 = 92\%$

இயக்க அடக்கவிலை = விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை + இயக்கச் செலவுகள்

இயக்கச் செலவுகள் = இதர செலவுகள் = ₹ 2,400

இயக்க அடக்கவிலை = 16,000 + 2,400 = ₹ 18,400

(iv) இயக்க இலாப விகிதம் = $\frac{\text{இயக்க இலாபம்}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}} \times 100 = \frac{1,600}{20,000} \times 100 = 8\%$

இயக்க இலாபம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய் – இயக்க அடக்கவிலை

= 20,000 – 18,400 = ₹ 1,600

12th-Accountancy-Unit-09.indd 315 12/9/2021 11:25:13 PM

(vi) முதலீடு மீதான வருவாய்

முதலீடு மீதான வருவாய், வட்டி மற்றும் வரிக்கு முன்னர் உள்ள நிகர இலாபத்திற்கும், பயன்படுத்தப்பட்ட முதலுக்கும் உள்ள விகிதத்தைக் காட்டுகிறது (பங்குதாரர் நிதி மற்றும் நீண்டகாலக் கடன்கள்). இந்த விகிதமானது பயன்படுத்தப்பட்ட முதல், வணிகத்தில் எவ்வாறு திறமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை அளவிடுகிறது. இது வணிக நிறுவனத்தின் ஒட்டுமொத்த இலாபத் தன்மையை அளவிடுகிறது. இது கீழ்க்கண்டவாறு கணக்கிடப் படுகிறது.

$$\text{முதலீடு மீதான வருவாய்} = \frac{\text{வட்டி மற்றும் வரிக்கு முன்னர் உள்ள நிகர இலாபம்}}{\text{பயன்படுத்தப்பட்ட முதல்}} \times 100$$

பயன்படுத்தப்பட்ட முதல் = பங்குதாரர் நிதி + நீண்டகாலப் பொறுப்புகள்

அதிக முதலீடு மீதான வருவாய் வணிகத்தில் அதிக இலாபத்தைக் காட்டுகிறது மற்றும் குறைவான முதலீடு மீதான வருவாய் குறைவான இலாபத்தைக் காட்டுகிறது.

எடுத்துக்காட்டு 19

பாபு நிறுமத்தின் 2018, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு (வருவிய) பின்வருமாறு:

விவரம்	தொகை ₹
I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்	
1. **பங்குதாரர் நிதி**	
(அ) பங்குமுதல்	70,000
(ஆ) காப்புகள் மற்றும் மிகுதி	25,000
2. **நீண்டகாலப் பொறுப்புகள்**	
நீண்டகாலக் கடன்கள்	30,000
3. **நடப்புப் பொறுப்புகள்**	
(அ) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள்	20,000
(ஆ) இதர நடப்புப் பொறுப்புகள்	15,000
(இ) குறுகியகால ஒதுக்குகள்	42,000
மொத்தம்	**2,02,000**

அவ்வாண்டில் வட்டி மற்றும் வரிக்கு முன்னர் உள்ள நிகர இலாபம் ₹ 25,000. அவ்வாண்டின் முதலீடு மீதான வருவாய் கணக்கிடவும்.

தீர்வு

$$\text{முதலீடு மீதான வருவாய்} = \frac{\text{வட்டி மற்றும் வரிக்கு முன்னர் உள்ள நிகர இலாபம்}}{\text{பயன்படுத்தப்பட்ட முதல்}} \times 100$$

$$= \frac{25,000}{1,25,000} \times 100 = 20\%$$

பயன்படுத்தப்பட்ட முதல் = பங்குமுதல் + காப்புகள் மற்றும் மிகுதி + நீண்டகாலக் கடன்கள்

= 70,000 + 25,000 +30,000 = ₹ 1,25,000

12th-Accountancy-Unit-09.indd 316 12/9/2021 11:25:13 PM

மாணவர் செயல்பாடு 9.3

முழு வகுப்பு நடவடிக்கை: பின்வரும் சூழல்களுக்கு சாத்தியமான காரணங்கள் மற்றும் விளைவுகள் குறித்து விவாதிக்கவும்.

- கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், ஒரு துறைவாரி பண்டகசாலையின் நிகர இலாப அளவு குறைந்துள்ளது.
- ஒரு வியாபாரிக்கு கடனைச் செலுத்துவதற்கு அவருடைய சரக்களித்தோர் அனுமதித்தது 30 நாட்கள். ஆனால் அவர் எடுத்த நாட்கள் 45.
- கடன் வசூலிப்புக் காலம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

9.7. விகிதப் பகுப்பாய்வின் நன்மைகள்

விகிதப் பகுப்பாய்வின் நன்மைகள் பின்வருமாறு:

(i) **செயல்பாடுகளின் செயல்திறனை அளவிடுகிறது:** விகிதப் பகுப்பாய்வு, இயக்க அடக்கவிலை மற்றும் வருவாய்க்கும் இடையே உள்ள உறவை கண்டறிவதன் மூலமும், தற்போதைய விகிதங்களைக் கடந்த கால விகிதங்களுடன் ஒப்பீடு செய்வதன் மூலமும் செயல்பாடுகளின் செயல்திறனை அளவிடுகிறது.

(ii) **நிதிநிலையின் கடன் தீர்க்கும் திறனை அளவிடுகிறது:** விகிதப் பகுப்பாய்வு, ஒரு வணிக நிறுவனத்தின் நீர்மைத் தன்மை அல்லது குறுகிய கால கடன் தீர்க்கும் திறன் மற்றும் நீண்டகால கடன் தீர்க்கும் திறனை அறிய உதவுகிறது.

(iii) **முதலீட்டு முடிவுகளுக்கு வழிவகை செய்கிறது:** விகிதப் பகுப்பாய்வு இலாபகரமான முதலீட்டு வழிவகைகள் தொடர்பான பயனுள்ள முடிவுகளை எடுப்பதற்கு நிர்வாகத்திற்கு உதவுகிறது.

(iv) **இலாபத்தன்மையை ஆய்வு செய்கிறது:** ஒரு வணிகத்தின் இலாபத்தன்மையை விற்பனை மற்றும் முதலீட்டை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்வதற்கு விகிதப் பகுப்பாய்வு உதவுகிறது.

(v) **நிறுவனத்திற்குள் ஒப்பீடு:** ஒரு நிறுவனத்தின் வெவ்வேறு பிரிவுகளின் செயல்திறன் ஒப்பீடு அவை தொடர்பான விகிதங்களை ஒப்பிடுவதன் மூலம் சாத்தியமாகிறது.

(vi) **நிறுவனங்களுக்குள் ஒப்பீடு:** ஒரு நிறுவனத்தின் செயல்பாட்டுத்திறனை பிற நிறுவனங்களுடன் ஒப்பிடுவதற்கு விகிதப் பகுப்பாய்வு உதவுகிறது.

9.8. விகிதப் பகுப்பாய்வின் குறைபாடுகள்

விகிதப் பகுப்பாய்வின் குறைபாடுகள் பின்வருமாறு:

(i) **விகிதங்கள் வழிமுறைகளை மட்டும் தருகின்றன:** விகிதங்களே முடிவல்ல. ஆனால், ஒரு குறிப்பிட்ட நோக்கத்தினை அடைவதற்கான வழிமுறைகளை மட்டும் அவை தருகின்றன. நிர்வாகத்தினர் அல்லது வல்லுநர்கள் விகிதங்கள் உதவியுடன் ஒரே தன்மையுடைய இனங்களை ஆய்வு செய்ய வேண்டும்.

(ii) **நிதித்தகவல்களின் துல்லியத்தன்மை:** விகிதங்களின் துல்லியத்தன்மை நிதிநிலை அறிக்கைகளிலிருந்து எடுக்கப்படும் நிதித்தகவல்களின் துல்லியத்தன்மையைப் பொறுத்து அமைகிறது. நிதிநிலை அறிக்கைகள் துல்லியமற்றதாக இருந்தால், அதனை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும் விகிதங்களும் துல்லியமற்றதாகி விடுகின்றன.

(iii) **நிதிநிலை அறிக்கைகள் தயாரிப்பதில் நிலைத்தன்மை:** நிறுவனங்கள் ஒருமித்த கணக்கியல் நடைமுறைகளை நிலையாகப் பின்பற்றும் போது மட்டும்தான் விகிதப் பகுப்பாய்வின் உதவியுடன் நிறுவனத்திற்குள் ஒப்பீடு செய்வது அர்த்தமுடையதாகிறது.

(iv) **தரநிர்ணயங்கள் அல்லது விதிமுறைகள் இல்லாமை:** விகிதங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிர்ணயங்கள் அல்லது விதிமுறைகளுடன் ஒப்பீடு செய்தால் மட்டுமே அர்த்தமுடையதாகிறது. சில நிதிசார் விகிதங்கள் மட்டும் உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட தரநிர்ணயங்களைக் கொண்டுள்ளன. பிற விகிதங்களை தர நிர்ணயங்களுடன் ஒப்பீடு செய்வதற்கு சாத்தியமில்லை.

(v) **விலை நிலையில் ஏற்படும் மாற்றம்:** நிதிநிலை அறிக்கைகளில் தரப்பட்டுள்ள புராதன தகவல்களின் அடிப்படையில் விகிதப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுவதால் விலை நிலையில் ஏற்படும் மாற்றம் மற்றும் தற்போதைய மதிப்பை இது பிரதிபலிப்பதில்லை.

12th-Accountancy-Unit-09.indd 317 12/9/2021 11:25:13 PM

நினைவில் கொள்ள வேண்டியவை

- கணக்கியல் விகிதம் என்பது நிதிநிலை அறிக்கைகளில் இடம் பெற்றுள்ள இரு இனங்கள் அல்லது அதற்கும் அதிகமான இனங்களுக்கு இடையே உள்ள தொடர்பினை கணிதவியல் முறையில் கூறுவது ஆகும்
- விகிதங்களை செயல்பாடுகளின் அடிப்படையில், நீர்மைத்தன்மை விகிதங்கள், நீண்டகால கடன் தீர்க்கும் திறன் விகிதங்கள், இலாபத்தன்மை விகிதங்கள் மற்றும் சுழற்சி விகிதங்கள் என்று வகைப்படுத்தலாம்.
- நீர்மைத்தன்மை விகிதங்கள், ஒரு வணிக நிறுவனத்தின் குறுகியகாலப் பொறுப்புகளை எதிர்கொள்ளும் செயல்திறனை நிர்ணயிக்க உதவுகின்றன.
- நீண்டகால கடன் தீர்க்கும் திறன் விகிதங்கள், ஒரு வணிக நிறுவனத்தின் நீண்டகாலக் கடன்களை திரும்பச் செலுத்தும் செயல்திறனை நிர்ணயிக்க உதவுகின்றன.
- இலாபத்தன்மை விகிதங்கள், ஒரு வணிக நிறுவனம் ஈட்டும் இலாபத்தன்மையைப் பகுப்பாய்வு செய்வதற்கு கணக்கிடப்படுகிறது மற்றும் இலாபத் தன்மை விகிதங்கள் பொதுவாக சதவிகிதத்தில் வெளிப்படுத்தப்படுகின்றன.
- சுழற்சி விகிதங்கள், விற்பனை மூலம் பெற்ற வருவாயை உருவாக்க சொத்துகள் அல்லது பிற இனங்கள் எவ்வாறு திறம்பட பயன்படுத்தப்படுகின்றன என்பதைக் காட்டுகின்றன.

சுய ஆய்வு வினாக்கள்

I சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. ஒரு இனம் மற்றொரு இனத்தோடு பெற்றிருக்கும் தொடர்பினை கணிதவியல் முறையில் கூறுவது

(அ) முடிவு (ஆ) விகிதம் (இ) மாதிரி (ஈ) தீர்மானம்

2. நடப்பு விகிதம் காட்டுவது

(அ) குறுகிய காலக் கடன் தீர்க்கும் திறன்

(ஆ) மேலாண்மை திறன்

(இ) இலாபம் ஈட்டும் திறன்

(ஈ) நீண்டகாலக் கடன் தீர்க்கும் திறன்

3. சரக்கிருப்பு மற்றும் முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் நீங்கலாக உள்ள நடப்புச் சொத்துகள் அழைக்கப்படுவது

(அ) காப்புகள் (ஆ) புலனாகும் சொத்துகள் (இ) நிதி (ஈ) விரைவு சொத்துகள்

4. புற அக பொறுப்புகள் அளவிடுவது

(அ) குறுகிய காலக் கடன் தீர்க்கும் திறன் (ஆ) நீண்டகாலக் கடன் தீர்க்கும் திறன்

(இ) இலாபம் ஈட்டும் திறன் (ஈ) செயல்திறன்

5. பட்டியல் ஒன்றை பட்டியல் இரண்டுடன் பொருத்தி கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

பட்டியல் I	பட்டியல் II
(i) நடப்பு விகிதம்	1. நீர்மைத் தன்மை
(ii) நிகர இலாப விகிதம்	2. செயல்திறன்
(iii) புற அக பொறுப்புகள் விகிதம்	3. நீண்டகால கடன் தீர்க்கும் திறன்
(iv) சரக்கிருப்பு சுழற்சி விகிதம்	4. இலாபத்தன்மை

12th-Accountancy-Unit-09.indd 318 12/9/2021 11:25:13 PM

குறியீடுகள்:

	(i)	(ii)	(iii)	(iv)
(அ)	1	4	3	2
(ஆ)	3	2	4	1
(இ)	4	3	2	1
(ஈ)	1	2	3	4

6. ஒரு நிறுமத்தின் நீர்மைத்தன்மையை சோதிக்க கீழ்க்கண்ட எந்த விகிதங்கள் பயன்படுகிறது?
(i) விரைவு விகிதம்
(ii) நிகர இலாப விகிதம்
(iii) புற அக பொறுப்புகள் விகிதம்
(iv) நடப்பு விகிதம்
கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.
(அ) (i) மற்றும் (ii) (ஆ) (i) மற்றும் (iv) (இ) (ii) மற்றும் (iii) (ஈ) (ii) மற்றும் (iv)

7. பங்குதாரர் நிதிக்கும் மொத்த சொத்துகளுக்கும் உள்ள விகிதாச்சாரம்
(அ) உரிமையாளர் விகிதம் (ஆ) முதல் உந்துதிறன் விகிதம்
(இ) புற அக பொறுப்பு விகிதம் (ஈ) நடப்பு விகிதம்

8. பின்வருவனவற்றில் சரியாகப் பொருந்தாதது எது?
(அ) நீர்மை விகிதம் – விகிதாச்சாரம்
(ஆ) மொத்த இலாப விகிதம் – சதவீதம்
(இ) நிலைச் சொத்துகள் சுழற்சி விகிதம் – சதவீதம்
(ஈ) புற அக பொறுப்புகள் விகிதம் – விகிதாச்சாரம்

9. நடப்புப் பொறுப்பு ₹ 40,000; நடப்புச் சொத்து ₹ 1,00,000; சரக்கிருப்பு ₹ 20,000 எனில் விரைவு விகிதம்
(அ) 1:1 (ஆ) 2.5:1 (இ) 2:1 (ஈ) 1:2

10. விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்க விலை ₹ 3,00,000; அவ்வாண்டின் தொடக்கச் சரக்கிருப்பு ₹ 60,000; அவ்வாண்டின் இறுதிச் சரக்கிருப்பு ₹ 40,000 எனில் சரக்கிருப்பு சுழற்சி விகிதம்
(அ) 2 மடங்கு (ஆ) 3 மடங்கு (இ) 6 மடங்கு (ஈ) 8 மடங்கு

விடைகள்

1 (ஆ)	2 (அ)	3 (ஈ)	4 (ஆ)	5 (அ)	6 (ஆ)	7 (அ)	8 (இ)	9 (இ)	10 (இ)

II மிகக் குறுகிய வினாக்கள்

1. கணக்கியல் விகிதங்கள் என்றால் என்ன?
2. விரைவு விகிதம் என்றால் என்ன?
3. புற அக பொறுப்பு விகிதம் என்றால் என்ன?
4. முதலீடுகள் மீதான வருவாய் விகிதம் எதைக் குறிப்பிடுகிறது?
5. விகித பகுப்பாய்வின் ஏதேனும் இரண்டு குறைபாடுகளைத் தரவும்.

III குறுகிய வினாக்கள்

1. விகித பகுப்பாய்வின் நோக்கங்களை விளக்கவும்.
2. சரக்கிருப்பு மாற்று காலம் என்றால் என்ன? இது எவ்வாறு கணக்கிடப்படுகிறது?
3. இயக்க இலாபம் எவ்வாறு கண்டறியப்படுகிறது?
4. விகித பகுப்பாய்வின் ஏதேனும் மூன்று நன்மைகள் தரவும்.
5. விகித பகுப்பாய்வின் குறைபாடுகளைத் தரவும்.

12th-Accountancy-Unit-09.indd 319 12/9/2021 11:25:13 PM

IV பயிற்சி வினாக்கள்

நீர்மை விகிதங்கள்

1. கீழ்க்கண்ட தகவல்களிலிருந்து நடப்பு விகிதத்தைக் கணக்கிடவும்.

விவரம்	₹	விவரம்	₹
குறுகிய கால முதலீடுகள்	40,000	நிலைச் சொத்துகள்	5,00,000
சரக்கிருப்பு	2,00,000	வணிகத்தின் கடனீந்தோர்	80,000
வணிகத்தின் கடனாளிகள்	1,20,000	செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு	50,000
பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுகள்	80,000	கொடுபட வேண்டிய செலவுகள்	20,000
ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்குச் சமமானவைகள்	10,000	நீண்டகால பொறுப்புகள்	3,00,000

(விடை: நடப்பு விகிதம்: 3:1)

2. கீழ்க்கண்ட தகவல்களிலிருந்து விரைவு விகிதத்தைக் கணக்கிடவும். மொத்த நடப்புப் பொறுப்புகள் ₹ 2,40,000; மொத்த நடப்புச் சொத்துகள் ₹ 4,50,000; சரக்கிருப்பு: ₹ 70,000; முன்கூட்டிச் செலுத்திய செலவுகள்: ₹20,000.

(விடை: விரைவு விகிதம்: 1.5:1)

3. இலக்குமி நிறுமத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

விவரம்	₹
I பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்	
1. பங்குதாரர் நிதி	
நேர்மைப் பங்குமுதல்	4,00,000
2. நீண்டகாலப் பொறுப்புகள்	
நீண்டகாலக் கடன்கள்	2,00,000
3. நடப்புப் பொறுப்புகள்	
(அ) குறுகிய காலக் கடன்கள்	50,000
(ஆ) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவை	3,10,000
(இ) இதர நடப்புப் பொறுப்புகள்	
கொடுபட வேண்டிய செலவுகள்	15,000
(ஈ) குறுகிய கால ஒதுக்குகள்	25,000
மொத்தம்	**10,00,000**
II சொத்துகள்	
1. நீண்ட காலச் சொத்துகள்	
(அ) நிலைச் சொத்துகள்	
புலனாகும் சொத்துகள்	4,00,000
2. நடப்புச் சொத்துகள்	
(அ) சரக்கிருப்பு	1,60,000
(ஆ) வணிகக் கடனாளிகள்	3,20,000
(இ) ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள்	80,000
(ஈ) இதர நடப்புச் சொத்துகள்	
முன்கூட்டிச் செலுத்திய செலவுகள்	40,000
மொத்தம்	**10,00,000**

(i) நடப்பு விகிதம் (ii) விரைவு விகிதம் கணக்கிடவும்

(விடை: (i) நடப்பு விகிதம் : 1.5:1; (ii) விரைவு விகிதம்: 1:1)

12th-Accountancy-Unit-09.indd 320 12/9/2021 11:25:14 PM

நீண்டகால கடன் தீர்க்கும் திறன் விகிதங்கள்

4. பின்வரும் தகவல்களிலிருந்து புற அக பொறுப்பு விகிதத்தினைக் கணக்கிடவும்.

2019, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு (வருவிய)

விவரம்	தொகை ₹
I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்	
1. **பங்குதாரர் நிதி**	
(அ) பங்கு முதல்	
நேர்மைப் பங்கு முதல்	6,00,000
(ஆ) காப்பு மற்றும் மிகுதி	2,00,000
2. **நீண்டகால பொறுப்புகள்**	
நீண்டகால கடன்கள் (கடனீட்டுப் பத்திரங்கள்)	6,00,000
3. **நடப்புப் பொறுப்புகள்**	
(அ) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள்	1,60,000
(ஆ) இதர நடப்புப் பொறுப்புகள்	
கொடுபட வேண்டிய செலவுகள்	40,000
மொத்தம்	**16,00,000**

(விடை: புற அக பொறுப்புகள் விகிதம்: 0.75:1)

5. சுந்தரம் நிறுமத்தின் பின்வரும் இருப்புநிலைக் குறிப்பிலிருந்து உரிமையாளர் விகிதத்தைக் கணக்கிடவும்:

சுந்தரம் நிறுமத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

விவரம்	தொகை ₹
I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்	
1. **பங்குதாரர் நிதி**	
(அ) பங்கு முதல்	
(i) நேர்மைப் பங்குமுதல்	2,50,000
(ii) முன்னுரிமைப் பங்குமுதல்	1,50,000
(ஆ) காப்புகள் மற்றும் மிகுதி	50,000
2. **நீண்டகாலப் பொறுப்புகள்**	
நீண்டகாலக் கடன்கள்	-
3. **நடப்புப் பொறுப்புகள்**	
கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள்	1,50,000
மொத்தம்	**6,00,000**
II. சொத்துகள்	
1. **நீண்டகாலச் சொத்துகள்**	
(அ) நிலைச் சொத்துகள்	4,60,000
(ஆ) நீண்ட கால முதலீடுகள்	1,00,000
2. **நடப்புச் சொத்துகள்**	
ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்குச் சமமானவைகள்	40,000
மொத்தம்	**6,00,000**

(விடை: உரிமையாளர் விகிதம்: 0.75:1)

12th-Accountancy-Unit-09.indd 321 12/9/2021 11:25:14 PM

6. பின்வரும் தகவல்களிலிருந்து முதல் உந்துதிறன் விகிதத்தைக் கணக்கிடவும்.

2018 மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு (வருவிய)

விவரம்	தொகை ₹
I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்	
1. **பங்குதாரர் நிதி**	
(அ) பங்கு முதல்	
நேர்மைப்பங்கு முதல்	4,00,000
5% முன்னுரிமைப்பங்கு முதல்	1,00,000
(ஆ) காப்புகள் மற்றும் மிகுதி	
பொதுக்காப்பு	2,50,000
மிகுதி	1,50,000
2. **நீண்டகாலப்பொறுப்புகள்**	
நீண்டகாலக்கடன்கள் (6% கடனீட்டுப்பத்திரங்கள்)	3,00,000
3. **நடப்புப்பொறுப்புகள்**	
கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள்	1,20,000
வரி ஒதுக்கு	30,000
மொத்தம்	**13,50,000**

(விடை: முதல் உந்துதிறன் விகிதம்: 0.5:1)

7. ஜேம்ஸ் நிறுமத்தின் பின்வரும் 31.03.2019 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பிலிருந்து கீழ்க்காணும் விகிதங்களைக் கணக்கிடவும்.

(i) புற அக பொறுப்புகள் விகிதம் (ii) உரிமையாளர் விகிதம் (iii) முதல் உந்துதிறன் விகிதம்

ஜேம்ஸ் நிறுமத்தின் 31.03.2019 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

விவரம்	தொகை ₹
I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்	
1. **பங்குதாரர் நிதி**	
(அ) பங்கு முதல்	
நேர்மைப் பங்குமுதல்	2,50,000
6% முன்னுரிமைப் பங்கு முதல்	2,00,000
(ஆ) காப்புகள் மற்றும் மிகுதி	1,50,000
2. **நீண்டகாலப் பொறுப்புகள்**	
நீண்டகாலக் கடன்கள் (8% கடனீட்டுப் பத்திரங்கள்)	3,00,000
3. **நடப்புப் பொறுப்புகள்**	
(அ) வங்கியிலிருந்து பெற்ற குறுகியகாலக் கடன்கள்	2,00,000
(ஆ) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள்	1,00,000
மொத்தம்	**12,00,000**
II. சொத்துகள்	
1. **நீண்டகாலச் சொத்துகள்**	
நிலைச் சொத்துகள்	8,00,000
2. **நடப்புச் சொத்துகள்**	
(அ) சரக்கிருப்பு	1,20,000
(ஆ) கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகள்	2,65,000
(இ) ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்குச் சமமானவைகள்	10,000
(ஈ) இதர நடப்புச் சொத்துகள்	
முன்கூட்டிச் செலுத்திய செலவுகள்	5,000
மொத்தம்	**12,00,000**

(விடை: (i) புற அக பொறுப்புகள் விகிதம்: 0.5:1; (ii) உரிமையாளர் விகிதம்: 0.5:1; (iii) முதல் உந்துதிறன் விகிதம்: 1.25:1)

12th-Accountancy-Unit-09.indd 322 12/9/2021 11:25:14 PM

சுழற்சி விகிதங்கள்

8. தேவி நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து சரக்கிருப்பு சுழற்சி விகிதம் மற்றும் சரக்கிருப்பு மாற்றுக் காலத்தையும் (மாதங்களில்) கணக்கிடவும்.

விவரம்	₹
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	12,00,000
அவ்வாண்டின் தொடக்கத்தில் சரக்கிருப்பு	1,70,000
அவ்வாண்டின் இறுதியில் சரக்கிருப்பு	1,30,000
அவ்வாண்டில் மேற்கொண்ட கொள்முதல்	6,90,000
உள் தூக்குக் கூலி	20,000

(விடை: சரக்கிருப்பு சுழற்சி விகிதம்: 5 மடங்கு; சரக்கிருப்பு மாற்றுக் காலம்: 2.4 மாதங்கள்)

9. வேலவன் நிறுமத்தின் கடன் விற்பனை மூலம் பெற்ற வருவாய் தொகை ₹ 10,00,000. கணக்காண்டின் இறுதியில் இந்நிறுமத்தின் கடனாளிகள் மற்றும் பெறுதற்குரிய மாற்றுச் சீட்டுத் தொகை முறையே ₹ 1,10,000 மற்றும் ₹ 1,40,000. கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் சுழற்சி விகிதத்தையும், கடன் வசூலிப்புக் காலத்தையும் (மாதங்களில்) கணக்கிடவும்.

(விடை: கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகளின் சுழற்சி விகிதம்: 4 மடங்கு;
கடன் வசூலிப்புக் காலம் : 3 மாதங்கள்)

10. அர்ஜுன் நிறுமத்திடமிருந்து பெறப்பட்ட பின்வரும் தகவல்களிலிருந்து, கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சுழற்சி விகிதம் மற்றும் சராசரி கடன் செலுத்தும் காலத்தையும் (நாட்களில்) கணக்கிடவும்.

விவரம்	₹	விவரம்	₹
2018 – 2019 ல் கடன் கொள்முதல்	9,50,000	1.4.2018 அன்று செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு	45,000
1.4.2018 அன்று வணிக கடனீந்தோர்	60,000	31.3.2019 அன்று செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு	35,000
31.3.2019 அன்று வணிக கடனீந்தோர்	50,000		

(விடை: கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சுழற்சி விகிதம்: 10 மடங்கு;
சராசரி கடன் செலுத்தும் காலம்: 36.5 நாட்கள்)

11. கீதா நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து, நிலைச் சொத்துகள் சுழற்சி விகிதத்தைக் கணக்கிடவும்.

(i) அவ்வாண்டில் விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் ₹ 55,00,000.

(ii) அவ்வாண்டின் இறுதியில் நிலைச் சொத்துகள் ₹ 5,00,000.

(விடை: நிலைச்சொத்துகள் சுழற்சி விகிதம்: 11 மடங்கு)

12. அருணா நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து (i) சரக்கிருப்பு சுழற்சி விகிதம் (ii) கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் சுழற்சி விகிதம் (iii) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சுழற்சி விகிதம் மற்றும் (iv) நிலைச்சொத்துகள் சுழற்சி விகிதம் கணக்கிடவும்.

விவரம்	2018, மார்ச் 31 ₹	2019, மார்ச் 31 ₹
சரக்கிருப்பு	3,60,000	4,40,000
கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகள்	7,40,000	6,60,000
கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள்	1,90,000	2,30,000
நிலைச் சொத்துகள்	6,00,000	8,00,000

கூடுதல் தகவல்கள்:

(i) அவ்வாண்டில் விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் ₹ 35,00,000

(ii) அவ்வாண்டில் கொள்முதல் ₹ 21,00,000

12th-Accountancy-Unit-09.indd 323 12/9/2021 11:25:14 PM

(iii) விற்பனையிலிருந்து பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை ₹16,00,000.
விற்பனை மற்றும் கொள்முதலை கடன் விற்பனை மற்றும் கடன் கொள்முதல் எனக் கொள்ளவும்.

(விடை: (i) சரக்கிருப்பு சுழற்சி விகிதம் : 4 மடங்கு; கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் சுழற்சி விகிதம் : 5 மடங்கு; (iii) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சுழற்சி விகிதம் : 10 மடங்கு; (iv) நிலைச்சொத்துகள் சுழற்சி விகிதம்: 5 மடங்கு)

இலாபத்தன்மை விகிதங்கள்

13. பின்வரும் தகவல்களிலிருந்து மொத்த இலாபவிகிதம் கணக்கிடவும். விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் ₹ 2,50,000, விற்பனையிலிருந்து பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை ₹ 2,10,000 மற்றும் கொள்முதல் ₹ 1,80,000.

(விடை: மொத்த இலாப விகிதம்: 16%**)**

14. பத்மா நிறுமத்தின் 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாப மற்றும் நட்ட அறிக்கை பின்வருமாறு. இயக்க அடக்கவிலை விகிதம் கணக்கிடவும்.

இலாப நட்ட அறிக்கை

விவரம்	குறிப்பு எண்.	தொகை ₹
I. விற்பனையிலிருந்து பெற்ற வருவாய்		15,00,000
II. இதர வருமானம்		40,000
III. மொத்த வருவாய் (I + II)		**15,40,000**
IV. செலவுகள்:		
கொள்முதல் செய்த சரக்குகள்		8,60,000
சரக்கிருப்பு மாற்றம்		40,000
பணியாளர் நலன்களுக்கான செலவுகள் (சம்பளம்)		1,60,000
இதர செலவுகள்	1	1,70,000
மொத்த செலவுகள்		12,30,000
V. வரிக்கு முன்னர் உள்ள இலாபம் (III – IV)		**3,10,000**

கணக்குகளுக்கான குறிப்புகள்

விவரம்	தொகை ₹
1. இதர செலவுகள்	
அலுவலக மற்றும் நிர்வாகச் செலவுகள்	50,000
விற்பனை மற்றும் பகிர்வுச் செலவுகள்	90,000
அறைகலன் விற்றதில் ஏற்பட்ட நட்டம்	30,000
	1,70,000

(விடை: இயக்க அடக்கவிலை விகிதம்: 80%)

15. பின்வரும் நிலைகளில் இயக்க இலாப விகிதம் கணக்கிடவும்.

நிலை 1: விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் ₹ 8,00,000, இயக்க இலாபம் ₹ 2,00,000.

நிலை 2: விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் ₹ 20,00,000, இயக்க அடக்கவிலை ₹ 14,00,000.

நிலை 3: விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் ₹ 10,00,000, மொத்த இலாபம் விற்பனையிலிருந்து பெற்ற வருவாயில் 25%, இயக்கச் செலவுகள் ₹ 1,00,000

(விடை: இயக்க இலாப விகிதம் : நிலை 1: 25%; நிலை 2: 30%; நிலை 3: 15%)

12th-Accountancy-Unit-09.indd 324 12/9/2021 11:25:14 PM

16. ஒரு வணிக நிறுவனத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து நிகர இலாப விகிதம் கணக்கிடவும்.

விவரம்	₹
விற்பனையிலிருந்து பெற்ற வருவாய்	9,60,000
விற்பனையிலிருந்து பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை	5,50,000
அலுவலக மற்றும் நிர்வாகச் செலவுகள்	1,45,000
விற்பனை மற்றும் பகிர்வுச் செலவுகள்	25,000

(விடை: நிகர இலாப விகிதம் : 25%)

17. டெரிக்ஸ்டன் நிறுமத்தின் பின்வரும் இலாப நட்ட அறிக்கையிலிருந்து
(i) மொத்த இலாப விகிதம் (ii) நிகர இலாப விகிதம் கணக்கிடவும்.

டெரிக்ஸ்டன் நிறுமத்தின் இலாப நட்ட அறிக்கை

விவரம்	₹
I. விற்பனையிலிருந்து பெற்ற வருவாய்	24,00,000
II. இதர வருமானம்:	
முதலீடுகளிலிருந்து பெற்ற வருமானம்	70,000
III. மொத்த வருவாய் (I+II)	**24,70,000**
IV. செலவுகள்:	
கொள்முதல் செய்த சரக்குகள்	18,80,000
சரக்கிருப்பு மாற்றம்	(–)80,000
பணியாளர் நலன்களுக்கான செலவுகள்	2,90,000
இதர செலவுகள்	1,10,000
வரி ஒதுக்கு	30,000
மொத்த செலவுகள்	22,30,000
V. **அவ்வாண்டின் இலாபம்**	**2,40,000**

(விடை(i) மொத்த இலாப விகிதம்: 25% (ii) நிகர இலாப விகிதம்: 10%)

18. ரொவினா நிறுமத்தின் பின்வரும் வியாபார நடவடிக்கைகளிலிருந்து (i) மொத்த இலாப விகிதம் (ii) நிகர இலாப விகிதம் (iii) இயக்க அடக்கவிலை விகிதம் (iv) இயக்க இலாப விகிதம் கணக்கிடவும்.

இலாப நட்ட அறிக்கை

விவரம்	₹
I. விற்பனையிலிருந்து பெற்ற வருவாய்	4,00,000
II. இதர வருமானம்:	
முதலீடுகளிலிருந்து பெற்ற வருமானம்	4,000
III. மொத்த வருவாய் (I+II)	4,04,000
IV. செலவுகள்:	
கொள்முதல் செய்த சரக்குகள்	2,10,000
சரக்கிருப்பு மாற்றம்	30,000
நிதிசார் செலவுகள்	24,000
இதர செலவுகள் (நிர்வாக மற்றும் விற்பனை)	60,000
மொத்தசெலவுகள்	3,24,000
V. **வரிக்கு முன்னர் உள்ள இலாபம் (III – IV)**	**80,000**

(விடை: (i) மொத்த இலாப விகிதம் 40% (ii) நிகர இலாப விகிதம் 20%
(iii) இயக்க அடக்கவிலை விகிதம் 75% (iv) இயக்க இலாப விகிதம் 25%)

12th-Accountancy-Unit-09.indd 325 12/9/2021 11:25:14 PM

19. அப்துல் நிறுமத்தின் 2019 மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு (வருவிய) பின்வருமாறு:

விவரம்	₹
I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்	
1. பங்குதாரர் நிதி	
(அ) பங்குமுதல்	2,00,000
(ஆ) காப்புகள் மற்றும் மிகுதி	50,000
2. நீண்டகால பொறுப்புகள்	
நீண்டகால கடன்கள்	1,50,000
3. நடப்புப் பொறுப்புகள்	
(அ) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள்	1,30,000
(ஆ) இதர நடப்புப் பொறுப்புகள்	5,000
(இ) குறுகிய கால ஒதுக்குகள்	20,000
மொத்தம்	**5,55,000**

அவ்வாண்டில் வட்டி மற்றும் வரிக்கு முன்னர் உள்ள நிகர இலாபம் ₹ 60,000.

அவ்வாண்டில் பயன்படுத்திய முதலிலிருந்து பெற்ற வருவாய் விகிதம் கணக்கிடவும்.

(விடை: பயன்படுத்திய முதலிலிருந்து பெற்ற வருவாய் விகிதம்: 15%)

நிகழ்வாய்வு

ஐந்து நண்பர்கள் ஒவ்வொருவரும் ₹ 50,000 முதலீடு செய்ய விரும்புகின்றனர். இருப்பினும், ஐவரும் தங்கள் முதலீட்டு முடிவுக்கு வெவ்வேறு அடிப்படைகளை வைத்திருக்கின்றனர். பாத்திமா அவருடைய முதலீட்டிலிருந்து அதிக வருவாய் பெறவேண்டும் என விரும்புகிறார். தேன்மொழி நன்றாக செயல்பட்டு வருகின்ற ஒரு நிறுமத்தில் முதலீடு செய்ய விரும்புகிறார். நிவேதா செலவுகளை தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் ஒரு நிறுமத்தில் முதலீடு செய்ய விரும்புகிறார். சுப்ரஜா நெறிமுறை தவறாத ஒரு முதலீட்டாளர். இவர் நிறுமத்திற்கு சரக்களித்தோர் அவர்களுக்கான தொகையை சரியான நேரத்திற்கு பெற வேண்டும் என்பதில் கவனமாக இருக்கிறார். திவ்யா நல்ல நிதி நீர்மைத்தன்மை நிலையில் உள்ள ஒரு நிறுவனத்தில் முதலீடு செய்ய விரும்புகிறார்.

அவர்கள் மூன்று வெவ்வேறு நிறுமங்களின் நிதிநிலை அறிக்கைகளை ஒப்பீடு செய்து விகிதங்கள் கணக்கிட விரும்புகின்றனர்.

ஒவ்வொருவருக்கும் அவர்களின் முதலீட்டு விருப்பத்திற்குப் பொருத்தமான விகிதங்களைப் பரிந்துரை செய்யவும்.

தொடர் ஆய்விற்கு

அதிக தகவல்களைப் பயன்படுத்தும் போது விகிதம் கணக்கிடுவது கடினமானதாகும். இதற்கு ஏதேனும் தீர்வு உள்ளதா?

Reference

1. M C Shukla, T S Grewal and S C Gupta, Advanced Accounts, Volume II 19th ed., 2017, S.Chand Publishing, New Delhi.
2. S.N. Maheswari, Mangement Accounting, 11th ed., 2014, Sultan Chand and Sons, New Delhi.
3. Dalston L Cecil and Jenitra L Merwin, Management Accounting, 3rd ed., 2017, Learntech Press, Trichy.
4. Accounting, Intermediate Course, 2017, The Institute of Chartered Accountants of India, New Delhi.

12th-Accountancy-Unit-09.indd 326 12/9/2021 11:25:14 PM

அலகு 10

கணினி கணக்கியல் முறை – Tally

பொருளடக்கம்

10.1 அறிமுகம்

10.2 கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடுகள்

10.3 தானியங்கும் கணக்கியல் முறை

10.4 கணக்கியல் அறிக்கைகளை வடிவமைத்தல்

10.5 பிற தகவல் அமைப்புடன் தரவு பரிமாற்றம்

10.6 கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடு – Tally with GST package

10.7 கணக்கியல் மென்பொருளின் நடைமுறைப் பயன்பாடு – Tally.ERP 9

நினைவு கூற வேண்டிய கருத்துகள்

கணினிமயக் கணக்கியல் முறை – Tally கற்பதற்கு முன் கீழ்க்கண்டவற்றை நினைவு கூற வேண்டும்:

- அடிப்படை கணக்கியல் கோட்பாடுகள்
- இரட்டைப் பதிவுமுறை
- அடிப்படை கணக்கியல் விதிகள்
- கணினிமயக் கணக்கியல் முறை
- குறிப்பேடு தயாரித்தல்
- துணை ஏடுகள்
- பேரேட்டில் எடுத்தெழுதுதல்
- இறுதிக் கணக்குகள்

கற்றல் நோக்கங்கள்

மாணவர்கள்

- தானியங்கும் கணக்கியல் முறையை புரிந்துகொள்ளுதல்
- Tally.ERP 9 ஐப் பயன்படுத்தி கணக்கேடுகளை பராமரித்தல் மற்றும் அறிக்கைகளை உருவாக்குதல்

தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய சொற்கள்



- Tally–ன் நுழைவாயில்
- கணக்கியல் குழுக்கள்
- கணக்கியல் பண்புகள்
- பெறுதல் சான்றாவணம்
- செலுத்தல் சான்றாவணம்
- எதிர்ப்பதிவு
- கொள்முதல் சான்றாவணம்
- விற்பனை சான்றாவணம்
- உரிய குறிப்பேடு

12th-Accountancy-Unit-10.indd 327 12/12/2021 8:52:01 PM

10.1 அறிமுகம்



மாணவர் செயல்பாடு 10.1

தானியங்கும் கணக்கியல் முறை எந்த அளவிற்கு கணக்கியல் ஏடுகளை பராமரிப்பதற்கு பயனுள்ளதாக உள்ளது என்பதை அறிய ஒரு பெரிய நிறுவனத்தின் கணக்காளரை நேர்காணல் செய்யவும்.

கணினிமயக் கணக்கியல் முறை என்பது கணினி மூலம் கணக்குகளைப் பராமரிக்கும் முறையை குறிக்கும். இது கணக்கேடுகளை பராமரிப்பதற்கும், கணக்கியல் அறிக்கைகள் தயாரிப்பதற்கும் கணக்கியல் நடவடிக்கைகளை கணினி உதவியுடன் செயல்முறைப் படுத்துவதாகும். கணினிமயக் கணக்கியல் முறை பல்வேறு அறிக்கைகள் உருவாக்கப்படுவதற்காக, கணக்கியல் நடவடிக்கைகளை உள்ளீடாக எடுத்துக்கொண்டு அவற்றை கணக்கியல் மென்பொருள் மூலம் செயலாக்கம் பெறச்செய்கிறது.

10.2 கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடுகள்

கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடுகள் பின்வருமாறு:

1. **கணக்கேடுகளைப் பராமரித்தல்:** கணினிமயக் கணக்கியல் முறையில் கணக்கேடுகளை எளிதாகவும் திறம்பட நீண்ட காலங்களுக்கு பராமரிக்கலாம். இதற்கு அதிகப் படியான இடவசதி தேவையில்லை. தரவு மற்றும் தகவல்களை விரைவாகவும் துல்லியமாகவும் எடுக்க இது வழிவகை செய்கிறது.
2. **சரக்கிருப்பு மேலாண்மை:** கணினிமயக் கணக்கியல் முறை திறம்பட்ட சரக்கிருப்பு மேலாண்மைக்கு வழிவகை செய்கிறது. வேகமாக நகரும், மெதுவாக நகரும் மற்றும் வழக்கொழிந்த சரக்கிருப்பை கண்டறியலாம். சரக்கிருப்பு, சரக்கிருப்பு அளவுகள் போன்றவற்றின் மேம்படுத்தப்பட்ட தகவல்களை உடனுக்குடன் எடுக்கலாம்.
3. **சம்பளப் பட்டியல் தயாரித்தல்:** சம்பளப் பட்டியலானது பணியாளர்களுக்கு கொடுக்கவேண்டிய தொகையினை கணக்கீடு செய்வதாகும். பணியாளர்களின் சம்பளமானது வேலை செய்த மணி நேரம் அல்லது நாட்கள் அல்லது உற்பத்தி அலகுகள் அடிப்படையில் கணக்கிடப்படலாம். கணினிமய கணக்கியல் முறை பணியாளர்களின் வருகையைப் பதிகிறது, சம்பளத் தொகையைக் கணக்கிடுகிறது, சேமநல நிதி மற்றும் வருமான வரி போன்ற பிடித்தங்களையும் செய்கிறது.
4. **அறிக்கை உருவாக்குதல்:** கணினிமயக் கணக்கியல் முறை பல்வேறு வழக்கமான மற்றும் குறிப்பிட்ட நோக்க அறிக்கைகள் உருவாக்குவதற்கு உதவி புரிகிறது.
5. **தரவு அனுப்புதல்/பெறுதல்:** கணக்கியல் தரவு மற்றும் தகவல்களை நிறுவனத்தின் உள்ளேயோ அல்லது நிறுவனத்திற்கு வெளியேவோ உள்ள வேறு ஒரு பயனரிடம் இருந்து அனுப்பலாம் அல்லது பெறலாம்.
6. **வரிவிதிப்பு:** கணினிமயக் கணக்கியல் முறை பல்வேறு வரிகளை கணக்கீடு செய்யவும் அதை பிடித்தம் செய்து அரசாங்க கணக்கில் செலுத்துவதற்கும் உதவி புரிகிறது.

10.3 தானியங்கும் கணக்கியல் முறை

தானியங்கும் கணக்கியல் என்பது கணக்கியல் மென்பொருள் உதவியுடன் கணக்கேடுகளை உடனடியாக பராமரிக்கும் அணுகுமுறையாகும். கையால் எழுதும் கணக்கியல் முறையில் வெவ்வேறு கணக்கேடுகளில் பதிவுகள் மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் கணக்கியல் மென்பொருள் தொகுப்புகள் ஒரு புலம் அல்லது ஒரு இடத்தில் கையால் பதிய அனுமதிக்கிறது. அந்த புலம் அல்லது இடத்தில் இருந்து மென்பொருளானது தானாகவே நடவடிக்கையை மென்பொருள் தொகுப்பில் உள்ள மற்ற அனைத்து உரிய ஏடுகளுக்கு தொடர்புப்படுத்துகிறது.

12th-Accountancy-Unit-10.indd 328 12/12/2021 8:52:01 PM

10.4 கணக்கியல் அறிக்கைகளை வடிவமைத்தல்

கணக்கியல் அறிக்கையானது ஒரு நிறுவனத்தின் கணக்கேடுகளில் இருந்து பெறப்பட்ட கணக்கியல் தகவல் தொகுப்பு ஆகும். கணக்கியல் அறிக்கைகளை வழக்கமான அறிக்கைகள் மற்றும் குறிப்பிட்ட நோக்க அறிக்கைகள் என வகைப்படுத்தலாம்.

வழக்கமான கணக்கியல் அறிக்கைகள்

(அ) நாளேடு/குறிப்பேடு (ஆ) பேரேடு

(இ) இருப்பாய்வு (ஈ) இலாப அறிக்கை

(உ) இருப்பு நிலைக் குறிப்பு (ஊ) ரொக்க ஓட்ட அறிக்கை

வழக்கமான கணக்கியல் அறிக்கைகள் தவிர பயனரின் தேவைக்கேற்ப தயாரிக்கப்படும் அறிக்கை குறிப்பிட்ட நோக்க அறிக்கை எனப்படும்.

கணக்கியல் அறிக்கைகளை வடிவமைத்தலின் படிநிலைகள் பின்வருமாறு:

1. அறிக்கை உருவாக்குவதின் நோக்கத்தை வரையறுக்கவும்
2. அறிக்கையின் கட்டமைப்பை குறிப்பிடவும்
3. தரவுத்தளத்துடன் தொடர்புகொண்டு ஏடுகளில் இருந்து தரவுகளை எடுக்க, மாற்றம் செய்ய, சேர்க்க அல்லது அழிக்க தரவுத்தள கேள்விகளை உருவாக்கவும்.

10.5 பிற தகவல் அமைப்புடன் தரவு பரிமாற்றம்

மேலாண்மை தகவல் அமைப்பு என்பது மேலாண்மையின் அனைத்து நிலைகளிலும் முடிவெடுப்பதற்கு தேவையான தகவலை அளிக்கும் ஒரு முறையாகும். உற்பத்தி தகவல் அமைப்பு, சந்தையிடுதல் தகவல் அமைப்பு, மனிதவள தகவல் அமைப்பு மற்றும் கணக்கியல் தகவல் அமைப்பு ஆகியவை இதில் அடங்கும். கணக்கியல் தகவல் அமைப்பு, நிதியியல் தரவுகளை சேகரித்து அதை செயலாக்கப்பெறச் செய்து பல்வேறு பயனர்களுக்கு தகவலாக அளிக்கிறது. தகவல் அளிப்பதற்கு, உற்பத்தி, சந்தையிடுதல், மற்றும் மனிதவளம் போன்ற தகவல் அமைப்புகளின் தரவு, கணக்கியல் தகவல் அமைப்பிற்கு தேவைப்படுகின்றது. அதுபோன்று, மற்ற தகவல் அமைப்புகள் தகவல் அளிப்பதற்கு கணக்கியல் தகவல் அமைப்பின் தரவு தேவைப்படுகின்றது. எனவே, தகவல் அமைப்புகளுக்கு இடையேயான தரவு பரிமாற்றம் தவிர்க்க முடியாதது. எடுத்துக்காட்டாக, செலுத்த வேண்டிய கூலி தொகையை கணக்கிட, கணக்கியல் தகவல் அமைப்பிற்கு, உற்பத்தி தகவல் அமைப்பு மற்றும் மனிதவள தகவல் அமைப்பிலிருந்து தரவு தேவைப்படுகின்றது.

10.6 கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடு – Tally with GST package

Tally, மிகவும் பரவலாக பயன்படுத்தும் நிதியியல் கணக்கியல் மென்பொருள்களில் ஒன்றாகும். இது பல்வேறு வகையான வியாபார மற்றும் தொழில் நிறுவனங்களால் பயன்படுத்தப்படுகிறது. இது பலமொழி செயல்பாடு, நிகழ்நிலை செயற்கூறுகள், சட்டரீதியாக ஏற்புடைய அறிக்கைகள் போன்ற பல்வேறு வசதிகளுடனான விரிவான வணிக கணக்கியல் மற்றும் சரக்கிருப்பு மேலாண்மை மென்பொருள் ஆகும்.

2009–ம் ஆண்டு Tally Solutions, Tally.ERP 9 எனும் மென்பொருளை அறிமுகம் செய்தது. இந்த மென்பொருள் விரிவான வணிக மேலாண்மைக்கு தீர்வு அளிக்கிறது. இது அனைத்து கணக்கேடுகளையும் பராமரிக்கும். பெறுதல், செலுத்தல், விற்பனை, கொள்முதல் போன்ற பல்வேறுவகையான சான்றாவணங்களை பயன்படுத்தி நடவடிக்கைகளை பதிவு செய்யலாம். இது இரட்டைப்பதிவு முறையில் கணக்கேடுகளை பராமரிக்கிறது. 2017–ம் ஆண்டு, இந்திய சரக்கு மற்றும் சேவை வரிக்கு தேவைக்கு ஏற்ப இது மேம்படுத்தப்பட்டது.

10.7 கணக்கியல் மென்பொருளின் நடைமுறைப் பயன்பாடு – Tally.ERP 9

கணக்கியல் மென்பொருளில் செய்முறைப் பயிற்சி – Tally

1. Starting Tally (Tally–ஐ துவங்க)

பின்வரும் ஏதேனும் ஒரு வழியில் Tally–ஐ துவங்கலாம்

12th-Accountancy-Unit-10.indd 329 12/12/2021 8:52:02 PM

Click on Start > All Programs > Tally.ERP 9 > Tally.ERP 9 icon

(or)

Click on Tally.ERP 9 icon (shortcut) on the desktop

புதியதாக நிறுவிய Tally யைத் திறந்தவுடன், படம் 10.1–ல் உள்ளவாறு திரை தோன்றும்.



படம் 10.1 புதியதாக நிறுவிய Tally திரை

Tally யைத் துவங்கியவுடன், உபயோகிக்கும் முறையை விருப்பங்கள் வரிசையிலிருந்து தெரிவு செய்யவும். அங்கீகரிக்கப்பட்ட எண் இருந்தால், 'Activate Your License' தெரிவு செய்யவும் இல்லையெனில் 'Work in Education Mode' தெரிவு செய்யவும்.



Tally.ERP 9 Work in Education Mode முறையில் உபயோகப்படுத்தலாம். ஆனால், 1, 2 மற்றும் 31 ஆகிய தேதிகளை மட்டுமே நடவடிக்கைகளைப் பதிவு செய்ய பயன்படுத்தமுடியும்.

செய்முறை பயிற்சிக்காக 'Work in Education Mode' தெரிவு செய்யப்பட்டுள்ளது. தெரிவு செய்தபின், படம் 10.2–ல் உள்ளவாறு திரை தோன்றும்.

2. கம்பெனி உருவாக்குதல் (Creation of a company)

கணக்குகளை பராமரிக்கவேண்டிய நிறுவனத்தின் விவரங்களை Tally–ல் தருவது அத்தியாவசியமானது. கம்பெனி உருவாக்குவதற்கு கீழ்க்கண்ட படிகளை பின்பற்ற வேண்டும்:

Company Info > Create Company

கம்பெனி உருவாக்கு (Create Company) என்று Tally–ன் முதல் திரையில் தெரிவு செய்தபின், கம்பெனி உருவாக்கு திரை, படம் 10.3–ல் உள்ளவாறு திரை தோன்றும்.

பெயர், முகவரி, ஏடுகள் மற்றும் நிதியாண்டு விவரங்கள், பாதுகாப்பு கட்டுப்பாடு, அடிப்படை நாணய தகவல் மற்றும் பலவற்றை Tally கேட்கும். தற்பொழுது, Tally–க்கு தேவையான நிறுவனத்தின் அனைத்து விவரங்களையும் அளிக்கவும். அனைத்து பதிவுகளையும் முடித்த பின் தரவுகளை ஏற்று நிறுவனத்தை உருவாக்குவதற்கு 'Yes' என தெரிவு செய்யவும்.

12th-Accountancy-Unit-10.indd 330 12/12/2021 8:52:02 PM



படம் 10.2 Tally–ன் முதல் திரை



படம் 10.3 கம்பெனி உருவாக்கு திரை

மாணவர் குறிப்பு

செய்முறை பயிற்சிக்காக பெயர் மட்டும் பதிவு செய்து மற்ற அனைத்தையும் அதில் உள்ளவாரே இருக்கும்படி செய்யவும்.

மேற்கண்ட வழிமுறையைப் பின்பற்றி பல நிறுவனங்களை உருவாக்கலாம்.

12th-Accountancy-Unit-10.indd 331 12/12/2021 8:52:02 PM

3. டேலியின் நுழைவாயில் (Gateway of Tally)

ஒரு புதிய நிறுவனத்தை உருவாக்கிய பின்பும் ஒவ்வொரு முறை Tally–ஐ துவக்கும் போதும் Tally யின் திரை, படம் 10.4–ல் உள்ளவாறு தோன்றும். இந்தத் திரையே டேலியின் நுழைவாயில் (Gateway of Tally) என அழைக்கப்படுகிறது. இது தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் கீழ் தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்தை இடது பலகத்தில் காண்பிக்கும்.

டேலியின் நுழைவாயில், நடவடிக்கைகள் மற்றும் அறிக்கைகள் போன்ற பட்டியல் விருப்பங்களுடன் வலது பலகத்தில் காண்பிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு பட்டியல் விருப்பத்தின் குறுக்குவழி விசையானது அதன் பெயரில் சிவப்பு மையினால் முன்னிலைப்படுத்தப்பட்டிருக்கும் ஒரு எழுத்து ஆகும்.

Tally.ERP 9–உடன் எளிதாக தொடர்பு கொள்வதற்காக F1 மற்றும் F2 போன்ற பொத்தான்கள் அடங்கிய செங்குத்து பொத்தான் பட்டையானது திரையின் வலதுபுற கடைசியில் வைக்கப்பட்டிருக்கும்.

கீழே உள்ள கிடைமட்ட தகவல் பலகத்தில் தயாரிப்பு, பதிப்பு, உரிமம், கட்டமைப்பு மற்றும் கணிப்பான் போன்றவற்றின் விவரங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும்.

டேலியின் நுழைவாயில் (Gateway of Tally) கீழுள்ளவாறு தோன்றும்:



படம் 10.4 Tally–யின் நுழைவாயில்

4. Tally–ல் இருந்து வெளியேறுதல் (Closing Tally)

கீழ்க்கண்ட இரண்டு வழிகளில் Tally–ல் இருந்து வெளியேறலாம்

Press Esc Key > Press Enter or Y or Click on Yes

(or)

Press Ctrl + Q

5. நிறுவனத்தைத் தெரிவு செய்தல் (Select a company)

பல நிறுவனங்களை உருவாக்கியிருப்பின் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தைத் தெரிவு செய்ய, Tally–ஐ திறந்தவுடன் செங்குத்து பொத்தான் பட்டியிலிருந்து F1–ஐ (Select Cmp) சொடுக்கவும். Tally.ERP 9 நிறுவனத்தை தெரிவு செய் (Select Company) எனும் திரையை ஏற்கனவே உருவாக்கப்பட்ட நிறுவனங்களின் பட்டியலுடன் காண்பிக்கும். கணக்குகள் பராமரிக்கப்படவேண்டிய அந்த நிறுவனத்தை தெரிவு செய்யவும்.

12th-Accountancy-Unit-10.indd 332 12/12/2021 8:52:02 PM

6. நிறுவனத்தின் பண்புகூறுகள் (Company features)

நிறுவனங்களை உருவாக்கிய பின் Tally.ERP 9–ன் பண்புகூறுகளை அமைவு செய்வது அவசியம். Tally. ERP 9–ல் பண்புகூறுகளானது பயனரின் தேவைக்கு ஏற்ப நிதியியல் ஏடுகளை பராமரிக்க ஏதுவான விருப்பத் தேர்வுகளாக வழங்கப்பட்ட திறன்களின் தொகுப்பு ஆகும். நிறுவனத்தின் பண்புகூறுகள் பட்டியலுக்கு செல்வதற்கு செங்குத்து பொத்தான் பட்டையிலிருந்து F11: Features–ஐ சொடுக்கவும். கணக்கியல் பண்புகூறுகள், சரக்கு விவர பண்புகூறுகள் போன்றவைகளை இது கொண்டுள்ளது. படம் 10.5–ல் காண்பித்துள்ளவாறு நிறுவனத்தின் பண்புகூறுகள் திரை தோன்றும்.



படம் 10.5 நிறுவனத்தின் பண்புகூறுகள் திரை

7. கணக்கியல் பண்புகூறுகள் (Accounting features)

'Maintain accounts only', 'Integrate accounts and inventory' and 'use Income and Expenses A/c instead of Profit and Loss A/c' ஆகியவை பொதுவான கணக்கியல் பண்புகூறுகளில் அடங்கும். மற்ற பிற கணக்கியல் பண்புகூறுகளில் Invoicing, Banking Features போன்றவை அடங்கும்.

செய்முறை பயிற்சிக்கு, கணக்கியல் பண்புகூறுகள் மட்டும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. சரக்கு விவர பண்புகூறுகள் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

நிறுவனத்தின் பண்புகூறுகள் பட்டியிலிருந்து கணக்கியல் பண்புகூறுகள் தெரிவு செய்யவும். பொதுவான கணக்கியல் பண்புகூறுகளின் கீழே 'Maintain accounts only' என்பதற்கு 'ஆம்' (Yes) எனும் விருப்பத்தை தெரிவு செய்யவும். மற்ற அனைத்து பண்புகூறுகளில் மாற்றம் செய்யாமல் 'ஆம்' (Yes) என ஏற்கவும்.

படம் 10.6–ல் காண்பித்துள்ளவாறு கணக்கியல் பண்புகூறுகள் திரை தோன்றும். (அடுத்தப்பக்கம் பார்க்கவும்)

8. சட்டம் மற்றும் வரிவிதிப்பு பண்புகூறுகள் (Statutory and Taxation features)

சட்டம் மற்றும் வரிவிதிப்பு பண்புகூறுகளில் சரக்கு மற்றும் சேவை வரி (GST) மதிப்பு கூட்டப்பட்ட வரி (VAT) மற்றும் வருமான மூலத்திலிருந்து வருமானவரி பிடித்தம் (TDS) ஆகியவை அடங்கும். சரக்கு மற்றும் சேவை வரியை செயல்படுத்த 'Enable Goods and Services Tax' என்பதற்கு 'ஆம்' (Yes) எனும் விருப்பத்தை தெரிவு செய்யவும். செய்முறை பயிற்சிக்காக 'இல்லை' (No) எனும் விருப்பத்தை தெரிவு செய்யவும்.

12th-Accountancy-Unit-10.indd 333 12/12/2021 8:52:02 PM



படம் 10.6 கணக்கின் பண்புகூறுகள் திரை

9. கணக்கியல் குழுக்களை உருவாக்குதல் (Creating Accounting Groups)

Tally–ல் குழு என்பது ஒரே பண்புகளைக்கொண்ட பேரேடுகளின் தொகுப்பு ஆகும். முன்பே உருவாக்கப்பட்ட கணக்கியல் குழுக்கள் உள்ளன. பல நிறுவனங்கள் அவைகளையே கணக்கியலில் பரவலாக பயன்படுத்துகின்றன. இந்த முன்பே வரையறுக்கப்பட்ட கணக்கியல் குழுக்கள் சொத்துகள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவினங்கள் என கணக்குகளை வகைப்படுத்தும் அடிப்படை கணக்கியல் கொள்கையுடன் ஒத்துப்போகின்றன. அவைகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன:

	List of Groups
1	Bank Accounts
2	Bank OCC A/c
3	Bank OD A/c
4	Branch / Divisions
5	Capital Account
6	Cash-in-Hand
7	Current Assets
8	Current Liabilities
9	Deposits (Assets)
10	Direct Expenses
11	Direct Incomes
12	Duties & Taxes
13	Expenses (Direct)
14	Expenses (Indirect)
15	Fixed Assets
16	Income (Direct)
17	Income (Indirect)

	List of Groups
18	Indirect Expenses
19	Indirect Incomes
20	Investments
21	Loans & Advances (Asset)
22	Loans (Liability)
23	Misc.Expenses (ASSET)
24	Provisions
25	Purchase Accounts
26	Reserves & Surplus
27	Retained Earnings
28	Sales Accounts
29	Secured Loans
30	Stock-in-Hand
31	Sundry Creditors
32	Sundry Debtors
33	Suspense A/c
34	Unsecured Loans

குழுக்களை முதன்மை குழுக்கள் மற்றும் துணை குழுக்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. முதல் கணக்கு, நடப்புப் பொறுப்புகள், நிலைச் சொத்துகள், நடப்புச் சொத்துகள் போன்றவை முதன்மை குழுக்களில் அடங்கும். காப்பு மற்றும் மிகுதி, பற்பல கடனீந்தோர், பற்பல கடனாளிகள் போன்றவை துணை குழுக்களில் அடங்கும்.

12th-Accountancy-Unit-10.indd 334 12/12/2021 8:52:02 PM

முன்பே வரையறுக்கப்பட்ட குழுக்களை பார்வையிட,

Gateway of Tally > Masters > Accounts Info > Groups > Single Group > Display

தெரிவு செய்தபின் Tally–யின் திரை படம் 10.7–ல் உள்ளவாறு தோன்றும்.



படம் 10.7 குழுக்களின் பட்டியல்

கூடுதலான குழுக்கள் தேவைப்பட்டால் அதனை பின்வருமாறு உருவாக்கலாம்:

Gateway of Tally > Masters > Accounts Info > Groups > Single Group > Create

10. பேரேட்டு கணக்குகள் (Ledger Accounts)

Tally–ல் நடவடிக்கைகளை பதிவு செய்வதற்கு நடவடிக்கைகளை தொடர்புடைய பேரேட்டு கணக்குடன் அடையாளம் காணவேண்டும். முன்பே வரையறுக்கப்பட்ட ரொக்கம் மற்றும் இலாப நட்டக் க/கு ஆகிய இரண்டு பேரேடுகளை Tally கொண்டுள்ளது. மற்ற பேரேடுகளை அவற்றின் தேவைக்கேற்ப பயனர் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

பேரேடு உருவாக்குவதற்கு:

Gateway of Tally > Masters > Accounts Info > Ledgers > Single Ledger > Create

தெரிவு செய்தபின் படம் 10.8–ல் உள்ளவாறு Tally–யின் திரை தோன்றும்.

பேரேடு உருவாக்கும்போது பெயர் மற்றும் பேரேட்டு கணக்கு எந்த குழுவின் கீழ் வகைப்படுத்த வேண்டும் என்பதை அளிக்க வேண்டும். மற்ற அனைத்து பண்புகூறுகளில் மாற்றம் செய்யாமல் 'ஆம்' (Yes) என ஏற்கவும்.

11. குழு மற்றும் பேரேடு மாற்றம் செய்தல் (Modification of group and ledger)

குழு மற்றும் பேரேட்டை மாற்றம் அல்லது நீக்கம் செய்யலாம். பயனர் உருவாக்கிய குழு/பேரேட்டை முழுமையாக மாற்றம் செய்யலாம். ஆனால், முன்பே வரையறுக்கப்பட்ட குழு/பேரேட்டுப் பெயர் மாற்றம் மட்டுமே செய்யலாம். முன்பே வரையறுக்கப்பட்ட குழு/பேரேட்டை நீக்க முடியாது. ஆயினும் பயனர் உருவாக்கிய குழு/பேரேட்டை நீக்க முடியும்.

பேரேட்டை நீக்க: Gateway of Tally > Masters > Accounts Info > Ledgers > Single Ledger > Alter > Select the Ledger to be deleted > Alt D > Yes

12th-Accountancy-Unit-10.indd 335 12/12/2021 8:52:02 PM



படம் 10.8 பேரேடு உருவாக்குதல்

12. சான்றாவணங்கள் (Vouchers)

நடவடிக்கைகளின் விவரங்களை கொண்டுள்ள ஒரு ஆவணமே சான்றாவணம் ஆகும். நடவடிக்கைகள் சான்றாவணப் பதிவுகள் மூலமே பதியப்படவேண்டும். முன்பே வரையறுக்கப்பட்ட கொள்முதல், விற்பனை, செலுத்தல், பெறுதல் மற்றும் எதிர்ப்பதிவு போன்ற சான்றாவணங்களை Tally கொண்டுள்ளது.

சான்றாவண வகைகளைப் பார்வையிட:

Gateway of Tally > Masters > Accounts Info > Voucher Types > Display

பயனரின் தேவைக்கேற்ப கூடுதல் சான்றாவண வகைகளை உருவாக்கலாம்.

பின்வரும் முக்கிய கணக்கியல் சான்றாவணங்கள் நிறுவனங்களில் பயன்படுத்தப்படுகின்றன:

(i) பெறுதல் சான்றாவணம்/வரவு குறிப்பு (Receipt Voucher)
(ii) செலுத்தல் சான்றாவணம்/செலுத்தல் (Payment Voucher)
(iii) எதிர்ப்பதிவு சான்றாவணம்/கான்ட்ரா (Contra Voucher)
(iv) கொள்முதல் சான்றாவணம்/ கொள்முதல் (Purchase Voucher)
(v) விற்பனை சான்றாவணம்/ விற்பனை (Sales Voucher)
(vi) உரிய குறிப்பேடு சான்றாவணம்/ஜர்னல் (Journal Voucher)

(i) பெறுதல் சான்றாவணம் (Receipt Voucher)

அனைத்து ரொக்கம் அல்லது வங்கியின் மூலமான பெறுதல் நடவடிக்கைகள் பெறுதல் சான்றாவணத்தைப் பயன்படுத்தி பதியப்படுகிறது. இந்த சான்றாவணத்தில் ரொக்கம் அல்லது வங்கி கணக்கு பற்று வைக்கப்பட்டு பிற பேரேட்டுக் கணக்கு வரவு வைக்கப்படும்.

பெறுதல் பதிவதற்கு:

Gateway of Tally > Transactions > Accounting Vouchers > F6:Receipt

(ii) செலுத்தல் சான்றாவணம் (Payment Voucher)

அனைத்து ரொக்கம் அல்லது வங்கியின் மூலமான செலுத்தல் நடவடிக்கைகள் செலுத்தல் சான்றாவணத்தைப் பயன்படுத்தி பதியப்படுகிறது. இந்த சான்றாவணத்தில் ரொக்கம் அல்லது வங்கி கணக்கு வரவு வைக்கப்பட்டு பிற பேரேட்டுக் கணக்கு பற்று வைக்கப்படும்.

12th-Accountancy-Unit-10.indd 336 12/12/2021 8:52:03 PM

செலுத்தல் பதிவதற்கு:

Gateway of Tally > Transactions > Accounting Vouchers > F5:Payment

(iii) எதிர்ப்பதிவு சான்றாவணம் (Contra Voucher)

ரொக்க கணக்கு மற்றும் வங்கி கணக்கு ஆகிய இரண்டும் உள்ளடங்கிய நடவடிக்கைகள் எதிர்ப்பதிவு சான்றாவணம் கொண்டு பதியப்படுகிறது. இந்த நடவடிக்கை ரொக்கம் வங்கி கணக்கில் வைப்பு செய்வதற்காகவோ அல்லது வங்கி கணக்கிலிருந்து ரொக்கம் எடுப்பதற்காகவோ இருக்கலாம்.

எதிர்ப்பதிவு பதிவதற்கு:

Gateway of Tally > Transactions > Accounting Vouchers > F4:Contra

(iv) கொள்முதல் சான்றாவணம் (Purchase Voucher)

கொள்முதல் சான்றாவணம் ரொக்க மற்றும் கடன் சரக்கு கொள்முதல் பதிவதற்கு பயன்படுத்தப்படுகிறது.

கொள்முதல் பதிவதற்கு:

Gateway of Tally > Transactions > Accounting Vouchers > F9:Purchase

(v) விற்பனை சான்றாவணம் (Sales Voucher)

விற்பனை சான்றாவணம் ரொக்க மற்றும் கடன் சரக்கு விற்பனை பதிவதற்கு பயன்படுத்தப்படுகிறது.

விற்பனை பதிவதற்கு:

Gateway of Tally > Transactions > Accounting Vouchers > F8:Sales

(vi) உரிய குறிப்பேடு சான்றாவணம் (Journal Voucher)

ரொக்கம், வங்கி, கொள்முதல், மற்றும் விற்பனை தவிர பிற நடவடிக்கைகளான தேய்மானம், வாராக்கடன் ஒதுக்கு போன்றவைகளை பதிவு செய்வதற்கு உரிய குறிப்பேடு சான்றாவணம் பயன்படுத்தப்படுகிறது.

ஜர்னல் பதிவதற்கு:

Gateway of Tally > Transactions > Accounting Vouchers > F7:Journal

சான்றாவணங்களைக் கொண்டு நடவடிக்கைகளை பதிவு செய்வதற்கு கணக்கியல் சான்றாவணம் உருவாக்குதலைப் பயன்படுத்த வேண்டும். கணக்கியல் சான்றாவணம் உருவாக்குதல் பெயர் மற்றும் சான்றாவண எண், சான்றாவண நாள், விவரம், பற்று மற்றும் வரவு மற்றும் விளக்கக் குறிப்பு ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கும்.

செய்முறை 1

பின்வரும் நடவடிக்கைகளை Tally–ல் பதிவு செய்யவும்.

(i) ராபர்ட் ₹ 1,00,000 முதலுடன் போக்குவரத்து தொழில் துவங்கினார்.
(ii) பாரத ஸ்டேட் வங்கியில் கணக்கு துவங்கப்பட்டு ₹ 30,000 வைப்பு வைக்கப்பட்டது.
(iii) ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது ₹ 10,000
(iv) மொகைதீனிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ₹ 20,000
(v) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹ 8,000
(vi) ரத்தினத்திடமிருந்து சரக்கு வாங்கி பணம் வைப்பு இயந்திரம் மூலம் செலுத்திய தொகை ₹ 5,000
(vii) ரோனிக்கு கடனுக்கு சரக்கு விற்கப்பட்டது ₹ 60,000
(viii) அலுவலகப் பயனுக்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது ₹ 9,000
(ix) மொகைதீனுக்கு காசோலை மூலம் பகுதி தொகை செலுத்தியது ₹ 10,000
(x) ரோனி பகுதி தொகையை ரொக்கமாக செலுத்தியது ₹ 5,000
(xi) பணியாளர்களுக்கு மின்னனு பரிவர்த்தனை மூலம் செலுத்திய சம்பளம் ₹ 6,000
(xii) ரொக்கமாக கூலி செலுத்தியது ₹ 3,000
(xiii) பாண்டியன் வரையறு நிறுமத்திடமிருந்து எழுதுபொருள் கடனுக்கு வாங்கியது ₹ 4,000

12th-Accountancy-Unit-10.indd 337 12/12/2021 8:52:03 PM

தீர்வு

நடவடிக்கைகளை பகுப்பாய்வு செய்தல், குறிப்பேட்டில் பதிவு செய்தல், சான்றாவணம் மற்றும் குழு வகையினை கண்டறிதல்:

Sl. No.	Particulars		Debit ₹	Credit ₹	Voucher type	Group
1	Cash A/c	Dr.	1,00,000		Receipt Voucher	Cash-in-Hand
	To Robert's Capital A/c			1,00,000		Capital Account
2	State Bank of India A/c	Dr.	30,000		Contra Voucher	Bank Accounts
	To Cash A/c			30,000		Cash-in-Hand
3	Furniture A/c	Dr.	10,000		Payment Voucher	Fixed Assets
	To Cash A/c			10,000		Cash-in-Hand
4	Purchases A/c	Dr.	20,000		Purchase Voucher	Purchase Accounts
	To Mohaideen A/c			20,000		Sundry Creditors
5	Cash A/c	Dr.	8,000		Sales Voucher	Cash-in-Hand
	To Sales A/c			8,000		Sales Accounts
6	Purchases A/c	Dr.	5,000		Purchase Voucher	Purchase Accounts
	To Cash A/c			5,000		Cash-in-Hand
7	Rony A/c	Dr.	60,000		Sales Voucher	Sundry Debtors
	To Sales A/c			60,000		Sales Accounts
8	Cash A/c	Dr.	9,000		Contra Voucher	Cash-in-Hand
	To Bank A/c			9,000		Bank Accounts
9	Mohaideen A/c	Dr.	10,000		Payment Voucher	Sundry Creditors
	To Bank A/c			10,000		Bank Accounts
10	Cash A/c	Dr.	5,000		Receipt Voucher	Cash-in-Hand
	To Rony A/c			5,000		Sundry Debtors
11	Salaries A/c	Dr.	6,000		Payment Voucher	Indirect Expenses
	To Bank A/c			6,000		Bank Accounts
12	Wages A/c	Dr.	3,000		Payment Voucher	Direct Expenses
	To Cash A/c			3,000		Cash-in-Hand
13	Stationery A/c	Dr.	4,000		Journal Voucher	Indirect Expenses
	To Pandian Ltd. A/c			4,000		Sundry Creditors

Tally.ERP 9–ல் நடவடிக்கைகளை பதிவு செய்வதற்கு, கீழ்க்காணும் படி நிலைகளை பின்பற்ற வேண்டும்.

12th-Accountancy-Unit-10.indd 338 12/12/2021 8:52:03 PM

1. நிறுவனத்தை உருவாக்குவதற்கு

Company Info > Create Company

Robert என்று பெயரிட்டு, மீதமுள்ள விவரங்களை அப்படியே வைத்துக்கொண்டு 'Yes' தெரிவு செய்யவும்.



படம் 10.9 நிறுவனத்தை உருவாக்குதல்

2. கணக்குகளை மட்டும் பராமரிக்க

Gateway of Tally > F11 Accounting Features > General > Maintain accounts only: Yes > Accept Yes



படம் 10.10 கணக்கின் பண்புகூறுகள்

12th-Accountancy-Unit-10.indd 339 12/12/2021 8:52:03 PM

3. பேரேட்டு கணக்குகளை உருவாக்குவதற்கு

Gateway of Tally > Masters > Accounts Info > Ledgers > Single Ledger > Create



படம் 10.11 பேரேடு உருவாக்குதல்

(i) ராபர்ட் முதல் க/கு உருவாக்குவதற்கு

Name (பெயர்): Robert's Capital A/c

Under (கீழ்வருபவை): Capital Account

Accept (ஏற்க): Yes (ஆம்)



படம் 10.12 முதல் க/கு உருவாக்குதல்

(ii) பாரத ஸ்டேட் வங்கி க/கு உருவாக்குவதற்கு

Name: State Bank of India A/c

Under: Bank Accounts

Accept: Yes



படம் 10.13 பாரத ஸ்டேட் வங்கி க/கு உருவாக்குதல்

12th-Accountancy-Unit-10.indd 340 12/12/2021 8:52:03 PM

(iii) அறைகலன் க/கு உருவாக்குவதற்கு

Name: Furniture A/c
Under: Fixed Assets
Accept: Yes



படம் 10.14 அறைகலன் க/கு உருவாக்குதல்

(iv) கொள்முதல் க/கு உருவாக்குவதற்கு

Name: Purchases A/c
Under: Purchase
Accept: Yes



படம் 10.15 கொள்முதல் க/கு உருவாக்குதல்

(v) மொகைதீன் க/கு உருவாக்குவதற்கு

Name: Mohaideen A/c
Under: Sundry Creditors
Accept: Yes



படம் 10.16 மொகைதீன் க/கு உருவாக்குதல்

(vi) விற்பனை க/கு உருவாக்குவதற்கு

Name: Sales A/c
Under: Sales Accounts
Accept: Yes



படம் 10.17 விற்பனை க/கு உருவாக்குதல்

12th-Accountancy-Unit-10.indd 341 12/12/2021 8:52:03 PM

(vii) ரோனி க/கு உருவாக்குவதற்கு

Name: Rony A/c
Under: Sundry Debtors
Accept: Yes



படம் 10.18 ரோனி க/கு உருவாக்குதல்

(viii) சம்பளம் க/கு உருவாக்குவதற்கு

Name: Salaries A/c
Under: Indirect Expenses
Accept: Yes



படம் 10.19 சம்பளம் க/கு உருவாக்குதல்

(ix) கூலி க/கு உருவாக்குவதற்கு

Name: Wages A/c
Under: Direct Expenses
Accept: Yes



படம் 10.20 கூலி க/கு உருவாக்குதல்

(x) எழுதுபொருள் க/கு உருவாக்குவதற்கு

Name: Stationery A/c
Under: Indirect Expenses
Accept: Yes



படம் 10.21 எழுதுபொருள் க/கு உருவாக்குதல்

12th-Accountancy-Unit-10.indd 342 12/12/2021 8:52:04 PM

(xi) பாண்டியன் நிறுமம் க/கு உருவாக்குவதற்கு

Name: Pandian Ltd. A/c
Under:Sundry Creditors
Accept: Yes



படம் 10.22 பாண்டியன் நிறுமம் க/கு உருவாக்குதல்

4. **நடவடிக்கைகளை சான்றாவணம் மூலம் பதிவு செய்வதற்கு**

Gateway of Tally > Transactions > Accounting Vouchers

(1) ராபர்ட் ₹ 1,00,000 முதலுடன் போக்குவரத்து தொழில் துவங்கினார்.

F6: Receipt voucher
Account (கணக்கு): Cash
Particulars (விவரம்):
Robert's Capital A/c
(ஏற்கனவே உருவாக்கிய பேரேட்டு கணக்கு பட்டியலில் இருந்து தெரிவு செய்யவும்)
முதல் தொகையை பதிவு செய்யவும்: ₹ 1,00,000
Narration (விளக்கக் குறிப்பு):
Capital introduced
Accept Yes.



படம் 10.23 பெறுதல் சான்றாவணம் உருவாக்குதல்

(2) பாரத ஸ்டேட் வங்கியில் கணக்கு துவங்கப்பட்டு ₹ 30,000 வைப்பு வைக்கப்பட்டது.

F4: Contra voucher
Account: State Bank of India
Particulars: Cash
Amount: ₹ 30,000
Narration: Opened bank account in SBI
Accept Yes



படம் 10.24 காண்ட்ரா சான்றாவணம் உருவாக்குதல்

12th-Accountancy-Unit-10.indd 343 12/12/2021 8:52:04 PM

(3) ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது ₹ 10,000

F5: Payment voucher
Account: Cash
Particulars: Furniture A/c
Amount: ₹ 10,000
Narration: Furniture bought by cash
Accept Yes



படம் 10.25 செலுத்தல் சான்றாவணம் உருவாக்குதல்

(4) மொகைதீனிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ₹ 20,000

F9: Purchase voucher
Party A/c name: Mohaideen A/c
Particulars: Purchases A/c
Amount: ₹ 20,000
Narration: Goods purchased on credit from Mohaideen
Accept Yes



படம் 10.26 கொள்முதல் சான்றாவணம் உருவாக்குதல்

(5) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹ 8,000

F8: Sales voucher
Account: Cash
Particulars: Sales A/c
Amount: ₹ 8,000
Narration: Cash sales made
Accept Yes



படம் 10.27 விற்பனை சான்றாவணம் உருவாக்குதல்

12th-Accountancy-Unit-10.indd 344 12/12/2021 8:52:04 PM

(6) ரத்தினத்திடமிருந்து சரக்கு வாங்கி பணம் வைப்பு இயந்திரம் மூலம் செலுத்திய தொகை ₹ 5,000

F9: Purchase voucher
Account: Cash
Particulars: Purchases A/c
Amount: ₹ 5,000
Narration: Cash purchases made
Accept Yes



படம் 10.28 கொள்முதல் சான்றாவணம் உருவாக்குதல்

(7) ரோனிக்கு கடனுக்கு சரக்கு விற்கப்பட்டது ₹ 60,000

F8: Sales voucher
Party A/c name: Rony A/c
Particulars: Sales A/c
Amount: ₹ 60,000
Narration: Goods sold on credit to Rony
Accept Yes



படம் 10.29 விற்பனை சான்றாவணம் உருவாக்குதல்

(8) அலுவலகப் பயனுக்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது ₹ 9,000

F4: Contra voucher
Account: Cash
Particulars: State Bank of India A/c
Amount: ₹ 9,000
Narration: Cash withdrawn from bank
Accept Yes



படம் 10.30 காண்ட்ரா சான்றாவணம் உருவாக்குதல்

12th-Accountancy-Unit-10.indd 345 12/12/2021 8:52:04 PM

(9) மொகைதீனுக்கு காசோலை மூலம் பகுதி தொகை செலுத்தியது ₹ 10,000

F5: Payment voucher
Account: State Bank of India
Particulars: Mohaideen A/c
Amount: ₹ 10,000
Narration: Payment made to Mohaideen by cheque
Accept Yes



படம் 10.31 செலுத்தல் சான்றாவணம் உருவாக்குதல்

(10) ரோனி பகுதி தொகையை ரொக்கமாக செலுத்தியது ₹ 5,000

F6: Receipt voucher
Account: Cash
Particulars: Rony A/c
Amount: ₹ 5,000
Narration: Cash received from Rony
Accept Yes.



படம் 10.32 பெறுதல் சான்றாவணம் உருவாக்குதல்

(11) பணியாளர்களுக்கு மின்னனு பரிவர்த்தனை மூலம் செலுத்திய சம்பளம் ₹ 6,000

F5: Payment voucher
Account: State Bank of India
Particulars: Salaries A/c
Amount: ₹ 6,000
Narration: Salaries paid through ECS
Accept Yes



படம் 10.33 செலுத்தல் சான்றாவணம் உருவாக்குதல்

12th-Accountancy-Unit-10.indd 346 12/12/2021 8:52:05 PM

(12) ரொக்கமாக கூலி செலுத்தியது ₹ 3,000

F5: Payment voucher
Account: Cash
Particulars: Wages A/c
Amount: ₹ 3,000
Narration: Wages paid by cash
Accept Yes



படம் 10.34 செலுத்தல் சான்றாவணம் உருவாக்குதல்

(13) பாண்டியன் வரையறு நிறுமத்திடமிருந்து எழுதுபொருள் கடனுக்கு வாங்கியது ₹ 4,000

F7: Journal voucher
Particulars: Stationery
Amount: ₹ 4,000
To Pandian Ltd.
Amount: ₹ 4,000
Narration: Stationery bought on credit from Pandian Ltd.
Accept Yes



படம் 10.35 உரிய குறிப்பேடு சான்றாவணம் உருவாக்குதல்

5. **அறிக்கைகளை பார்வையிட**
(i) இருப்பாய்வை பார்வையிட

Gateway of Tally > Reports > Display > Trial Balance > AltF1 (detailed)



படம் 10.36 இருப்பாய்வு

12th-Accountancy-Unit-10.indd 347 12/12/2021 8:52:05 PM

(ii) இலாப நட்டக் கணக்கை பார்வையிட

F10: A/c Reports > Profit & Loss A/c > AltF1 (detailed)

அல்லது

Gateway of Tally > Reports > Profit & Loss A/c > AltF1 (detailed)



படம் 10.37 இலாப நட்டக் கணக்கு

(iii) இருப்புநிலைக் குறிப்பை பார்வையிட

F10: A/c Reports > Balance Sheet > AltF1 (detailed)

அல்லது

Gateway of Tally > Reports > Balance Sheet > AltF1 (detailed)



படம் 10.38 இருப்புநிலைக் குறிப்பு

12th-Accountancy-Unit-10.indd 348 12/12/2021 8:52:05 PM

(iv) விகிதப் பகுப்பாய்வை பார்வையிட

F10: A/c Reports > Ratio Analysis

அல்லது

Gateway of Tally > Reports > Ratio Analysis



படம் 10.39 விகிதப் பகுப்பாய்வு

(v) நாளேட்டை பார்வையிட

F10: A/c Reports > Day Book > AltF1 (detailed)

அல்லது

Gateway of Tally > Reports > Display> Day Book > AltF1 (detailed)



படம் 10.40 நாளேடு

12th-Accountancy-Unit-10.indd 349 12/12/2021 8:52:05 PM

செய்முறை 2

பின்வரும் இருப்புநிலைக் குறிப்பு ப்ரைட் என்பவரின் ஏடுகளிலிருந்து 1-4-2018–ம் நாளன்று தயார் செய்யப்பட்டது.

பொறுப்புகள்	₹	சொத்துகள்	₹
முதல்	2,26,000	இயந்திரம்	1,00,000
பற்பல கடனீந்தோர்:		அறைகலன்	10,000
இரமேஷ் க/கு	24,000	சரக்கிருப்பு	20,000
		பற்பல கடனாளிகள்:	
		சங்கர்	50,000
		கைரொக்கம்	15,000
		வங்கி ரொக்கம்	55,000
	2,50,000		2,50,000

அவ்வாண்டில் நடைபெற்ற நடவடிக்கைகள் பின்வருமாறு:

(அ) கூலி ரொக்கமாக வழங்கியது ₹ 2,000

(ஆ) வாடகை காசோலை மூலம் செலுத்தியது ₹ 5,000

(இ) ரொக்க கொள்முதல் மேற்கொண்டது ₹ 3,000

(ஈ) செந்தாமரையிடம் கடனுக்கு சரக்கு வாங்கியது ₹ 15,000

(உ) புஷ்பராஜுக்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹ 25,000

(ஊ) செந்தாமரைக்கு காசோலை மூலம் செலுத்தியது ₹ 5,000

(எ) சங்கரிடமிருந்து பெற்ற ரொக்கம் ₹ 30,000

(ஏ) ரொக்க விற்பனை மேற்கொண்டது ₹ 6,000

(ஐ) இயந்திரம் மீதான தேய்மானம் 10%

(ஒ) 31-3-2019 அன்றைய இறுதி சரக்கிருப்பு ₹ 15,000

31-3-2019 நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான வியாபார மற்றும் இலாப நட்டக் கணக்கையும், இருப்புநிலைக் குறிப்பையும் Tally உதவியுடன் தயார் செய்யவும்.

தீர்வு

பின்வரும் படிநிலைகளைப் பின்பற்றி Tally.ERP 9–ல் நடவடிக்கைகளை பதிவு செய்யவும்:

1. நிறுவனத்தை உருவாக்க (To Create Company)

Company Info > Create Company

பிரைட் என பெயரை குறிப்பிட்டு மற்ற அனைத்து விவரங்களையும் மாற்றம் செய்யாமல் 'ஆம்' (Yes) என ஏற்கவும்.

2. கணக்குகள் மட்டும் பராமரிக்க (Maintain accounts only)

Gateway of Tally > F11 Accounting Features > General > Maintain accounts only: Yes > Accept Yes

3. ஆரம்ப இருப்புகளுடன் பேரேட்டு கணக்குகளை உருவாக்க (Create)

Gateway of Tally > Masters > Accounts Info > Ledgers > Single Ledger > Create

12th-Accountancy-Unit-10.indd 350 12/12/2021 8:52:05 PM

Creation of	Name	Under	Opening balance	Accept
Bright's Capital A/c	Bright's Capital A/c	Capital Account	2,26,000	Yes
Ramesh A/c (Sundry creditors)	Ramesh A/c	Sundry Creditors	24,000	Yes
Machinery A/c	Machinery A/c	Fixed Assets	1,00,000	Yes
Furniture A/c	Furniture A/c	Fixed Assets	10,000	Yes
Opening stock	Opening stock	Stock-in-Hand	20,000	Yes
Shankar A/c (Sundry debtors)	Shankar A/c	Sundry Debtors	50,000	Yes
Cash in hand	Cash	Cash-in-Hand	15,000	Yes
Cash at bank	Bank	Bank Accounts	55,000	Yes



படம் 10.41 பிரைட் முதல் க/கு உருவாக்குதல்

குறிப்பு

ரொக்கக் கணக்கு ஏற்கனவே வரையறுக்கப்பட்டுள்ள பேரேடானதால் இதை உருவாக்க வேண்டியதில்லை. ரொக்கக் கணக்கை மாற்றம் செய்து ஆரம்ப இருப்பை மட்டும் பதிய வேண்டும்.

ஆரம்ப ரொக்க இருப்பை பதிவு செய்வதற்கு:

Gateway of Tally > Masters > Accounts Info > Ledgers > Single Ledger > Alter



நடவடிக்கையை நீக்க அல்லது மாற்றம் செய்ய:
Gateway of Tally > Reports > Display > Day Book > (நீக்க அல்லது மாற்றம் செய்ய வேண்டிய சான்றாவணத்தை தெரிவு செய்யவும்) Delete or make changes and Accept > Yes

12th-Accountancy-Unit-10.indd 351 12/12/2021 8:52:06 PM



படம் 10.42 ஆரம்ப ரொக்க இருப்பை பதிவு செய்தல்

பேரேடுகளை உருவாக்கிய பின் மற்றும் ஆரம்ப இருப்புகளை பேரேட்டு கணக்குகளில் பதிவு செய்த பின்பு ப்ரைட் என்பவரின் இருப்பு நிலைக்குறிப்பு கீழ்க்காணும் படத்தில் உள்ளவாறு தோன்றும்:



படம் 10.43 இருப்புநிலைக் குறிப்பு

4. நடவடிக்கைகளுக்கான பேரேட்டு கணக்குகளை உருவாக்க

Creation of	Name	Under	Accept
Wages A/c	Wages A/c	Direct Expenses	Yes
Rent A/c	Rent A/c	Indirect Expenses	Yes
Purchases A/c	Purchases A/c	Purchases Accounts	Yes
Senthamarai A/c	Senthamarai A/c	Sundry Creditors	Yes
Sales A/c	Sales A/c	Sales Accounts	Yes
Pushparaj A/c	Pushparaj A/c	Sundry Debtors	Yes
Depreciation A/c	Depreciation A/c	Indirect Expenses	Yes

12th-Accountancy-Unit-10.indd 352 12/12/2021 8:52:06 PM

5. சான்றாவணம் மூலம் நடவடிக்கைகளை பதிவு செய்வதற்கு

Gateway of Tally > Transactions > Accounting Vouchers

எடுத்துக்காட்டு: கூலி ரொக்கமாக வழங்கியது ₹ 2,000

F5: Payment voucher
Account: Cash
Particulars: Wages A/c
Amount: ₹ 2,000
Narration: Wages paid by cash
Accept Yes

இதேபோன்று மற்ற நடவடிக்கைகளையும் பதியவும்.
வாடகை செலுத்தியதற்கும் மற்றும் செந்தாமரைக்கு செலுத்தியதற்கும் செலுத்தல் சான்றாவணத்தை பயன்படுத்தவும்.
செந்தாமரையிடம் கடன் கொள்முதல் செய்ததற்கும் மற்றும் ரொக்க கொள்முதல் செய்ததற்கும் கொள்முதல் சான்றாவணத்தை பயன்படுத்தவும்.
புஷ்பராஜுக்கு கடனுக்கு விற்பனை செய்ததற்கும் மற்றும் ரொக்க விற்பனை செய்ததற்கும் விற்பனை சான்றாவணத்தை பயன்படுத்தவும்.
சங்கரிடமிருந்து பெற்ற ரொக்கத்திற்கு பெறுதல் சான்றாவணத்தை பயன்படுத்தவும்.
தேய்மானத்திற்கு உரிய குறிப்பேடு சான்றாவணத்தை பயன்படுத்தவும்.

இறுதி சரக்கிருப்பை பதிவுசெய்ய

கணக்கியல் பண்புகூறுகளில் 'maintain accounts only' என்பதற்கு 'ஆம்' என்றும் 'integrate accounts and inventory' என்பதற்கு 'இல்லை' என்றும் தெரிவு செய்துள்ளதால் சரக்கிருப்பைப் பதிய வேண்டும். ஆகவே இறுதி சரக்கிருப்பை பதிவு செய்வதற்கு சரக்கிருப்புக் கணக்கை மாற்றம் செய்ய வேண்டும். இறுதி சரக்கிருப்பின் நாள் பதிவு செய்யும்போது ஆரம்ப சரக்கிருப்பின் நாளையே பதிவு செய்ய வேண்டும்.

கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்:

Gateway of Tally > Masters > Accounts Info > Ledgers > Single Ledger > Alter > Stock > Closing balance > Date (opening date) > Amount > Accept Yes



படம் 10.44 இறுதி சரக்கிருப்பை பதிவு செய்தல்

12th-Accountancy-Unit-10.indd 353 12/12/2021 8:52:06 PM

6. அறிக்கைகளை பார்வையிட

(i) இலாப நட்டக் கணக்கை பார்வையிட

F10: A/c Reports > Profit & Loss A/c > AltF1 (detailed)

அல்லது

Gateway of Tally > Reports > Profit & Loss A/c > AltF1 (detailed)



படம் 10.45 இலாப நட்டக் கணக்கு

(ii) இருப்புநிலைக் குறிப்பை பார்வையிட

F10: A/c Reports > Balance Sheet > AltF1 (detailed)

அல்லது

Gateway of Tally > Reports > Balance Sheet > AltF1 (detailed)



படம் 10.46 இருப்பு நிலைக்குறிப்பு

12th-Accountancy-Unit-10.indd 354 12/12/2021 8:52:06 PM

மாணவர் செயல்பாடு 10.2

கணினிமயக் கணக்கியல் முறைக்கு எதிராக கையால் எழுதும் கணக்கியல் முறையை விவாதிக்கவும்.

நினைவில் கொள்ள வேண்டியவை

- ❖ தானியங்கும் கணக்கியல் என்பது கணக்கியல் மென்பொருள் உதவியுடன் கணக்கேடுகளை உடனுக்குடன் பராமரிக்கும் முறையாகும்.
- ❖ டேலியின் நுழைவாயில்தான் Tally–ன் துவக்க திரை. இது நடவடிக்கைகள் மற்றும் அறிக்கைகள் போன்ற பட்டியல் விருப்பங்களுடன் வலது பக்கத்தில் காண்பிக்கப்பட்டிருக்கும்.
- ❖ கணக்கியல் குழு என்பது ஒரே பண்புகளைக் கொண்ட பேரேடுகளின் தொகுப்பு ஆகும்.
- ❖ முன்பே வரையறுக்கப்பட்ட ரொக்கம் மற்றும் இலாப நட்டக் க/கு ஆகிய இரண்டு பேரேடுகளை Tally கொண்டுள்ளது.
- ❖ பெறுதல், செலுத்தல், விற்பனை, கொள்முதல் போன்ற சான்றாவணங்கள் நடவடிக்கைகளை Tally –ல் பதிவுசெய்வதற்கு பயன்படுத்தலாம்.
- ❖ வங்கியில் பணம் செலுத்துவதையும் வங்கியிலிருந்து பணம் எடுப்பதையும் எதிர்ப்பதிவு சான்றாவணத்தில் பதிவு செய்ய வேண்டும்.
- ❖ உரிய குறிப்பேடு சான்றாவணம் தேய்மானம், வாராக்கடன் ஒதுக்கு, பிழைத்திருத்த பதிவுகள் போன்ற நடவடிக்கைகள் பதிவு செய்வதற்கு பயன்படுத்தலாம்.

சுய ஆய்வு வினாக்கள்

ZFTP7

I சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. பயனரின் தேவைக்கேற்ப தயாரிக்கப்படும் கணக்கியல் அறிக்கையானது
   (அ) வழக்கமான கணக்கியல் அறிக்கை (ஆ) குறிப்பிட்ட நோக்க அறிக்கை
   (இ) இருப்பாய்வு (ஈ) இருப்புநிலைக் குறிப்பு
2. F11 எனும் பயன்பாடு
   (அ) நிறுவனப் பண்புகூறுகள் (ஆ) கணக்கியல் சான்றாவணங்கள்
   (இ) நிறுவன கட்டமைப்பு (ஈ) இவைகளில் எதுவும் இல்லை
3. குழுக்கள், பேரேடுகள் மற்றும் சான்றாவண வகைகளை Tall–யின் எந்த துணைப்பட்டியல் காண்பிக்கும்?
   (அ) சரக்கிருப்பு சான்றாவணங்கள் (ஆ) கணக்கியல் சான்றாவணங்கள்
   (இ) நிறுவன தகவல் (ஈ) கணக்கு தகவல்
4. Tally–ல் முன்பே வரையறுக்கப்பட்ட பேரேடு(கள்)?
   (i) ரொக்கம் (ii) இலாப நட்டக் க/கு (iii) முதல் க/கு
   (அ) (i) மட்டும் (ஆ) (ii) மட்டும்
   (இ) (i) மற்றும் (ii) இவை இரண்டும் (ஈ) (ii) மற்றும் (iii) இவை இரண்டும்
5. எதிர்ப்பதிவு சான்றாவணம் எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது?
   (அ) தலைமைப் பதிவு (ஆ) அலுவலக பயன்பாட்டிற்காக வங்கியில் இருந்து எடுத்த ரொக்கம்
   (இ) அறிக்கைகள் (ஈ) சொத்துகள் கடனுக்கு வாங்கியது

12th-Accountancy-Unit-10.indd 355 12/12/2021 8:52:06 PM

6. Tally–ல் எது முன்கூட்டியே வரையறுக்கப்படாத குழு?
   (அ) அனாமத்து க/கு (ஆ) கொடுபட வேண்டிய செலவு க/கு
   (இ) விற்பனை க/கு (ஈ) முதலீடுகள் க/கு

7. சம்பளக் கணக்கு பின்வரும் எந்த தலைப்பின் கீழ் வரும்?
   (அ) நேரடி வருமானங்கள் (ஆ) நேரடி செலவினங்கள்
   (இ) மறைமுக வருமானங்கள் (ஈ) மறைமுக செலவினங்கள்

8. அலுவலகப் பயன்பாட்டிற்காக ₹25,000 வங்கியில் இருந்து எடுக்கப்பட்டது. எந்த வகை சான்றாவணத்தில் இந்த நடவடிக்கை பதியப்படும்?
   (அ) எதிர்பதிவு சான்றாவணம் (ஆ) பெறுதல்கள் சான்றாவணம்
   (இ) செலுத்தல்கள் சான்றாவணம் (ஈ) விற்பனை சான்றாவணம்

9. அறைகலன் கடனுக்கு வாங்கியதை Tally–ல் எந்த வகை சான்றாவணத்தில் பதியப்படும்?
   (அ) பெறுதல்கள் சான்றாவணம் (ஆ) உரிய குறிப்பேடு சான்றாவணம்
   (இ) கொள்முதல் சான்றாவணம் (ஈ) செலுத்தல்கள் சான்றாவணம்

10. Tally–யின் நுழை வாயிலிலிருந்து இருப்பாய்வை பார்வையிட எந்த விருப்பத்தேர்வு பயன்படும்?
   (அ) Gateway of Tally -> Reports -> Trial Balance
   (ஆ) Gateway of Tally -> Trial Balance
   (இ) Gateway of Tally -> Reports -> Display -> Trial Balance
   (ஈ) இவைகளில் ஏதுமில்லை

விடைகள்

1. (ஆ)	2. (அ)	3. (ஈ)	4. (இ)	5. (ஆ)	6. (ஆ)	7.(ஈ)	8. (அ)	9. (ஆ)	10.(இ)

II மிகக் குறுகிய வினாக்கள்

1. தானியங்கும் கணக்கியல் முறை என்றால் என்ன?
2. கணக்கியல் அறிக்கைகள் என்றால் என்ன?
3. ஏதேனும் ஐந்து கணக்கியல் அறிக்கைகள் கூறு.
4. கணக்கியல் தகவல் அமைப்பு என்றால் என்ன?
5. Tally.ERP 9–ல் குழு என்றால் என்ன?

III குறுகிய வினாக்கள்

1. கணக்கியல் சான்றாவணம் குறித்து சிறு குறிப்பு எழுதவும்.
2. Tally.ERP 9–ல் முன்பே வரையறுக்கப்பட்ட பேரேடுகள் யாவை?
3. Tally.ERP 9–ல் பொதுவாக பயன்படுத்தப்படும் சான்றாவணங்களின் வகைகளை குறிப்பிடவும்.
4. Tally.ERP 9–ல் இலாப நட்டக் கணக்கை எவ்வாறு பார்வையிடுவது என்பதை விளக்கவும்.
5. கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடுகளில் ஏதேனும் ஐந்தினை விளக்கவும்.

IV பயிற்சி வினாக்கள்

1. பின்வரும் நடவடிக்கைகளை Tally–ல் பதிவு செய்யவும்.
   (1) ₹ 4,00,000 முதலுடன் தேவி தொழில் தொடங்கினார்
   (2) இந்தியன் வங்கியில் கணக்கு துவங்கப்பட்டு ₹ 60,000 செலுத்தியது.
   (3) ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது ₹ 15,000
   (4) சுமதியிடம் இருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ₹ 50,000
   (5) ரொக்க விற்பனை மேற்கொண்டது ₹ 10,000
   (6) இராஜாவிடம் சரக்கு கொள்முதல் செய்து காசோலை மூலம் செலுத்தியது ₹ 5,000
   (7) அருணுக்கு கடனாக விற்ற சரக்கு ₹ 70,000
   (8) அலுவலக செலவிற்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது ₹ 25,000
   (9) சுமதிக்கு காசோலை மூலம் பகுதி தொகை செலுத்தியது ₹ 30,000
   (10) அருண் பகுதி தொகையாக செலுத்திய ரொக்கம் ₹ 10,000

12th-Accountancy-Unit-10.indd 356 12/12/2021 8:52:06 PM

(11) பணியாளர்களுக்கு மின்னனு பணப்பரிமாற்றம் மூலம் வழங்கப்பட்ட சம்பளம் ₹ 36,000

(12) கொள்முதல் மீதான தூக்குக்கூலி ரொக்கமாக செலுத்தியது ₹ 6,000

(13) முத்து நிறுமத்திடமிருந்து கடனுக்கு கணினி வாங்கியது ₹ 44,000

2. பின்வரும் இருப்பு நிலைக்குறிப்பு பியர்ல் என்பவரின் ஏடுகளிலிருந்து 1-4-2018–ம் நாளன்று தயார் செய்யப்பட்டது.

பொறுப்புகள்	₹	சொத்துகள்	₹
முதல்	1,60,000	கட்டடம்	40,000
பற்பல கடனீந்தோர்:		அறைகலன்	20,000
மாயா க/கு	20,000	சரக்கிருப்பு	10,000
		பற்பல கடனாளிகள்:	
		பீட்டர்	20,000
		கை ரொக்கம்	30,000
		வங்கி ரொக்கம்	60,000
	1,80,000		1,80,000

அவ்வாண்டில் நடைபெற்ற நடவடிக்கைகள் பின் வருமாறு

(அ) கூலி ரொக்கமாக வழங்கியது ₹ 4,000

(ஆ) சம்பளம் காசோலை மூலம் வழங்கியது ₹ 10,000

(இ) ரொக்கக் கொள்முதல் மேற்கொண்டது ₹ 4,000

(ஈ) யாழினியிடம் கடனுக்கு சரக்கு வாங்கியது ₹ 30,000

(உ) ஜோதிக்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹ 40,000

(ஊ) யாழினிக்கு NEFT மூலம் செலுத்தியது ₹ 6,000

(எ) பீட்டரிடமிருந்து பெற்ற ரொக்கம் ₹ 10,000

(ஏ) ரொக்க விற்பனை மேற்கொண்டது ₹ 4,000

(ஐ) கட்டடம் மீதான தேய்மானம் 20%

(ஒ) 31-3-2019 அன்றைய இறுதி சரக்கிருப்பு ₹ 9,000

31-3-2019 நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான வியாபார மற்றும் இலாப நட்டக் கணக்கையும், இருப்புநிலைக் குறிப்பையும் Tally உதவியுடன் தயார் செய்யவும்.

நிகழ்வாய்வு

வெங்கட் என்பவர் பெரிய பல்பொருள் அங்காடியை 20 ஆண்டுகளுக்கும் மேலாக நடத்திவருகிறார். வாடிக்கையாளர்கள் தரம் மற்றும் சேவையில் திருப்தியடைந்துள்ளனர். அதன் விளைவாக அவர் மேலும் பல பல்பொருள் அங்காடிகளை வெவ்வேறு பகுதிகளில் துவங்கினார். தற்பொழுது 50 க்கும் மேற்பட்ட பணியாளர்கள் அவருடைய அங்காடியில் வேலை செய்கின்றனர். அவர் அனைத்து ஏடுகளையும் கையால் எழுதும் முறையிலேயே பராமரித்து வருகின்றார். வியாபாரம் பெருகியதன் விளைவாக நிறுவனத்தை திறம்பட நடத்துவது கடினம் என வெங்கட் கண்டறிகிறார். அண்மையில் வணிகவியலில் முதுகலைப் பட்டம் பெற்ற அவருடைய மகள் லதா தனது தந்தைக்கு வியாபாரத்தில் உதவ எண்ணுகிறார். அவர் கீழ்க்கண்ட பிரச்சினைகளை அடையாளம் கண்டுள்ளார்:

- சில சரக்குகள் காணவில்லை. ஆனால் அதற்கான ஆதாரம் இல்லை.
- ரொக்க ஓட்டத்தில் எவ்வித பிரச்சினையும் இல்லை. ஆயினும் சரக்களித்தோருக்கு செலுத்தல்கள் தாமதமாகின்றன.
- அனைத்து அங்காடிகளிலும் சில பொருட்கள் அதிகப்படியாக வாங்கப்பட்டுள்ளது.
- அண்மையில் துவங்கப்பட்ட கிளைகளில் அதிகளவில் விற்பனையாகும் சில பொருட்கள் கையிருப்பிலில்லை.
- செலவினங்களின் மீதான எவ்வித கட்டுப்பாடும் இல்லை.

இந்த சூழல் தொடருமேயானால் நிறுவனம் தன் நற்பெயரை இழக்க நேரலாம் மற்றும் நட்டம் ஏற்படலாம் என லதா நினைக்கிறார். இந்த பிரச்சினைகளை கடக்க கணினிமயக் கணக்கியல் முறையின் தேவை உள்ளதாக அவர் வலுவாக உணர்கிறார்.

இந்த பிரச்சினைகள் கணினிமயக் கணக்கியல் முறையின் மூலம் எளிதாக தீர்க்கப்படலாம் என நீங்கள் நினைக்கிறீர்களா? அவ்வாறு நினைக்கிறீர்களேயானால் தங்களின் கூற்றை நியாயப்படுத்தவும்.

தொடர் ஆய்விற்கு

கணக்கியல் மென்பொருளில் Tally மட்டுமே உள்ளதா? ஆராய்ந்து மேலும் சில கணக்கியல் செயல்பாட்டு மென்பொருள்களை கண்டறியவும்.

பார்வை

Official Guide to Financial Accounting using Tally.ERP 9, Tally Education Private Limited, BPB Publications, Bengaluru.

12th-Accountancy-Unit-10.indd 357 12/12/2021 8:52:06 PM

கலைச்சொற்கள்

கணக்கியல் அம்சங்கள்	Accounting features
கணக்கியல் தொகுப்புகள்	Accounting groups
கணக்கியல் தகவல் அமைப்பு	Accounting information system
கணக்கியல் விகிதங்கள்	Accounting ratios
கணக்கியல் அறிக்கைகள்	Accounting reports
கணக்கியல் மென்பொருள்	Accounting software
பகிர்ந்துதரா நட்டம்	Accumulated loss
பகிர்ந்துதரா இலாபம்	Accumulated profit
கூடுதல் முதல்	Additional capital
நிர்வாகச் செலவுகள்	Administrative expenses
கூட்டாளி சேர்ப்பு	Admission of partner
ஒதுக்கீட்டுப் பணம்	Allotment money
ஆண்டுத்தொகை அட்டவணை	Annuity table
விண்ணப்பப் பணம்	Application money
அங்கீகரிக்கப்பட்ட முதல்	Authorised capital
தானியங்கும் கணக்கியல் அமைப்பு	Automated accounting system
சராசரி இலாபம்	Average profit
சராசரி சரக்கிருப்பு	Average stock
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு	Bills payable account
பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு	Bills receivable account
மேலூதியப் பங்கு வெளியீடு	Bonus issue
அழைக்கப்பட்ட முதல்	Called up capital
அழைப்பு முன்பணம்	Calls in advance
அழைப்பு நிலுவை	Calls in arrears
முதல் உந்துதிறன் விகிதம்	Capital gearing ratio
முதல் விகிதம்	Capital ratio
முதலினக் காப்பு	Capital reserve
மூலதனமாக்கல்	Capitalisation
ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள்	Cash and cash equivalents
இறுதி முதல்	Closing capital
பொது முத்திரை	Common seal
பொது அளவு இருப்பு நிலைக் குறிப்பு	Common size balance sheet
பொது அளவு வருமான அறிக்கை	Common size income statement
நிறுமம்	Company
நிறும அம்சங்கள்	Company features
ஒப்பீட்டு இருப்புநிலைக் குறிப்பு	Comparative balance sheet
ஒப்பீட்டு வருமான அறிக்கை	Comparative income statement
ஒப்பீட்டு அறிக்கை	Comparative statement
கணினி கணக்கியல் முறை	Computerised accounting system
தொடரும் கூட்டாளி	Continuing partner
எதிர்ப்பதிவு சான்றாவணம்	Contra voucher
விற்பனை மூலம் கிடைத்த வருவாய்க்கான அடக்கவிலை	Cost of revenue from operations
கடனீந்தோர் கணக்கு	Creditors account

கடனீந்தோர் சுழற்சி விகிதம்	Creditors turnover ratio
நடப்புக் கணக்கு	Current account
நடப்புச் சொத்துகள்	Current assets
குறுகிய கால முதலீடுகள்	Current investments
நடப்புப் பொறுப்புகள்	Current liabilities
நடப்பு விகிதம்	Current ratio
நடப்பு ஆண்டு	Current year
கூட்டாளியின் இறப்பு	Death of a partner
கடனீட்டுப் பத்திரங்கள்	Debentures
கடன் வசூலிப்புக் காலம்	Debt collection period
புற அக பொறுப்பு விகிதம்	Debt equity ratio
கடன் செலுத்தும் காலம்	Debt payment period
கடனாளிகள் கணக்கு	Debtors account
கடனாளிகள் சுழற்சி விகிதம்	Debtors turnover ratio
நன்கொடை	Donation
எடுப்புகள்	Drawings
நுழைவுக் கட்டணம்	Entrance fees
நேர்மைப் பங்குகள்	Equity shares
நிறைவேற்றாளர் கணக்கு	Executor's account
கொடுபட வேண்டிய செலவுகள்	Expenses payable
முக மதிப்பு	Face value
கற்பனைச் சொத்து	Fictitious asset
இறுதி அழைப்பு பணம்	Final call money
நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு	Financial statement analysis
நிதிநிலை அறிக்கை	Financial statements
நிறுவனம்	Firm
முதல் அழைப்பு பணம்	First call money
நிலைச்சொத்துகள் சுழற்சி விகிதம்	Fixed assets turnover ratio
நிலைமுதல்	Fixed capital
மாறுபடும் முதல்	Fluctuating capital
பங்கு ஒறுப்பிழப்பு	Forfeiture of shares
ஆதாய விகிதம்	Gaining ratio
Tally நுழைவாயில்	Gateway of Tally
பொதுக்காப்பு	General reserve
நற்பெயர்	Goodwill
மொத்த இலாப விகிதம்	Gross profit ratio
வருவாய் செலவினக் கணக்கு	Income and expenditure account
முன்கூட்டிப் பெற்ற வருமானம்	Income received in advance
உள்வரும் கூட்டாளி	Incoming partner
முழுமை பெறா பதிவேடுகள்	Incomplete records
புலனாகாச் சொத்து	Intangible asset
முதல் மீது வட்டி	Interest on capital
எடுப்புகள் மீதான வட்டி	Interest on drawings
சரக்கிருப்பு	Inventories

12th-Accountancy-Glossary.indd 358 12/9/2021 11:08:28 PM

சரக்கிருப்பு சுழற்சி விகிதம்	Inventory turnover ratio
வெளியிடப்பட்ட முதல்	Issued capital
கூட்டுப் பங்கு நிறுமம்	Joint stock company
குறிப்பேட்டுச் சான்றாவணம்	Journal voucher
உயில்கொடை	Legacy
நீர்மைத் தன்மை	Liquidity
நீண்டகாலகடன் தீர்க்கும் திறன்	Long term solvency
நினைவுக் குறிப்பு மறுமதிப்பீட்டுக் கணக்கு	Memorandum revaluation account
குறுமப் பங்கொப்பம்	Minimum subscription
நிகர இலாப விகிதம்	Net profit ratio
நிகர புலனாகும் சொத்துகள்	Net tangible assets
நிகர மதிப்பு முறை	Net worth method
புதிய கூட்டாளி	New partner
புதிய இலாப விகிதம்	New profit ratio
இயக்கம் சாரா செலவுகள்	Non operating expenses
இயக்கம் சாரா வருமானம்	Non operating income
திரும்பத் திரும்ப நிகழாச் செலவுகள்	Non recurring expenses
திரும்பத் திரும்ப நிகழா வருமானங்கள்	Non recurring incomes
நீண்டகால முதலீடுகள்	Non-current investments
சாதாரண இலாபம்	Normal profit
இலாப நோக்கமற்ற அமைப்புகள்	Not-for profit organization
கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை	Number of years of purchase
பழைய கூட்டாளி	Old partner
பழைய விகிதம்	Old ratio
தொடக்க முதல்	Opening capital
இயக்க அடக்கவிலை விகிதம்	Operating cost ratio
இயக்கச் செலவுகள்	Operating expenses
இயக்க இலாபம்	Operating profit
வெளிச்செல்லும் கூட்டாளி	Outgoing partner
மிகை ஒப்பம்	Over subscription
செலுத்தப்பட்ட முதல்	Paid up capital
கூட்டாளி	Partner
கூட்டாளியின் கடன் கணக்கு	Partner's loan account
கூட்டாண்மை	Partnership
செலுத்தல்கள்	Payments
செலுத்தல்கள் சான்றாவணம்	Payments voucher
நிலைபேற்றுத் தொடர்ச்சி	Perpetual succession
முன்னுரிமைப் பங்குகள்	Preference shares
முந்தைய ஆண்டு	Previous year
தனி நிறுமம்	Private company
தனியார் ஒதுக்கு	Private placement
விகித அளவு ஒதுக்கீடு	Pro rata allotment
இலாபம்	Profit
இலாப நட்டப் பகிர்வு கணக்கு	Profit and loss appropriation account
அனாமத்து இலாபநட்டக் கணக்கு	Profit and loss suspense account

இலாபத்தன்மை	Profitability
உரிமையாளர் விகிதம்	Proprietory ratio
தகவலறிக்கை	Prospectus
பொது நிறுமம்	Public company
பொது வெளியீடு	Public issue
கொள்முதல் சான்றாவணம்	Purchase voucher
விரைவு விகிதம்	Quick ratio
விகித பகுப்பாய்வு	Ratio analysis
பெறுதல்கள்	Receipts
பெறுதல்கள் – செலுத்தல்கள் கணக்கு	Receipts and payments account
பெறுதல்கள் சான்றாவணம்	Receipts voucher
காப்பு முதல்	Reserve capital
காப்பும் மிகுதியும்	Reserves and surplus
கூட்டாளி விலகல்	Retirement of a partner
முதலீடுகள் மீதான வருவாய்	Return on investment
மறுமதிப்பீட்டுக் கணக்கு	Revaluation account
மறுமதிப்பீட்டு நட்டம்	Revaluation loss
மறுமதிப்பீட்டு இலாபம்	Revaluation profit
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	Revenue from operations
உரிமை வெளியீடு	Right issue
தியாக விகிதம்	Sacrificing ratio
விற்பனைச் சான்றாவணம்	Sales voucher
பத்திர முனைமம்	Securities premium
விற்பனை மற்றும் பகிர்வுச் செலவுகள்	Selling and distribution expenses
பங்கு முதல்	Share capital
பங்குதாரர் நிதி	Shareholders funds
பங்குகள்	Shares
குறுகிய காலக் கடன்கள்	Short term borrowings
குறுகிய கால கடன் தீர்க்கும் திறன்	Short term solvency
ஒற்றைப் பதிவு முறை	Single entry system
கடன் தீர்க்கும் திறன்	Solvency
நிலை அறிக்கை	Statement of affairs
ஒப்பிய முதல்	Subscribed capital
சந்தா	Subscriptions
எதிர் வரும் ஆண்டு	Subsequent year
உயர் இலாபம்	Super profit
புலனாகும் நிலைச் சொத்துகள்	Tangible fixed assets
கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள்	Trade payables
கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகள்	Trade receivables
குறை ஒப்பம்	Under subscription
பகிர்ந்துதரா இலாபங்கள் மற்றும் காப்புகள்	Undistributed profits and reserves
வரையறாப் பொறுப்பு	Unlimited liability
சான்றாவணம்	Voucher
கூட்டுச் சராசரி இலாபம்	Weighted average profit
தொழிலாளர் ஈட்டு நிதி	Workmen compensation fund

12th-Accountancy-Glossary.indd 359 12/9/2021 11:08:28 PM

மேல்நிலை இரண்டாம் ஆண்டு – கணக்குப்பதிவியல்

பாடநூல் உருவாக்கக் குழு

பாடநூல் வல்லுநர்கள்

1. **முனைவர். இல. செஸிஸ் டாஸ்டன்**
   இணைப் பேராசிரியர்,
   வணிகவியல் துறை, மாநிலக் கல்லூரி, சென்னை.
2. **முனைவர். ஆ. கிருஷ்ணன்**
   இணைப் பேராசிரியர், வணிகவியல் துறை,
   மாநிலக் கல்லூரி , சென்னை.
3. **முனைவர். இல. ஜெனிட்ரா**
   இணைப் பேராசிரியர், வணிகவியல் துறை,
   புனித சிலுவை கல்லூரி, திருச்சி.

மேலாய்வாளர்கள்

1. **முனைவர். பா. ஜெயக்குமார்**
   உதவிப் பேராசிரியர், வணிகவியல் துறை,
   தூய தாமஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
   சென்னை.
2. **திருமதி. ஜெயந்தி இரமேஷ்**
   பயிற்சியாளர், கேம்பிரிட்ஜ் பன்னாட்டுத் தேர்வுகள்,
   சென்னை.

பாட ஒருங்கிணைப்பாளர் மற்றும் வல்லுநர்

திரு. வி. உலகநாதன்,
முதுகலை வணிகவியல் ஆசிரியர்,
அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி, சைதாப்பேட்டை,
சென்னை.

பாடநூல் ஆசிரியர் குழு

1. **முனைவர். அ. சரோஜினி**
   முதுகலை வணிகவியல் ஆசிரியர்,
   அரசினர் மேல்நிலைப் பள்ளி, கடம்பத்தூர்,
   திருவள்ளூர் மாவட்டம்.
2. **முனைவர். சு. இராஜேஸ்வரி**
   முதுகலை வணிகவியல் ஆசிரியர்,
   புனித வளனார் ஆங்கிலோ இந்தியன் பெண்கள்
   மேல்நிலைப்பள்ளி, திருச்சி.
3. **திருமதி. மு. மகராசி**
   இணைப் பேராசிரியர், வணிகவியல் துறை,
   காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி, சென்னை.
4. **முனைவர். ந. வாசுதேவன்**
   உதவிப் பேராசிரியர், வணிகவியல் துறை,
   இராமகிருஷ்ணா மிஷன் விவேகானந்தா கல்லூரி,
   சென்னை.
5. **முனைவர். ச. குமார்**
   முதுகலை வணிகவியல் ஆசிரியர்,
   ச.கு. வேலாயுதம் மேல்நிலைப்பள்ளி,
   குறிஞ்சிப்பாடி, கடலூர் மாவட்டம்.
6. **திரு. அ. சிபி சக்ரவர்த்தி**
   முதுகலை வணிகவியல் ஆசிரியர்,
   திருமதி மஞ்சம்மாள் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி,
   தென்காசி, திருநெல்வேலி மாவட்டம்.
7. **முனைவர். ச. சீனிவாசன்**
   உதவிப் பேராசிரியர், வணிகவியல் துறை,
   இராமகிருஷ்ணா மிஷன் விவேகானந்தா கல்லூரி,
   சென்னை.

கலை மற்றும் வடிவமைப்புக் குழு

வடிவமைப்பு
யோகேஷ்
பிரசாந்த்
ராஜேஷ் தங்கப்பன்
செல்வகுமார்

அட்டை வடிவமைப்பு
கதிர் ஆறுமுகம்

தரக்கட்டுப்பாடு
அருண் காமராஜ்
இயேசு ரத்தினம்
ஜெரால்டு வில்சன்

ஒருங்கிணைப்பு
ரமேஷ் முனிசாமி

விரைவுக்குறியீட்டுக் குழு

மு.சரவணன்,
வாழப்பாடி, சேலம்.

ம. முருகேசன்,
முத்துப்பேட்டை, திருவாரூர்

சூ.ஆல்பர்ட் வளவன் பாபு,
பரமக்குடி, இராமநாதபுரம்.

இந்நூல் 80 ஜி.எஸ்.எம் எலிகண்ட் மேப்லித்தோ தாளில்
அச்சிடப்பட்டுள்ளது.

வெப் ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:

12th-Accountancy-Glossary.indd 360 12/9/2021 11:08:29 PM